# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்**

*1982 பிப்ரவரி 8, 9, 10 மற்றும் 11-ம் நாட்கள்*

(தொகுதி **XXVII** எண்கள் 1 முதல் 5 வரை)

© தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 21

122218

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர்.

1982 பிப்ரவரி 8, 9, 10 மற்றும் 11 ஆம் நாட்கள்.

(தொகுதி 27—எண்கள் 1-4)

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—iii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட—அகர வரிசையில்) | ix—xv |
| **அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த, சட்ட முன்வடிவு,) 1982. | 75—76 |
| ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1982 | 81—83 |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982. | 81 |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982. | 77—81 |
| கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982. | 282—293 |
| சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982. | 390—391 |
| தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982 | 391 |
| நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 | 392 |
| பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982. | 391—392 |

பக்கங்கள்

**அரசினர் தீர்மானங்கள்—**

"பால் கமிஷன்" பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதம். 439—462

விதி 31-ஐத் தளர்த்தல் 108

**அறிக்கை அளித்தல்—**

மதிப்பீட்டுக் குழு 72

**அறிவிப்புகள்—**

மதுரை-காமராஜ் பல்கலைக் கழக பேரவை உறுப்பினர்கள் தேர்தல் 382

பேரவை அலுவல் 222, 452—453

**ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்** 84—127, 130—222, 295—339, 392—438

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—**

திருச்செந்தூர் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப் பெற்றுள்ளது. 257—267

புதுக்கல்லூரி மாணவர்கள் ஒன்பது பேர் கல்லூரியிலிருந்து நீக்கப் பெற்றது. 45—58

**ஒழுங்குப் பிரச்சினைகள்—**

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது. 47

பேரவைத் தலைவரை அழைக்கும் முறை 46

வினாக்கள் அனுமதிக்கப் பெறுவது 45—46

**கவன ஈர்ப்புகள்—**

காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது. 280—282

சாத்தனூர் அணையின் இடது புறக் கால்வாய்ப் பாசனப் பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு. 70—72

சென்னை மாநகரில் தொத்து நோய்கள் தடுப்பு நடவடிக்கை. 385—390



பக்கங்கள்

**கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.**

தஞ்சாவூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு 383—385

தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி மாணவர்களின் போராட்டம். 59—70

நெல் லெவி கொள்முதல் முறை 268—280

**தகவல் கோரல்—**

இசைவு மறுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சினை 255—256

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு 129—130

தள்ளுபடி செய்யப் பெற்ற வினா 256—257

பேரவை அலுவல் 193

மின் கட்டணம் செலுத்துவது—புதிய முறை. 255

**பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 222, 340

**வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1—45, 223—255, [illegible]

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

விளக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ தீ) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புகள் அனைத்தும் 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும் அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :—

| | |
|---|---|
| அ. | — அறிக்கை. |
| அறிவி. | — அறிவிப்பு. |
| அ. வி. | — அரை மணி நேர விவாதம். |
| கு. வி. | — குறுகிய கால விவாதம் |
| பொ. வி. | — பொது விவாதம். |

ஆ. உ — ஆளுநர் உரை.

உ. பி — உரிமைப் பிரச்சினை.

ஒ. பி. — ஒழுங்குப் பிரச்சினை.

க. ஈ. — கவன ஈர்ப்பு.

க. ஈ. அ. — கவன ஈர்ப்பு அறிக்கை.

ச அ நி — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.

க. ஆ. நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—
இந்நிலையில்,
(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம்.
(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.
(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.
(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.
(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச. பிரி. ஆ. — சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்
— தல்.

ச. பே. — சட்டமன்றப் பேரவை

ச. மே — சட்டமன்ற மேலவை.

த. கோ. — தகவல் கோரல்

த. வி. — தன்னிலை விளக்கம்.

தீ. — தீர்மானம்.

உ. தீ. — உரிமைத் தீர்மானம்.

ஒ. தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்.

த. தீ. — தனித் தீர்மானம்.

து. மா. கோ. — துணை மானியக் கோரிக்கை.

மி. மா கோ — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.

பே. அ. — பேரவையின் அலுவல்.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் ; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு,

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minster)-Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)— Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electircity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries) — Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)— Revenue, Commercial Taxes. Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)— Education Including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture) —Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)— Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply anl Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)— Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transpor, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)— Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Establishment matter relating to Public Works Dept.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)— Adi Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandary, Beggars Home, Orphanages, Indians Overseas, Refuges and Evacuees and Correctional Administration.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரை முருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாள

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ. பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ. பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்.)

(விவாத பதிப்பாளர்.)

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—2—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ், | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ. வ) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி, தா. | தலைவாசல் (செ.வ |
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 29 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி (செ.) |
| 31 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ) |
| 45 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடைப்பாடி |
| 53 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| (1) | (2) |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர், மு. | அண்ணாநகர் |
| 58 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலிதீர்த்தான், திரு. சே. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 காளிமுத்து, திரு. கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. என். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஓட்டன்சத்திரம் |
| 75 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ. வ.) |
| 86 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|---|
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | .. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | .. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | .. | அரூர் (செ. வ.) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | .. | காவேரிப்பட்டணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | .. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | .. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | .. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | .. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. ஓ. | .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவபெருமான், திரு. மு. | .. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எ எஸ். | .. | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு எம். | .. | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | . | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | .. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | .. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | .. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | .. | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | .. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | : | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | .. | போடிநாயக்கனூர் |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | .. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | .. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | .. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | .. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | .. | கோபிச்செட்டிப் பாளையம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | | தொகுதியின் பெயா. (2) |
|---|---|---|---|
| 123 | செம்மலை, திரு. செ. | .. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | .. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. | .. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | .. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | .. | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கே. | .. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | .. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | .. | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | .. | திருச்சி—2 |
| 132 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | .. | தி. நகர் |
| 133 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | .. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | .. | குறிஞ்சிபபாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 136 | தங்கவேலு, திரு. பி. | .. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | .. | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | .. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | .. | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | .. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | .. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | .. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | .. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | .. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | .. | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | .. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | .. | சங்கரநாயினார் கோவில் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீத கிருஷ்ண பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகம்மது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி. திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன். திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்னன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன். திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகம்மது இஸ்மாயில், திரு. பீ. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ. வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 207 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீ பெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 210 ரங்கசாமி, திரு. க. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 211 ரமணி, திரு. ரு. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 212 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் திரு. | .. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | .. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | .. | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி வி. | .. | வீரபாண்டி |
| 217 வின்சென்ட், திரு. மி. | .. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம். | .. | அரக்கோணம் (செ.வ |
| 219 விஜயபாலன், திரு. என். | .. | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | .. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கோ. | .. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | .. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க. வெ | .. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | .. | காஞ்சி |
| 225 வெங்கட ரெட்டி, திரு. டி. | .. | ஓசூர் |
| 226 வெங்கடேசன். திரு. பி. எம் | .. | பெரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. | .. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | .. | தண்டராம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | .. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | .. | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு மு. | .. | நாங்குனேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | .. | தேனி |
| 23 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | .. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டார் |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | .. | நியமன உறுப்பினர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு.கே இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி— தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

1982 பிப்ரவரி 8, 9, 10 மற்றும் 11 ஆம் நாட்கள்.

---

(தொகுதி 27 எண்கள் 1—4)

---

பக்கங்கள்

**அ.**


**அப்பாதுரை, திரு. மு.—**

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் (ஒ.தீ.) 67—70

48,

52—53

திருசெந்தூர் முருகன் கோயில் அரச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) 259—260

**அம்பிகாபதி, திரு. மு.—** 48

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.)

திருச்செந்தூர் முருகன் அரச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) 257—267

பாலிடெக்னிக் மாணவர்கள் உண்ணாவிரதம் (த.கோ.) 129—130

46

பேரவைத் தலைவர் அழைக்கும் முறை (ஒ.பி.) 4—8

மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்கக் கோரிக்கைகள்

**அரங்கநாதன், திரு. எஸ்.—** 216, 217

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 21

தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டுதல்

பக்கங்கள்

**அரங்கநாயகம், திரு. செ.—**

காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது (க.ஈ.அ.) 280, 281—282

சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 390—391

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்(ஒ.தீ.) 54—57, 58

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் (க.ஈ.) 59—61, 63, 64, 65—66, 67, 68, 69, 70

தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982 391

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 391—392

**அரங்கராசன், திரு. வெ.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 199—203

**அரசினர் தீர்மானம்—**

"பால் கமிஷன்" பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கைக் குறித்தும் விவாதம் 439—462

விதி 31-ஐத் தளர்த்தல் 108

**அரிசன நலம்—**

அரிசனங்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குதல் 34—37

**அருணகிரி, திரு. இரா.—**

நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.)

அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

**அழகர்சாமி, திரு. சோ.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 151, 153, 154—168

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 73

இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) 74

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் (க.ஈ.) 59, 62

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) 257—267

பணியிலிருக்கும் பொறியியல் பட்டதாரிகளின் மேல்நிலைப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள் 21—22

பாம் ஆயில் வழங்குதல் 223—225

பாலிடெக்னிக் மாணவர்கள் உண்ணாவிரதம், (த.கோ.) 129—130

**அளவைகள்—**

மழை அளவைக் கருவிகள் 38—39

**அறிக்கை அளித்தல்—**

மதிப்பீட்டுக் குழு 72

**அறிவிப்புகள்—**

தேர்தல்—மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் 382

பேரவை அலுவல் குறித்து 452—453

**அன்பழகன், திரு. க.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 95—96, 97, 305—327

இசைவு மறுக்கப் பெற்ற உரிமைப் பிரச்னை, (த.கோ.) 256

இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 130—[illegible]

## அ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**அன்பழகன், திரு. க.—தொடர்ச்சி.**

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 58

"பால் கமிஷன்" பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கைக் குறித்தும் விவாதம் — 439—450

### ஆ.

**ஆண்டித்தேவர், திரு. எஸ்.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 130—142

ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக் கொள்வது — 47

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அறி.) — 289

**ஆறுமுகம், திரு. சேலம் மு.—**

அம்பத்தூர் தொழிற்பேட்டை, தொழிற் பிரிவுகள் — 349—350

**ஆறுமுகம், திரு. எம்.—**

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) — 59

### இ.

**இரத்தினம், திரு. எம். வி.—**

பொள்ளாச்சி "டாப்ஸ்லிப்" அழகு படுத்தும் திட்டம் — 350—352

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 84—89, 90—91

**இராசாம்பாள், திருமதி, தா.—**

மழை அளவைக் கருவிகள் — [illegible]




## இ—தொடர்ச்சி.


பக்கங்கள்

**இராசாராமன், திரு. எஸ்.—**

திருச்செந்தூர் முருகன் கோயில் அரச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) — 257—267

**இராசு, திரு. ஜே. எஸ்.—**

உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் — 234—236

**இராமச்சந்திரன், திரு. எம். ஜீ.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 327—340, 392—438

**இராமச்சந்திரன், திரு. ச.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 312, 313, 314

**இராமசாமி. திரு. எஸ், என்.—**

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 48

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) — 59

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது( (ஒ.தீ.) — 257—267

**இராமலிங்கம், திரு. செ.—**

தஞ்சாவூர் அரசு மருத்துவமனை எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு, (க.ஈ.) — 383—385

தனியார் நிறுவனம் வயதான ஆதரவற்றவர்கட்கு வாழ்வளித்தல் — 379—380

**இராஜாமுகமது, திரு. கே.—**

சாத்தனூர் அணை தண்ணீர் பாசனத்துக்குக் கிடைக்காதது, (க.ஈ.) — 70—71, 71—72

**இளையபெருமாள், திரு. எல்.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 135, 136, 153, [illegible], 388

சென்னையில் தொற்று நோய் தடுப்பு, (க.ஈ.)

ஈ.

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.— **பக்கங்கள்**

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) 51—52

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையின ரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) 200—263

நிதி ஒதுக்கீடு, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், மத்திய அரசு ஒதுக்கீடு 356—359

நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) 276

உ.

உச்சி, திரு. கே.—

உதகை விரைவுப் பேருந்து திட்டம் 373—374

உணவுப் பொருள்கள்—

தஞ்சை மாவட்ட நெல், அரிசி சில்லரை வணிகர்கள் சங்கம், திருத்துரைப்பூண்டி, கோரிக்கைகள் 8—13

நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) 268—280

பாம்ஆயில் வழங்குதல் 223—225

உத்திராபதி, திரு. பொ.—

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) 48

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) 59, 64—65

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையின ரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) 257—267

உமாநாத், திரு. ரா.—

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 152, 153, 186

இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982







**பக்கங்கள்**

உமாநாத், திரு. ரா.—தொடர்ச்சி.

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அறி.) 282—284

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) 48

தஞ்சை மாவட்ட நெல், அரிசி சில்லரை வணிகர்கள் சங்கம், திருத்துரைப்பூண்டி, கோரிக்கைகள் 8—13

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையின ரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) 257—267

நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) 277

ஏ

ஏடுகள்—

பேரவைமுன் வைக்கப்பெற்றவை 222, 340

ஒ.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் 47—50

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையின ரால் தாக்கப்பெற்றது 257—267

ஒழுங்குப் பிரச்னைகள்—

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்வது 47

பேரவைத் தலைவரை அழைக்கும் முறை 46

வினாக்கள் அனுமதிக்கப் பெறுவது 45—46

க.

கடன்கள்—

தக்காவிக்கடன், விவசாயிகள் கிணறு வெட்ட [illegible]

க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கணேசன், திரு. இ.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் | 122—124 |
| ஊக்க ஊதிய உயர்வு, அரசு ஊழியர், குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வோர் | 369 |
| **கருணாநிதி, டாக்டர் மு.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 188, 189, 190, 336 |
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறாது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அறி.) | 294 |
| "பால் கமிஷன்" பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 440, 441, 442 |
| **கருப்பையா, திரு. இரா.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 108—121 |
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறாதுகளைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அறி.) | 288—289 |
| சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் (ஒ.தீ.) | 48 |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) | 59, 63—64, |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 257—267 |
| தொழிலாளர் வைப்பு நிதியில் இருந்து கடன் உதவி | [illegible] |




க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கல்வி—** | |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) | 59—70 |
| பணியிலிருக்கும் பொறியியல் பட்டதாரிகளின் மேல்நிலைப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள் | 21—2[illegible] |
| பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ பெற்றவர்களைத் தொழிற் கல்லூரிகளில் படிக்க அனுமதித்தல் | [illegible] |
| **கல்விக் கூடங்கள்** | |
| **பள்ளிகள்—** | |
| உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் | 234—23[illegible] |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள், காரைக்குடி | 280—28[illegible] |
| சாத்தனூர் அணை பாசனத்துக்கு நீர் கிடைக்காதது | 70—7[illegible] |
| சென்னையில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை | 385—39[illegible] |
| தஞ்சை அரசு மருத்துவமனை எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு, (க.ஈ.) | 383—38[illegible] |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் | 59—7[illegible] |
| நெல் லெவி கொள்முதல் முறை | 268—28[illegible] |
| **கனிவளம்—** | |
| வடமாமாந்தூரில் ஆராய்ச்சி | 251—25[illegible] |
| **கால்நடைகள்—** | |
| கோழிப் பண்ணை மூடல் செம்பியமாதேவி | 350—3[illegible] |
| **கிட்டப்பா, திரு. என்.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 13[illegible] |
| தமிழ் அறிஞர்களுக்கு (சுந்தரம் பிள்ளை போன்றோர்க்கு) பாராட்டு விழா | 232—23[illegible] |
| மாயூரம், காவிரிப் பாலம் விரிவு படுத்தும் திட்டம் | 355—3[illegible] |
| வினாக்கள் அனுமதிக்கப்பெறுவது குறித்து, (ஒ.பி.) | [illegible] |

| | பக்கங்கள் |
| --- | --- |
| **கிருஷ்ணன், திரு. ரா.—** | |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) | 59, 66 |
| நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) | 268—280 |
| **கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—** | |
| பால் கமிஷன் பரிந்துரைகள்மீதும், அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் (அ.தீ.) | 442—452 |
| **குடிநீர்—** | |
| ஆவுடையாபுரம், நக்கலக்கோட்டைக்கு வழங்கல் | 37—38 |
| **குமரி அனந்தன், திரு.—** | |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப் பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 257—267 |
| தொழிலகங்களில் குழந்தைகள் காப்பகம் நிறுவுதல் | 247—249 |
| பால் கமிஷன் பரிந்துரை மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 453—462 |
| **குலசேகர், திரு. எ. டி.—** | |
| கணபதியில் உள்ள டெக்ஸ்டூல் நிறுவனம் | 41—43 |
| **குழந்தைவேலு, திரு. ப.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 89, 90, 94, 96, 97, 317, 318 |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | 77, 80, 81 |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | 81 |
| ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | 81, 82 |







| | பக்கங் |
| --- | --- |
| **கூட்டுறவு—** | |
| கடன்களை ரத்து செய்யவேண்டுமென்ற கோரிக்கை | 25— |
| கடன்கள் வழங்கும் சங்கங்கள் | 29— |
| சங்கங்களைத் தணிக்கை செய்யத் தனி அமைப்புகள் | 32— |
| **ச.** | |
| **சங்கரய்யா, திரு. என்.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 145, 14 150, 1 168—1 |
| **சட்டமுன்வடிவுகள்—** | |
| ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | 81— |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | |
| இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | |
| கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) | 282— |
| சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (அ.நி.) | 390— |
| தமிழ்ப் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1982, (அ.நி.) | |
| நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 | |
| பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982 | |

ச—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **சத்தியமூர்த்தி, திரு. வ.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 91—93 |
| **சமரசம், டாக்டர் கே.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 151, 207 |
| தருமபுரி மாவட்டத்தில் நூற்பாலை | 253 |
| மதிப்பீட்டுக் குழு, அறிக்கை அளித்தல் | 72 |
| **சமூக நலம்—** | |
| சென்னை நகரில் நடைபாதை வாசிகள் எண்ணிக்கை | 16—17 |
| தனியார் நிறுவனத்தினர், வயதான ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்தல் | 379—380 |
| தொழிலகங்களில் குழந்தைகள் காப்பகம் நிறுவுதல் | 247—249 |
| **சிதம்பரம், திரு. சி. த.—** | |
| காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது, (க.ஈ.) | 280—281 |
| **சிவசாமி, திரு. செ.—** | |
| நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) | 278—279 |
| பாம்பன் பாலம் வேலை | 360—362 |
| **சிவஞானம், திரு. ந.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 203—207 |
| **சிவராமன், திரு. எஸ்.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 218—222 |
| செம்பியமாதேவி கோழிப் பண்ணை மூடல் | 380—382 |
| வடமாமந்தூரில் கனிவள ஆராய்ச்சி | 251—252 |
| **சின்னசாமி, திரு. எம்.—** | |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் (க.ஈ.) | 69, 70 |
| **சுகாதாரம்—** | |




ச—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **சுந்தரம், திரு. கே. ஆர்.—** | |
| சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) | 4[illegible] |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப் பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 257—26[illegible] |
| **சுந்தரராஜன், திரு. மு.—** | |
| ஆவுடையாபுரம், நல்கலக்கோட்டை, குடிநீர் வழங்கல் | 37—3[illegible] |
| **சுந்தரராஜ், திரு. நா.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 139, 145<br>14[illegible] |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) | 263—26[illegible] |
| **சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ்.—** | |
| தமிழ்நாடு பரிசுச்சீட்டு ஏஜெண்டுகள் | 1—[illegible] |
| **சுப்பிரமணியன், திரு. உ.—** | |
| நெல் லெவி கொள்முதல் முறை (க.ஈ.) | 271—27[illegible] |
| பேரவைத் தலைவரை அழைக்கும் முறை (ஒ.பி.) | 4[illegible] |
| **சுவாமிநாதன், திரு. வி. வி.—** | |
| அரக்கோணம் துயர் துடைப்புக் கூடத்திற்கு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிலம் ஒதுக்கீடு | 231—23[illegible] |
| **சுற்றுலா—** | |
| பொள்ளாச்சி "டாப்ஸ்லிப்", அழகுபடுத்தும் திட்டம் | 350—3[illegible] |
| **செங்கோட்டையன், திரு. கு. அ.—** | |
| அரிசனங்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குதல் | 34—[illegible] |
| கூகலூர், ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல் | 367—3[illegible] |
| **செம்மலை, திரு. செ.—** | |
| சென்னை பேருந்து நிலையம், பயணிகள் ஓய்வறை | 359—[illegible] |
| போலிப் பயணச் சீட்டுகள் பல்லவன் போக்குவரத்து [illegible] | |

**பக்கங்கள்**

**செல்லமுத்து, திரு. எம்.—**

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் (ஒ.தீ.) 48

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) 257—267

**செல்வராசன், திரு. அ.—**

சென்னையில் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை (க.ஈ.) 385

**சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. வ. செ.—**

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமல்படுத்துதல் 241—242

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் 319—320

**சோமு, திரு. என். வி. என்.—**

இந்திய தண்டனைச் சட்டக்கோவை, குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982 (அ.தி.) 73, 76

**சௌரிராஜன், டாக்டர் கே.—**

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறர் நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982 (அ.தி.) 286—287


## த.


**தகவல் கோரல்—**

இசைவு மறுக்கப் பெற்ற உரிமைப் பிரச்சினை 255—256

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள் 129—130

தள்ளுபடி செய்யப்பட்ட வினா 256—257

போவை அலுவல் குறித்து 193

மின் கட்டணம் செலுத்த புதிய முறை 255







**பக்கங்கள்**

**தமணி, திரு. கே. எம்.—**

பிற்பட்டோர் பட்டியல் குறித்த சட்டநாதன் குழுவின் பரிந்துரை 226—228

**தலைவர்—**

**அறிவிப்பு—**

போவை அலுவல் 217—218

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—**

**அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—**

"சர்வாதிகாரம்," என்னும் சொல், அரசியலில் சமத்துவம், சமாதானம், ஜனநாயகம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் போல் பயன்படுத்தப்படுகின்றது என அனுமதிக்கப் பெற்றது 131

"வழக்கறிஞர்கள் தூண்டிவிடுகிறார்கள்" என்னும் சொல், கட்சிக்காரர்களுக்கு உதவுகிறார்களே தவிர தூண்டிவிடுகிறார்கள் என்பதுபோல் அவர்களை ஈடுபடுத்திப் பேசுவது முறையல்ல என்று குறிப்புரைக்கப் பெற்றது 28

"ஹலோ, ஹலோ" என்று போவைத் தலைவரைச் சுட்டிக் கூப்பிடுவது முறையல்ல, (ஒ.பி.)

**ஒத்திவைப்புத் தீர்மானம்—**

சென்னையிலுள்ள புதுக் கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்கியதைக் கண்டித்து அனைத்துக் கல்லூரிகளைச் சேர்ந்த 2,000 மாணவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாளன்று கோட்டைக்கு ஊர்வலம் நடத்தியதாலும், அதைத் தொடர்ந்து நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருவதாலும் இதனால் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து—

மாண்புமிகு கல்வியமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது

பக்கங்கள்

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

திருச்செந்தூர் முருகன் கோவிலிலே அர்ச்சனை செய்து வந்த அண்ணாவி என்ற மூத்து சுப்பிரமணியம் என்பவர் 26—1—1982 அன்று காவல் துறையினரால் பயங்கரமாகத் தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் அந்தப் பகுதியின் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து—

மாண்புமிகு நிதியமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இசைவு மறுக்கப்பெற்றது — 257—267

கவன ஈர்ப்புகள்—

அமைச்சர் அறிக்கை அளித்தபின் சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும் — 68, 270

**குறுக்கீடு—**

ஒரு கட்சித் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையிடையே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று குறுக்கிடுவது முறையல்ல (ஆ.உ.) — 105

ஓர் உறுப்பினர் பேசும்போது அவர் குறிப்பிடுகின்ற சிலவற்றிற்குப் பதிலளிக்க தாம் பேச இருக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர குறுக்கிடக் கூடாது (ஆ.உ.) — 151, 185

தகவல் கோரல்—

உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்துள்ள பிரச்சினை குறித்து பேரவைத் தலைவரின் அனுமதியின்றி அவையில் எழுப்பக்கூடாது — 129—130

நடைமுறை—

அவையிலே வைக்கப்பெற்ற அறிக்கையின் மீது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை கூறலாம், ஆனால் அதிலே வாக்கெடுப்பு கிடையாது





பக்கங்கள்

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறை—தொடர்ச்சி.

அறிமுக நிலையில் சட்டமுன்வடிவை எதிர்ப்பவர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும் — 396

ஆளுநர் உரையின்போது கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வதில்லை என்றாலும் பலரின் வேண்டுகோள் பேரில் சர்வ கட்சி முக்கியத்துவம் வாய்ந்த பொருள் குறித்து ஒவ்வொரு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பெறும் (ஒ.பி.) — 47

சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெறுவதை எதிர்ப்பவர்கள் சுருக்கமாகப் பேசவேண்டும் (அ.ச.) — 80, 293

சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வரவேண்டிய பிரச்சினை என உறுப்பினர்கள் கருதினால் அது குறித்து அமைச்சரின் அறைக்கே நேராகச் சென்று சொல்லவேண்டும். திடீரென்று அவையில் எழுந்து கேட்பது சரியல்ல (த.கோ.) — 129—13

பேரவைத் தலைவர் எடுத்த ஒரு முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கருதினால் அதைச் திரும்பவும் எழுதிக் கொடுக்கவேண்டும் (த.கோ.) — 25

பேரவைத் தலைவர் தமது அறையில் நிராகரித்துவிட்ட பிரச்னை எதையும் பேரவையில் எழுப்ப அனுமதிப்பதற்கில்லை (த.கோ.) — 25

நீக்கம்—

நடவடிக்கை குறிப்புகளில் இருந்து நீக்கப்பெற்ற பகுதிகள் பத்திரிகைகளில் வெளியிடப்பெற்றால் அதைப் பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பெறும் (ஆ.உ.) — 3

பேரவைத் தலைவரின் அனுமதியின்றிப் பேசக் கூடாது என குறிப்புரைக்கப்பெற்று அவ்வாறு பேசப்பெற்ற பகுதிகள்

பக்கங்கள்


தலைவர்—தொடர்ச்சி.

திர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பேசும்முறை—

அவைமுன் உள்ள பொருள் குறித்து மட்டும் பேசவேண்டும் (ஆ.உ.) — 148

அவையில் இல்லாதவர்கள் என்றாலும் கொள்கை ரீதியாக அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவது தவறாகாது (ஆ.உ.) — 194

பேசுகின்ற உறுப்பினர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துத் தான் பேச வேண்டும் (ஆ.உ.) — 153

பேசுகின்றவர்கள் கொள்கையைப் பற்றி விவாதிக்கலாம். ஒருவருக்கொருவர் கட்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டு பேசுவது சரியல்ல (ஆ.உ.) — 153

வினாக்கள்—விடைகள்

எல்லாவற்றிலும் துணைக்கேள்வி போட ஓர் உறுப்பினருக்கே வாய்ப்பளிக்க இயலாது, (து.வி.) — 45—46

மானியக் கோரிக்கையில் பேசுகிற மாதிரி பேசக்கூடாது, (து.வி.) — 6

மூலக் கேள்வியை ஒட்டி கேட்கவேண்டும் (து.வி.) — 16, 232, 332, 340, 364

வினா ஒன்றிற்கு அனுமதி மறுக்கப்பெற்றால் ஏன் மறுக்கப் பெற்றது என்பதை பேரவைத் தலைவரின் அறைக்குச் சென்றுதான் கேட்க வேண்டும். அவையில் கேட்கக் கூடாது (த.கோ.) — 257

தாமரைக்கனி, திரு. இரா.—

கதர் நெசவுத் தொழிலாளர், வீடு கட்டிக் கொடுத்தல் — 377—379

கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை நிறுவுதல்






பக்கங்கள்


வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது, (க.ச.) — 282

சென்னையில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை, (க.ச.) — 385, 389

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ச.) — 59, 67

புதுக்கோட்டை மாவட்டத்தில் நூற்பாலை — 253—254

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்டமுன் வடிவு, 1982, (அ.நி.) — 392

திருவேங்கடம், திரு. பெ. சு.—

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ச.) — 59, 61

பல்லவன் போக்குவரத்து புறநகர்ப் பிரிவில் போலிப் பயணச் சீட்டுகள் — 374—377

பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ பெற்றவர்களை தொழிற் கல்லூரிகளில் படிக்க அனுமதித்தல் — 22—28

தீர்த்தராமன், திரு. ப.—

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறை துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) — 257—267

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 84,

தீர்மானங்(கள்)— — 130—222

துரைசாமி, திரு. பி. எஸ்.—

கிருட்டினகிரி அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் — 39—40

துரைமுருகன், திரு.

ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 (அ.நி.) — 79

சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 48

பேரவை அலுவல் குறித்து, (த.கோ.) — [illegible]

த—தொடர்ச்சி

பக்கங்கள்

வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி.

துறைமுகம்—

குளச்சல் பகுதி விரிவு படுத்தல் 371—373

தேசிய தலைவர்கள்—

தமிழ் அறிஞர்களுக்கு (சுந்தரம் பிள்ளை போன்றோர்க்கு) பாராட்டு விழா 232—234

தொழில்—

அம்பத்தூர் தொழிற்பேட்டை, பிரிவுகள் எண்ணிக்கை 349—350

கணபதியில் உள்ள டெக்ஸ்டூல் நிறுவனம் 41—43

தொழிற் சங்கங்கள்—

கோரிக்கைகள் மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்கம் 4—8

தொழிற்சாலை—

கரும்பாலைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை நிறுவுதல் 43—45

தொழிலாளர்—

கதர் நெசவு செய்வோருக்கு வீடு கட்டிக் கொடுத்தல் 377—379

குழுப் பருத்தவை பணைகள் 243—244

வைப்பு நிதியில் இருந்து கடன் உதவி 246—247

தொழிலாளர் நலம்—

ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் நிறுவன ஊழியர்கள் குறைகள் 33—34

ந.

நல்லப்பன், திரு. இ. கா.—

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) 60, 66

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப் பெற்றுள்ளது. (ஒ.தீ.) [illegible]—207

நெல் லெவி கொள்முதலுக்கு முறை. (க.ஈ.)

ந—தொடர்ச்சி.


| | பக்கங்கள். |
|---|---|
| **நவநீத கிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—** | |
| சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) | 48, 53, 54, |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் (க.ஈ.) | 59, 67 |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப் பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 265, |
| வசிஷ்டநதி, செல்லியம்பாளையம், இராமநாயக்கன் பாளையம் இடையே பாலம் | 359, |
| **நிதி ஒதுக்கீடு—** | |
| மத்திய அரசு ஒதுக்கீடு கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் | 356—359, |
| **நிர்வாகம்—** | |
| மாவட்டங்களைப் பிரித்தல்—வர்கீஸ் கமிட்டி பரிந்துரை | 229—231 |
| **நிலங்கள்—** | |
| அரக்கோணம் துயர் துடைப்புக் கூடத்திற்கு ஒதுக்கீடு | 231—232 |
| **நினைவுச் சின்னம்—** | |
| அதங்கோட்டாசானுக்கு அமைத்தல் | 353—354 |
| **நீதிமன்றம்—** | |
| மாவட்ட நீதிமன்ற நடுவர் (District Munsif) பதவி | 237—240 |
| முசிறியில் முன்சீப் நீதிமன்றம் | 236 |
| **நூற்பாலை—** | |
| தருமபுரி, புதுக்கோட்டையில் அமைத்தல் | 252—254 |
| **நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—** | |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 265—267 |
| | 75, 77, 79, 80, 81 |
| நெல் லெவி கொள்முதல் முறை, (க.ஈ.அ.) | [illegible] |
| பேரவை அலுவல் குறித்து (த.கோ.) | 193 |
| விதி 31-ஐ தளர்த்தல் (தீ.) | [illegible] |

ந—தொடர்ச்சி.

பக்கங்கள்.

நெடுமாறன், திரு. ப.—

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு, 1982 (அறி.) 290

சிறுமலையில் விவசாய நிலம் வழங்குதலில் முறைகேடுகள் 13—16

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) 258—259

ப.

பட்டா—

சிறுமலையில் விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதில் முறைகேடுகள் 13—16

பரிசுச்சீட்டு—

தமிழ்நாடு பரிசுச்சீட்டு ஏஜண்டுகள் 1—4

பழனியப்பன், திரு. கு. பா.—

மாவட்ட நீதிமன்ற நடுவர் (District Munsif) பதவி 237—240

பழனிவேல், திரு. என்.—

கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்யத் தனி அமைப்பு 32—33

பிறமாநிலங்களில் இருந்து மின்சாரம் பெறும் முயற்சி 345—346

பாசனம்—

இராமச்சந்திரபுரம் குளத்தில் ஆக்கிரமிப்பு 250

உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்துதல் 251

கிருட்டினகிரி அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம்

குண்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் 39—40

## ப—தொடர்ச்சி.


| | பக்கங்கள். |
|---|---|
| **பாசனங்கள்—தொடர்ச்சி.** | |
| சாத்தனூர் அணை தண்ணீர் பாசனத்துக்குக் கிடைக்காதது, (க.ஈ.) | 70—72 |
| தம்பியாற்றின் குறுக்கே அணை | 40 |
| **பாபு ஜனார்த்தனன், திரு.—** | |
| சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) | 48 |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) | 59, 69 |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையின ரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 257—267 |
| பாலிடெக்னிக் மாணவர்கள் உண்ணாவிரதம் (த.கோ.) | 129—130 |
| **பாலகிருஷ்ணன், திரு. ச.—** | |
| கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் | 29—32 |
| **பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர், வி. பி.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 137 |
| சென்னை நகரில் நடைபாதை வாசிகள் எண்ணிக்கை | 16—17 |
| சென்னை பேருந்து நிலையம் பயணிகள் ஓய்வறை | 369—371 |
| மாவட்டங்களைப் பிரித்தல்-வர்கீஸ் கமிட்டி பரிந்துரை | 229—231 |
| **பாலங்கள்—** | |
| காஞ்சிபுரம் தாலுகா அங்கம்பாக்கத்திற்கும் திருமுக்கூடலூர் கும் இடையே | 262 |
| பாம்பன் பால வேலை | 260—262 |
| மாயூரம், காவிரியாற்றின் குறுக்கே, விரிவுபடுத்தல் | 355—356 |
| வசிஷ்டநதியில், செல்லியம்பாளையம், இராமநாயக்கன் பாளையம் இடையே | 259 |

**பக்கங்கள்.**

**பாலன், திரு. க.—**

சென்னையில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை, (க.ஈ.) — 385, 386, 387

சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 48

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ள, (ஒ.தீ.) — 262—263

**பிச்சை, திரு. எம்.—**

குண்டாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் — 250

**பிரபாகரன், திரு. ஜே. சி. டி.—**

அம்பத்தூர் பஜார் தெருவில் வடிகால் அமைத்தல் — 245—246

**பிற்பட்டோர் நலன்—**

சட்டநாதன் குழுவின் பரிந்துரை குறித்து — 226—228

**புருஷோத்தமன், திரு. அ.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 207—215

குடும்பநல அறுவைச் சிகிச்சையை தனியாக தொழில் நடத்தும் மருத்துவர் செய்தல் — 363—365

கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகள் — 25—29

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமல் படுத்துதல் — 241—242

**பெருமாள், திரு. ரா. கு.—**

இராமச்சந்திராபுரம் குளத்தில் ஆக்கிரமிப்பு — 250

**பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—**

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் — 124—127

தன்னுபடி செய்யப்பெற்ற வினா (த.கோ.) — [illegible]





**பக்கங்கள்.**

**பொன்னுரங்கம், திரு. ப.—**

சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம் (ஒ.தீ.) — 48

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) — 59, 68. 69

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) — 257—267

மின்கட்டணம் செலுத்த புதியமுறை, (த.கோ.) — 255

**பொன்னையன், திரு. சி.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 321

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு, 1982 (அறி.) — 282, 284, 287, 291, 292, 293, 294, 295

1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, (அ.நி.) — 73, 76

**போக்குவரத்து—**

உதகையில் இருந்து விரைவுப் பேருந்து விடுதல் — 373—374

ஓய்வறை, சென்னை அரசு விரைவுப் பேருந்து நிலையத்தில் — 369—371

பல்லவன் புறநகர்ப் பிரிவில் போலிப் பயணச் சீட்டு — 374—377

ம

**மக்கள் நல்வாழ்வு—**

ஊக்க ஊதிய உயர்வு, குடும்பக் கட்டுப்பாடு செய்த அரசு ஊழியர்களுக்கு — [illegible]

ம.—தொடர்ச்சி.


பக்கங்கள்.

**மணி, திரு. டி.—**

குளச்சல் துறைமுகம்—விரைவுபடுத்தல் — 371—373

சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம் (ஒ.தீ.) — 48

திருசெந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) — 257—267

நினைவுச் சின்னம், அதங்கோட்டு ஆசானுக்கு அமைத்தல் — 353—354

நெல் லெவி கொள்முதல் முறை, (க.ஈ.) — 278

**மருத்துவம்—**

கூகலூர், ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல் — 367—368

கோவை, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி — 365—367

சென்னையில் தொற்று நோய் தடுப்பு, (க.ஈ.) — 385—390

தஞ்சை அரசு மருத்துவமனை, எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு, (க.ஈ.) — 383—385

தனியாகத் தொழில் நடத்தும் மருத்துவர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்ய அனுமதி — 363—365

**மருத்துவ மனைகள்—**

தொழிலாளர்களுக்கான குரூப் மருத்துவ மனைகள் — 243—244

**மாணவர்கள்—**

காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது, (க.ஈ.) — 280—282

**மாணிக்கம், திரு. எம். எஸ்.—**

கிணறு வெட்ட தக்காவிக் கடன் — 17—21

**மின்சாரம்—**

பிற மாநிலங்களிலிருந்து (கேரளம் தவிர) பெற முயற்சி — 345—348

**முத்துராமலிங்கம், திரு. இ.—**

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு, 1982 (அறி.)

தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) — 280




ம—தொடர்ச்சி.


பக்கங்கள்.

**முத்தையா, திரு. இரா.—**

அரக்கோணம் துயர் துடைப்புக் கூடத்திற்கு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிலம் ஒதுக்கீடு — 231—232

**மூர்த்தி, திரு. ஜி.—**

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் — 142—150, 152, 182, 183

**யசோதா, திருமதி, டி.—**

ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் நிறுவன ஊழியர்கள் குறைகள் — 33—3

ர

**ரகுமான்கான், திரு. அ.—**

இசைவு மறுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சனை (த.கோ.) — 255—25

ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 (அ.நி.) — 82, 8

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவு, 1982 (அறி.) — 28

சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 4, 48—5

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) — 257—26

**ரமணி, திரு. கு.—**

சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) — 4

திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) — 257—2

மருத்துவக் கல்லூரி, ஆயுர்வேதம், கோவை — 365—3

**ராஜமாணிக்கம், திரு. எம். கே.—**

முசிறியில் முன்சீப் நீதிமன்றம்

ர—தொடர்ச்சி.

| | பக்கங்கள் |
|---|---|
| **ரெத்தினராஜ், திரு. என்.—** | |
| குளச்சல் துறைமுகம்—விரிவுபடுத்துதல் | 371—374 |
| **வ.** | |
| **வரதராஜன், திரு. என்.—** | |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982 | 77 |
| நெல் லெவி கொள்முதல் முறை, (க.ஈ.) | 274 |
| **விளையாட்டுகள்—** | |
| தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டுதல் | 21 |
| **வின்சென்ட், திரு. மி.—** | |
| குளச்சல் துறைமுகம்—விரிவு படுத்தல் | 371—373 |
| நெல் லெவி கொள்முதல் முறை. (க.ஈ.) | 270 |
| **விஜயபாலன், திரு. என்.—** | |
| பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் | 240—241 |
| **விஜயராகவன், திரு. பொ.—** | |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது (ஒ.தீ.) | 264—265 |
| நினைவுச் சின்னம், அதங்கோட்டு ஆசானுக்கு அமைத்தல் | 353—354 |
| பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமல் படுத்துதல் | 241—242 |
| **வீரப்பன், ஆர். எம்.—** | |
| "பால் கமிஷன்" பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதம் | 439 |
| **வீராசாமி, திரு. த.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 194—139 |
| **வெங்கடசுப்பிரமணியன், திரு. ப.—** | |
| உத்திரமேரூர் ஏரியை விரிவு படுத்துதல் | 251 |
| காஞ்சிபுரம் தாலுகா அங்கம்பாக்கத்திற்கும், திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் | 262 |



வ—தொடர்ச்சி.

| | பக்கங்கள் |
|---|---|
| **வேணுகோபால், திரு. த.—** | |
| சாத்தனூர் அணை தண்ணீர் பாசனத்துக்குக் கிடைக்காதது, (க.ஈ.) | 70 |
| **வேளாண்மை—** | |
| பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் அமல் படுத்துதல் | 240—242 |
| **ஜ.** | |
| **ஜான் வின்சென்ட், திரு. மு.—** | |
| நம்பியாற்றின் குறுக்கே அணை | 40 |
| **ஹண்டே, டாக்டர் எச். வி.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் | 322, 323 |
| சென்னையில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை | 386—390 |
| தஞ்சாவூர் அரசு மருத்துவமனை, எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு | 383—385 |
| **ஹ.** | |
| **ஹாஜா ஷெரீப், திரு. கே. எஸ். ஜி.—** | |
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் | 97—103 |
| **ஹேமச்சந்திரன், திரு. கே.—** | |
| குரூப் மருத்துவ மனைகளில் தொழிலாளர் நலன் | 243—244 |
| சென்னை புதுக்கல்லூரி மாணவர்கள் போராட்டம், (ஒ.தீ.) | 48 |
| தமிழக பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம், (க.ஈ.) | 59, 66 |
| திருச்செந்தூர் முருகன் கோயில் அர்ச்சகர் காவல்துறையினரால் தாக்கப்பெற்றுள்ளது, (ஒ.தீ.) | 257—267 |
| நெல் லெவி கொள்முதல் முறை, (க.ஈ.) | 275 |

# தமிழ்நாடு சட்டமன்ற பேரவை.

திங்கட்கிழமை, 1982 பிப்ரவரி 8

தை 26, துன்மதி— திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.''

ஒரு செயலைச் செய்யுங்கால் உண்டாகும் அழிவையும், நன்மையையும் ஆராய்ந்து, பின்னால் உண்டாகும் ஆதாயத்தையும் ஆராய்ந்து அச்செயலைச் செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்நாடு பரிசுச்சீட்டினை விற்பனை செய்யும் ஏஜண்டுகள்.

*வினா எண் 81—**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தமிழக அரசு லாட்டரி சீட்டு விற்கும் ஏஜண்டுகள் எத்தனை பேர் ?

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் அவர்களுக்கு கமிஷனாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) லாட்டரி சீட்டு ஏராளமாய் விற்பதால் ஏஜண்டுகள் அதிகப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழ்நாட்டில் தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனை செய்யும் முகவர்கள் 4,243 பேர் உள்ளனர்.

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளில் முகவர்களுக்குக் கமிஷனாக ரூ. 2,42,92,425 வழங்கப்பட்டுள்ளது.

(இ) வரையறை இதுவரை போடப்படவில்லையென்றா
லும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்
படும் மொத்த சீட்டுகளைப் பொறுத்தும் மாவட்டத்தில் பல
பாகங்களில் விற்பனையாகும் சீட்டுகளைப் பொறுத்தும் முகவர்
கள் நியமனத்தை வரையறை செய்யலாம்.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே,
வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பரிசுச் சீட்டுகள் இங்கே
அதிகமாக விற்பனையாவதால் நம்முடைய சீட்டுகளின் விற்பனை
குறைந்து போகிறது. ஆகவே இன்னும் அதிகமாக ஏஜண்டுகளைப்
போட்டு நம்முடைய பரிசுச் சீட்டுகளை அதிகமாக விற்பனை
செய்வதன் மூலம் லாபம் அதிகமாகப் பெறக்கூடிய வாய்ப்பு
இருக்கும். ஆகவே அதுமாதிரிச் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்
களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு
பரிசுச் சீட்டு ஓரளவுக்கு விற்பனையாகிக் கொண்டு வருகிறது.
பிற மாநில பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில் அவற்றைத்
தடை செய்வதற்கில்லை. நம்முடைய பரிசுச் சீட்டுகளை அங்கே
விற்பனை செய்யலாம். அவர்களுடைய பரிசுச் சீட்டுகளை
நம்முடைய மாலநித்திலே விற்கலாம் என்ற முறையினை ஒரு
உடன்படிக்கையின் அடிப்படையிலே பிற மாநிலச் சீட்டுகள்
இங்கே விற்கப்படுகின்றன. நம்முடைய மாநில பரிசுச் சீட்டு
களை சீராக நடத்திக்கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பொது
வாகப் பார்ப்போமானால் 22 மாநிலங்களிலே பரிசுச் சீட்டுகள்
அதிகமாக விற்பனையாவது நம்முடைய மாநிலமாகத்தான் இருக்
கிறது. ஆகவே பிற மாநிலச் சீட்டுகள் இங்கே அதிகமாக நட
மாடிக் கொண்டிருக்கின்றன.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே,
பிற மாநில பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் அதிகமாக
விற்பனை ஆகின்றன என்றுமாண்புமிகுஅமைச்சர்அவர்கள் சொன்
னார்கள் பிற மாநிலங்களைப் போல அதிகமான சிறப்புக் குலுக்கல்
பரிசுகளை நம்முடைய மாநிலத்திலே ஏற்படுத்துவதற்கு அரசு
முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே,
ஏற்கனவே இரண்டுமுறை தான் சிறப்புக் குலுக்கல் நடத்தப்
பட்டு வந்தது. இப்போது நான்கு முறைகள் சிறப்பு குலுக்கல்
நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே திங்களுக்கொரு முறை
சாதாரண பரிசுக் குலுக்கல் முறை இருந்தது சென்ற 5, 6, மாதங்
களுக்கு முன்னால் 15 நாட்களுக்கு ஒரு முறையாக அதைக்
கொண்டு வந்தோம். அதனால் நல்ல நிலைமை ஏற்பட்டு
இருப்பதால் வருகின்ற மார்ச் திங்கள் முதல் 10 நாட்களுக்கு
ஒருமுறை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டை நடத்த அரசு முடிவு
எடுத்திருக்கிறது.





**திரு. பாபு. ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு
அரசு பரிசுச் சீட்டில் ஏறக்குறைய 60 முதல் 65
லட்சத்திற்கு மேற்பட்ட தொகையைப்பெறாமல் இருக்கிறார்கள்.
அந்த எண்கள் சரியாகத் தெரியாதவர்கள் அப்படிப் பெறமுடி
யாமல் இருக்கிறார்கள். அதனால் அந்தத் தொகை அரசி
னிடத்திலே இருக்கிறது. அவர்களும் பரிசுத் தொகைகளைப்
பெறக்கூடிய முறையிலே ஒரிஜினல், டியுப்ளிகேட் என்ற முறை
யிலே விலாசத்தை எழுதி ஏஜண்ட்கள் கொடுக்கக்கூடிய முறையை
கொண்டுவந்தால் எல்லோரும் பரிசைப் பெறக்கூடிய நிலைமை
ஏற்படும். ஆகவே அந்த முறையை அரசு ஏற்பாடு
செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே அந்த முறை எந்த அளவிற்குப் பயன்தரும் என்று
தெரியவில்லை. வேண்டுமானால் அதை ஆராயலாம். பரிசுச்
சீட்டிற்கு பரிசு விழுமேயானால் அதைப் பெறுவதற்கு
90 நாட்கள் என்று நாம் காலம் கொடுத்திருக்கிறோம். பிற
மாநிலங்களிலே அந்த 90 நாட்களுக்குள் வந்து
வாங்கினால் உண்டு, இல்லாவிட்டால் இல்லை. ஆனால்
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 90 நாட்களுக்குப்
பிறகுகூட அவர்கள் வந்து தக்க சான்றுகளோடு கேட்டால்
பெறலாம் என்ற முறையை வைத்திருக்கிறோம். ஒரு ஆண்டுக்
குள் அவர்கள் வராவிட்டால் அடுத்த ஆண்டு பெறலாம் என்று
வைத்திருக்கிறோம். அதற்கான தக்க சான்றுகளுடன் வந்து
நிரூபித்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் ஆணை
யிட்டிருக்கிறோம்.

**திரு. மி. வின்சென்ட் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள் அதிகமாக வியாபாரம்
ஆவதும், நமது மாநிலப் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களில்
அதிக அளவில் விற்பனை ஆகாமல் இருப்பதும் உண்மையா ?
அது உண்மையென்றால், அதைப் போக்குவதற்கு அரசு கையாள்
இருக்கும் முறை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழக அரசு பரி
சீட்டைவிட பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் மிக அதிகமாக
விற்பனை ஆகின்றன என்பது பொருள் அல்ல. நம் மாநிலத்தில்
தமிழக அரசு பரிசுச் சீட்டுகள் விற்பனையாவதில் பத்திலே ஒரு
பங்குதான் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனை ஆகின்றன
என்றால் பிற மாநிலங்களினுடைய பரிசுச் சீட்டுகள் அவர்
களுடைய விலை 20 பங்கு 25 பங்கு இங்கே விற்பனை ஆகிறது.
அந்த அளவிற்குப் பரிசுச் சீட்டுகளை வாங்குகின்ற பழக்கமும்,
அதைப் பயன்படுத்தும் தன்மையும் இங்கே இருப்பதன் காரண
மாக, பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலப் பரிசுச்

சீட்டுகள் பிற மாநிலங்களில் விற்பதை விட அவர்களுடைய பரிசுச் சீட்டுகள் இங்கே அதிகம் விற்பனையாகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலேயும் இங்கே நம்முடைய பரிசுச் சீட்டுக்கள் தான் அதிகமாக விற்பனை ஆகின்றன.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசுப் பரிசுச் சீட்டுகளை வெளி மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு ஏஜெண்டுகளை நியமித்திருக்கிறார்களா ? வெளி மாநிலங்களில் எவ்வளவு பரிசுச் சீட்டுகள் விற்கப்படுகின்றன ? மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்பதற்கு அரசினிடத்தில் விவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு விற்பனை ஆகின்றன என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால், பிற மாநிலங்களில் நம்முடைய மாநிலச் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய முன்வருகின்ற முகவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்க இணைப்புக் குழுவின் கோரிக்கைகள்.**

*வினா எண். 82—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்க இணைப்புக் குழுவின் விண்ணப்பம் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாள் அன்று அரசுக்கு வந்ததா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பிலுள்ள நான்கு படகு கட்டும் தளங்களை மூடும் யோசனையைக் கைவிட்டு மீண்டும் இவைகளை மீன்துறையின் நிர்வாகத்திற்கு மாற்றிட கோரப்பட்டுள்ளது.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.





திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கொடுத்து ஆறு, ஏழு மாதங்கள் இருக்கும். அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்றால் இதில் எப்பொழுது முடிவெடுக்கப்படும் ? படகு கட்டும் இடங்கள் மூடப்படாமல் இருப்பதற்கு அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கென்று அமைக்கப்பட்ட குழுவினர் பல்வேறு பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள். இது நடைபெறாவிட்டால் அது, அது நடைபெறாவிட்டால் இது என்று பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள். அதற்கான தன்மைகள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். எதுவும் இல்லாவிட்டால் மூடிவிட்டு அவர்களுக்கு ஈட்டுத் தொகை தரவேண்டுமா என்று கூடபரிசீலனை செய்திருக்கிறார்கள். சென்னையிலே இருக்கின்ற இரண்டையும் ஒன்றாக ஆக்க வேண்டுமென்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஒரே பரிந்துரையில் முடியவில்லை. இதை ஆராய்ந்து பாருங்கள் என்று பல்வேறு தன்மைகளை வைத்திருக்கிறார்கள். எனவேதான் அதனுடைய கூறபாடுகளை ஆராய்ந்து வருகிறோம். படகைக் கட்டினாலும் அந்தப் படகுகளை வாங்க முடியாத அளவிற்கு அதன் விலைகள் அதிகமாக இருக்கிறது என்ற நிலைமையும் வருகிறது. அதற்குக் காரணம் நிர்வாகச் செலவுகள் என்று இருக்கிறது. எனவே, ஒரே வகையில் தீர்த்துவிடும் அளவிற்கு, நாலும் நாலும் எட்டுஎன்ற முறையில் தீர்க்கின்ற அளவிற்கு நிலைமைகள் இல்லாதிருப்பதால் தான் இதைப்பற்றி பரிசீலனை செய்து, கூடுமான வரையில் அவர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அப்படியில்லாமல் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுப்பது என்றால் எப்பொழுதோ எடுத்திருக்கலாம். எப்படியாவது அவர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாத அளவிற்கு என்ன செய்யலாம் என்று பரிசீலிக்கப்படுகிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நான்கு படகு கட்டும் நிலையங்களையும் வெகு விரைவில் மூட இருப்பதாக ஒரு அச்சம் தொழிலாளர்கள் மத்தியிலே இருக்கிறது. வெங்கட்ராமன் அவர்கள் தலைமையிலே குழு போடப்பட்டு அது சில சிபார்சுகளைச் செய்யவிருக்கிறது. ஆனால், நம்முடைய நிதியமைச்சரவர்கள் நல்ல யோசனையைச் சொன்னார்கள். அதாவது டிபார்ட்மெண்டில் வைத்துக்கொண்டு வேலை கொடுக்கலாம் என்று. இதுதான் முன்னால் இருந்தது. கார்ப்பரேஷனில் இல்லை; டிபார்ட்மெண்டிலேதான் இருந்தார்கள். ஆனால், தற்போது சர்க்காருக்கு ஒரு சாதகமான நிலை இருக்கிறது. அது என்னவென்றால், முன்பு இருந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துச் சொச்சம் ; ஆனால், தற்பொழுது உள்ள எண்ணிக்கை

ஐநூற்றுச் சொச்சம்தான்; மற்றவர்கள் துபாய்க்குச் சென்றுவிட்டார்கள். ஆனால், இப்பொழுது சர்க்கார் அந்தத் தொழிலாளர்கள் அச்சப்படுகின்ற அளவிற்கு ஒரு யோசனை சொல்வதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது என்னவென்றால், ஐயாயிரம் ரூபாயோ அல்லது மூவாயிரம் ரூபாயோ தந்துவிட்டால் நீங்கள் வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக்கொண்டு சென்றுவிடுகிறீர்களா என்ற யோசனையைக் கூறுகின்ற எண்ணம் இருப்பது போல் தெரிகிறது. அவ்வாறு இல்லாமல் ஒரே யார்டாக வைத்து அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க முன்வருவார்களா? இன்னொன்று, நமது நிதியமைச்சரே சொன்னார், '' அட்மினிஸ்டிரேடிவ் எக்ஸ்பென்டிச்சர் '' அதிகமாகிறதென்று.............

[முற்பகல் 9–10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம். மீன்வள மானியக் கோரிக்கையிலே பேசுகிற மாதிரி பேசக்கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம்: '' அட்மினிஸ்டிரேடிவ் எக்ஸ்பென்டிச்சர் '' அதிகமாக இருக்கிறது என்று சொன்னார். கார்ப்பரேஷன் இருந்தால்தான் அப்படி. துறையாக இருந்தபொழுது செலவு ரொம்பக் குறைவு. அதை ஃபைலில் பார்த்தால் தெரியும். ஆகவே, இந்தச் சூழலில், அதை ஒரே யார்டாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். சர்க்கார் மீண்டும் திடமாக, தனது துறையின் கீழ், ஒரே யார்டாக வைத்து, அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற வாய்ப்பை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி பல்வேறு பரிந்துரைகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். அவை அத்தனையும் எடுத்துச் சொல்வேனேயானால், அதன் மூலம், பல்வேறு பீதிகள் மற்றவர்கள் மத்தியில் ஏற்படும். ஆகவேதான் பரிந்துரைகளைப் பார்த்து, நாம் முடிவெடுத்த பிறகு, அறிவிக்கலாம் என்றிருக்கிறோம். உறுப்பினர் மீன் துறைக்கே அதை விட்டுவிடலாம் என்று சொல்கிறார்கள். அந்தக் குழுவோ, மீன் துறைக்கு விட வேண்டியதில்லை, கழகமே வைத்திருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு பரிந்துரைகளைச் செய்திருக்கிறார்கள். அவைகளை ஆராய்ந்து பார்த்து, கூடுமான வரையில், வேலை பார்ப்பவர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாத அளவுக்கு, அவர்களை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம், அதிலே மாற்றங்கள் செய்து பயன்படுத்தலாமா? வேறு வகையிலே ஏதாவது மாற்றங்கள் செய்து வேலை கொடுக்கலாமா என்று இவைகளை எல்லாம் ஆராய்ந்து முடிகக வேண்டுமென்று கருதிதான்





மாதாமாதம் ஏற்படுகின்ற நஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு ஓரளவுக்கு இந்த நடவடிக்கைகளிலே நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசீலனை செய்வதற்கு இடையிலே, இந்தத் தளங்களில் ஆர்டர்ஸ் கிடைக்காததன் காரணமாக வேலை அன்றாடம் இல்லாமல் sense f the secuity அந்த ஒர்க்கர்ஸ் மத்தியில் அதிகமாக இருந்து கொண்டிருக்கிற நேரத்திலே, ஆரம்பத்திலே நஷ்டஈடு கொடுப்போம் என்று கூறியதாலே பீதி ஏற்படும் என்பது உண்மை. எல்லா பரிந்துரைகளையும் படித்தால் பீதி அதிகமாக ஏற்படும் என்று சொன்னார்கள். ஆகவே, இந்தச் செய்தி வெளியே போனால், நிச்சயமாக பீதி ஏற்படும். அந்தப் பரிந்துரைகள் சர்க்காருக்குஎப்பொழுது கிடைத்தது? அதற்குப் பிறகு எத்தனை மாதம் ஆயிற்று? ஏற்கெனவே ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அந்தத் தளங்கள் பயன்படவில்லையென்றாலும், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதை அமைச்சர் அவர்கள் மீண்டும் ரீஇட்டரேட் செய்ய வேண்டும். செய்வார்களா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அறிக்கை கொடுத்த திட்டவட்டமான நாள் விவரம் என்னிடத்தில் இல்லை. 5, 6 திங்களுக்கு முன்னால் கொடுத்தார்கள் என்று கருதுகிறேன். அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். கூடுமான வரை தொழிலாளர்களை அழைத்துப் பேசி, ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்தினுடைய அடிப்படையில், எப்படி செய்தால் நல்லது என்றும், செய்வதையும் அவர்களுடைய நல்லெண்ணத்தையும் அவர்களுடைய நல் ஒத்துழைப்பையும் பெற்று செய்வதற்கான முயற்சியைச் செய்யுங்கள் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி, அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசுவதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நமக்கு இருக்கிற கஷ்டங்களையும் அவர்களும் உணர வேண்டும், அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களையும் நாம் உணர வேண்டும். ஏதாவது மாற்றுத் திட்டங்கள், மாற்று யோசனைகள் வருகின்றபொழுது, இணைந்த முறையில் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இதில் காலதாமதம் ஏற்படுகிறதே தவிர, இல்லாவிட்டால் திடீரென்று ஒரு முடிவை நாம் எடுத்து விடலாம். எடுத்து விட்டதற்குப் பிறகு சங்கடங்களை நீக்குவதற்கான நிலைமைகள் ஏற்படலாம் என்பதால்தான் நஷ்டங்கள் ஏற்பட்டாலுங்கூட பொறுத்துக்கொண்டு போகிறோம். ஆனால், விரைவிலே அதைப்பற்றி முடிவு எடுக்கும்படியாக, அண்மையிலே நான் மீன்துறை செயலாளர் அவர்களிடத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். விரைவிலே அதைப்பற்றி முடிவெடுக்க முயற்சி செய்யலாம்.

[1982 பிப்ரவரி 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 83, திரு. ரா. உமாநாத், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ........

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, நான் இரண்டு கேள்விகள் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இரண்டு கேள்விகள் கேட்கலாம். ஆனால், நீங்கள் பேசாமல் உட்கார்ந்துக் கொண்டிருந்தால் நான் கூப்பிட முடியாது. (குறுக்கீடு)

**திரு. மு. அம்பிகாபதி :** இரண்டு கேள்வியும் உடனேயா அனுமதிக்கிறீர்கள் -

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டாவது கேள்விக்கு அனுமதி அளிக்க நான் உங்களைப் பார்த்தேன். உங்கள் தலைவர் உங்களை நினைவுபடுத்தினார். நீங்கள் சும்மா உட்கார்ந்துக் கொண்டிருந்தீர்கள். அதையும் நான் பார்த்தேன். ஆகவே, இப்போது அந்தப் பிரச்சினையை எழுப்ப முடியாது.

*Memorandum from Thanjavur District Paddy, Rice and Retail businessmen, Association, Thiruthuraipoondi*

*Q. No. 83— THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) Whether the Government have received a memorandum dated 4—2—1981 from Paddy, Rice, ret:il businessmen Association of Thanjavur District, Thiruthur jpoondi reg:rding the hardships experienced by the retail de lers on account of certain conf sion in the payment of levy;

(b) if so, the details thereof ; ard

(c) the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்ட நெல், அரிசி சில்லரை வியாபாரிகள் சங்கம், வர்த்தகர் லெவியை நீக்க வேண்டும் என்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக நெல் அரிசி வாங்க, சில்லரை வியாபாரிகளை அனுமதிக்க வேண்டும் என்றும்கோரியிருந்தனர்.

(இ), அரசு அதைப் பரிசீலித்து அக் கோரிக்கைகளை ஏற்க முடியாது என்று தீர்மானித்தது.



1982 பிப்ரவரி 8]

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, லெவியோ, புரொக்யூர்மென்டோ கூடாது என்ற பொசிஷனை நான் எடுக்கவில்லை. ஆனால் சில்லரை வியாபாரிகளைப் பொறுத்த வரையிலும் அவர்கள் மொத்த வியாபாரிகளிடம் இருந்து வாங்க வேண்டும் என்ற ஒரு கட்டாயம் வருகிற போது, 70 பைசா கிலோவுக்கு கூட்டி வைத்து ஜனங்களுக்கு விற்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது என்பதாலே, விதிவிலக்கு என்று உத்தரவு போட்டாலும், டைரக்டாக சில்லரை வியாபாரிகள் நேரடியாகப் பர்ச்சேஸ் பண்ணுவதற்கு உரிமை கொடுப்பதிலே அரசாங்கத்திற்கு என்ன சிக்கல் இருக்கின்றது? அவர்களுக்கு நேரடியாகப் பர்ச்சேஸ் பண்ணுவதற்கு பர்மிஷன் கொடுப்பதில், புரொம் தி புரொடியூசர்ஸ், என்ன சிக்கல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரும் மொத்த வியாபாரிகளிடமிருந்து நாம் லெவி 50 சதவீதம் என்று வாங்குகிறோம். சில்லரை வியாபாரிகளிடமிருந்து வாங்குவதில்லை. விவசாயிகளிடமிருந்தும் வாங்குவதில்லை. ஆனால் இந்த லெவி வாங்குவதனுடைய நோக்கமே, நம்முடைய தேவைகளான 1 கோடியே 96 இலட்சம் கார்டுகளுக்கு, முறைப்படி தட்டுப்பாடு இல்லாமல் அரிசி தரவேண்டும் என்பதுதான். அதற்குத் தேவையான இருப்பு இருக்க வேண்டும். அந்த இருப்பை நாமே தேட வேண்டி இருக்கிறது. அந்த இருப்பு குறைந்த காரணத்தினால் சென்ற ஆண்டு மத்திய அரசிடம் இருந்து கூட வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அவர்கள் ஒதுக்கிய அளவுக்கு வாங்குகிற அளவுக்கு வாகன வசதி இல்லாத தன்மைகள் எல்லாம் ஏற்பட்டன. ஏற்கனவே கூட, குருவையிலே கூட ஏன் லெவி வாங்கவில்லை என்ற குற்றச்சாட்டு கூட வறட்சி காலத்திலே ஏற்பட்டது. இந்த சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகிறது என்பதற்காகத்தான், வருங்காலத்தில் நல்ல நிலைமை ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த லெவி முறையை நாம் முறையாக நடத்திக் கொண்டு வருகிறோம்.

அதிலே என்ன சங்கடங்கள் வருகின்றன என்று சொன்னால், மொத்த வியாபாரிகளிடத்திலே சில்லரை வியாபாரிகள் உரிமங்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களே வாங்கிக் கொண்டு, அரசை ஏமாற்றுவதற்குப் பல நிலைமைகள் ஏற்பட்டுவிட்டதன காரணமாகத்தான், முதலிலே விட்டு விட்டு இருந்ததில் இருந்து பிறகு கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும் என்று எண்ணினோம். ஆகவே, மொத்த வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் சில்லரை உரிமங்களை வைக்கக் கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டு, சில்லரை வியாபாரிகள் வேண்டுமென்றால் போய் வாங்கிக் கொண்டு வந்து, அதற்கு கணக்கு நமக்குத் தருகிற

[1982 பிப்ரவரி 8

நிலையை ஏற்படுத்தினால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று ஆகும். இப்போது சில்லரை வியாபாரிகள் லெவி கொடுக்காமலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று வைத்ததன் காரணமாக, மொத்த வியாபாரிகளிடத்திலே இருக்கின்ற சில்லரை வியாபாரிகளுக்கான உரிமங்களைப் பயன்படுத்தி, அரசை ஏமாற்றி அதற்குப் பிறகு லெவி கொடுத்ததற்குப் பிறகு, எந்த விலைக்கு விற்கிறார்களோ, அந்த விலைக்கு லெவி கொடுக்காமலேயே விற்கிற சூழ்நிலை இருக்கிறது. அவர்களும் ஒரு கோரிக்கை தந்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு மேலும் ஆலோசித்து, ஏதோ அவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு அவர்கள் எங்கே வாங்குகிறார்கள், எங்கே விற்கிறார்கள், எவ்வளவு விற்றார்கள் என்ற அளவுக்குக் கணக்கு வைத்து, மொத்த வியாபாரிகளுக்கு சில்லரை உரிமங்கள் தராத அளவுக்கு தடுத்து நிறுத்த வழி இருக்கிறதா என்று பார்க்கும்படி நான் சொல்லி இருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சில்லரை வியாபாரிகளைப் பொறுத்தவரையில் இந்த லெவி முறைகளில் இருந்து புரொட்டக்ஷன், பாதுகாப்பு கொடுக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் ஒத்துக் கொள்வதாகத் தெரிகிறது. இப்போது லெவி கலக்ஷன் மிகவும் தீவிரமாக நடந்து கொண்டிருக்கும்போது இந்த புரொட்டக்ஷன் கொடுப்பதற்காக ஸ்தூலமான நடவடிக்கையை விரைவில் எடுப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, அவர்களுடைய தன்மைகளைப் பற்றி அறிந்து நான் சொல்லுகின்றபடி சில்லரை வியாபாரிகளுக்குத் தொல்லை ஏற்படாமல் இருக்கும் அதே சமயத்தில், மொத்த வியாபாரிகளையும் நாம் கட்டுப்படுத்தி, லெவி முறையை ஒழுங்காக இருப்பதற்கு வழிமுறைகள் இருக்குமானால், அந்த வகையிலே அவர்களுக்கு ஏதாவது சலுகை அளிக்க இயலுமா என்பதைப் பற்றி ஆலோசிக்கச் சொல்லி இருக்கிறேன். விரைவிலே அதுபற்றி முடிவெடுக்கப்படும்.

(முற்பகல் 9–20)

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சில்லரை வியாபாரிகள் நெல்லை எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிக்கவில்லையென்றாலும் கூட, தங்களுக்குத் தேவையான அளவு நெல்லை விவசாயிகள் விலைக்கு வாங்கி எடுத்துச் செல்லும்போதும் தடுக்கும் நிலை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நெல்லை பெறுவதற்கு வழி வகுக்கும் வகையில் அரசாங்கம் உத்தரவிடுமா ?



1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உற்பத்தியாளர்களோ, விவசாயிகளோ தங்களுக்குத் தேவையான நெல்லைப் பெறுவதற்கு காரண காரியங்களைச் சொல்லிவிட்டு பெறுவதற்கு இயலும். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், மொத்த வியாபாரிகளும் விவசாயிகள் என்ற காரணத்தை வைத்தும், சில்லரை வியாபாரிகள் என்கிற காரணத்தை வைத்தும், நெல்லைக் கடத்துவதற்கு முயற்சிக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தஞ்சைக்குச் சென்று திருச்சி மாவட்டத்திலே, விவசாயிகள் என்று சொல்கிறார்கள். ஆனால் நாம் அவர்களைப் பிடிக்க முற்படும்போது ஒவ்வொரு வண்டியும் ஒவ்வொரு சந்துகளில் ஓடி ஒளிந்து கொண்டு விடுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலை வருகின்ற காரணத்தாலும், வியாபாரிகள், விவசாயிகள் என்கிற பெயரை வைத்துக் கொண்டு, அரசாங்கத்தை ஏமாற்றம் செய்கிற நிலைமை ஏற்படுகின்ற காரணத்தாலும் தான், சிறு விவசாயிகள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக எடுத்துச் செல்கிறோம் என்று நியாயமான முறையில் காரணத்தைச் சொல்லிவிட்டு எடுத்துச் செல்ல வழிவகை செய்து இருக்கிறோம். இதிலே சிக்கல் எங்காவது இருந்தால், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அரசின் உத்தரவு 50 சதவீதம் லெவி என்பதால் அரசு கொள்முதல் செய்ய வேண்டிய நெல் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதைக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் பல வந்ததா ? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ? 50 சதவீதம் என்பதைக் குறைத்தால்தான் அரசு கொள்முதல் செய்கிற அளவிற்குக் கொள்முதல் ஆகும் என்கிற கருத்து தமிழ் நாட்டில் இருக்கிறது. மேலும், இதனால் சிறு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 40 சதவீதம் என்று நாம் வைத்தோம். அதனுடைய அனுபவத்தை நாம் கண்டோம். இப்போது 50 சதவீதம் வைத்து இருக்கிறோம். மிக அதிகமாக உற்பத்தி இருக்கும் ஆந்திராவில கூட 50 சதவீதம் வைத்து இருக்கிறார்கள். வட மாநிலங்களில் 70 சதவீதம், 75 சதவீதம் என்று வைத்து இருக்கிறார்கள். இந்த லெவி 60 சதவீதம் வைக்க வேண்டும் என்று தான் மத்திய அரசு நமக்குத் தெரிவித்தது. இருந்தாலும் 40 சதவீதம் என்பதில் இருந்து 50 சதவீதம் என்ற அளவிற்கு வைக்க வேண்டும் என்று தான் நாம் முடிவு எடுத்தோம். இந்த அளவுக்கு வைத்தால்தான் ஓரளவிற்கு நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். நாம் விதித்துள்ள லெவி முறைப்படி உற்பத்தியாளர்களிடமிருந்து முழுவதுமாக லெவி கிடைத்து

விட்டால், 25 சதவீதம் என்று வைத்தால் கூட போதும். ஆனால்
ஆங்காங்கு நடைபெறுகின்ற ஏமாற்றுதலையும் மீறி, நமக்கு
எதிர்பார்க்கிற அளவு லெவி கிடைக்க வேண்டும் என்று சொல
னால், அதற்கு 50 சதவீதம் என்று வைத்தால் தான் முடியும்
என்பதால், அந்த அளவிற்கு வைக்க வேண்டிய அவசியம் ஏற்
பட்டது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
லெவி செயல்படுவது சம்பந்தமாக அரசாங்கம் இங்கே அறிவிக்
கின்ற நிலைமைக்கும், அங்கே நடந்து இருக்கும் சம்பவங்களுக்கும்
ஏகப்பட்ட முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை அமைச்சர்
அவர்கள் அறிவார்களா ? இன்றைக்கு ஒரு மாவட்டத்தை விட்டு
இன்னொரு மாவட்டத்திற்கு வணிகர்கள் எடுத்துச் செல்லும்
போது, 50 சதவிகிதம் லெவி செலுத்தியிருக்கிறார்களா என்பதை
பார்த்துத்தான் அடுத்த மாவட்டத்திற்கு அனுப்பவேண்டும்
என்று சொல்கிறார்கள். ஒரே மாவட்டத்திற்குள்ளே சில்லரை
வியாபாரிகள் 1 மூட்டை, இரண்டு மூட்டை தங்களுடைய சொந்த
உபயோகத்திற்காக ரைஸ் மில்லுக்கு எடுத்துச்செல்லவேண்டிய
சூழ்நிலை ஏற்படுகின்றபோது அவர்களையும் தடுக்கும் சூழ்நிலை
ஏற்படுகிறது. இந்த நிலைமையைத் தடுக்க அரசாங்கம் உத்தர
விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் முதலிலே கூறியபடி விவசாயிகள் இடமோ
மற்றவர்களிடமோ எந்தவிதமான தொல்லையும் கொடுக்கக்
கூடாது என்று நாங்கள் சொல்லி வைத்து இருக்கிறோம். அப்படி
ஏதாவது சங்கடங்கள் ஆங்காங்கு வந்தால், அதை என்னுடைய
கவனத்திற்குக் கொண்டு வந்தால். அந்தந்த மாவட்டத்தில் உள்ள
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாம் அறிவுரைகள் கூறமுடியும்.
உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்கிறார்
கள் என்று சொன்னால், அந்த மாவட்டத்தில் இருந்து வெளி
மாவட்டத்திற்கு அவர்கள் எடுத்துச்செல்லும்போது லெவி
கொடுத்து விட்டுத்தான் போகவேண்டும் என்றுவைத்துக்கொண்டு
இருக்கிறோம். ஏற்கனவே நாம் எந்த அடிப்படையில் இதை
வைத்து இருந்தோம் என்றால் அவர்கள் எந்த மாவட்டத்திற்கு
எடுத்துச் செல்கிறார்களோ. அங்கே லெவி அளித்தால் போதும்
என்று வைத்து இருந்தோம். இதனால் என்ன நேர்ந்தது என்
றால் தஞ்சை மாவட்டத்தில் இருந்து எடுத்துச்செல்கிறபோது
நாங்கள் எங்கள் மாவட்டத்தில் அல்லது எடுத்துச் செல்கிற
இடத்தில் கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு எடுத்துக்
கொண்டு போய்விடுவார்கள். அதனால் சில சங்கடங்கள் ஏற்
பட்டன. அதனால் தான் இந்த முறை கொண்டுவரப்பட்டது.
எங்கேயாவது சிறு விவசாயிகள் அல்லது சில்லறை வியாபாரிகள்
பாதிக்கப்பட்டு, அவர்களுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டால்,
அந்தச் சங்கடங்கள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டால், அதனை





நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கலாம். ஆனால் மொத்
வியாபாரிகளைப் பொறுத்த வரையில் இந்த விதியை வைத்
இருக்கிறோம். ஆந்திராவில் இருந்து வாங்கும் அரிசிக்கு லெ
வாங்குவது இல்லை. அது தாராளமாக நடக்கட்டும் என்று அத
கான தனி சர்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்து இருக்கிறோம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 74, மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்
களே, நான் ஆரம்பத்தில் இருந்து துணைக் கேள்விகள் கேட்க
வேண்டும் என்று சோரி ரொம்ப நேரமாகக் கையை உயர்த்திக்
கொண்டு இருக்கிறேன். எனக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
ஆரம்பத்தில் இருந்து ரொம்ப நேரமாகக் கையை உயர்த்திக்
கொண்டு இருந்ததற்கு நன்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஏற்கனவே விளக்கமாக பதில் அளித்து இருக்கிறார்கள். ஆகவே,
கேள்வி நேரத்தில் விவாதத்தில் இறங்குவது சரியல்ல. மாண்புமிகு
உறுப்பினர் தயதுசெய்து உட்கார வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

### சிறுமலையில் ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதில் ஏற்பட்ட முறைகேடுகள்.

*வினா எண் 84 : திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு வருவாய்த்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சிறுமலையில் நிலமற்ற ஏழை விவசாயி
களுக்கு தலைக்கு மூன்று ஏக்கர் கொடுப்பது என்ற திட்டத்தின்
கீழ் நிலம் வழங்கப்பட்டதில் தவறு நடந்திருப்பதாகப் பொது
மக்களால் புகார் கூறப்பட்டு அதன் மீது தாசில்தார் மட்டத்தில்
நடத்தப்பட்ட விசாரணையின் முடிவுகள் மீது எடுக்கப்பட்ட
நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே,
மதுரை மாவட்டம், சிறுமலை கிராமத்தில சுமார் 2,600 ஏக்கர்
நிலத்தை 1,100 நபர்களுக்கு நில மதிப்பு வசூல் செய்யாமல்
ஒப்படை செய்ய பிரேரணைகள் தயார் செய்யப்பட்டன. சுமார்
111 ஒப்படைகள் செய்யப்பட்டுள்ளன. ஒப்படை செய்யப்
பட்டதில் சிறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று அரசின்
கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. எனவே அந்தப் பகுதிக்கு

[1982 பிப்ரவரி 8

வருவாய்த் துறை அதிகாரிகளுடன் 8—3—1981 அன்று நானே நேரில் சென்று விசாரித்தேன். அப்போது தவறு நடந்திருக்கிறது என்று அறிந்தேன். அதனால் அந்த தவறுக்கு காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டம் சிறுமலையில் நில விநியோகத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களை மாண்புமிகு அமைச்சரவர்களே நேரில் சென்று விசாரித்து சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதற்காக நான் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்த நடவடிக்கை இன்னும் அமுலாகவில்லை.. அமுல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதை விரைவாக அமுல் நடத்த அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அங்கே இரண்டுவிதமான தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. அதிகாரிகள் செய்த தவறு ஒன்று. பொதுமக்கள் அதிகாரிகளை ஏமாற்றிய தவறு இன்னொன்று. அதிகாரிகள் செய்த தவறுகளுக்காக 9 அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் மூவர் மீது நடவடிக்கை குறித்து வருவாய் வாரிய ஆணையரின் ஆணை எதிர்பார்கப்படுகிறது. மற்ற 5 பேர்களின் பதவியில் முதுநிலை seniarity குவறக்கப்பட்டிள்ளது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, ஏற்கனவே தாசில்தார் அவர்கள் விசாரித்து தந்த அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தாசில்தார் அவர்கள் அறிக்கையில் அந்த பகுதியில் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நானே அறிந்திருக்கிறேன் என்று எழுதியிருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டு தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 8 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தப் பிரச்சனையில் எந்தவிதமான அரசியல் தொடர்பும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அரங்கநாதன் மற்றும் அவருடைய மகன் மல்லிகார்சுனன் ஆகிய இருவரும் அங்கே பதிவு செய்யாத ஒரு அமைப்பு வைத்துக்கொண்டு விவசாயிகளுககு உதவி செய்வதாகச் சொல்லி ஏமாற்றி இருக்கிறார்கள். அத்தகைய ஒழுங்கீனங்களுக்கு காரணமான அந்த தனிப்பட்டவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று



1982 பிப்ரவரி 8]

கேட்டிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்கள் அனைவர்மீதும் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, சிறுமலையில் தவறான முறையில் பல நபர்கள் நிலத்தைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள் ; அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள்; நன்றி. ஆனால் நீண்டமாலமாக ரெவின்யூ பாரஸ்ட் நிலத்தில் 30, 40 ஆண்டுக்காலமாக பயிர் செய்கிற விவசாயிகளுக்கு அந்த நிலத்தைக் கொடுக்காமல் அவர்களை வெளியேற்றிவிட்டு, தவறான முறையில் வேறு நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் அமைச்சரவர்கள் நேரில் சென்று விசாரித்து முறையான நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே நாடு பூராவும் அமைச்சர் நேரடியாகச் சென்று விசாரிப்பது முடியுமா எல்லா இடங்களுக்கும் போக முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் ஒன்றிரண்டு இடங்களுக்கு போய்த்தான் தீரவேண்டும் என்ற நிலமை ஏற்பட்டால் அதற்குத் தயாராக இருக்கிறேன். ஒழுங்கீனமாக யாராவது நிலத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால் அவர்கள்மீது நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இந்த பட்டாக்கள் எந்த காலத்தில் வழங்கப்பட்டன ? அப்படி பட்டா வழங்கப்பட்ட நிலங்களை தற்போது அந்த நிலங்களுக்கு அருகாமையில் இருக்கிற நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலத்தோடு சேர்த்துக் கொண்டு பயிர் செய்கிறார்கள். அவர்களிடமிருந்து அந்த நிலங்களை மீட்டு மீண்டும் நிலமற்ற அந்த ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இப்படிக் கொடுக்கப்பட்ட பட்டா நிலங்களை சிலர் விற்றிருக்கிறார்கள். சிலர் ஆக்கிரமித்திருக்கிறார்கள். இதை எல்லாம் தீர விசாரித்து கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக தமிழ்நாடு பூராவும் 28 யூனிட்டுகள் போட்டு, தகுதியற்ற முறையிலே நில மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நில ஆக்கிரமிப்புச் செய்திருப்பதையும் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திருமதி. ஏ. எஸ. பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து பல விஷயங்கள் தெரிகின்றன. பல விஷயங்களை அமைச்சரவர்கள் கண்டுபிடித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்

ஆனால் திண்டுக்கல்லிலே இருக்கின்ற வசதி படைத்தவர்கள் பலர் பினாமி பெயர்களை வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தங்களிடம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி சிறுமையைப்பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் பற்றி இப்போது கேட்கக்கூடாது. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் அமைச்சரால் பதிலளிக்க முடியும்.

**சென்னை நகரிலுள்ள நடைபாதை வாசிகள் எண்ணிக்கை.**

*வினா எண். 85—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் வீடில்லாத நடைபாதை வாசிகள் தொகை கணக்கெடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய அவர்கள் எண்ணிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) ஆம்.

(ஆ) அண்மையில் எடுக்கப்பட்ட மக்கட்தொகை கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்கள் வரவில்லை. ஆனால் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், திறந்தவெளி மற்றும் மரங்களின் கீழ் வாழ்பவர்கள், சாலை ஓரங்களிலே இருப்பவர்கள், நடைபாதையில் இருப்பவர்கள், தெருக்கோடியிலே இருப்பவர்கள், இரயில்வே ப்ளாட் பாரத்திலே இருப்பவர்கள், கோயிலிலே இருப்பவர்கள், மண்டபங்களின் கீழே இருப்பவர்கள் போன்றவர்கள் எல்லாம் வீடற்றவர்களாகக் கணக்கிடப்படுகிறார்கள்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, 1961, 1971, 1981 ஆகிய ஆண்டுகளின் அடிப்படையில் மக்கள் தொகை பெருக்கம் எத்தனை சதவிகிதம் கூடி இருக்கின்றது. மற்ற இடங்களில் எத்தனை சதவீதம் கூடி இருக்கின்றது. அதற்கான காரணங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 1961-ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் தொகை 43 கோடி. 1951-க்கும் 1961-க்கு மிடையிலே



21·51 சதவீதம் அதிகரித்திருக்கின்றது. 1971-ல் மக்கள் தொகை 54 கோடி. அப்போது 24.80 சதவீதம் அதிகரித்திருக்கின்றது. 1981-ல் மக்கள் தொகை ஏறக்குறைய 68 கோடி இருக்கும். என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது 24·7 சதவீதம் அதிகரித்திருக்கக்கூடும் என கணக்கிடப்படுகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. சென்னையில் இருக்கின்ற நடைபாதை வாசிகளின் எண்ணிக்கை 1961, 1971, 1981 ஆகிய ஆண்டுகளில் இடையே எத்தனை சதவீதம் கூடி இருக்கிறது? அல்லது குறைந்திருக்கின்றதா? அதுபற்றிய விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, கூடி இருக்கின்றதா இல்லையா என்ற கணக்கு என்னிடத்தில் வரவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரில் குடிசைவாசிகள், நடைபாதை வாசிகள் ஆகியவர்களின் நெருக்கடியைப் போக்குகின்ற வகையிலே காஷ்மீரிலே ஏரியிலே கட்டியிருப்பதைப் போன்றும், தாய்லாந்து நாட்டிலே ப்ளோட்டிங் பசார் என்ற வகையிலே ஆற்றிலே வீடுகள் கட்டி இருப்பதைப் போன்றும் கூவம் ஆற்றில் வீடுகள் கட்ட அரசு அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வேறு அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியினைக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**விவசாயிகளுக்கு கிணறு வெட்ட தக்காவிக் கடன் வழங்கும் திட்டம்.**

*வினா எண். 86—**திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக விவசாயிகளுக்குக் கிணறு வெட்டுவதற்கு தக்காவிக்கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது ?

[1982 பிப்ரவரி 8

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) பேரவைத்தலைவர் அவர்களே, தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வறட்சிக் காலத்தில் கிணறு வெட்டுவதற்கு கடன் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளதற்கு நன்றி. இந்தக் கடன் விவசாயிகளுக்கு குறைந்த அளவிலேதான் கொடுக்கப்படுகிறது. அதிகமாகக் கொடுப்பதற்கும், கடன் கொடுப்பதில் இருக்கின்ற கஷ்டங்களைப் போக்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சங்கடங்கள் எல்லாம் போக்கப்படுகின்றன. சங்கடம் என்ன என்று சொன்னால் அதைப் பரிசீலனை செய்து போக்குவதற்கு அரசு தயாராக இருக்கின்றது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக் காலத்திலே விவசாயிகளுக்கு கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ஏராளமாக கடன் வழங்கப்படுவதாக அரசாங்கத்தின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நியாயமான வகையிலே விண்ணப்பித்திருப்பவர்கள் ஏராளமான பேர்களுக்கு அந்தக் கடன் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் கடனின் முதல் தவணையைப் பெற்ற விவசாயிகளுக்குக் கூட இரண்டாவது தவணை கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை வடாற்காடு மாவட்டத்திலே இருக்கின்றது. அதுபற்றி பரிசீலித்து அந்த விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதில் உதவி செய்தால் நன்றாக இருக்கும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த உதவியை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் அரசு இதற்கான பணத்தை ஒதுக்கியிருக்கிறது. பொதுவாக ஏராளமான விவசாயிகள், சில ஊர்களில் என்று சொல்லாமல் குறிப்பிட்டு, இந்த இந்த இடங்களில் இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்கின்றன என்று எடுத்துச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கி விவசாயிகள் தோண்டுகிற கிணறுகள் ஊற்றுக்கண் இல்லாமல் இருந்தாலோ, அல்லது நல்ல தண்ணீர் வளம் இல்லாமல் இருந்தாலோ, அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படக்கூடிய வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள், ஆகவே,

1982 பிப்ரவரி 8]

அரசு நல்ல வழிமுறைகளை ஏற்படுத்தியும் கூட, பல இடங்களில் அவர்கள் இதனால் பயன் பெறாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், உண்மையாகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் தரும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கும் இருக்கிறது. பொதுவாக சொல்லாமல், உதாரணமாக இப்படிப்பட்ட ஊரில் என்று சொன்னால், அரசுக்கு நடவடிக்கை எடுக்க சௌகரியமாக இருக்குப்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணத்திற்கு மத்திய அரசு எவ்வளவு தொகை வழங்கி உள்ளது? மாநில அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது? தக்காவி கடன்களாக விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது? இதனால் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்ற விவரத்தை அமைச்சர் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வறட்சியின் காரணமாக, 27 கோடியே 95 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாயை தக்காவி கடனாக அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. இதனால் தமிழகத்தில் 18 இலட்சம் குடும்பங்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள். வறட்சி நிவாரணத்திற் ாக மத்திய அரசு 48·9 கோடி செலவழிக்கலாம் என்று அனுமதித்தது. அது போதாது என்று மாநில அரசு 54·7 கோடியை செலவு செய்வதற்கென்று ஆணை பிறப்பித்தது. அந்த 48·9 கோடியில் மாநில அரசே செலவழிக்க வேண்டிய தொகை 16·6 கோடி. மீதியிருக்கிற 32 கோடியில் 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானியமாகவும் கொடுக்கப்பட்டது. இந்த அரசு செலவழித்த தொகை 54·7 கோடியில் மத்திய அரசு கொடுத்தது 10 கோடிக்குக் கீழே 8 கோடிக்கு மேலே.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணத்திற்காக கிணறு வெட்டுவதற்கென்று நபர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் இளையான்குடி போன்ற இடங்களில் முதலில் 1,500 ரூபாய் கொடுத்து விட்டு, மீதி 1,000 ரூபாயை இன்னமும் கொடுக்காமல் இருக்கிறார்களே அதை உடனடியாக கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வேலைகளை ஆரம்பிப்பதற்காக முதலில் 1,500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 1,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அப்படி கிணறு தோண்டுவதற்கான ஆரம்ப வேலைகளை எடுத்த பிறகு, மீதி பணத்தை யாராவது உண்மையிலேயே பெறவில்லை என்று தெரிந்தால் நான் உத்தரவு இடுகிறேன். நான் இப்படி தெரிவிப்பதற்குக் காரணம் பொதுவாக சொல்லிவிட்டால், என்னால் நடவடிக்கை எடுக்க இயலாது. விவசாயிகளுக்கு தேவையானதை செய்யாமல் இருப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு உறுப்பினர்கள் உதவியாக இருக்க வேண்டும். எந்தெந்த ஊரில், யார் யாருக்கு இப்படி செய்திருக்கிறார்கள் என்று தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்கள் எழுத்து மூலமாக எழுதி கொடுப்பார்களேயானால், நான் நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக கொடுக்கப்படுகின்ற இந்த 2,500 ரூபாய் நிவாரணம் யானைப் பசிக்கு சோளப்பொறி போன்றதுதான். இந்தப் பணத்தில் 1 முதல் 1½ முழும் ஆழம் கூட கிணறை வெட்ட முடியாது. ஆகவே இந்தத் தொகையை 5,000 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது சிறிய விவசாயிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். யானைப்பசி இருந்தால், அந்த யானை மரங்களை எடுத்து சாப்பிட்டுக் கொள்ளும். சாதாரண ஆடுகளையும், மாடுகளையும் தான் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். ஏழை எளியவர்களுக்குத்தான் நிவாரணம்தேவை. யானையைபெரிய பெரிய பணக்காரர்களும், மகாராஜாக்களும் தான் வைத்திருப்பார்கள். அவர்களை நாம் கவனிக்க வேண்டியதில்லை. அவர்களே பார்த்துக் கொள்வார்கள்.

திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பயன்படுத்துகின்ற கிணறுகளுக்கு நிவாரணம் அளித்து, ஆழப்படுத்தி தோண்டினாலும் ஊற்றுக் கிடைக்கவில்லை என்ற பிரச்னை இருப்பதால், அரசே டுவாட் (WAD) போர்டு மூலம் குழாய்கிணறுகள் அமைத்து மோட்டார் பம்பு செட்டுகள் போட்டு, அவைகளுக்கு கனெக்‌ஷனும் வாங்கிக் கொடுப்பார்களேயானால் நலமாக இருக்கும். அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1982 பிப்ரவரி 8]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிவாரணப் பிரச்னையில் விவசாயிகளுக்கு அரசு கடன் வழங்கி கிணறு தோண்டும்போது. எந்த இடத்தில் கிணறு தோண்டுவது என்று அரசே பார்வையிட்டு, அந்த இடத்தில் தோண்டும்போது, தண்ணீர் இல்லை யென்றால் அல்லது ஊற்று கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பது பற்றி அரசே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம்.

* **வினா எண் 87—திரு. எஸ். அரங்கநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) : ஆம். (ஆ): தருமபுரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகாமையில் காலியாக உள்ள நிலத்தை விளையாட்டரங்கம் கட்டுவதற்காக தருமபுரி மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு மாற்றிக் கொடுக்குமாறு அம் மாவட்ட ஆட்சித் தலைவர் நில வருவாய் ஆணையர் மூலம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குத் தர சம்மதிப்பதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

### பணியிலிருக்கும் பொறியியல் பட்டதாரிகளின் மேல்நிலைப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள்.

* **வினா எண் 88 — திரு. சோ அழகர்சாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டதாரிகள் மேல்நிலைக் கல்வி (M.E) படிப்பை பணியில் இருந்துகொண்டே மாலை நேரத்தில் பயிலச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பொறியியல் பட்டதாரிகள் தற்போது பணியில் இருந்துகொண்டே, மற்ற முழு நேர மாணவர்களுடன் சேர்ந்து பட்ட மேற்படிப்பைத் தொடரும் வண்ணம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் இவர்களை மாலை நேரத்தில் பயிலும் வண்ணம் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1982 பிப்ரவரி 8

[முற்பகல் 9-40]

திரு. கோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எம். இ. படிப்பிற்காக பொறியியல் பட்ட தாரிகளுக்கு ஏற்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பது, அவர்கள் பணியில் இருந்து கொண்டே மாலை நேரங் களில் படிக்க மற்ற மாணவர்களுக்குள்ள அதே வசதியை இவர் களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஏன் முயற்சி செய்யக் கூடாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதும் பணி யில் இருந்துகொண்டேதான் படிக்கிறார்கள். பணியில் இருந்து கொண்டு பகுதிநேரப்படிப்பாக சிலவற்றைப் படித்துக்கொண்டு சில பாடங்களை முழு நேர மாணவர்களோடு சேர்ந்து படிக் கிறார்கள். ஆகவே நான்கு ஸெமஸ்டிரில் முழுநேர மாணவர்கள் முடிப்பதை இவர்கள் ஆறு செமஸ்டரில் முடிக்கிறார்கள். ஆகவே பணியில் இருந்துகொண்டே படிப்பதற்கு இப்போது வாய்ப்பிருக்கிறது. மற்றப்படி பகுதிநேரம் என்பதை இவர்களுக்கு முழுநேரம் முழுமையாக அதைச் செய்ய வேண்டுமென்றால் அதிக மாகச் செலவாகும், அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

திரு. கோ. அழகர்சாமி : இப்போது எந்தெந்தக் கல்லூரி களில் இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது ? கோவையில் மட்டும் தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னையிலும் அந்த ஏற்பாடு இருக்கிறதா ? இல்லையெனில் இதை விரிவுபடுத்தி சென்னை, கோவை, திருச்சி, போன்ற இடங்களில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள், வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. சென்னையில் இருக்கும் என்று கருது கிறேன், பல்கலைக்கழகம் இருப்பதால்.

பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ பெற்றவர்களை தொழிற் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க அனுமதிக்கும் திட்டம்.

* வினா எண் 89— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசு பாலிடெக்னிக் பள்ளிகளில் படித்து டிப்ளமோ பெற்ற மாணவர்களை தொழிற்கல்லூரிகளில் பட்டப் படிப்பில் சேர்ந்து படிக்க வகை செய்யும் திட்டத்தை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசு ஆலோசனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?



1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ்நாடு பாலிடெக்னிக் பள்ளிகளில் மூன்றாண்டு கால பட்டயப் படிப்பு படித்து வெளிவரும் மாணவர்கள் பொறியியற் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஏற்கனவே அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) பாலிடெக்னிக்குகளில் படித்துவரும் டிப்ளமோ மாணவர்கள் பொறியியற் கல்லூரிகளில் நான்காண்டுப் பட்டப் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். இவர்களும் நேர்முகத் தேர்வின் படியே தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டம் 1980 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இப்போது அவர்கள் படிப் பதற்கு அது நடைமுறையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த பாலிடெக்னிக்கில் பட்டம் பெற்ற பிறகு மூன்றாண்டுகள் இடைவெளிக்குப் பிறகுதான் பொறியியல் கல்லூரியில் சேர வேண்டும் என்ற விதி இருக்கிறதா? அப்படி விதியிருக்குமானால் அதைத் தளர்த்து வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பகுதிநேரப் பட்டப்படிப்பில் சேருவதற்கான ஒரு விதி. மூன்றாண்டு காலம் அனுபவம் பெற்ற பிறகு அவர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். நிறைய மாணவர்கள் வருகிற காரணத்தால் நாம் இந்த நிபந்தனையை வைத்திருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : வட மாநிலங்களில் இப்படிப் பட்ட மாணவர்களுக்கு இவ்வளவு சதவீதம் என்று இடம் ஒதுக்கப் பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கிறதா ? இல்லையெனில் குறிப்பிட்ட சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுநேர பி.இ. பட்டப்படிப்பிற்கு சேர்த்துக் கொள்வது பற்றிய கேள்வி. இது இங்கே இல்லை. அப்படி நாம் கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று மாணவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது 12-வது வகுப்பு படித்து விட்டு வருகிற மாணவர் களுக்கு, பெரும்பாலான மாணவர்களுக்கு இடம் தருவதற்கு முடிவதில்லை. ஆகவே டிப்ளமா படித்துவிட்டு வருகிறவர் களுக்கு இடம் ஒதுக்கவேண்டும் என்றால் அவர்களுக்கு இட மில்லாமல் போய் விடும். இது இவர்களுக்கு மட்டுமான பிரச்னை அல்ல, எல்லா மாணவர்களும் சம்பந்தப்பட்ட பிரச்னையாகக் கருதுவோமானால் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு நாம் ஆதரவு தரமுடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். இவர்கள் படித்து முடித்ததற்குப் பிறகு மூன்றாண்டுகள் வேலைக்கு போய் அந்த அனுபவத்தோடு வந்து பகுதிநேர மாணவர்களாக படிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபடலாம்.

[1982 பிப்ரவரி 8

(ஆ) உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று 1979
இல் சாதாரண வட்டி/அபராத வட்டி தள்ளுபடி, செலுத்திய
வட்டியை திருப்பித் தருதல் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டன.
கடன்களைத் திருப்பிச் செலுத்தும் தவணையை நீட்டித்து மேலும்
சிறு விவசாயிகளின் நடுத்தர காலமாற்று வசதிக் கடன்களை
(49.64 கோடி ரூபாய் அளவு) கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு
திருப்பிச் செலுத்தியது. ஏற்கெனவே அவர்கள் திருப்பிச் செலுத்
திய கடன்களை (23.59 கோடி ரூபாய் அளவு) அவர்களுக்குத்
திருப்பிக் கொடுக்கப்பட்டது. சிறு விவசாயிகள் 1981 ஆம்
ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிக்குள் குறுகியகால நடுத்தர
காலக் கடன்களை திருப்பி கட்டினால் அவர்களது வட்டி/அபராத
வட்டி தள்ளுபடி சலுகை அளிக்கப்பட்டது. இதர விவசாயி
களுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. 1980 ஆம்
ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் தேதிக்குப் பின் திருப்பிச்
செலுத்திய வட்டி, அபராத வட்டி அவர்களுக்கு திருப்பித் தரப்
படும். இந்த வகையாக 118 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயி
களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த காலத்தில்
கடன்களைத் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில் 2
சதவீதம் தள்ளுபடி செய்யவும் அரசு தீர்மானித்துள்ளது. நீண்ட
காலக் கடன்களைப் பொறுத்தவரையில் 1974–75 ஆம் ஆண்டு
முதல் 1977–78 ஆம் ஆண்டு முடிய இயற்கையின் இடர்ப்பாடு
களால் பாதிப்புக்கு உள்ளான கடன் தொகை ரூபாய் 92.91
கோடியை ஒரு தனிக்கணக்கின் கீழ் கொண்டு வந்து வசூலைத்
தள்ளிவைத்து அதனை ஒன்பது ஆண்டுகளில் வசூல் செய்யலா
மென அரசு உத்திரவிட்டுள்ளது.

[முற்பகல் 9–50]

**திரு. து. புருஷோத்தமன் :** சிறு விவசாயிகளுக்குக் கொடுக்
கப்பட்ட சலுகைகளைப் பட்டியல் மூலம் விளக்கிக் காட்டினார்
கள். ஆனால், சிறு விவசாயிகள், ஆண்டு தோறும் ஏற்படுகிற
தவறிய காரணத்தாலும், ஏற்கெனவே இருக்கும் பல்வேறு கடன்
களையும், மின்சாரக் கட்டணத்தில் வரியையும் வசூலிப்பதில்
கெடுபிடி காரணமாக பாதிக்கப்படுகிற காரணத்தாலும் சிறு விவ
சாயிகள் கூட்டுறவுத் துறையில் வாங்கிய கடனை அடியோடு ரத்து
செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கூட்டுறவுக் கடன்
களை அடியோடு ரத்து செய்ய அரசு முன்வராது. காரணம் இது
மைய அரசு எடுக்க வேண்டிய முடிவு. வாங்குகிற கடனைப்
பொறுத்தவரை உலக வங்கி மூலமாக மத்திய அரசு அந்தக்
கடனை மாநிலங்களுக்குப் பெற்றுத் தருகிறது. பாதிக்கப்பட்ட
விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்வது அல்லது கடனை மாற்றி
யமைப்பது போன்ற சலுகைகள் மத்திய அரசின் வி...



1982 பிப்ரவரி 8]

களுக்கு உட்பட்டு செய்யப்பட்டு வருகிறது. அறவே எல்லாக்
கூட்டுறவுக் கடன்களையும் ஒரு மாநில அரசு ரத்து செய்வது
என்பதை மத்திய அரசு ஏற்காது. அந்தப் பணம் மாநில அரசின்
பணமோ அல்லது மத்திய அரசின் பணமோ அல்ல. உலக
வங்கியிடமிருந்து நாம் அதனை வாங்கிக் கொடுப்பதால் அந்தக்
கடனை நாம் திருப்பிச் செலுத்தியாக வேண்டும்.

**திரு. து. புருஷோத்தமன் :** சிறு விவசாயிகள் குறித்த காலத்
தில் கடனைச் செலுத்த முடியாத நிலையில் அவர்கள் செலுத்த
வேண்டிய வட்டியையும், அபராத வட்டியையுமாவது ரத்து செய்ய
அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சிறு விவசாயிகளுக்கு
வட்டி, அபராத வட்டி இரண்டையுமே தள்ளி முதல் முறையாக
அந்தச் சலுகையை அளித்தது இந்த அரசுதான். அதை
நான் ஏற்கெனவே படித்தபோதே சொல்லியிருக்கிறேன்.

**திரு. மி. வின்சென்ட் :** விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்
களை இந்திய நாட்டிலேயே தமிழ் நாட்டில் மாத்திரம் ரத்து
செய்ததன் காரணமாக மற்ற மாநிலங்களில் விவசாயிகள் போ
ராட்டம் நடத்த வழி வகுத்திருக்கிறதா ? கூட்டுறவுக் கடன்களை
வசூலிப்பதற்காக ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று
மத்திய அரசிடமிருந்தும் ரிசர்வ் வங்கியிடமிருந்தும் தகவல் வந்
துள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கூட்டுறவுக் கடன்
களைத் தள்ளுபடி செய்வது என்ற சொள்கையை மாநில அரசுகள்
நடைமுறைப்படுத்தக் கூடாது என்பது மத்திய அரசின் கொள்கை
ஆகும். அந்த அடிப்படையில்தான் மத்திய அமைச்சர் ராவ்
வீரேந்திரசிங் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யக்கூடாது
என்பதோடு மட்டுமல்ல, உலக வங்கிக்குக் காலத்தே கடனைத்
திருப்பிக் கொடுத்தால்தான் மீண்டும் உலகவங்கிக் கடனை விவ
சாயத் துறைக்குப் பெறக்கூடிய நிலை ஏற்படும் என்றும் இல்லை
யென்றால் அது கிராமப் பொருளாதாரத்தையே பாதித்துவிடும்
என்றும் கடனைத் திருப்பிச் செலுத்தாத விவசாயிகள் மீது
ஜப்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு மாநில
அரசுக்கு எழுதியிருப்பதோடு இந்த மாதம்—பிப்ரவரி 4-ஆம்
தேதி ரிசர்வ் வங்கியிடமிருந்தும் ஒரு கடிதம் மாநில அரசுக்கு
வந்திருக்கிறது. அதிலே—

In view of the heavy overdues at the Cooperative Central

Bank level I am sure that the State Government will pass early orders lifting the ban on coorcive action imposed by them for the recovery of the agricultural loans and shall be thankful if you will kindly arrange to forward the same to the Government of India.

என்று எழுதியிருக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை எடுத்து கடனை வசூல் செய்ய வேண்டுமென்று பிப்ரவரி 4 ஆம் தேதி ரிசர்வ் வங்கி கடிதம் எழுதியிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள் வழங்கும் முறையில் ஆங்காங்கே உள்ள சில பேர்கள், சிறு விவசாயிகள் கட்ட இயலாத காரணத்தால்—கூட்டுறவுச் சங்கம் முழுவதுமே கடன் வழங்குவதற்கு முடியாத நிலைமை இருப்பதால்—அதை மாற்றி அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலை கடந்தகால நிலை. இதை மாற்றியமைத்து விட்டது இந்த அரசு ஏற்கெனவே. கிட்டத்தட்ட 4,972 கூட்டுறவுச் சங்கங்களில் 1,342 கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குகின்ற தகுதியை இழந்திருந்த போதிலும்—ஆங்காங்கே உறுப்பினர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவார்களானால்—அந்தச் சங்கத்திற்கு ரிசர்வ் வங்கி விதிப்படி கடன் வழங்கும் தகுதி இருக்கிறதா இல்லையா என்பதைக் கூட பார்க்காமல் ஒரு விவசாயி மனமுவந்து கடனைத் திருப்பிக் கட்டிவிட்டால் அப்படிப்பட்டவரை ஊக்கப்படுத்துவதற்காக அவருக்கு அடுத்த கடனைத் தரவேண்டுமென்ற முறையை முதன்முதலாக பாரதத்திலேயே தமிழ் நாட்டிலேதான் நடைமுறைப்படுத்தி வருகிறோம். இது ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது சம்பந்தமாக கூட்டுறவு நில வங்கிகள் தவணை தவறியவட்டியையும், வட்டியையும் இணைத்து அசலாகக் கருதி காலக் கடுவை நீட்டித்து வசூல், செய்கின்ற நிலைமை அரசுக்குத் தெரியுமா ? அதைப்போன்று கூட்டுறவுச் சங்கங்களிலேயும் தவணை தவறிய வட்டியையும் தள்ளுபடி செய்ய நில வள வங்கிகளில் செய்யப்படுவதைப்போன்று தவணை தவறிய வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்த வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான கொள்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, சிறு
தொழில்களுக்குக் கடன் வாங்குகிறவர்கள் நட்டமடைந்தால் அரசு
அதைத் தள்ளுபடி செய்வதாகக் கேள்விப்படுகிறேன். இயற்கை
யின் சீற்றத்தால் வழக்கமாக பாதிக்கப்படுகின்ற இராமநாதபுரம்,
தர்மபுரி மாவட்டங்களிலே பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு
கடனை முழுமையாக ரத்து செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே,
பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்குச் சலுகைகள் ஏற்கெனவே
இருக்கின்றன. இயற்கையின் சீற்றத்தால், பெரு மழையால்,
மழை /வெள்ளத்தால் இருந்தாலும் சரி அல்லது மழையில்லாத
நிலை இருந்தாலும் சரி, அல்லது பூச்சியினால் பாதிப்பு ஏற்பட்
டிருந்தாலும் சரி, பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்குச் சலுகை
கள் தரவேண்டுமென்ற முறையிலே கடன் மாற்றுக் கடனாக
ஆக்கப்பட்டு பிறகு முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஏற்
கெனவே, நான் அறிவித்ததைப் போல் இந்தியாவிலேயே முதன்
முதலில் தமிழ்நாட்டிலேதான் 192 கோடி ரூபாய் சலுகைகள்
விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. 118 கோடி ரூபாய்
கடனை ரத்து செய்ததன் மூலமாகவும் கிட்டத்தட்ட, 79, 80
கோடி ரூபாய் வழிவகைக் கடன்களாக மாநில அரசு நிலவள
வங்கிகளுக்கு வழங்கியிருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக
192 கோடி ரூபாய் இந்தியாவிலேயே தமிழக அரசுதான் அளித்
திருக்கிறது. இதைவிட சலுகை செய்வதற்குத் தடைக்கற்களாக
இருக்கின்றவை ரிசர்வ் வங்கி விதிமுறையும், ARDC விதிமுறை
யும், உலக வங்கி விதிமுறையும் மத்திய அரசு உத்திரவும்தான்.

கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள்.

*வினா எண் 91—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு
கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவுக் கடன்களை முழுவதுமாகத்
திருப்பிச் செலுத்தியுள்ள சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் எத்தனை சங்கங்கள் விவசாயிகளுக்கு மீண்
டும் கடன் கொடுத்துள்ளன ?

[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதி வரை 1,342 கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுக் கடன்களை முழுவதுமாகத் திருப்பிச் செலுத்தியுள்ளன. அவற்றில் 1,301 சங்கங்கள் மீண்டும் கடன் வழங்கியுள்ளன.

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கடன்களுக்காக பல சங்கங்களிலே கர்ணத்திடமிருந்து சான்றிதழ் வாங்குகிறபோது சிறு விவசாயிகளுக்குக்கூட 10 ஏக்கர், 15 ஏக்கர் என்று சான்றளிக்கபபட்டு இருக்கிறது. ஆகவே அரசு கொடுத்திருக்கின்ற சலுகைகள் அவர்களும் பெறத்தக்க வகையில் அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அப்படி சிறு விவசாயிகளை நடுத்தர பெரு விவசாயிகள் பட்டியலில் கொண்டுவந்து அவர்களுக்கு அப்படிபபட்ட சலுகைகள் கிட்டாத நிலை இருந்தால் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டுவாரானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சிறு விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஆதிதிராவிட மக்களுக்கு இந்தக் கடனை வழங்குவதற்கு முன்வருவது இல்லை. இந்தத் திட்டத்தின் கீழ் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மானியத் தொகையுடன் இந்தக் கடன்களை வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : Differential rate of interest என்ற ஒரு முறையில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள். Particularly for weaker sections and the Scheduled Castes and Tribesக்குத் தருவதைப்போலே கூட்டுறவு வங்கிகள் மூலமும் நடைமுறைப்படுத்த நடப்பாண்டிலிருந்து அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகள் என்று நிர்ணயித்திருப்பதில் முரண்பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக 5 ஏக்கர் நஞ்சையும் 5 ஏக்கர் புஞ்சையும் ஒன்று என்று நிர்ணயித்திருப்பதில் முரண்பாடுகள இருப்பது உண்மையா? அடுத்து அந்தச் சிறுவிவசாயிகள்



1982 பிப்ரவரி 8]

பெற்றிருக்கும் கடன்களில் யார் யாருக்கு மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குத்தான் சலுகை கிடைத்திருக்கிறது. மாற்றப்படாத அனைத்துச் சிறு விவசாயிகளுக்கும் இந்தச் சலுகைகள் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடனை மாற்றுக் கடனாக நிர்ணயிப்பதே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காகத்தான். சில விவசாயிகளுக்கு மாற்றுக் கடனாக அறிவிக்கப்படவில்லையே என்றால் அவர்கள் பாதிக்கப்படாத விவசாயிகள் என்று பொருள். பாதிக்கப்படாத விவசாயிகளுக்குக் கடன்களை ரத்து செய்வதுபற்றித்தான் நான் ஏற்கனவே சொன்னதைப்போல ஏ. ஆர். டி.சி. உலக வங்கி மைய அரசு போன்றவைகளெல்லாம் தாக்கீது செலுத்தி இருக்கின்றன. அது முடியாத காரியம். உச்சமட்டக் குழுவைப் பொறுத்தவரைக்கும்விவசாயிகளுக்குஎன்னென்ன இன்னும் செய்ய முடியும் என்பதனை அரசு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று மத்திய அரசையும் கேட்டிருக்கிறது. கேட்காமல் இல்லை ஆனால் மைய அரசு ரிசர்வ் வங்கி உலக வங்கியினுடைய அனுமதியோடு இந்தப் பிரச்னையை அணுக வேண்டியிருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்னை அதே நிலையில் இருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடன் முழுவதையும் திருப்பிச் செலுத்திய விவசாயிகளையும் விவசாய சங்கங்களையும் ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளதா? அவர்கள் கோருகின்ற அதிகக் கடன்களைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகள் காலத்தே கடனைத் திருப்பித் தருவார்களேயானால் அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இரண்டு சதவீத வட்டிக் குறைப்பை ஏற்கனவே அரசு அவர்களுக்கு அறிவித்திருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் நிலத்தைப் பொறுத்தவரைக்கும் Small farmers and big farmers என்பதிலே நஞ்சை புஞ்சையில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பதைப்போலச் சொன்னார்கள். அது உண்மைதான். இது ஏற்கனவே இருக்கிறது. காரணம் ரிசர்வ் வங்கி ஒரு கைட்லைன் கொடுக்கிறது; ஏ.ஆர். டி.சி. ஒரு கைட்லைன் கொடுக்கிறது; மாநிலத்தில் ஒரு கைட்லைன் இருக்கிறது. பல்வேறு நிலையில் பல்வேறு முறையில் இதை அணுகுகிறார்கள். ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதைப் பொறுத்தவரக்கும் நிலத்தினுடைய வருவாயின் அடிப்படையில் அதைஃபிக்ஸ் செய்யலாம் என்ற ஒரு முறையைத் தற்பொழுது அரசு ஆய்ந்து வருகிறது; உச்ச மட்ட

குழு கூட அதைப் பரிந்துரை செய்திருக்கிறது. விவசாயிகளுக்கு நிரந்தரமாகப் பரிகாரம் காண வேண்டுமேயானால் தஞ்சையிலே உள்ள இரண்டரை ஏக்கருக்கும் பெரியார் மாவட்டத்திலே உள்ள இரண்டரை ஏக்கருக்கும் நஞ்சையோ புஞ்சையோ கண்டிப்பாக மாறுபாடு உண்டு என்பதை அரசு உணர்கின்ற காரணத்தினால் வருவாயின் அடிப்படையில் ஸ்டாண்டர்ட் ஏக்கராவை ஃபிக்ஸ் செய்ய வேண்டும் கடன் சலுகைகளைப் பொறுத்தவரைக்கும் என்பதனை அரசு ஆய்ந்து வருகிறது.

**கூட்டுறவு சங்கங்களைத் தணிக்கை செய்ய தனி அமைப்பு.**

***வினா எண் 92—திரு. என். பழனிவேல் :** *மாண்புமிகு கூட்டுறவு, சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?*

*(அ) கூட்டுறவுச் சங்கங்களை ஆடிட் செய்வதற்கு தனியான தொரு அமைப்பை ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறதா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம். (ஆ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின்கீழ் இயங்கிவரும் நிர்வாகப் பிரிவையும் தணிக்கைப் பிரிவையும் தனித் தனியாகப் பிரித்துக் கூட்டுறவுத் தணிக்கைப் பிரிவை ஒரு தனித் துறையாக இயங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் தணிக்கை துறையில் தலைவர் " கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் " என அழைக்கப்படுவார். இப்புதிய துறை தலைமைச் செயலக நிதித் துறையின் கீழ் இயங்கும். ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை அரசு, கூட்டுறவு தணிக்கை இயக்குநராக நியமித்துள்ளது. அவர் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாளில் இருந்து அப் பதவியை வகித்து வருகிறார்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** தலைவரவர்களே, தணிக்கைக்காக தனியாக அதிகாரி நியமிக்கப்பட்ட பிறகு அதன் அனுபவம் என்ன ? இதில் அரசு எப்படி அணுகுகிறது? இப்படிப் போடுவதற்கான அவசியம் என்ன ஏற்பட்டது? அதனுடைய விளைவைப்பற்றி அரசு என்ன கருதுகிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிர்வாகத்தை நடத்துகின்றவர்களிடமே நிர்வாகத்தில் ஏற்படும் குறைபாடுகள், சீர்கேடுகளைக் கண்டறியும் பணிகளை கொடுப்போமேயானால் திருடனிடமே பாதுகாப்பு கொடுப்பது போல் இருந்து விடும்.

என்பதால் தனித்தனியாக அந்தப் பிரிவு இயங்க வேண்டும் என்ற காரணத்தினால் Administrative department is absolutely different from the inspecting and auditing department என்ற முறையில் தனித்தனியாக இயங்குகின்றபொழுதுதான் தன்னிச்சையாக அவர்களால் செயல்பட முடியும் என்ற பரிந்துரை அரசுக்கு வந்ததால் அந்தப் பரிந்துரையை ஏற்று அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

### ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் நிறுவனம், செட்டிப்பேடு.

**வினா எண் 93—திருமதி டி. யசோதா :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செட்டிப்பேடு ஊரிலுள்ள ஸ்ரீராம் கெமிகல்ஸின் புதிய உரிமையாளர் அங்கு ஏற்கெனவே பணி புரிந்த ஊழியர்களை நீக்கிவிட்டு தன்னுடைய ஊரிலிருந்து ஆட்களை அழைத்து வேலைக்கு அமர்த்தியுள்ளது அரசுக்குத் தெரியுமா !

(ஆ) ஆம் என்றால் வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா !

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மற்றும் (ஆ) ஸ்ரீராம் கெமிகல்ஸ் காம்ப்லெக்ஸ் நிர்வாகம் 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியன் குளு கார்ப்பரேஷன் (Indian Glue Corporation) இடமிருந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டது. புதிய நிர்வாகத்துற்கும், தொழிலாளர்களுக்கும் 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 18 (1) இன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 3 இன் கீழ் பழைய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்களில் 32 தொழிலாளர்களுக்குப் புதிய நிர்வாகம் வேலை கொடுத்துள்ளது. மீதமுள்ள 17 தொழிலாளர்களுக்கும் வேலை கோரி தொழிற்சங்கத்தால் எழுப்பப்பட்ட தொழிற் தகராறு பின்னர் பிரதிநிதித்துவம் இல்லையென திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிறுவனத்தில் பணிபுரியும் நேரடித் தொழிலாளர்கள் அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து வந்து பணி புரிகிறார்கள். ஒப்பந்தக்காரர் கீழ் பணி புரிபவர்கள் மட்டுமே திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டாரத்தில் உள்ள 'அழகாபுரி' என்ற ஊரிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள்.

[1982 பிப்ரவரி 8

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நிர்வாகம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, பழைய தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்க மறுக்கின்ற அந்த நிர்வாகத்தின் மீது அரசாங்கமே நேரடியாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குச் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கமே தங்களுக்கு ரெப்ரசன்டேடிவ் கப்பாசிட்டி இல்லை என்று சொல்லி, அவர்களே வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

அரிஜனங்களுக்கு வீடுகட்ட கடன் வழங்குதல்.

வினா எண் 94— திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்ட கடன் வழங்க 1½ சென்ட் இடம் வேண்டும் என்ற விதி உள்ளதா !

(ஆ) ஆம் எனில் இதனை மாற்றி 1 சென்ட் இடத்திற்கே கடன் வழங்க உத்தேசம் உள்ளதா !

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இவ்விதியை சற்று தளர்த்தி அரசு 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளில் ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கிராமங்களில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து அதே இடத்தில் புதிதாக வீடுகள் கட்டிக் கொள்ள அங்கீகாரம் வழங்கலாம் என்றும் ஆனால் அவ்வாறு வீடு கட்டிக் கொள்ளத் தேவையான காலி மனை 201 சதுர அடி பரப்பில் நடைமுறையிலுள்ள வடிவமைப்புடன வீடு கட்டிக் கொள்ள ஏதுவாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குகின்றபொழுது தற்போது குறைந்த பட்சம் 10 வீடுகளாவது ஓரிடத்தில் கட்ட வேண்டுமென்ற விதி மாற்றப்பட்டு எண்ணிக்கை அதிகமாக இல்லையென்றாலும் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.



1982 பிப்ரவரி 8]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு வீடு கட்டுவதற்கு ரூ 3,000 மட்டும்தான் கடன் வழங்கப்படுகிறது கட்டுமானப் பொருள்களினுடைய விலை உயர்ந்திருக்கிற காரணத்தாலே அதை ரூ 5,000 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தத் தொகை ரூ. 4.000 மாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற இந்தக் கடன் தொகை ரூ 4,000 ஆக உயர்த்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ரூ. 4 000 கூடப் போதுமானது அல்ல. அதை ரூ. 5 000 ஆக உயர்த்தித் தரவேண்டும். அதற்கு அமைச்சர் ஆணை பிறப்பிப்பாரா என்பதை அறிய விரும்புவதோடு தற்போது தரப்படுகின்ற கடனை வைத்துக் கொண்டு மட்டும் அவர்கள் வீடு கட்டிக் கொள்வதில்லை. நிறைய கடன் பட்டு வீடு கட்டிக் கொள்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அறிவாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 5 000 அல்ல ரூ. 8,000 வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. முன்பு ரூ. 3,000 என்று இருந்ததை ரூ. 3,750 என்று உயர்த்தி, இப்பொழுது ரூ. 4,000 ஆக உயர்த்தி இருக்கிறோம். அதிலே, ஆதி திராவிட மக்களுக்கு ரூ. 1,000 மானியம் உண்டு. ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகைக்கு வட்டி கிடையாது எனவே இந்தச் சலுகைகள் எல்லாம் இருக்கிற காரணத்தால் நிதி ஆதாரத்தை மனதில் கொண்டு காலப் போக்கில் உயர்த்துவதைப் பற்றி இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்யும்

(முற்பகல் 10–10.)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதுகூட 3 தவணைகளில் தரப்படுகிறது. ஆனால் அவர்கள் கல் வாங்கிப் போட்டுவிட்டு, பிறகு 2, 3 மாதங்கள் கழித்து சிமென்ட் மற்றும் பல பொருள்கள் வாங்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பணத்தை ஒரே தவணையில் கொடுப்பதற்கு அரசாங்கம் நட

வடிக்கை எடுக்குமா ? அதோடு இந்த 4,000 ரூபாய் உயர்த்தப்பட்ட பணம் இன்னும் பொதுமக்களுக்குக் கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, ஒரே முறையில் 4 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் ஒரே நேரத்தில் செலவாகிவிடும் ஸ்டேஜ் பை ஸ்டேஜ் கொடுத்தால்தான் அவர்களுக்கும் பாதுகாப்பு, நமக்கும் பாதுகாப்பு, உங்களுக்கும் பாதுகாப்பு. எனவே இந்த முறையில் தந்து கொண்டிருக்கிறோம்

**திருமதி தா. இராசாம்பாள் :** தலைவர் அவர்களே மறைந்த அமைச்சர் கக்கன் அவர்கள் காலத்தில் என்னுடைய தொகுதியில் ஒரு கிராமத்தில் மண் ஒட்டர்கள் என்பவர்க்கு காலனி கட்டிக் கொடுத்தார்கள் அது மிகவும் பாழாகி சீர்கேடடைந்திருக்கின்றது. அது மட்டுமல்ல, அவர்களால் அதைப் பழுது செய்ய இயலாது, அதை மீண்டும் புதுப்பித்துக் கொடுக்க அரசு முன் வருமா ? மேலும் 2,400 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு அந்த நபர்களுக்கு இன்னும் வீடுகள் கட்டிக் முடிக்காமல் உள்ளது அவர்களுக்கும் இந்த 4 ஆயிரம் ரூபாய்கள் கொடுக்கப்படுமா ? அதோடு ஏற்கெனவே ரூபாய் 3,000 கொடுக்கப்பட்டவர்களுக்கும் இந்த ரூபாய் 4,000 கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ''நாட்சோ'' மூலம் வீடு கட்டித் தருவதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் திட்டம் புரட்சித் தலைவர் அரசு வந்த பிறகு, கிராமத்திலே உள்ள ஏழை மக்களுக்கு, மாதத்திற்கு 350 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ள ஏழை மக்களுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டம். அவை அவர்கள் ''என்கரேஜ்'' செய்து அதற்கு ஆதரவு இருக்கின்ற காரணத்தினால் 5 ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகள் கட்டித் தருவது என்று முடிவெடுத்திருக்கிறோம். இது எல்லா வகுப்பினர்களுக்கும் உண்டு. ஆதி திராவிட மக்களுக்கும் உண்டு, ஆதி திராவிடா அல்லாத மக்களுக்கும் உண்டு. நடைமுறையில் பார்க்கப்போனால், 80, 82 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டதில் 75 சதவிகிதம் ஆதி திராவிட மக்கள் பலன் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற வீட்டுவசதித் திட்டம் வேறு, இது வேறு.

**திரு. ஜி. மூர்த்தி :** தலைவர் அவர்களே, நகரத்தில் உள்ள அரிசன மக்களுக்கு, வீடு கட்டிக் கொள்வதற்கு 25 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் என்று கடன் தருகிறார்கள். ஆனால், குறைந்த



பட்சம் டவுன் பஞ்சாயத்தில் உள்ள மக்கள் வாங்குகிற கடன் 4 ஆயிரம், 5 ஆயிரம் என்று இருக்கின்றது. இந்த 26 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய்கள் குறைந்த பட்சம் டவுன் பஞ்சாயத்துக்களுக்காவது விஸ்தரிக்கப்படுமா - அதே நேரத்தில் வடார்க்காடு மாவட்டத்தில் தற்போது வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட கடன் தொகை ''அலாட்மென்ட்'' போதவில்லை என்ற காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இது குறித்து விரிவான பதிலை நான் தருகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மொத்தமாக பணத்தைக் கொடுத்தால் செலவழித்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், பர்ஸ்ட் இன்ஸ்டால்மென்ட், செக்கண்டு இன்ஸ்ட்டால்மென்ட், தேர்டு இன்ஸ்ட்டால்மென்ட் என்று 4 ஆண்டுகளில் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அவர்கள் வீட்டைப் பிரித்துப் போட்டுவிட்டு, பேஸ்மென்ட் அளவில் இன்றைக்கு கட்டிவிட்டு, அவஸ்த்தைப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா - அப்படி தெரிந்திருந்தால் அந்த பேஸ்மென்ட் வரை கட்டி இருப்பவர்களுக்காவது விரைவில் பணம் கொடுத்த அவர்கள் வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசு உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களின் பட்டியலை அரசுக்குக் கொடுத்தால் அதைப் பற்றி ஆவன செய்ய அரசு முயற்ச்சிக்கும்.

**ஆவுடையாபுரம் நக்சகலக்கோட்டை கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.**

***வினா எண் 95—திரு. மு. சுந்தரராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆவுடையர்புரம் , நக்கலக்கோட்டை ஆகிய கிராமங்களில் தற்சமயம் வழங்கப்படும் குடிதண்ணீரைப் பருகினால் நீர்கட்டு, யானைக்கால் போன்ற வியாதிகள் ஏற்படுவதாக புகார் செய்யப்பட்டு வாரிய அதிகாரிகள் சோதனைக்காக எடுத்துச் சென்றுள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஆவுடையாபுரம் மற்றும் நக்கலக்கோட்டை ஆகிய சிற்றூர்களில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் அனைத்திலும் மாதிரி நீர் எடுத்து பரிசோதனை செய்து பார்த்ததில் ஆவுடையாபுரத்தில் உள்ள நான்கு நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவை எனவும், நக்கலக்கோட்டையில் உள்ள மூன்று நீர் நிலைகளில் இரண்டில் நல்ல குடிநீர் உள்ளதெனவும் அறியப்பட்டது. ஆவுடையாபுரத்தில் உள்ள எல்லா நீர் ஆதாரங்களும் குடிக்கத் தகுதியற்றவையாகவிருப்பதால் மாற்று நீர் ஆதாரம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நக்கலக்கோட்டை சிற்றூரைப் பொருத்தவரை மூன்றாவது கட்டத்தில், வருகின்ற ஆண்டில் விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. அப்போது மேற்கொண்டு குடிநீர் வசதி செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

## மழை அளவைக் கருவிகள்.

*வினா எண் 96.— திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை அளவைக் கருவிகளை (Rain gauge) பிர்க்கா மையங்களில் வைத்து மழை கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இல்லை. ஆனால் ஏற்கெனவே, தமிழ்நாடு முழுவதிலும் குறிப்பிட்ட 685 இடங்களில் மழை அளவைக் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை மத்திய மாநில அரசுத் துறைகளால் நிறுவப்பட்டவை. ஆய்வுப் பணிகளுக்கு இவை போதுமானவை.

திருமதி தா. இராசாம்பாள் : தலைவர் அவர்களே, பிர்க்கா மையங்களில் மழைக் கணக்குகள் பதியும் திட்டம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேலாவது அப்படி வைக்க இந்த அரசு முன் வருமா என்று கேட்க விரும்புவதோடு, விவசாயிகளோடு தொடர்புடைய மின்சார வாரியம், விவசாயத் துறை ஆகிய துறைகளும் தன்னுடைய விவசாய சேவையைக் கருதி இந்த மழைக் கணக்குகள் பதியும் கருவிகளை வைத்துக் கணக்குகளை எடுத்து, முன்கூட்டியே திட்டமிட்டு விவசாயிகளுக்கு உதவ ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையை இந்த அரசு முன் வருமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, பிர்க்காவாரியாக வைக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலேதான் மழைக் கணக்குகளை பதிய வைக்கும் திட்டம் பிர்க்காவாரியாகத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப் போல், ஏற்கெனவே விவசாயத் துறையில் 16 இடங்களிலும், பல்கலைக் கழகங்களில் 4 இடங்களிலும், தோட்டக் கலை நிறுவனத்தினால் 9 இடங்களிலும், பட்டுப் பூச்சி வளர்ப்புத் துறையால் 1 இடத்திலும் பொதுப்பணித்துறையின் மூலமாக 266 இடங்களிலும், வருவாய்த் துறை மூலமாக 258 இடங்களிலும், வனத் துறை மூலமாக 97 இடங்களிலும், வைக்கப்பட்டிருக்கிறது. அது அல்லாமல், மத்திய அரசும் சில இடங்களில் வைத்து இருக்கிறது. இவைகளே போதுமானதாக இருப்பதால்தான் பிர்க்காவாரியாகத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திருமதி தா. இராசாம்மாள் :** தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே இதை வைத்தால் அதனால் மழைக் காலங்களில் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும், வறட்சிக் காலத்தில் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்று அவர்கள் முன்கூட்டியே சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அரசு மின்சாரத் துறையிலே அதை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை 266 இடங்களிலே வைத்துள்ளது என்று ஏற்கெனவே சொன்னேன். அதிலே மின்சாரத்துறையும் அடங்கி இருக்கிறது. மின்சாரத் துறை என்று தனியாக ஒரு துறை இல்லை. அது வாரியமாக இருக்கிறது. ஆனால், அதனுடைய நடவடிக்கைகள் பொதுப்பணித்துறை மூலமாக கட்டுப்படுத்தப்படுவதால், பொதுப்பணித் துறையே அதையும் கவனித்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிருட்டினகிரி அணையிலிருந்து பெனுகொண்டா ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம்.**

***வினா எண் 97.— திரு. பி. எஸ். துரைசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி அணையிலிருந்து பெனுகொண்டா ஏரிக்கு நீரைக் கொண்டு வரும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால், பாநூர் ஏரியிலுள்ள உபரி நீரை பெறுகொண் டாபுரம் ஏரிக்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு அரசு இந்த ஆண்டு மார்ச்சு மாதம் ஒப்புதல் அளித்துள்ளது.

நம்பி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம்.

+வினா எண் 98—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாங்குநேரி வட்டம் நம்பி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அந்த அணையின் மதிப்பீடு தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டத்துற்கான ஆய்வு வேலைகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன.

திரு. மு.அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது எப்போது செயலுக்குவரும். அதன் மூலம் எவ்வளவு ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெறும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ராஜாமுகமது : தலைவர் அவர்களே, முதலில் அதை ஒரு அணைக்கட்டுத் திட்டமாகத்தான் உருவாக் கலாம் என்று எண்ணம் இருந்தது. அதற்குப் பிறகு அதை ஒரு ரிசர்வாயர்—நீர்த்தேக்கத்திட்டம் என்ற முறையில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்தது. அப்படி மாற்றுவதற் கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்காக நாம் தனியாக ஆய்வு வேலைகளை மேற்கொண்டோம். இப்போது சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது. ஆய்வுப் பணிகள் இன்னும் 6 மாதம் 1 வருடத்துல் முடியும் என்று கருது கிறேன். அப்படி முடிந்தால் அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி அரசு முடிவு செய்யும். இந்தத் திட்டத்தின் மூலம் 390 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும். 120 ஏக்கர் நிலத்துற்குப் பாசனப் பற்றாக்குறையைப் போக்க முடியும். புதிதாக 1,020 ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் நிலை இருக்கும் என்று கருதப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டு விலைப்பட்டியல் படி இந்தத் திட்டத்தின் மதிப்பீடு தொகை 132 லட்சம் என்று இங்கே குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது.



கோயம்புத்தூர் அருகே கணபதியிலுள்ள டெக்ஸ்டூல் நிறுவனம்.

* வினா-எண் 99—திரு. ஏ. டி. குலசேகர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அடுத்துள்ள கணபதியில் உள்ள டெக்ஸ்டூல் கம்பெனியை தமிழக அரசு நிர்வாகம் செய்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், தற்சமயம் அது இலாபகரமாக நடைபெற்று வருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ) 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் அரசின் நிர்வாகத்தில் இருந்த டெக்ஸ்டூல் நிறுவனம் 1976 ஆம் ஆண்டு முதல் இலாப கரத்துடன் செயல்படத் துவங்கியதால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நிர்வாகத்தை மீண்டும் நிறுவனத்திடமே அரசு ஒப்படைத்தது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்தை நிறுவனத்திடம் ஒப்படைத்த பிறகு நிர்வாகத்தை அரசு நடத்தியபோது இருந்த இலாபத்தை விட, தற்போது அதிகமாக இலாபம் கிடைத்துள்ளதா அல்லது குறை வாகக் கிடைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நலிந்த நிலையிலிருந்த அந்தக் கம்பெனியை அரசாங்கம் தமிழக நிவாரணச் சட்டத்தின் கீழ் ஏற்று நடத் தியது. இப்போது அது நல்லமுறையில் நடைபெற்று, இலாபம் ஈட்டுகின்ற நிலைமையில் இருப்பதால் அந்த நிவாரணச் சட்டத்தின்படி திருப்பிக் கொடுத்துவிட்டோம். இனி மேல் வரும் இலாபம் அந்த நிர்வாகத்தைச் சேர்ந்தது. அரசாங் கத்தில் இருக்கிற கணக்குப்படி ஆண்டுதோறும் இலாபம் உயர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதனுடைய இலாபம் உயர்ந்து கொண்டே போகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நலிந்துபோன அந்தக் கம்பெனியை அரசு எடுத்துநடத்தி, இலாபகரமாக ஓட ஆரம்பித்த பிறகு மீண்டும் அந்த முதலாளிகளிடத்திலே ஒப்படைப்பது என்பது அரசினுடைய அடிப்படையான நோக்கத்தையே தகர்த்து விடுகிறது. துயர்துடைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்று நடத்தி, இலாபகரமாக செயல்பட்ட பிறகு கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். இருந்தாலும் இப்படிச் செய்வதால் என்ன பயன் ? அரசாங்கத்திற்குத்தான் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும்,

இப்போது திருப்பிக்கொடுத்திருப்பது அந்தக் கம்பெனியின் பழைய
முதலாளிகளிடமா அல்லது அரசின் சார்பிலே அங்கே மானேஜிங்
டைரக்டராக நியமிக்கப்பட்டிருந்தவரிடமா? அந்த மானேஜிங்
டைரக்டர்தான் இப்போது முதலாளியாக வந்திருக்கிறாரா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,
நலிந்துபோன நிறுவனங்களை ஏற்று நடத்தி, அவை நல்லமுறை
யில் செயல்படத் தொடங்கிய பின்னால் அந்த நிர்வாகங்களிடமே
திருப்பிக் கொடுக்க தமிழக நிவாரணச் சட்டத்தில் இடமிருக்
கிறது. அதன் நோக்கமே இப்படி நலிந்து கொண்டிருக்கிற
தனியார் நிறுவனங்களை அரசாங்கம் ஏற்று நடத்தி, அவை
நலிந்து போகாமல் பாதுகாப்பதற்கும், அங்கே பணியாற்றுகின்ற
தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாமல் இருப்பதற்கும்
தான். அந்த அடிப்படையிலே இந்தக் கம்பெனியையும் அரசு
ஏற்று நடத்தியது. நல்லமுறையில் செயல்பட்டு, இலாபகரமாக
செயல்பட்டுவந்த காரணத்தால் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்
கிறது. நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொள்ளும்போது யார்
இருந்தார்களோ அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்
கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வியின்
இரண்டாவது பகுதிக்கு அமைச்சர் பதில் அளிக்கவில்லை. அந்தக்
கம்பெனி பழைய முதலாளியிடம் ஒப்படைக்கப்படவில்லை.
அங்கே அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மானேஜிங் டைரக்டர்
தான் இன்றைக்கு அந்தக் கம்பெனியின் சொந்தக்காரராக
இருக்கிறார். அவர் நிர்வாகத்தைக் கவனிக்க அரசால் நியமிக்க
பட்டவரே அல்லாமல் அந்தக் கம்பெனியின் முதலாளி அல்ல.
இப்போது அவர் முதலாளியாக வந்திருக்கிறார் என்பது உண்
மையா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,
ஏற்கெனவே இருந்த நிர்வாக இயக்குநர்களிலே அவரும் ஒரு
வராக இருந்தார். அவருக்கு அந்தத் தொழிற்சாலையில் எவ்
வளவு பங்கு இருந்தது என்ற விவரம் இல்லை. வேண்டுமானால்,
தனிக்கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டைல்
கம்பெனிக்கு அரசு மூலதனமாக எவ்வளவு பங்குத் தொகை
செலுத்தியிருக்கிறது? அரசின் பிரதிநிதி யாராவது அதிலே அங்கம்
வகிக்கிறாரா? அப்படி இல்லை என்றால், அரசின் பிரதிநிதி ஒருவர்
அங்கே அங்கம் வகிக்க ஏற்பாடு செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,
ஏற்கெனவே 1975-ல் இதற்கு 40 இலட்சம் ரூபாய் வழிவகை
முன்பணமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போல டி.ஐ.ஐ.சி.
மூலம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்வாகத்தை
திருப்பி ஒப்படைக்கும்போது அதற்கு வழங்கப்பட்ட கடன்,
வட்டி, அரசுக்கு வரவேண்டிய கடன் உட்பட அனைத்தும் வந்து
விட்டன. எல்லா பணமும் வந்தபிறகுதான் திருப்பி ஒப்படைக்கப்
பட்டிருக்கிறது. டி.ஐ.ஐ.சி. கடன் வழங்கும்போது அரசின்
சார்பிலே ஒரு இயக்குநர் நியமிக்கப்படுவது வழக்கம். அது நடை
முறையில் இருக்கிறது.

கருங்கற்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை
நிறுவும் திட்டம்.

* வினா எண் 100—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு
தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) தமிழ்நாட்டில் கருங்கற்பாறைகளை அறுத்து மெரு
கேற்றும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரி
சீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எங்கு நிறுவப்
படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு சுமார் 2 கோடி ரூபாயாகும்.
எங்கு அமைக்க வேண்டும் என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்
படவில்லை. சென்னைக்கு அருகாமையில் இருப்பதே நலம் என்று
கருதி, அந்த வகையிலே இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மெருகேற்
றப்பட்ட இந்தக் கற்கள் எந்தெந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப்
படுகின்றன? வெளி நாடுகளிலிருந்து இந்தக்கற்களை அனுப்ப
வேண்டுமென்று நம்மிடம் கேட்டிருக்கிறார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு தமிழகத்திலே
புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த
நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அதிலே இன்றுவரை ஏறக்
குறைய 1 கோடி ரூபாய் டர்ன் ஓவர் இருக்கின்றது. இலாபமும்
ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகின்றது. ஜப்பான்
போன்ற நாடுகளுக்கு ஏற்கனவே இந்தக் கரும்பாறை ஏற்றுமதி

செய்யப்பட்டு வருகின்றது. அந்தக் கற்களை வெட்டி எடுத்து அப்படியே அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் அதை பாலிஷ் செய்து அனுப்பினால் அதன் விலை 5 மடங்கு அதிகரிக்கும் என்ற காரணத்தினாலே வெட்டப்பட்ட கற்களை அப்படியே அனுப்பாமல் பாலிஷ் செய்து அனுப்ப வேண்டும் என்பதற்காகத் தான் 2 கோடி ரூபாய் அளவிலே அந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட இருக்கின்றது.

திரு. இரா. நாமசேரக்கனி : தலைவரவர்களே, இதுபோன்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதால் தனியார்களுக்கு கரும்பாறை வெட்டி எடுக்க கொடுக்கப்பட்டிருக்கும் உரிமங்கள் ரத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இதுபற்றி ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட் வரை போய் தீர்ப்பு பெற்று வந்திருக்கிறார்கள். ஆகவே தனியார்களுக்கு இனிமேல் வழங்குவதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டவர்களின் லைசென்ஸ் காலம் முடிகின்றபோது ஒவ்வொன்றாக அவற்றையும் அரசு எடுத்துக் கொண்டு வருகின்றது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் கரும்பாறைகளை வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்ணுவதைத்தடை செய்து அரசாங்க நிறுவனமே அவற்றை ஏற்று நடத்துகின்றது. அதாவது அந்தக் கல்லின் மூலம் தனியார்கள் அதிக இலாபம் அடைகிறார்கள் என்றும், அந்த இலாபம் அரசுக்குக் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் அவ்வாறு செய்கிறார்கள். அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகளில் அதிக கிராக்கியுள்ள மிகக் குறைந்த கனத்தில் தகடுகளைத் தயார் பண்ணி அனுப்புவதற்கு அரசு முயற்சி செய்தால் அதன் மூலம் அதிக இலாபம் கிடைக்கும். ஆகவே அவ்வாறு அதிக இலாபத்தைப் பெறுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் முதல் பகுதிக்கு முதலில் பதில் அளிக்கிறேன். வெளிநாட்டுக்குக் கரும்பாறைகளை தனியார்கள் அனுப்புவதை நாம் தடை செய்யவில்லை. ஏற்கெனவே அனுமதி பெற்றவர்கள் அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமும் அனுப்புகின்றது தனியாரும் அனுப்புகிறார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் லாபம் அதிகமாகக் கிடைக்கும் என்ற காரணத்திற்காகத் தான் 2 கோடி ரூபாய் அளவில் கட்டிங் அண்டு பாலிஷிங் தொழிற்சாலை அமைக்க இருக்கிறோம். அதனுடைய மிஷினரி போன்றவைகளுக்கு விரைவிலே டெண்டர் எல்லாம் கோரப்பட்டு வருகின்றது. அது வெகு விரைவிலே அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1982 பிப்ரவரி 8]*

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே, இந்தக் கரும் பாறையினை அறுத்து பாலிஷ் செய்கின்ற தொழிற்சாலையைச் சென்னையில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே மிக அதிக அளவிலே கரும்பாறை தர்மபுரி மாவட்டத்தில்தான் இருக்கின்றது. அங்கிருந்துதான் அதிக அள விலே ஏற்றுமதியாகின்றது. ஆகவே தர்மபுரி மாவட்டத்திலே இந்தத் தொழிற்சாலையினை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவரவர்களே, இந்தக் கல் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கின்றது. மேலும் துறைமுகத்திலிருந்துதான் இக்கல்லை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். ஆகவே பாலிஷ் செய்த கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வசதியாக பாலிஷ் செய்கின்ற தொழிற் சாலையும் துறைமுகத்தின் அருகிலேயே இருந்தால் நன்மை பயக் கும். ஆகவே அனைத்துக் கற்களையும் இங்கே கொண்டு வந்து பாலிஷ் செய்து அனுப்புகின்ற வகையிலே சென்னை துறைமுகத் திற்குப் பக்கத்திலே இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) வினாக்கள் அனுமதிக்கப் பெறுவது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, என்னுடைய கேள்வியினை அனு மதிக்க மாட்டேன் என்கிறீர்கள். பல கேள்வியினை நான் எழுதி அனுப்பி இருக்கிறேன். கேள்வி கேட்பதற்கு என்னைத் தாங்கள் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். உங் களுக்கு வேண்டியவர்களை மட்டும்தான் அனுமதிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்மீது குற்றச்சாட்டு கூறப்பட்டதற்கு நன்றி. எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் ஒரு கேள்வி கேட்க அனுமதி கொடுக்கப்பட்டு வருகின்றது. கேள்வி நேரமும் ஒன்றரை மணி நேரம் நடத்தப்படுகின்றது. 10 மணிக்கு முடிய வேண்டும் என்றால் 10½ மணி வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகின்றது. தாங்கள் சற்று அசதியாக இருப்ப தால் தனிப்பட்ட முறையிலே தங்களுக்குக் கேள்வி கேட்க அனுமதி அளித்தேன். ஆனால் எல்லாக் கேள்விகளையும் தாங்களே

கேட்க வேண்டும் என்றால் முடியாது. நீங்களே கேள்விகளை எழுதி அனுப்பினால் உங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் கேட்பதற்கு உரிமை உண்டு. ஆனால் எல்லா துணைக் கேள்விகளையும் எனக்கே கொடுங்கள் என்றால் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, கை வலிக்கும் வரை தூங்கிக் கொண்டிருக்கிறேன். என்னைத் தாங்கள் அழைப்பதே இல்லை. கேள்விகள் ஏதோ அனுமதித்ததாகச் சொன்னீர்களே, என் கேள்விகள் வரவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு நாளும் இத்தனை கேள்விகள் என்று அனுமதிக்கப்படுகின்ற கேள்விகள் தான் வரும். உங்கள் கேள்விகள் வரும்போது, உங்களுக்கு இரண்டு உப கேள்விகள் கேட்க வாய்ப்பளிக்கப்படும்.

## (ஆ) பேரவைத் தலைவரை அழைக்கும் முறை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் தங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக "ஹலோ, ஹலோ" என்று கூப்பிடுகிறார்களே, அதைப் போன்று தங்களை அழைக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு என்னை அழைத்தது எனக்குக் கேட்கவில்லை. அப்படி அழைத்திருப்பார்களேயானால் அது தவிர்க்கப்பட வேண்டும். சபையில் அவ்வாறு கூப்பிடுவது கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சிக்கு நம் இரண்டு பேருக்குமிடையே வம்பை வளர்த்துவிடுவதுதான் நோக்கம் போலுள்ளது. உங்களது கவனத்தைத் திசை திருப்பிவிட வேண்டும் என்றே சொல்கிறார்கள். அதற்காக அம்பிகாபதியை வம்புக்கிழுப்பது சரியல்ல.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரை அப்படி அழைப்பது முறையானதல்ல என்று கருதியதால்தான் நான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு போனில் பேசுவதுபோல் அழைப்பது கூடாது. நான் திரு. அம்பிகாபதிக்கு என்று இதை சொல்லவில்லை. பொதுவாக இத்தகைய முறைகளை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும்.

1982 பிப்ரவரி 8]

(இ) ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது மற்ற அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்வது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, ஆளுனர் உரையின்போது கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், ஒத்திவைப்புத் தீர்மானங்களும் எடுத்துக் கொள்வதில்லை என்று சொன்னீர்கள். ஆனால், இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். தவிரவும் ஆரம்பத்திலேயே நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். வாடிப்பட்டியில் ஒரு ஆசிரியை குறித்து எழுந்த பிரச்னையில் சர்வ கட்சி போராட்டம் குறித்து கொடுத்திருந்தேன்........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் தொடர்ந்து கேட்டுக் கொண்டதன் பேரில் கடந்த 2, 3 நாட்களாக கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்து வருகிறோம். இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்கப் போகிறோம். தற்போது எல்லாமே சர்வ கட்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகத்தான் இருக்கிறது. இன்றைக்கு நான் எடுத்துக் கொள்ளும் விஷயத்தைக் கவனியுங்கள். அப்படி எடுத்துக்கொள்வதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். உறுப்பினர்கள் சங்கடங்கள் அடையத் தேவையில்லை அவர் எழுதிக் கொடுத்தது என்னவாயிற்று என்று அறிய விரும்பினால், அதுவும் முறைப்படி ஒரு நாள் அவையில் எடுத்துக் கொள்ளப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்று அல்ல, இன்று வேறு ஒரு சப்ஜெக்ட் எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

புதுக்கல்லூரி மாணவர்கள் ஒன்பது பேர் கல்லூரியிலிருந்து நீக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "சென்னையிலுள்ள புதுக்கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்கியதைக் கண்டித்து அனைத்துக் கல்லூரிகளைச் சேர்ந்த 2,000 மாணவர்கள் 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளன்று கோட்டைக்கு ஊர்வலம் நடத்தியதாலும், அதைத் தொடர்ந்து நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருவதாலும் இதனால் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்

[மேலவைத் தலைவர்] [1982 பிப்ரவரி 8

தும், மேலும், 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5ஆம்
நாள் அன்று பச்சையப்பன் கல்லூரியில் போலீசார் தடியடி செய்து
கண்ணீர்ப்புகை குண்டு வீசியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை
குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டும் கீழ்க்கண்ட மாண்பு
மிகு உறுப்பினர்கள் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர் :—

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.
2. திரு. கு. ரமணி.
3. திரு. ஆர். உமாநாத்
4. திரு. சு. பாலன்
5. திரு. பாபு ஜனார்த்தனன்.
6. திரு. மு. அப்பாத்துரை.
7. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.
8. திரு. டி. மணி.
9. திரு. எம். செல்லமுத்து.
10. திரு. கே. ஆர். சுந்தரம்
11. திரு. இரா. கருப்பையா
12. திரு. மு. அம்பிகாபதி
13. திரு. பொ. உத்திராபதி
14. திரு. ப. பொன்னுரங்கம்
15. திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்.
16. திரு. எஸ். என். இராமசாமி
17. திரு. துரைமுருகன்

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது
குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி முதலில் திரு. அ. ரகு
மான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலை
வர் அவர்களே, மாணவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், இந்த
நாட்டின் தலைமுறையை நிர்ணயிக்கக்கூடியவர்கள். இந்த
அரும்புகள் நாளைய மலர்கள். ஆனால், இன்றைக்குக் கல்லூரி
கள் முழுவதும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இதற்கு அடிப்
படைக் காரணம் இன்றைக்கு கல்லூரியைச் சார்ந்த ஒன்பது
மாணவர்கள் எக்ஸ்பல் செய்யப்பட்டிருக்கிறார்கள், நீக்கப்பட்
டிருக்கிறார்கள். குறிப்பாக நான்கு பேர்கள் காயிதே மில்லத் கல்
லூரியிலிருந்தும், இரண்டு பேர்கள் டி.பி. ஜெயின் கல்லூரியிலி
ருந்தும் அதே போல் இன்னும் பலரும் நீக்கப்பட்டிருக்கிறார்
கள். இப்படி நீக்கப்பட்டதற்குக் காரணம் சொல்லப்பட்டிருக்
கிறதா என்றால், நிர்வாகச் சார்பிலோ அல்லது கல்லூரி சார்



1982 பிப்ரவரி 8] [திரு அ. ரகுமான்கான்]

பிலோ சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் எந்தக் காரணமும்
சொல்லப்படாமல் அவர்கள் எக்ஸ்பல், நீக்கப்பட்டிருக்கிறார்கள்
அதே நேரத்தில் விசாரித்துப் பார்த்ததில் நிர்வாகத்தினர்.
மாணவர்கள் காப்பி அடித்தார்கள், ஆகவே, கல்லூரியிலிருந்து
நீக்கி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

காப்பி அடிக்கிறார்கள் என்று சொன்னால் அது கண்டிக்கத்
தக்கதுதான், வருத்தத்திற்குரியதுதான் ஆனால், அதற்குரிய
நடவடிக்கை அவர்களை தேர்வு எழுதாமல் இருக்கச் செய்யலாமே
தவிர அவர்களை கல்லூரியை விட்டே நீக்க வேண்டும் என்
றில்லை அவர்கள் காப்பி அடிக்கிறார்கள் அல்லது அடித்தார்கள்
என்பது உண்மையானால் அதற்கு சட்டப்படி எடுக்கக்கூடிய நட
வடிக்கை வேறு. அவர்கள் தேர்வு எழுதாமல் ஒன்றிரண்டு ஆண்
டுகள் தடுக்கப்படலாம், அதுதான் சட்ட விதி. அவர்களை கல்
லூரியிலிருந்தே நீக்குவதற்கான அதிகாரம் அவர்களுக்குக் கிடை
யாது. ஆனால், அவர்கள் இன்றைக்கு நீக்கப்பட்டிருக்கிறார்
கள். இன்றைக்கு பல்வேறு தனியார் கல்லூரிகள், தனியார்
ஸ்தாபனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது கல்லூரி
யிலிருந்து நீக்கப்பட்டிருக்கக்கூடிய கவி என்ற மாணவர் நியூ
காலேஜில் ஜெனரல் செகரட்டரியாகயிருக்கிறார். பிரபாகரன்
என்று சொல்பவர் காயிதே மில்லத் கல்லூரியில் சேர்மனாக
இருக்கிறார். அங்கே நிர்வாகம் செய்கிற தவறுகளை, தப்புத்
தாளங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறபோது இவர்கள்
இருந்தால் சிக்கல் ஏற்படும், ஆபத்து, இவர்கள் இருக்கக்கூடாது.
இருந்தால் நிர்வாகத்தில் உள்ள ஊழல்களை மாணவர்களிடையே
அம்பலப்படுத்துகிறார்கள் என்ற காரணத்தால்தான் இவர்களை
கல்லூரியை விட்டே காலி செய்தால்தான் நிலைமை சரியாக
யிருக்கும், அப்போதுதான் தங்கள் காரியங்களைச் செய்வதற்கு
சாத்தியமாக இருக்கும் என்ற காரணத்தால்தான் இந்த மாணவர்
கள் இன்றைக்கு சட்டத்திற்குப் புறம்பாக நீக்கப்பட்டிருக்கிறார்
கள். இதைக் கண்டித்து இன்று இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட
மாணவர்கள் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம்
நாளிலிருந்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள்
கோட்டைக்கு அவர்கள் வந்தார்கள். கல்வி அமைச்சர் அவ
ர்களைப் பார்க்க முயற்சித்தார்கள். இன்னும் பலரை எல்லாம
இங்கே பார்த்தார்கள். ஆனால், இன்றைக்கு ஒரு அரசாங்கம்
இருக்கிறதா, நமக்கு ஒரு கல்வி அமைச்சர் இருக்கிறாரா ! ஒன்பது
மாணவர்கள் நீக்கப்பட்டிருப்பதன் காரணமாக இன்று கல்விக்
கூடங்கள் எல்லாம் சென்னை நகரில் மூடப்பட்டுக் கிடக்கின்றன.
நியூ காலேஜ் இரண்டு மாதங்களாக மூடப்பட்டு இருக்கின்றது.

இன்றைக்கு இந்தப் பிரச்சினை மட்டுமல்ல. மாணவர்கள்
படிக்க முடியாமல் இன்றைக்கு அவர்கள் வாழ்க்கை பாழாகிறது.
ஆனால், இந்த அரசாங்கம் இதில் தலையிட்டு இந்தப் பிரச்னையை
தீர்ப்பதற்கு மாணவர்களை, நிர்வாகத்தினரை அழைத்து

[திரு. அ. ரகுமான்கான்] [1982 பிப்ரவரி 8

ஒரு சமரசப் பேச்சு நடத்தியதும் என்றால் இல்லை. ஆனால்,
சட்டத்திற்கு உட்பட்டு ஜனநாயக உரிமைப்படி ஊர்வலம் வந்து
கொண்டிருந்த மாணவர்களை பச்சையப்பன் கல்லூரிக்கு முன்
னால் காவல் துறையினர் நாய்களை அடிப்பதுபோல் அடித்து.
மாணவச் செல்வங்களை அடித்து எவ்வளவு தூரம் இம்சிக்க
முடியுமோ அவ்வளவு இம்சித்திருக்கிறார்கள். கேட்டால் மின்
சார ரெயிலில் கல் எறிந்தார்கள் என்று தவறான தகவலைக்
கொடுக்கிறார்கள். இன்றைக்கு ரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்
கிறது, மாணவச் செல்வங்கள் காவல் துறையினரால் மிருகத்
தனமாக நொறுக்கப்பட்டிருக்கிறார்கள். 1ஆம் தேதி உண்ணா
விரதம் இருக்கிறார்கள். ஆனால், நிர்வாகத்தைக் கூப்பிட்டுப்
பேசவில்லை. அரசாங்கம் கூப்பிட்டுப் பேசவில்லை. மாறாக
இன்று என்ன நிலைமை என்று கேட்டால், இன்றைக்கு நான்
உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், இன்று அவர்
கள் எல்லாம் மருத்துவமனையில் உயிரோடு போராடிக்கொண்
டிருக்கிறார்கள். ஒன்பது மாணவர்கள் இன்று உயிரோடு போ
ராடிக்கொண்டிருக்கும் நிலையில் மருத்துவ மனையில் அபாய
கரமான சூழ்நிலையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
இன்னும் சொல்லப்போனால் அவர்கள் நிலை பரிதாபகரமானதாக
இருக்கிறது. காரணம் அந்த அளவிற்கு அவர்கள் நிலைமை
இன்றைக்கு மோசமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னை
மிகவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தால் இந்
தப் பிரச்னை குறித்து இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டும்.
நம் கல்வி அமைச்சர் அவர்கள் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
இன்று பல்கலைக் கழகம் பொறுத்து என் கைகள் கட்டப்பட்டிருக்
கின்றன. நாங்கள் என்ன செய்ய முடியும் என்று. நான்காவது
செமிஸ்டர் பரீட்சை மாணவர்கள் எழுதப்போகிறார்கள்.
ஆனால் மூன்றாம் செமிஸ்டர் பரீட்சை ரிஸல்ட் வராத அளவில்
இன்று நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆண்டியப்பன்
பி.காம். எழுதி வெற்றி பெற்றிருக்கிறார். ஒரு ஆண்டு ஆகியும்
சர்ட்டிபிகேட் வரவில்லை. கல்லூரிகள் நடத்துகிறார்களா என்
றால் அவை வியாபார ஸ்தலங்களாக ஆக்கப்படுகின்றன. இதற்கு
அரசாங்கம் உடந்தையா ? இன்று மாணவர்கள் உயிருக்குப்
போராடிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். காப்பி
அடித்திருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அதற்
குரிய நடவடிக்கை எக்ஸ்பெல் செய்வதல்ல. கல்லூரிகள் நிர்
வாகத்தில் சீர்கேடுகள் இருக்கின்றன. அதை சர்க்கார் வேடிக்கை
பார்த்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

சட்டத்திற்கு உட்பட்டு மாணவர்கள் தங்கள் கோரிக்கை
களை வைத்து, அவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி
யதை, போலீஸ் ஒரு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதி,
அவர்களை மிருகங்களை அடிப்பதுபோல் அடித்திருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 8] [திரு. அ. ரகுமான்கான்]

இந்தப் பிரச்சினையில் இந்த சர்க்கார் உடனடியாக தலையிட்டு
தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாப் பிரச்சினைகளை
யும் விட, மாணவர்கள் பிரச்சினை மிக முக்கியமானது. மாண
வர்கள் பிரச்சினையை உதாசீனம் செய்த எந்த சர்க்காரும்,
நிலைத்தது இல்லை. 1967 ஆம் ஆண்டிலே இந்த நிலை ஏற்
பட்டது. அஸ்ஸாமிலே இன்றைக்கு அங்கே சர்க்காரே நடத்த
முடியாத அளவுக்கு நிலைமைகள் இருந்துக் கொண்டிருக்கின்றன.
எனவே, இந்த மாணவர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து
வைப்பதற்கு, இந்தச் சபையின் இதர அலுவல்களை எல்லாம்
ஒத்தி வைத்து, இதைப்பற்றி இங்கே நாம் விவாதிக்க வேண்டு
மென்று பணிவோடு வேண்டுகிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவை
சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏன்
விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில விவரங்களைக் கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன். இந்த மாணவர்களைப் பொறுத்தவரையில்
9 மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளிலே இருந்து நீக்கப்பட்டிருக்
கிறார்கள். நீக்கியதற்கு சொல்லப்படுகின்ற ஒரே காரணம், அவர்
கள் காப்பி அடித்தார்கள் என்பது. ஆனால், அது உண்மையல்ல.
விசாரித்ததில், எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் என்னவென்று
சொன்னால், இந்தக் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள்
பல்வேறு கல்லூரிகளிலே உள்ள மாணவர் யூனியன்களுடைய
தலைவர்களாகவும், செயலாளராகவும், மற்றும் அதன் தொடர்
புடைய நண்பர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் பல கோரி
க்கைகளை பிரின்சிபாலிடத்திலும், மற்றும் கல்லூரி நிர்வாகத்தி
டமும் வற்புறுத்தியிருக்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய ஊழல்
களையும் கூட அவர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.
எனவே, அவர்களை எப்படியாவது மட்டம் தட்டுவது என்ற
நோக்கத்தோடு, வேண்டுமென்றே அவர்களை பழி தீர்க்கின்ற
முறையில் அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது சரியல்ல
என்று, அத்தனை மாணவர்களும் சேர்ந்து பேசி, அரசாங்கத்
திடம் முறையிட்டிருக்கிறார்கள். அதிலே அந்த மாணவர்களுக்கு
பலனளிக்கவில்லை. அப்படி பலனளிக்காத நிலையில், அவர்கள்
கல்லூரி வளாகத்திற்குள் உட்கார்ந்து பலவிதமான ஆர்ப்பாட்டங்
களைச் செய்கின்ற முறையில் ஈடுபடுவது என்று முயற்சித்த
நேரத்தில், அவர்களை அங்கே போகவிடாமல் போலீசார் தடுத்து
நிறுத்தியிருக்கிறார்கள். கல்லூரி வளாகத்திற்கு அமைதியாக,
அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறோம் என்று சொன்ன
போது, அப்படிச் சென்றபோது, போலீஸ் அவர்கள் மீது கண்ணீர்
புகையும், தடியடிப் பிரயோகமும் செய்திருக்கிறது. அதனால்
பல மாணவர்கள் கீழே விழுந்து காயமடைந்திருக்கிறார்கள்.
கண்ணீர் புகையின் காரணமாகவும், அவர்களிடையே சிலருக்கு
சேதம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு நிலைகள் ஏற்பட்
டுள்ளதை, அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரக்கூடிய

[திரு. பி.மூ.ஈஸ்வரவசிர்த்தி என்கிற சொரணம்] [1982 பிப்ரவரி 8

நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதிலே அரசாங்கம் காலா காலத்தில் தலையிட்டு முடிவுக்கு கொண்டு வந்திருந்தால், ஆரம்பத்திலேயே இத்தகைய பதட்ட நிலைமைகள் ஏற்படாமல் தடுத்திருக்கலாம். ஆரம்பத்திலேயே கல்லூரி நிர்வாகங்களைக் கூப்பிட்டுப் பேசியிருந்தால், இந்த 9 மாணவர்களின் சஸ்பென்டைரத்துச் செய்திருந்தருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இப்போது ஏற்பட்டுள்ள உச்ச நிலைமையின் காரணமாக அனைத்து மாணவர்களும் போராடுவதன் விளைவாக அந்த வட்டாரத்திலே பஸ்கள் ஓட முடியாத பதட்ட நிலைமை இன்றைக்கு உருவாகியுள்ளது. எனவே அரசாங்கம் இதிலே உடனடியாகத் தலையிட்டு இந்த 9 மாணவர்களையும் மீண்டும் கல்லூரியில் அனுமதிப்பதற்கும் இந்த கண்ணீர்ப் புகை பற்றி நீதி விசாரணை நடத்த வேண்டும் என்பது பற்றி விவாதிப்பதற்கும் உடனடியாக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி மாணவர்களுடைய போராட்டம் இன்றைக்கு இந்தியா பூராவிலும் தொடர் கதையாக இருந்துக் கொண்டு வருகிறது. நம் தமிழகத்திலே நாம் கூட்டங்கள் கூடுகின்ற நேரத்தில், ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் இதைப் பற்றி பேசி வருவது தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்கு முத்தாய்ப்பு வைக்கின்ற நிலையில், சென்ற கூட்டத் தொடரின் போது நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சிகளுடைய தலைவர்களையும் அழைத்து, இனி இப்படிப் பட்ட நிலைமை தமிழகத்திலே உருவாகக் கூடாது என்பதற்காக இரண்டு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார்கள். அப்போது பல்வேறு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. ஆனாலும் கூட, அந்தக் கருத்துக்களுக்கு எந்த அளவுக்கு இன்றைக்கு ஆக்கமும், ஊக்கமும் ஏற்பட்டிருக்கின்றது என்றால், வருந்த வேண்டிய நிலைமைதான் இருக்கிறது.

இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் போலீசாரால் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். கல்லூரி நிர்வாகம் இன்றைக்கு 9 மாணவர்களை நீக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு கல்லூரிகள் நடந்துக் கொண்டிருக்கின்ற இந்த இடைக்காலத்தில் இப்படி மாணவர்களை நீக்குவது தவறு. அவர்களை இறுதி ஆண்டுத் தேர்வுக்கு அனுப்ப முடியாது என்று சொல்லுகின்ற அந்த அதிகாரம் கல்லூரிகளுக்கு கிடையாது. அப்படி இருந்தும் கூட இந்த நிர்வாகம் எவ்வளவு அதிகார துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள் என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நியூ காலேஜ் என்று சொல்லக் கூடிய புதுக் கல்லூரி நம்முடைய தலை நகரில் உள்ள பெரிய கல்லூரிகளில் ஒன்று. அங்கு வருஷா வருஷம் மாணவர்கள்



1982 பிப்ரவரி 8] [திரு. மு. அப்பாதுரை]

போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்னால் அங்கு ஆசிரியப் பெருமக்கள் கூட போராட்டம் நடத்தினார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் அங்கிருக்கக் கூடிய நிர்வாகத்தின் தவறான போக்குகள்தான். 1970–71 ஆம் ஆண்டில் எம். எஸ்.சி. சூவாலஜி பட்ட மேற்படிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டும் கூட, அந்த நிர்வாகம் தங்கள் இஷ்டப்படிதான் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்று சொன்னதன் காரணமாக அந்த இடங்கள் கூட பச்சையப்பன் கல்லூரிக்கு மாற்றப்பட்டன. அந்தக் கல்லூரியில் நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது ; பணத்திற்காக இடங்களைக் கொடுக்கக்கூடிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் கல்விக் கூடங்கள் எல்லாம் கொள்ளைக் கூடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கக் கூடிய மாணவர்கள் விதியிலுள்ள தவறுகளையும் சீர்கேடுகளையும் எதிர்த்து மாணவர் யூனியன் தலைவர்கள் போராடினார்கள். காப்பி அடித்தார்கள் என்று ஒன்பது மாணவர்களை இன்றைக்கு நீக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கு ஜனநாயக முறையில் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்திடமும் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரைப் பார்த்திருக்கிறார்கள். காந்தீய வழியில் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அந்த மாணவர்கள் கோட்டை நோக்கி ஊர்வலம் புறப்பட்டதாகத் தெரிகிறது. காவல் துறை மிருகத்தனமான நிலையில் செயல்பட்டிருக்கிறது. மாணவர்களைப் பகைத்துக் கொள்ளும் எந்த ஆட்சியும் இந்த மாநிலத்தில் மட்டுமல்லாமல் எந்த மாநிலத்திலும் நிலைபெற்றது கிடையாது. அந்தக் கல்லூரி நிர்வாகத்தின் ஊழலை லஞ்சலாவண்யத்தை எதிர்த்து போராடுகிற அந்த மாணவர்கள் மீது கடுமையான அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்ட இந்த அரசாங்கத்தைக் கண்டிக்கிறோம். ஆகவே இந்த நிலை தலைநகரில் மட்டுமல்லாது தமிழகம் பூராவும் ஏற்படாமல் தடுத்து நிறுத்த இது பற்றி விவாதிக்க இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாணவர்கள் போலீசார் மோதல் பொதுவாகவே அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காவல் துறையினரை இன்றைக்குக் கட்டவிழ்த்து விடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு ஆண்டித்தேவர் அவர்கள் ஆறியது போன்று வாடிப்பட்டியில் ஒரு ஆசிரியை காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். திருச்செந்தூரில் அர்ச்சகர் ஒருவர் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரிலுள்ள புதுக் கல்லூரிப் பிரச்சினையில் வாடிப்பட்டிக்கும் திருச்செந்தூருக்கும் போய்க் கொண்டிருக்கக் கூடாது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : இன்றைக்கு அந்த மாணவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்றகாரணத்திற்காக கோட்டைக்கு ஊர்வலமாக வந்த போது மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பந்தலைக்கூட போலீசார் தீவைத்துக் கொளுத்தியதாகச் சொல்லப்படுகிறது. இது போன்ற பல்வேறு விஷயங்களைப் பற்றியும் போலீசார் நடவடிக்கை பற்றியும் மாணவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது பற்றியும் விவாதிக்க இந்தச் சபையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை புதுக் கல்லூரி மாணவர்கள் 9 பேர் கல்லூரி நிர்வாகத்தினாலே கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டனர். மேற்படி 9 பேர்களை திரும்பவும் கல்லூரியில் சேர்க்கவேண்டுமென்று கோரி மேற்கண்ட கல்லூரி மாணவர்கள் 18—1—1982 முதல் வகுப்புகளுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்தி வருகின்றனர். 4—2—1982 முதல் மேற்கண்ட கோரிக்கைகக்காக அனைத்துக் கல்லூரி மாணவர்கள் மன்றத் தலைவர் திரு. தியாகராசன் மற்றும் 8 மாணவர்கள் புதுக் கல்லூரிக்கு எதிரே உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மாநிலக் கல்லூரி, நந்தனம் கலைக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி, குருநானக் கல்லூரி மற்றும் செல்லம்மாள் கல்லூரி மாணவர்கள் 5—2—1982 அன்று வகுப்புகளுக்கு செல்லவில்லை. பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் 5—2—1982 அன்று காலை 11 மணி அளவில் தங்கள் கல்லூரிக்கு வெளியில் கூடி அந்த வழியாகச் சென்ற பேருந்துகள் மீதும் பந்தோபஸ்துக்காகச் சென்ற காவல் துறையினர் மீதும் கற்களால் தாக்கியுள்ளனர். அதன் விளைவாக காவலர் 7 பேர் காயமுற்றனர். ஒரு பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து சேதமுற்றது. கல்லூரி ஆசிரியர் குழு உறுப்பினர் ஒருவருடைய ஸ்கூட்டருக்கு தீ வைக்கப்பட்டது. பொதுச் சொத்துக்களுக்கு மேலும் சேதம் விளைவிப்பதைத் தவிர்க்கும் பொருட்டு தகுந்த எச்சரிக்கைக்குப் பின்னர் மாணவர் கும்பலைக் கலைக்க வேண்டி கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட்டது. கலைந்து ஓடிய மாணவர்





கள் மின்சார ரயில் வண்டிகள் மீது கற்களை எறிந்ததால் புறநகர் ரயில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. பின்னர் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது நகரத்தில் மற்றும் ஒரு பேருந்துக்கு சேதம் ஏற்பட்டது. கல்லெறியும் நிகழ்ச்சியினால் ஒரு பெண் பயணி தலையில் காயம் ஏற்பட்டது. மேற்கண்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளன. தகுந்த காவல் துறை பந்தோபஸ்துகள் போடப்பட்டுள்ளன.

புதுக் கல்லூரி மற்றும் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கல்வியமைச்சருடனும், கல்விச் செயலாளருடனும் புதுக் கல்லூரி மாணவர்கள் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடினர். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது. சென்னை புதுக் கல்லூரி முன் உண்ணாவிரதம் இருந்த 8 மாணவர்களில் 2 பேர்களை பெற்றோர்கள் வந்து அழைத்துச்சென்று விட்டனர். 7—2—1982 அன்று 6 பேர்கள்மீது இ.பி.கோ. 309-ன் கீழ் வழக்குப் பதிவு செய்து ஜாமீனில் விடப்பட்டு இராயப்பேட்டை மருத்துவ மனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் புதுக் கல்லூரியிலிருந்து 9 பேர்களை நீக்கியதன் காரணமாக இத்தகைய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற ஆர்வத்திற்கும் அக்கறைக்கும் நான் நன்றியைக் கூறிக் கொள்கிறேன். மாணவர்கள் மத்தியிலே எழுந்து இருக்கின்ற இந்தப் பிரச்சினைபற்றி முழுமையாக விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைக்காத காரணத்தால் தான் பல்வேறு குற்[illegible] சாட்டுகளை அவர்கள் இங்கே சொல்ல வேண்டிய நிலை[illegible] ஏற்பட்டிருக்கிறது. 9 மாணவர்களை நீக்கியது சம்பந்த[illegible] இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறபோது அரசாங்[illegible] அதைப்பற்றிக் கவலைக்கப்படாமல் பேச்சுவார்த்தை நடத்தா[illegible] இருக்கிறது என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகு[illegible] நாங்கள் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம். நேற்றைக்கு கூட பேசினோம். பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். பல்வேறு கருத்துக்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆகவே அதைத் தொடர்ந்து அவர்கள் எடுக்கின்ற முடிவைப் பொறுத்து அரசு தன்னாலான காரியத்தைச் செய்யும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், ஏதோ அரசுக்கு அதிகாரம் இருக்கிறது அதிகாரம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருப்பது நாம் உண்மையான நிலவரத்தை புரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தையே கூட தடுத்துவிடும். ஒரு கல்லூரி முதல்வர் ஒரு நடவடிக்கை எடுப்பாரானால் அதற்குப் புறம்பாக அதை மறுத்து செய்யக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

கல்லூரி முதல்வருக்கு மட்டுமல்ல, சாதாரண தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியருக்கே அந்த அதிகாரத்தைத் தந்திருக்கிறார்கள். கடந்த நூற்றுக்கணக்கான ஆண்டுக்காலமாக அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி என்றால் அங்கே இருக்கின்ற தலைமையாசிரியர், கல்லூரி என்றால் அங்கே இருக்கின்ற முதல்வர் ஆகியோருக்கு ஒழுங்கைப் பொறுத்தமட்டில் அந்த அளவிற்கு அதிகாரத்தைத் தந்துதான் இப்போது கல்வி நிறுவனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன ஆகவே கல்லூரி முதல்வருடைய நிர்வாகத்தில் நீங்கள் எடுத்த நடவடிக்கை தவறு என்று சொல்லி தலையிடக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. அதை நாம் முதலிலே உணர்ந்து கொள்ளவேண்டும். அடுத்தபடியாக அது ஒரு மைனாரிட்டி நிறுவனம். இன்றைக்கு மைனாரிட்டி நிறுவனங்களுக்கு எவ்வளவோ உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மெஜாரிட்டி மக்களுக்கு இல்லாத அளவுக்கு, அதிககாரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நானே இந்தச் சட்டமன்றத்திலே பல தடவைகள் கூறி இருக்கிறேன். அவர்கள் வந்து சொன்னபோது அந்தக் கல்லூரி முதல்வரைக் கூப்பிட்டு, அந்த நிர்வாகம் சம்பந்தப்பட்டவரைக் கூப்பிட்டு என்னால் முடிந்த அளவுக்கு, அதிகாரம் இல்லாத காரணத்தால், நான் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களை இரண்டு தடவை கூப்பிட்டுப் பேசி அவர்கள் எடுத்துக்கொள்ள இயலாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்கிற கருத்துக்களை மன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அங்கே மாஸ்-காபியிங் நடந்தது. அது தவறு என்று சொன்ன காரணத்தால் கல்லூரி முதலவர் தாக்கப்பட்டிருக்கிறார் என்பது அவர்கள் சொல்கிற வாதம். மாணவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். மாணவர்கள் போராட்டம் பெரிதாகப் போனால் அரசாங்கமே கவிழ்ந்துவிடும் என்கின்ற ஆசையை தெரிவித்துக்கொள்வதற்கு இது சந்தர்ப்பம் அல்ல. நாட்டிலே [illegible]வாகி வருகின்ற சமுதாயத்தையே சீர்கேடடையச் செய்யக் கூடிய ஒரு விஷயத்தை நாம் எப்படி அணுகுகிறோம் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், படித்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இங்கே வந்து அரசியல் அடிப்படையிலே கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல.

அது மட்டுமல்ல, எதிர்க்கட்சித் தலைவரைக் கலந்து நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் மீண்டும் பேசப்போகிறோம். மாஸ்-காபியிங் செய்கிற மாணவர்களை அனுமதிக்கக்கூடாது, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நம் எதிர்க்கட்சித் தலைவர் கூறிய கருத்தே தவிர நான் ஒன்றை மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலம் சம்பந்தப்பட்ட, சமுதாயம் சம்பந்தப்பட்ட இவ்வளவு முக்கியமான பிரச்னையில் ஒரு அரசு எதிர்க்கட்சிகளை அழைத்துப் பேசுகின்ற





அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாதது மிகமிக வருத்தத்திற்குரியது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு நல்ல முயற்சியில் ஈடுபடும்பொழுது அரசாங்கத்திற்கு ஆதரவு தர வேண்டிய பொறுப்பும் எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. ஆகவே, போராட்டங்கள் நடைபெறும்பொழுது அதை யார் நடத்தினாலும், எந்தக் கோரிக்கையை வைத்து நடத்தினாலும் அதை ஆதரிப்பதுதான் எதிர்க்கட்சிகளின் கடமை என்று ஆகிவிடாது. நியாயம், அநியாயங்களைப் பார்த்து ஆதரவு தர வேண்டியவைகளுக்கு ஆதரவு தர வேண்டும், நல்ல கருத்துக்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்ற மிக முக்கியமான பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பொறுப்பைச் சரியாக ஏற்று நடத்தவில்லை என்பது என்னுடைய அன்பான கண்டனம் ஆகும். அடுத்த கூட்டத்திற்காவது, நான் மறுபடியும் அழைக்கும்பொழுது அவர்கள் வந்து கலந்து கொண்டு பிரச்னைகளின் தன்மைகள் உணர்ந்து எங்களுக்கு ஆதரவு தர வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொண்டு, தற்போழுது அந்த மாணவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நல்லபடியாக முடியும் நிலைமை இருக்கிறது, ஆகவே இதுகுறித்து விவாதிப்பதற்காகச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான். தலைவரவர்களே . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கு அனுமதிப்பு இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : * * * * *

திரு. துரைமுருகன் : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி மறுத்த பிறகு இரண்டு உறுப்பினர்கள் பேசியதையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கனவே உடல் நலக் குறைவு காரணமாக நான் வெளியே சென்றேன். அமைச்சரவர்கள் இந்தப் பிரச்னையிலே பதில் சொன்னதற்குப் பிறகு நான் பேசுவதாகத் தாங்கள் கருதக்கூடாது. ஆனால் அவர்கள் எதிர்கட்சித் தலைமை என்று சொன்னார்கள். ஒரு வேளை எதிர்கட்சித் துணைத் தலைவராக இருக்கும் என்னைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். மாணவர்களுடைய தவறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்க ஆலோசனை நடத்துவதற்காக எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டதாகக் கருத்து தெரிவிக்கப்பட்டது. (குறுக்கீடு) எனக்கு அப்படி ஒரு அழைப்பு வரவில்லை. அது எதிர்க் கட்சித் தலைவருக்கோ அல்லது தலைமைக் கழகத்திற்கோ அனுப்பப்பட்டது என்று தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டதா அல்லது கல்வி ஆலோசனைக் குழுவிலே என்னுடைய பெயரைப் போட்டு இருக்கிறீர்கள். (குறுக்கீடு) அனுப்பப்பட்ட தபால் பற்றிய விவரம் இதுவரையில் எங்களுக்குத் தெரியாது. கல்வி ஆலோசனைக் குழு என்று இருக்கிறது. அதுவும் இப்படிப்பட்ட பிரச்சனைகளை ஆலோசிக்கும் குழு. அந்தக் குழுவின் கூட்டத்தை முறையாக நடத்துவதற்காக வழியில்லாமல் மூன்று தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டு, நான்காவது தடவையாக இரண்டு தேதிகள் அறிவிக்கப்பட்டு, பிறகு அந்தத் தேதிகளிலே ஒரு தேதியில்லலா மறுநாள் என்று அறிவிக்கப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவரே, நானோ இன்ன தேதி என்று அறிந்து அந்தக் கூட்டத்திற்கு வர முடியாத அளவிற்கு அந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

எனவே தாங்கள் அப்படி ஏதேனும் குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தாலுங்கூட, நாங்கள் எழுதிய கடிதம் வந்ததா, நீங்கள் வரவில்லையென்று எங்களைக் கேட்டுவிட்டு, அதற்குப் பின்னர் அந்த குற்றச்சாட்டு சொல்லப்படுமானால்; அது ஒருவேளை ஏற்றுக் கொள்ளக்கூடியது. ஆனால் இப்பொழுது இந்த அவையில் எழுப்பப்பட்ட ஒரு ஒத்தி வைப்புத்தீர்மானத்தின் அடிப்படையில், இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை, பதில் சொல்ல வாய்ப்பில்லாதநேரத்தில், சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

மாண்புமிகு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்லவில்லை, உண்மையைச் சொன்னேன். வரவில்லையென்கிற உண்மையைச் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : எப்பொழுது வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது ? எப்பொழுது நாங்கள் வரமுடியாது என்று அந்தக் கடிதத்திற்குப் பதில் சொன்னோம். உங்கள் கடிதம் எப்பொழுது எங்களுக்குக் கிடைத்தது ? அதுவே எங்களுக்குத் தெரியவில்லை.



4 கவன ஈர்ப்புகள்.

(அ) தொழில் நுட்பப் பயிற்சிப்பள்ளி மாணவர்களின் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், தி. கா. நல்லப்பன், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், இ. முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, வி. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனன், எம். சின்னசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் திரு. பெ. சு. திருவேங்கடம் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

* திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதுமுள்ள தொழில் நுட்பப் பயிற்சி (பாலிடெக்னிக்) மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் செய்வது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள ஒரு சில பல்தொழில் பயிற்சி பயிலகங்களைத் தவிர ஏனைய பல்தொழில் பயிலக மாணவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து 5—1—1982 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இம்மாணவர்களின் முக்கிய கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. பொறியியல் பட்டப் படிப்பில் பாலிடெக்னிக் மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டில் 25 சதவிகிதம் இடம் அளிக்க வேண்டும்.

2. தற்போது பொறியியல் பட்டப்படிப்பு நான்காண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளதால், பாலிடெக்னிக்கில் மூன்றாண்டு படித்த மாணவர்களை பொறியியல் பட்ட வகுப்பில் இரண்டாம் ஆண்டு சேரும் வகையில் திருத்தம் செய்ய வேண்டும்.

3. பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பில் சேர மூன்றாண்டு முன் அனுபவம் தேவை என்பதை நீக்க வேண்டும்.

4. பாலிடெக்னிக்கில் படித்து முடித்த மாணவர்களுக்கு பயிற்சி கால உதவித்தொகையை உயர்த்த வேண்டும்.

5. ஐந்தாம் பருவம் தவறி ஆறாம் பருவத்திற்குள் பூர்த்தி செய்து இரண்டிலும் சேர்ந்து முதல் வகுப்பு மதிப்பெண் பெற்றிருந்தால் முதல் வகுப்புக் கொடுக்க வேண்டும்.

6. ஷிப்டு (Shift) முறை கொண்டு வருவதை நிறுத்த வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் பொருட்டு பல பல் தொழில் பயிற்சி பயிலக மாணவர்கள் 29—12—1981 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். அதனைத் தொடர்ந்து தங்களுடைய கோரிக்கைகளுக்கு முடிவு தெரியும் வரை காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்வதாகக் கூறி கடந்த 5—1—1982 முதல் வகுப்புகளுக்கு மாணவர்கள் தொடர்ந்து வருகை புரியவில்லை. அவ்வாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மாணவர்களில் சென்னை அடையாறு மையத் தொழில் நுட்பப் பயிலகத்தைச் சேர்ந்த மாணவர்களும் அடங்கும். மேற் குறிப்பிட்டுள்ள பயிலகத்தில் பொறியியல் டிப்ளமோ வகுப்பு மாணவர்கள் நீங்கலாக ஏனைய போஸ்ட் டிப்ளமோ, மற்ற டிப்ளமோ மாணவர்கள் வகுப்புக்கு வந்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் கோரிக்கைகளை மாணவர் பிரதிநிதிகள், தொழில் நுட்பக்கல்வி இயக்குநரையும், கல்வி அமைச்சரையும் ஏற்கெனவே சந்தித்து விவாதித்துள்ளனர். மாணவர்களின் கோரிக்கைகள் பல்வேறு துறைகளைக் கலந்து முடிவெடுக்க வேண்டியுள்ளதால் மாணவர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்று வகுப்புகளுக்குச் செல்லுமாறும் வேண்டுகோள் விடுக்கப் பட்டது. அதனைத்தொடர்ந்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாலிடெக்னிக் முதல்வர்கள் மாணவர்கள் கிளர்ச்சி குறித்தும், அதனால் அவர்களின் படிப்பு எவ்வாறு வீணாகிறது எனத் தெரிவித்தும், மாணவர்களை வகுப்புகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் அனுப்பி வைத்தனர். இவ் வேண்டுகோளுக்கிணங்கி மாணவர்களின் வருகையில் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 4—2—1982 அன்று கிடைத்த தகவலின்படி மொத்தமுள்ள 50 பாலிடெக்னிக்களுள் 36 பாலிடெக்னிக் மாணவர்கள் வகுப்புகளுக்கு சென்றுள்ளனர் எனவும் 14 பாலிடெக்னிக்குகளில் மட்டும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இப்பதினான்கு பயிலகங்களில் சென்னை மையத் தொழில் நுட்பப்பயிலகமும் ஒன்று. அரசுக்கு மேலும் கிடைத்த தகவலின்படி 3—2—1982 லிருந்து தமிழ்நாடு பாலிடெக்னிக்குகளின் மாணவர்கள் சங்கத்தைச் சார்ந்த 16 மாணவர்கள் சென்னை மைய பாலிடெக்னிக்கைச்



சார்ந்த திரு. ஆர். பாஸ்கரன் தலைமையில் காலவரையின்றி உண்ணாவிரதத்தை கிண்டியிலுள்ள தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் கல்வி அலுவலகத்திற்கு எதிரில் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கொண்டுள்ளனர்.

நிலைமையினை நன்கு உணர்ந்த மாணவர்கள் படிப்பில் நாட்டம் கொண்டு வகுப்புக்கு செல்வார்களேயானால் அவர்களின் கோரிக்கை எது எது சாத்தியமோ அவைகள் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பாலிடெக்கினிக்கிலே படிக்கின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இப்படிப்பட்ட சில பிரச்னைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அதிலே அவர்கள் பல கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, குறிப்பாக, தாங்கள் பொறியியல் கல்லூரியிலே படிக்கச் செல்கின்றபொழுது, மற்ற மருத்துவக் கல்லூரிகளிலே இருப்பதைப்போல் இத்தனை சதவீதம் என்று ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, பி.யூ.சி. படிக்கின்ற மாணவர்களுக்கே இடமில்லையென்று சொன்னார்கள் மருத்துவக் கல்லூரியிலே கூட அப்படித் தான் இருக்கின்றது. பி.எஸ்.ஸி படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குச் சில குறிப்பிட்ட சதவீதம் நாம் ஒதுக்கி வருகிறோம். அதேபோன்று, இங்கேயும் குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கித் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, 3 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகுதான் அவர்கள் மாலைக் கல்லூரியில் படிக்க வேண்டுமென்று அந்த விதியையும் திருத்த வேண்டும். இன்னும் பல முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த மாணவர்களை உடனடியாக நீங்கள் அழைத்துப் பேசி, உடனடியாக அதிலிருக்கிற எல்லா கோரிக்கைகளையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை யென்றாலும் கூட, முடிந்த வரையிலே முக்கியமான 3, 4 கோரிக்கைகளை ஏற்று, பள்ளிகளைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதிலே இரண்டு மூன்று முக்கியமான கோரிக்கைகள், பாடசம்பந்தப்பட்டவை. அந்தக் கல்லூரியிலே சேர்வது சம்பந்தப் பட்டது. நான் கேள்வி நேரத்திலே குறிப்பிட்டதைப்போல், அதைப் பரிசீலிக்க வேண்டிய குழுக்கள்—அமைப்புதான் அவற்றைப் பரிசீலிக்க வேண்டும். அரசே அதிலே எந்த விதமான உத்தரவும் போட இயலாது. ஆகவே நாம் குழுக்களுக்கு

அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறோம். மற்ற கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும் என்று நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். என்னைச் சந்தித்து அவர்கள் பேசினார்கள். பேசியதற்குப் பிறகும் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து. உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது, ஒரு அரசாங்கம் போதுமான கால அளவை எடுத்துக் கொண்டு பரிசீலிக்ககூடிய வாய்ப்பை, அதிலே சம்பந்தப்பட்ட குழுக்கள் பரிசீலிக்கக்கூடிய வாய்ப்பைத் தர மறுக்கின்ற விதத்திலே ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகத்தான் தெரிகின்றது. ஆனால், பெரும்பாலான மாணவர்கள் இப்பொழுது பாலிடெக்னிக் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். பல மாணவர்கள் திரும்பி வருகிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே சில மாணவர்கள் இருப்பதாக எங்களுக்குப் புகார்கள் வருகின்றன. ஆனால், இப்படி இருந்தும் சென்னையிலே இருக்கின்ற பாலிடெக்னிக் மாணவர்களுடைய பெற்றோர்கள் நேற்றையதினம் கூடி ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்த உண்ணாவிரதம் இருக்கின்ற, போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்ற அந்த மாணவர்களை இன்றையதினம் சந்தித்து, போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்வதாகவும், மற்றபடி அந்தப் பிரச்னைகளைத் தாங்களே முன்நின்று பேசுவதாகவும் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இன்றையதினம் இந்தப் போராட்டதைக் கைவிட்டு விடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலிடெக்னிக் மாணவர்கள் 7 கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைத்து சாத்வீக முறையிலே உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்கள். அந்த உண்ணாவிரதப்போராட்டம் தொடங்கிய அந்தப் பந்தலை காவல் துறையினர் தீயிட்டுக் கொளுத்தி இருப்பதாக சொல்லப்படுகிறது. இது நியாயம்தானா? அதே மாதிரியாக இந்தப் போராட்டத்தை நடத்தக் கூடிய மாணவர் தலைவர் பாஸ்கரன் திருவான்மியூர் போலீஸ் இன்ஸ்பெக்டரால் 6—1—1982-ல் அழைத்துச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு இருக்கிறார். இது செய்யக்கூடிய காரணம் தானா என்பதோடு, இந்தமாதிரி அவர்கள் சொல்லக் கூடிய காரியங்களில் எதை எதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்து, அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய அந்த முறையிலே அந்த மாணவர்களை அழைத்துப் பேசி சுமுகமாக ஒரு முடிவு காண்பதற்குப் பதிலாக இந்தமாதிரி நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும். மேலும் இந்த வழக்குகளை எல்லாம் உடனடியாக வாபஸ் பெற்று அவர்களை எல்லாம், சிறையிலே இருக்கும் பாஸ்கரன், குமாரவேல் போன்ற 12 பேர்களையும் விடுதலை செய்து, அந்த மாணவர்கள் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி சுமுகமான முடிவுக்கு இந்த அரசு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே நாங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் பேசி இருக்கிறோம். பேசுவதற்கும் தயாராக இருந்திருக்கிறோம். அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு அரசாங்கத்தை பலவந்தப்படுத்துகின்ற முயற்சியிலே இந்தப் போராட்டத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் மாணவர்களிடத்திலே அதற்கு ஆதரவு இல்லாத நிலையிலே இந்த மாணவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாணவர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டு பாலிடெக்னிக்குக்குப் போவதற்கான நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். பெற்றோர்களும் அதற்கு முன் வந்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே போய் பேசி அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

இதிலே குறிப்பாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் ஷிப்டு முறையை 2 பாலிடெக்னிக்களில் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு இளைஞர்களுக்கு இத்தகைய பயிற்சிகளை அதிகம் தரவேண்டும் என்ற நிலையை உணர்ந்து இந்த காரியத்தை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அதையே எதிர்க்கின்ற அளவுக்கு மாணவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே தங்களுக்குக் கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பு மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்கிற அடிப்படையிலே இந்தப் போராட்டத்தை நடத்துவதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த தவறை அவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

அதுமட்டுமல்லாது, இந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. தானாக வேலை தேடக் கூடிய அளவுக்குத் தகுதியை தரக்கூடிய முறையிலே கல்வித் துறையிலே நாம் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அத்தகைய முயற்சியிலே இந்த பாலிடெக்னிக் கல்வி வருகின்ற காரணத்தினால் நாம் அதைப் பரவலாக தருகின்றபோது தாங்களே வேலை தேடிக்கொண்டு, மற்றவர்களுக்கும் வேலை தரக்கூடிய தகுதி வாய்ந்த இளைஞர்கள் உருவாவார்கள். அத்தகைய வாய்ப்பை குறைக்கின்ற அளவுக்கு ஒரு போராட்டம் நடத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய [illegible]கும். மற்றபடி இதிலே அனுசாபத்தோடு, மாணவர்கள் மீது பழிவாங்கும் உணர்வு இல்லாமல் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது இனியும் நடக்கும்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே 36 பாலிடெக்னிக்குகளில் அரைகுறையாக வேலை நிறுத்தம் நடை பெற்று வகுப்புகளுக்குச் செல்லவில்லை. 14 பாலிடெக்னிக்குகளில் முழுமையாக மாணவர்கள் வகுப்புகக்குச் செல்ல வில்லை

என்று கூறுகின்றார். இதிலே இருந்து தொடர்ந்து மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாமல தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி போராடுகின்றார்கள் என்பது தெளிவாக இருக்கிறது. ஆகவே இதை முடிவுக்குக் கொண்டு வர, அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கைகளில் குறிப்பாக ஒன்றிரண்டையாவது — அதாவது 25 சதவிகிதம் இடம் ஒதுக்கித் தரவேண்டும் என்பதும், அவர்களுக்குப் பயிற்சிக் கால உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்பதைப் போன்ற கோரிக்கைகளை அரசு ஏற்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு 25 சதவிகிதம் இடம் ஒதுக்குவது என்பது, ஏதோ மற்றவர்களுக்குத் தருவதை எடுத்து தருவது போன்றது என்ற உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இதிலே வித்தியாசம் இருக்கிறது. அதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போது 12-வது முடித்த மாணவர்களைத்தான் நாம் இந்த பி.இ. வகுப்பில் சேர்த்துக் கொள்கிறோம். இவர்கள் 10-வது படித்துவிட்டு தொழில் பயிற்சி பெறுகிறார்கள். 11, 12-வதிலே பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, மேதமெடிக்ஸ் படித்த அளவுக்கு இந்த மாணவர்கள் படித்து இருக்க மாட்டார்கள். ஆகவே அவர்களோடு இணைந்து இந்த அக்கடமிக் குவாலிபிகேஷன் இல்லாத மாணவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறபோது கல்வித் துறையில் ஒரு பிரச்சினையாக ஏற்பட்டுவிடும். அது சம்பந்தப்பட்ட குழு தான் அதைப் பரிசீலனை செய்யவேண்டும். இவர்கள் வேறு பயிற்சியை 3 ஆண்டுகள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் 2 ஆண்டு அக்கடமிக் குவாலிபிகேஷன், அதாவது பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, மேதமட்டிக்ஸ் அவைகளை இவர்கள் படிக்கவில்லை. அதைப் படித்த மாணவர்கள் பி.இ.-ல் சேருகிறார்கள். ஆகவே தரம் உயர்ந்த மாணவர்களோடு இவர்களைச் சேர்ப்பது என்பது அவ்வளவு சாதாரணமானது அல்ல. இப்படிப்பட்ட பிரச்சினையைத்தான் அவர்கள் கிளப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இவை எல்லாம் அரசு முடிவு எடுக்க முடியாத பிரச்சினை. இது கல்விக் குழுக்களின் முடிவில் இருக்கின்றது. அவர்களுடைய கோரிக்கைகளை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று கூட சொல்லவில்லை. குழுவுக்கு இந்தக் கோரிக்கைகளை அனுப்புகிறோம், வைக்கிறோம் என்றுதான் [illegible] சொல்கிறோம்.

(முற்பகல் 11–10)

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மாணவர்களும் தவறாக போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்வது, அவர்கள் போராட்டத்தின் மூலமாக தற்போது சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். அப்படி சிறையில் இருக்கக் கூடியவர்களை

1982 பிப்ரவரி 8] [திரு. பொ. உத்திராபதி]

உடனடியாக விடுதலை செய்து, அப்படி விடுதலை செய்த பிறகு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முயற்சிக்குமா? ஜனநாயக நாட்டில் உண்ணாவிரதம் இருப்பதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது, அப்படி இருக்கும்போது அவர்கள் போட்டு இருந்த பந்தலை கொளுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பந்தலைக் கொளுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? மாணவர்கள் மீது போடப்பட்ட கேஸ்கள் வாபஸ் வாங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே' அந்தப் பந்தலைக் கொளுத்தியதாகச் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு பற்றியும், மற்ற வழக்குகளைப் பற்றியும் போலீசாரிடம் விசாரித்து அதுபற்றி மேற்கொண்டு முடிவு எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் போராட்டம் நடத்துகின்றபோது அவர்கள் வைத்து இருக்கின்ற அந்தக் கோரிக்கைகள் மீது நாம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதைப் பற்றி பேசியிருக்கிறோம். அது மட்டுமல்ல, நேற்றையதினம் அவர்களுடைய பெற்றோர்களோடும் பேசியிருக்கிறோம். அவர்கள் தற்போது ஜெயிலில் இல்லை. ஆஸ்பிடலில் இருக்கிறார்கள். இன்று காலையில் அவர்களைப் போய் பார்த்துப் பேசி, அவர்களைக் கூட்டிக் கொண்டு போய் பாலிடெக்கினிக்கில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள். அதற்கு டைரக்டர்கள் ஒத்துழைப்பு தருவார்கள் என்ற முடிவை நாங்கள் எடுத்து இருக்கிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே மாணவர்களை மீண்டும் சந்தித்துப் பேசுவதாக குறிப்பிட்டு இருக்கிறது. அதே சமயத்தில் ஏற்கனவே இந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசியதாகவும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே அந்த மாணவர்களைச் சந்தித்துப் பேசியதில் என்னென்ன முட்டுக் கட்டைகள் இருந்தன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கல்வி குறித்து சம்பந்தப்பட்ட பிரச்சினை அது, [illegible] ஸ்டேட் டெக்னிகல் எடுகேஷன் போர்ட், சதர்ன் கவுன்சில், ஆல் இந்தியா கவுன்சில் மூலமாகத்தான் பரிசீலிக்க வேண்டும். அரசே அதிலே ஒரு முடிவை எடுக்க முடியாது என்ற நிலைமையை நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். மற்றபடி ஷிப்ட் கூடாது, புதிய பாலி டெக்னிக் கூடாது என்று பேச்சு வந்தபோது, அத்தகைய உணர்வு மாணவர்களிடத்திலே இருக்கக்கூடாது ஏதோ நாம் இன்றைக்குச் சேர்ந்து விட்டோம், எங்களுக்குத்தான் அந்த உரிமை இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு, வருங்கால இளைஞர்களுக்கு அந்த உரிமை இருக்கக் கூடாது என்கிற கோரிக்கையை

நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அத்தகைய ஆதிக்க உணர்வுள்ள ஒரு கோரிக்கையாக அது இருக்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். மற்றபடி அரசு பரிசீலிக்க வேண்டியதை அரசு பரிசீலிக்கும் என்றும் சொல்லி இருக்கிறேன். 3 ஆண்டு காலம் என்ற நிபந்தனையை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். 3 ஆண்டு காலம் பயிற்சி பெற்றிருந்தால்தான் அங்கே அனுமதி கொடுக்கிறோம். அதற்குப் போதுமான ஆட்கள் வருகிறார்கள். அதை நாம் எடுப்போமானால், 3 ஆண்டு அனுபவம் பெற்றவர்கள் வெளியே இருப்பார்கள் ஒரு ஆண்டு காலம் அனுபவம் பெற்றவர்கள் உள்ளே உட்கார்ந்து கொண்டு படிப்பார்கள். அத்தகைய ஒரு தவறான நிலைமை உருவாகக் கூடாது என்று தான் இதை வைத்திருக்கிறோம். ஆகவே நிபந்தனைகளில் தவறு இல்லை. போதுமான மாணவர்கள் வரவில்லை என்று சொன்னால், நாமே அந்த நிபந்தனைகளை கீழே இறக்கிவிட்டுவிடப் போகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை அளிப்பது தற்போது 175 ரூபாய் என்று நினைக்கிறேன். அது மிகவும் குறைவானது. அதை அதிகரிக்க வேண்டும். அதோடு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஆட்களை சில கம்பெனிகளில் எடுக்கிறார்கள். அவர்களிடம் கடுமையான முறையில் வேலை வாங்குகிறார்கள். அவர்களை ஓராண்டு, இரண்டாண்டு இப்படி வைத்திருந்துவிட்டு, அவர்களை நீக்கிவிட்டு, மறுபடியும் புதிதாக ஆட்களை எடுக்கிறார்கள். இது ஒரு எக்ஸ்பிளாய்டேஷன் போல் நடந்துகொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட முறையை மாற்றிவிட, ஓரளவிற்கு அந்த அப்பிரண்டிஸ் விதி முறைகளை மாற்றுவதற்கு மாநில அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கு தனியாக கேள்வி போட்டால் அந்தத் துறை அமைச்சர் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இயலும்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக பலதடவை பேசப் பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இங்கே வை[illegible] விவர அறிக்கையில் கடைசி பாராவில் வகுப்புக்குச் செல்[illegible]களே யானால் அவர்களின் கோரிக்கை எது எது சாத்தியமோ அவைகள் பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற் கொண்டும் பேசுவதற்கு 'கண்டிஷன் பிரிசிடென்ட்' போடுகிறார் என்று தெரியவில்லை. அப்படி 'கண்டிஷன் பிரிசிடென்ட்' போடுவதாக இருந்தால் அந்த நிலைமையை மாற்றிக்கொண்டு குறைந்த பட்சம் அவர்களுடைய நான்காவது கோரிக்கையான 'பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையை உயர்த்திக் [illegible]





என்ற கோரிக்கையையாவது ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு இந்த நிவாரண உதவியைச் செய்து கொடுத்து, அவர்கள் எல்லாம் பள்ளிக்குத் திரும்பிச் செல்லுகின்ற ஒரு சூழ் நிலையை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று பல்வேறு பிரிவு மாணவர்கள் கோரிக்கைகளை தந்து கொண்டிருக்கிறார்கள். அதை உரிய முறையிலே பரிசீலனை செய்வோம். ஆனால் போராட்டம் செய்து, உதவித் தொகையை அதிகரிப்பதாக இருந்தால் தினசரி போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். அரசாங்கம் நல்ல முறையில் செயல்பட முடியாது. அதுவும் பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற காலத்தில் இப்படிப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்துவது நல்லது அல்ல. மாணவர்கள் ஒழுங்காக பள்ளிக்குச் சென்று டைரக்டர் மூலம் நியாயமான கோரிக்கைகள் வருமானால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, மாணவர்கள் பொதுவாகவே துடிப்பானவர்கள், இளைஞர்கள், போராட்ட உணர்வு படைத்தவர்கள் ஆனால் போராட்டங்களை எப்போதுமே திட்டமிட்டு, உடனே நடத்துவதில்லை. போராட்டம் நடத்துகிற சூழ்நிலை ஏற்படுகிறது என்பதற்கான தகவலை அந்தந்தக் கல்லூரி நிர்வாகம் முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். அப்படி தகவல் தெரிந்த பிறகு அந்த மாணவர்களுடைய பெற்றோர்களுக்கு தகவல் தெரிவித்து, அந்த மாணவர்களின் பெற்றோர்களின் மூலமாக கோரிக்கை வைப்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்க இந்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவ்வப்போது அந்த முடிவை மேற்கொண்டு வருகிறோம். இப்போது கூட நாம் அவர்களைக் கூப்பிட்டபோது அவர்கள் வரவில்லை. இரண்டாவது நாள் நீங்கள் வரவில்லை என்றால் டி. சி. தரவேண்டியிருக்கும் என்று சொன்னதற்குப் பின்னால் பெற்றோர்கள் வந்து கூடி, பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறார்கள். [illegible] அவர்கள் போதுமான ஒத்துழைப்பு தராததும் இதற்கு ஒரு [illegible]ம். இனிமேல் ஒத்துழைப்பு தருவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் பரிசீலிப்பதாக அமைச்சரவர்கள் உறுதி அளித்துள்ளார்கள் மாணவர் தலைவர்கள் பேச்சு வார்த்தைக்கு ஒத்துக் கொண்டார்களா? கூடிய விரைவில் பேச்சு வார்த்தையின் மூலம் எந்த விதமான நன்மை கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பெற்றோர்கள் இன்றைக்கே பேசுவதற்கு ஏற்பாடு செய்வதாக நேற்று சொல்லிவிட்டுப் போனார்கள். விவரம் பின்னால்தான் தெரியும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்த டிப்ளமா கோர்ஸ் படிக்கிற மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து, இப்போது உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே டோக்கன் ஸ்டிரைக் என்ற பெயரால், உங்கள் அறிக்கையின்படி, 29—12—81 அன்று ஒருநாள் ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். அதன் பின்னர் 5—1—82 முதல் பள்ளிக்குச் செல்லவில்லை. அதன் பிறகு 3—2—1982 முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின்போது கல்லூரி நிர்வாகத்தில் அரசு தலையிட அதிகாரம் இல்லை என்று சொன்னார்கள். இது நிர்வாகத்தில் தலையிடுவல்தல. இது சர்க்காருடைய பாலிசி.

டிப்ளமா கோர்ஸ் படித்தால் பின்னால் என்சினீயரிங் படிக்கும்போது மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டும் என்று இருக்கிறது. அது ஒரு எக்ஷம்ஷன் அரசின் பாலிசி அது. அது மட்டுமல்ல. இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 6 செமஸ்டர்கள் என்று வைத்திருக்கிறார்கள். 5 வது செமஸ்டரில் ஃபெயிலானால், 6வது செமஸ்டரில் இந்த இரண்டு செமஸ்டர்களுக்கும் சேர்த்து அதிகமாக மார்க் வாங்கினாலும் 'கிளாஸ்' இல்லை என்று இருக்கிறது. அது சரியல்ல. ஏற்கனவே 3-வது, 4-வது, 5-வது செமஸ்டரில் ஃபெயில் ஆனால், ஃபைனல் செமஸ்டரில் அதிகமாக மார்க் வாங்கியிருந்தாலும் 'ஃபர்ஸ்ட் கிளாஸ்' கொடுப்பதில்லை என்று இருந்தது.

[முற்பகல் 11—20]

இந்தச் சர்க்காரே இரண்டு செமஸ்டர்களைத் தள்ளுபடி செய்திருக்கிறது. 3-வது செமஸ்டரையும், 4-வது செமஸ்டரையும் தள்ளுபடி செய்திருக்கிறது. ஒரு மாணவன் நோய்வாய்ப்பட்டு 5-வது செமஸ்டரிலே பெயில் ஆகக்கூடும் ஆகவே இந்த சர்க்கார் ஏற்கனவே தள்ளுபடி செய்த இரண்டு செமஸ்டர்கள் போல் 5-வது செமஸ்டரிலே பெயில் ஆகி இருந்தால் அவர்கள் 6-வது செமஸ்டரிலே அதிக மார்க் எடுத்து பாஸ் ஆகி இருந்தால் அவனுக்கு கிளாஸ் தருவதிலே என்ன முட்டுக்கட்டை இருக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்



1982 பிப்ரவரி 8]

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இதுபற்றி கேட்டால் எனக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. அடுத்து இதுபற்றி கேட்பதற்கு அமைச்சரிடம் வந்தால் கூட —இந்த விஷயம் உண்மையாக இருக்கக் கூடாது என்றே விரும்புகிறேன் —வருகின்ற மாணவர்களிடம் நீங்கள் யாருக்கு ஓட்டு போட்டீர்களோ அவர்களிடம் போய் கேளுங்கள் என்று சொல்கின்ற நிலைமை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே அரசாங்கம் இரண்டு செமஸ்டர்களுக்கு எக்சம்ஷன் கொடுத்தது போன்று அந்த மாணவர்களின் கோரிக்கையினையும் ஏற்று பரிசீலிக்க முன்வருமா !

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, என்னிடம் வருகின்ற மாணவர்களிடத்திலே நீங்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போட்டீர்கள், எந்தக் கட்சியை ஆதரித்தீர்கள்'' என்று கேட்கின்ற மனப்பான்மை என்னிடத்திலே இல்லை. ஆகவே இந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை நான் அணுகுவதில்லை. மாணவர்களின் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற போது கட்சி வேறுபாடு காட்டாமல் பேசுகிறோம். எந்தெந்தத் தலைவர்கள், எந்தந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று விவரம் கூட எனக்குத் தெரியாது. ஆகவே அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் தருகின்ற தகவல் முழுமையான வகையிலே உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் 3-வது செமஸ்டர், 4-வது செமஸ்டர் பற்றி எல்லாம் எந்த உத்தரவையும் இந்த அரசு போட முடியாது. டெக்னிக்கல் எஜுகேஷன், போர்ட் ஆப் ஸ்டடீஸ் ஆகிய அவர்கள் எடுக்கின்ற முடிவுகளைத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர எந்தக் கல்வி நிறுவனங்களுக்கும் உத்திரவிட முடியாது. அதற்கென்று குழு நியமனம் செய்யப்படுகின்றது. அவர்கள்தான் முடிவு எடுப்பார்களே தவிர அரசு எந்த உத்தரவும் இடுவதில்லை. மேலும் அந்தக் கல்வி நிறுவனங்களில் அரசு அப்படி எல்லாம் தலையிட்டால் அவை முறையாகச் செயல்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு. ஜனார்தனன்: தலைவரவர்களே, 3—2—1982 அன்று முதல் 16 மாணவர்கள் பாஸ்கரன் தலைமையில் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஏறக்குறைய ஐந்து நாட்களாக அவர்கள் பட்டினியாக இருக்கிறார்கள் அவர்களுடைய தலைவர் சிறையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆகவே இந்தப் பிரச்சினையில் மனிதாபிமானத்தோடு அணுகி அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு கொடுத்து அவர்களுடைய கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களிடத்திலே பேசுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, மாணவர்கள் வைத்திருக்கின்ற இந்தக் கோரிக்கைகள் போன்று வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி கோரிக்கைகள் விடப்பட்டு அவற்றை அந்த அரசுகள் நிறைவேற்றி இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவை எல்லாம்தான் பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

### (ஆ). சாத்தனூர் அணையின் இடதுபுற கால்வாய் பாசன பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாயிலிருந்து அதன் கடைசிப் பகுதியான 10 கிராமங்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காததால் பயிர்கள் கருகியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் கவனத்திற்க்கு கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் இடதுகரை கால்வாய் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செங்கம் மற்றும் திருவண்ணாமலை வட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோயிலூர் வட்டத்திலும் 24,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனமளிக்கிறது. ஆயக்கட்டு நிலங்களில் மானாவரில் பயிர்கள் இருந்ததால் வழக்கமாக திறந்துவிடக் குறிக்கப்பட்ட நாளான டிசம்பர் மாதம் 15-ந் தேதிக்குப் பதிலாக 6–1–82-ம் தேதியன்று, சாத்தனூர் இடதுகரைக் கால்வாய் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது தற்போது 11,000 ஏக்கர் நிலங்களில் நன்செய் பயிரிடப்பட்டுள்ளது இவைகளுக்கு போதிய நீர்விடப்படுகிறது எஞ்சிய பகுதியில் விவசாய வேலைகள் நடைபெற்று வருகின்றன அவற்றிற்கும் போதிய நீர்விடப்படுகிறது. எனவே, போதிய நீர்விடப்படாததால் 12,000 ஏக்கர் நிலங்களில் நன்செய், புன்செய் பயிர்கள் சாவியாகிவிட்டன [illegible] சரியல்ல;

[illegible]

*1982 பிப்ரவரி 8]*          *[திரு. கே. இராஜா முகமது]*

கடைமடைப்பகுதி நிலங்கள் உட்பட எல்லா நிலங்களுக்கும் நீர் கிடைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

**திரு த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடைப்பகுதி நிலங்கள் உட்பட பாசன வசதி செய்து தரப்படுவதாக அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் ஆனால் கடைமடைப் பகுதியான ISF, IOR, IIR, போன்ற கால்வாய்களில் கடைசி பகுதியில் தண்ணீர் இன்று வரை அறவே வரவில்லை. டிசம்பரில் வழக்கமாக தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. அணையின் பாசன விவசாயிகளை அழைத்து துணை ஆட்சித்தலைவரின் கருத்தைக் கேட்டபோது அவர்கள் ஜனவரி 1-ம் தேதி திறந்துவிடவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கேட்டதுபோல் 1 ஆம் தேதியன்று திறந்துவிடப்படவில்லை. 5–1–1982 ஆம் தேதியன்று திறந்துவிடப்பட்டிருக்கிறது. திறந்துவிடப்பட்டு 34 நாட்கள் ஆகின்றன. இதுவரையில் கடைசிப் பகுதியில் இருக்கும் 10 கிராமங்களுக்கு தண்ணீர் பாயவில்லை. உடனடியாக அவர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் 4–2–1982 ஆம் தேதியன்று இந்த கவன ஈர்ப்பைக் கொடுத்தபோதே சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் தகவல் கேட்கப்பட்டது. அவர் பத்து கிராமங்கள் என்றுதான் பொதுவாக கூறியிருந்தார். நாங்கள்தான் அந்த கடைமடைப் பகுதியிலே இருக்கும் இடங்கள் என்னென்ன என்று விளக்கம் கேட்டிருந்தோம். நாங்கள் இந்தப் பகுதிகளில் 15 ஆம் தேதியன்று தண்ணீர் கொடுக்க தயாராக இருந்தோம். ஆனால் மானாவரிப் பயிர்கள் ஏற்கனவே பயிரிடப்பட்டு விட்டக் காரணத்தால் இப்பொழுது தண்ணீர் கொடுப்பதால் நன்மையில்லை. எனவே அந்த நாளை ஒத்திவைக்க வேண்டும் என்று அவர்களாகவே கேட்டுக் கொண்டதன்பேரில்தான் தள்ளிவைத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஆம் தேதியன்று கொடுக்கப்பட்டதாக சொல்கிறார்கள். இல்லை. 6–2–1982 ஆம் தேதியன்றுதான் கொடுத்தோம். அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில்தான் தள்ளிவைத்து, அவர்களே கேட்டுக் கொண்டபடி 6–2–1982 ஆம் தேதியன்றுதான் திறந்துவிட்டிருக்கிறோம். மேலும், அங்கே 11,000 ஏக்கர் நிலங்கள்

தான் புஞ்சை சாகுபடி செய்கின்றன. மற்ற இடங்களில் இடம் விட்டு இடம் தள்ளி விவசாயம் செய்யப்படுகிறது. அவர்களின் தேவைக்கேற்பத்தான் அந்தப் பகுதிகளில் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. த. வேணுகோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, அணையிலே தற்போது தண்ணீர் நிரம்பியிருக்கிறது. இப்படி நிரம்பியிருக்கிற நேரத்திலேயே, ஆரம்பக் காலத்திலேயே கடைசிப்பகுதியான கிராமங்களுக்கு தண்ணீர் செல்லவில்லை என்றால், ஏப்ரல், மே மாதங்களில் எப்படி தண்ணீர் போய்ச் சேரும் - அந்தப்பகுதி மக்கள் எப்படி பயிர் செய்வார்கள். தற்போது இருக்கும் இந்த நிலைமையை மாற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் இடதுகரை கால்வாய் சம்பந்தப்பட்ட அந்தப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் பதிவு செய்யப்பட்ட ஆயக் கட்டுகளாக அந்த நிலங்கள் இருக்குமேயானால், நிச்சயமாக தண்ணீர் கொடுப்பதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்.

### மதிப்பீட்டுக் குழு.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில் பொது நூலகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கையையும்;

பொதுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற விருந்தினர் இல்லங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கிறேன்.





## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1982.**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

**திரு. என். வி. என். சோமு :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடுகின்ற சட்டமாகும். அதுவும் பத்திரிகையாளர்களை ஜாமீனில் கூட விடக்கூடாது என்று இதிலே விதியிருக்கிறது. அந்த விதி, இந்த அரசுக்கு பத்திரிகையாளர்கள் மீது எவ்வளவு தூரம் பழி வாங்க வேண்டும் என்ற உணர்ச்சி இருக்கிறது என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறது. ஏற்கனவே இந்தியன் பீனல் கோட்டிலேயே இருக்கிற சட்டத்தையே வேண்டுமானால் அரசு பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த செக்ஷன்கள் போதாவிட்டால், ஐ.பி.சி. 500-ஐக் கூட பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, இந்தச் சட்டம் தேவையில்லை— பத்திரிகையாளர்களுக்கு வாய்ப்பூட்டு போடுவதற்காகவே கொண்டுவரப்பட்ட சட்டம் என்ற வகையில் இதை நான் எதிர்க்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இன்டிரடெக்ஷன் ஸ்டேஜிலேயே நான் எதிர்க்கிறேன். காரண விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கக் கூடிய அந்த பொருளுக்கு நேர்மாறாக நடைமுறையில் உபயோகப் படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது ஒரு காரணம்.

(முற்பகல் 11.30)

உண்மையிலேயே 'ஸ்கரிலஸ் ரைட்டிங்', கீழ்த்தரமான எழுத்துக்களைத் தடுப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று சொன்னால் அரசாங்கத்தைச் சார்ந்திருக்கக் கூடிய ஆளும் கட்சியைச் சார்ந்த பிரமுகர்கள் இப்படிப்பட்ட கீழ்த் தரமான ரகத்தில் உள்ள படங்களும் எழுத்துக்களும் இருக்கக் கூடிய பீரியாடிக்கல்களை வெளியிட்டு அவை வெளி வருகின்றன. அப்படி வருவதைத் தடுப்பதுதான் நோக்கம் என்று சொன்னால் அந்தக் கட்சிப் பிரமுகர்கள் நடத்துகிறார்களே அவற்றை நடத்தக் கூடாது என்று அவர்கள் தடுத்திருப்பார்கள் அல்லவா? அதற்கு சட்டம் தேவை இல்லை. அவர்கள் கட்சியைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள் அதைச் செய்ய விடாமல் தடுத்து நிறுத்தாது அதை அனுமதித்துக் கொண்டு இப்படிப்பட்டதை

[திரு. ரா. உமாநாத்] [1982 பிப்ரவரி 8

சட்டத்தைக் கொண்டு வருவது என்றால் நடைமுறையில் அதன் நோக்கம் It will be Maliied Legislation. அரசியல் எதிரிகளுக்கு எதிராக உபயோகப்படுதுவதற்குப் பயன் படக் கூடிய சட்டமாகத்தான் இருக்கும். To muscle the press என்ற முறையில் தான் வரும். It will be a legislation to legalise the oppositions veiling எதிர்க் கட்சிகளை வேட்டையாடக் கூடிய போக்குக்கு சட்ட வடிவம் கொடுக்கக் கூடிய ஒரு சட்டமாகத்தான் இது வருகிறது.

இதை எதிர்ப்பதற்கு இரண்டாவது காரணம், இந்த மாதிரி அதிகாரத்தை அரசாங்கத்திற்குக் கொடுப்பது என்பது ஆபத்தானதாக இருக்கும். ஸெடிஷன், 124 (ஏ) யை—— வெள்ளைக்காரன் காலத்தில் தேசீய இயக்கத்தை அடக்குவதற்கு சுதந்திரப் பேச்சுக்களை ஒடுக்குவதற்கு டிஷன் செக்ஷனைக் கொண்டு வந்தார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அந்த செக்ஷனை உபயோகப்படுத்தியதில்லை. ஆனால் நம் மாநிலத்தில் வக்கீல்கள் சங்கத் தலைவர் உட்பட கைது செய்வதற்கு அந்த செக்ஷன் துஷ்பிரயோகப் படுத்தப்படுகிறது. சமீபத்தில் 'இன்க்ரிமினேட்டிங்க், ஸ்கரிலஸ்' இன்க்ரிமினேட்டிங்க் என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து, இதுதான் என் கடைசி பாயிண்ட் ஆப் அப்ஜக்ஷன்—ஸீஸ் செய்திருக்கக் கூடிய புத்தகங்களின் பெயர்களைப் படிக்கிறேன். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். சோவியத் யூனியனில்தொழிற்சாலைகளை நடத்துவது யார்? இது ஒருபுக். அந்த பப்ளிகேஷனைஇன்க்ரிமினேட்டிங்க் என்று சொல்லி ஸீஸ் செய்திருக்கிறார்கள். சோஷலிஸம், தத்துவமும் நடைமுறையும், அதுவும் இன்க்ரிமினேட்டிங்க் என்று சொல்லி எப். ஐ. ஆர்-ல் போட்டு ஸீஸ் செய்திருக்கிறார்கள். ப்ரடரிக் ஏஞ்சல்ஸ், மார்க்ஸீன் கொலீத், ஆக இன்க்ரிமினேட்டிங்க் என்று சொல்லி லீகல் புக்ஸை ஸீஸ் செய்யக் கூடிய எப். ஐ. ஆர். போட்டு ஸீஸ் செய்யக் கூடிய போலீஸ், அந்த நிர்வாகத்தை நடத்தக் கூடிய நம் சர்க்கார் ஸ்கரிலஸ் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி என்ன நடக்கும் என்று நாம் பார்க்கலாம். ஆகவே இதை கடுமையாக எதிர்க்கிறேன். இதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று, முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவை எங்கள் கட்சி சார்பாக வன்மையாக எதிர்த்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூறியது மாதிரி இது வேண்டாதவர்களை, நமக்கு விரோதமானவர்களை பழி தீர்க்கக் கூடிய முறையில் இதை பயன் படுத்தக் கூடிய ஒரு நிலைமை ஏற்படுமே தவிர இங்கே சொல்லக் கூடிய நோக்கம் அல்லது கருத்துக்களை நிறைவேற்ற இது உபயோகமாகாது என்ற காரணத்தால் இதை என் கட்சி சார்பில் எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 பிப்ரவரி 8]

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே இந்தச் சட்டத்தின் மூலமாக பத்திரிகைகளின் உரிமைகள் மிக நீண்ட காலமாக எந்த உரிமைகளை வாதாடி பெற்றிருக்கிறார்களோ அந்த உரிமைகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற கருத்தை அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பத்திரிகை, உலகத்தின் சார்பாக பல்வேறு பத்திரிகை ஆசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அரசியல் கண்ணோட்டத்தில் மாற்றுக் கட்சிகள், எதிர்க் கட்சிகள் அவர்கள் செய்கிற பிரச்சாரம் இவற்றைத் தடுப்பதற்காக ஒரு வேளை இந்தக் கடுமையான சட்டத்தைப் பயன் படுத்தி தடுத்து விடலாம், கைது செய்வதன் மூலமாக ஜாமீனில் வெளியே வருவதைத் தடுப்பதன் மூலமாக தடுத்துவிடலாம் என்று எந்த அரசாங்கம் கருதுமானாலும் இந்த அரசாங்கத்திற்கு அந்த நோக்கத்தில் தோல்வி ஏற்படுமே தவிர வெற்றி ஏற்படாது.

அரசியல்வாதி கடுமையாக விமர்சனம் செய்கிற காரியங்களில் ஈடுபடுகிறான் என்றால் அதற்காக ஒரு தண்டனை பெறுவதன் மூலம் தன்னை தியாகியாக உணர்த்திக் கொள்ள வேண்டும் ஒரு இலட்சியத்திற்காக என்ற உணர்வோடு செய்வானே தவிர கடுமையாக ஒரு அரசை விமர்சித்து விட்டு அந்த அரசு எடுக்கிற நடவடிக்கைகளுக்குப் பயப்படுகிற மனப்பான்மை எந்த அரசியல் வாதிக்கும் அவன் அரசியலில் நீண்ட நாட்களாக இருப்பானேயானால், அவன் கட்சி மாறினாலும் கூட அதற்கிடையில் கூட அரசியல்வாதியாக இருப்பானேயானால் அவன் உள்ளத்தில் அதற்காக அஞ்சுகிற ஒரு தன்மையை எதிர்பார்க்க முடியாது.

இழிவான முறையில், கீழ்த்தரமான முறையில் மக்கள் படிக்கக் கூடாத வகையில், பார்க்கக் கூடாத வகையில் செய்யப்படுகிற காரியங்களைத் தடுப்பதற்காக இந்தச் சட்டம் வேண்டுமென்று இந்த அரசு கருதுமானால் வேறு எந்த ஒரு மாநிலமும் இப்படிப் பட்ட சட்டத்தின் மூலமாகத்தான் அதைத் தடுக்கிறது என்று கருதக் கூடிய நிலைமை இன்றைக்கு இல்லை.

எனவே, இழிவான முறையில் அல்லது தகாத வார்த்தைகள் அல்லது மஞ்சள் பத்திரிகை என்று சொல்லக் கூடிய முறையில், அவைகளைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளலாம். அத்தகைய நல்லுணர்வு இருக்குமானால், அதற்கு வேண்டிய ஒருமித்த முயற்சியில் ஈடுபடலாம். அப்போது அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு முதல் முதலாக ஆளுங் கட்சிக்குத்தான் வருகிறது. நண்பர் உமாநாத் அவர்கள் சொன்னது போல், ஆளுங்கட்சி தங்களை அடக்க முடியாத நிலையில், மற்றவர்களை அடக்க முயற்சிக்கும்

போது, ஆளுங் கட்சிக்கு எதிர்ப்புத்தான் வளருமே தவிர, எதிர்க் கட்சிகள் செய்கின்ற தவறுகளைத் தடுக்க முடியாது. சட்ட நுணுக்கங் களிலே நான் செல்லாவிட்டாலும் கூட, பொது நோக்கு என்ற வகையில் இந்தச் சட்டத்தை இன்றைக்கு ஆளுங் கட்சி கொண்டு வந்தால், அதனால் ஒரு பழி ஏற்படுமே தவிர, இந்தச் சட்டத்தினால் இம்மியளவும் பலன் ஏற்படாது. இதனால் அரசாங்கத்திற்கும், ஆளும் கட்சிக்கும் பலன் ஏற்படாது அதே போல், எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்குவதற்காக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினால், எதிர்ப்பு வளருமே தவிர, அதனால் இம்மியளவும் பலன் ஏற்படாது. எனவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற அரசு மறுபடியும் இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து, தேவை இல்லாத ஒரு பெரிய ஆயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டு போராடுவதற்கு வராமல், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களது கருத்துக்களைக் கூறுகின்ற வாய்ப்பு, சட்ட முன்வடிவை கன்சிடரேஷன் செய்கின்ற நேரத்தில் இருக்கிறது. அப்போது எடுத்துச் சொல்லலாம் என்று கூறி, தற்போது இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடை முறை விதிக் கோவை (தமிழ்நாடு (திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.





## (ஆ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

*திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத் தனி அதிகாரிகளை நியமிக்கும் சட்டத் திருத்தத்தின் முன்வடிவை அறிமுகம் செய்யும்படியான இந்த நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் கடுமையான ஆட்சேபணையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதனுடைய காரண விளக்கத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத் தீர்ப்பு அளித்து, தடை உத்தரவு நீக்கப்பட்ட பின்னர்தான் ஊராட்சிகளுக்கான தேர்தல்களுக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று. தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. மகப்பேறும், மாரி பொழிவதும் மகேசனுக்கே தெரியாது என்பார்கள். அதிலே இந்தப் பஞ்சாயத்து யூனியன் தேர்தலையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிலைமை துரதிருஷ்டவசமாக ஏற்பட்டிருக்கிறது.

கிராமப்புறங்களில் ஜனநாயக அமைப்பு இன்றைக்கு இல்லாத காரணத்தினால், அங்கே நிலைமைகள் சீரழிந்து, சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது. எந்தத் தரப்பு வக்கீல் உயர்நீதி மன்றத்திலே ஸ்டே வாங்கினார், என்பதை நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம். இது எங்கு கொண்டுபோய் நிற்கும் என்று சொல்ல முடியாது. இங்கே முதலமைச்சர் அவர்கள் இருப்பதால், சொல்கிறேன். பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அது நல்ல முயற்சி. இந்தப் பிரச்னையில், ஹைகோர்டில் ஸ்டே வாங்கிய மறுநாளே முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சிகளையும் அழைத்திருக்க வேண்டும். ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது இதைத் தவிர்ப்பதற்கு ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை எந்த வக்கீல் வாதாடினார் என்று சொல்லி, அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டாம். இன்று இதிலுள்ள ரிசர்வேஷனை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே பலமாக பற்றி நிற்கிறோம் எனவே, உடனடியாக மாநில அரசு அனைத்துக் கட்சிகளையும் அழைத்து, இந்தப் பிரச்னையில் ஒரு தீர்வு காணவேண்டும். இந்த ஹைகோர்ட் ஸ்டேயை வெகேட் பண்ணுவதில் நாம் முயற்சி செய்ய வேண்டும். அந்த முறையில் இந்தச் சட்ட முன்வடிவின் அறிமுகத்தை நான் எதிர்க்கிறேன். இந்த ஆலோசனையை அரசின் முன்னால் வைக்கிறேன்.

[1982 பிப்ரவரி 8

[முற்பகல் 11—40]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு ஏற்கனவே தேர்தல் நடத்தி 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் ஜனநாயக அமைப்பை ஊராட்சிகளில் கொண்டு வரவேண்டுமென்று தொடர்ந்து இந்த மன்றத்தில் சகல உறுப்பினர்களும் சொல்லிக் கொண்டு வந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சியினரையும் அழைத்துப்பேசி இதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள் நாங்கள் எல்லாம் அதனை ஆதரித்தோம

இன்று தேர்தல் நடத்துவதில் எற்பட்ட தடங்கல்கள் என்ன என்பதைப் பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள இருக்கின்றன. ஆளும் கட்சிக்குத் தேர்தலை நடத்துவதில் அக்கறை இல்லையென்பதும் ஆளும் கட்சியினர் அவர்கள் அபேட்சகர்கள் யார் யார்! என்று முடிவு செய்யாமலே இருப்பதில் இருந்து தெரிகிறது. தேர்தல் நடக்காது என்ற எண்ணத்தோடுதான் அவர்கள் அப்படிச் செய்தார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேர தெதைலைவர்வ அவர்களே. நாங்கள் நம்பிக்கை இல்லாமல் சய்தோம் என்ற சந்தேகத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். நாங்கள் முடிவு செய்ததன் காரணமாக இன்றைய தினம் சில ஆசிரியர்கள் தேர்தலில் நிற்பதற்காகப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி. முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. அந்த ஆசிரியர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம் ; ஆனால் உங்களுக்குத் தெரியும். யார் யார் உங்கள் கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் என்பது அறிவிக்கபடவில்லை. எங்களுக்குத்தான் தேர்தல் எப்போது வரும் என்பது தெரியாது ; ஆனால் ஆளும் கட்சிக்கு முன்னாலேயே தெரிந்திருக்கும். அப்படிப்பட்ட நிலையிலும் அவர்கள் பட்டியலை அறிவிக்கவில்லை.

ஊராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத காரணத்தால் தனியதிகாரி நிர்வாகத்தில் மக்களுக்கு வேண்டாத பல் காரியங்கள் நடைபெறுகின்றன. தேவையான காரியங்கள் நடக்காமல் இருக்கின்றன. ஆகவே, இந்தத் தேர்தலை மேலும் மேலும் தள்ளிப் போடும் வகையில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பி ஆட்சேபிக்கிறேன்.

1982 பிப்ரவரி 8]

*திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் நீடிப்பு மசோதா இந்தச் சபைக்கு தவறாமல் வந்து கொண்டிருக்கிறது. இந்த முறையாவது தேர்தல் முடிந்து அந்த மசோதா வராது என்று பார்த்தோம். சட்டசபை கூடினாலே நீடிப்பு மசோதாக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. யாருக்கு வந்தாலும் வராவிட்டாலும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் நீடிப்பு மசோதா வந்து கொண்டே இருக்கும். இந்த முறை பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறாமல் தள்ளி வைக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டு தனி அதிகாரிகளாக இருக்கிறவர்களுக்குப் பதவி நீட்டிப்புத் தரவேண்டிய காலகட்டம் ஏற்பட்டதற்குக் காரணம் ஆளும் கட்சி தெளிவு இல்லாமல் எடுத்த முடிவு, குழப்பமான திட்டங்கள், செயல்படுத்த முடியாத காரியங்களைச் செய்ததுதான். கேஸ் கோர்ட்டுக்குப் போயிற்று. ஒரு ஜட்ஜ் விசாரிக்கிறார். அதனை வேகமாக நடத்த வேண்டுமென்று சர்க்கார் சார்பில் பெட்டிஷன் போட்டு வாதாடினார்களா? ஆனால் முதலமைச்சர் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போவோம் என்று சொல்லுகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனால் எத்தனை வருஷம் ஆகும்? கடலூரில் முதலமைச்சர் அவர்கள் பேசியபோது ரிசர்வேஷன் இல்லாமலே தேர்தலை நடத்தலாமா என்று யோசிக்கிறோம் என்று பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியும் இல்லாமல் நடத்தலாமா என்று யோசிக்கிறோம் என்ற வார்த்தையை நான் சொன்னது கிடையாது. அப்படி எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்ல விரும்புகிறார்களா என்று நான் கேட்டு இருக்கிறேன்.

*திரு. துரைமுருகன் : பத்திரிகையிலே வந்திருக்கிறது. இப்போது முதலமைச்சர் அப்படிப் பேசவில்லை என்கிறார்கள். நான் அதை ஒத்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் ரிசர்வேஷனோடு நடத்த முழு மனதோடு வரவேற்கிறேன். ஆனால் ரிசர்வேஷன் செய்ததில் குளறுபடி செய்திருக்கிறது இந்த சர்க்கார் என்பது எங்களுடைய கருத்து. குளறுபடி செய்த காரணத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்— தெளிவில்லாத சட்டங்களைப் போட்ட காரணத்தினால், தெளிவில்லாமல் ஒதுக்கியிருக்கிற காரணத்தினால்—வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். ஆகவே தேர்தல் ஒத்திவைப்பு முழு காரணம், முதற் காரணம், முற்றும் காரணம் முன்னாலே அமர்ந்திருக்கின்ற ஆளுங்கட்சியே. தேர்தலை நிறுத்திய பிறகு இப்போது மீண்டும் மசோதாவை கொண்டு வருகிற போது குறிப்பிட்ட அமைச்சரும், அரசாங்கமும் வருத்தத்தைத் தெரிவித்துவிட்டுத்தான் இதை மூவ் பண்ண வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு தயவு செய்து அவர்கள் இதை வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 8

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் நியமித்தல் திருத்த சட்டமுன்வடிவை என்ன காரணத்திற்காக கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரண விளக்கங்களை எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். இன்று உயர் நீதி மன்றத்திலே தடை பெற்றதன் காரணமாக வழக்குகள் போடப்பட்டு ஏறத்தாழ 340 வழக்குகளுக்கு மேலாக போடப்பட்டு அவையெல்லாம் நீதிமன்றத்திலே இருப்பதால் தான் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் ஆளுங் கட்சியின்மீது எப்படியாவது அவதூறு கூறவேண்டுமென்ற அந்த ஒரு எண்ணத்தோடு இங்கே ஒரு சில அவதூறுகள் அல்ல, தவறான எண்ணங்கள் ஏற்படுத்துகிற அளவுக்கு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்திலேகூட நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலை எத்தகைய எண்ணத்தோடு எந்த நல்ல காரணத்திற்காக உடனடியாக நடத்த வேண்டுமென்ற கருத்தோடு கொண்டுவரப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலை வாழ் மக்களுக்கும் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு தமிழக அரசால் செய்யப்பட்டது, முதன் முதலாக என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியிருந்தும் கூட, புரட்சிகரமான திட்டத்தை அரசு கொண்டுவந்துவிட்டால் நாளைக்கு நாட்டுமக்கள் பாக்கியுள்ள எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு இல்லாமல் செய்துவிடுவார்கள் என்ற எண்ணம்கூட பலருக்கு எழுந்தது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட ஐயப்பாட்டின் காரணமாக ஒரு சிலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கின்றார்கள். என்னிடத்திலே புள்ளிவிவரம் இருக்கிறது. 340 ரிட் மனுக்கள் யார் யார் போட்டார்கள், யார் யார் அதற்குக் காரணமாக இருந்தார்கள் என்பதை என்னால் குறிப்பிட முடியும்.

திரு. அ. ரகுமான்கான் : சார், ஒரே ஒரு விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் இப்போது வேண்டாம், அமைச்சர் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தினால் போதும்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரே ஒரு விளக்கம், நான் டிஸ்அப்ரூவல் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிஸ்அப்ரூவல் கொடுத்தால் எல்லாவற்றையும் இப்போதே பேசியாக வேண்டும் என்பது அல்ல.

திரு. அ. ரகுமான்கான்: நான் சட்டமுன்வடிவை எதிர்க்கிறேன்.



1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த சட்டமுன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நேரத்திலே விரிவாகவும் விளக்கமாகவும் நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லி இதை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி.

''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) ''திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1982

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம்செய்ய அனுமதி கோருகிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. அ. ரகுமான்கான்: Sir, I rise to oppose the introduction மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களால் இந்த மன்றத்தில் அறிமுகம் செய்யப்படுகின்ற இந்த பில்லை நான் மறுக்கிறேன். காரணம் நம்முடைய அமைச்சரிடத்தில் விளக்கம் கேட்க விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற அந்த நோக்கத்தை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். ஆனால் எந்த அடிப்படையில் அந்த இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது பெண்களுக்கு எவ்வளவு பர்சென்ட், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு பர்சென்ட் கொடுத்திருக்கிறீர்கள். ஜனத்தொகையின் அடிப்படையிலேயா? அல்லது எந்த அடிப்படையில், எப்படிப்பட்ட அடிப்படையில் அந்த அடிப்படையைப்பற்றி அமைச்சரவர்கள் முதலில் விளக்கி விட்டு அறிமுகம் செய்யலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆர்டினன்ஸைப் படித்திருப்பார்கள்.

This is based on the population and contiguous merits Contiguous the or as already been decided by the Supreme Court

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பாபுலேஷன் பேசிஸ் என்றால் பெண்களுக்கு 50 பர்சென்ட் ஒதுக்க வேண்டும். அதுதான் சென்சஸ். அது மட்டுமல்லாமல் இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி போக அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அந்த பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருப்பவர்கள் போட்டியிடலாமா! எந்த யூனிட்டின் அடிப்படையில் என்பதை எடுத்துச் சொன்னால் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த பில் விவாதத்திற்கு வரும்பொழுது இதைப்பற்றி பேசிக்கொள்ளலாம்.

THIRU A. RAHMANKHAN - I oppose the Bill.

MR. SPEAKER: You have got every right to oppose the Bill

திரு. அ. ரகுமான்கான்: சபை இருட்டில் இருக்கிறது அவ்வாறு இருக்கக் கூடாது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை நல்ல வெளிச்சத்தில்தான் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் கேட்கின்ற விளக்கங்களைப்பற்றித் தெளிவு படுத்திவிட்டால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே ஏற்கனவே சட்டத்திலே விளக்கமாகக் விளக்கங்களெல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதை எடுத்துக்கொள்ளும் நேரத்தில் விரிவாகப் பேசிக்கொள்ளலாம். ஆகவே சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சட்டத்திலே இருப்பது விளங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் வரும்பொழுது அதுபற்றிக் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மசோதா விளக்கம் இல்லாமல் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா வரும்பொழுது சபையில் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று அதற்காகத்தான் கேட்கப்படுகிறது. ஏற்றுக்கொண்டால் பிறகு அதைப்பற்றி விவாதிக்கலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1982 பிப்ரவரி 8

## (7) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவையினுடைய அவைத் தலைவரவர்களே, இன்றையதினம் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

வாடிக்கையாக ஆளுநர் அவர்கள் படிக்கின்ற அந்த அறிக்கையில் அரசாங்கத்தின் கொள்கைகள், அரசாங்கத்தின் திட்டங்கள், இந்த ஆண்டு ஆற்றவிருக்கும் பணிகள் பற்றிய விளக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு ஆளுநர் அவர்கள் ஆற்றி இருக்கும் உரையில் அப்படிப்பட்ட திட்டங்கள், கொள்கைகள் ஆகியவை அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அறிவிக்கப்படவில்லை. உள்ளபடியே நாங்களெல்லாம் வருத்தப்படுகிறோம். ஆளுநர் உரையில் புதுமை இல்லை ; புரட்சி இல்லை; எந்தவிதமான திட்டமும் இல்லை. ஆனால் ஆளுநர் உரையில் ஆண்டுக்கு ஆண்டு பக்கங்கள் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் உயிர்நாடியாக இருக்கும் விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு நியாயமான விலை வேண்டுமென்று பேராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்துகள் போன்றவைகளின் விலையைக் குறைக்க வேண்டுமென்று போராடுகிறார்கள். ஆனால் இப்பொழுதே ஆளுநர் அவர்களின் உரையில் அவைகளையெல்லாம் மத்திய அரசு செய்ய வேண்டும், அதற்காக நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பதுபோலச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இடையிலே இறக்கப்பட்ட நேரத்தில்—தேர்தல் நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தல் கூட்டங்களிலே பேசும்பொழுது எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தினாலேதான், எங்களுடைய ஆட்சி பதவியிலே இருந்து இறக்கப்பட்ட காரணத்தினாலேதான் விவசாயிகளுக்குத் தேவையான நன்மைகளைச் செய்து கொடுக்க முடியவில்லை என்று வலியுறுத்திப் பேசினார்கள்.





நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகளுடைய எல்லா கடன்களையும் ரத்து செய்வோம் என்று சொன்னீர்கள். ஆனால், சொன்னதைச் செய்யவில்லை. இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் சொன்னதைச் செய்யவும் இல்லை, செய்ததைச் சொல்லவும் இல்லை. என்பது நாடறிந்த உண்மை ஆகும். அந்த அடிப்படையில் பார்த்தால், இன்றைய தினம் இந்த அரசில் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்று சொல்கின்ற பொழுது விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். தேர்தல் நேரத்திலே கூடச் சொன்னீர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் கண்டிப்பாகக் குறைப்போம் என்று. குறைத்திருக்கிறீர்களா என்று எண்ணிப் பார்த்தால், குறைக்கவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக, விலைவாசிகள் விஷம் போல் உயர்ந்திருக்கின்றன. நாட்டு மக்கள், ஏழை மக்கள் உண்ண முடியாத அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், மத்திய சர்க்காரைக் காட்டுகிறீர்கள். ஆனால், தேர்தல் நேரத்தில் நீங்கள் மத்திய சர்க்காரைக் காட்டத் தயாராக இல்லை. ஏதோ நீங்கள் செய்யப் போவதைப் போல், மக்களை ஏமாற்றுவதற்காக அன்றைய தினம் பேசினீர்கள். இன்றைய தினம் விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னாலே ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். ஓட்டல்களுக்கு, காபி கடைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை நியாயமான விலையிலே கொடுத்து ஓட்டல் பண்டங்களுடைய விலையைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சரவர்கள் அறிவித்த உடனேயே அத்தனை பண்டங்களுடைய விலையும் அதிகரித்து விட்டன. அதற்குப் பின்னாலே, அதைக் குறைப்பதற்கு நிதியமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. 50 காசுக்கு விற்றுக் கொண்டிருந்த காபி, இன்றைய தினம் 75 காசாகிவிட்டது. சாதாரண தோசையின் விலை இன்றைய தினம் 75 காசு. சாதாரண வடையின் விலை 75 காசு ; ஏழைகள் சாப்பிட முடியாது. அதைக் குறைக்க நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்றால் இல்லை, தவறியிருக்கிறீர்கள். அதற்காக என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், நாங்கள் உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய பண்டங்களுக்கு, நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்காத நேரத்தில், நாங்கள் வாங்கக்கூடிய பொருள்கள் அத்தனையின் விலையும் உயர்ந்திருக்கின்றது என்பதை நாம் பார்க்கின்றோம். ஆனால், நாங்கள் கொடுக்கின்ற கட்டணங்களுடைய தொகை இப்பொழுது உயர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தில் மல ஜலம் கழிப்பதற்காக

கழிப்பிடங்கள் உள்ளன. அங்கு மலஜலம் கழிக்க முன்பு 10 காசு வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது 25 காசு வாங்குகிறார்கள். சிறுநீர் கழிக்க 5 காசு வாங்கிக் கொண்டிருந்தார்கள். இன்றைய தினம் 10 காசு வாங்குகிறார்கள். அதோடு, தாய்மார்களைக் கூட அங்கே கேவலப்படுத்துகிறார்கள். பேருந்து நிலையங்களில் உள்ள கழிவறைக்குப் பெண்கள் செல்லும்போது, நீங்கள் என்ன ஒன்றுக்குப் போகிறீர்களா, இரண்டுக்குப் போகிறீர்களா என்று கேட்கக் கூடிய கேள்வி, எப்படிப்பட்ட கேள்வி என்பதை தயவு செய்து இந்த மாமன்றத்து உறுப்பினர்களும் அமைச்சர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காசு வாங்குவதில்கூட கேவலப்படுத்தக்கூடிய நிலையை நாம் தமிழ்நாட்டிலே தான் பார்க்கிறோம்.

அதோடு, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல் நேரத்திலே சொன்னதை, அல்லது ஆட்சிக்கு வந்தவுடன் சொன்னதை இன்னும் நீங்கள் செய்யவில்லை. அதோடு, செய்ததை யாவது நீங்கள் சொல்லியிருக்கிறீர்களா, ஆளுநர் உரையில், வருத்தமாவது தெரிவித்திருக்கிறீர்களா, துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறதே இந்த ஆட்சியில். எவ்வளவோ சாதனைகளைச் சொல்லியிருக்கிறீர்களே. துப்பாக்கிச் சூடு நடந்து கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் 3 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இந்த ஆட்சியிலே இந்த மாதிரி சம்பவம் நடந்திருக்கிறது. அதற்காக நாங்கள் வருந்துகிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும். சொல்லத் தவறி விட்டீர்கள். அதோடு எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இந்த ஆட்சியில் விநோதமான போராட்டங்கள் நடந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு நேரத்தில் விவசாயிகள் கோவணம் கட்டிக் கொண்டு ஊர்வலம் வந்தார்கள். இன்றைக்குச் சில தினங்களுக்கு முன்னால், பெண்கள் கழுத்திலே காய்கறிகளை மாலையாகப் போட்டுக் கொண்டு, ஒரு கையிலே துடைப்பத்தை எடுத்துக் கொண்டு, ஒரு கையிலே சாணத்தை வாளியிலே எடுத்துக் கொண்டு ஊர்வலம் வந்தார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துங்கள், பெண்களைக் கேவலப்படுத்தாதீர்கள், பெண்களைக் குற்றவாளிகளாக, கேலிப் பொருளாக போடாதீர்கள் சினிமாவிலே, என்று ஊர்வலம் வந்தார்கள். அதையும் பார்க்கிறோம்.

(நண்பகல் 12.00)

இன்றைய தினம் கால்நடை ஆய்வாளர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, முக்காடு போட்டுக் கொண்டு ஊர்வலமாக வருவதாகவும், கோட்டையிலே முதலமைச்சரைச் சந்தித்து மகஜர் கொடுக்கப் போவதாகவும் அறிவிப்புகள் வந்து இருக்கின்றன. இவைகள் எல்லாம் நியாயம் தான். இன்றைக்கு அவர்கள் குறைகள் என்ன? நியாயமான கோரிக்கைகளை செயலாக்க வேண்டும் என்று ஆட்சியிலே உள்ளவர்கள் சிந்தித்தும்





பார்க்க வேண்டாமா? கால்நடை ஆய்வாளர்கள், 8 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கால்நடை விரிவாக்க அலுவலர் பதவி நீடிக்க வேண்டும்; கால்நடை சிகிச்சையாளர் சட்டம் திருத்தப்பட வேண்டும். கேந்திர கிராம நிலை 2ஆம் நிலை பதவிகள் முதல் நிலை பதவிகளாக மாற்றுதல்; தேர்வு நிலை கால்நடை ஆய்வாளர் ஊதிய சீரமைப்பு; ஆசிரியருக்கு வழங்கியது போல ஆய்வாளர் பயிற்சிக்கென ஊதிய உயர்வு; இருபதாண்டு பணி முடித்தோருக்கு சிறப்பு நிலை; கால்நடை பணி ஊதியம் பாகுபாடின்றி வழங்கல்; மருத்துவக் கிளை நிலையங்களுக்குப் பணியாளர் நியமனம் போன்ற 8 கோரிக்கைகளை, நியாயமான கோரிக்கைகளை அரசினுடைய கவனத்திற்கு வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டாமா? அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கால்நடை விரிவாக்க அலுவலர்களாக பணிபுரிந்து வரும் கால்நடை ஆய்வாளர்களை எடுத்து விட்டு, மாற்று ஏற்பாடு செய்து இருப்பதாகவும், அதற்கு முதலமைச்சர் இடையிலே தடை விதித்ததும், அதற்குப் பின்னாலே ஏதோ சதி நடந்து அந்த உத்தரவு மாற்றப்பட்டது என்றும் அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். எனவே இதனை ஆய்ந்து, உதவி மருத்துவ ஆய்வாளர்களுக்குச் சாதகமான நிலையை உருவாக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு இன்றைய தினம் உங்களுடைய சாதனையைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். முன்னாலே உலகத் தமிழ் மாநாடு சாதனையைச் சொல்லி இருக்கிறீர்கள். இந்த ஆண்டு பாரதியார் விழாவைப் பற்றி சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் சாதனைப் பட்டியலில் ஒன்றைச் சொல்ல மறந்து விட்டீர்கள். அதை நினைவு படுத்த வேண்டியது என்னுடைய கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்துவிட்டு இருக்கிறீர்கள். வெள்ளம்போல் கள்ளும், சாராயமும் ஓடிக்கொண்டு இருக்கின்றனகள், சாராயக் கடைகளைத் திறந்து விட்டதால் 150 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. இது புரட்சித் தலைவரின் சாதனை என்று பட்டியலில் சொல்லி இருக்கலாம்.

அதோடு மட்டுமல்ல, சினிமா கொட்டகைகளை ஏராளமாக திறந்திருக்கிறீர்கள். சைக்கிளில் 2 பேர்கள் போகலாம் என்றும் சொல்லி இருக்கிறீர்கள். இந்த 3 இனங்களையும் இணைத்து தமிழகத்திலே நடந்த ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன் என்னுடைய தொகுதியிலே, அரசு ஊழியர் ஒருவர் சினிமாவுக்குச் செல்லுகிறார். சினிமாவுக்குச் செல்லுகின்றபோது, சைக்கிளில் இரண்டு பேர்களை அழைத்துச் செல்லலாம் என்ற காரணத்தி

னால் தன் மனைவியையும் பின்னாலே ஏற்றிச் செல்லுகிறார். சைக்கிள் மிதிக்க வேண்டும் என்ற காரணத்தினால் சாராயத்தையும் கொஞ்சம் சாப்பிட்டார். போதை தலைக்கேறியதால் தடுமாறி விழுந்து, விழுந்த இடத்திலேயே இறந்திருக்கிறார். இது உங்கள் சாதனை இல்லையா? இந்த சாதனையை உங்கள் சாதனைப் பட்டியலிலே இணைக்கத் தவறி இருக்கிறீர்கள். இந்தக் கடைகளைத் திறந்ததன் காரணமாக தமிழகத்தில் எத்தனை தாய்மார்கள் தங்கள் தாலிகளை இழந்திருக்கிறார்கள். எத்தனை பேர்கள் பொட்டிழந்து, பூ இழந்து வாடிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த ஆட்சியிலே உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கப் போவதாக புரட்சித் தலைவர் தன்னுடைய தாயின் மீது சத்தியம் செய்தார். ஆனால் நடந்தது என்ன - எத்தனையோ தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை தயவு செய்து புரட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை, எனவே கொண்டு வருகின்றேன்.

அது மட்டுமல்ல, நீங்கள சென்னைக்கு தண்ணீர் கொண்டு வருகிறோம், கட்டளைக் கால்வாய் மூலம் கொணடு வருகிறோம் என்று சொன்னீர்கள். அதற்கு முன்னாலே கிருஷ்ணா நதியில இருந்து கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னீர்கள். மேலும் கட்டளைக் கால்வாய் திட்டத்தின் போது ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் பேர்களுககு வேலை தருவோம் என்றும், அதற்கு 459 கோடி ரூபாய் செலவாகும் என்றெல்லாம் சொன்னீர்கள். ஆனால் அவைகளைப் பற்றி இந்த ஆளுநர் உரையிலே ஒன்றும் காணப்படவில்லை. அதைப் பற்றிச் சொல்ல தவறிவிட்டீர்கள். காரணம் நீங்கள் மக்களைத் திசை திருப்பும் நோக்கத்தில்தான் சொன்னீர்களே தவிர, எந்தவிதமான திட்டத்தையும் நிறைவேற்றத் தவறிவிட்டீர்கள். இது வரையில் இந்த ஆட்சி எந்த விதமான திட்டத்தையும் அறிவிக்கவில்லை. திடீரென்று மக்களைத் திசை திருப்பும் நோக்கோடு தலைநகரை தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடையே மாற்றப் போகிறோம் என்று அறிவித்தீர்கள். அதற்கான அறிவிப்புகளாவது இதிலே வந்திருக்கிறதா என்றால் எதுவும் வரவில்லை. மக்களை ஏமாற்றுவதற்காக, விளம்பரத்திற்காக இப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லுகிறபோது, யார் யார் எப்படி எல்லாம் நிறைவு பெற்றிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல முடியும்.

கிராமப்புறங்களில் முன்னேற்றத்தைப் பற்றி நான் சொல்வேன். ஊராட்சி கடந்த 20, 25 ஆண்டுகாலமாக எப்படி முன்னேறிக் கொண்டு வருகின்றன என்பதை நான் நன்றாக

1982 பிப்ரவரி 8] [திரு. இரே. இராசமாணிக்கம்]

அறிவேன். 25 ஆண்டு காலமாக அவைகள் படிப்படியாக முன்னேறிக் கொண்டு வருகின்றன. உங்களுடைய ஆட்சி காலத்தில் மட்டும் முன்னேறியிருக்கிறது என்று சொன்னால் அதை எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியாது. சொல்லப் போனால், இன்றைய தினம் அவைகள் சீரழிந்து கொண்டு இருக்கின்றன.

தன்னிறைவுத் திட்டம் கூட என்னுடைய தொகுதியில் உள்ள ஒன்றியமான குத்தாலத்தில் செயல்படுத்தப்பட்டது. எந்த ஒரு சாலையும் சரியாகச் செயல்படவில்லை. எந்த ஒரு சாலையும் சரியாக அமைக்கப்படவில்லை. எல்லாச் சாலைகளும் சேரும் சகதியுமாக இருக்கின்றன. அதை என்னாலே நிரூபிக்க முடியும். எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஆனால் அப்படி எந்த விதமான வசதியும் செய்யப்படவில்லை. பல கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்படவில்லை. ஆனால் உங்கள் ஆட்சியில் சுடுகாட்டுக்கு மட்டும் பாதை அமைத்துக் கொடுத்து இருக்கிறீர்கள். மக்களுக்கு தேவையான சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் செய்து தராமல், ஏழை எளிய மக்களுக்குத் தேவையான இன்றியமையாத வசதிகள் செய்து தராமல், மின்சார வசதி செய்து தராமல் இருக்கிறீர்கள். அது குறித்து பத்திரிகைகளில் கூட நான் எழுதி இருக்கிறேன். அதை என்னால் நிரூபிக்க முடியும். ஆனால், சுடுகாட்டுக்குப் பாதை அமைத்து இருக்கிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மகளிர் நலன் காக்க ''நவீன கழிப்பிடங்கள்', கட்டப்படும் என்று சொன்னார்கள். எத்தனை இடங்களில் இந்த நவீனக் கழிப்பிடங்களைக் கட்டியிருக்கிறீர்கள் என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன். நவீனக் கழிப்பிடங்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 1—2 கட்டியிருக்கிறீர்கள். 1 லட்சம் தாய்மார்கள் இருக்கின்ற இடத்தில் ஒன்று, இரண்டு கட்டினால் போதுமா. அந்தப் பகுதியில் இருக்கின்ற அத்தனை பேரும் அங்கே சென்று தான் மலஜலம் கழிக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியாக இருக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதற்காக 10—15 மைல் கிராம மக்கள் சென்று வரமுடியுமா? இப்படிப்பட்ட முறையில் தான் இந்தத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் பற்றி யாராவது சிந்தித்துப் பார்த்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அது சரியாகச் செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு

இருக்கிறார்கள். சுடுகாட்டுக்குப் பாதை அமைப்பதுதான் தன்னிறைவுத் திட்டமா என்று கேட்கிறார்கள். சுடுகாட்டுக்குக் கூட பாதை அமைக்க முடியாத அரசாகத்தான் உங்களுடைய அரசு இருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனாலும், தன்னிறைவுத் திட்டப் பணிகள் எவ்வளவு வேகமாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகின்றன என்பதையும், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களோ தங்களுடைய ஒன்றியத்தையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரி என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்தப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெறுவதன் காரணமாகத்தான், தன்னிறைவுத் திட்டம் நல்லதொரு திட்டம் என்று பாராட்டுகின்ற வகையில் இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் கோடிட்டு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். எனவே அந்தப் பணிகளிலே ஏதாவது பணிகள் சரியாக நடைபெறவில்லை என்றால் தயவு செய்து அதைக் குறையாகச் சொல்லுங்கள், நான் ஏற்றுக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். ஆனால், திட்டம் நல்ல திட்டம் என்பதை இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பக்கத்து மாநிலத்தில் இருக்கும் அமைச்சர்கள் கூட இங்கே வந்து பாராட்டி விட்டுச் செல்லும் அளவிற்கு அந்தத் திட்டம் சீராக சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை நான் கோடிட்டுக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. இரெ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் திட்டத்தைப் பற்றி சொன்னார்கள். திட்டம் வரவேற்கக் கூடிய திட்டமாக இருந்தாலும், அதிலே நடைபெறும் காரியங்கள் மக்களுக்குத் தேவையான, பலன் உள்ள காரியங்களாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நடைபெற்ற வேலைகள் எதுவும் ஒழுங்காக நடைபெறவில்லை. கப்பி போடப்பட்ட சாலைகள் சகதிகளாக இருக்கின்றன. கருங்கல் போட்ட சாலைகள் கல்லை அள்ளிப் போட்டதுபோல் இருக்கின்றன. எனவேதான் சொல்லுகிறேன். இப்படி மக்கள் பணம் செலவழிக்கப்படுகிறபோது அவைகள் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகின்ற வகையில் இருக்க வேண்டும் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் 40,000 குடியிருப்பு வசதிகள் இலவசமாகச் செய்து தரப்பட்டன. ஆனால் இந்த ஆட்சி வந்த பிறகு 5,000 ரூபாய் கடன் வழங்கினார்கள், வீடுகள் கட்டிக்கொள்வதற்காக. பின்னர் அந்த 5,000 ரூபாயை 3,000 ரூபாய் என்று குறைத்தார்கள். எந்த காரணத்தினால்

குறைத்தார்கள் என்று தெரியவில்லை. இப்போது 4,000 ரூபாய் என்று உயர்த்தப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த 4,000 ரூபாய் போதுமானது அல்ல. அதை 8,000 ரூபாய் என்று உயர்த்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இன்றைய தினம் கடன் வழங்கப்பட்டு, கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் குட்டிச்சுவர்களாக முடிவு பெறாமல் இருக்கின்றன. அப்படி முடிவுறாமல் இருக்கின்ற வீடுகளை கட்டி முடிப்பதற்குத் தேவையான பணத்தை அரசாங்கம் கடனாக வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியிருப்பு மனைப்பட்டா வழங்கும்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அது நன்செய் நிலமாக இருந்தால் தூர்த்து மேடாக்கிவிட்டு, பட்டா வழங்கப்பட்டது. ஆனால் இந்த அரசு குடியிருப்பு மனைக்கு வழங்கும் பட்டாக்கள் அனைத்தையும் நன்செய் நிலங்களிலேதான் வழங்கியிருக்கின்றது. நன்செய்யாக, 4 அடி பள்ளத்தில் இருக்கிற நிலத்தில் கொடுத்தால் எப்படி ஏழை மக்களால் அங்கே வடு கட்டமுடியும்? மேலும் பட்டா வழங்கும்போது ஒரு கண்டிஷன் போடுகிறார்கள். 6 மாதத்திற்குள் வீடு கட்டி, குடி போகவில்லை என்றால் அந்த பட்டா ரத்தாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். நலிந்து போன மக்களால், 4 அடி பள்ளத்தில் இருக்கின்ற நன்செய் நிலத்தில் 500 ரூபாய்க்குமேல் செலவு செய்து தூர்த்து, மேடாக்கி, எப்படி வீடு கட்ட முடியும்? ஆகவே, இந்த இடங்கள் எல்லாம் இன்றைக்கும் தரிசாக கிடக்கின்றன. ஆகையால் இன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்றவர்கள் அந்த இடங்களை தூர்த்து, மேடாக்கி, வீடு கட்ட வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் அரசாங்க இயந்திரம் (மணியடிக்கப்பெற்றது)

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் வறட்சி தாக்கியிருந்தாலும், அந்த வறட்சியின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, வறட்சி நிலையால் மக்கள் துயருறாத வகையில் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததை நான் இங்கே நினைவுபடுத்தி இந்த மாமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வ. சத்தியமூர்த்தி] [1982 பிப்ரவரி 8

எந்த ஆண்டிலும் கிழக்கு முகவை மாவட்டத்திலிருந்து கோடைக்காலத்தில் தஞ்சை நோக்கி பஞ்சம் பிழைத்திட செல்வது வழக்கம். ஆனால் கடந்த ஆண்டு வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியிருந்தாலும் தஞ்சைக்கு பிழைப்புக் காகச் செல்லவில்லை. காரணம் அங்கேயே அவர்களுக்குக் தேவையான ஊதியம் அன்றாடம் கிடைக்கின்ற வகையில் வேலைகள் தங்குதடையின்றி கொடுக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல. உணவுப் பொருட்களையும் தங்கு தடையின்றி கிடைக்கச் செய்யும் வகையில் விநியோக முறைகள் சீராக அமைக்கப்பட்டன.

அது மட்டுமல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசின் பால் ஆளும் கட்சியின் உறவில் பிளவு இருந்த போதிலும்—அரசின் முயற்சியால் ஏறத்தாழ 48 கோடி ரூபாய் நமக்கு கிடைத்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏறத்தாழ 48 கோடி ரூபாயை வறட்சி நிவாரணப் பணிக்கு செலவு செய்ய அனுமதியை பெற்று, வாங்கித்தந்தார்கள்.

அதே நேரத்தில் இன்றைய எதிர்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சராக இருக்கும்போது அவர்கள் எடுத்த நடவடிக்கையை இங்கே ஒப்பிடவிரும்புகிறேன். தமிழகம் வறட்சியின் கோரப்பிடியில் இருந்தபோது தன்னுடைய சொந்த காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக ஒன்றைச் சொன்னார். நிதி அமைச்சராக சி. சுப்பிரமணியம் இருக்கும் வரையில் நான் நிதி கேட்கமாட்டேன் என்று சொன்னார். அந்த நிதி கிடைக்காத காரணத்தால் பாதிக்கப்பட்டது யார்? இந்த தமிழக மக்கள் தான் அவருடைய முடிவால் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மக்களுக்காக தன்னுடைய சுய உணர்வைக்கூட விட்டுக்கொடுத்து, மத்திய அரசோடு நெருங்கிய தொடர்பு கொண்டு சுமார் 48 கோடி ரூபாயைப் பெற்றுத் தந்தார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இன்னொன்று. உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக மதுரை மாநகரில் நடைபெற்றது. அது பெரும் திருவிழாவாக கொண்டாடப்பட்டது என்பது இந்த தமிழகம் அறிந்த உண்மை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யாரும் அந்த விழாவிலே பங்குபெற்றிருக்கவில்லை. அந்த உலகத் தமிழ் விழாசிறப்பிக்க வைக்கக்கூடாது என்று [illegible]

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மதுரை மாநகரிலே உலகத் தமிழ் விழா நடைபெற்றபோது வரவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை.

** ** ** **

(பிற்பகல் 12-20)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது எங்களை மட்டும் அவமானப் படுத்தும் காரியமல்ல ; குற்றச்சாட்டு வேறு, அவமானப்படுத்துவது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தகைய கருத்துக்கள் அவைக் குறிப்பில் இடம் பெற்றிருக்குமானால், திரு சத்திய மூர்த்தி அவர்கள் பேசியதையும், அதைத் தொடர்ந்து பேராசிரியர் அவர்கள் பேசியதையும் இடையில் உள்ள குறுக்கீடுகளையும் அவை அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன். அவை எந்தப் பத்திரிகையிலும் வரக்கூடாது.

திரு. துரை முருகன் : பல பத்திரிகைகளில் தாங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ததைப் போட்டுவிடுகிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பெற்ற பகுதிகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டால் அதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நாம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல்கள் பொறுத்தவரையில், காசு கொடுத்தால் வழக்காடக்கூடியவர்கள் வழக்கறிஞர்கள். நீதிமன்றத்தில் எந்த வழக்கறிஞர் வாதாடினார் என்பதை முடிவு செய்வதைக் காட்டிலும் யார் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு கேட்டார்கள் என்ற புள்ளி விவரத்தை எடுக்கப்போனால் 98 சதவீதம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும்தான் நீதிமன்றம் சென்று ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றிய தேர்தல்களுக்கு தடை உத்தரவு தனிப்பட்ட முறையில் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எந்த ஒரு நபராவது நீதிமன்றம் சென்று தடை வாங்கினார்களா என்று நிரூபிக்க முடியுமா என்றால் முடியாது என்று என்னால் சொல்லமுடியும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12-15—12-20) நீக்கப்பெற்றது.

[1982 பிப்ரவரி 8

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 98 சதவிகிதம் போனார்கள் என்று சொல்கிற புள்ளி விவரம் ஆதாரமற்றது என்பது மட்டுமல்ல. ஆளும் கட்சிக்காரர்கள் அமைச்சர் அவர்களிடத்தில் சென்று தேர்தல் நடக்காமல் பார்த்துக் கொள்ள கேட்டுக் கொண்ட காரணத்தால் அவர்கள் நீதிமன்றங்களுக்குப் போகவில்லை என்ற உண்மையும் எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து ஸ்டே வாங்கினார்கள் என்று அவர்கள் சொன்னதாக எனக்குத் தெரிகிறது. (குறுக்கீடுகள்) அப்படி அவர் சொல்லியிருந்தால் அது தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஆளும்கட்சி மீது ஒரு அவதூறை இப்போது கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல் "அமைச்சர் முதலிலே சொன்னதால் இவர்கள் எல்லாம் போய் ஸ்டே வாங்கவில்லை" என்ற அவதூறைக் கூறுகிறார்கள். ஆனால், அதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெரிவிக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு முன் நின்று, தடை போடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்தது என்பதற்கு, என்னிடத்திலே எக்கச்சக்கமான ஆதாரங்கள் இருக்கின்றன. (குழப்பம்)

தலைவர் அவர்களே, ஆகவே, இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இப்படித் தடை வரும் என்று தெரியும். அதனால்தான் அவர்கள் ஸ்டே வாங்கவில்லை என்ற முறையிலே இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைக்கு முரணானது. உண்மைக்குப் புறம்பானது. ஆகவே, இது யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆனால், அதே நேரத்தில் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற யார் யார் ஸ்டே வாங்கி இருக்கிறார்கள் என்ற உண்மை என்னிடத்திலே இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று, தைரியமாக நடத்த வேண்டுமென்று, ஆணித்தரமாக முன் வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆகவே, நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட பகிரங்கமான

1982 பிப்ரவரி 8] [திரு. ப. குழந்தை வேலு]

கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன ஒரு குற்றச் சாட்டை, இந்தக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொன்னதாகச் சொல்வது சரியல்ல. நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னது, ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் அமைச்சரிடத்திலே கேட்டுக் கொண்டார்கள் என்றுதான் சொன்னேன் ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் அமைச்சரிடம் சொல்லி, தேர்தலை நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொண்ட நிலைமையில், அவர்கள் ஸ்டே வாங்குவதற்குப் போகவில்லை என்று சொன்னேன். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுக்கலாம். அது வேறு. ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் எங்கள் கட்சியிலே உள்ளவர்களோடு பழகுகிறார்கள். தேர்தலைப் பற்றி அக்கறைப் படவில்லை; தேர்தல் நடக்காது; நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள் என்று பதில் சொன்னார்கள். அப்படி சொல்லக்கூடிய சூழ்நிலை, சந்தர்ப்பம் இருந்தது.

எதிர்க் கட்சியிலே இருந்து அல்லது எந்தக் கட்சியிலே இருந்தும் தனிப்பட்ட முறையில ஸ்டே வாங்குவது என்பது அவரவர்கள் குடியுரிமை; சிடிசன் ரைட். அவரவர்கள் தொகுதியிலுள்ள நிலைமையை அனுசரித்து அவர்கள் ஸ்டே வாங்குகிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் வாங்கலாம்; அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தவரும் கேட்டிருக்கலாம். ஒரு தொகுதியில் தாழ்த்தப்பட்டவரை நியமிப்பதால் அல்லது ஒரு தொகுதியில் தாய்மாரை நியமிப்பதால் அதனால் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு ஸ்டே வாங்குவது என்பது வேறு. மொத்தமாக தேர்தலை நிறுத்துங்கள் என்று ஸ்டே வாங்கினால் அது தவறான காரியம். அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கவில்லை. தனிப்பட்டவர்கள், அவரவர்கள் தொகுதிகளின் நிலைமைக்கேற்ப டிஸ்டிரிட்டிக்கு மாறுபாட்டிற்கு ஏற்ப, நிலைமைகளுக்கு ஏற்ப, அந்த அடிப்படையில் ஸ்டேக்குப் போகிறார்கள் இதற்கு முன்னாலே அரசாங்கமே இப்படிப்பட்ட வேண்டுகோளை நினைவில் கொண்டு, சில தொகுதிகளில் மாற்றி அறிவித்திருக்கிறார்கள். முதலில் வந்த நோடிபிகேஷனுக்கும், கடைசியில் அறிவித்த அறிவிப்பிற்கும் மாறுபாடு இருக்கிறது; அப்படி அறிவித்திருக்கிறார்கள். எனவே, ஸ்டே வாங்குவது என்பது தனிப்பட்டவர்கள் உரிமை. அந்த முறையில பலர் வாங்கியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்களும் அப்படி செய்திருக்கிறார்கள். எனவே, அது கட்சியினுடைய மொத்த கொள்கை அல்ல. தனிப்பட்டவர்கள் பிரச்சினை அவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று, வாதாடுகிறார்கள்.

அப்படி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக வாதாடிய வக்கீல் நடராஜன் அவர்கள் மொத்தமாக தேர்தலை நிறுத்தாதீர்கள்; அந்தந்த தொகுதியில் பிரச்சினையை அனுசரித்து, மற்றத் தொகுதிகளுக்கு தேர்தல் நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒருவேளை இவர்களுக்கு முன் கூட்டியே தெரிந்திருந்தால், அப்படி ஸ்டே வாங்கவில்லை என்பதுதான் இதன் பொருளாகும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆளும் கட்சிக்காரர்கள் ஏற்னேவே தெரிந்துதான் தடை வாங்கவில்லை என்று சொன்னால் நீதிமன்றம் ஆளும் கட்சி சொல்லுவதை எல்லாம் செய்து கொண்டிருக்கிறது என்ற பொருளைத்தான் இது காட்டுகிறது. அப்படித்தான் வைத்துக் கொள்ளவேண்டும். பொதுத் தடை வரும் என்று எதிர்பார்த்தோம் என்றுதான் பொருளாகும். ஆகவே, நீதிமன்றத்தைக் குற்றவாளியாக்குகின்ற நிலையைத்தான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் நீதிமன்றத்தைக் குற்றம் சாட்டிப் பேசவில்லை. ஸ்டே கேட்பது எல்லோருக்கும் இருக்கும் உரிமை என்றுதான் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தத் தேர்தல் நடக்காது நடக்காது என்று சொல்லிக்கொண்டிருந்தவர் யார் என்று துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் தேர்தல் வரும் என்று சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் தேர்தல் வராது என்று சொல்லிக் கொண்டிருந்தவர் எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்தான் என்பதை மறந்து விட வேண்டாம். இந்தத் தேர்தலை நடத்தக்கூடாது என்ற எண்ணம் அவரிடத்திலே இருந்ததே தவிர வேறு யாரிடத்திலும் இல்லை. இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று முனைப்பாக நாங்கள் செயல்பட்டோம். தேர்தல் நடக்காது என்று அப்போதும் கூடச் சொன்னார்கள். இட ஒதுக்கீடுகள் செய்துவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேலை இல்லை என்ற நிலை வந்துவிட்டதன் காரணமாக எதிர்க்கட்சியினராகிய நீங்கள் போய் தடை வாங்கியிருக்கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர் ஒருவர் கூடப் போய் பொதுத் தடை கேட்கவில்லை. 340 ரிட் மனுக்களில் பொதுத் தடை வேண்டுமென்று ஆளும் கட்சிக்காரர்கள் கேட்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள் என்பதற்கு என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை

ஏற்படுத்தி தடையைப் பெற்றுவிட்டு தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்தை முழு விவகாரமாக ஆக்கு கிறபோது எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருந்து கொண்டு விடையளிக்காமல் இருக்க முடியாது. திராவிட முன் னேற்றக் கழகம் முழுத் தடை கூடாது என்று வாதிட்டு இருக்கிறது தனிப்பட்ட வழக்கறிஞர்கள் வாதாடுவதற்குத் திராவிட முன்னேற் றக் கழகம் பொறுப்பல்ல. திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகக் கடமை என்ற காரணத்தால் கூடாது என்ற வாதத்தை நீதி மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் அல்லாமல் வேறு யாராவது அப்படி வாதிட்டிருந்தால் அது வேறு. திராவிட முன்னேற்றக் கழகம் மொத்தமாக நிறுத்தும்படி வாதாடினார்கள் என்பதை வாய்ப்பு இருக்கும் போது நிரூபிக்கலாம், அதைப்பற்றித் தடை இல்லை. ஆளும் கட்சி தேர்தல் நடைபெறும், நடைபெறாது என்று கருத எது காரணம் என்றால், அவர்கள் செய்திருக்கும் காரியங் கள் தேர்தலை முழுவதும் நடைபெறவிடாது, நடைபெற வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்று திட்டவட்டமாக அறிந்து செய்திருக்கிறார்கள். ஒதுக்கீட்டு முறையைக் கையாண்ட முறை மட்டுமல்ல, நீதிமன்றத்தில் வாதத்தில் ஈடுபட்ட முறை களும், கையாண்ட முறைகளும் இந்தத் தேர்தல் நடைபெறாது என்ற எண்ணத்தை உருவாக்க நிறைந்த வாய்ப்பாக இருந்திருக் கிறது. ஆகவே, இது ஆளும் கட்சியின் குறையின் மொத்த விளைவே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. திரு. ஹாஜா செரிப் அவர் கள் இப்போது பேசுவார்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார் கவர்னர் பெருமான் அவர்கள் இந்தச் சபையின் முன் ஆற்றிய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். பொதுவாக இந்த அரசாங்கம் என்னென்ன செய்தார்கள், என்னென்ன செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் எடுத்துக் கூறினார்கள். அதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இந்த ஆண்டு பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெற்றிருக்கிறது பாரதியார் உலகக் கவி என்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள் கிறோம். பாரதியார் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்திருந்தாலும் கூட மிகுதியாக சென்னை மாநகரத்தில் திருவல்லிக்கேணி வட்டாரத்தில் குடியிருந்து வந்தார்கள் அங்கேதான் இருந்தார்கள், படித்தார்கள் செயல்பட்டு

வந்தார்கள். சிலகாலம் பாண்டிச்சேரியில் போய் இருந்தார்கள். இந்த பாரதியார் நூற்றாண்டு விழாவின்போது திருவல்லிக்கேணியில் வசித்து வந்த வீட்டைப் பொது நூலகமாக அமைத்து நல்லபடியாக மக்கள் அங்கு சென்று படிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதுமட்டுமல்ல, பாரதியார் நூல்களை பல மொழிகளிலே மொழிபெயர்த்து அந்த அந்த மாநிலங்களிலே பரவலாக மக்கள் அறியச் செய்யவேண்டிய முயற்சிகளை அரசாங்கம் மேற்கோள்ள வேண்டும். பல பொயட்டுகளின் நூல்கள் பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு மக்கள் நல்ல முறையிலே அவற்றை அறியச் செய்ய வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள், அதையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று திருவல்லிக்கேணி மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பாரதியார் வசித்த வீட்டை—அது இப்போது அவருடைய குடும்பத்தாரிடம் இல்லை—வேறு ஒருவர் வைத்திருக்கிறார், அவர் அதை செம்மையாகக் கட்டியிருக்கிறார், இருந்தாலும்கூட, அதை அரசாங்கம் வாங்கி ஒரு பெரிய நூலகம் நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப் பற்றி ஆளுநர் உரையிலே கூறியிருக்கிறார்கள். விவசாய உற்பத்திக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் அத்தியாவசியமானது என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

I am very happy, Mr. Speaker, that the Governor has said that at Ennore there is going to be a proposal to generate 1050 M.W. in 5 stations. Sir, I have already spoken in this House that Ennore should be made a minor port instead of allowing the Steamers to come to Madras, discharge the coal and take the coal to Ennore. If the steamers are berthed at Ennore itself, it will be a great advantage to bring coal around Thermal stations. I have also said Mr. Speaker, Sir, in this Assembly that at every minor port the Government should instal a small thermal station of 100 to 120M.W Capacity. I suggest that instead of installing 5 thermal stations at Ennore, the Government could consider whether they can instal 2 stations at Ennore, one in Cuddalore, one in Nagapattam and one in some other place, so that the Electricity produced can be made available to each district and the balance put into the grid.



மேலும் ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், மின்சார போர்டின் நிதிநிலை மோசமாக இருக்கிறது, 100 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம், இனிமேல் கொடுப்பதற்கு சாத்தியமில்லை, அதற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கிறபோது எலக்ட்ரிசிடி டாரிப் அதிகமாக இருக்கும்போல் இருக்கிறது. எலக்ட்ரிசிடி சீராக இப்போது இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வசூல் செய்யப்படும் மின்சாரக் கட்டணம் என்று பத்திரிகைகளிலே செய்திவந்தது. அது தவறான முறை. இதற்கு முன்னால் எவ்வளவு மின்சாரம் கன்சம்ஷன் ஆகியிருக்கிறது என்பதைப் பார்த்து பில் அனுப்புவார்கள், அதற்கு மின்னார் உபயோகிப்போர் அதைப் பார்த்து பணம் அனுப்புவார்கள். அந்த முறையில்லாமல் 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை உபயோகிப்போர் பணம் கட்ட வேண்டுமென்றால் மிகவும் கஷ்டமாக இருக்கும். நான் அறிந்த வரையில் எலக்ட்ரிசிடி போர்டில் ஏராளமான கிளார்க்குகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலையின் அளவுக்கு மேல் இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அதை சீராக்க expertise ஒன்று வைத்து எந்த எந்த டிபார்ட்மெண்டிலே எவ்வளவு, எவ்வளவு தேவை என்பதைப் பார்த்து ஏற்பாடு செய்தால் இதிலே நட்டத்தை தடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் கம்யூனிஸ்ட் கட்சி உப தலைவர் திரு. உமாநாத் அவர்கள் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவைப் பற்றி குறைகளை எடுத்துச் சொன்னார்கள். Mrs. Indira Gandhi is not a true Democrat என்றும் சொன்னார்கள். 30 வருட காலத்திலே எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை என்று சொன்னார்கள். 30 வருட காலமாக எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை என்று சொல்வாரானால் முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது மாதிரி அது ஆகும். 30 வருடத்திற்கு முன்னாலே நம் நாட்டின் நிலைமை எப்படி இருந்தது, நம்முடைய மாகாணத்தின் நிலைமை எப்படி இருந்தது, இந்த சிடியின் நிலைமை எப்படி இருந்தது இப்போது 30 வருட காலத்திலே எவ்வளவு பிரம்மாண்டமான தொழிற்சாலைகளும் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள், லட்சக் கணக்கான சிறு தொழில்கள் நாட்டிலே பெருகியிருக்கின்றன என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

முப்பது வருடங்களுக்கு முன்னால் நாம் என்னென்ன சரக்குகளை வெளி தேசங்களிலிருந்து இங்கே கொண்டு வந்து வைத்திருந்தோம்; இப்போழுது அதே சரக்குகளை நாம் பண்டங்கு உற்பத்தி செய்து, அதைவிட மற்ற சரக்குகளையும் உற்பத்தி செய்து நமது தேவைக்குப் போக மீதி உள்ளதை ஏற்றுமதி செய்கிறோம்.

It is a fact which cannot be denied. I wish that my esteemed friend Mr. Umanath and his collages should understand this. They said about the Prime Minister. Can I say Sir, without being contradicted, that she is one of the outstanding democrats of the whole world and one of the outstanding leaders of the world. The very fact that she is being invited by the World Assembly, by the World Council, and by the whole group to come and deliver lectures is an ample proof of that.

**Thiru R. Umanath :** Mr. Speaker, " I am asserting and I think nobody will contradict me." என்று திரு. ஹாஜா செரிப் அவர்கள் சொன்னார்கள். யாரும் மறுக்க மாட்டார்கள். என்று சொன்னார்கள். அதனால்தான் நான் எழுந்திருக்கிறேன் இல்லாவிட்டால் அவர்கள் சொல்வதை சொல்லட்டும், நாங்கள் பேசும்பொழுது பேசுவோம் என்று இருந்திருப்பேன். இந்த உலகத்திலேயே பெஸ்ட் டெமாக்கிராட் என்பதை நாங்க காண்டரடிக்ட் பண்ண மாட்டோம் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன் இந்த உலகத்திலே one of the worst autocrats and authoritarians நம்முடைய பிரைம் மினிஸ்டர் என்று தான் சொல்கிறேன்.

**THIRU K. S. G. HAJA SHERIFF :** Ours is a true democratic state where we have given freedom of speech, freedom of expression, freedom of talking and freedom of writing. We know what the strength of the communists is in the whole world, particularly in our country, particularly in our Tamil Nadu. If my esteemed friend, can say that Mrs. Gandhi is not a democrat and that she is an autocrat, it is his opinion. The fact that we have allowed these opinions to come out, is ample proof, that our country is dominated by democratic, ideals. do not want to go further into the matter.

Sir, I am very happy when the Industries Minister had said that for the industrial development of our State, a team is going to visit the Persia Gulf Port to request the financiers there to come over here and try t invest here.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

May I tell Mr. Chairman, that before he plans to go to Persian Gulf Port, he should try to go to places where our people are in affluent circumstances. Our people who are in affluent circumstances, are in Malayasia, Singapore, Indonesia, Hong Kong and other places also. I wish an attempt is made to go to such places try to explain to them our developmental programmes



and bring them to our side. He maysee that they invest here. The people in Persain Gulf Port would like to know what our people have done, before we go to them for their assistance. This should be taken care of.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் எங்கெங்கே தொழில் பேட்டைகளைத் தொடங்கியிருக்கிறார்களோ, தொடங்கப் போகிறார்களோ அங்கெல்லாம் இன்ப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ் மிகவும் அரைகுறையாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

Hosur is one of the best industrial estates. There are umteen number of industrial estates. But, I am very sorry to say that the infrastructure facilities at Hosur are absolutely very very inadequate. I have said this before this Assembly even last time. There is no water, there are no facilities for the workers to stay there, there are no marketing facilities, there are no schools for the children to go and study. Insufficient energy is being supplied.

எத்தவொரு பகுதியிலேயும் தொழில்பேட்டை வெற்றிகரமாக முடிய வேண்டுமென்றால் அங்கே தொழில்பேட்டை வருவதற்கு முன்னால் அல்லது வந்து கொண்டிருக்கும்பொழுது, அங்கே வேலை செய்யக்கூடிய மக்களுக்குப் பெரிய கட்டிட வசதியைச் செய்து கொடுக்க வேண்டும்; ரோடுகள் பராமரிப்பு செய்யப்பட வேண்டும்; மின்சார வசதி இருக்க வேண்டும். இவைகளை அவசியம் செய்ய வேண்டியது மிகவும் முக்கியமான காரியங்கள் ஆகும். அதை விட்டுவிட்டு இவர்கள் இந்த வசதிகளெல்லாம் இல்லாமல் செய்தால் அதனால் ஏற்படும் கஷ்டங்கள் பல இருக்கின்றன.

[பிற்பகல் 12.50]

அங்கே இரண்டு பெரிய தொழிற்சாலைகள் மாதக் கணக்காக மூடி இருந்தன. எந்தத் தொழிற்சாலையில் எந்தக் கஷ்டம் ஏற்பட்டாலும், அரசாங்கம் உடனுக்குடன் சென்று, அதைத் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். தீர்க்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தொழில் செய்ய ஒரு தைரியமும் ஊக்கமும் ஏற்படும். அப்படி இல்லாமல் அவர்கள் மாதக் கணக்கில் விட்டு விடுவார்களானால் கோடிக்கணக்கான முதலீடு போடுபவர்களுக்கு எந்தவிதமான தைரியமும் வராது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதை அவசியம் கவனிக்க வேண்டுமென்றும் [illegible] கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்) [1982 பிப்ரவரி 8

எனக்கு முன் பேசிய கனம் சத்தியமூர்த்தி அவர்கள் தேர்தல் வழக்கில், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து, தேர்தலை நிறுத்த வேண்டுமென்று வாதாடியதாகச் சொன்னார். அந்தச் செய்தி மிகவும் தவறு என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எனக்குத் தெரிந்தவரையில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் யாரும் அங்கே கோர்ட்டுக்குச் சென்று அந்த எலக்ஷனை போஸ்ட்போன் செய்ய வேண்டும்; அல்லது, அதனை ரத்து செய்ய வேண்டும், அல்லது அந்த எலக்ஷனுக்கு ஸ்டே கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கோரவில்லை. ஆகவே, அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டுமென்று கோரி, அதற்குமேல் அவரிடத்தில் ஏதாவது தகவல் இருக்குமானால், அதைக் குறிப்பிடுவார்களானால், அதை அவசியம் கவனிக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில், அவசியம் தேர்தல் வர வேண்டும். ஊராட்சிக்கு மட்டுமல்ல, சிட்டி கார்ப்பரேஷனுக்கும் தேர்தல் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ரிபப்ளிக் டே அன்று, கனம் முதலமைச்சர் அவர்கள் கோட்டையில் ஏறி நின்று அவசியம் இந்த ஆண்டு கடைசிக்குள் ஊராட்சி மன்றங்களுக்கும் கார்ப்பரேஷனுக்கும் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு நான் மிகவும் சந்தோஷப் பட்டேன்.

By some hook or crook this election is going on postponed. I do not know why? We want that the election should be done in a very smooth and perfect manner, so that the whole State, our Panchayat Boards Municipalities and Corporations, should function very well for the benefit of the people.

I am extremely sorry Mr. Chairman, to say about the condition of our city. This City which was one of the best cities once upon a time has become the worst city now.

I am very grateful to my esteemed friend Hon'ble Minister for Local Administration, for his visit to my Constituency about 7,8 months ago. He spent about 3 hours there. I took him around the Constituency. Many Corporation officials also accompanied him. They had noted down all the grievances. There was no electricity. There was no water facility or proper sanitation or proper road, etc. All these things were noted down by the officials. I thought that as the Minister visited and the officials came behind him, they would do the needful. But it is most unfortunate that in spite of my many reminders, nothing has been done. Not even 10 per cent of these lapses have been rectified. This is a very sorrowful state of affairs. This City is an international city. Many people of international origin come here; thousands of people come here;



1982 பிப்ரவரி 8] (திரு கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரிப்)

thousands of Seamen of all Nationalities come here; Thousands of Crew from other countries come here; All the Air-crews of various countries come here; many thousands of tourists are coming here. I am sorry to point out, that this is the state of affairs prevailing to-day. The Minister had said that the Revenue of the Corporation is not much to offset all these difficulties. But this I have been hearing for the past two years.

இரண்டு மூன்று வருஷங்களாக இதையேதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷனுக்குப் போதுமான நிதி வசதி இல்லை. அந்த நிதி வசதி இருந்தால் அவசியம் நாங்கள் செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிதி பெறுவதற்கு என்ன செய்வது என்று ஏன சொல்லவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. சொல்லிக் கொண்டேயிருந்தால் நிலைமைகள் இன்னும் சீர்கெட்டுக் கொண்டே இருக்குமே தவிர, சீர்படாது. இன்று எங்கு பார்த்தாலும்...

.........................

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேல்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாநகராட்சியைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கனவே அறிவித்து இருக்கிறேன். பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் சட்டசபை நடந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு நாளும், ஒரு வட்டத்துக்கு நான் நேரடியாகச் செல்ல இருக்கிறேன். இன்றைக்கும் கூட 119ஆம் வட்டத்திற்கு நான் செல்லுகிறேன். வட சென்னை, தென் சென்னை என்று மாற்றி மாற்றி, ஒவ்வொரு நாளும் சென்று நேரிலே மக்களுடைய குறையைக் கேட்டு, அங்கே அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு உடனடியாக 'ஸ்பாட் டெசிஷன்' எடுப்பதற்காக என்னுடைய நிகழ்ச்சிகள் பத்திரிகைகளிலே விவரமாக அறிவித்து இருக்கிறேன்.

ஆகவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே இருக்கின்றவர்கள், அவர்களும் இதற்கு உதவி செய்வார்கள் என் கருதுகிறேன். இவர்களையும் கூட இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து நான் போகின்ற நேரத்தில் நீங்களும் எனக்கு உதவிகரமாக இருந்து எந்தந்தப் பகுதியிலே சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ எந்தந்தப் பகுதிகளுக்குச் சீரமைப்புத் திட்டம் தேவை என்று சொல்லுகின்றார்களோ அந்தப் பகுதிகளை எல்லாம் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வதோடு, இந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற நேரத்தில் மக்களுக்கு நாம் என்னென்ன செய்ய முடியுமோ அவைகளை காலதாமதமில்

செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தக் கடமை உணர்வோடு நான் இருக்கிறேன். கண்டிப்பாக இதிலே யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இன்று மாநகராட்சி எல்லைப் பகுதிகள் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தி, இன்று காமராஜர் சாலை முழுவதும் (Litter free zone) என்றும் அதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவித்து இருக்கிறோம். அதே போல தங்கள் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்கு உதவி செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளுக்கு செல்கிறார் என்று முன்கூட்டியே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாயின்ட் ஆப் ஆர்டர்......

**மண்புமிகு மாற்றுத் தலைவர் :** திரு. ப. வெங்கட சுப்பிரமணியம்) தயவு செய்து உட்காருங்கள், திரு. ஹாஜா ஷெரீப் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் : :** தயவு செய்து ஒரு நிமிடம் பேச அனுமதிக்க வேண்டும். திரு. அழகர்சாமி அவர்களும் பேசியிருக்கிறார்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : :** சார், அமைச்சர் அவர்களுடைய நல்ல திட்டத்திற்கும், நல்ல முயற்சிக்கும் என்னுடைய பாராட்டுக்கள். ஆனால் நல்ல எண்ணங்கள் இருந்தால் மட்டும் போதாது. செயல்படுவோம் என்ற உறுதி இருந்தால்மட்டும் போதாது ; நடைமுறையில் அவசியம் செயல் பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல ; எப்படி தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம் செய்கிறாரோ அதைப் போல இந்த சிட்டியில் அவர் சூறாவளிப் பயணம் செய்து, எந்த எந்த டிவிஷன்களில் எப்படி இருக்கிறது என்று பார்ப்பாரானால் மிக நன்றாக இருக்கும் அவசியம் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொற்று நோய் பரவலாக இருக்கிறது. அம்மை நோய் பரவலாக இருக்கிறது. வியாதிகள் மிகுதியாக இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும் என்றால் தெருக்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். (குறுக்கீடு)



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார். அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட்டு மாண்புமிகு அமைச்சர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். எனவே மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா ஷெரீப் பேச்சை ஒட்டித்தான் குறுக்கிட வேண்டுமே தவிர, அமைச்சருக்குப் பதில் தர முடியாது. அவர் பேச்சை இவர் குறுக்கிட்டு, இவருடைய பேச்சினை மற்றவர்கள் குறுக்கிட்டால் அவை நடவடிக்கை தடைப்படும். எனவே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் வேறு வாய்ப்பு கிடைக்கும் போது மாண்புமிகு அமைச்சரின் கருத்துக்களுக்குப் பதில் சொல்லலாம். அதுதான் முறை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் தயவு செய்து உட்கார வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் எல்லாம் இப்போது வராது.

[பிற்பகல் 1—00]

**திரு. அ. ரகுமான்கான் :** நான் தற்போது ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன்.

**மண்புமிகு பேரவைத் தலைவர் ;** சில முறைகளை உறுப்பினர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். எதிர்வரிசையிலே இருக்கின்ற ஒரு கட்சித் தலைவர் பேசிக்கொண்டு இருக்கிறபோது, இடையிடையே '' பாயின்ட் ஆப் ஆர்டர் '' எழுப்பிக்கொண்டு இருந்தால் அது முறையல்ல. இப்போது இந்த முறை கடைபிடிக்கப்பட்டால், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இந்த முறை பின்பற்றப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் உட்காரவேண்டும்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் :** இந்த அமைச்சரவைக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்கள் நல்லெண்ணத்தோடு செயல்பட்டால் மட்டும் போதாது. நல்ல பலன் உண்டாகும் அளவிற்கும் காரியங்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்] [1982 பிப்ரவரி 8

I do not think any scheme can be successful, unless we see that it is properly implemented.

அதே மாதிரி அவர்கள் ஒவ்வொரு டிவிஷனாகப் போகிறார்கள். எப்படி எலெக்ஷன் நேரத்தில் மாண்புமிகு ச்ப் மினிஸ்டர் அவர்கள் சூறாவளிப் பயணம் செய்கிறார்களோ அதே மாதிரி சிட்டியிலும் அவர்கள் சூறாவளிப் பயணம் மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு டிவிஷனிலும் முக்கியமாக மார்க்கெட்டில் சென்று பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் சிடி பியூட்டிபுல்லாக இருக்க வேண்டும், நம்முடைய மாநிலம் எல்லா விதத்திலும் சிறந்த மாநிலமாக இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். அந்த அக்கறையை, அந்த ஆசையை நிறைவேற்றி வைக்கவேண்டுமானால், அதற்குத் தகுந்த வகையில் பொறுப்பேற்று, முக்கியமாக உள்ளவர்களை அதிலே அங்கம் வகிக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிட்டியில் இன்றைக்கு பெரிய அம்மைநோய், தொத்து நோய் உருவாகி வருகிறது. 10 வருஷத்திற்கு முந்தி, 6 வருஷத்திற்கு முந்தி, எந்த ஒரு ரோட்டிலும் ஒரு சிறு தூசு கூட கிடையாது. ஆனால் இன்றைக்கு குப்பைகள் அதிகமாக இருக்கின்றன' எனவே எங்கே பார்த்தாலும் குப்பைகள் இருப்பதால் தொத்து வியாதிகள் வருகின்றன. இதை அவசியம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று '' இந்து '' பேப்பரில் ஒரு அறிக்கை ரொம்ப பிராமினென்ட்டாக வந்து இருக்கிறது. கவர்ன்மென்ட் நிறுவனங்கள் பல '' ரெட் லைனில் '' இருக்கின்றன என்று ஆடிட் ரிப்போர்ட்டில் இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தில் அவைகள் இயங்கி வருகின்றன என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். பொதுப் பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படவேண்டும். அனாவசியமாக இப்படி செலவு பண்ணி அதனால் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யாமல் இருந்தால் அந்தக் குறை மிகப் பெரியதாகப் போய்விடலாம். அதனால் நான் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

The money spent is much more than what should have been spent.



1982 பிப்ரவரி 8] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்]

I have got one suggestion to make. The Government should evolve a list of people who are efficient and who have proved their ability in administration. The Government should try to post them as Heads of Industries or Business Houses. This is what, even, the Government of India have begun to do. There are people who are best in giving industrial advice.

சென்ற வருஷம் ஒரு பெரிய இன்டஸ்டிரியலிஸ்ட் கோலாலம்பூரில் இருந்து என்னிடத்தில் வந்தார். அவருக்குக் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் அந்த நிறுவனத்தில் ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாக அவர் மெட்ராசில் இருக்கும் ஒரு இன்டஸ்டிரியல் எக்ஸ்பெர்ட்டைக் கன்சல்ட் செய்தார். அவர்கள் ஒரு ரிப்போர்ட்டைக் கொடுத்தார்கள். அதன் காரணமாக அவருடைய நிறுவனம் நஷ்ட நிலையில் இருந்து தவிர்க்கப்பட்டு இப்போது நல்ல முறையில் ஓடிக்கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதேமாதிரி மெட்ராசில் — இந்தத் தலைநகரில் பல எபிசியன்ட் இன்டஸ்டிரியல் கன்சல்ட்டென்ட் இருக்கிறார்கள்.

They are people of proven ability, even though they do not have the the strength to draw people in that particular field. I wish that the Government should keep a list of those people and try to consult them. They should post them as Managing Directors and Chairmen and try to avoid such leakages and damages to public funds.

சார், பல திட்டங்களை ஆளுநர் உரையிலே கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஒன்று கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிப்பது. அதாவது, கடல்நீரை குடிநீராக மாற்றுவதற்கும், அப்போது வெளிப்படும் வெப்ப சக்தியைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இந்தத் திட்டம் 15 வருஷங்களுக்கு முன்னால் போடப்பட்டது. அப்போதே திரு. வெங்கட்ராமன் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதுபற்றி ஏற்கனவே ஆராய்ச்சி செய்திருக்கிறோம். ஆகவே, அவசியம் இதை நீங்கள் கவனித்து எவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில், உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த பக்கிங்காம் கனால், கூவம் கனால் இருக்கின்றன. அதை ஏன் இம்மாதிரி விட்டுவிட்டீர்கள் என்று தெரியவில்லை. ஒரே துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது, அதனால் மக்களுக்குப் பெரிய தீமைகள் ஏற்படுகின்றன.

The water is stagnated. There is no flow of water. Even there is a scheme to flow the Sea water. I do not know why that has not been done. The story of Cooum Buckgingham Canal is in existence for over 2 decades. I do not know why it has not been set right. The Government should see that these two canals are made permanent waterways so that small jetties are accommodated in these two canalls for transporting things. Not only that. The thatches also can be trasported through Cooum and Bucginham Canals. I want that all these schemes should be implemented in the most expeditious manner and also in a very firm manner. With these words, I conclude Thank you, Sri.

### (8) அரசினர் தீர்மானம்,

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ நாளை, 9—2—1982 அன்று தளர்த்தி ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் .''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (7) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்— (தொடர்ச்சி).

திரு. இரா. கருப்பையா : : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையில் கூறப்பட்டிருக்கிற விவரங்களுக்குள் செல்வதற்கு முன்னால் முதலிலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்றம் அமைக்கப்பட்ட பிறகு அதாவது



1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந்தேதி அன்று முதலாவதாக ஆளுநர் அவர்களால் அளிக்கப்பட்ட உரையில் '' ஜனநாயகப் பரிசோதனையில் மீண்டும் தமிழக வாக்காளப் பெருமக்கள் குழப்பம் ஏதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல், தைரியத்தோடு இம்மாநிலப் பேரவைக்குத் தெளிவான தீர்ப்பை வழங்கியதிலிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று எண்ணி வியக்கிறேன் '' என்று பாராட்டுக் கூறப்பட்டது. அதே மாதிரி '' உங்கள் திறமை நாட்டின் வறுமையை விரட்ட உதவட்டும் ; உங்களை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு ஒளி விளக்காக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் '' என்று உரையின் இறுதியில் முத்தாய்ப்பு வைத்து கவர்னர் உரை முடிக்கப்பட்டிருக்கிறது.

அதன் பிறகு, கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் இந்தச் சூழ்நிலையில், இப்போது நாம் எங்கே நிற்கிறோம் என்று பார்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த ஆளுநர் உரையில் கடந்த ஒன்றரை ஆண்டில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட சோதனைகளோடு மேலும் எத்தகைய சோதனைகள் உருவாயிருக்கின்றன என்பதை ஆராய்வோம்.

தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் இயற்றப்பட்டு இன்றையதினம் இருக்கிற ஜனநாயக உரிமையை மேலும் பறிப்பதாக ஆகிவிட்டது. தொழிலாளர்களுடைய வேலை நிறுத்த உரிமையைப் பறிப்பதற்கு அத்தியாவசிய வேலை பாதுகாப்புச் சட்டம் என்ற சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய நாட்டில் ஜனநாயகத்திற்கு மேலும் அச்சுறுத்தல் ஏற்பட்டு, உழைக்கின்ற வர்க்கத்தின் உரிமையைப் பறிக்கின்ற வகையில் மத்திய அரசின் நடவடிக்கை இருக்கின்றது. நம்முடைய தமிழக அரசும் அந்தச் சட்டத்தை ஆதரித்து நிற்கிறது. ஜனநாயகத்தைக் காப்பது தன்னுடைய கடமை என்று சொல்லி, இந்தச் சட்டமன்றமானது அத்தகைய ஜனநாயக உரிமையைப் பறிக்கின்ற சட்டங்களை நிறைவேற்றக்கூடிய முறையிலே துணிந்து நிற்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1—10]

அடுத்து ஆளுநர் அவர்களுடைய உரையிலே ஏதாவது நம்முடைய தமிழகத்தின் முன்னேற்றத்திற்கான முறையிலே திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றவா என்றால் இதில் ஒன்றிரண்டு பட்ஜெட்டின்போது அறிவிக்கப்பட இருக்கின்றது. பட்ஜெட் கூட்டம் நடைபெற இருக்கின்றது. ஆகவே இந்த உரையிலே விவசாய வளர்ச்சிக்கு என்னென்ன முறையிலே திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பது பற்றிய எந்த அம்சமும் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு அம்சங்கள்

[திரு. இரா. கருப்பையா] [1982 பிப்ரவரி 8

கூறப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று மின்சாரக் கட்டணம். மின்சாரக் கட்டண உயர்வைப் பற்றி மத்திய திட்டக் கமிஷன் கூறி இருக்கின்றது. நமக்கும் நஷ்டம் வருகிறது எனவே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்று மாநில அரசும் கூறுகின்றது இந்த உரையில்.

அடுத்து விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கின்ற இயக்கம் இந்தியாவிலேயே நடைபெறுகின்றது. அது நம்முடைய மாநிலத்திலேயும் அதிகமாக நடக்கின்றது. ஆனால் அந்த இயக்கத்தைத் திசை திருப்பக்கூடிய முறையிலே இங்கு நிலைமையுள்ளது. அவர்களது கோரிக்கைக்குச் சரியான தீர்வைக் காண முடியாத நிலைமையில் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் துவக்கப்படும் என்ற முறையிலே ஒரு அறிவிப்பு வந்திருக்கின்றது இந்த உரையில். இரண்டே இரண்டு அறிவிப்புகள்தான் இந்த ஆளுநர் உரையிலே இருக்கின்றது. ஆனால் இது எந்த அளவுக்கு விவசாயிகளின் கோரிக்கையான அவர்களது உற்பத்திப் பொருட்களுக்குப் போதிய விலையினைப் பெற்றுத்தரப்போகின்றது என்பது தெரியவில்லை. அதேபோல் இது எந்த அளவுக்கு பொது மக்களுக்குக் கிடைக்கவேண்டிய அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுத்தரப்போகின்றது என்பதும் தெரியவில்லை. ஆகவே இது மக்களிடத்திலே பூசலை ஏற்படுத்துகின்ற வகையிலே விவசாயிகளின் பிரச்சினைகளைத் திசை திருப்புகின்ற வகையிலேதான் அமைந்திருக்கின்றது.

அடுத்து வறட்சி நிவாரணம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இன்று காலையிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்றபோது மத்திய அரசிடம் வறட்சி நிவாரணத்திற்காக நாம் கோரிய தொகை 130 கோடி ரூபாய் என்றும் ஆனால் மத்திய அரசு அனுமதித்தது 55·24 கோடி ரூபாய். நாம் ஒதுக்கியதற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தது 48·9 கோடி ரூபாய்க்கு. ஆனால் நாம் ஒரு பெரிய வறட்சியை சமாளிப்பதற்காக மத்திய அரசிடம் மிக அதிகமான ஒதுக்கீடு கோரி இருக்கின்ற நேரத்திலே மத்திய அரசு நமக்கு மானியமாகக் கொடுத்திருக்கின்ற தொகை 8 முதல் 10 கோடிரூபாய்தான் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் காலையிலே குறிப்பிட்டார்கள். ஆகவே துயர் துடைப்புப் பணிகள் என்று வருகின்றபோது மத்திய அரசு எந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தின்பால் கவனம் செலுத்துகின்றது என்பது மிகத்தெளிவாக இதன்மூலம் தெரிகின்றது. ஆனால் கொடுக்கப்பட்ட தொகை முழுமையாக கொடுக்கப்பட்டு முறையாகப் பயன்படுத்தப்படவில்லை, பல இடங்களில் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன, ஊழல்கள் இருக்கின்றன என்ற புகார்கள் கூட எழுந்திருக்கின்றன.

இருந்தாலும் மாநிலத்திற்குக் கிடைத்திருக்கின்ற தொகை இவ்வளவுதான் என்று பார்க்கக்கூடிய நேரத்திலே என்னென்ன பணிகளை நம்மால் செய்ய முடியும் என்பது ஐயத்திற்குரிய விஷயம்.

அடுத்து நம்முடைய மாநிலத்திற்கு உணவுப்பொருள் ஒதுக்குவது சம்பந்தமான பிரச்சினை. நம்முடைய அவை முன்னவர் அவர்கள் தொடர்ந்து கூறிக்கொண்டே வருகிறார். நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற 1 கோடியே 9 இலட்சம் உணவுப் பங்கீட்டுக் கார்டுகளுக்குக் கொடுக்கவேண்டியது அதாவது நம்முடைய தேவை 75 ஆயிரம டன்னாக இருக்கின்றது என்று கோதுமையைப் பற்றி புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு மத்திய அரசு அதற்கான ஒதுக்கீட்டைத் தருகின்றது. எந்த அளவுக்கு அரிசி நமக்கு வழங்கப்படுகின்றது என்பது எல்லாம் நாம சிந்திக்கவேண்டி இருக்கின்றது. நம்முடைய மாநிலத்திலே உயர்ந்து வருகின்ற விலைவாசி காரணமாக உணவுப் பொருள், அரிசி போன்றவற்றின் விலை எல்லாம் உயர்ந்துகொண்டே போகிறது. ஆகவே எவ்வாறு நாம் இந்த மாநிலத்தின் மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கப் போகிறோம் என்பது ஐயத்திற்குரிய விஷயமாக இருக்கின்றது.

அடுத்து விவசாயிகளிடத்தில் அரசு நிர்ணயித்த விலையில் உணவு பொருட்களைக் கொள்முதல் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது, ஆனால் வியாபாரிகளிடத்தில் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளோ குறைந்த விலையில் தங்களுடைய பொருட்களைக் கொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வியாபாரிகள் அதை வாங்கி அதிக விலைக்கு விற்கிறார்கள். பகிரங்க மார்க்கெட்டில் விற்கக்கூடிய அரசினுடைய விலையே அதிகமாக இருக்கக் கூடிய நேரத்திலே, ஏன் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, பண்டங்களின் தேவை அதிகமாகாது என்று கேட்க விரும்புகிறேன்? கொள்முதலை காலத்திலே செய்யாததின் காரணமாகவே, இன்றைய தினம் இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மக்களுக்குத் தேவையான பொருள்களை முறையாக ஒழுங்காக வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள், இந்தக் கொள்முதலை மார்க்கெட் விலையிலேயே கொள்முதல் செய்யும் பணியை ஓரளவு நிறைவேற்றின. இந்த ஆண்டு அதுவும் இல்லை. இந்த ஆண்டு கொள்முதல செய்யும்போது எப்படி செய்ய வேண்டும் என்றால், எந்தவிலையை நிர்ணயம் செய்திருக்கிறார்களோ அந்த விலைக்கே கொள்முதல் செய்ய வேண்டும். ஏனென்றால் மத்திய அரசினுடைய உத்தரவு 115 ரூபாய்க்கு மேல் செய்

கூடாது என்பது. ஆனால் அதே நேரத்தில், கர்நாடக மாநிலத்தில் நிர்ணயித்திருக்கிற விலைக்கு மேலே 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்து கொள்முதல் செய்திருக்கிறார்கள். ஆகவே, இதைத்தவிர வேறு எந்த வழிகளில் மக்களுக்குத் தேவையான7 பொருள்களை, தேவையான நேரத்தில் கொடுத்து அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்பதும் அல்லது உயர்ந்து வரக்கூடிய விலைவாசியைக் கட்டுப்படுத்த வேறு எந்த வழி உதவி செய்யும் என்பதையும் தயவுசெய்து விளக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் தான், காலத்தில் செய்ய வேண்டிய கொள்முதலை செய்யாமல் அதுவு நம் விவசாயிகளுக்கு அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்யாகமல், தேவை அதிகமாகின்றபோது, அதைவிட அதிக விலை கொடுத்து ஆந்திராவில் போய் வாங்குகிற வேலைகளை செய்தோம். ஆகவே அதே நடைமுறையை இந்த ஆண்டும் கடைபிடிக்க அரசு விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து இந்த உரையில் வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே 600 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். என்ன முன்னேற்றத்தை, அல்லது என்ன சீர்திருத்தத்தை இந்த 600 கோடி ரூபாய் செலவழித்து தமிழகத்தில் இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெளிவாக குறிப்பிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். அனைவரும் புரிந்துக் கொள்ள வசதியாக இருக்கும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுடைய நிலைமை எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது, அல்லது தொழில் வளர்ச்சியிலே தமிழகம் எந்த அளவிற்கு முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது என்பது போன்ற விவரங்களை அளித்திருந்தால், மிகவும் நலமாக இருந்திருக்கும். ஆனால் இதில் அந்த விவரங்கள் கொடுக்கப் பெறவில்லை.

அடுத்து, வேளாண்மை சம்பந்தமாக சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதில் ''பயிற்சி பார்வையிடல் திட்டம்'' என்பதில் 36 கோடி ரூபாயும், வேளாண்மைப் பொருள் விற்பனையை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் திட்டம் ஒன்றிற்காக 102 கோடி ரூபாயும் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கி, இத்திட்டங்களை நிறைவேற்றப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 138 கோடி ரூபாய்க்கு நாம் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு? இப்படிப்பட்ட கடன்களை கொடுப்பதற்கு அவர்கள் என்னென்ன நிபந்தனைகள் போடுகிறார்கள் என்பதையும் வெளியிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். ஏனெனில் உலக வங்கியின் நிபந்தனைகள் மிகவும் கடுமையானவை என்பது எல்லோரும் அறிந்ததே. மின்சாரக் கட்டணத்தை உயர்த்து என்று சொல்கிறார்கள். உரத்திற்குக்



கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்து என்று கூறுகிறார்கள்.
138 கோடி ரூபாய்க்கும் வட்டி வேறு கட்ட வேண்டும். ஆகவே
மிகப்பெரிய பாரத்தைத் தமிழக மக்கள் சுமக்கக்கூடிய நிலைம
ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உலக வங்கியின் வட்டி வீதம்
எவ்வளவு? இந்தத் திட்டங்களினால் எந்த அளவுக்கு அதிகமான
நன்மைகள் கிடைக்கும், உலக வங்கியின் நிபந்தனைகள் என்ன?
அவைகளில் எவைகளை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது?
போன்றவற்றையும் அறிவித்திருந்தால் பயன உள்ளதாக இருந்
திருக்கும். ஆனால் ஆளுநர் உரையில் எந்தவிதமான விவரங்
களையும் காணோம்.

அடுத்து எண்ணெய் வித்துக்களின் குறைகளை குறித்து கூறப்
படுகிறது. அதில் எண்ணெய் உற்பத்தியை உயர்த்துவதற்காக
ஒரு சில அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். வேடிக்கை
யாக இருக்கிறது. வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட கூடிய
வர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னங்கன்றை இலவசமாக
வழங்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். எப்பொழுது அந்த
மனையில் அவர்கள் தென்னங்கன்றை, நட்டு, மரம் வளர்ந்து,
காய் காய்த்து அவைகளை எடுத்து எண்ணெய் எடுத்து, இந்தப்
பற்றாக்குறையை நீக்கப் போகிறார்கள்? எவ்வளவு தூரம் இந்தத்
திட்டம் உருப்படியான திட்டம் என்ற ஐயம் எல்லோருக்கும் ஏற்
படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை ஆளுநர் உரையிலே
குறிப்பிட்டிருப்பதே மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.
மக்களின் அதிகப்படியான எண்ணெய் தேவையை பூர்த்தி செய்
வதற்காக, ஒவ்வொரு வீட்டு மனைப்பட்டாவோடும், தென்னங்
கன்று கொடுக்கக்கூடிய திட்டத்தை இதில் பார்க்கக்கூடியவர்கள்,
படிக்கக்கூடியவர்கள் என்ன எண்ணுவார்கள் என்பதைச் சிந்
தித்துப்பார்க்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே இன்னொன்றையும் முக்கியமாகக் குறிப்
பிடவிரும்புகிறேன். அரசு புறம்போக்கு நிலங்களில் இருக்கக்
கூடிய மரங்களை அதிகப்படுத்த வேண்டும். இருக்கும் மரங்
களைப் பாதுகாக்க வேண்டும். நிறைய மரங்கள் நடவேண்டும்
என்ற வகையில் மர நடுவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.
அதற்காக கோடிக் கணக்கிலும் செலவு செய்யத் தயாராக இருக்கி
றோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நாளில் 10 ஆயிரம்
மரங்கள் நடப்படவேண்டும் என்று இலக்கு வைத்து மரங்களை
நட்டு வருகிறோம். ஆனால் இருக்கக்கூடிய மரங்கள் அழிகின்ற
நிலையிலிருந்து அவைகளைக் காப்பாற்ற முடிவதில்லை.
அரசு புறம்போக்கு நிலங்களில் இருக்கும் மரங்களையும்
குளங்களின் அருகாமையில் இருக்கக்கூடிய மரங்களையும்
வெட்டி விறகுகளாக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைத்
தடுக்க வேண்டும். அந்த மரங்களைப் பாதுகாக்க வேண்டும்.
கிராம நிர்வாகங்கள் இருந்த காலத்திலேயே, கணக்கப்பிள்ளை

முன்சீப் இருந்த காலத்திலேயே, அவர்கள் எடுத்துக் கொண்டு அனுபவித்ததுபோக, ஓரளவிற்காகவாவது மரங்களை பாது காத்து வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் அவைகளைப் பாதுகாக்க எந்த நாதியும கிடையாது. கிராம நிர்வாகம் சரிவர இயங்க முடியாத இந்த சூழ்நிலையில், காட்டு மரங்களின் வளம் அழிக்கப்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1—20)

கடன் நிவாரணம் சம்பந்தமாக ஏற்கெனவே இந்த மன்றத் தில் எங்கள் கருத்துக்களைத் தெளிதாகக் கூறியிருக்கிறோம். ஐந்து ஏக்கர் நன்செய்யும் ஐந்து ஏக்கர் புன்செய்யும் ஒன்றா? ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிப்பதன்மூலம் அதிகபட்ச மாக விவசாயிகளுக்கு நாம் நிவாரணம் அளிக்க முடியும்.

உச்சமட்டக் குழுவின் சிபார்சுகளை அமல்படுத்தி ஒழுங்கான முறையில் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் விவசாயப் பிரச் னையை ஓரளவு தீர்க்கமுடியும்.

அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், கன்வர்ஷன் லோனைப் பொறுத்தவரையில் யார் யாருக்குதேவையோ அவர்களுக்காகி யிருக்கிறது என்று நூற்றுக்கணக்கான உதாரணங்களைக் சொல்ல லாம். வெள்ளம, புயல் இவற்றால் பாதிக்கப்பட்ட சிறு விவ சாயிகளுக்குள்ள கடன்கள் எந்தக் காலத்திலும் வட்டி செலுத் தப்பட்டு மாற்றப்படவில்லை. அது வேறுபயிர்களாக இருப்பதாக அரசாங்க அடங்கலில் குறிப்பிட்டிருப்பதால் அவர்கள் உரிய நிவாரணத்தைப் பெற கண்வாஷன்லோனாக மாற்ற முடியவில்லை சிறிய விவசாயிகள் அதன் பலன்களைப் பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இதில் மாற்றம் கொண்டுவருவதன் மூலம் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

அடுத்து, பினாமிச் சட்டம். இருபது அம்சத் திட்டத்தை வரவேற்பதாக கட்டியம் கூறி வரவேற்க அரசு தயாராயிருக்கி றது. நல்லது செய்யக்கூடிய எந்தத் திட்டத்தையும் வரவேற்ற வேண்டியதுதான். 1975-ல் ஒரு இருபது அம்சத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஹரிபி கடோ என்று வறுமையை ஒழிப் பதற்காகத்தான் நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். ஆனால் வறுமை ஒழியவில்லை. அவர்கள் சரியான நடவடிக் கைகளை எடுக்காததன் காரணமாக என்ன மாற்றம் ஏற்பட்டது. 1977-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் என்பது உங்களுக்குத் தெரியும். மீண்டும் அதுவேதான். பழைய கள் புதிய மொந் தையில் என்று சொல்லுவதுபோல் இந்தத் திட்டத்தை இன்றைய தினம் அறிவித்திருக்கிறார்கள். அதில் நிலச் சீர்திருத்தம் ஒன்று.



நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டால் அது பற்றி அறிவித்திருக்கக் கூடிய நேரத்தில் மத்திய அரசு நம் மாநிலத்தில் நிறைவேற்றியிருக்நக்கூடிய பினாமி நிலங்கள் கைப்பற்றக்கூடிய சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுக்க மறுப்பதேன்? அது கண்டிக்கத் தக்கது அல்லவா? இருபது அம்சத் திட்டத்தை வரவேற்கும்நேரத் தில் ஏன் இந்த மன்றத்தில் நிறைவேற்றிய பினாமி நிலங்களைக் கைப்பற்றக்கூடிய சட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுக்க மறுக்கிறது? ஆகவே அவர்கள் சொல் ஒன்று செயல் ஒன்று என் றிருக்கிறது. இந்த மாநிலத்தில் உள்ள பல்வேறு நடவடிக்கை களுக்கு முட்டுக்கட்டை போடுவது அவர்கள் நடவடிக்கையாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலப் பதிவேடுகள் சம்பந்தமாச குறிப்பிடப் பட்டிருக்கிறது. மூன்றாண்டுக் காலத்தில் 'க்ராஷ் ப்ரோக்ராம்' இதை அமல் செய்வதற்கு இன்றைய தினம் என்ன அமைப்பு இருக்கிறது? கிராம நிர்வாகம் சீர்குலைந்து போயிருக்கிறது. தாலூகா ஆபிசில் உள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், குமாஸ்த் தாக்கள், டெப்டி தாசில்தாரர்கள், தாசில்தார்கள் இவர்கள்தான் கிராமங்களில் போய் உட்கார்ந்து வேலை செய்யக்கூடிய நிர்ப் பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ரிக்கார்ட்ஸ் தயாரிக்க வேண்டிய பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கப்போகி றீர்கள்? இதைத் துவக்கி மூன்றாண்டுகள் 'க்ராஷ்ப்ரோக்ராம்' போட்டு விலலை. மேலும் மூன்றாண்டுகள் ஆகின்றன. முடிய செய்யலாம் என்கிறீர்கள். கிராம நிர்வாகம் சீர்குலைந்திருக் கும் இந்த நேரத்தில் அதை எவ்வாறு நிறை வேற்ற முடியும். அதை அமல்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறீர் கள் என்று அறிவித்தால் பயன் உள்ளதாக இருக்கும். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் எப்போது வருவது? ஒருதெளிவு சுளிவு வேண்டாமா? ஏற்கெனவே பணியில் இருந்தவர்கள், அரசு நிர்ண யித்துள்ள தகுதி பெற்றவர்களாக இருக்கக்கூடியவர்களையாவது அந்தப் பணியில் நியமித்து ஓரளவிற்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அளவிற்கு தெளிவு சுளிவானதொரு போக்கினை எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும். அது இல்லாதிருந்தால் தான் இன்றைய தினம் இந்நிலை தொடர்ந்து எவ்வளவு ஆண்டுகள் நீடிக்கும் என்று சொல்ல முடியாத நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, பவர் டாரிப். மத்திய திட்டக் கமிஷன் ஒன்றைச் சொல்கிறது. மாநில ஆட்சியை வேண்டாமென்றால் டிஸ்மிஸ் செய்கிற அதிகாரத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே எல்லாம் செய்துதான் ஆக வேண்டும் என்ற நிலை. அவர் கள் உயர்த்துங்கள் என்றால் உயர்த்துகிறோம், இதுதான் அறிக்

[திரு. இரா. கருப்பையா] [1982 பிப்ரவரி 8

கையில் இருக்கிறது. நம் மாநில வளர்ச்சிக்காக திட்டங்களை எந்த அளவிற்குச் செய்வது என்ற பிரச்சினை இல்லாமல் மத்திய அரசு சொல்கிறது நாம் உயர்த்துவதற்குத்தயாராகி விட்டோம் என்ற முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது சம்பந்தமான அரசு தீர்க்கமாக, ஆழமாகப் பரிசீலனை செய்து இன்றைய தினம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு உணர்வை, அந்த அமைதியான நிலையை அது கெடுக்கக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டாம். அதே நேரத்தில், மற்றொரு பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாநிலத்திலே மின்சாரம் ஒழுங்காக கிடைக்காத நிலைமை இருக்கிறது. எப்போது மின்சாரம் வரும், எப்போது மின்சாரம் நிற்கும் என்பது யாருக்கும் தெரியாது. மின்சார வாரியத்திலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்கும் தெரியாது எஸ்.ஈக்கும் தெரியாது; அவருக்கு கீழே உள்ள டீ.ஈ.க்கும் தெரியாது; சீ.ஈ.க்கும் தெரியாது. ஒருவேளை ஆண்டவன் என்று ஒருவன் இருந்தால் அவருக்குத் தெரியுமோ, தெரியாதோ. அமைச்சர் அவர்கள் அவருக்கும் தெரியாது என்று சொல்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்களுக்கும் தெரியாது. அப்படி யாருக்கும் தெரியாத ஒரு நிலைமை. இது மாற்றப்பட வேண்டும். குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட மணியில் தடங்கலின்றி, தடையில்லாமல் விவசாயிகளுக்கும், மற்ற பக்களுக்கும் மின்சாரம் கிடைக்கும் என்ற உத்திரவாதம் ஏற்பட வேண்டும். அப்படி ஏற்படாவிட்டால், மாநிலப் பிரச்சினையாக ஏற்பட்டு, கடுமையான கிளர்ச்சியில் நகரங்களிலே உள்ளவர்களும், கிராமங்களில் உள்ளவர்களும் ஈடுபடுவார்கள். அத்தகைய கிளர்ச்சி இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மின்சார உற்பத்தியை தனியாருக்கு 'ளிக்கலாம்' என்று சொல்லுகிறார்கள். யார் இந்த யோசனையை உருவாக்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. தனியார் நிறுவனம் சரியில்லை என்று அரசாங்கம் எடுத்துக்கொண்டது. தனியார் நிறுவனங்கள் அனைத்தும் எப்படி செயல்பட்டன என்பதை அந்தப் பழைய நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கலாம். தனிப்பட்டவர்களுக்கு விட்டால், எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது தெரியாது. அதனால்தான் முன்பு எடுத்தோம். மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பது, மின்சார உற்பத்திற்கு உதவாது. வேறு காரணமாக இருக்க முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்,

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்னை. இதுபற்றி 1974-லே இருந்து நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நாட்டிலே இதற்கெல்லாம் மைய அரசு இருப்பதாகத் தெரியவில்லை. நமக்கும், கர்நாடக மாநிலத்திற்கும் இடையே தகராறு. மத்தியிலே



1982 பிப்ரவரி 8] [திரு. இரா. கருப்பையா]

மைய அரசு இருக்கிறது. இதைப்பற்றிக் கேட்டால், அவர்களுக்கு உணர்வு இருப்பதாகத் தெரியவில்லை. மைய அரசு இதைத் தீர்த்து வைக்க வேண்டும். தீர்த்து வைக்க வேண்டும் என்று நாம் அவர்களுக்கு பல ஆண்டுகளாக எழுதிக் கொண்டிருக்கிறோம். ஒன்றும் பயனில்லை. ஆகவே, மைய அரசுக்கு நாம் இத்தனை நாட்களுக்குள் இந்த காவிரி நீர்ப் பிரச்னையை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும் என்று எழுத வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரே குரலாகச் சொல்கிறார்கள். மக்களும் ஒரே குரலாகச் சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சியும் நம்மோடு சேர்ந்து சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க வேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கேரளாவிலிருந்து நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும். இது கிடைக்குமா, கிடைக்காதா என்று தெரியவில்லை. நாம் அவர்களிடமிருந்து மின்சாரம் வாங்குகிறோம். அப்படி வாங்குகின்ற நேரத்திலே, அதற்குப் பதிலாக சிமெண்ட் தருவதாகச் சொல்கிறோம். இப்படி கேரளாவிற்கு தமிழகத்திலே இருந்து சில பொருள்கள் தேவையாக இருக்கிறது. நமக்கு அவர்களிடமிருந்து சில பொருள்கள் தேவைப்படுகிறது. ஆகவே, பார்டர் பேசிஸ் அடிப்படையில் தமிழகத்திற்கு இதை கொடுக்க வேண்டுமென்று கேட்கும்போதும், நமக்குத் தேவையான தண்ணீரும் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசி சம்பந்தமாக மாநில அரசு அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, விலைவாசிப் பிரச்னை நாட்டின் பொருளாதாரக் கொள்கையோடு பின்னிப் பிணைந்திருப்பதாகப் பொருளாதார வல்லுநர்கள் சொல்வதாகச் சொல்கிறார்கள். உண்மையை வெளியில் சொல்வதற்கு என்ன தயக்கம் என்று எனக்குப் புரியவில்லை. உமாநாத் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல், பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. நாட்டிலே உள்ள கிராமத்திலே உள்ள சாதாரண அரசியல் அறிவு பெறாத மக்கள்கூட, இந்த விலைவாசி ஏற்றத்திற்கு மைய அரசுதான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆனால், மாநில அரசு நாட்டினுடைய [illegible] இட்டு மொத்தமான பொருளாதார நிலைமைக்கு, [illegible] விலைவாசி ஏற்றம்தான் காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால் இந்த மா[illegible]த்து மக்களுக்கு அது எப்படி உதவுவதாக இருக்கக் கூடும்? அந்த அடிப்படையில் மைய அரசுக்கு இதைச் சுட்டிக்

காட்ட வேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சார்ந்தது. இதற்கு யார் பொறுப்பாளி என்பதை அறிந்து தைரியமாக இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். என்னிடத்திலே இதற்கான விவரங்கள் இருக்கின்றன. நேரமில்லாத காரணத்தினால், இதோடு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1·30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. கருப்பையா : அடுத்து, காவிரியில் வெள்ளம் வரக்கூடிய நேரத்தில் உபரி நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டம் நல்ல திட்டமாகும். புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுரத்தில் வறட்சிப் பகுதிகளுக்கும் வீணாகிற தண்ணீரைக் கொண்டு செல்லுவது வரவேற்கத் தக்கது. இந்தக் காவிரி நீரைத் திருச்சி மாவட்டத்திலிருந்து எடுத்துச் செல்லக்கூடிய நேரத்தில், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிற நேரத்தில் திருச்சி மாவட்டத்திலுள்ள வறண்ட பகுதிகளுக்கும் பஞ்சப்பட்டி, மணப்பாறை விராலிமலை போன்ற பகுதிகளுக்கும் பயன்படும் வகையில் அந்தப் பகுதி மக்களுக்கும் காவிரி நீர் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்களுடைய மாவட்டத்தில் மணப்பாறை வறட்சியான பகுதி. மணப்பாறையில் என்னுடைய தொகுதியை மட்டும் நான் சொல்லவில்லை. மணப்பாறை தாலுகாவை அப்படியே புதுக்கோட்டை மாவட்டத்தில் சேர்த்து விட்டால் கூடப் பரவாயில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, மணப்பாறை தாலுகாவை வறட்சிப் பகுதியாக அறிவிக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, படித்த இளைஞர்களிடையே வேலை வாய்ப்புகளுக்கான தகுதிகளை அதிகரிக்க தொழில் நுட்பக் கல்லூரிகளைத் தொடங்குவதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். இன்று காலையில் மூடிக் கிடக்கும் கல்லூரிகள்பற்றிப் பேசினோம். இதைப் பார்க்கும்போது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது.

மகளிர் பல்கலைக் கழகம் என்று புதிதாக ஏற்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். எங்களால் அது என்ன என்று புரிந்து கொள்ள முடியவில்லை. அது எப்படி இருக்கும், எப்படி அமையும், அமைப்புகள் என்ன, முறைகள் என்ன



என்பதைப்பற்றிக் கொஞ்சம் விளக்கினால் புரிந்து கொள்ள பயனுள்ளதாக இருக்கும். அந்தப் பல்கலைக் கழகம் பற்றிய விவரங்களை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 19ஆம் தேதி வேலை நிறுத்தம்பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய அரசினர் மத்திய அரசு எள் என்று சொல்லுவதற்கு முன்னால் எண்ணெய் என்று நிற்கிறார்கள். இது எதற்காக என்று புரியவில்லை. இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது ஆளும் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் கேட்காமலே இரண்டு கைகளையும் சேர்ந்து தூக்குகிறோம் என்று சொன்னார்கள். யாரைப் பாதுகாக்க இந்தச் சட்டம் ? சாதாரணத் தொழிலாளிகள், உழைக்கக் கூடிய மக்களின் ஒரே உரிமை வேலை நிறுத்த உரிமை. இதைப் பறிக்க சட்டம் வருகிறது. அதைக் கண்டிக்கும் வகையில் இந்திய நாட்டில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதைத் சகித்துக் கொள்ள முடியவில்லை. பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இலங்கைவாழ் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில் அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து ஒருநாள் அர்த்தால் நடத்தவில்லையா அப்போது உற்பத்தி பாதிக்கப் படவில்லையா அப்படி அவர்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் இரண்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. திருவைஞானம் பகுதியில் துப்பாக்கிச் பிரயே பிரயோகம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. எந்தக் குருடனும் இது அவசியம் என்று சொல்ல மாட்டான். பிச்சைக் கட்டளை வாய்க்கால் ஓரத்தில் பஸ்ஸை மறித்திருக்கிறார்கள். பிச்சைக் கட்டளை அரிசனங்கள் வசிக்கும் பகுதியில் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். அங்கிருந்து இரண்டே முக்கால் கல் தொலைவிலுள்ள திருவைஞானம் என்ற கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரண்டு உயிர்களைப் பறித்திருக்கிறார்கள். அது என்ன நியாயம் ? அரசாங்கத்தின் சார்பில் நியாயப்படுத்தி போலீஸ் அதிகாரி கொடுக்கிற அறிக்கையை அப்படியே வாசித்து விடுவார்கள். இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது நியாயமானதுதானா என்று பார்ப்பதற்கு நீதி விசாரணை அமைக்க அரசினர் ஏன் மறுக்கிறார்கள் ?

அதேமாதிரிதான் மன்னார்குடிக்குப் பக்கத்தில் இரட்டைப் புளியிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம், தேவையில்லாமல் நடந்திருக்கிறது. பிச்சைக்கட்டளையில் 8 நாள் சிசு என்ன செய்ததோ தெரியவில்லை, அதன்மீது வெந்நீரை எடுத்து ஊற்றியிருக்கிறார்கள் பாவிகள். அந்த அளவிற்கு வெறித்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். போலீஸ்

[திரு. இரா. கருப்பையா] [1982 பிப்ரவரி 8

அதிகாரி அங்கே போய்ச் சொல்கிறார், நானும் உங்கள் சாதியைச் சேர்ந்தவன் ஐயா என்று சாதி ஏன் வந்தது என்று தெரியவில்லை நீங்கள் கட்சியிலே வந்துவிட்டீர்கள், உங்களுக்கு தொந்திரவு இருக்காது, என்று சொல்கிறார் என்றால் என்றைக்கு இவர் அரசியல் வியாபாரியாக மாறிவிட்டார் என்று தெரியவில்லை. அடுத்து தர்மபுரியிலே நடந்த கொடுமையான நடவடிக்கைகள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 10, 15 பேர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பேசலாம்.

திரு. இரா. கருப்பையா : கட்சிகளின் சார்பிலே நான் பேசியாக வேண்டும். முடித்துவிடுகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் செல்லுபடியாகவில்லை. இரண்டு ஆட்களிடம் 4 ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. உழக்கூடிய விவசாயிக்கு உரிமை கிடையாது, பட்டா கிடையாது, அதை எதிர்த்துக் கேட்டால் போலீஸ் நக்சலைட் என்று சொல்லி தலைவர்களையெல்லாம் போலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டு செல்கிறார்கள். தாக்கப்படுகிறார்கள் அங்கே. சப்ஜெயிலில் கொண்டு போய் அடிக்கிறார்கள்., ஆஸ்பத்திரியிலே டாக்டரிடம் கொண்டுபோய் நீ சர்டிபிகட் கொடுக்காதே, நீ உண்மையைச் சொல்லக்கூடாது என்று சொல்லக் கூடிய நிர்பந்தங்கள் தர்மபுரி மாவட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய தினம் போலீஸினுடைய பேயாட்டம் தர்மபுரி மாவட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இது யாருடைய பெயரைக் காப்பாற்றுவதற்காக என்று தெரியவில்லை. ஒரு வேளை அரசாங்கமே திட்டமிட்டு அமைச்சர் முதலமைச்சரே சொல்லி இந்த மாதிரி நடத்துங்கள், பார்க்கலாம் என்று சொல்கிறாரோ என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு இருக்கிற அதிகாரிகளின் வெறியாட்டத்தைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? மாவட்ட செயலாளர் போய் கேட்டால் எஸ். பி. வாடா நீ போடா பல்லை உடைப்பேன்டா என்று சொல்கிறார். இப்படிப்பட்ட அடக்குமுறைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். இந்த மாதிரி நடவடிக்கைகளுக்கு காரணமான அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு பிரச்சினை, விலைவாசிப் பிரச்சினை, மின்சாரக் கட்டணம், விவசாயிகளுக்குக் கட்டுப்படியா[illegible] கூடிய விலை, உரங்களுக்கு மானியம் தரக்கூடிய மத்திய [illegible]னுடைய கொள்கை, வறட்சி நிவாரணம் முறையா[illegible]டுக்காத கொள்கை, உணவு ஒதுக்கீடு செய்யாத ம[illegible]னுடைய



1982 பிப்ரவரி 8] [திரு இ. கணேசன்]

கொள்கை, பினாமி நில சட்டத்திற்கு அங்கிகாரம் கொடுக்காக கொள்கை, காவினப் பிரச்சினையைத் தீர்க்காத கொள்கை மேலும் மேலும் அதிகாரிகளை மத்திய அரசாங்கமே எடுத்து கொள்கிற கொள்கை இவை எல்லாம் எதிர்த்து குரல் கொடுத்து உறுதியாக நிற்கவேண்டிய கட்சியாக ஆளுங்கட்சியாகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கவேண்டும். அவர்களுடைய நிலை என்ன என்பதை தெளிவாக்க வேண்டும். மக்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் இதை எதிர்த்து உறுதியாக நிற்பதன் மூலமாக எதிர்த்துப் போராடுவதன் மூலமாக தமிழக மக்களுக்கு சரியான வாழ்வை கொடுக்கமுடியும், நாம் வறுமையை ஒழித்து வளமான வாழ்வை அளிப்போம் என்று கொடுத்திருக்கின்ற வாக்குறுதியை நிறைவேற்ற முடியும் என்று கூறி அந்த முறையிலே செயல்படுவதற்கான மாற்றங்கள் இந்த ஆளுநர் உரையிலே இல்லை என்பதை வருத்தத்துடன் கூறி உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நமது மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னைப் பேச இந்த நேரத்திலே அழைத்த சபா நாயகருக்கு மனமார்ந்த நன்றியைச் சொல்லிக் கொண்டு நம்முடைய ஆளுநர் தம்முடைய உரையிலே நம்பிக்கை ஒளியூட்டக் கூடிய பல நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் பக்கத்திலேயே சொல்லியிருக்கிறார்கள் உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பினைப் பற்றி. உலகத் தமிழ்மாநாடு எப்படி சீருடனும் சிறப்புடனும் அழகுடனும் நடந்தது என்பதை எண்ணிப் பார்க்கையிலே நம் உள்ளமெல்லாம் தமிழர் உள்ளமெல்லாம் பூரித்துக்கொண்டிருக்கிறது. அந்த உலகத்தமிழ் மாநாட்டிலே அறிஞர்களும், உலகத்திலேயிருந்து வந்திருந்த பல்வேறு தமிழ் மக்களும் புரட்சித் தலைவனைப் பாராட்டினார்கள்.

(பிற்பகல் 1.40)

அது மட்டும் அல்ல, கற்றறிந்த புலவர்கள் 49 பேர்களைக் கொண்ட அந்த புலவர் குழுவிற்குத் தலைமைஏற்றிருக்கக்கூடிய திரு. கி. ஆ. [illegible] விசுவநாதம் அவர்கள் பேசக்கூடிய நேரத்தில் சொன்ன[illegible]ன்றைக்கும் நான் எண்ணிப் பார்க்கிறேன் திரு [illegible] விசுவநாதம் அவர்கள் ஆற்றிய உரையில் [illegible] சொல்வேன், இங்கே திரண்டு இருக்கக் கூடி[illegible] [illegible]தற்கு ''வாழ்க'' என்று சொல்ல வேண்டும் கூட[illegible]க் காவலர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் என்[illegible]ப் புற்றி எடுத்துச் சொல்லிவிட்டு, புரட்சித் தமிழ[illegible]

[திரு. இ. கணேசன்] [1982 பிப்ரவரி 8

தலைவர் அவர்கள் என்று சொன்னார்கள், உடனே அங்கே கூடியிருந்த முப்பது இலட்சம் மக்களும் புரட்சித் தலைவர் அவர்களை, ''வாழ்க வாழ்க'' என்று விண்ணதிர, வையகம் குலுங்கப் பாராட்டியதை இப்பொழுதும் எண்ணிப் பார்க்கிறேன். என் உள்ளமெல்லாம் பொலி வய்துகிறது. அப்பொழுது புரட்சித் தலைவரவர்கள் தன்னுடைய பேருரையில் சொன்னார்கள். தஞ்சையிலே தமிழருக்குஎன்று ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்று, அறை, பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தின விழா நடக்கின்ற செப்டம்பர் 15–ஆம் நாள் சிறப்பான முறையில் புரட்சித் தலைவர்-அவர்கள் தன்னுடைய பொற்கரங்களால் அந்தத் தமிழ் பல்கலைக் கழகத்தைத் திறப்பு விழா செய்ததை தமிழர்கள் அத்தனைபேரும் தமிழ்ச் சமுதாயம் அத்தனையும் பாராட்ட வேண்டும், வாழ்த்த வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு அதன் வழியில் தான் செப்டம்பர் 15–ஆம் நாளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் துவங்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதன் வழியில்தான் சிவில் கோர்ட்டுகளில் தமிழ் மனம் கமழ்கிறது; தமிழில் விசாரிக்கப்படுகிறது. தமிழில் தீர்ப்பு கூறப்படுகிறது என்பதைச் சொல்லி அதற்காக நான் பெருமை அடைகிறேன், பூரிப்பு அடைகிறேன்.

தன்னிறைவுத் திட்டதைப்பற்றிக் சிறப்பாக இங்கே அமைச்சரவர்களும், மற்ற உறுப்பினர்களும் அவ்வப்பொழுது விளக்கங்களைக் கூறினார்கள். தன்னிறைவுத் திட்டம் என்பது உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகள் கனவு கண்ட கிராம ராஜ்யத்தை அடிப்படையாகக் கொண்டது. உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகள் அன்றைக்கே கனவு கண்டார் கிராமங்கள் முன்னேறவேண்டும் ஒரு நாடு முன்னேறவேண்டுமென்றால் அந்த நாட்டிலுள்ள கிராமங்கள் முன்னுக்கு வர வேண்டுமென்று சொன்னார். அந்த அடிப்படையில் எங்கள், மக்கள் திலகம், கொடைவள்ளல் எம். ஜி. ஆர். அவர்கள் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் தளநாயகனாக வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள், முப்பது, முப்பத்து மூன்று ஆண்டுகளாகக் கிராமங்களில் கிடைக்காத நன்மைகளைச் செய்து கிராமங்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டு-மென்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது தான் தன்னிறைவுத் திட்டம்

அந்தத் திட்டத்தால் எத்தனை கிராமங்கள் இன்றைக்கு ஒளிமயமாக ஆகியிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம்



1982 பிப்ரவரி 8] [திரு. இ. கணேசன்]

அவர்கள்கூடச் சொன்னார்கள். அப்பொழுது அமைச்சரவர்கள் தன்னிறைவுத்திட்டத்தில் குறைகள் இருந்தால் அதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று கேட்ட நேரத்திலு. குறைகளைச் சுட்டிக்காட்ட முடியாமல் அத்துடன் அந்த உறுப்பினர்கள் பேச்சை முடித்தார்கள்.

நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், முதல்ஆண்டில் 69 யூனியன்களிலும்இரண்டாவது ஆண்டில் 150 யூனியன்களிலும் தன்னிறைத் திட்டத்தைக் கொண்டு வந்து இந்த 219 ஒன்றியங்களிலேயும் 136 கோடி ரூபாய்க்கு நிலையான சொத்துக்கள் ஏற்படக்கூடிய விதத்திலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல், அந்தத் திட்டங்களிலே 18,000 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகளும், ஆதிதிராவிடர்களுக்காக 25,000 வீடுகளும், குழந்தைகள் படிப்பதற்காக 2,717 பள்ளிக் கட்டிடழ்கள் கட்டி முடிக்கப்படும் மீதியிருக்கும் 159ஒன்றியஙகளில் தன்னிறைவுத் திட்டம் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும் என்று சொல்லும்பொழுது எங்களுடைய உள்ளமெல்லால் பூரிக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேரூராட்சிகளும், நகராட்சிகளும் விடப்பட்டிருக்கின்றன அவைகளும் வரும் ஆண்டுகளில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று ஆளுநர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை எண்ணிப் பார்க்கும்பொழுது எங்களைப்போன்ற பஞ்சைப்பராரிகளாக இருக்கின்ற நகரசபைகளில் இருக்கின்றனவர்கள் இவைகள் விடுப்ட்டு விட்டனவே என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில் இப்படிப்பட்ட நல்ல திட்டத்தை புரட்சித் தலைவரவர்கள் ஆட்சி கொண்டு வந்திருப்பதை மனப்பூர்வமாக நான் பாராட்டுகிறேன்.

இடப்பாடி நகரசபை நோய்வாய்பட்ட குழந்தைக்குச் சமமாக இருக்கிறது. அதற்கு எந்த விதமான வருமானமும் இல்லாமல், பலலட்சக் கணக்கான ரூபாய்களை ஆசிரியர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கக்கூடிய நகரசபையாக இருக்கிறது.

ஆகவே, ஒரு தாய் எப்படி தன்னுடை நோயாளி குழந்தையைக் கண்ணும்கருத்துமாக கவனித்து வருகிறாரோ, அதைப்போல இடப்பாடி நகரசபையை, தாய்க்குச் சமமாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவரும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் கண்ணும் கருத்துமாகக் கவனித்து அங்கு குடி தண்ணீர் வசதிகளையும் போக்குவரத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த ஆண்டு பாரதிக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில், உச்சிமீது வானிடிந்து விழுகின்றபோதிலும் அச்சமில்லை, அச்சமில்லை

[திரு. இ. கணேசன்] [1982 பிப்ரவரி 8

என்று பாரதி பாடியதை நினைவூட்டி, எங்கள் உச்சிமீது வானிடிந்து விழுகின்றபோதிலும், திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும், எதிர்கட்சித் தலைவர்களும், எத்தனை திரு. விளையாடல்கள் நடத்தினாலும், எவ்வளவு * * சொன்னாலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கேபேசிய கம்யூனிஸ்ட் அங்கத்தினர்களிலே பலபேர் அதோடு எங்களுடைய கட்சித் தலைவர் நெடுமாறன் அவர்களெல்லாம் மக்களுடைய பிரச்சனை தீரவேண்டும் என்றால் மத்திய அரசாங்கத்தை இன்ன இன்ன கோரிக்கைகளுக்காக நாம் அணுகி அந்தக் குறைபாடுகளை தீர்க்க பல விஷயங்களைச் சொன்னார்கள். அதை அமுல்நடத்துவதற்கு நம்முடைய ஆளும்கட்சியும் பிரதானஎதிர்கட்சிகளும் மற்ற எல்லா கட்சிகளும் சேர்ந்து மத்திய அரசை அணுகி, அந்த குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழிவகை செய்வதிலே கண்ணும்கருத்துமாக இருக்கவேண்டுமே தவிர, அதைவிட்டு விட்டு இன்றைக்கு என்ன நிலையிலிருக்கிறது? ஆளுங்கட்சிகாங்கிரஸ்(இ) கட்சியோடு சேர்ந்து பிரதான எதிர்கட்சியைக் கீழே தள்ளுவதற்கு என்னவழி? அல்லது, பிரதான எதிர்கட்சி காங்கிரஸ்(இ)யோடு சேர்ந்து கொண்டு ஆளுங்கட்சிக்கு எந்த வகையிலே தொந்தரவு கொடுப்பது என்ற நிலைமை இருக்குமானால் அது நல்லதல்ல. மக்களுடைய குறைபாடுகளைத் தீர்க்க முடியாது என்பதை சொல்வதோடு அதற்கு மாத்திரம் ஒரு சின்ன கதை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மகளிரைப் பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னீர்கள். மகளிரைப்பற்றி மட்டும் பேசுங்கள். அரசியலை மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்::** பலாப்பழத்திற்கு குழந்தை பறிபோன ஓடை என்று திருநெல்வேலியில் ஒரு ஓடை இருக்கிறது. அந்த ஓடையில் தண்ணீர் வந்ததாம். அதிலே ஒரு பலாப் பழம் மிதந்து கொண்டு வந்திருக்கிறது. ஒரு பெண் தன்னுடைய கைக்குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு அந்த ஓடையின் ஓரமாகச் சென்றிருக்கிறாள், அந்த ஓடையில் பலாப்பழத்தைப் பார்த்தவுடன், அந்தப் பலாப் பழத்தின் மீது ஆசை வந்ததாம். உடனே, இரண்டு கையை ஏந்தி அந்தப் பலாப் பழத்தை எடுத்தார். உடனே குழந்தை தண்ணீரிலே அடித்துக் கொண்டு போயிற்று. அந்த மாதிரி கதையாகி விடாமல், தமிழகத்து

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 பிப்ரவரி 8] [திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்]

மக்கள் உங்களை நம்பி ஓட்டளித்திருக்கிறார்கள். அந்தத் தமிழக மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வதற்கு முற்படாமல், பலாப் பழத்திற்கு ஆசைப்பட்டு குழந்தையைப் பறிகொடுத்த மாதிரி, ஆளும் கட்சியும் பிரதான எதிர் கட்சியும் காங்கிரஸ் உறவை நம்பி தமிழகத்து மக்களின் நலனில் அக்கறை இல்லாமல் இருந்துவிடக்கூடாது என்பதற்காக இக்கதையைச் சொல்ல நினைத்தேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு நம்முடைய கவர்னர் உரையிலே நீதிமன்றத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களிலே இம்மாத முதல் தேதியிலிருந்து தமிழிலே எல்லா நீதியும் வழங்குவார்கள். என்று சொல்லியிருப்பதைப் பார்த்து நாங்கள் வரவேற்கிறோம், மனப்பூர்வமாகஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்த கதையாக ஆகி விடக் கூடாது என்பதற்காக ஒன்றைச் சொல்கிறேன். இதை எங்களுடைய தலைவர் நெடுமாறன் அவர்கள் சொல்வார்கள் என்று நினைத்தேன். அவர்கள் ஏனோ விட்டு விட்டார்கள். காங்கிரஸ் மந்திரி சபை 1957—ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதி ஒரு கமிட்டி அமைத்தது. அதாவது, தமிழாக்கம் செய்ய ஒரு கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியிலே ஒருசில முக்கியமான அறிவாளர்களை நியமித்தது,அவர்கள் ஏ முதல் சி வரைக்கும் தமிழாக்கம் செய்தார்கள். பிறகு, 1965—ஆம் ஆண்டு டிசம்பர் 16— ஆம் தேதி நீதிபதி திரு. எம். அனந்த நாராயணன், ஐ.சி.எஸ் அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி நியமித்தார்கள். அவர்கள் ஏ டு எச் வரை தமிழாக்கம் செய்தார்கள் பிறகு, அந்தக் கமிட்டி 1969— லே அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். இடைக்காலம் 10 ஆண்டுகாலம் அது சும்மா இருந்தபிறகு, 1979—லே இந்த அரசு வந்தபிறகு ஒரு கமிட்டி நியமித்தார்கள். அதாவது, ஜஸ்டிஸ் மகராஜன் தலைமையிலே ஒரு கமிட்டி. அது ஒரு ரிப்போர்ட் கொடுத்தது. அவை இரண்டும் அப்படியே,இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இன்னும் தமிழாக்கம் செய்யப்படாமல் பல சட்டங்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன.

[பிற்பகல் 150]

அதிலே இந்த

Criminal procedure code, contracts Acts, Transfer of property Act, Sale of goods Act, limitation Act, Negotiable instruments Act.

இவைகளுக்கு எல்லாம் தமிழாக்கம் இல்லை.

இவைகள் எல்லாம் இல்லாமல் தமிழிலே நீதி வழங்க வேண்டும் என்று கொண்டு வருவோமானால், திரிசங்கு சொர்க்கம் போன்று நீதிபதிகளுக்கு தடுமாற்றம், வக்கீல்களுக்கும் தடுமாற்றம் என்ற நிலைமை வந்து விடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட

விரும்புகிறேன். தயவு செய்து இதை எல்லாம் தமிழாக்கம் செய்த பிறகு, தமிழிலே கொண்டு வந்தால் அதை மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டுவோம்.

அதற்கு அடுத்து இன்றைக்கு கவர்னர் உரையிலே மிகப் பெரிய காரியத்தை மறந்து விட்டார்கள். நாம் கம்பேர் செய்து பாத்தால் மற்ற ஸ்டேட்டுகளுக்கும் நமக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பது தெரியும். ஆனால் எங்கே பார்த்தாலும் கொலை, எங்கே பார்த்தாலும் திருட்டு, பஸ்ஸிலே முசமூடி கொள்ளைக்காரன், தெருவிலே பெண்கள் வெளியே சென்றால் மோட்டார் சைக்கிளிலே வருகின்றவன் ஏறு என்கிறான். அப்படி அந்தப் பெண்கள் ஏற மறுத்தால் கத்தியைக் காட்டி அந்த நகைகளைப் பறித்துக் கொண்டு ஓடிவிடுகிறான். சென்னை பூந்தமல்லி ரோட்டிலே நடந்திருக்கின்றது. வீடுகளிகளிலே நுழைந்து பெண்களை மானபங்கப்படுத்தி, கற்பழிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலைகளை நயமுடைய ஆளுநர் - ''நான் விரும்பும் சுதந்திர இந்தியாவிலே ஒரு அழகான இள வயது மங்கை வயிரமும் வைடூரியமும் மாட்டிக் கொண்டு இரவு 10 மணிக்குத் தன்னந்தனியாக பயமின்றி நாட்டிலே நடந்து செல்ல வேண்டும்''. அந்தச் சுதந்திர இந்தியாவை நான் பார்க்க விரும்புகிறேன் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அந்த காந்தி பாரம்பரியத்திலே வந்த நம்முடைய ஆளுநர்-அவர்கள் உரையிலே இதைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் விட்டுவிட்டா டார்கள்.

கும்பகோணத்திலே தோட்ட வேலை செய்து கொண்டிருந்த ஒரு அரிசனப் பெண் மணியைத் தோட்ட முதலாளி மானபங்கப் படுத்தி கற்பழித்து விட்டார். அப்பேர்ப்பட்ட சூழ்நிலை வருகிறபோது இந்த அமைச்சரவை என்ன செய்திருக்க வேண்டும் - அப்படிப்பட்ட குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை கொடுத்து, திருடிய கையை வெட்டிப் போட்டால், ஓரளவுக்குக் குற்றங்கள் குறையும் என்பதற்காக சுட்டிக் காட்ட ஆசைப் படுகிறேன். எனவே தான், இப்பேர்ப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இந்த ஆட்சி இன்றைக்கும் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. தன்னிறைவுத் திட்டமானாலும் சரி, வறட்சி நிவாரணப் பணி ஆனாலும் சரி, இன்னும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், இப்பேர்ப்பட்ட குறைபாடுகள் இருக்கிறதே இதற்கு ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள் - பெண்கள். எப்படி தனியாக நடந்துசெல்ல முடியும் - பெண்கள் எப்படி தனியாகப் பள்ளிக்குச் செல்ல முடியும் - ஆசிரியர்கள் எப்படி தனியாக உத்தியோகம் செல்ல முடியும் - இதையெல்லாம் இந்தக் கூட்டத்



தொடரிலேயே ஒரு கடுமையான சட்டம் கொண்டு வந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே ஒரு கேள்வி கேட்டபோது, அதற்குப் பதில் கிடைக்கும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்தியாவிலேயே உள்ள சுற்றுலா மையங்களுக்கு வெளிநாட்டிலிருந்து தினசரி வருகிறார்கள். மைய அரசு கொடைக்கானலை ஒரு சிறந்த வெளிநாட்டுச் சுற்றுலா மையமாக்க நினைத்திருக்கிறது. அங்கு 350 குழந்தைகள் வெளி நாடுகளிலிருந்து வந்து படிக்கின்றனர் 47 நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். அங்கே செல்லக் கூடியவர்கள் கொடை ரோடில் தங்குவதற்கு இடமில்லாமல் சிரமம் அடைகின்றார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாமல்கூட கஷ்டம் அடைகின்றார்கள். இதன் காரணமாக, சுற்றுலாப் பயணிகள் இங்கே தங்குவதில்லை. கேரளாவிலுள்ள கோவளத்திற்கும் மற்ற பகுதிகளுக்கும் சென்று விடுகிறார்கள். நமக்கு வரவேண்டிய வருமானம் எல்லாம் இப்பகுதிகளுக்குச் செல்கின்றன ஆகையினாலே, மத்திய அரசு எடுத்து நடத்துவதற்குப் பக்க பலமாக கொடைக்கானல் ரோடில் நமது அரசே, சுற்றுலா மையத்தை விரைவிலே ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் செய்தால், சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலே எல்லா பணிகளையும் செய்கிறோம். இருந்தாலும் கூட, ஒரு போர்வெல் போடுவதற்கு ரூ. 15,000 ஆகிறது. ஒரு கிராமத்திலே 4, 5 போர்வெல் போடுகிறோம். அப்படி போடுகிற போது சில இடங்களில் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகையினாலே. அதை ஒரு காம்ப்ரஹென்சிசிவ் ஸ்கீமாக எடுத்து, ரூ. 20 இலட்சம், ரூ. 30 இலட்சம் பணத்தை ஒதுக்கி, 15 கிராமம், 20 கிராமம் என்று எடுத்துக் கொண்டு 5 மைல் சுற்றளவிற்குள் இப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றி, தண்ணீர் வழங்கும் நிலையை உருவாக்கினால் குறைபாடு நீங்கும். அதை மாற்றி அமைப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 9—2—1982-ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவையின் முன் வைக்கப் பெற்ற ஏடுகள்:

எதுவுமில்லை.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 9
தை 27, துன்மதி, திருவள்ளுவர் 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் :

'' செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் ''

திட்டங்களைச் செயல்படுத்தும் முறைகளை அறிந்து இருந்தாலும், அன்றைய உலகப் போக்கினை புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வகையில் செயல்படுத்துவதே நல்லது.

### 1. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

திரு. மு. அம்பிகாபதி : சார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் மாணவர்கள் 12 பேர் மிகவும் பயங்கரமான நிலையில் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ஐந்து நிமிட நேரத்திற்கு முன்புதான் என்னுடைய அறையில் அறிவிப்புக் கொடுத்தீர்கள். அதற்குள்ளே கேட்டால், எப்படி இங்கே அனுமதிக்க முடியும் ?

திரு. மு. அம்பிகாபதி : அவர்கள் சீரியஸான கண்டிஷனில் இருக்கிறார்கள். 6 நாள் உண்ணாவிரதம் இருந்ததன் காரணமாக, செலைன் வாட்டர் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய டாக்டர்களிடத்தில் சொல்ல வேண்டும். இங்கே அவையில் அதைப் பற்றி எழுப்புவது முறையல்ல.

திரு. மு. அம்பிகாபதி : இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏதேனும் செய்வார்களோ என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப்பட்ட நடை முறைகளை நான் இங்கே அனுமதிப்பதற்கு இல்லை. மாண்பு மிகு கல்வி அமைச்சர் ஏதேனும் செய்ய வேண்டும் என்று விரும்பி னால், அது குறித்து மாண்புமிகு அமைச்சரின் அறைக்கு நேரடி யாகச் சென்று சொல்ல வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** நேற்று இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதிக்கின்றநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர் கள் மாணவர்களைச் சந்தித்துப் பேசுவதாகச் சொன்னார்கள்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்த மாணவர்களைச் சந்தித்து பேசுவதாக நேற்றே இங்கு உறுதி மொழி கொடுத்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தித்துப் பேசியது குறித்து இப்போது நாம் விவாதிக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் சந்தித்துப் பேசியதைக் குறித்து அறியவேண்டுமானால், அவருடைய அறையில் நேரில் சந்தித்துக் கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, எல்லா உறுப்பினர் களும் உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) யிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி).**

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தமிழக சட்ட மன்றக் கூட்டவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது அகில இந்திய பார்வார்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1982-ஆம் ஆண்டு கூட்டவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையில் குறிப் பிடப்பட்டு இருப்பதைப் பார்க்கின்றபோது, சென்ற ஆண்டு உரை நிகழ்த்தியபோது வரலாற்றுச் சிறப்பு மிக்க உலகத் தமிழ்மா நாட்டை தமிழக அரசு நடத்தியதையும், அந்த சிறப்பான மா நாட்டுக்குப் பின்னால் இந்த ஆண்டு மகத்தான பாரதிக்கு நூற் றாண்டு விழா எடுத்து, அந்தக் கவிஞனுக்கு உலகம் புகழும் அளவிற்கு வரலாற்றிலேயே இடம் பெறும் அளவிற்கு இந்த ஆண்டு முழுவதும் பாரதி விழாவைக் கொண்டாட வேண்டும் என்று இந்த அரசு அறிவித்து இருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. அதற்கு மேலும் கவர்னர் அவர்கள் உரையிலே ஏதாவது திட்டங் கள் அறிவித்து இருக்கிறார்களா என்று சொன்னால், இந்த ஓராண்டு இடைவெளியில் வரலாற்று சிறப்புமிக்க உலகத் தமிழ் மாநாட்டையும், அதற்குப் பின்னால் மகாகவி பாரதிக்கு விழா எடுத்து இருக்கிறோம் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.





சென்ற ஆண்டு இந்த மாநிலத்திலே வறட்சிப் பணியைச் சந்தித்து சிறப்பாக நிறைவேற்றினோம் என்று, சென்ற ஆண்டு நடந்த செயல்களைத் தவிர இந்த ஆண்டுக்கு ஏதாவது குறிப்பிடப்பட்டு இருக்கிறதா என்று துருவிப் பார்ப்போமானல் எந்த நல்ல திட் டங்களும் அறிவிக்கப்படவில்லை என்பதுதான் இங்கே தெரிகிறது.

வறட்சி நிவாரணப் பணிகாலத்திலே தமிழகத்தின் மாநில அரசு 55.24 கோடி ரூபாய் செலவு செய்தது. ஆனால், மத்திய அரசு 48.90 கோடி ரூபாய் செலவிடவே ஒப்புதல் அளித்தது என்பதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசு தமிழக அரசு கேட்ட அந்த அளவிற்கு நிதி கொடுக்கவில்லை என்பதை இங்கே குறிப் பிட்டு இருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணப் பணிகள் நல்ல முறையிலே நடைபெற் றாலும் அவை இந்த நாட்டிற்கு எந்த அளவுக்கு பயன்பட்டன, எந்த அளவுக்கு நிரந்தர நிவாரணம் ஆற்றியுள்ளன என்று பார்த்தால் நிச்சயமாக நிரந்தர நிவாரணம் அளிப்பதாக அமைய வில்லை. அந்த நேரத்திலே கூட நாங்கள் எல்லாம் சுட்டிக் காட்டினோம். கோடிக் கணக்கான பணத்தைச் செலவிடுகிறீர் கள். ஆண்டுதோறும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிற முகவை, மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில், இந்த வறட்சி நிவாரணப் பணியைப் பயன்படுத்தி, குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகப் போக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால் அந்த ஆண்டில் மட்டும் குடிநீர்ப் பற்றாக்குறை போக்கப்பட்டதே தவிர நிரந்தரமாகப் போக்கப்படவில்லை ; நிரந்தரமாக நிவா ரணம் ஏற்படவில்லை.

அதைப்போன்று ஆளுநர் உரையிலே குறிப்பிடும்போது மத்திய அரசினுடைய உணவுப் பங்கீடு முறையானது நாம் கேட்கின்ற அளவுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே இந்திய உணவுக் கழகத்தை நமது மாநில அரசு 10,800 டன் கோதுமை வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் 4,000 டன் மட்டுமே கொடுத்திருக்கிறார்கள் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் உணவு பற்றாக்குறையை நாம் நிரந்தரமாக நீக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறபோது மத்திய அரசு மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற அளவுக்கு நம்முடைய மாநிலத்திற்கு உணவு தானி யங்களைக் கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அதற்கு என்ன பரிந்துரை என்றால் தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டு எழுதி இருக்கிறது ; மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிறது என்ற வார்த்தைகளைத் தவிர மத்திய அரசை வற் புறுத்திப் பெறுவதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குமாறாக நமது தமிழகத்தில் இருக்கிற

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 பிப்ரவரி 9

இரண்டு பெரிய இயக்கங்களும், திராவிட முன்னேற்றக் கழகமும், ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இங்கே சட்டமன்றத்தில் போட்டி போடுகிறார்கள்; ஒருவர் ஊர்வலமாகத் திருச்செந்தூருக்குப் போகிறேன் என்றால் இன்னொருவரும் திருச்செந்தூருக்குச் செல்கிறேன் என்கிறார். இதை விட்டுவிட்டு, இந்த இரண்டு இயக்கங்களும் மத்திய அரசை நோக்கி போராட டில்லியை நோக்கி யாத்திரை தொடங்கினால் எந்த அளவுக்கு நன்றாக இருக்கும் என்பதை இந்த இரண்டு இயக்கங்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அவர்களுடைய பயணத்தை வடக்கு நோக்கித் தொடங்கினால், மத்திய அரசிலே இருக்கிற சர்வாதிகாரத்தை எதிர்த்து டில்லியை நோக்கிப் புறப்பட்டால் சிறப்பாக இருக்கும்; நாங்கள் எல்லாம் அதை வரவேற்கிறோம்.

அது மட்டுமல்ல. தமிழகத்திற்கு மைதாவை மைய உணவுக் கழகம் கொடுக்கிறது. இங்கே அவை முன்னவர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் இது பற்றி நேராகவே விவாதித்திருக்கிறேன். நாம் பெறுகின்ற கோதுமையைத் தமிழ்நாட்டில் இருக்கிற 9 மில்களுக்கு அரைத்துத் தருவதற்காகக் கொடுத்து, மைதா விலையை அரசு கட்டுப்படுத்தியிருக்கிறது. அவர்கள் அரைக்கிற மாவில் 40 சதவீதத்தை நம்முடைய அரசுக்குக் கொடுக்க வேண்டும்; 60 சதவீதத்தை அவர்களே வைத்துக் கொள்ளலாம். ஆனால், அவர்கள் அரசு நிர்ணயித்த விலைக்கே விற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய உணவுக் கழகத்திடமிருந்து கோதுமையை அரசே வாங்கி இந்த 9 மில்களுக்கும் அரைத்துத்தருவதற்காகக் கொடுக்கிறது. அதிலே 40 சதவீதத்தை வாங்கிக் கொண்டு மீதி 60 சதவீதத்தை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்றும் அரசு நிர்ணயித்த விலைக்குத்தான் விற்க வேண்டுமென்றும் சொல்வதற்குப் பதிலாக எல்லாவற்றையும் அரசே வாங்கி விநியோகித்தால் மைதாவின் விலையைக் கட்டுப்படுத்த முடியும். இன்றைக்கு அரசு அந்த மில் அதிபர்களிடம் விட்டு வைக்கும் மைதாவை அவர்கள் இஷ்டம் போல் விற்று கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள். அதனால் ரூபாய் 2.60க்கு விற்க வேண்டிய மைதா ரூபாய் 3.60க்கு விற்கப்படுகிறது; அதன் மூலம் பல கோடி ரூபாயை அவர்கள் கொள்ளை இலாபமாகப் பெறுகிறார்கள். இதுபற்றி அமைச்சரிடம் மனு கொடுத்து விவாதித்திருக்கிறேன். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறையில் விநியோகம் செய்வது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையின் மூலம் சாதாரண கிராமப் புறங்களில் எந்த அளவுக்கு விநியோகம்



1982 பிப்ரவரி 9] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்கு எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒரு லிட்டர் எண்ணெய் வாங்கினால் 800 மில்லி தான் இருக்கிறது. அதைப் போல சீனியும் குறைவாகத்தான் இருக்கிறது. அதை இந்த அரசு கவனித்து மக்களுக்குக் கொடுக்கின்ற பொருட்கள் கொடுக்கின்ற அளவுக்குச் சரியாகப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு உணவுத் தானிய கொள்முதல் என்ற பெயரால் விவசாயிகள் என்னென்ன அவதிப்படுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

(முற்பகல் 9.10)

உணவினைக் கொள்முதல் செய்கின்றபோது மொத்த வியாபாரியிடம்தான் கொள்முதல் செய்யவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருந்த போதிலும் அங்கே இருக்கின்ற தாசில்தார்களும் மற்ற அதிகாரிகளும் விவசாயிகள் நகரப்புறங்களில் தங்களது பொருட்களை விற்பதற்காக வண்டியிலே எடுத்துச் செல்கின்ற நேரத்தில் அவர்கள் ஏதோ கொள்ளைக்காரர்கள் திருடிக் கொண்டு வருவது போன்று கருதி விவசாயிகளிடமிருந்து அந்தப் பொருட்களைக் கொள்முதல் செய்வதோடுமட்டுமல்லாமல் அந்த விவசாயிகள் மீது வழக்கும் தொடருகிறார்கள். ஆனால் அந்த உணவு தானியத்தை உற்பத்தி செய்வதற்கு அந்த விவசாயி இரவு பகலாக வெய்யில், மழை, பாம்பு போன்ற அத்தனை கஷ்டங்களையும் அனுபவித்து உழைத்து பாடுபடுகின்றான். அப்படிப் பாடுபட்டு உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்காக எண்ணுகின்ற நேரத்தில் அவனுக்குப் போதிய விலை கிடைக்காமல் அவதிப்படுகிறான். இந்த நிலையில் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்காக எடுத்துச்செல்கின்ற போது அவர்கள் நெல்லைத் திருடி எடுத்துச் செல்வதாகக் குற்றவாளிகள்போல் அவர்கள் மீது வழக்கு போடப்படுகின்றதே, இந்த நிலையினைப் போக்குகின்ற வகையிலே அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும்.

அடுத்து வேளாண்மை விளைபொருள் அரசு கொடுக்கின்றது என்று சொல்கிறார்கள். அரசின் கிடங்குகளிலே வைக்கப்பட்ட அந்தத் தானியங்கள் விவசாயிகளுக்கு சப்சிடியாகக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் அந்தப்பொருட்களை ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் விற்று பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை இந்தஅரசின் கவனத்திற்குக்கொண்டு

வராமல் இருக்க முடியாது. இந்தக் குறையினை நிவர்த்திக்க வேண்டும். மேலதிகாரிகள் போய் அந்தப் பொருட்கள் சரியாக வினியோகிக்கப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

அடுத்து, விளைபொருள் ஏற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணம் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை மத்திய அரசுதான் குறைக்க வேண்டும். ஆகவே விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பது பற்றி மாநில அரசு கவலை கொள்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். மத்திய அரசினால் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க முடியாத அளவுக்கு அவர்கள் உலக வங்கியிலேயிருந்து 5,000 கோடி ரூபாய் கடன் வாங்கி இருக்கிறார்கள். உலக வங்கி கொடுத்திருக்கின்ற நிபந்தனையின்படி விலைவாசியை ஏற்ற வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அந்த வகையிலே மத்திய அரசு ஒப்புதல் கொடுத்துத்தான் அந்தக் கடனை வாங்கி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதற்காகத்தான் எம்.ஐ.எஸ்.ஏ. என்று சொல்லப்படுகின்ற இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றைக்குகூட நான் பத்திரிகையில் பார்த்தேன். 16 வகைப்பட்ட ஊழியர்கள் அந்தச் சட்டத்தின்படி போராடக்கூடாது என்றும், அப்படிப் போராடினால் அவர்களுக்குக் கடும் தண்டனை கொடுக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சட்டம் பாராளுமன்றத்திலே வருகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்தார்கள். அங்கே இருக்கின்ற நிலைமை அப்படி.

இங்கே தமிழகத்திலே உள்ள சட்டமன்றத்திலே பார்த்தால் முந்தாநாள் காலையிலே இங்கே சட்டமன்ற உறுப்பினர்-அமைச்சர் மோதல் என்றுசொல்லப்படுகின்ற நிலைமை இருந்து இருக்கின்றது. அப்படி ஒன்றரை மணி நேரம், அரை மணி நேரம் மோதுவதற்கென்றே செலவிடப்படுகின்றது. ஆனால் டெல்லியிலே இவர்கள் ஒருமுனைப்பட்டு ஆதரிக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏன் இங்கே இருக்கக் கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். பல இலட்ச ரூபாய் செலவழித்து நடத்தப்படுகின்ற இந்த சட்டமன்றத்தில் நேற்று முந்தைய தினம் 1½ மணி நேரமும் நேற்று அரை மணி நேரமும் யாருக்கும் எந்தவிதப் பயனும் இல்லாமல் உங்களிடையே உள்ள பகைமையைக் காட்டிக் கொள்ள இங்கே மோதுகிறீர்கள். ஆனால் டெல்லியிலே ஒன்றுபட்டு ஆதரிக்கிறீர்கள் என்று சொன்னால் அது மிக வேதனையாக இருக்கின்றது. எதற்கெடுத்தாலும் வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது என்று சொல்லி ஆரம்பித்த நீங்களே இப்போது டெல்லிக்கு அதிகமான அளவுக்கு ஆதரவு தருகிறீர்கள். முன்னர் நான் பத்திரிக்கையிலே பார்த்திருக்கிறேன். எதைக்



கொடுத்தாலும் டெல்லிக்குக் காவடி எடுக்கலாமா என்று திராவிட இயக்கம் பத்திரிகைகளிலே பத்தி பத்தியாக எழுதியது. ஆனால் இன்றோ இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஆதரிக்கிறீர்களே, ஏன் ?

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் வரிந்து கட்டிக் கொண்டு காங்கிரஸ் பேரியக்கத்தை மத்தியிலே ஆதரிக்கிறார்கள் என்றும் இங்கே ஒருவருக்கொருவர் தகராறு செய்கிறார்கள் என்றும் எடுத்துச் சொன்னார்கள். இருவருக்கும் இருக்கிற தகராறுகளைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் என்ன முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, அந்தத் தகராறுகளைத் தீர்ப்பதற்கு நான் முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அந்த முயற்சிகளை நான் ஏன் எடுக்க வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் பேசாமல் இருந்தால், அல்லது எதை எப்படி எவ்வாறு பேசுவது என்பதைத் தெரிந்து சட்டமன்றத்திலே நீங்கள் பேசியிருந்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தவிர்த்திருக்க முடியும். இது போன்ற நிகழ்ச்சிகள் வலுக்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். இதையும் ஏன் குறிப்பிட்டேன் என்றால் அந்தக் காலங்களில் திராவிட இயக்கம் வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று சொன்னார்கள். இன்று அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு பிரிவினராக இருந்தாலும் இருதரப்பினரும் மத்தியில் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். அப்படி வடக்கே வாழ்வதைப் பார்த்துக் கொண்டு தெற்கே தேய்வதைப் பார்த்துக் கொண்டு ஏன் அங்கே அவர்களுக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தான் கேட்கிறேன். உங்கள் போராட்டத்தை அவர்களை எதிர்த்து ஏன் நீங்கள் திருப்பக்கூடாது ? ஒவ்வொரு பிரச்சினைக்கும் கேட்டால் மத்திய அரசு கொடுக்கவில்லை என்கிறீர்கள். அப்படி சர்வாதிகார போக்குகள் கொண்ட மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிற திருமதி இந்திரா காந்தி அம்மையாரைக் கண்டித்து ஏன் நீங்கள் போராடக் கூடாது என்று கேட்கிறேன் ? இன்றைக்கு கர்நாடக முதல்வர் அவர்கள் ......(குறுக்கீடு).

*திரு. எஸ். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மத்தியிலே சர்வாதிகார ஆட்சி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்.....(மணியடிக்கப்பெற்றது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொருவருடைய அபிட்
பிராயம் ஒவ்வொரு மாதிரி இருக்கும். சர்வாதிகாரம், சமத்துவம்,
சமாதானம், ஜனநாயகம், சகோதரத்துவம் போன்ற வார்த்தை
கள் எல்லாம் அரசியலில் சகஜம். அவருடைய கருத்தை அவர்
சொல்கிறார். இப்படி குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தால்
எப்படிஅவர் பேசிமுடிப்பார். ......(குறுக்கீடு).

**திரு. எஸ். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, நான்
குறுக்கிடவில்லை. விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஜனநாய
கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை மத்தியிலே சர்வாதி
கார ஆட்சி நடக்கிறது என்று சொல்கிறாரே, அவ்வாறு அவர்
கள் சொல்வதற்கு விளக்கம் கேட்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** தலைவர் அவர்களே, சர்வாதி
கார ஆட்சிதான் மத்தியில் இருக்கிறது என்று மீண்டும் சொல்
கிறேன். காரணம் மத்தியிலே இருக்கிற அரசு உள்நாட்டுபாது
காப்புச் சட்டம் என்ற பெயரால் எதிர்க்கட்சிகளை பழிவாங்கு
கிற ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே அந்த
அரசு ஜனநாயக விரோத அரசு என்றகாரணத்தால் சர்வாதிகார
அரசு என்று சொன்னேன்.

அதுமட்டுமல்ல. கர்நாடக மாநில முதல்வர் ஒரு அறிவிப்பைக்
கொடுத்திருக்கிறார்கள். மேகதாது திட்டத்திற்கு மத்திய அரசின்
அனுமதி பெற்று உலக வங்கி பணம்கொடுக்க இருக்கிறது என்று
அறிவித்திருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால் நம்முடைய
ஒகேனக்கல் திட்டத்திற்கு அனுமதி அளிக்க அந்த அரசு ஏன்
மறுக்கிறது ? அப்படிப்பட்ட புதிய திட்டத்திற்கு தமிழகத்திற்கு
ஏன் அனுமதி கொடுக்கக் கூடாது என்று நீங்கள் எல்லாம்ஒன்று
பட்டு மத்திய அரசிற்கு எதிராக ஏன் போராடக் கூடாது என்
பதைத்தான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, திருப்பத்தூர் இடைத் தேர்தலின் போது
பார்த்தோம். நாடே பார்த்தது. இங்கே இருக்கும் இரண்டு
இயக்கங்களும் இந்திரா காந்தியின் இயக்கத்தை ஆதரித்தார்கள்.
ஆனால் அவர்கள் யார் ஆதரவும் வேண்டாம் என்று சொன்னா
லும் அங்கே போய் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்தார்கள்.
அப்படி ஆதரித்ததற்காக இப்பொழுது காரணம் சொல்கிறார்கள்.
என்னவென்று சொன்னால் மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சொல்கிறார்கள், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
இறந்து விட்டதால் அந்த இடத்தை அவருடைய கட்சிக்கே
விட்டுக் கொடுப்பது என்பதை கொள்கையாக எடுத்து இதை
ஆதரித்தோம் என்று சொன்னார்கள். அதுபோலவே இதற்கு
முன்பு ஒரு இடைத் தேர்தல் நடந்த காலத்தில், மூக்கையாத்





தேவர் மறைவுக்குப் பின்னால் அந்த இடத்தில் அதே பார்வர்டு
பிளாக் கட்சியைச் சேர்ந்த நான் போட்டியிட்ட போது நீங்களும்
தான் போட்டியிட்டீர்கள் ? அப்போது அந்தக் கொள்கை
எங்கே என்று கேட்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.
அப்படி ஆதரித்த நீங்கள் இப்பொழுது மத்திய அரசு எந்தத்
தொழில் துவங்கவும் அனுமதி கொடுப்பது இல்லை என்று சொல்
கிறீர்கள். மத்திய அரசை எழுதிக் கேட்டிருக்கிறோம். அவர்கள்
அனுமதி இன்னும் வரவில்லை என்கிறீர்கள். மின் கட்டணம்
குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னாலும் மத்திய அரசை
எழுதிக் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள்....(குறுக்கீடு).

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள், அரசியல் கட்சிகள் புதிதாகக் கொள்கைகளை உருவாக்கக்
கூடாது என்று சொல்கிறார்களா ? இயக்கத்தை ஆரம்பிக்கிற
போது எடுக்கும் கொள்கைகளைத் தவிர புதிய கொள்கைகளை
எடுக்கக் கூடாது என்று சொல்கிறாரா என்று அறிய விரும்பு
கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** கொள்கைகளை மாற்றக்
கூடாது என்று நான் சொல்லவில்லை. புதிய கொள்கைகள்
வகுக்கக்கப்படக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால்
அதற்கு முன்னதாக நடந்த அந்த இடைத் தேர்தலில் நான்
போட்டியிட்ட நேரத்தில் இந்தக் கொள்கை என்னவாயிற்று
என்றுதான் கேட்டேன்....(குறுக்கீடு).

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** அதனால்
தான் கேட்டேன். புதிய தத்துவத்தை ஒரு அரசியல் கட்சி
வகுத்துக் கொள்ளக் கூடாதா என்று.

(முற்பகல் 9.20)

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** புதுத் தத்துவம் பிறக்கலாம்.
புதுத் தத்துவங்களை நீங்கள் எடுத்துக்கொள்வதை நாங்கள்
மறுக்க முடியாது. நீங்கள் எந்தப் புதிய கொள்கையை வேண்டு
மானாலும் எடுக்கலாம். இன்று இந்திரா காங்கிரஸை ஆதரிக்
கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், இன்று
எடுத்துள்ள கொள்கை எப்படி எடுக்கப்பட்டது, இதற்கு முன்
னால் ஏன் எடுக்கப்படவில்லை என்பதை இந்த மன்றத்தில்
அறிவிக்க வேண்டும் என்ற வகையில்தான் குறிப்பிட்டேன்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 பிப்ரவரி 9

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மத்திய-மாநில அரசு உறவு நீடிக்க வேண்டும், ஒருமைப்பாடு
இருக்க வேண்டும் என்ற கொள்கையை எடுத்திருந்தால் மாநில
அரசின் உரிமைகள் பாதிக்கப்படுகிற போது, மாநில அரசுக்குக்
கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காதபோது ஒருமைப்
பாடு கொள்கை மத்திய அரசைக் கேட்பதற்குப் பயன் உள்ளதாக
இருக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்
டுள்ளது, மின் வெட்டு நீக்கப்பட்டு விட்டது என்று. இதைத்
தெளிவாகக் கூறியுள்ளார்கள். அப்படி மின் வெட்டு நீக்கப்
பட்டு விட்டது என்று தெளிவாக இதில் சொல்லப்பட்டிருந்
தாலும் நான் அன்றாடம் பார்க்கிறேன், விவசாயிகள் தங்கள்
பம்ப் செட்களை ஓட்டமுடியவில்லை. எந்த நேரத்தில் கரன்ட்
வருமோ என்று அந்த விவசாயிகள் அங்கேயே உட்கார்ந்து
கொண்டு சோகியம் பார்க்கிற அளவிற்கு இருக்கிறது. திடீ
ரென்று கரன்ட் கொடுப்பதன் மூலம் எங்கள் பகுதியில் ஒரு
நாளைக்கு 300 பம்ப் செட்கள் கெட்டுப்போய் இருக்கின்றன.
காரணம் கேட்டால் கம்பியில் வருகிற கரன்ட் குறைந்து வரு
கிறது என்று சொல்கிறார்கள். அல்லது டிரான்ஸ்
பார்மர் மாற்றிக் கொடுக்கும்போது அப்படி ஏற்பட்டு விட்டது
என்று சொல்கிறார்கள். எப்படிச் சொன்னா[illegible]ம், என்ன
சொன்னாலும் 300 பம்பு செட்கள், விவசாயி[illegible] பாதிக்கப்
படுகின்றபோது இப்போது மின்வெட்டு இல்லை[illegible]ன்று இங்கே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. திடீரென்று இரவு நேரங்களில்
நின்றுவிடுகின்றன. இதைப்பற்றியெல்லாம் சொன்னால்,
மத்திய அரசின் நிதி உதவி இல்லாவிட்டால் நாம் மின்சார
உற்பத்தியைப் பெருக்க முடியாது, புனல் மின் உற்பத்தியை
அதிகப்படுத்த வாய்ப்பில்லை என்று சொல்கிறார்கள். அனல்
மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னாலும்
மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும், அப்படிச் செய்தால்
தான் முடியும் என்று சொல்கிறார்கள்.

அடுத்து, திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள், மின் கட்ட
ணத்தை உயர்த்தாமல் இந்த அரசு இருக்க முடியாது, அவசியம்
ஏற்பட்டிருப்பதால் அவசியம் உயர்த்தியாக வேண்டும் என்று
அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அப்படி மின் கட்ட
ணத்தை ஏற்றுவதைவிட மின்சார இலாகாவில் வேலை
வாய்ப்பை அதிகமாகக் கொடுத்து அதன் மூலம் பணியாளர்
களுக்கு அதிகமாகப் பணத்தை நீங்கள் கொடுக்கிறீர்கள் என்ற
நிலை இருக்கிறது. அதைக் குறைத்து குறைந்த பட்சம்
விவசாயிகளுக்காவது—இப்போதே அவர்கள் குமுறிக்கொண்டிருக்
கிறார்கள். மின் கட்டணம் குறித்து போராடி பலர் உயிர்
நீத்திருக்கிறார்கள், இன்னும் மின் கட்டணம் உயருமானால்
விவசாயிகளின் நிலை எங்கே கொண்டு விடும் என்பதை நாம்



1982 பிப்ரவரி 9] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

எண்ணிப்பார்க்கக்கூட முடியாது. மத்திய அரசின் நிதி உதவி
இருந்தால்தான் முடியும் என்று சொல்லும்போது அதை வலி
யுறுத்தி அதிகமாகப் பெற்று மின் உற்பத்தியைப் பெருக்கி
கட்டண உயர்வைக் குறைப்பதற்கு மாநில அரசு நல்ல முயற்
சியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்னையைப் பற்றி இங்கே குறிப்
பிடப்பட்டிருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்னை ஒரு நீண்ட காலப்
பிரச்னையாக இருக்கிறது. அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண
அத்தனை அரசியல் கட்சிகளும், இங்கே இருக்கிற காங்கிரஸ்
கட்சி உட்பட, சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறோம்.
அப்படியிருந்தும் அதில் மத்திய அரசு தலையிட்டு ஒரு நல்ல
தீர்வைக் கொடுக்கத் தயங்குகிறது. மத்தியில் நமக்கு ஒரு அரசு
இருக்கிறதா என்ற கேள்வி பிறக்கிறது. நீர்ப்பிரச்னையில்
அவர்கள் இந்த அளவிற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதைப்
பார்க்கிறபோது இந்தக் காவிரி நீர்ப் பிரச்னை தொடர்ந்து
நீடிக்கிறது.......

* திரு. நா. சுந்தரராஜ்: மாற்றுத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரவையில் காவிரி நீர்
சம்பந்தமாகப் பேசும்போது மத்திய அரசாங்கத்தைக் குற்ற
சாட்டி [illegible]த்தியில் ஒரு அரசு இருக்கிறதா என்ற கேள்வியை
எழுப்பி[illegible]க்கிறார்கள். இன்றுள்ள தாவா, காவிரி நீர்ப்
பிரச்னை சம்பந்தமாக உள்ள தாவா நம் மாநிலத்திற்கும்
கர்நாடக மாநிலத்திற்கும் இடையே உள்ளதுதான். இதில்
மத்திய அரசு மத்தியஸ்தம் செய்து கொடுக்கிறது. தமிழ்
நாட்டின், தமிழ் நாட்டு மக்களின் நலன்கள் பாதிக்கப்படாமல்
இருக்க தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி நிச்சயமாக அரசாங்கத்
திற்கு ஆதரவாக இருக்கும், அரசு செய்கிற ஒப்பந்தத்திற்கு
ஆதரவாக இருககும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: நான் அதைத்தான் குறிப்
பிட்டேன். காங்கிரஸ் கட்சி உட்பட அனைவருமே காவிரி
நீர்ப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு இருக்
கிறோம். அதிலே காங்கிரஸ் இயக்கமும் ஆதரவு கொடுக்கிறது
என்றுதான் குறிப்பிட்டேன். மத்திய அரசு இருக்கிறதா என்று
சொன்னதற்கு திரு. சுந்தரராஜன் அவர்கள் வருத்தப்பட்டுக்
கொண்டார்கள். மத்திய அரசு முனைப்பு காட்டியிருந்தால்,
இந்தப் பிரச்னை நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னதாகவே
தீர்க்கப்பட்டிருக்கும். இரண்டு மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி
இருந்தபோதிலிருந்து இந்தப் பிரச்னை இருந்து வருகிறது.
இப்போது கர்நாடக மாநிலத்தில் மட்டும் மேகதாது திட்டத்
திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய
ஒகேனகல் திட்டத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை. இதை

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1982 பிப்ரவரி 9

பற்றி முன்னாலேயே பேசினேன். அப்போது மாண்புமிகு
உறுப்பினர் இல்லை என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட
பச்சாதாபம் காட்டுகின்ற ஸ்டெப் மதர்லி டிரீட்மென்ட் என்று
சொல்வார்களே, அதை தமிழகத்திற்கு காட்டுகிறது என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதேபோன்று, இந்தப் பிரச்னையில் மட்டுமல்ல, தமிழகமே
ஒன்றுதிரண்டு, இலங்கைத் தமிழர்கள் பிரச்னைக்காக
தீர்மானம் போட்டபோது, மத்திய அரசு எப்படி நடந்து
கொண்டது. சிலோனிலிருந்து தமிழகத்திற்கு வரும் அகதி
களுக்கு கொடுக்கப்படும் பணம் குறைவாக கொடுக்கப்படுகிறது.
ஆனால், அதே நேரத்திலே வட இந்தியாவில் பாகிஸ்தானி
லிருந்து வரும் அகதிகளுக்கு அதிகமான வசதிகள் செய்து
கொடுக்கப்படுகிறது. இந்த பாரபட்சத்தை மத்திய அரசு
காட்டுகிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.
சிலோனிலிருந்து வரும் அகதிகளுக்கு நமக்கு கொடுக்கப்படு
கின்ற மானியம் குறைவு ; 3 கோடிதான் கொடுக்கப்படுகிறது.
ஆனால், பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளுக்கு அதிகமான
சலுகைகள். வீடுகள் கட்டுவதற்கு, உணவுப் பொருள்கள்
கொடுப்பதற்கு ஆகியவற்றிக்கு அதிகமான தொகைகள் கொடுக்
கிறார்கள். கடன் கொடுப்பதற்கு நமக்கு 10,000 ரூபாய்
கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட பாரபட்சமான நிலைமையை
மத்திய அரசு காட்டுகிறது என்பதைத்தான் நான் இ நேரத்
திலே குறிப்பிட விரும்புகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்னை வரும்போது, இங்கே புதிதாக முகவை,
புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு வீணாகப் போகின்ற நீரை
விரிவுபடுத்தப்படும் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அதை விரிவுபடுத்தினால், பஞ்சப் பிரதேசமாக இருக்கின்ற
கிழக்கு முகவை பயன்பெறும், அதை இந்த அரசு முனைப்போடு
செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்
கிறேன்.

அதுமட்டுமல்ல. இதிலே ஊராட்சித் தேர்தல்கள் விரை
வில் நடத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்தலை
விரைவில் நடத்த வேண்டுமென்று நேற்றைய தினம்கூட சட்டம்
கொண்டு வரப்பட்டது. ஊராட்சி மன்றங்களுக்கு உண்டான
தேர்தல் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பிற்கிணங்க நிறுத்தப்
பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர்
அவர்கள் ஊராட்சி தேர்தலை விரைவிலே நடத்துவோம்
என்று சொன்னார்கள். பழைய சட்டப்படி தேர்தலை
நடத்தினாலும், அதற்கு கோர்ட்டு குறுக்கே நிற்காது



1982 பிப்ரவரி 9] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

10 ஆண்டுகளாக ஊராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் இல்லாத நிலையைத் தீர்ப்பதற்கு, இப்போதுள்ள
பழைய சட்டப்படி, அவர்களுக்கென்று ஒதுக்கீடு இல்லாமல்,
அவர்களை நியமனம் செய்யலாம். இதைத் தொடர்ந்து
சர்வகட்சி கூட்டங்களிலே சொல்லியிருக்கிறேன். ஒதுக்
கீட்டின் மூலம் சட்டச் சிக்கலைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.
தேர்தலை நிறுத்த வேண்டுமென்று உள்நோக்கத்தோடு இது
கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. 58-வது ஆண்டு பழைய
சட்டப்படி தேர்தலை நடத்தினால், நல்ல சீர்திருத்தங்களைக்
கொண்டு வர முடியும். இந்தப் பிரச்னை உச்ச நீதிமன்றத்திலும்,
மாநில நீதிமன்றத்திலும் தீர்க்கப்பட்ட பிறகு, செய்யலாம் என்று
சொன்னால், எப்போது தேர்தலைக் கொண்டு வரப் போகி
றீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதுமட்டுமல்ல. இப்போது சட்டம் ஒழுங்கு மிக நன்றாக
இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு
இந்த ஓராண்டு காலத்தில் மிகவும் கெட்டிருக்கிறது. கொலை,
கொள்ளை, கற்பழிப்பு ஆகிய சம்பவங்கள் நடப்பதாக தினமும்
காலையில் பத்திரிகையில் பார்த்தால் தெரிகிறது. மோட்டார்
சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு பெண்ணின்
சங்கிலியை அறுத்து விட்டான் என்ற செய்தியை பத்திரிகையில்
பார்க்கிறோம். பஸ்ஸை நிறுத்தி கொள்ளை அடித்தார்கள்
என்ற செய்தியும் வருகிறது. இப்படிப்பட்ட குற்றங்களைத்
தடுப்பதற்கு காவல்துறை நடவடிக்கை எடுத்திருக்கிறதா
என்பதைப் பார்ப்போமேயானால், அதைச் செய்வதற்கு
மாறாக என்ன செய்கிறார்கள் என்றால், சிவில் கோர்ட்டிலே
வழக்கு இருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். உதாரண
மாக, வாடிப்பட்டியில் ஒரு ஆசிரியை வாடகை வீட்டில் குடி
யிருக்கிறார்கள். வாடகைப் பணம் 5,000 ரூபாயைப் பெற்றுக்
கொண்ட பின்னரும், அந்த வீட்டை காலி செய்ய வேண்டு
மென்று சொல்லுகிறார்கள். 5,000 ரூபாயைத் திருப்பிக்
கொடுங்கள் என்று சொல்கிறார்கள். காலி செய்வதற்கு
சிவில் வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. இப்படி இருக்
கின்ற அந்த வழக்கில், அந்த வீட்டைகாலி செய்வதற்கு, காவல்
துறையினர் தலையிட்டு, அந்த ஆசிரியையை தலைமை ஆசிரியை
யினுடைய அனுமதி இல்லாமல், இழுத்துவந்து, அவமானப்
படுத்தியதோடு அல்லாமல், சேலையைக் களைந்து காவலிலே
வைத்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9.30)

அங்கு சர்வ கட்சியினரும் அதைக் கண்டித்து தீர்மானம் போட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அவருடைய கணவரைச் சங்கிலியால்
கட்டி தெருத் தெருவாக இழுத்துச் சென்று ஏதோ பெரும்

குற்றம் செய்தவர் போல், வெள்ளை ஏகாதிபத்திய காலத்தில் கூட இல்லாத அளவுக்கு போலீசார் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று, கீழக் கரையில் அண்ணா தி.மு.க. ஒன்றியச் செயலாளர் நான்கு திங்களுக்கு முன்னால் சிறைச் சாலையில் இருக்கிற கைதிக்கு சோறு கொண்டு சென்றிருக்கிறார். சோறு போடுவது போலீஸ் கடமை. அப்படிப் போடாத நிலையில் சோறு கொண்டு போன அண்ணா தி.மு.க. ஒன்றியச் செயலாளர் கையிலே விலங்கிட்டு தெருத் தெருவாக இழுத்துச் சென்றிருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்களை, அண்ணா படம்போட்ட பச்சை குத்திக் கொள்ள அவர்கள் கட்சியிலே சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கையைக் கீழே வைத்து அந்தக் கொடியிலே பூட்ஸ் காலால் மிதித்திருக்கிறார்கள். இப்படி எல்லாம் கொடுமைப்படுத்தும் அளவுக்கு போலீஸ் அராஜகம் சென்று கொண்டிருக்கிறது.

சென்ற மாதம் 19 ஆம் தேதி இந்தியா முழுவதும் ஒரு பந்த் நடந்தது. தமிழகத்திலே அதைத் தடுக்கும் வகையில் துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் நடந்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அமைதியாக பந்த் நடத்துவது தடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டிலே இருந்தவர்களை எல்லாம் போய் இழுத்து வந்து கைது செய்து வன்முறையில் ஈடுபட்டார்கள். பாலத்தைத் தகர்த்தார்கள் என்றெல்லாம் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலை தமிழகத்தில் நிலவுகிறது. இங்கே போலீஸ் ஆட்சியா நடைபெறுகிறது? போலீஸ் யாருக்கும் கட்டுப்படாமல் அவர்கள் நினைத்ததைச் செய்கிறார்கள். திருடு, கொலை, கொள்ளை ஆகியவற்றைத் தடுக்க போலீஸ் முனைப்பாகச் செயல்படவில்லை. போலீஸின் இந்தப் போக்கை தமிழக அரசு தடுக்காவிட்டால் இந்த அரசுக்கு எந்த அளவுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்து ஒரு சில வார்த்தைகள்பேச அனுமதி அளித்தமைக்காக முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பரதியார் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாடியது. தமிழக வரலாற்றில் இப்படி ஒரு பெருமையைச் சேர்த்த புகழ் இந்தத் தமிழக அரசைச் சாரும். எத்தனை விழாக்கள் நடந்தாலும் பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பெருமை இந்தச் சர்க்காருக்கு வாய்த்தது. அது ஒரு மிகப்பெரிய பெருமையாகக் கருதிக் கொள்ளலாம். பலருக்கு





இந்த வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது. அவர்கள் ஆளு
கின்ற காலத்தில் நூற்றாண்டு விழாக்கள் வரவில்லை. இப்போது
இந்த அரசுக்கு பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு
கிற நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தமிழகம் முழுவதும் பாரதியார்
நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டு
மென்ற முறையில் ஊராட்சி ஒன்றிய அளவில் விழாவினை
கொண்டாட வேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.
தேசிய ஒருமைப்பாடு ஆண்டாக பாரதியார் நூற்றாண்டு
விழாவைக் கருத வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு
வேண்டுகோளாக விடுத்திருக்கிறது. இந்திய நாட்டில் சாதி
சமய பேதமற்ற நிலை நிலவவேண்டுமென்று பாரதியார்
கண்ட கனவு நனவாகும் வகையில் தேசிய ஒருமைப்பாடு
ஆண்டாக இதனைக் கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிறார்
கள்.

வட நாட்டுப் பகுதிகளில் இன்று அமைதியின்மை நிலவுகிறது.
அங்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது. இந்த நேரத்தில்
சாதிக் கலவரங்கள் பெருகியிருக்கிற இந்த நாளில், நாளுக்கு
ஒரு கொலை, கொள்ளை என்று பெருகி வரும் இந்த நாளில்
தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்பட்ட மக்களும் மைனாரிடியின
ரும் தங்களுடைய உரிமைக்காக வட நாடு முழுவதும் போராடிக்
கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் தேசிய உணர்வைத்
திருநெல்வேலியில் பிறந்த பாரதியார் ஏற்படுத்திய, அந்த
சுதந்திரத்தை இந்தியா பெற்று இந்தியா முழுவதும் ஒருமைப்பாடு
ஆண்டாக பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட
வேண்டுமென்ற முக்கியத்துவம் வாய்ந்த வேண்டுகோளை மத்திய
அரசுக்கு தமிழக அரசு விடுத்திருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டை
தேசிய ஒற்றுமை ஆண்டாகக் கொண்டாட வேண்டும்.

விவசாயிகளைப் பொறுத்தவரை சிறு விவசாயிகளுக்கு தமிழக
அரசு கடன் நிவாரணங்களை அறிவித்திருக்கிறது. அந்த
தேதி முடிந்த பிறகு அனைத்து சிறு விவசாயிகளும் எங்களுக்குக்
கடன் சுமையாகிவிட்டது. தொடர்ந்து கடன் நிவாரணம்
கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில் கடன்
நிவாரணம் தொடருகிறது என்று கவர்னர் உரையில் கூறியிருக்
கிறார்கள். சிறு விவசாயிகள் மீண்டும் புத்துணர்வு, பெற்றிட
புதுவாழ்வு பெற்றிட வழிவகை செய்வதற்கு இந்த அரசு
தயாராக இருக்கிறது என்ற நல்ல அறிவிப்பை இதிலே எடுத்துக்
கூறியிருக்கிறார்கள்.

விலைவாசியேற்றத்தின் காரணமாக இன்றைக்கு இந்தியா
விலேயுள்ள ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது
ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அதற்கு எந்த சர்க்கார்
பொறுப்பு என்பதை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்

மைய அரசு பொறுப்பு அதிலே எவ்வளவு, மாநில சர்க்கார் கடமை என்ன என்பதை மக்கள் நன்றாகத் தெரிந்து இருக்கிறார்கள். நான் ஒன்றை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன் விலைவாசியைக் குறைக்கவேண்டுமென்று தமிழ்நாட்டிலே ஓட்டல்களின் முன்பாக இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினார்கள். எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இளைஞர் காங்கிரஸ்காரர்கள் எல்லாம் வெஜிடேரியன்களா என்று. காரணம் இட்லி, தோசை விற்கிற ஓட்டல்களின் முன்பாகத்தான் அவர்கள் போராட்டத்தை நடத்தினார்களே தவிர, கோழிக்கறி அதனுடைய விலையும் தான் ஏறியிருக்கிறது, விற்கிற ஓட்டல்களின் முன்னாலே போராட்டத்தை நடத்தவில்லை. இட்லி, தோசை, வடை விலை உயர்ந்திருப்பதற்காக போராட்டத்தை நடத்துகின்ற இளைஞர் காங்கிரஸ்காரர்கள் கோழிக்கறியின் விலையும் உயர்ந்திருக்கிறது, பாயாவின் விலையும் உயர்ந்திருக்கிறது, சப்பாத்தியின் விலையும் உயர்ந்திருக்கிறது, அதை எதிர்த்து இந்திரா காங்கிரஸ்காரர்கள் ஏன் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்று தெரியவில்லை. அவர்களுக்கு தெரிந்தது எல்லாம் இட்லி தோசைதான். போராட்டம் நடத்துவதிலே கூட வெஜிடேரியன், நான்-வெஜிடேரியன் பாகுபாடு காட்டுகிறார்கள் இந்திரா காங்கிரஸ்காரர்கள். விலைவாசியைக் குறைக்கவேண்டிய பொறுப்பு இன்றைக்கு. ஆட்சியைக் கையிலே வைத்திருக்கின்ற மைய அரசிடம் இருக்கிறது மாநில அரசுக்கும் அதிலே கடமை இருக்கிறது. என்பதை நான் உணர்கிறேன், ஆனால் பொறுப்பை, ஆட்சியை வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள் விலைவாசியைக் குறைக்கவேண்டியவர்கள், அவர்கள் இன்றைக்கு விலைவாசியைக் குறைக்கவேண்டுமென்று போராட்டம் நடத்துவது விந்தையாகத்தான் இருக்கிறது. தமிழ்நாட்டிலேதான் இந்திரா காங்கிரஸ்காரர்கள் இப்படிப்பட்ட விந்தையான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் வேடிக்கையான போராட்டத்தை தமிழ்நாட்டிலே நடத்தினார்கள் இந்திரா காங்கிரஸ்காரர்கள். தமிழக அரசு ஆறு மாதங்களுக்கு முன்பாக ஒரு சட்டத்தைக்கொண்டு வந்தது. தொழிலாளர் வேலை நிறுத்த நேரத்திலே நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதைப்பற்றிய சட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார்கள். தொழிலாளர் விரோத போக்கு சர்க்கார் என்றும் தொழிலாளர்களைக் கண்டிக்கிற சர்க்கார் என்றும், தொழிலாளர்களை அடக்குகிற சர்க்கார், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கிற சர்க்கார் என்று அப்போது இங்கே கம்யூனிஸ்ட் தோழர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தீர்மானத்தை ஆதரித்து அன்றைக்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தொழிலாளர் விரோதப் போக்கு என்று சொல்லி அரசை எதிர்த்து வெளிநடப்புச் செய்தார்கள். அரசைக் கண்டித்தார்கள். இன்றைக்கு மத்திய அரசு அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்

சாலைகளில் வேலை நிறுத்தம் கூடாது என்று கொண்டு வருகிறபோது, அந்தக் கட்சிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. போராட்டம் நடத்தவில்லை . . . .

திரு. என். சங்கரய்யா : மாற்றுத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிச் சொல்கிறார். 19 ஆம் தேதி நடந்த வேலை நிறுத்தமே அந்த காரியத்திற்காகத்தான். ஒருவேளை காங்கிரஸ் கட்சி என்று சொல்ல விரும்புகிறாரோ என்னவோ ?

திரு. ஜி. மூர்த்தி : தலைப்பிலே நான் காங்கிரஸ் கட்சிப் போராட்டம் நடத்தியது என்று ஆரம்பித்துத்தான் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : மாண்புமிகு கவர்னர் உரைமீது உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளியே உள்ள விவகாரங்களை இங்கே இழுக்க வேண்டாம்.

திரு. ஜி. மூர்த்தி : சபையிலே தொழிலாளர் விரோதக் கொள்கை என்று சொல்லி கண்டிக்கப்பட்டது. தொழிலாளர் நலத்தைப்பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர் விரோத போக்கு என்று சொல்லி, எல்லா எதிர்க்கட்சிகளும் வெளிநடப்புச் செய்தார்கள். அன்றைக்கு நான் ஒருவன்தான் பரிதாபமாக அவையிலே இருந்தேன். மத்திய அரசுத் தீர்மானம் கொண்டு வந்தபோது இங்கே எதிர்த்துக் குரல் கொடுத்த தி. மு.க. அன்றைக்கு அமைதியாக இருந்தார்கள். அந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டிலே தமிழ்நாடு அரசைக் கண்டிக்கிற காங்கிரஸ்காரர்கள் தங்கள் * * கொண்டு வந்தபோது அதை ஆதரித்து கை தூக்கினார்கள். போராட்டத்தை நடத்தவில்லை. தமிழகத்திலே நிலைமை என்னவென்றால் அண்ணா தி. மு. க. சர்க்கார் தொழிலாளர் விரோதப் போக்கு கொண்டது என்று சொல்வது மற்ற இடங்களிலே தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால் மத்திய அரசு பொறுப்பு இல்லை என்று சொல்வது, இப்படிப்பட்ட * * அரசியலைத்தான் காங்கிரஸ்காரர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : திரு. மூர்த்தி அவர்கள் வீராவேசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன். இந்திரா காந்தி அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுத் தலைவி.

---

* * மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்

அவர் இந்தியாவின் பிரதம மந்திரி. அவர் எங்களுக்கு * * அல்ல என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது போன்ற வார்த்தைகள் அவைக்குறிப்பில் இருப்பது கட்சியின் பெயருக்கு மட்டுமல்ல, நம்முடைய அவையின் பெயரைக்கூடச் சற்றுக் களங்கப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. உ. சுப்பிரமணியன் : * * என்று சொன்ன வார்த்தை இருக்கலாமா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. இல. பலராமன்) : * * என்ற வார்த்தையும், * * என்ற வார்த்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. எஸ். சங்கரய்யா : * * என்ற வார்த்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, தாங்கள் ரூலிங் கொடுப்பதற்கு முன்னால் யோசனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : ஒரு முறை பயன்படுத்தப்பட்டிருப்பதாலேயே அது சரி என்று ஆகிவிடாது.

திரு. ஜி. மூர்த்தி : அதற்குப் பதிலாக இரட்டை வேடம் போடுகிறார்கள் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள். தமிழகத்திலே ஒரு நிலையும், மத்தியிலே ஒரு நிலையும் என்ற நிலையில் காங்கிரஸ்காரர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி ஒரு தொழிற்சங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளவில்லை. இப்படி மைய அரசு கொண்டுவரும் சட்டத்தில் அக்கறை காட்டாத அவர்கள், மாநில சர்க்கார் கொண்டு வருகின்ற சட்டத்தில் மட்டும் அக்கறை காட்டினார்களே, இப்படித் தொழிலாளர்கள் மத்தியிலே இரட்டை நிலையை உருவாக்குகிறார்களே என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தண்ணிறைவுத் திட்டத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால், தமிழ் நாட்டிலே மட்டும்தான் மிகப் பெரிய அளவிற்குத் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு இந்தியாவிற்கே வழி காட்டுகின்ற அளவிற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஆட்சியிலேயும் மூன்று நான்கு மாதங்களுக்குள்

ஒரு ஒன்றியத்திலே இருக்கின்ற தேவைகள் அத்தனையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவற்குத் திட்டங்கள் போடப்பட்டதில்லை. இந்தியாவிற்கே தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் தன்னிறைவுத் திட்டம் வழிகாட்டுகிறது என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். முப்பது நாற்பது ஆண்டுக்காலமாகப் பேரணாம்பட்டு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகவே இருந்து வந்தது. அந்தத் தொகுதியையே மறந்துபோய் இருந்தார்கள். அப்படி முப்பதாண்டுக் காலமாக இருந்த நிலையில், நான்கு மாதங்களிலேயே சென்னையைக்கூட மிஞ்சுகின்ற அளவிற்கு முன்னேற்றகரமான திட்டங்கள் பேரணாம்பட்டுத் தொகுதியில் நடந்து வருகின்றன. ஒரே ஒன்றியத்திற்கு மட்டும் ஐம்பது இலட்சம் ரூபாயைச் செலவு செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, பேராணம்பட்டு நகரம் 13 வார்டுகளைக் கொண்டது. அவைகளுக்கு மட்டும் 52 இலட்சம் ரூபாய் அளவில் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏழை எளிய மக்கள் தாங்கள் பிறந்ததிலிருந்து இடம் தெரியாத இடத்தில் பிறந்தவர்கள் சுடுகாட்டுப் பாதைகூட இல்லாமல் இருந்தார்கள், ஓலை வேய்ந்த கொட்டகைகளிலே பள்ளிக்கூடங்களை நடத்தி வந்தார்கள். தொழிற்சாலை இல்லாமல் இருந்தார்கள். அப்படிப்பட்ட மக்கள் இருக்கின்ற பேரணாம்பட்டு பகுதியில் ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்து தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது ; நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த தன்னிறைவுத் திட்டம் என்பது மற்ற எல்லா மாநிலங்களும் பின்பற்ற வேண்டிய திட்டம்; மற்ற மாநிலங்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய திட்டம் ; இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயததுத் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்று ஒதுக்கீடு செய்தார்கள், பெண்களுக்கு 15 சதவீதம் என்று ஒதுக்கீடு செய்தார்கள். நான் ஒரு கருத்தை எல்லா அரசியல் கட்சிக் காரர்களுக்கும் வேண்டுகோளாக வைக்க ஆசைப்படுகிறேன். சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் ரிசர்வ் சீட்டுகள் இருக்கின்றன. அந்த ஒரே காரணத்தினால்தான் 44 சட்டமன்றத் தொகுதிகள் தமிழ்நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ; அனைத்து மாநிலங்களிலும் அதற்கான வழி ஏற்படுததப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சட்டமே இல்லையென்றால் இதுவரையிலே பொதுத் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களை சட்டமன்றத்திற்கோ பாராளுமன்றத்திற்கோ நிற்க வைத்து வெற்றிபெறச் செய்து சட்டமன்ற உறுப்பினராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவோ உட்காரவைத்த பெருமை எந்த அரசியல் கட்சிக்கும் கிடையாது. ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட உணர்வை ஏற்படுத்துவதற்காக, . . .

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, 1952-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே செலந்திலிருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இதே சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : உறுப்பினரவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளாமல் பேசுகிறார் என்று கருதுகிறேன். அது இரட்டைத் தொகுதி ஆகும்.

ஆகவே, அப்படிப்பட்ட உணர்வை அந்த மக்களுக்கு ஏற்படுத்தி, அவர்களது அடிமைத் தளையைப் போக்க முடியும் என்பதை எடுத்துக்காட்ட அந்த மக்களுக்கு 18 சதவீதம் என்ற இட ஒதுக்கீட்டை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். உண்மையிலேயே சொல்லப்போனால், பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்ன அரசியல் விடுதலையை இன்றைக்குத் தமிழக அரசு நிறைவேற்றி இருக்கிறது. இந்த நிலைமை வேறு எந்த மாநிலங்களிலேயும் கிடையாது. நான் இன்னும் பெருமையோடு சொல்லிக்கொள்வேன், டாக்டர் அம்பேத்தகார் அவர்கள் பிறந்த மராட்டிய மாநிலத்திலேகூட இந்த ரிசர்வேஷன முறை கிடையாது; அதைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. பெண்களுக்கும் அந்த உரிமைகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். பெண்களின் நலனைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிவருகின்ற புரட்சித் தலைவரவர்கள், பெண் விடுதலைக்காகப் பாடிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி வருகின்ற இந்த நேரத்தில் பெண்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீட்டைத் தந்திருக்கிறார்கள்; ஆனால், துர்பாக்கியம் அது இன்றைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய போதாத காலம், இன்றைக்கு கோர்ட்டிலே தடை வாங்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை, மொத்தமாக, ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் அதற்கு '' ஸ்டே '' வாங்கவில்லையென்று சொன்னாலும், அந்தக் கட்சியிலே இருக்கிறவர்கள் பலபேர், அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டதாகத்தான் நாம் நினைக்கிறோம், அவர்கள் மாத்திரம், வட்டார அளவிலே ஸ்டே வாங்கினால், அது எந்தக் கொள்கைக்கு ஒத்து வருகிறது என்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாங்கள் மாத்திரம் கொள்கையை ஒன்றாக வைத்துக் கொண்டிருக்கிறோம். மாநில அளவிலேதான் நிறைவேற்ற மாட்டோம் என்று சொன்னால், அதே கட்சியிலே இருக்கிற, வட்டார அளவிலே இருக்கிற, தலைவர்கள் எந்தக் கொள்கையிலே இப்படி முற்படுகிறார்கள். அந்தக் கொள்கை அவர்களுக்கு மாத்திரம் பொருந்தாமல் போய்விடும் என்கிற விந்தை இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வட்டார அளவிலே பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாகத் தலைமையிலே இருப்பவர்கள் எங்களுக்குப் பொறுப்பில்லை



என்று சொல்கிறார்கள். இன்றைக்குப் பலபேர்கள், பல்வேறு இடங்களிலே, ஏன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட, வட்டார அளவிலே தடை வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். என்னால் ஆதாரங்களைக் காட்ட முடியும். ஆனால், இங்கே பேசுகிறபொழுது மட்டும் எங்கள் கட்சி அதற்குத் தடையாக இல்லை ரிசர்வேஷனுக்கு நாங்கள் தடையாக இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வாங்கியவர்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. காரணம், எங்களைக் கட்டுப்படுத்தாதீர்கள் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு அந்தத் தடையை உடைத்தெறியத்தான் இந்தத் தமிழக சர்க்கார் இருக்கிறது. இது அரசியல் பிரச்னை மாத்திரம் அல்ல. மிகப் பெரிய சமுதாயப் பிரச்னை. ஒரு சமுதாய மக்களுக்கு மிகப் பெரிய அரசியல் விடுதலையை வாங்கித்தருகிற பிரச்னை அதிலே நம்முடைய தமிழக சர்க்கார் தயக்கம் காட்டக்கூடாது. எவ்வளவு பெரிய எதிர்ப்பு சக்தி வந்தாலும், சமுதாய விரோதிகள், சமுயாயத் துரோகிகள் எத்தனை பேர் அதைத்தடுத்தாலும் அதை முறியடித்து இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த மாநில சர்க்காருக்கு இருக்கிறது. காப்பாற்ற வேண்டும். இந்த மக்களுடைய உரிமைகளுக்கு அவர்கள் குரல் கொடுத்துத்தான் தீர வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே எங்கள் உரிமை என்பதன் காரணத்திற்காகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு, இந்த அரசு ஆதி திராவிடர் நலத்திற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. குறிப்பாக, மைய அரசு Special components programme என்ற திட்டத்திலே பல கோடி ரூபாய் தந்துகொண்டிருக்கிறது. வருடத்திற்கு ரூபாய் 10 கோடி, வருடத்திற்கு ரூபாய் 15 கோடி என்று 80–85 வரைக்கும் ஏறத்தாழ 80, 90 கோடி ரூபாய்கள் இந்தத் தமிழக சர்க்காருக்கு மைய சர்க்கார் கொடுத்துக் கொண்டு வருகிறது. அந்தத் திட்டத்தினை நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டும். காரணம், அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் ஊர் முழுவதும் சென்று, அந்த மக்களுடைய பிரச்சினையைத் தீர்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரம் இருக்காது. ஒவ்வொரு வட்டார அளவிலே இந்த Special Components Programme ஐ நிறைவேற்ற தனி தாசில்தார் நியமிக்க வேண்டும்.

அதே போன்று இந்த மக்களுடைய சமுதாய முன்னேற்றத்திற்காக, சமுதாய விடுதலைக்காக இந்தச் சர்க்கார் வீட்டு மனை ஆர்ஜிதம் செய்கிற பொழுது, தனிக் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டும். 100 பேர்கள் ஜாதி இந்துக்கள் இருக்கிற இடங்களிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்க்கப்பட்டால், ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களை ஆள்கிற நிலையிருக்கின்றது.

ஆனால், 1000 தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிற இடங்களில் 100 பேர்கள் ஜாதி இந்துக்கள் இருந்தால், தாழ்த்தப்பட்டவர்கள் யந்துகொண்டிருக்கிறார்களே, அங்கே சாதி வெறியைத் உள்ளே புகுத்த மாட்டார்கள். ஆகவே, எந்த ஒரு திட்டத்தினைத் தீட்டினாலும், தனிக் குடியிருப்பாக, அந்த மக்களுக்கு அமைத்துத்தர இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

*திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் அரிசனங்களுக்காகத்தான் பேசுவாள்கள். 19-ஆம் தேதி பொது வேலை நிறுத்தத்தில் தஞ்சை மாவட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் 3 அரிசனங்கள் இறந்தார்களே, அதை வரவேற்கிறாரா, கண்டிக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, எந்த நிலையிலே, எப்படிப்பட்டப் போராட்டத்திலும், துப்பாக்கிச் சூட்டிலே இறந்த இந்த ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே, அது தவறு என்றும் நான் கண்டிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், ஒன்றை மாத்திரம் சொல்லிக் கொள்கிறேன், உங்களுடைய போராட்டத்தின் விளைவாக, உங்கள் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதற்ககா ஏழை, ஆதி திராவிட அரிசனங்களை நீங்கள் போராட்டத்திற்கு அழைத்து பலிவாங்க நினைக்காதீர்கள். இதுவரையில் கம்யூனிஸ்ட்கள் நடத்திய போராட்டங்களிலே பலி வாங்கப்பட்டவர்கள் ஆதி திராவிடர்கள். 42 ஆதி திராவிடர்கள் கீழ்வெணமணியிலே கருகிச் செத்தார்கள். தொழிலாளர்கள் என்ற பெயராலே அவர்கள் சாதியை மறைத்தார்கள். ஆனால், செத்துவிட்டபின்னாலே அரிசனங்கள் என்று சொல்கிறார்கள். போராட்டத்திற்கு அழைக்கும்போது மாத்திரம் சிறு விவசாயிகள் என்று சொல்கிறார்கள். இது தான் கம்யூனிஸ்ட்களுடைய சித்தாந்தமா - அவர்கள் இந்த 19-ஆம் தேதி போராட்டத்திலே கூட, தொழிலாளர்கள் தோழர் என்று அழைத்தார்கள். செத்துவிட்ட பின்னாலே தான் 3 அரிசனங்கள் செத்தார்கள் என்று அவர்கள் சாதியைக் காட்டி, அவர்கள் சார்ந்திருக்கிற சமுதாயத்தைக் காட்டி, அனுதாபம் தேடப் பார்க்கிறார்கள் கம்யூனிஸ்ட்கள்.

திரு என். சங்கரய்யா : எனக்கென்ன ஆச்சரியம் என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு, அரிசனங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுகளுடைய போராட்டத்திலே ஈடுபட்டு கொல்லப்பட்ட செய்தி, சந்தோஷமாக இருக்கிறதா என்று புரியவில்லை. மொழிப் போராட்டத்திலே ஈடுபட்ட பலபேர்கள் செத்தார்கள். அவர்கள் யார்? ... இதிலே, ஆளுங்கட்சியிலே உள்ளவர்களுக்குச் ...





தற்கு என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், இவரை ஏன் ஆட்சேபிக்கிறேன் என்றால், ஒரு பெரிய உண்மையை அவர்கள் மறைத்துச் சொல்லியிருக்கிறா. கீழ்வெண்மணியிலே கொல்லப்பட்டவர்கள் விவசாயத் தொழிலாள அரிசன மக்கள் கொன்றவர்கள் நிலப் பிரபுக்கள் அந்த நிலப்பிரபுக்களின் கொடுமையின் காரணமாக 44 பேர்கள் சுட்டெரிக்கப்பட்டார்கள் என்ற செய்தி உலகமே அறிந்திருக்கக்கூடிய செய்தி; அதைக் கண்டிப்பதற்குப் பதிலாக அவர் கம்யூனிட்கள் மீது பழி சுமத்துவது, அரிசன மக்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லக்கூடிய ஒருவருக்கு அருகதைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

(திரு .சோ. அழகர்சாமி எழுந்தார்.)

[முற்பகல் 9-50]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு இல. பலராமன்) அடுத்து திரு. அழகர்சாமி அவர்கள் பேச இருக்கிறார்கள். அப்போது பதில் சொல்லிக் கொள்ளலாம், திரு. மூர்த்தி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. தயவு செய்து விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் .ஹே. சமரசம் ; தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஏதோ கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் இருந்ததற்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு பதில் ஆளும் கட்சியினர் சந்தோஷப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதிலே நாங்கள் உங்களைவிட முன்னிலையிலே இருக்கிறோமே தவிர, அதற்காக நாங்கள் கை தட்டவில்லை. ஆனால் திரு. மூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கம்யூனிஸ்டுகள் முதல்முதலாக போராட்டத்திற்கு அழைக்கிறபோது, தொழிலாளத் தோழர்கள் என்றும், சிறு விவசாயிகள் என்றும், ஜாதி இந்துக்கள் என்றும் சொல்லிக் கொண்டு, ஆனால் இறந்ததற்குப் பிறகு அவர்கள் அரிசனங்கள் இப்படி ஆகிவிட்டார்களே என்று சொல்லுகின்ற இரட்டை வாதம் என்று சொல்லுகின்ற சொல்லுக்காகத்தான் சொன்னேனே தவிர, மற்றபடி உங்களை விட அதிக அனுதாபம் செலுத்துவதில் பங்கேற்றுக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. சோ. அழகர்சாமி : திரு. ஜி. மூர்த்தி அவர்கள் கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் குறை சொல்வது மட்டுமல்ல, ப... ...கூடிய சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள்.

[1982 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து நீங்கள் பேச இருக்கிறீர்கள். அப்போது இதற்குப் பதில் சொல்லிக் கொள்ளலாம்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த விளக்கத்தைக் கேட்டார்கள். ஆனால் என்னுடைய வருத்தம் எல்லாம்........

திரு செ. சிவசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, ஜாதியையும், இயக்கத்தையும் சார்ந்த பேச்சுக்களை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மூர்த்தி அவர்கள் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளாமல் கவர்னர் உரையை ஒட்டி மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கம்யூனிஸ்ட்டுகள் எத்தனையோ போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். அதிலே இன்னும் குறிப்பாக இந்த ஏழை எளிய மக்களுக்காக அவர்கள் நடத்திய போராட்டங்கள் எத்தனையோ நேரங்களில் வெற்றியை வாங்கிக் தந்திருக்கின்றன என்பதை நாம் உணர்வோம், இந்த நாடும் உணர்ந்திருக்கின்றது ஆனால் இவர்கள் இதுவரையில் பல போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். தொழில் சாலைகளுக்கு முன்பாக பல போராட்டங்களை நடத்தி இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்குத் கூலி உயர்வு வேண்டும் என்று போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். லாக் அவுட் செய்யக் கூடாது என்று போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். தொழிற்சாலைகள் மூடப்படக் கூடாது என்று போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். தொழிலாளர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று போராட்டங்கள் நடத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்த தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சத விகிதம் வேலை தர வண்டும் என்று இருக்கிறது. அந்தக் காரணங்களுக்காக எப்போதாவது கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்தியதுண்டா என்பதை கேட்கத்தான் இப்படிப்பட்ட உதாரணங்களை நான் சொன்னேனே தவிர, இதுவரையில் ஏன் அதை நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று நான் கேட்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், தொழிற்சாலைகளிலே அந்த கவர்ன்மென்ட் சர்க்குலர், 18 சதவிகிதம் ரெக்ரூட்மெண்ட் கொடுக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்களா என்று கேட்டார்கள். ஆம். இந்துஸ்தான் டெலிபிரிண்டர் கம்பெனியிலே, சென்ட்ரல் கவர்ன்மென்ட் அன்டர்டேக்கிங் அந்த கம்பெனியிலே அந்த சர்க்குலரை இம்பிளிமென்ட் பண்ணாமல் இருந்தார்கள். அதற்கு எதிர்ப்பு இருந்தது. நான் அந்த சங்கத்தின் தலைவராக இருந்தேன் அந்த எதிர்ப்புகளை சமாளித்து, தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, அந்த ரிசர்வேஷனை அங்கே அமல்படுத்த வகைசெய்தேன்



1982 பிப்ரவரி 9] [திரு. ரா. உமாநாத்]

இது அவருக்குத் தெரியவில்லை. அதை தெரிந்து கொள்ளாமல் ஏன் பேசவேண்டும். இக்னரண்ட் ஆக பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் செய்து இருப்பதைத் தெரிவித்ததற்கு நன்றி. மேற்கொண்டு கருத்துக்கள் கூற வேண்டாம். இப்போது, திரு. சோ. அழகர்சாமி அவர்கள் பேசுவார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல முன்வருகிறேன். மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரையிலே விவாதிக்கின்ற நேரத்தில் பல கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள் (குறுக்கீடுகள்)

திரு எல். இளையபெருமாள் : There is reserv.tion even in. promε.tion even in prom:.ticn என்பதில் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த டிரேட் யூனியனாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ரிசர்வேஷன் கொடுக்கக்கூடாது என்று அந்தந்த டிரேட் யூனியனும் யூனானிமஸ்ஸாக ரெசல்யூஷன் பாஸ் செய்து இருக்கிறார்கள் என்பதை சகோதரர் உமாநாத் அவர்கள் அறிவாரா? அதற்கு அவர் போராடவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : எங்கள் சங்கத்தில் அந்த மாதிரி ரெசல்யூஷன் போடவில்லை. நாங்கள் தான் அரிசன ஓர்க்கர்ஸை ஒன்று திரட்டி, அவர்களை ஒற்றுமைப் படுத்திக்கொண்டு வருகிறோம். ஆனால், உங்களை நான் ஒன்று கேட்கவிரும்புக்றேன். கூலி உயர்வு கேட்டு ஓர்க்கர்ஸ் போராடுகின்றார்கள், அவர்களுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? பல இடங்களில் அரிசன மக்களே சுட்டுக்கொல்லப்பட்டார்களே அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் பேசுகின்ற உறுப்பினர்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேசவேண்டும். கொஞ்சம் பொறுமையாகவும் பேசவேண்டும். ஒவ்வொரு கட்சியும் அரிசனங்கள் நலத்திற்காகப் போராடிக்கொண்டுதான் வருகிறார்கள். ஆகவே, கொள்கையைப் பற்றி விவாதிக்கும்போது ஒருவருக்கொருவர் ஒவ்வொரு கட்சியைப் பற்றி குறிப்பிட்டுப் பேசுவது சரியல்ல.

[1982 பிப்ரவரி 9

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான முறையில் காரசாரமாக இங்கே விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. நாட்டிலே ஒடுக்கப்பட்ட அடித்தளத்திலே இருக்கும் ஆதித் திராவிட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு ஏதோ இன்றைக்கு அவர்களுக்கு முழுமையாக பாதுகாப்பு அளிக்கவேண்டும், உரிமையைப் பாதுகாத்துத் தர வேண்டும் என்பதற்காக தாங்கள் மட்டுமே நிற்பதுபோல் இங்கே சில அரிசனத் தலைவர்கள் பேசுவது மிக வினோதமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கம்யூனிஸட் கட்சியைப் பொறுத்தவரையில் கொள்கை நீதியாகவே அந்த அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்காக, விவசாயத் தொழிலாளிகளாக இருக்கின்ற அந்த அரிசன மக்களுக்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறது.

சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகிவிட்ட பின்பும், பல ஆட்சிகள் மாறி மாறி வந்தபின்பும், இன்றைக்கும் அவர்கள் உரிமையற்று, ஆடுமாடுகளைப் போல் மோசமாக நடத்தப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தரவேண்டும் என்பதற்காக அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி பல போராட்டங்களை நாங்கள் நடத்தியிருக்கிறோம். அதிலே பலர் உயிர் தியாகம் செய்ததோடு மட்டுமல்லாமல், எங்களுடைய பல தோழர்கள் இன்னுயிரையும் ஈந்து இருக்கிறார்கள். இந்த வேள்வியில் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்த ஜாதியைச் சேராதவர்களும் பங்கேற்று அந்த மக்களின் உரிமைக்களுக்காகப் போராடியிருக்கிறார்கள். பலர் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். பலர் ஜாதிக் கொடுமைகளுக்கு பலியாகியும் இருக்கிறார்கள். இந்த விவரங்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். இந்த அவையும் அறியும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படி அரிசன மக்களுக்காக, அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் உரிமைகளுக்காக நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அதற்காக என்ன செய்தீர்கள் என்று அந்த மக்களுக்காக வாதாடுகின்ற மாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி அவர்களிடத்தில் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். கூலி உயர்வு வேண்டும் என்று அந்த விவசாயத் தொழிலாளர்கள் போராடினார்களே அப்போது அவர்களோடு சேர்ந்து, அவர்களுக்குத் துணை நின்றீர்களா? அதற்கு ஏதாவது செய்தீர்களா? ஏதோ அவர்க்ளின் ஜாதிப் பெயரைச் சொல்லிக்கொண்டு, அந்த ஜாதி உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் விதத்தில் இங்கே பேசுவது நல்லதல்ல. அது அவர்களுக்குப்பயன்தராது. அது அந்த மக்களுக்குச்செய்யும் துரோகமாகத்தான் இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 9] [திரு. சோ. அழகர்சாமி]

இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக்கொண்டால், தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், ஆரம்ப காலத்தில் அந்த மாவட்டத்தில் உள்ள அரிசன மக்களைக் கொடுமைப்படுத்தி, ஆடுமாடுகள் தெருவில் நடக்கலாம், ஆனால் அரிசன மக்கள் தெருவில் நடக்கக் கூடாது என்று அவர்களை விரட்டி அடித்தார்களே அப்போது எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த சீனிவாச ராவ் அவர்கள்தான் அவர்களை ஒன்று திரட்டி, அவர்களுக்காக முன்னணியில் நின்று போராடி, அவர்களுடைய உரிமைளுக்காகப் போராடினார்கள். அப்படிப்பட்ட ஒரு பேரியக்கம் தான் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 10-00)

ஆகவே ஜாதி வெறி என்ற பெயரால் நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குவதில் எந்தவிதமான பயனும் இல்லை: நியாயமும் அல்ல. எங்கள் இயக்கத்திலே எந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்: தாக்கப்பட்டிருக்கிறார்கள். எங்களுக்கு எந்த ஜாதி, எந்த மதம் என்றில்லை. எங்கள் இயக்கத்திலே அரிசன தோழர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அரிசனங்கள் என்றுசொல்லிகூட அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதோடு இந்தப் பிரச்சனையை நிறுத்திக் கொள்கிறேன். திரு மூர்த்தியைப் போன்றவர்கள் அந்த சமூகத்தைப்பற்றி உண்மையிலே அக்கரைப்படுபவர்களாக இருந்தால் அவர்களுக்காக பாடுபடுகிறவர்களாக இருந்தால் அவர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் அவர்களுக்கு பாதகம் ஏற்படுகிறபோது அதைத கண்டிக்க வேண்டும்; அவர்களுக்கு அனுதாபம் காட்டவேண்டும்;போலீஸ் அடக்குமுறையைக் கண்டிக்க வேண்டும் அவர்களுக்கு நியாயம் கிடைக்க பாடுபட வேண்டும். அதைவிட்டு விட்டு, இந்தமாதிரி எங்களைப் போன்றவர்கலை அல்லது எங்கள் இயக்கங்களை தாக்குவதன் மூலம் ஆளும் கட்சியின் கைதட்டலை பெறலாமே தவிர, அந்த மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. இது நீங்கள் அந்த மக்களுக்குச் செய்யும் துரோகமே தவிர வேறல்ல. இது நியாயமல்ல என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆதி திராவிடர்களுக்கு பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதி திராவிடர்களுக்கு பல கோடி ரூபாய் செலவு செய்து, திட்டங்கள் தீட்டியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்று ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவது. இந்தப் பிரச்சனை பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு வீட்டு மனை பட்டா வேண்டுமென்று கேட்டு, கேட்டு, பல்லாண்டுக்

[திரு. சோ. அழகர்சாமி] [1982 பிப்ரவரி 9

காலமாக கேட்டு வந்தபோதிலும் இன்று வரையில் அவர்களுக்கு எல்லாம் வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறதா ? எத்தனை ஆண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சி இருந்தது ? எத்தனை ஆண்டுக் காலம் தி.மு.க. ஆட்சி இருந்தது ? நீங்கள் பொறுப்புக்கு வந்து எத்தனை ஆண்டுக்காலம் ஆகியிருக்கிறது ? ஆதி திராவிட மக்களுக்கு, அடித்தட்டிலே இருக்கிற மக்களுக்கு, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் நிலம் கொடுக்க வேண்டும் ; அவர்கள் எந்த விதமான நிர்ப்பந்தமும் இல்லாமல், கட்டுப்பாடும் இல்லாமல் வாழ வேண்டும் ; யாருக்கும் பணியாமல் சுதந்திரமாக வாழ வேண்டும். அதற்கு நீங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? அந்த மக்கள் இன்றைக்கும் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு அடிபணிந்து நடக்கும் நிலையில்தான் இருக்கிறார்கள்.

கேரளாவிலே கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது அத்தனை பேர்களுக்கும் வீட்டுமனை கொடுப்போம் ; ஒரு குடும்பத்திற்கு கிராமப் பஞ்சாயத்தாக இருந்தால் 10 சென்ட் நிலம், பஞ்சாயத்தாக இருந்தால் 5 சென்ட் நிலம், நகரப் பஞ்சாயத்தாக இருந்தால் 3 சென்ட் நிலம் ஓராண்டுக்குள் கொடுப்போம் என்று சொல்லி, சட்டம் இயற்றி, அத்தனை பேர்களுக்கும் கொடுத்துவிட்டார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் ? ஓராண்டுக்குள் அத்தனை பேர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா கொடுப்போம் என்று சொல்லி கொடுத்திருக்கிறீர்களா? ஏன் கொடுக்கமுடியவில்லை? நீங்கள் மனை கொடுக்காத காரணத்தால் நிலப் பிரபுக்கள் சொற்படி நடந்து, அவர்கள் சொல்வதைக் கேட்டு, அவர்கள் கொடுக்கின்ற குறைந்த கூலியைப் பெற்று, அவர்களுடைய நிர்ப்பந்தங்களுக்கு ஆட்பட்டு மிகக் கேவலமான வாழ்க்கை வாழக்கூடிய நிலையிலேதானே இன்றைக்கும் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையை போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், நீங்கள் அதற்கு திட்டம் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குவோம் என்று சொன்னீர்கள் ; பென்ஷன் கொடுப்பொம் என்று சொன்னீர்கள். எத்தனை பேர்களுக்கு கொடுத்தீர்கள்? கேரளாவைப் பாருங்கள். இதைவிட சிறிய ஒரு மாநிலம். 7½ கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கி, 45 ரூபாய் வீதம் விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் திட்டத்தைத் தீட்டினார்கள். அதைச் செயல்படுத்தினார்கள். நீங்கள் திட்டத்தைச் சொன்னீர்கள் ; ஆனால் செயல்படுத்தவில்லை.



1982 பிப்ரவரி 9] [திரு. சோ. அழகர்சாமி]

சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படும் என்று சொன்ன பிறகு நாங்கள் அதிகாரிகளைக் கேட்டோம். விவசாயத் தொழிலாளர்களுக்கும் வயோதிக பென்ஷன் ஓல்டு ஏஜ் பென்ஷன் மாதிரிதான் கொடுக்கப்படுகிறது ; தனியாக இல்லை. விவசாயத் தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் பென்ஷன் கிடையாது என்று சொல்கிறார்கள். 100 பேர் ஒரு தாலுகாவில் இருந்தால் அதிலே இரண்டு பேர் இறந்தால், அந்த இடத்தில் இரண்டு பேர்களைச் சேர்த்துக் கொள்கிறார்களே தவிர தகுதி படைத்த அத்தனை பேர்களுக்கும் கொடுப்பதில்லை. இது முதியோர் பென்ஷனேதவிர விவசாயத் தொழிலாளர் பென்ஷன் அல்ல. ஆகவே, திட்டத்தைச் சொன்னீர்கள், சட்டத்தைப் போட்டீர்கள், அமுல் படுத்தவில்லை; அதனால் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பலன் இல்லை.

இந்த விவசாயத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அரிசன மக்கள். அவர்களுக்கு எல்லாம் இறுதி காலத்தில் உதவித் தொகை கிடைக்காததால் அவர்கள் பட்டினி கிடந்து, பிச்சை எடுத்து வாழ்கிற அவல நிலை ஏற்படுகிறது. காந்தியடிகள் இந்த அரிசன மக்களுக்காக எவ்வளவோ சொன்னார், யாரும் கேட்டதாகத் தெரியவில்லை. சுதந்திரம் கிடைத்த 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. அரிசன விவசாயத் தொழிலாளர்கள் கடைசி காலத்தில் பிச்சை எடுத்து வாழும் கேவலமான நிலைமைதான் இன்றைக்கும் இருக்கிறது. அவர்களுக்கு சொந்தக்காரர்கள் இல்லையா என்று கேட்டால் இருக்கிறார்கள். அவர்களால் எப்படி இவர்களையும் காப்பாற்ற முடியும் ? ஒரு நாளைக்கு 4 ரூபாய் 5 ரூபாய் கூலி கிடைக்கும். அதை வைத்து அவனுடைய மனைவி, மக்கள் அதோடு தானும் வாழ்க்கைநடத்த வேண்டும். அந்த நிலையில் இவர்களை எப்படி கவனிக்கப்போகிறார்கள் ? ஆகவே இந்த ஆண்டிலிருந்தாவது சமூக நலத்துறையின் மூலம் அத்தனை விவசாயத் தொழிலாளர்களுக்கும்—பெரும்பாலும் அவர்கள் எல்லாம் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் பென்ஷன் தரும் திட்டத்தை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது ஒரு திட்டத்தைப்பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் நிவாரணத்தைப் பொறுத்தவரையிலே டிசம்பர் மாதம் 31-க்கு முன்பு கடன் செலுத்திவிடுபவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இன்னும் பலரால் கடன் செலுத்தப்படாமல் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்றபோது அந்தக் கடனைச் செலுத்துவதிலே உள்ள சீர்கேடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று சொன்னாலும் [illegible]

இடங்களிலே வறட்சி ஏற்பட்டபோதுகூட கடன் தவணை
நீடித்துத் தரப்படவில்லை. ஆகவே அவ்வாறு வறட்சியால்
பாதிக்கப்பட்டவர்களுக்கும் பலன் கிடைக்காத நிலைமை இருக்
கின்றது. அதன் காரணமாக 5 ஏக்கருக்கு உள்ளாக நிலம் வைத்
திருப்பவர்களுக்குக் கூட பலன் கிடைக்காத நிலைமைகள் இருந்து
வருகின்றன. அதனால் இப்போது அதிகமாக அபராத வட்டியும்
தண்ட வட்டிகளும் நீக்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே
இது சம்பந்தமாக விவசாய சங்கப் பிரதிநிதிகளை மீண்டும்
அழைத்துப் பேசி சுமுகமாக ஒரு தீர்வினை ஏற்படுத்தவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி எல்லாம் செய்யாதிருந்
தால் வீணாக விவசாயிகளின் பெரும் எதிர்ப்பைத் தேடிக்
கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

அடுத்தபடியாக ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள்
விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்பதற்
காகவும் வாங்கி உபயோகிப்பவர்களுக்கும் நியாய விலையிலே
பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் கூட்டுறவு
சங்கங்களை நிறுவ இருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள், ஆனால்
விவசாயிகளிடத்திலே எப்படி நெல் கொள்முதல் செய்யப்படு
கின்றது என்பது பற்றி பல பெட்டிஷன் வந்திருக்கின்றன.
பேரவைத் தலைவரின் அனுமதியோடு அவற்றிலே ஒன்றிரண்டை
மட்டும் வாசிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும்,
உணவுத்துறை செயலாளர் அவர்களுக்கும் மதுரை மாவட்டத்
திலிருந்து பெட்டிஷன் அனுப்பப்பட்டிருக்கின்றது. அதிலே விவ
சாயிகள் தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து விளைவித்த
நெல்லை விற்பதற்காக மாட்டு வண்டியிலே எடுத்துக்கொண்டு
போகின்றபோது அவற்றைப் பறிமுதல் செய்கின்ற மோசமான
நிலைமை இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தாசில்தார்
டீ.எஸ்.ஓ. ஆர். ஐ. போன்ற அத்தனைபேரும் சேர்ந்துகொண்டு
நெல்லை பறிமுதல் செய்வதாகப் பெட்டிஷன் வந்திருக்கின்றது.
அப்படி பயமுறுத்தி பறிமுதல் செய்யப்படுகின்ற ஒரு மூட்டை
நெல்லுக்கு அவர்கள் கொடுக்கின்ற விலை என்ன என்றால்
115 ரூபாய்தான். ஒரு குவிண்டால் நெல்லுக்கு அறவைக்கூலி
14 ரூபாயும் போக்குவரத்துச் செலவு 10 ரூபாயும்தான் கொடுக்
கிறார்கள். இப்படி 139 ரூபாயிலே கொள்முதல் செய்து அதை
விற்கின்றபோது அரசாங்கத்திற்கு 190 ரூபாய் கிடைக்கின்றது.
ஆகவே அதன்மூலம் அரசாங்கத்திற்குக் கிட்டத்தட்ட 51 ரூபாய்
அதிக இலாபம் கிடைக்கின்றது. ஆகவே இந்த நிலை மில் வியா
பாரிகளுக்கு உதவி செய்கின்ற நிலைமையிலே தான் அமைத்திருக்
கிறது. ஏழை விவசாயிகளின் வயிற்றிலே அடித்து வியாபாரி
களுக்கும் மில் அதிபர்களுக்கும் உதவி செய்யக்கூடிய இந்த
திட்டத்தைக் கைவிடவேண்டும்,





அரசு என்ன சொல்கிறது என்றால் லெவியினை வியாபாரி
களிடத்திலேதான் வாங்குகிறோம் என்று. ஆனால் விவசாயிகள்
நெல்லை ஒரு கிராமத்திலிருந்து அடுத்த கிராமத்திற்கு ஒரு
நான்கைந்து மூட்டை எடுத்துச் சென்றாலும்கூட அதிகாரிகள்
வந்து அவற்றைப் பறிமுதல் செய்கிறார்கள். இளையாங்குடி
தாலுக்கா சாலைக் கிராமத்தில் வேதமுத்து என்ற விவசாயி
வீட்டில் 47 மூட்டை நெல்லை விதை உட்பட அதிகாரிகள்
எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அதுபோன்று பரமக்குடி
யில் 4 நாட்களாக தொடர்ந்து நெல் அரிசி வியாபாரிகள் எல்லாம்
சேர்ந்து வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே அந்த
இடத்திலே நெல் அரிசி வியாபாரம் ஸ்தம்பித்துப் போய் இருக்
கிறது. இப்போது லெவி முறை இருக்கின்ற காரணத்தினால்
ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நெல்லை அரைப்
பதற்காக விவசாயி எடுத்துக்கொண்டு சென்றால் கூட அதை
அங்குள்ள அதிகாரிகள் பறிமுதல் செய்து லாரிகளில் ஏற்றிச்
செல்கிறார்கள். பூச்சி மருந்து தெளித்து பல கஷ்டங்கள் பட்டு
உழைத்து உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு நியாயமான விலை
கிடைக்காமல் இருக்கின்றன. மோசமான நிலைமை இருக்கின்றது.
ஆகவே அவர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு ஏற்பாடு
செய்யவேண்டும். வியாபாரிகளிடம் லெவி வாங்குவதற்கு பதி
லாக விவசாயிகளிடம் லெவி வாங்குகின்ற நடைமுறையினை
நிறுத்திக்கொள்ளவேண்டும்.

அடுத்து தொழில்களுக்கு உதவி செய்வதற்காக பல திட்டங்
களைச் சொல்லி இருக்கிறார்கள். புதிதாக தொழில் தொடங்கு
பவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து அவர்
களுக்கு வேண்டிய மூலதனத்தையும் கொடுப்பதற்கு உரிய நட
வடிக்கை எடுக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். எங்களது
மாவட்டம் போன்ற இடங்களில் பிரதானமாக இருக்கின்ற
தொழில். தீப்பெட்டித் தொழில் அதற்கடுத்தபடியாக இருப்பது
கைத்தறித்தொழில். இப்போது இந்த இரண்டும் மிகவும் பாதிக்கப்
பட்டு நசிந்துகொண்டு வருகிறது. தீப்பெட்டித் தொழிலில்
இருப்பவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்கின்ற வகையிலே அவர்
களுடைய தொழிலை நசுக்கக்கூடிய நடவடிக்கைகளை மத்திய
அரசு எடுத்து வருகின்றது. ஆனால் அதேபோன்று தொழிலாளர்
கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையிலும் முதலாளிகளுக்கு உதவி
செய்யக்கூடிய நிலைமையிலும் உங்கள் அறிக்கை இருக்கின்றது,

(முற்பகல் 10.10)

அதன் காரணமாக இன்றைக்கு அந்தச் சிறு தீப் பெட்டித்
தொழில்களில், சிறு சிறு முதல் போட்டவர்கள் பூராவும் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். மிகப் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகியிருக்
கிறார்கள். ஆகவே, நம்முடைய மாநில அரசு அவர்களுக்கு

வேண்டிய உதவிகளைச் செய்து, அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு சிறு தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்ற இன்னொரு தொழில் கைத்தறித் தொழில். இந்தத் தொழில் மட்டும் நம் மாநிலத்தில் கவனிக்கப்படாமல் இருக்கிறது. வேறு பல தொழில்களுக்கு எல்லாம் வேண்டிய வசதிகளை மாநில அரசும், மத்திய அரசும் செய்து கொடுக்கும். ஆனால், இந்த கைத்தறித் தொழில்களுக்கு மட்டும் எந்தவித சலுகைகளும் கிடையாது. வேறு மாநிலங்களில் அவர்கள் கைத்தறிக்குப் பயன்படுத்தும் சிட்ட நூல்களுக்கு வரி இல்லாமல் இருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் சிட்ட நூல்களுக்கு விற்பனை வரி இருப்பதன் காரணமாக அதன் விலை அதிகரித்திருக்கிறது. ஆகவே, அந்த நூலுக்கு இருக்கிற வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நகரப் பகுதிகளில் தறிபோட்ட ஷெட்டுகளுக்கும் அவர்கள் பாவு போடக்கூடிய இடங்களுக்கும் வரி விதிக்கும் நிலைமை இருக்கிறது. அந்த வரிகளின் காரணமாக மேலும் பல செலவுகளும். இடைஞ்சல்களும் அவர்களுக்கு ஏற்படுகிற காரணத்தால் அதையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இயந்திரத்தின் மூலமாக செய்யக்கூடிய சில சிறு தொழில்களுக்கு எல்லாம் அவைகள் சிறு தொழில்கள் என்று அரசாங்கத்தில் சர்டிபிகேட் கொடுப்பதன் காரணமாக அவர்களுக்கு 4 சதவீதம் வட்டியிலே கடன் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாடு உள்ளது. அதேபோன்று கைத்தறித் தொழிலுக்கும் சிறு தொழில் என்று சர்டிபிகேட் கொடுத்தால் நெசவாளர்களும் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வாங்கி நூல்கள் சாயம் வாங்குவது சொந்தத் தறிபோடுவது போன்ற வேலைகளைச் செய்துக் கொள்ள முடியும். ஆகவே. அவர்களுக்காக இதை இந்த அரசாங்கம் செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பல கிராமங்களிலே இந்தக் கைத்தறி நெசவாளர்கள் வீட்டோடு சேர்த்து தறி வைத்திருப்பார்கள் அதாவது ஒரு பக்கம் வீடு, ஒரு பக்கம் தறி மேடை என்று போட்டிருப்பார்கள். இடம் என்னவோ சிறியதாகத்தான் இருக்கும். குடிசைக்குள்ளும் இருக்கும். ஆனால் அதிலே ஒரு பக்கம் சமையலறை, ஒரு பக்கம் தறி என்று போட்டிருப்பார்கள். இரண்டு இடங்களுக்கும் சேர்த்து ஒரு பல்பு அல்லது இரண்டு பல்புகள் எரியும். ஆனால் அவர்களுக்கு போடக்கூடிய மின்சாரக் கட்டணம் தொழில் செய்பவர்களுக்குப் போடுவது போன்று 86 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது. அவர்கள் தறிக்கும் வீட்டுக்கும் சேர்த்து எரியக்கூடிய லைட்டுக்கு இரண்டு மடங்கு கட்டணம்



ஏன்! ஆகவே, அதைக்குறித்து சாதாரணமாக வீட்டுக்கு விதிப்பது போன்ற மின்சார கட்டணத்தை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் ஏன் கேட்கிறேன் என்றால் சிறு தீப்பெட்டித் தொழில் மாதிரி கைத்தறித் தொழிலும் பாதுகாக்கப்பட வேண்டிய தொழில் என்பதால், அதற்கு வேண்டிய வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லி ஒரு திட்டத்தைப் பல கிராமங்களில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களில் அவசர அவசரமாக குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று சொல்லி வேலைகளைச் செய்வதால், வீணான பண விரயம்தான் ஏற்படுகிறதே ஒழிய ஒழுங்காக நடைபெறுவதில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தினால் அதிகாரிகளுக்கும் காண்டிராக்ட்ர்களுக்கும்தான் ஆதாயமே தவிர மக்களுக்கு அல்ல. அவர்களுக்குத்தான் தன்னிறைவைத் தருகின்ற, தன்னிறைவுத் திட்டமாக இருக்கிறது. ஏனென்றால், பணிகள் முடிக்கப்பட்ட பல இடங்களில் கூட, இன்னும் குடிதண்ணீர் இல்லாமல் இருக்கிறது. ரோடு வசதி இல்லாமல் இருக்கிறது. இன்னமும் அவர்களுக்கு எந்த வகையிலும் நன்மை இல்லாமலே இருக்கிறது. ஆகவே. அந்தத் திட்டத்தை மக்களுக்காக. ஒழுங்காக சரியாக செயல்படுத்த வேண்டும் என்று சொன்னால். மக்கள் குழுக்களைப் போட்டு, அவர்களுடைய மேற்பார்வையில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் ஓரளவு வெற்றி கிடைக்கும். மக்கள் குழுக்களைப் போட்டு, ஒவ்வொரு திட்டத்திற்கும் இவ்வளவு என்று பணத்தை ஒதுக்கீடு செய்து ஒவ்வொரு வேலையையும் முடிக்க 6 மாதம் என்று ஒதுக்காமல் வேண்டிய காலத்தையும் கொடுத்தால். பணி சிறப்பாக மக்களுக்குப் பயன் உள்ளதாக முடிவுறும்.

ஏனென்றால், திட்டம் போட்டு செயல்படுத்தவே 6 மாதம் ஆகிறபோது, மீதி இருக்கும் 5, 6 மாதங்களில் வேலைகளை முடிக்க வேண்டும் என்று அவசர அவசரமாக முடிப்பதால்தான். பணிகள் மக்களுக்கு நீண்டகாலம் உபயோகம் ஆகும் அளவிற்கு செம்மையாக இருப்பதில்லை. மோசமாக முடிவடைகிற நிலைமை இருக்கிறது. பணமும் வீணாக விரயம் ஆகிறது. ஆகவே, ஒரு திட்டத்திற்கு ஒரு ஆண்டு என்று சொன்னால், அதை இரண்டு ஆண்டுகள் என்று வைத்து நிறைவேற்ற வேண்டும் என்ற வகையில் மக்கள் குழுவை அமைத்து, அவர்கள் மேற்பார்வையில் அதனை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக, பினாமி நிலங்களை ஒழிக்க வேண்டும் என்று நாம் இங்கே ஒரு சட்டத்தை நிறைவேற்றி அனுப்பினோம். ஆனால் மத்திய அரசு அதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்து இருக்கிறது. மத்திய அரசிலும் 20 அம்ச திட்டம் போட்டிருக்கிறார்கள். முன்பே ஒரு முறை போட்டிருக்கிறார்கள். இப்போதும் போட்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே போட்ட 20 அம்சத் திட்டத்திலும், இந்தக் காலத்தில் போட்ட 20 அம்சத் திட்டத்திலும், நிலமற்றவர்களுக்கு உபரி நிலங்களை வழங்குவது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி பினாமி நிலங்களை எடுத்து, நிலமற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக இயற்றப்பட்ட இந்தச்சட்டத்தை வேண்டாம் என்று தடை செய்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அனுமதியை அவர்களிடம் வற்புறுத்திக் கேட்க வேண்டும். போராட்டத்தை நடத்த வேண்டும். அவர்களை அப்படி வலியுறுத்தி அனுமதியைப்பெற்று, நாம்போட்ட சட்டத்தைச் சரியாக அமுல் நடத்தி அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து முறையாக, அவைகளை நிலமற்றவர்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் ஆவணப் பள்ளியில் கமலம்மாள் என்பவர் இடத்தில் இரண்டாயிரம் ஏக்கர் நிலம் இன்றைக்கும் இருக்கிறது. நாம் வைத்திருக்கும் உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்கள்தான். ஆனால் அவர்களிடம் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன.

அதேமாதிரி நெல்லுமாரையா அக்ரகாரத்தில் சாரதம்மா, அஞ்சம்மா சகோதரிகளுக்கு இரண்டாயிரத்திற்கு அதிகமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. சாரதம்மா கணவர் திரு. ராமச்சந்திர ரெட்டி அங்கே பரம்பரையாக சாகுபடி செய்து வரக்கூடிய விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவது என்பது மட்டும் அல்லாமல் அங்குள்ள பெண்களைத் துன்புறுத்துவதோடு கூட கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் நடந்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது.

ஆக, இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் இவ்வளவு அதிகமான அளவிற்கு நிலத்தை வைத்திருக்கக்கூடியவர்கள் இன்றும் நம் மாநிலத்தில் இருக்கிறார்கள். ஆகவே இப்படி அதிகப்படியாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மேலும் 633 ஏக்கருக்கு மேல் உச்சவரம்பில் வந்திருக்கிறது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதில் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். மிக அக்கறையோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பு



கிறேன். உச்சவரம்பிற்கு அதிகப்படியாக இருக்கும் நிலங்களை எடுத்து, பினாமியாக வைத்திருக்கக்கூடிய நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இப்படி இரண்டாயிரம் ஏக்கர், மூவாயிரம் ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், இந்த 633 ஏக்கர்களை, உச்சவரம்பிற்கு அதிகப்பட்டு வந்திருக்கக்கூடிய நிலங்களை அந்த இடத்தில் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குக் கொடுக்காமல் பினாமியாக அவர்கள் யார் யாரைச் சொல்கிறார்களோ அந்த ஆட்களைப் போட்டு, பொய்யாக சாகுபடி செய்வதாக ரிக்கார்ட் செய்து விவசாயிகளை வெளியேற்றக் கூடிய அளவிற்கு நிலை இருக்கிறது. நியாயம் கேட்கும்போது கம்யூனிஸ்ட் ஊழியர்கள் பலயிடங்களில் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற சம்பவங்கள் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன்.

17—1—1982-ல் கிருஷ்ணகிரி அரசம்பட்டி சாந்திபுரம் முருகேசனை பாரூரில் கைது செய்து காந்திடத்திற்கு இழுத்துச் சென்று பொது மக்கள் முன்னால் பூட்ஸ் காலால் மிதித்து லத்தியால் அடித்து கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்.

19—1—1982-ல் மிட்டாரெட்டிபட்டி 15 விவசாயிகளை, இளைஞர்களை, இளைஞர் மன்றத்தைச் சார்ந்தவர்களை இன்ஸ்பெக்டர் படையுடன் சென்று சுட்டுக்கொல்வேன் என்று மிரட்டி அங்கே தடியடி தர்பார் நடத்தி கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்.

சித்தன் என்பவரை போலீஸ் ஸ்டேஷனில் அடித்து காது கிழிந்துவிட்டது. போலீசாரே அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து மறுபடியும் அவர் சப்-ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அதேமாதிரி 1—2—1982-ல் வாடிப்பட்டியில் அதைப் பற்றி திரு. ஆண்டித்தேவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சீனியம்மாள் என்ற ஆசிரியை. ஒரு போலீஸ்காரரிடத்தில் ரூ. 5,000 கொடுத்து விட்டு வீட்டில் இன்றைக்கு ஒத்திக்கு குடியிருக்கிறார். பத்திரம் எழுதவில்லை. போலீஸ் அதிகாரி பொய் சொல்வாரா, நியாயமாக பணத்தைக் கொடுத்து விட்டு பின்னர் வீட்டை கொடுத்துவிட்டு பணத்தை திருப்பி வாங்கிவிடலாம் என்ற அந்த சீனியம்மாளை போலீஸார் பணம் கொடுக்காமல் அங்குள்ள சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி அந்த அம்மையாரை இழுத்து, அவர் கணவரை தெருவழியாக சங்கிலி மாட்டி இழுத்துச் சென்று மகனையும் கொடுமைப்படுத்தி அதற்குமேல் சப் இன்ஸ்பெக்டரை கொலை செய்ய வந்ததாக வழக்கு போடப்பட்டிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், லா அன்ட் ஆர்டர் இன்று திறமையாக [illegible] சொல்லியிருக்கிறீர்கள். அந்த வட்டாரத்தில் [illegible]

[திரு. சோ. அழகர்சாமி] [1982 பிப்ரவரி 9

ஆளும் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், உட்பட, கம்யூனிஸ்ட்கள் உட்பட, ஜனதா உட்பட, பார்வேர்ட் ப்ளாக் உட்பட அனைவரும் சேர்ந்து பெரிய அர்த்தால், பெரிய ஊர்வலம், கண்டனப் பொதுகூட்டம் நடத்துகிற அளவிற்கு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோல் அண்ணாவி என்பவர் வரக்கூடிய பக்தர்களுக்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் கோவிலில் உள்ள முக்கியமான இடங்களைக் காட்டி விளக்கக்கூடிய ஒரு சாதாரண ஊழியர் கோவிலைச் சார்ந்த ஊழியர். ஏதோ ஒரு குழந்தையின் நகை காணவில்லை என்பதற்காக இவரை சித்தரவதை செய்ததன் காரணமாக சர்வகட்சியினரும் அதைப் பொறுக்காது அர்த்தால், கண்டனப் பொதுக் கூட்டம், மறியல் போன்றவற்றில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதில் உள்ளவர்களுக்கும் தெரியும். அவருக்குச் செய்யப்பட்ட கொடுமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் எல்லோரும் சேர்ந்து போலீஸ்ஸின் மோசமான நடவடிக்கைகளை எதிர்க்கக் கூடிய ஒரு நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. ஆக இப்படிப்பட்ட நிலைமையில் இன்றையதினம் தர்மபுரிமாவட்டம் இருக்கிறது. இந்த உச்சகட்டத்திற்குச் சென்று, அந்த மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் நிர்வாகக் கமிட்டிஉறுப்பினராக, பெண்ணாகரம் செயலாளர் நஞ்சப்பன் என்ற தோழரை போலீசார்அவரைக் கொன்றுவிடுவோம் என்று அங்குள்ள நிலப்பிரபுக்களே சொல்லும் அளவுக்கு நிலைமைகள் இன்றிருக்கிறது இந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தையே ஒழித்துக்கட்டி விடுவோம் என்றும் ஏழை எளியமக்களின் உரிமைக்காக்கப் போராடுகிறார்கள். அக்கிரமங்களை எதிர்க்கிறார்கள், போலீஸ் அட்டூழியங்களை கண்டிக்கிறார்கள், எனவே எப்படியும் ஒழித்துக்கட்டுவது தீர்த்துக் கட்டுவது, என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றைக்கு அங்கே போலீஸ் அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், தமிழகத்தின் நிலைமை எங்கே போகும், எப்படிப் போகும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(முற்பகல் 10–20)

அதுமட்டுமல்ல. இன்றைக்கு நாட்டில் உள்ள மக்கள் வாழ்க்கை நடத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம் விலை வாசி உயர்வு. அதே மாதிரி விவசாயிகளுக்கும் இன்றைக்கு



1982 பிப்ரவரி 9] [திரு. சோ. அழகர்சாமி]

நாட்டிலே, அவர்கள் பொருள்களுக்கு நியாயமான விலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தக் கோரிக்கைகளை எல்லாம் வைத்து, விவசாயிகள் போராடுகின்றார்கள். அவர்கள் உரிமைகள் பாதிக்கக்கூடிய முறையில் இன்றைக்கு சட்டங்கள் இருக்கக்கூடாது, அதை எதிர்த்து, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லி, கடந்த மாதம் 19ஆம் தேதி ஒருநாள் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தபோது, அரசாங்கம் அவர்களை எப்படி கவனிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் என்ன செய்தார்கள்? அன்று ஒருநாள்தான் ஸ்டிரைக், மறுநாள் இல்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் அரசாங்கம் அதற்கு செவிசாய்த்தார்களா ? இல்லை. அதற்கு மாறாக, அவர்களை திருச்சி சிறையிலே 4000 க்கு அதிகமானபேர்களை அடைத்து வைத்து, அவர்களுக்கு சாப்பாடு போடவில்லை. ஜெயிலிலே போடுகிறார்கள். அது சரி, ஒரு நாள் முழுவதும் அவர்களுக்கு சாப்பாடுபோடாமல் பட்டினி போட்டார்கள்.

அதுமட்டுமல்ல. அன்றைக்கு இந்த ஸ்ட்ரைக்கிலே கலந்து கொண்டவர்கள், ஒரு நாளைக்கு வேலைக்கு வரமாட்டோம் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே உள்ள விலைவாசி குறைய வேண்டும், பொதுமக்களுக்கு நியாயமான விலையிலே உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும், மற்றப்பொருள்களும் அப்படி கிடைக்க வேண்டும், அதேமாதிரி விவசாயிகளுக்கு நியாயமான விலையில்கிடைக்க வேண்டுமென்றுபோராடினார்கள். இந்த இரண்டிற்கும் முரண்பாடு கிடையாது. விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு ரூ.115 க்கு ஒரு குவிண்டால் நெல் வாங்கப்படுகிறது. செலவுத் தொகை என்று வைத்துக் கொண்டாலும், ரூ. 130 க்கு வாங்கப்படுகிறது. அதற்குமேல் அதை அரிசியாக்க ரூ. 65 செலவழிக்கப்படுகிறது. அப்போது ஒரு மூட்டை ரூ. 200 ஆகிறது. அப்படியானால், எல்லாம் சேர்த்து கிலோ அரிசி ரூ. 2 க்கு விற்கப்பட வேண்டும். அப்படி விற்கப்படுகிறதா? அப்படியே ரூ.200 க்கு நெல் வாங்கி அதற்கு செலவு செய்தாலும் ரூ. 3 க்கு விற்கப்பட வேண்டும் அப்படியாவது அரிசி கிடைக்கிறதா என்றால்இல்லை. ரூ. 4க்கு வாங்கிச்சாப்பிட வேண்டிய நிலைமை இருக்கிறது. மாத வருமானம் ரூ. 1000 பெறக்கூடியவர்கள்கூட மாதாமாதம் அரிசியும், மற்றப்பொருள்களையும் வாங்கக்கூடிய வசதி இன்றைக்கு இல்லை. ஆகவே மத்திய அரசுக்கு எதிராக ஒருநாள் ஸ்டிரைக் செய்யப்போகிறோம் என்று சொல்லியபோது, அதைஆதரிப்பதற்குப் பதிலாக அதை எதிர்த்து அடக்குமுறைகளைக் கையாண்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் சொன்ன மாதிரி, எனி எங்கே என்று மத்திய அரசு கேட்டால் நீங்கள் எண்ணெயாக நின்றீர்கள். மத்திய அரசு இந்த ஸ்டிரைக்கை நாங்கள் அடக்குவோம் என்று சொன்னதும் இங்கே உள்ள இளைஞர் காங்கிரஸ்

அப்படி கூப்பாடு போட்டதும், நீங்களும் அவர்களோடுசேர்த்து அதற்குமேல் ஒருபடி சென்று அடக்குமுறைகளைக் கையாண்டீர்கள்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும் உள்ள 400, 500 தொழிலாளர்கள் இன்றைக்கு சஸ்பென்ட் செய்யப்பட்டுவெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு வேலைக்கு வரமாட்டோம் என்று சொன்னதற்காக, சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் இது நியாயமா? இதேமாதிரிகூட்டுறவுச் சங்கங்களிலே இருப்பவகளையும் சஸ்பென்ட் செய்து, நசுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாள் வேலைக்கு வராததற்கு, 8 நாட்கள் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கான நியாயமான சட்டங்களைக் கொண்டு வருகிறோம்அவர்களுக்கு ஆதரவான திட்டங்களைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லிகொண்டிருக்கிறோம். ஆனால் அவர்களை இப்படி நடத்துவது சரியா? இது அவர்களுக்கு ஆதரவுதரக்கூடிய காரியமா? தொழிலாளர்கள்ஒரு நாளைக்கு மட்டும் வேலைக்கு வரமாட்டோம். என்றுதான் சொன்னார்கள். வேறு அசம்பாவிதமான காரியங்களிலே ஈடுபட்டார்களா? கிடையாது. அதேமாதிரி, விவசாயத்தொலாளர்களை தஞ்சாவூர் மாவட்டத்திலே துன்புறுத்தியிருகிறார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், திருமெய்ஞானபுரத்தில் துப்பாக்கிச் சூடுநடத்தியிருக்கிறது போலீஸ் செம்பனார்கோயில் போலீஸ் ஸ்டேஷனிலே உள்ள சப்இன்ஸ்பெக்டர் அவர் எல்லைக்கு அப்பாற்பட்டுள்ள திருமெய்ஞானபுரத்திற்கு எப்படிப் போனார்? இதைப்பற்றி இங்கே திரு உமாநாத் அவர்கள்கூட சொன்னார்கள். இந்த போலீஸ் ஸ்டேஷனுக்கும் அந்த எல்லைக்கும் 3 மைல்கள் இருக்கின்றன. அப்படி எல்லையைத் தாண்டிச் சென்று அங்கு இரண்டு நபர்கள்மீது துப்பாக்கிச்சூடு நிகழ்ந்து அவர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். எப்படி அவர் தன்எல்லையை விட்டுச் சென்றார். அவர் மீது இதுவரை எந்த விதமானநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது நியாயமா? இந்த அதிகாரி தன்னுடைய அத்தைமீறிச் சென்றிருக்கிறார், இதற்கு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும்.

இதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் ஒருநாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களைப் பழிவாங்காமல் அவர்கள் மீதுபோடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் பெற்று சம்பளம் பிடித்திருந்தால் அதைத் திருப்பிக் கொடுத்து அந்தத் தொழிலாளர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் [illegible]





அடுத்து மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக ஒன்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பது பற்றிச்சொல்லி இருக்கிறார்கள். ஹொகனேகல் திட்டத்தை நிறைவேற்றினால் நம்முடைய மாநிலத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரை வற்புறுத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற கடுமையானநடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய உள்ள தொழில் முதலாளிகளுக்கு வேண்டுமானால் கட்டணத்தை உயர்த்துங்கள்; இப்பொழுது கட்டுப்படியாகாத நிலைமையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தக் கூடாது. அவர்கள் பெரிய போராட்டங்களை நடத்தி பலபேர் உயிரிழந்து மின்சாரக் கட்டணத்தை ஒரு நிலையில் நிறுத்தியிருக்கிறார்கள். முன்னூறு நானூறு அடி ஆழத்திலிருந்து தண்ணீரை எடுத்து விவசாயம் செய்ய மின்சாரத்தை பயன்படுத்தும் போது கட்டுப்படியாகாத நிலைமை இருக்கக்கூடிய நிலையில் விவசாயிகளுக்கு மேலும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக இதிலேசொல்லப்பட்டிருக்கிறது. பல இடங்களில் மழைக் காலங்களில் பாயக் கூடிய தண்ணீர் வீணாக சமுத்திரத்தில் போய் விழக்கூடியநிலைமை எல்லா மாவட்டத்திலும் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் கட்டுப்படியாகாத திட்டம் என்று சொல்கிறார்கள். மூவாயிரம் ரூபாய் செலவழித்தால் ஒரு டன் தானியம் விளைவிக்கக்கூடிய திறன் இருக்க வேண்டும் என்று கூறி திட்டம் நிறுத்திவைக்கப்படுகிறது. அவ்வாறு கணக்குப் பார்க்காமல் வீணாக சமுத்திரத்தில் மழைக் காலங்களில் போய்சேருகிற தண்ணீரை பயன்படுத்தும் வகையில் ஆங்காங்கு பல நீர்ப்பாசனத் தேக்கங்களை ஏற்படுத்துவதன்மூலம் நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதோடு மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களுக்கும் உணவுப்பொருளை கொடுத்து மின்சாரத்தையோ தண்ணீரையோ பெறமுடியும். அந்த முறையில் இதனை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய அணுகு முறை தமிழகத்தின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அமைய வேண்டும். உழைப்பாளர் நலனில் அக்கரை செலுத்த வேண்டும். இன்றைக்கு மத்திய சர்க்கார் அதிகாரக் குவியலை தங்கள் கையில் வைத்துக்கொண்டு மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை ஏகபோக முதலாளிகளுக்கு ஆதரவாக எடுத்து கொண்டிருக்கிறது. வேலையில்லாத்

திண்டாட்டத்தைப் பெருக்குவதற்குக் காரணமாக அவர்கள் கொள்கைகைள் அமைந்திருக்கின்றன. அந்தக் கொள்கைகளை எதிர்த்து நீங்கள் செயல்படவில்லையென்றால் நீங்கள் ஓட்டுப் பெற்று வந்த மக்களுக்கு நன்மை செய்தவர்களாக ஆக மாட்டீர்கள். அப்போது நாம் மக்களிடம் என்னசொல்லி ஓட்டுக் கேட்டோம் எதை நம்பி அவர்கள் ஓட்டுப் போட்டார்கள். அப்போது எங்கள் தொகுதியில் வந்து முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள் யாருக்கு ஓட்டுப் போடப் போகிறீர்கள். எலிக்கறி சாப்பிடச் சொன்னவர்களுக்கு ஓட்டுப் போடப் போகிறீர்களா இல்லை இரண்டு ரூபாய்க்கு அரிசி போடுகிற எங்களுக்குப் போடப்போகிறீர்களா என்று கேட்டார்கள். ஆனால் இன்று நிலைமை என்ன? எலிக்கறி சாப்பிடவேண்டிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரிசி விலை மிக உயர்ந்திருக்கிறது. இப்போது நேருக்கு மாறாக உங்கள் கொள்கை போய்விட்டது. மக்களுக்கு விரோதமாக இருக்கும் கொள்கைகளை ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள். தொழிலாளர் விரோதச்சட்டம் பாராளுமன்றத்தில் வருகிறபோது நீங்களும் சேர்ந்து ஆதரிக்கிறீர்கள். நீங்கள் ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல் இங்கே எதிர்க்கட்சியினரின் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பிரதான எதிர்க்கட்சியும் அங்கே ஆதரிக்கிறது. நல்லதை ஆதரித்தால் பரவாயில்லை. விலைவாசி உயர்விலிருந்து தொழிலாளர்கள் உரிமையை நசுக்கக்கூடிய அளவுக்கு காரணமாக இருந்துவரக்கூடிய மத்தியசர்க்காரின் கொள்கைகளை நீங்கள் ஆதரிப்பதா என்று சொன்னால் நீங்கள் ஓட்டு வாங்கிய மக்களுக்கு நல்லது செய்வதாக ஆகாது. என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10–30)

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்களையொட்டி பின் வரும் முக்கிய பிரச்சினைகளின்மீது ன்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலிலே தமிழக அரசு தொழில் துறையிலே மின்சாரத்தைப் பொறுத்தவரை தனியார் தங்கள் தொழிலுக்குத் தேவையான மின் உற்பத்தி செய்வதை அரசு அனுமதிக்க முடிவு செய்து உள்ளது என்றும் தனியார் இலாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களானால் அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்கவும் விரும்புகிறது என்று ஆளுநர் உரையின் 16 வது பாராவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வன்மையாக எதிர்க்கிறேன்.



நீண்ட சிரமங்களுக்குப் பிறகு தமிழகத்திலே மின்சாரம் என்பது அரசாங்கத்தினுடைய ஒரு துறையாக அறிவிக்கப்பட்டது அதற்கு முன்னால் பல்வேறு விநியோக ஏற்பாடுகள் தனியார்கள் கைகளிலே இருந்தன. அதையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு கேந்திரமான பொதுத் துறை தொழிலாக மின்சாரத்தை நாம் இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிற போது தொழிற்சாலைகளிலே தாற்காலிகமாக மின் சப்ளை தடை செய்யப்படுமானால் அதற்கு இப்போதே அவர்கள் ஜெனரேட்டர்களை வைத்து இடைக்காலத்திலே சிறிதுநேரம் மின் சப்ளையை தடங்கல் இல்லாமல் ஏற்படுத்திக் கொள்ளுகின்ற முறையை நாம் வரவேற்கிறோம். அது அல்ல இங்கே நான் குறிப்பீட விரும்புவது.

ஏற்கனவே டாடாக்கள், பிர்லாக்கள் கேப்டிவ் பவர் பிளான் என்ற முறையிலே தங்களிடத்திலே தாங்களாகவே மின் உற்பத்தி நிலையம் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கையாக இருந்து வருகிறது. இப்போது அந்தக் கோரிக்கையை தமிழக அரசு தமிழகத்திலே இந்தக்கொள்கையிலே அனுமதிக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். அதனுடைய விளைவு என்னவென்றால் தமிழகத்திலே உள்ள பெரு முதலாளிகள்—தமிழகத்தின் மின்சார வாரியத்தைச் சார்ந்திராமல் தமிழக அரசைச் சார்ந்திராமல் அவர்களே மின் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனங்களை உருவாக்கி அவைகள் மூலம் தங்களுடைய தொழில்களுக்கு தங்கள் மூலமாகவே மின் சப்ளையை எடுத்துக்கொள்வது என்பதுதான் அதனுடைய பொருள். இதற்கு எவ்வளவு பணம் செலவாகும். இன்றைக்கு நவீன முறையில் மின் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவாகும், என்றால் அவர்களிடத்திலே அந்தப் பணம் இருக்கிறது என்று ஆகிறது. இன்றைக்கு நாம் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் எவ்வளவு கடுமையான வருமான வரிகள் மத்திய சர்க்காரினால் போடப்படுகின்றன என்று சொன்ன போதிலும் அதையெல்லாம் மீறி ஏராளமான கருப்புப்பணத்தை சேமித்து வைத்திருக்கிறார்கள் அதனால்தான் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை அவர்கள் பெரு முதலாளிகள் போட்டு இந்தத் தொழிலைத் துவக்க முடியும் என்ற நிலை வருகிறது. அவர்களது பணத்தை அரசாங்கத்திடம் அவர்கள் கொடுக்கட்டும் அரசாங்கத்தின் மூலமாக மின் உற்பத்திக்காக எடுத்து வருகிற மொத்த ஏற்பாட்டின் பகுதியாக மின் உற்பத்தியைப் பெருக்குவதும், தொழில்களைத் துவங்குவதும் தான் சரியாக இருக்குமே தவிர தனியார்கள் உற்பத்தி செய்வதற்கு அனுமதிப்பது என்பது நாம் வந்திருக்கின்ற பாதையிலிருந்து பின்நோக்கி போகக் கூடிய பாதையிலே போகிறோம் என்று ஆகிறது.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

கேந்திரமான ஒரு தொழிலை பெருமுதலாளிகளுக்குக் கொடுக்க முடியாது. ஒரு கொள்கையை பெரும் சலுகையை கொடுக்கக் கூடிய முறையிலே தமிழகத்திலே இருக்கிற அரசாங்கம் பெரு முதலாளிகளுடைய நிர்ப்பந்தத்திற்கு இணங்க பெரும் சலுகையை அளிக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தியாவிலே பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கை ஒன்று இருக்கிறது. அப்படி இருக்கும் போது தமிழக அரசு முன்னுதாரணமாக கேந்திரமான ஒரு தொழிலை தனியார்களிடம் அனுமதிப்பதன் மூலமாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கோ, திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கோ சரியான பாதையாக இருக்காது.

அப்படி என்றால் தமிழகத்திலே உள்ள மிராசுதாரர்கள் தங்களுடைய விவசாயத்திற்கு என்று தனித்தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாமா ஒவ்வொரு துறையிலும் பொதுத் துறை நிறுத்தப்பட்டு தனியார்கள் அவரவர்கள் தனித்தனியாக உற்பத்தி செய்யக்கூடிய கொள்கைக்கு போக வேண்டுமா என்பது தான் இப்போது பிரச்சினை.

இது நம்முடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய ஒரு காரியமாகும். ஆகவே இந்தக் கொள்கையை மறு பரிசிலனை செய்து இதை அவர்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே இன்னொன்றையும் கூறியிருக்கிறார்கள். தனியார் லாபகரமாக மின் உற்பத்தி செய்ய முன்வருவார்களேயானால் அரசு அதைப் பரிசீலித்துப் பார்க்க விரும்புகிறது. என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மட்டும் எப்படி லாபகரமாக மின் உற்பத்தி செய்ய முடியும்? ஒன்றுதான் செய்ய முடியும். தொழிலாளர்களுடைய வயிற்றில் அடித்து தொழிலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் சம்பளம் பஞ்சப்படி போன்றவற்றைக் குறைத்து தொழிலாளர் விரோத நடைமுறையைப் பயன்படுத்தித் தான் செய்ய முடியும். அவர்கள் மின்சார வாரியத்தை மின் உற்பத்தி குறைந்த செலவில் செய்ய முடியும் என்றால் இந்த ஒரு வழிதான் இருக்கிறது.

அதை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறதா அவர்கள் எந்த வழியிலே அரசாங்கத்திற்குத் தெரியாத மந்திரத்தில் மின்சார உற்பத்தியைக் குறைவான செலவில் செய்து விடுவார்கள். அரசாங்கத்திற்குத் தெரியாத தந்திரங்களையும், மந்திரங்களையும், தொழில் நுட்பத்தையும் காட்டிலும் என்ன வழி அவர்களிடத்திலே இருக்கிறது என்று கருதுகிறீர்கள்.

அவர்கள் சொல்வார்கள் நாங்கள் குறைந்த செலவிலே இவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று. அவ்வாறு செய்வதற்கு இந்த ஒரே வழி தான் இருக்கிறது.

[திரு. என். சங்கரய்யா] [1981 பிப்ரவரி 9

கட்டணத்தை உயர்த்த வேண்டும், இது அவர்கள் சொல்லுகின்ற வழி. நான் சொல்லுகிறேன், தமிழக அரசு ஏனைய மாநில அரசுகளோடு சேர்ந்து பொதுத் துறையில் இருக்கக்கூடிய மின் தொழிலுக்காக வாங்கப்படும் சாமான்கள் மீதும், அதற்குத் தேவைப்படும் சாதனங்களின் மீதும் மத்திய அரசு வரிகள் போடக்கூடாது என்ற நிலையை எடுப்பதுதான் சரியான நிலை என்பதை வற்புறுத்த வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் விலைகளையும் வரிகளையும் உயர்த்திய பிறகு அந்தப் பளுவைத் பொதுமக்கள் தலையிலே சுமத்துவதற்கு முன்வருவது என்பது சரியான கொள்கை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணவீக்கத்தின் மூலமாக அவர்கள் செய்யும் காரியங்களால் நிலைமை என்னவாகும் என்பதைப் பார்க்க வேண்டும். 700 கோடி ரூபாய்க்கு இந்த ஆண்டுத் திட்டம் இருக்கிறது என்றால் மின்வாரியம் பயன்படுத்துகின்ற சாதனங்களுக்குப் புதிய வரிகளைப் போட்டால் இங்கே இன்னும் 100 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும். இன்னும் சொல்லப் போனால் தபால் தந்திக் கட்டணங்களை உயர்த்தி இருக்கிறார்கள். ஏற்கெனவே மாநில அரசானது பட்ஜெட் தயாரிக்கும் போது டெலிபோன் கட்டணத்திற்கு என்று ஒதுக்கித் திட்டம் போட்டிருப்பார்கள். இப்பொழுது திடீரென்று இம்மாதிரி கட்டணங்களை உயர்த்துகின்ற காரணத்தால் அது தலைகுப்புறக் கவிழ்ந்துவிடும் நிலைமை ஏற்படும். இது மத்திய அரசானது பிற மாநில அரசுகளின் மீது செலுத்துகின்ற நிர்ப்பந்தமாக இருக்கிறது. இப்படிப் புதிய வரிகளைப் போடுவதை ஆட்சேபிக்காமல் எப்படித் தமிழக அரசு மக்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும் ஆகவே, மின்வாரியம் போன்ற தொழில்கள் யாருடைய தனிப்பட்ட தொழிலும் அல்ல. அரசாங்கத்திற்குச் சொந்தமான, மக்களுக்குச் சொந்தமான நிலையம். அதற்குத் தேவைப்படும் பொருட்களின் மீது மத்திய அரசு வரிகளையும் புதிய கட்டணங்களையும் விதிக்கக்கூடாது என்று மாநில அரசு கூறுவதுதான் சரியாக இருக்கும்.

அடுத்தபடியாக, தொழிலாளர் பாதுகாப்புக் கொள்கையை பற்றிச் சொல்லும் போது நான் இன்றைக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு இதுவரையில் அதற்கான விதிகள் இயற்றப்படவில்லை. அதன் காரணமாகஇன்றைக்கும் கூட கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டம் அமுலுக்கு வரவில்லை. இது எவ்வளவு பரிதாபகரமான நிலை. இலட்சக் கணக்கான கைத்தறித் தொழிலாளர்களின் எத்தனையோ போராட்டங்களுக்குப் பிறகு அந்தச் சட்டம் வந்து, அது வந்ததற்குப் பிறகும் கூட அதற்கான விதிகள் இயற்றப்படவில்லை. எத்தனையோ அவசரச் சட்டங்களைக் கொண்டு வருவதற்கு அவகாசம் உள்ள இந்த அரசுக்கு அந்த விதிகளை இயற்றுவதற்கு அவகாசம் இல்லையா?

1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

[முற்பகல் 10—40]

ஆகவேதான் கூறுகிறேன், இப்படிப்பட்ட பலவீனங்களை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை முற்போக்கானது என்று கூறுவது நியாயமாகாது என்று.

அதே போல், 1981-ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்களிலே தொழிலாளிகளை பதவியில் நிலைப்படுததும் சட்டம் கொண்டு வரப்பட்டது, அதனுடைய கதி என்ன! 1—1—1982 முதல் அது அமுலில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், எல்லா தனிப்பட்ட தொழிற்சாளைகளும் அந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு 3 மாதங்களுக்கு மேல் எந்த ஒரு தொழிலாளியையும் வைத்துக் கொள்ளவதில்லையென்று முடிவெடுத்து, முடிவு செய்திருக்கிறார்கள். அதை நாம் தடுக்காமல் போனால் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் அங்கே விடப்பட்டிருந்தால்தானே அந்தச் சட்டத்தின் பலனைப் பெற முடியும். ஆகவே, அதை ஏமாற்றுவதற்காக அவர்கள் 3 மாதம் வைத்திருந்து பிறகு 6 மாதம் 1 வருடம் வரை கூப்பிடாத நிலைமை ஏற்படும். ஏற்பட்டிருக்கிறது. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்கு காஷுவல் தொழிலாளிகளாக இருக்கிறார்கள். நான் கேள்விப்பட்டேன், தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திலே கூட இந்தச் சட்டம் அமுலில் இருக்கிற காரணத்தினால், அவர்களே கூட, 3 மாதங்களுக்கு மேலாக, தொழிலாளிகளை வேலையில் வைத்துக் கொள்ளவேண்டாமென்று நிர்வாக உத்தரவு பிறப்பித்திருப்பதாக. அது உண்மையானால், மாநில அரசாங்கத்தினுடைய ஒரு துறையே இம்மாதிரி, காஷுவல் தொழிலாளிகளை நிரந்தரமாக்குக்கும்படி வரும் என்பதற்காக, 3 மாதத்திற்கு மேல் அவர்களை வைத்திருக்கக் கூடாது என்று உத்தரவிட்டால், தனிப்பட்ட முதலாளிகளைப் பொறுத்த வரைக்கும் கேட்க முடியுமா! ஆகவேதான் நான் சொல்லவிரும்புகிறேன், இந்தத் தொழிலாளிகளை வேலையில் நிரந்தரப்படுத்துகிற சட்டம் உண்மையிலே பயன்பட வேண்டுமென்றால், அரசாங்கத் துறை முதலிலே முன் உதாரணமாக இருக்க வேண்டும். அப்படி 3 மாதம் வேலை செய்தால், 6 மாதம் வேலை செய்தால், அவர்களை வேலையை விட்டு நீக்கிவிட்டு, வேறு தொழிலாளிகளை வைத்து, மறுபடியும் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல், அந்த உரிமை கிடைக்காமல் செய்வதற்கு முயற்சி நடக்கிறது. ஆகவே, அதைப் போக்க, முன் உதாரணமாக இருப்பதுடன், மற்ற தொழிற்சாலைகளிலே கண்டிப்பாக அமுல் நடத்தவேண்டும் என்று கூற வேண்டும். பல்வேறு தொழிற்சாலைகளிலே இந்த காஷுவல் தொழிலாளிகள் தான் அந்த பாக்டரியினுடைய

உற்பத்தியிலே பெரும் அளவு பங்கேற்கிறார்கள். ஆனால் அவர்களுக்கேற்ற சம்பளமும் கிடையாது, பஞ்சப்படியும் கிடையாது. தொழிற்சாலையிலே தினசரி ரூ. 3, ரூ. 4, ரூ. 5 என்று கூலி கொடுக்கப்பெறுகிறது. அவர்களைப் பொறுத்த வரைக்கும் யூனியன் பாதுகாப்பு அளிக்க முடியாது. ஏனென்றால் தொழிலாளி என்ற பிரிவினரிலே அவர்கள் வர மாட்டார்கள். ஆகவே, அவர்கள் நடுத்தெருவிலே நிற்கிறார்கள். எனவேதான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அது சரிவர அமுல் செய்யப்படாத காரணத்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் நான் குறிப்பிட விரும்புவது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பிலே பதில் அளிக்கும்போது கூறுவார் என்று எதிர்பார்க்கிறேன். எங்களுடைய கட்சியும் மற்ற பல கட்சிகளும் தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்ற துப்பாக்கிச்சூடு பிரயோகங்களைப் பற்றி ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு ஒரு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு நியாயங்கள் என்ன! நான் 7-ஆம் தேதி அன்று அந்த துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்திலே ஒரு பொதுக் கூட்டத்திலே கலந்து கொள்ளப் போகும்போது, ஆயிரக்கணக்கான பெண்களும், விவசாயத் தொழிலாளிகளும், பொது மக்களும், அங்கே கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்,. அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாலே, அங்கே பலவீனம் ஏற்படுத்த முடியும் என்றோ, அல்லது அந்த இயக்கத்தைச் சீரழித்து விட முடியும் என்றோ நினைத்தால் அது நடக்காது என்பதை, செம்பனார் கோவிலில் 7-ஆம் தேதி அன்று நடந்த கூட்டமே தமிழ்நாடு அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கவேண்டும். அப்படி அதில் என்ன பிரச்னை! அங்கே இருக்கக்கூடிய செம்பனார்கோவில் எஸ். ஐ. நடராஜன், மாயாவரம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் செல்வராஜ், ஸ்பெஷல் பிராஞ்ச் ஜெயராஜ் இவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் தெரியுமா! அந்தப் பிராந்தியத்திலே உள்ள 3 முக்கிய தலைவர்களைச் சுட்டுக் கொல்வதற்காகச் சென்றோம். அவர்களே அங்கே பார்க்க முடியவில்லை. ஆனால் அவர்களை விட்டுவைக்கப் போவதில்லை என்று கூறி இருக்கிறார்கள் இன்றைக்கும், அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய அந்த எஸ்.ஐ., அந்த இன்ஸ்பெக்டர் எல்லாம் அங்கேதான் இருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த அரசாங்கம் அவர்களை எல்லாம் உடனடியாக மாற்றவில்லையென்றால், அடுத்து வரக்கூடிய [illegible]களில் வேறு ஒரு மாற்று போக்கைகாட்டி அந்த [illegible]

தொழிலாளி இயக்கத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய வர்களை, அந்தப் பிராந்தியத்திலே இருக்கக்கூடியவர்களைச் சுட்டுக் கொல்வதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். காரணம் என்ன தெரியுமா? இங்கே குறிப்பிட்டார்கள், இந்தப் பிரச்னை எங்கே வந்தது என்று. இதே அரசாங்கம், இங்கே இருக்கக்கூடிய கட்சிகளுடைய வற்புறுத்தலினால், நியாயக் கூலிச் சட்டம் என்பதைத் தஞ்சாவூரில் நிறைவேற்றியது. குறைந்தபட்சக் கூலிச் சட்டம் என்பதைத் தமிழ்நாடு பூராவும் நிறைவேற்றினோம். அதன்படி இத்தனை மணி நேரம் வேலை செய்தால் போதுமானது என்பதற்காகச் சட்டம் கொண்டு வந்தோம். இந்தச் செம்பனார்கோவில் வட்டாரத்தில், அந்தத் தொழிலாளிகள் இத்தனை மணி நேரத்திற்கு மேல் வேலை செய்வதில்லையென்ற அச்சட்டத்தின்படி நடந்து கொண்டார்கள். சட்டத்திலே இருக்கக்கூடிய கூலியையும் கண்டிப்பாக வாங்கி இருக்கிறார்கள். இது அந்த வட்டாரத்திலே உள்ள மிராசுதார்களுக்குப் பெரும் எதிர்ப்பை உண்டாக்கியது. எனவே, அவர்கள் அந்த மாயாவரம் இன்ஸ்பெக்டரையும் அந்தச் செம்பனார்கோவில் எஸ். ஐ.யையும் அணுகி, அவர்களுக்கு ஏராளமாகச் செலவழித்து, 19-ஆம் தேதி வேலை நிறுத்தம் நடப்பதற்கு முன்பாகவே, இந்த வேலை நிறுத்தத்தை அடக்குவது என்ற பெயரால், தங்களுடைய சொந்தப் பகை இருக்கிறதே, விவசாயத் தொழிலாளி குறிப்பிட்ட கூலி கேட்பதற்கும், நேரத்திற்கு வேலை செய்யவும் அமைக்கப்பட்ட இயக்கத்தை ஒழிப்பதற்கு, நீங்கள் மறு நாள் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, ஏற்பாடு செய்து, அந்த நிலப் பிரபுக்கள் சார்பாக இந்த போலீஸ் அதிகாரிகள் சுட்டிருக்கிறார்கள்.

இல்லாமல் போனால், பஸ் மறிக்கப்பட்ட இடம் ஒன்று. துப்பாக்கிச் சூடு நடைபெற்றது 3 மைல், 4 மைல் தாண்டி இருக்கக் கூடிய கிராமத்திலே உள்ள ஒரு வீட்டில். அதைப் போலவே, இன்றைக்கு இரட்டைப்புளி என்ற இடத்திலே நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தஞ்சாவூரிலே இருக்கக் கூடிய மிராஸ்தார்கள், அங்கே உள்ள விவசாயத் தொழிலாளர்களால் தங்களுடைய இலாபம் மேலும் மேலும் குறையும் என்ற காரணத்தினால், இந்த 19-ந் தேதியைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்கு வேண்டிய அதிகாரிகள் மூலம் வஞ்சம் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். இதை டி.ஆர்.ஓ. மூலம் விசாரணை செய்கிறார்கள். இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயத் தொழிலாளர்கள் சங்கங்களில் 2 முக்கியமான சங்கங்கள் உள்ளன. அந்த விசாரணை ஒரு கண் துடைப்பு; டி.ஆர்.ஓ. வினால் நடைபெறுகிற விசாரணையில் உண்மைகள் வெளிவராது என்ற அச்சங்கங்கள் காரணத்தினால், இதிலே கலந்து கொள்

போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் கேட்க விரும்புவது, அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதற்குத் தேவை யிருந்ததா? அதுதான் முக்கியமானப் பிரச்சினை. துப்பாக்கிப் பிரயோகம் எங்கே நடந்தது? அந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தாமல் தவிர்க்கப்பட்டிருக்க முடியுமா? என்பது தான் ஒரு நீதி விசாரணையால் தீர்மானிக்கப்படக்கூடிய விஷயம். ஆகவே, இன்றைக்கு நாங்கள் வற்புறுத்துகிறோம். அந்த அதி காரிகள் அந்த இடத்தை விட்டு மாற்றப்படவேண்டும். அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட வேண்டும். பின்பு நீதி விசாரணை நடைபெறவேண்டும்.

எத்தனை பேர்கள் மீது கேஸ் தெரியுமா, சப்-இன்ஸ் பெக்டர் மேலே கல் எறிந்ததாக., 3 பேர்களை சுட்டுக் கொன்றதற்குப் பிறகு, 200 பேர்கள் மீது, 17 செக்ஷன்படி, கொலை செய்ய முயற்சித்ததாக வழக்குப் [illegible]ப்பட்டுள்ளது. இதிலே 72 பேர்கள் திருச்சி சிறையில் இ[illegible]றார்கள். ஒரு கல் எறிந்ததற்காக 200 பேர்கள் மீது, [illegible]7-வது செக்ஷன் 7 (1) (எ), கிரிமினல் லா அமெண்ட்மென்ட் ஆக்ட்—இதைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவோ கண்டித் தோம். விவசாயத் தொழிலாளர்கள் மீது இந்த கிரிமினல் லா அமெண்ட்மென்ட் ஆக்டை பயன்படுத்தக்கூடாது என்று நீண்டகாலமாக போராடிக்கொண்டிருக்கிறோம். மாநிலத்திலே —அதையும் சேர்த்துப்போட்டு அவர்களை ஜாமீனில் விட முடியாதபடி, அங்கே இருக்கக்கூடிய மிராஸ்தார்களும், அங்கே இருக்கின்ற அதிகாரிகளும் இன்றைக்கு வேலை செய்கிறார்கள் என்றால், இதைப் பற்றி அரசு சிந்திக்கவேண்டும். இந்த வழக்கு வாபஸ் பெறப்படவேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்.

அரசாங்க இலாகாக்களில் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதற்காக 8 நாள் சம்பளம் பிடித்திருக்கிறார்கள். சஸ்பெண்டு உத்தரவு ரத்து செய்யப்படவேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அர சாங்கத்தின் சார்பில் பதில் அளிக்கும்போது இந்த நீதி விசா ரணை என்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய ஆண்டித் தேவர் அவர்களும், அழகர்சாமி அவர்களும் குறிப்பிட்டார்கள் எனக்கும் நேரடியாக கடிதம் வந்திருக்கிறது. இது சாதாரண மான விஷயம் இல்லை. மதுரை மாவட்டத்திலே வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலே சீனியம்மாள் என்று ஒரு ஆசிரியை அவருடைய கணவர் நல்லகாமு சைனியத்திலே சுபேதார் வேலை பார்த்தவர். சுபேதார் வேலைபார்த்து ரிட்டையர் ஆன வரை, தெருவிலே நாயை இழுத்துச் செல்வதைப் போல சங்கிலியால் கட்டி, வாடிப்பட்டி கடைத் தெருவிலே இழுத்துச்





சென்றிருக்கிறார்கள். சிவில் கேசிலே போலீஸ் தலையிடக் கூடாது என்று ஆணை இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே என்ன நடந்தது? அந்த சீனியம்மாளிடத்திலே மதுரை ரிசர்வ் போலீசைச் சேர்ந்த ஒரு போலீஸ் அதிகாரி, பைரம்சிங் என்று பெயர், வீட்டை ஒத்தி வைப்பதாகச் சொல்லி, ரூபாய் 5,000 பெற்றுக் கொள் கிறார். ஆனால் பத்திரம் கொடுக்கவில்லை, சப்-இன்ஸ்பெக் டரை அனுப்புகிறார். அந்த சப் - இன்ஸ்பெக்டர் அங்கே சென்று, அவர் ரூபாய் கொடுக்க மாட்டார், வீட்டை காலி பண்ணுங்கள் என்று சொல்லி இருக்கிறார். அதற்கு அந்த ஆசிரியையுடைய கணவர் ரிட்டையரான சுபேதார் - எங்களுக்குப் பணம் வேண்டும் என்று வற்புறுத்தியதற்குப் பின் னாலே, அவரைக் கொண்டு வந்து, அடித்து இம்சை செய்திருக் கிறார்கள்.

மாண்புமிகு [illegible]லமைச்சரிடம் நானும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரு[illegible] பார்வர்டு பிளாக் தலைவரும், நண்பர் நெடு மாறன் அவர்களும் கையெழுத்து இட்டு மனுவைக் கொடுத் திருக்கிறோம். சீனியம்மாள் அவர்களும் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணித் தலைவருக்கு நேரடியாக எழுதிக் கொடுத்த அந்த விண்ணப்பத்தின் நகலையும் இணைத்திருக்கிறோம். அதிலே அவர் அவருடைய ஆடைகள் கிழிக்கப்பட்டன என்று எழுதியிருக் கிறார். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

இதற்கு மேலேயும் அவர்களை அடித்து விட்டு, அவர்கள் மேலேயே 307-வது செக்ஷன்படி கேஸ் போட்டிருக்கிறார்கள். சப் - இன்ஸ்பெக்டரைத் தாக்க முன் வந்தார்கள் என்று கேஸ் போட்டிருக்கிறார்கள். கொலை செய்ய முயற்சித்தார் என்று வழக்கு போடப்பட்டிருக்கிறது. இந்த வாடிப்பட்டி போலீஸ் போதாது என்று சோழவந்தானில் இருந்து போலீஸ் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, இவர்கள் மேல் என்ன கேஸ் போடலாம் என்று, இவர்கள் லாக்கப்பில் இருக்கும்போதே, அங்கே பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். மற்ற கேஸ்கள் போட்டால் ஜாமீனிலே வெளியே வந்து விடுவார்கள். ஜாமீனிலே வெளி வர முடியாத அளவுக்கு, ஒரு கத்தியைக் கொண்டு வந்து தாக் கினார்கள் என்ற அளவுக்கு 307 செக்ஷன்படி வழக்கு போட் டிருக்கிறார்கள். என்ன கொடுமை? எதற்காக இந்தப் போலீஸ் [illegible]ரி 5,000 ரூபாய் வாங்கி கொண்டு திருப்பிக் கொடுக்க [illegible]த்தார். அதற்காக சப் - இன்ஸ்பெக்டர் சென்று இந்த [illegible]ளைத் [illegible]க்கி இருக்கிறார். எத்தனையோ விஷயங்கள் [illegible]ன்றன.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

(முற்பகல் 10-50)

சிவில் கோர்ட்டில் இருக்கும் ஒரு கேசைப் பற்றி போலீசில் விசாரிக்கிறார்கள். அந்த சிவில் கோர்ட் ஜட்ஜ்மென்டைக் கொண்டு வா என்று கேட்கிறார்கள். அந்தக் கட்சிக்காரரின் வக்கீல் கோர்ட்டில் வந்து இது குறித்து வாதாட வேண்டும் என்று சொல்கிறார். இருந்தாலும், ஒரு பெரிய பணக்காரரிடத்தில், வீட்டை காலி செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி, பணம் வாங்கி விட்ட காரணத்தால், போலீஸ் அதிகாரியே இவர்களை மிரட்டுகிறார். சிவில் கோர்ட் ஜட்ஜ்மென்டை தீர்மானிப்பது போலீஸ் அதிகாரியா என்று கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட நபர்கள் மீது அரசாங்கம் கடுமையாக நடவடிக்கை எடுத்து தண்டிக்காமல் போனால் நிலைமை மிகவும் மோசமாகப் போய்விடும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்கள் கூட்டணி ஒரு மாபெரும் இயக்கம். ஏற்கனவே நான் கூறியதைப் போல, நியாய உணர்வுள்ள அத்தனை கட்சிகளும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட, வாடிப்பட்டியில் இதற்காக ஆட்சேப இயக்கம் நடத்தி, கண்டன இயக்கம் நடத்தியிருக்கிறார்கள். சீனி அம்மையாரும், அவருடைய கணவரும் நிலக்கோட்டை மாஜிஸ்டிரேட்டிடத்தில் இந்த காவல் துறை அதிகாரியைப் பற்றி புகார் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அந்த காவல் துறை அதிகாரி இன்னும் மாற்றப்படவில்லை. அந்த அம்மையாரின் கணவர் படுமோசமாக அடிக்கப்பட்டதால், சிறை ஆஸ்பிடலில் படுகாயங்களோடு அவஸ்தைப் பட்டுக்கொண்டு இருக்கிறார். ஜாமீனில் கூட விடுதலை செய்யபபடவில்லை. இத்தகைய கொடுமைகள் நாட்டில் நடந்தால் மக்கள் நிலைமை என்னவாகும் என்பதை இந்த அரசாங்கம் சிந்தித்துப பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை]

திருச்செந்தூரில் ஒரு கைடுக்கு என்ன கதி ஏற்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். அதை எதிர்த்தும் எல்லா கட்சிகளும் கண்டன இயக்கம் நடத்தியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்திலே இருக்கக்கூடியவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், இப்படிப்பட்ட முறையில் போலீஸ் இலாகாவில் நடந்து கொள்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால் ஒழிய பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும், ஆபத்து இருப்பதைத் தடுக்க முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

நேற்றைய தினம் அந்த செய்தி மிகவும் வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது. கடலூர் மத்திய சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை அடைந்துள்ள 6 கைதிகள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை பற்றி அரசாங்கம் சிந்தித்து அதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேறு வழியே அவர்களுக்குக் கிடையாது. எனவே நான் சொல்கிறேன், எங்கே இருந்து இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து, மிகுந்த அக்கரையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றி பத்திரிகைகள் தவறான முறையில் எழுதினால் தண்டனை என்கிற வகையில் ஒரு சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டது. அதை நாங்கள் பூர்வாங்கமாக ஆட்சேபித்தோம். அரசாங்கத்தின் அணுகு முறைக்கு இது ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. அதே போல் குண்டர்கள் என்ற பெயரால் தடுப்புக் காவல் சட்டத்தில் யாரையும் பிடிக்கலாம் என்று ஒரு சட்டம் உள்ளது. அது ஒரு இரு முனை ஆயுதம் போல் இருக்கிறது. இன்றைக்கு குண்டர்கள் என்று போலீஸ் நிர்வாகத்தினர் யாரைக் கருதுகிறார்களோ அவர்களை அந்த லிஸ்டில் சேர்த்து, நடவடிக்கை எடுக்க முடியும். இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் நாட்டு மக்களுக்கு மிகுந்த ஆபத்து ஏற்படும் ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களைப் பயன்படுத்தாமல் இப்படி தடுப்புக் காவல் சட்டங்கள் கொண்டு வந்தால் தமிழகத்தில் ஜனநாயக உரிமைகள் எப்படி பாதுகாக்க முடியும் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் பற்றி எங்களுடைய கட்சியின் நிலை தெளிவாக இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கம் அழைத்த அத்தனை சர்வ கட்சிக் கூட்டங்களுக்கும் நாங்களும் சென்றோம். அரிசன மக்களுக்கும், பெண்களுக்கும் ரிசர்வேஷன் வைக்க வேண்டும் என்று கருத்தை வற்புறுத்திச் சட்ட மன்றத்திலும் சொன்னோம்; இன்றும் சொல்ல விரும்புகிறோம்.

அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் நடைபெற்றபோது, அதிலே பிரச்சினை வந்த போது, நாங்கள் உறுதியாக நின்றோம். பஞ்சாயத்துத் தேர்தல் உடனடியாக நடத்த வேண்டுமா, ரிசர்வேஷன் வைத்து பிறகு நடத்தலாமா என்று பிரச்சினை வந்த போது, தாமதமானாலும் பரவாயில்லை, ரிசர்வேஷன் வைத்து நடத்த வேண்டும் என்று எங்கள் கட்சியின் நிலை இருந்தது. மற்ற கட்சிகளுடன் சேர்ந்து இந்த முடிவை நாங்கள் எடுத்தோம். அதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அதே நேரத்தில் நான் சொல்ல விரும்புவது, அரசாங்கம் மீண்டும் சர்வக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அந்த பஞ்சாயத்துத் தேர்தலை ரிசர்வேஷன் அடிப்படையில் நடத்துவதற்கு எல்லா அரசியல் கட்சிகளின் ஒ

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

துழைப்பையும் பெற வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் தடை கேட்டு எந்த மனுவையும் போட வில்லை. யாராவது எங்களிடத்தில் வந்து கேட்டால் கூட சொன்னோம், நீங்கள் இருக்கின்ற பகுதியில் அரிசனங்கள் அதிக மாக இல்லையென்றால் என்ன, மற்றொரு பகுதியில் அதிகமாக இருந்தால் என்ன, எங்கோ ஒரு இடத்தில் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது, ஒரு சதவிகிதம் பெண்கள் அந்தத் தொகுதியில் அதிகம் இருந்தால், என்ன இந்தத் தொகுதியில் இருந்தால் என்ன, பெண்களுக்கு ஒரு தொகுதியில் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது என்கிற அடிப்படையில் அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னோம்.

ஆகவே அரசியல் ரீதியாகவும் அதை நாங்கள் ஆதரித்தோம் காரணம், இந்த 18 சதவிகிதம் அரிசனங்களுக்கு 15 சதவிகிதம் பெண்களுக்கு என்பது ரொடேஷன் முறையில் பின்பற்றப்பட்டால் ஒரு தொகுதி இந்த முறையும், மற்றொரு தொகுதி அடுத்த முறை யிலும் மாறி மாறி வந்து விடும். ஆகவே, பிரச்சினை தீர்ந்து போய்விடும் என்று சொன்னோம். ஆகவே, இங்கே இருக்கும் எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் இந்த அரசாங்கம் பெற வேண்டும். இங்கேயுள்ள கட்சிகள் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன் படுத்தி அந்த மனுக்களை வாபஸ் பெறச் செய்ய வேண்டும். ஒரு இடத்தில் ½ சதவிகிதம் கூடுதல் குறைச்சல் இருக்கிறது என்பதற்காக ஆட்சேபணை செய்வது அரசியல் ஆட்சேபணையாக இருக்க முடியாது. ஆகவே, இங்கேயிருக்கும் கட்சிகள் தங்க ளுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த மனுக்களை வாபஸ் பெறச் செய்ய வேண்டியது அந்தக் கட்சிகளின் கடமையெனநான் கருதுகிறேன்.

அதேபோல் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் பார்த்தா லும் ரிசர்வேஷன் செல்லும். ஆகவே, அரசாங்கம் ஸ்டேவை ரத்து செய்ய துரிதமாக தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன் இந்த அரிசனங்கள் பிரச்சினை பற்றி இங்கே வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரை, இன்றைக்கு அரிசன மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத் தொழிலாளர்களாக, ஏழை எளிய விவசாயிகளாக இருக்கிறார்கள். நிலப்பிரபுத் துவத்தை ஒழிக்காமல், நிலப்பிரபுக்கள் கையிலே இருக்கிற உபரி நிலத்தை எடுத்து விநியோகிக்காமல் அரிசன மக்கள் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா ! விவசாயப் புரட்சி வராமல், இந்தியா போன்ற ஒரு நாட்டில் இந்த உழைக்கின்ற மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. .



1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

1947 லேயிருந்து மத்திய அரசை நடத்துகின்ற காங்கிரஸ் கட்
யினர் தீண்டாமையை எதிர்த்து பிரச்சாரம் செய்தாலும் இன்
நாடு முழுவதும் இருக்கிற விவசாய தொழிலாளர்களுக்கு நிலத்தை
ஏன் கொடுக்க முடியவில்லை? ரிசர்வேஷன் வேண்டும் என்
கிறோம் ; பஞ்சாயத்தில் வேண்டும் என்கிறோம் ; அரசாங்
உத்தியோகத்தில் வேண்டும் என்கிறோம். ஆனால் அது பற்
நமக்குத் தெரியும். ஒரு பகுதியினருக்கு, ஒரு சதவீத
தினருக்குத்தான் அந்த சலுகை கிடைக்கிறது. படிக்காத
நிலத்திலே பாடுபடக் கூடிய கோடிக்கணக்கான மக்களுக்கு நா
என்ன வழிவகை செய்திருக்கிறோம். இதிலே மத்திய சர்க்கா
மா பெரும் தோல்வி அடைந்து விட்டது. இந்த நீண்ட காலத்தி
அவர்களுக்கு நிலம் அளிக்க முடியவில்லை. அவர்கள் பிர
சினையைத் தீர்க்க முடியவில்லை. அவர்களுக்கு நிலம் அளிக்கா
வரையில் அந்த மக்களுக்கு கௌரவம் ஏற்படாது அந்
பாதையிலே அவர்கள் செல்ல வேண்டும்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்
கிறேன். அரிசனங்களின் பிரதிநிதித்துவமாகச் சொல்லப்பட்
கூடிய சில கட்சிகள் இந்த தமிழ் மாநிலத்திலே அரிசனங்களுக்
ஒரு தனி நாடு வேண்டுமென்று கேட்டு ஒரு போஸ்டர் ஒட்
யதைக்கூட பார்த்தோம். காலிஸ்தான் போல, வடாற்கா
மாவட்டத்தையும் தென்னாற்காடு மாவட்டத்தையும் ஒரு கோ
போட்டு காட்டி, அதற்கு ஒரு பெயரையும் வைத்திருந்தார்க
இது வேண்டுமென்று, கேட்கிறார்கள். நியாயம் தான
எல்லா மக்களோடும் சேர்ந்து அரிசன மக்களும் பெரும் முதலா
களையும் நிலப்பிரபுக்களையும் எதிர்த்து போராடாமல், ஆ
நாயகத்திற்காக போராடாமல் அரிசனங்களுக்கு என்று மட்
தனியாக ஒரு புது வாழ்க்கை அமைத்துவிட முடியுமா என்
நான் கேட்கிறேன். அவர்களைத் தனியாகப் பிரிக்கக்கூடாது.

மதுரையிலே மாணவர்கள் இரண்டு பேர் இறந்துபோன
பற்றி ஒரு அரிசனத் தலைவர் சொன்னார். அவர் மாணவர்க
என்று பார்க்கவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
ருந்து, அந்தப் பேரவையிலே பொறுப்பு வகிக்க அவர்கள் தே
தெடுக்கப்பட்டதினால் வந்த சண்டை என்று அவர் பார்
வில்லை. இது என்ன கண்ணோட்டம் என்று கேட்க விரு
கிறேன். அப்படி என்றால் இந்த அரிசனங்களுக்கு பிரதிநிதி
வம் என்று சொல்லுகின்ற கட்சிகளைத் தவிர வேறு கட்சிகளி
அரிசனங்கள் இல்லையா ? எல்லா அரிசனங்களும் அந்
கட்சிகளில்தான் இருக்கிறார்களா ? இல்லை. இங்கே இருக்
அத்தனை கட்சிகளிலும் இருக்கிறார்கள். ஆதரிக்கிறார்க
அவர்கள் அரிசனங்களுக்கு தாங்கள்தான் பிரதிநிதித்துவ
என்று சொல்வதற்கு எப்படி உரிமை வந்தது என்று நான் கே
விரும்புகிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். பொருளாதாரத்தில், அரசியலில், மற்ற துறைகளில் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு அவர்கள் எல்லா மக்களோடும் சேர்ந்து ஒன்றுபட்ட ஒரு இயக்கத்தை நடத்துவதன் மூலம்தான் அந்த உரிமையை பெறமுடியும்.

திரு ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, எல்லாக் கட்சிகளிலும் அரிசனங்கள் இருக்கிறார்கள் ; இவர்கள் மட்டுமே அரிசனங்களின் தலைவர்கள் என்று சொல்வதில் என்ன நியாயம் என்று கேட்கிறார்கள். நாங்கள் அரிசனத் தலைவர்கள் என்று சொல்லவில்லை. அரிசனங்களுக்காகப் போராடுகிறவர்கள் என்று சொல்கிறோம். அரிசனங்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள் ; எங்கள் கட்சியிலும் இருக்கிறார்கள் என்று சொல்வார்களேயானால் அந்த மக்களுக்காக, அவர்களுடைய உரிமைக்காகப் போராடுவதற்கு தனி திட்டங்களோ கொள்கைகளோ வகுத்திருக்கிறீர்களா என்று கேட்கிறோமே தவிர நாங்கள் மாத்திரம் அரிசனங்களுக்குத் தலைவர்கள் என்று சொல்லவில்லை. அவர்களுக்காகப் போராடுகிறோம். மற்ற கட்சிகளில் அவர்களுக்காக வைத்திருக்கிற கொள்கை என்ன என்று கேட்கிறோம்.

திரு. என். சங்கரய்யா : ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை பார்த்தால் அந்த முதலாளி அரிசனம் அல்லாத தொழிலாளர்களுக்கு அதிகம் கூலியும், அரிசனங்களுக்கு குறைந்த கூலியும் கொடுப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு ஜாதி இந்துக்கள் ஏராளமானவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக வந்துகொண்டிருக்கிறார்கள். தஞ்சை போன்ற மாவட்டங்களில் அப்படி வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த உழைக்கின்ற வர்க்கத்தில் தவறான முறையில் நிலத்தை இழந்த குடியானவர்கள், ஜாதி இந்துக்களைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக வந்திருக்கிறார்கள். ஆகையால் விவசாயத் தொழிலாளர்கள் அல்லது விவசாய வர்க்கம் என்ற ஒரு வர்க்கத்தை ஏற்படுத்தித்தான் அதன் மூலம்தான் கோரிக்கைகளைப் பெற முடியுமே தவிர ஜாதி அடிப்படையில் பெற முடியாது. ஜாதியைப் பொறுத்த வரையில், தீண்டாமை ஒழிப்பு, சமுதாய சீர்கேடு ஒழிப்பு என்ற பிரச்சினைகளில் இணைந்து போராட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணியில் நிற்கிறது.

திரு. ஜி. மூர்த்தி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு துரைமுருகன்) : [illegible] உறுப்பினர் அவர்கள் உரையை முடிக்கும் தரு[illegible] [illegible]கள். அவர்கள் முடித்தவுடன் உங்களுக்கு [illegible] [illegible]கிறேன். ஐ வில் கிவ் யூ சான்ஸ். [illegible]

1982 பிப்ரவரி 9]

திரு. என். சங்கரய்யா : நான் யாரையும் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லவில்லை. அரிசனங்களுக்கு என்று தனியாக கட்சியை வைத்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதுதான் எங்கள் கருத்து. அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எத்தனையோ பேர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவில்லையா ! அந்த உண்மையைக் கூட ஏற்றுக்கொள்ளாமல் நாங்கள்தான் 'மோனாபலி', ஒரு ஏகபோக உரிமை என்று சொல்லி, எங்களைத் தவிர அரிசனங்கள் பிரச்சனைகளைப் பற்றி மற்றவர்கள் சொல்ல உரிமைஇல்லை என்று சொல்வதைத் தான் நான் ஆட்சேபிக்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. ஜி. மூர்த்தி : எல்லா கட்சியிலேயும் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள், எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சட்டம் இருப்பதால்தான் இங்கே 44 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இல்லாத இடத்திலே அவர்களைக் கொண்டு வருவதற்குத் தயாராக இருக்கிறார்களா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு தனித்தொகுதி முறை பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இன்னும் நீண்ட காலத்திற்கு நீட்டிக்கப்பட வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அசைக்க முடியாத எண்ணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது நடைபெறுவதாக இருந்து நிறுத்தப்பட்டுவிட்ட பஞ்சாயத்துத் தேர்தலில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு தொகுதி ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாகத்தான் வழக்கு நடைபெற்று வருகின்றது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் பதவி கொடுக்கப்பட்டால்தான் அவர்களின் அந்தஸ்து உயரும். அவர்களை வேறு மாதிரியாக நினைக்கக்கூடியவர்கள்............

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : திரு. சங்கரய்யா அவர்கள் பதில் சொல்லக்கூடிய திறமை படைத்தவர்கள். ஆகவே அவர் பதில் சொல்லிக்கொள்வார். எனவே அவர் பேச்சு தடைபட வேண்டாம். திரு. சங்கரய்யா அவர்கள் தொடர்ந்து பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் அமரவேண்டும்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி அவர்கள் சட்டம் இருப்பதால்தான் அரிஜனங்களுக்கு 44 பிரதிநிதிகள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சட்டம் இல்லாமல் இருக்கும்போதே தமிழகத்திலே முதன்முதலாக கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் அரிஜன் ஒருவரைச் சேர்மனாகத் தேர்ந்தெடுத்தது கம்யூனிஸ்ட் கட்சிதான் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான பிரச்சனை. அரிஜன மக்களுக்காகப் பல்வேறு கட்சிகள் ஒட்டுமொத்தமாகப் போராடுகின்றன. நிலப்பிரதிநிதித்துவம் போன்றவற்றை எதிர்த்தெல்லாம் போராடுகிறோம். ஆகவே அரிஜன மக்கள் மற்ற மக்களோடு சேர்ந்து ஜனநாயக உணர்ச்சியோடு போராடினால்தான் ஜனநாயகம் வளம் பெறும். ஆகவே இந்த ரிசர்வேஷன் முறையின்மூலம் பலர் பஞ்சாயத்துத் தலைவர்களாக வந்தால் மற்ற மக்கள் அந்த அரிஜன மக்களை அரசியல் தலைவராக ஏற்றுக்கொண்டு அதன் பின் ஜாதீய வேறுபாடுகள் குறையும். அப்போது தான் அந்தப் பிரச்சினை தீரும். சமீபத்திலே பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியாத அளவுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டதற்குக் காரணமே ரிசர்வேஷன்தான். ஆகவே அந்த ரிசர்வேஷனைக் கைவிட்டுவிட்டு பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தித்தான் தீரவேண்டும் என்றால் அதற்கு எங்களுடைய கட்சி ஒப்புக்கொள்ளாது. ரிசர்வேஷன் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலேதான் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அடுத்து தமிழகத்திலே நடைபெற்று வருகின்ற முக்கியமான ஒன்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆர்.எஸ்.எஸ். என்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கோயில்களுக்கு முன்பு இருந்துகொண்டு ஆயுதப் பயிற்சி செய்து வருகிறார்கள். குமரி மாவட்டத்திலே இது மிகவும் அதிகமாக இருக்கின்றது. இன்றைக்கு தேசிய ஒருமைப்பாட்டிற்காக நாமெல்லாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதை இந்த அரசு கவனிக்க வேண்டும். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் அனைவரும் ஒன்றுபட்டு தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியின் நண்பர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியார் அவர்கள் பாடியிருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய கட்சியைச் சேர்ந்த பிரதானத் தலைவர்களில் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற திரு. இராமசாமி படையாச்சி அவர்கள் வன்னியர் சமுதாயத் தலை





வராக இருந்து வருகிறார். ஆனால் ஏற்கனவே தமிழகத்திலே பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ரிசர்வேஷன் இருக்கிறது. ஆனால் வன்னியர் ஜாதியினருக்காக தனியாக ஒரு ரிசர்வேஷன் வேண்டும் என்று அவர் இயக்கம் நடத்திக்கொண்டு வருகிறார். தேசிய ஒருமைப்பாட்டு இயக்கமான காங்கிரஸ் கட்சி அவருடைய அந்தக் கருத்தினை ஆதரிக்கின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற பல தலைவர்கள் ஜாதீய சங்கங்களுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். இதை நான் இங்கே குறிப்பிடுவது அவர்களுடைய கட்சியின் நலனை உத்தேசித்துத்தான். இப்படி ஒவ்வொரு ஜாதியினருக்கும் ரிசர் வேஷன் வேண்டும் என்று கேட்கின்ற நிலைமை பெரிய ஆபத்தான நிலைமைக்குக் கொண்டு போய்விட்டுவிடும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள்..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கூட இங்கே எம்.எல்.ஏ.க்களாக இருப்பார்கள். ஆகவே உங்கள் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற போது அதற்கு மறுப்பு சொல்லலாம். எனவே இப்போது குறுக்கிட வேண்டாம். அமருங்கள். திரு. சங்கரய்யா அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அடுத்து மாவட்ட வளர்ச்சிப் பணிகளிலே கான்ட்ராக்ட் முறையை ரத்து செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கத்தின் பணம் அதிகமான அளவு இந்த முறையினால் கொள்ளை அடிக்கப்படுகின்றது. சில கட்டிடங்கள் இடிந்து விழுந்துவிடுகின்றன. எவ்வளவு சிமின்ட் போடவேண்டுமோ அதைப் போடுவது இல்லை. போதிய கற்கள் வைப்பது இல்லை. இந்த நிலைமையினை அனுமதித்தால் 100 கோடி ரூபாய் செல வில் கட்டடம் கட்டினால் அந்தக் கட்டிடத்தின் மதிப்பு 50 கோடி ரூபாய் கூட பெறாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அரசாங்கத்தினுடைய நேரடி பொறுப்பிலே முக்கியமான காரியங் களைச் செய்தால் தான் மக்களுக்கு நன்மை ஏற்படும். இது ஒரு கொள்கை பிரச்னை. (மணியடிக்க பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : 35 நிமிடங்கள் ஆகிவிட்டன. உங்களுக்கென்று கொடுத்திருக்கிற [illegible] நினைவூட்டினேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் [illegible] முடிவிற்கு வாருங்கள்.

[1982 பிப்ரவரி 9

திரு. என். சங்கரய்யா : நான் பேரவைத் தலைவரிடமே அனுமதி கேட்டிருக்கிறேன் (குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : இன்றைக்குத்தான் முதலமைச்சர் அவர்கள் ரிப்ளை பண்ணப்போவதில்லையே. பிறகு என்ன ? பேச அனுமதி கொடுங்களேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவ்ர் (திரு. துரைமுருகன்) : திரு. உமாநாத் அவர்களிடமிருந்து வரவேண்டிய வார்த்தைகள் அல்ல இது. அப்படி இருந்தால். ஆளும் கட்சியிலே இருக்கும் முன்னவர் அவர்கள் சொல்ல வேண்டியது,

திரு. என். சங்கரய்யா : அடுத்தபடியாக உணவுப் பிரச்னையை எடுத்துக் கொண்டால் இந்த அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைப் பற்றி தமிழ்நாட்டிலேயிருக்கும் பல இடங்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. திருமங்கலம், சின்னமன்னார் பகுதிகளிலே இருக்கக் கூடிய சிறு விவசாயிகள் கொண்டு போகிற தானியங்களை வழி மறித்து, அதிகாரிகள் வணிகர்களிடம் ஒப்படைக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. அரசாங்கத்தினுடைய கொள்கை பெரிய விவசாயிகளிடத்தில் மட்டுமே லெவி வாங்குவது என்றால், இப்படிப்பட்ட சிறு சிறு விவசாயிகள் கொண்டு வரக்கூடிய தானியங்களை எடுத்துக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக' மத்திய சர்க்காருடைய கொள்கையை பார்க்கிறபோது, அவர்கள் தமிழ்நாட்டிற்குத் தேவையான உணவு தானியங்களை கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டிற்குத் தேவையான கோதுமை மாவையும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்தையும் உத்தரவு போட்டு பறித்துக் கொண்டு வருகிறார்கள். உருளை மாவு மில்களுக்கு லைசன்ஸ் வ்ழங்கும் அதிகாரம் இதுவரையில் மாநில அரசாங்கத்திடம் இருந்தது. 7–2–1982 ஆம் தேதியன்று ஒரு உத்தரவைப் போட்டு உருளை மாவு மில்களுக்கு லை;ன்ஸ் வழங்கும் அதிகாரத்தை மாநில அரசாங்கத்திடமிருந்து, மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருக்கிறது. காற்று இங்கே அடிக்கிறது. அதன் மூலம் அந்த உருளை இயந்திரம் இயங்குகிறது. ஆனால் அந்த மில்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டிய பொறுப்பை, இந்திய விவசாய துறையில் உள்ள டெபுட்டி செக்ரட்டரி ஒருவரிடம் ஒப்படைத்து இருக்கிறார்கள் என்றால், மாநில அரசாங்கத்திடமிருந்து, அதிகாரங்களை படிப்படியாக எடுத்துக் கொண்டே வருவதில், எவ்வளவு முனைப்பாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு, இதைக்காட்டிலும் சிறந்த உதாரணத்தை தரத்தேவை



1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

அடுத்தபடியாக தமிழகத்தின் அரசியல் நிலையிலே ஏற்பட்
டுள்ள மாற்றத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், —இங்கே
கூட மாண்புமிகு உறுப்பினர்கள் உமாநாத் அவர்கள் பேசுகிற
போதும், ஆண்டித்தேவர் அவர்கள் பேசுகிறபோதும், அதைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் ஆளும் கட்சியும்,
எதிர்க்கட்சியுமாக இருக்கக்கூடிய 2 கழகங்களும், இந்திரா
காந்தி அம்மையாருடைய ஆட்சியின் சர்வாதிகார கொள்கை
களை ஆதரிப்பதன் மூலமாக, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய
ஜனநாயகத்திற்கு பெருத்த பாதகமான நிலைமையை ஏற்படுத்தி
வருகிறார்கள் என்று நானும் மீண்டும் வலியுறுத்திக் கூறவிரும்பு
கிறேன். இன்றைக்கு இந்த இரண்டு கட்சிகளில் ஒன்றான அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இந்தியாவிலே இருக்கக்
கூடிய காங்கிரஸ் அல்லாத ஆட்சிகளிலே ஒன்று. இது முன்பே
கலைக்கப்பட்டது. மீண்டும் வந்தது. கேரளத்திலே, சபாநாயக
ருடைய விசேஷ ஓட்டிலேதான் பிழைக்கமுடியும் என்ற
நிலைமை இருந்தாலும் கூட, அங்கே இந்திரா காங்கிரஸ்
ஆட்சியை ஏற்படுத்துவதற்கு, காங்கிரஸ் கட்சி என்னென்ன
முயற்சிகளை செய்திருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் பார்க்
கிறோம்.

அஸ்ஸாமிலே எதிர்க்கட்சிகள் தாங்கள் பலத்த ஆதரவைக்
கொண்டிருக்கிறோம் என்று நிரூபித்தும் கூட, அந்த எதிர்ப்பு
களை அகற்றி காங்கிரஸ் கட்சியின் மந்திரி சபையை அமைப்பதற்
பதற்கு முயற்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை
யும் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட முயற்சிகள்
நடைபெறாது என்று யாரும் கருத வேண்டாம். ஆகவே தான்
கூற விரும்புகிறேன். இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில்,
கடந்த காலத்தில்75 ஆம் ஆண்டிலே அவசர கால நிலைமையை
ஏற்படுத்தி ஜனநாயகத்திற்கு புறம்பான ஒரு சூழ்நிலையை ஏற்
படுத்தினார்கள். அதை ஆளும் கட்சியினர் மறந்து விடக் கூடாது
என்று சொல்லவிரும்புகிறேன். மத்தியிலே ஆளும் காங்கிரஸ்
கட்சியோடு, பாண்டிச்சேரியிலே, திராவிட முன்னேற்றக் கழகம்
அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டிருப்பதால், இந்திரா
காங்கிரஸ் கட்சியினுடைய தவறுகளை, கொள்கைகளை கண்
டிப்பதற்கு அவர்களுக்கு முடியாத நிலைமை இருக்கிறது. தவிர
வும் இன்னொன்றையும் நான் கேள்விப்பட்டேன். ஆளும் கட்சி
யும், திராவிட முன்னேற்றக் கழகமும் நீண்ட பயணத்தை நடத்
தப் போவதாக நாங்கள் அறிகிறோம். நான் அவர்களிடத்
திலே அன்போடு கேட்டுக் கொள்வது எல்லாம், நாம் அனைவரும்
சேர்ந்து நடத்த வேண்டிய நீண்ட பயணம் வேறு இருக்கிறது.
அந்தப் பயணத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து
சர்வாதிகாரத்தை எதிர்த்து, நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து
தமிழக மக்களை ஒன்று திரட்டி நடத்த வேண்டிய பணி இருக்
கிறது.

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

(முற்பகல் 11–10)

அத்தியாவசியப் பணிகளில் வேலைநிறுத்த உரிமைகளைப் பறிப்பதற்கான சட்டத்தை எதிர்த்து அந்த நீண்ட பயணத்தை நடத்தவேண்டிய இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நாடாளுமன்ற அமைப்பை நீக்கிவிட்டு திருமதி இந்திரா காந்தி அவர்களை குடியரசுத் தலைவராக நியமிப்பதன் மூலம் நாடாளுமன்றக் கண்ட்ரோலிலிருந்து விடுபடக்கூடிய ஒரு ஜனாதிபதி ஆட்சிமுறை வருகிற ராஜ்ய சபைத் தேர்தல்கள் முடிந்ததற்குப் பிறகு இந்திய அரசியலைப்பு சட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி நடைபெறுகிறது. அந்த முயற்சியை நாட்டில் உள்ள பல்வேறு எதிர்கட்சிகளும் எதிர்த்திருக்கின்றன. எதேச்சாதிகாரத்திற்கு வலுவூட்டுவதாக அந்த ஜனாதிபதி ஆட்சிமுறை ஏற்படாமல் இருக்க நாம் நீண்ட பயணத்தை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுகிற வகையில் நாம் நீண்ட பயணத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

*டாக்டர் மு. கருணாநிதி : 1975—ல் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நாட்டில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற ஜனதாக் கட்சி போன்ற கட்சிகளோடு திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட பயணத்தைத் தொடங்கி நடத்தியது. ஆனால் 1977-க்குப் பிறகு அந்தப் பயணத்திலிருந்து விலகியவர்கள் ஜனதாக்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளுமே தவிர நாங்கள் அல்ல. அப்படி நீண்ட பயணத்திலிருந்து அறுத்துக்கொண்டவர்கள் இப்போது நாம் சேர்ந்து நீண்ட பயணம் தொடங்கலாம் என்று சொல்லும்போது இவர்கள் தொடர்ந்து வருவார்களா என்ற நம்பிக்கையின்மைதான் எங்களுக்கு ஏற்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பிரச்னையைப் பொறுத்து நீண்ட நாட்களுக்கு முன்பே இதே சபையில் இந்தப் பிரச்னை விவாதிக்கப்பட்டது. நாங்கள் அப்போதே தெளிவுபடுத்தினோம். 1977 ஆம் ஆண்டு எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நடைபெறவேண்டிய போராட்டத்தில் நாம் ஒன்று பட்டிருந்தபோதிலும், தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிற்கு எந்தக் கட்சி வரவேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த கால, மாநில அரசின் கொள்கைகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த உணர்வுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவது என்பது பொருத்தமல்ல என்று நாங்கள் கருதினோம். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தோடு 1977-ல் சட்டமன்றத் தேர்தலில் உடன்பாடு செய்து கொள்ளவில்லை என்பதை நாங்கள் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறோம்.



1982 பிப்ரவரி 9]

டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத்திற்கு ஒரு நிலை, மத்திய அரசு பொறுத்து ஒரு நிலை என்று எடுப்பதற்கு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உரிமை இருப்பதுபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உரிமையை அவர்கள் தடுக்கக்கூடாது.

திரு. என். சங்கரய்யா : நாங்கள் எந்த நிலையை எடுத்தாலும் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1977-ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சட்டமன்றத் தேர்தலில் உடன்பாடு கண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்திருக்கிறோம். இந்திரா காங்கிரஸை தமிழ்நாட்டில் தலை தூக்க விடவில்லை. 1967-ல் மாண்புமிகு திரு. அண்ணாதுரை அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் வந்த காலத்தில் ஏற்பட்ட அதே பாதையைத்தான் நாங்கள் பின்பற்றி வருகிறோம். எதேச்சாதிகார சக்திகளை எதிர்த்துப் போராடி 1967-ல் இந்திரா காங்கிரஸ் தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்று அதற்காக என்ன தேர்தல் உடன்பாடு தேவையோ அதைத்தான் நாங்கள் செய்து வந்திருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில காரணங்களுக்காக இந்திரா காங்கிரஸோடு 1980-ல் நடந்த தேர்தலில், சட்டமன்றத் தேர்தலில் போட்டி போட்டார்கள். அப்போது அவர்கள் ஜெயித்திருப்பார்களேயானால் என்ன ஏற்பட்டிருக்கும் ? மாண்புமிகு திரு. அண்ணாதுரை அவர்கள் இருந்த ஆட்சிப் பொறுப்பில் இருந்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இந்திரா காங்கிரசும் பல ஆண்டுகளுக்கு தமிழக ஆட்சிப் பொறுப்பை அவர்கள் பங்கிட்டிருப்பார்கள். அந்த நிலையைத் தவிர்க்கப் போராடினோம் நாங்கள். இன்று அவர்கள் ஆட்சிக்கு வரமுடியாத அளவிற்கு இருக்கிறார்கள் ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திலும் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பொறுத்தவரை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் கேட்கிறேன். இவ்வளவு நடந்ததற்குப் பிறகும் தஞ்சாவூரில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திரா காங்கிரஸை எதிர்த்து உங்களை ஆதரிக்கவில்லையா ? நீங்கள் சொன்ன அந்தக் காலத்திற்குப் பிறகு, 1977 சட்டமன்றத் தேர்தலிற்குப் பிறகு தஞ்சையில் நாங்கள் உங்களை ஆதரித்தோம், நாகப்பட்டினத்தில் நீங்கள் சி.பி.ஐயை ஆதரித்தீர்கள். அதற்குப் பிறகு இந்திரா காங்கிரஸை எதிர்த்து வந்த நாங்கள் அதை ஆதரிப்பதற்கு நீங்கள்தான் முயற்சித்தீர்களே தவிர நாங்கள் அல்ல. அன்று என்ன கூறினீர்கள் ? இந்திரா காங்கிரஸை எதிர்ப்பதில் பிரயோஜனமில்லை என்று கூறி உங்கள் பாதையை மாற்றினீர்கள். அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

*டாக்டர் மு. கருணாநிதி : பாராளுமன்றத்தில் ஜனதா ஆட்சியைக் கவிழ்க்காமல் காப்பாற்ற எண்ணியிருப்பீர்களானால், மார்க்ஸிஸ்ட் கட்சி இப்போது எடுத்த நிலையை எடுக்காமல்

[டாக்டர் மு. கருணாநிதி] [1982 பிப்ரவரி 9

வேறு நிலையை எடுத்திருக்குமானால் ஜனதா ஆட்சி கவிழ்ந்திருக்காது என்பதை நம் இந்தியச் சரித்திரம் நிச்சயமாகச் சொல்லிக்கொண்டுதான் வருகிறது.

திரு. என். சங்கரய்யா : நாங்கள் எடுத்த நிலையால் ஜனதா ஆட்சி கவிழவில்லை. அங்குள்ள ராஜ்நாராயண்களும், மொரார்ஜி தேசாய்களும், அங்குள்ள ஆர்.எஸ்.எஸ்.களும் சேர்ந்து பல நூற்றுக்கணக்கான மெம்பர்களை வெளியே அனுப்பிவிட்டு அவர்களை அவர்களே கவிழ்த்துக் கொண்டார்களே தவிர வேறு அல்ல. நாங்கள் எப்படி உதவி கொடுக்க முடியும்? அவர்களிடம் நான்கு விஷயங்கள் கேட்டோம். அவர்கள் ஒரு பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். இந்தியாவில் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு காவலில் வைக்கவேண்டிய சட்டம். அதை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டோம். அதைக் கூட வாபஸ் வாங்க அவர்கள் தயாராகயில்லை. நாங்கள் எவ்வளவோ முயற்சித்தோம்.

காங்கிரஸ் ஆட்சி வராமல் தடுப்பதற்காகத் தான் சரண்சிங் அவர்கள் தலைமையிலே அண்ணா தி.மு.க. கட்சி பங்கெடுத்துக் கொண்ட ஒரு கூட்டு மந்திரி சபையை ஆதரித்தோம். எங்களுடைய முயற்சி அந்த அளவிலே இருந்தது. ஆக, முன்னுக்குப் பின் முரணாக இந்திய அரசியலில் எதேச்சாதிகாரம் என்று நாங்கள் கருதக்கூடிய சக்தி ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக நாங்கள் முயற்சி செய்கிறோம். இன்றைக்கும் அதைத்தான் தான் கூறுகிறோம். அவர்கள் கூறியதைப்போல், தஞ்சாவூர் தேர்தலிலே நாங்கள் தோல்வியடைந்தோம், ஆனாலும், அந்தத் தோல்வியின் காரணமாக, இந்திரா காங்கிரஸ் கட்சியோடு செல்லவேண்டும் என்ற பாதைக்கு போனவர்கள் தி.மு.க. நாங்கள் அந்தத் தோல்வியைத் தாங்கிக் கொண்டோம். 1980-ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டது. அதையும் தாங்கிக் கொண்டோம். ஆனால், அதற்காக கொள்கையை மாற்ற வில்லை. ஆனால், மே மாதத்தில் தமிழகத்திலே மக்கள் தீர்ப்பளித்தார்கள். அன்றைக்கு தி.மு. கழகம் தவறாக, இந்த மாநிலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைப்பதற்காக, இந்திரா காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து கொண்டதால்தான், அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டது. நான் இன்றைக்கு மீண்டும் கூற விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய இரண்டு கழகங்களையும் பற்றி மத்திய சர்க்கார் என்ன கரு[illegible]றது! இவர்கள் நாம் சொல்கிறபடியெல்லாம் தேசிய பாது[illegible]புச் சட்டத்திற்கும், அத்தியாவசிய பணிகள் முடக்கச் சட்ட[illegible]ம் ஆதரவு அளிக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய [illegible] தன்மையை இழந்து விட்டார்கள் என்பதைப் பார்[illegible] மாண்புமிகு நாவலர் அவர்கள் சமீபத்திலே அண்ணா [illegible]



1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

மலர் வளையம் வைக்கின்றபோது, அவர் சொன்ன செய்தி, பத்திரிகைகளிலே வந்தது. தன்னுடைய கட்சி ஊழியர்களுக்கு சூளுரை மேற்கொள்ளுகிறபோது, மாநில ஆட்சி அதிகாரங்களைப் பாதுகாக்கும் என்று சொன்னார்கள். எப்படி பாதுகாத்துக் கொள்ள முடியும்! நான் சொன்னேன், உருளை மாவு ஆலைகளுக்கு லைசன்ஸ் கொடுக்கும் அதிகாரத்தை 7 ஆம் தேதி காலை மாநில சர்க்காரின் கையிலே இருந்து மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும்போது, இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய அந்த கொள்கையை எதிர்க்காமல், மாநில ஆட்சியின் உரிமைகளை எப்படி பாதுகாக்க முடியும்! அது தான் என்னுடைய கேள்வி!

உணவு கொடுக்கவில்லை ; ஒப்புக்கொள்ளப்பட்ட அரிசி வரவில்லை ; கோதுமை தானியம் வரவில்லை ; என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதுபோல, இன்றைய தினம் மின்சார வாரியத்தின்மீது பல பொருள்களுக்கு வரி போடுகிறார்கள் என்றெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லி, அதே போல் விவசாயிகளுக்கு பணம் கொடுத்தால், நிவாரணம் அளித்தால் அதைக் கண்டிக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். இவைகளையெல்லாம் ஒட்டு மொத்தமாகச் சேர்த்துப் பாருங்கள். ஆகவே தான் நான் கூறுகிறேன். தமிழகத்தில் எங்களுடைய அபிப்பிராயத்திலே தி.மு.க. வும் அ.தி.மு.க.வும் இன்னும் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயக சக்தியுடன் நிற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது என்று எங்களுடைய கட்சி கருதுகிறது. ஆகவேதான் நாங்கள் தோழமை உணர்வோடு அந்த இரண்டு கழகங்களுக்கு மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இன்றைக்கு தி.மு.க. பாண்டிச்சேரி கூட்டு மந்திரி சபையிலே இருந்து வெளியே வரட்டும். தி.மு. கழகம் காங்கிரஸ் கட்சியின் மூலமாக அ.தி.மு.க. ஆட்சியைக் கலைக்காது என்று அவர்கள் சொல்லட்டும். அதன் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க. எந்தவிதமான சந்தேகமும் இன்றி தி.மு. க. வுடனும், மற்ற ஜனநாயக கட்சியினுடனும் சேர்ந்து தமிழகத்திலே உள்ள மக்கள் நலனை பாதுகக்கப் முன்வரலாம். இந்த நீண்ட பயணத்தை, இந்த லட்சியங்களுக்காக நடத்துவதாக இருந்தால் இந்த இரண்டு கழகங்களும், இங்கே இருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், நண்பர் நெடுமாறன் அவர்களும் குமரி அனந்தன் அவர்களும், பார்வார்ட் பிளாக் கட்சியும் சேர்ந்து மாநில அதிகாரங்களை பெறுவதற்கும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், ஜனநாயகத்தைப் பாதுகா[illegible]ம் நாங்கள் பயணத்தை மேற்கொள்ளத் தயாராக இருக்கி[illegible]ம்.

[illegible]து பால் கமிஷனைப் பற்றி விவாதிக்கப் போகி றோம்[illegible]தைப்பற்றி எங்களுடைய அபிப்பிராயத்தைத் தெளி[illegible]இருக்கிறோம். மாண்புமிகு கலைஞர் கருணாநிதி

[illegible]

[திரு. என். சங்கரய்யா] [1982 பிப்ரவரி 9

அவர்கள்மீது, இந்த ரிப்போர்டை வெளியிட்டார்கள் என்பதற்காக அரசாங்கம் தொடுத்த வழக்கு தவறானது என்று கூறியிருக்கிறோம். எதிர்க் கட்சிக்கு அந்த உரிமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். அவருடைய உதவியாளரை கைது செய்தது தவறு என்று கூறியிருக்கிறோம். எங்கள் நிலையை தெளிவாக ஒளிவு மறைவின்றி சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு அந்த கமிஷன் ரிப்போர்ட்டை விவாதிக்கின்றபோது, எது சரியானது, எது தவறானது என்பதைப் பற்றி முடிவு செய்யலாம்.

சுப்பிரமணிய பிள்ளை இறந்திருக்கிறார்கள். அவர் இறந்திருக்கக் கூடாது. கோவில்களிலே உண்டியல் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், அந்த ஒரு பிரச்சினையை வைத்து தமிழகத்திலே உணவு இல்லை, நியாய விலைக் கடைகளிலே அரிசி இல்லை, மத்திய சர்க்கார் உணவு கொடுக்கமாட்டேன் என்கிறது என்று சொல்லக்கூடாது. இந்த நியாய விலைக் கடைகளை சீர்திருத்த முற்பட்டால், அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றே முக்கால் கோடி கார்டுகள் பெற்றிருக்கக்கூடிய மக்களுக்கு நியாய விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்க வேண்டிய பொறுப்பிருக்கிறது என்று. ஆனால், வேலையில்லாத் திண்டாட்டம், நிலச்சீர்திருத்தம். பினாமி சட்டத்தை மத்திய சர்க்கார் நிறைவேற்ற வேண்டுமென்று, மீண்டும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதற்காக தமிழக மக்களைத் திரட்டி, இன்றைக்கு மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளச் செய்வது நாம் செய்யவேண்டிய ஜனநாயக முறை. அந்தப் பாதையில் செல்வதற்குப் பதிலாக, திருச்செந்தூருக்கு நீண்ட பயணத்தை தி.மு.க. நடத்தி, அதற்கு பின்னர் அ.தி.மு.க. நடத்தினால் அது சரியல்ல. அந்த ஒரு குறிப்பிட்ட பிரச்னையை வைத்துக் கொண்டு செய்தால் மக்களின் கவனத்தை திசைதிருப்புவதாக அது அமையும். கொதித்துக் கொண்டிருக்கின்ற மக்களிடையே உள்ள பிரச்னைகளுக்கு அது தீர்வு காணாது. ஆகவே, அந்த நிலையை இரண்டு கட்சிகளும் மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இறுதியாக, எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் கருதுகிறோம். தமிழகத்திலே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு, ஆட்சியை நீடிப்பதற்கு எல்லா வாய்ப்பும் இருக்கிறது. நம்முடைய சொந்த முயற்சிகளினால் அது சீர்குலைக்கப்பட்டால் ஒழிய, தமிழகத்திலே இதை மாற்றுவதற்கு வேறு எந்த சக்திக்கும் கிடையாது. ஆகவே, அதைப் பலப்படுத்தி, நமக்கிருக்கக் கூடிய பிரச்னைகளை, தனிப்பட்ட பிரச்னைகளாக இருந்தாலும் அதைப் பேசி தீர்த்து முடிவு காணவேண்டும். அதற்காக தமிழ்நாடு வருந்தக் கூடாது, இந்தியா வருந்தக் கூடாது. இந்தியா



1982 பிப்ரவரி 9] [திரு. என். சங்கரய்யா]

பூராவிலும் ஜனநாயகத்திற்காக போராடக்கூடிய சக்திகள் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். வரக்கூடிய சிரமமான நாட்களில், இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு, இந்த இரண்டு கட்சிகளும், இதர ஜனநாயக சக்திகளோடு துணைநிற்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

**திரு. துரை முருகன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் இறுதி நாளாக கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எதிர் வரிசையில் தலைவர்கள் பேசிய பிறகு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசிய பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறுவதாக இருந்தது. ஆனால் தற்போது தலைவர்கள் பேசிய பிறகு உறுப்பினர் பேச அழைக்கப்படுகிறார். முதலமைச்சர் அவர்களுடைய பதில் இன்று உண்டா இல்லையா? அவையின் முன்னவர் உட்கார்ந்திருக்கும் காரணத்தால் அதுபற்றி அவர்கள் கூறவேண்டும். ஏற்கனவே திரு. உமாநாத் அவர்கள் இன்று முதலமைச்சர் அவர்கள் பேச மாட்டார்கள் என்று கூறினார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்று மன்றத்தின் உறுப்பினர்கள் பலரும் பேசுவார்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு உடல் நலம் குன்றியிருக்கும் காரணமாக நாளைக்குப் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் நாளைக்குப் பேசுவார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** நாளைக்கு பால் கமிஷன் அறிக்கை மீதான விவாதம் இருக்கிறது........

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவை 11–30 மணிக்குக் கூட்டியிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து அதிலே முடிவு எடுக்க இருக்கிறார்கள்.

(2) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம்— தொடர்ச்சி.

**திரு. ஆர். தியாகராசன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். சபையில் இல்லாதவரைப் பற்றிப் பேசக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் திரு. சங்கரய்யா அவர்கள் பேசும்போது திரு.

இராமசாமி படையாச்சியைப் பற்றி தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் இந்தச் சபையில் இல்லை. அப்படி சபையில் இல்லாதவரைப் பற்றிப் பேசுவது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரைப் பற்றித் தவறாகப் பேசவில்லை. கொள்கை ரீதியாகத்தான் பேசியிருக்கிறார்கள்.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1—2—1982 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் இம்மன்றத்தில் ஆற்றிய உரையின் மீது என் கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழுக்கு தமிழ் மணம் உலகெங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் தஞ்சைத் தரணி தலைநகரில் தமிழ்த்தாயின் மூத்த மகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளாம் செப்டம்பர் 15-ஆம் நாள் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ் மொழியின் தொன்மை, தமிழனின் நாகரிகம், பண்பாடு நவீனத் தமிழின் வளர்ச்சி இவைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் கண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு தஞ்சைத் தரணி மக்கள் சார்பாக என் இதயம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நோக்தில் தான் பிறந்த மண்ணில் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவில் கலந்துகொள்ளாவிட்டாலும் சும்மா இரேனென்று சூளுரைத்து போராட்டம் நடத்தி சிறைசென்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் கலைஞரை கைது செய்தால் தமிழ்ப் பல்கலைக் கழக விழா எடுக்கும் அதே நாளில் தஞ்சையே இருளில் சூழும் தஞ்சையில் சோக கீதங்கள் பாடப்படும் என்று அறிவிப்புச் செய்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும் தஞ்சை மாவட்டத்து மக்கள் சார்பாக என் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்றமிகு தமிழகம் மேலும் எழில் பெறுகின்ற வகையில் திட்டங்கள் தீட்டி செயல்படுத்துகின்ற பாங்கினை மேதகு ஆளுநர் அவர்கள் தம் உரையில் கூறியுள்ளார்கள். 'உழுவார் உலகத்

தில் வறட்சிப் பணிகளைச் சீரும் சிறப்போடும் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

மத்திய அரசின் குழு பரிந்துரை செய்ததன் பேரில், 48.90 கோடி ரூபாய் செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருந்தாலும் கூட, தமிழக அரசு 55·24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. உலகத்தவர்கள் பாராட்டுகின்ற அளவில், வருகின்ற ஆண்டுகளில் வறட்சி வந்தால் அந்த வறட்சியின் கொடுமை தெரியாத வகையில் இன்றைய தினம் தமிழக அரசு 55·24 கோடி ரூபாய்க்கு நல்ல பல ஆக்கப் பணிகளைத் தமிழகத்திலே உருவாக்கி, எல்லோரும் போற்றும் வகையில் அந்தப் பணிகளைக் கண்காணிக்கும் வகையில் சர்வ கட்சிகளையும் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறும் வகையில் ஒரு குழுவை அமைத்துச் சீரும் சிறப்புடனும் வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது ; போற்றுதற்குரியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் பற்றிக் குறைத்தும், பழித்தும் பேசியதற்கு என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு, இயற்கையின் சீற்றங்களை உணர்ந்து, வெள்ளம் வருகின்ற நேரத்தில் மக்களைக் காப்பாற்றுவதற்காகப் புயல் பாதுகாப்பு இல்லங்களை இங்கே தோற்றுவித்திருப்பதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் உயர்திரு பிரபாகரன் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களின் முகத்தில் அண்ணல் காந்தியடிகளைக் காண்கிறேன் என்று சொன்னதற்கு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எவ்வளவு பெரிய கோபக் கணைகளைத் தொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறாமல் இருக்க முடியவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி நடைபெறுகின்ற நேரத்தில் தன்னிறைவுத் திட்டம் தமிழ்நாட்டில் பட்டி தொட்டிகளில் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தத் திட்டப் பணிகள் நிறைவேறுவதைப் பார்க்கச் செல்லும் நேரத்தில் அங்கே இருக்கின்ற அருமைத் தாய்மார்களும், வயது முதிர்ந்தவர்களும், கண்பார்வை இழந்தவர்களும் புரட்சித் தலைவரின் தன்னிறைவுத் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள். சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்குத் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய, வறிய மக்கள், குறிப்பாகக் கிராமப்புறத்து மக்கள் எல்லா வசதிகளையும் பெற்று வருகின்ற நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்





பதைச் சொல்லிப் பாராட்டி, எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே, மகராஜன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ வேண்டும், அவர்களுடைய ஆட்சி தமிழகத்திலே என்றும் நிலைத்திருக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நிலையை இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பிரதான எதிர்க்கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், தன்னிறைவுத் திட்டத்தில் சுடுகாட்டுக்குமட்டும் சாலைகள் அமைக்கப்படுகின்றன என்று இங்கே சொல்லி இருக்கிறார்கள். பாவம், அவர்களுக்கு ஏன் இந்த நிலை வந்தது என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடைசிக் காலத்தில்தான் மனிதனுக்கு வேண்டியது சுடுகாடு என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு, தமிழகத்து மக்களால் ஒதுக்கப்பட்டு, அவர்களின் ஆதரவை இழந்தவர்களுக்கு இன்றைக்குத் தெரிவதெல்லாம் கடைசிக் கட்டம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கிராமப்புறத்து அடிப்படைத் தேவைகளாக இருக்கின்ற ஒன்பது தேவைகளைப் புரட்சித் தலைவரவர்களின் அரசு போர்க்கால வேகத்தில் ஓராண்டுக் காலத்திற்குள் தூய்மையான முறையில், நேர்மையான முறையில் தீட்டப்படும் திட்டங்கள், அதற்காக ஒதுக்கப்படும் நிதி மக்களுக்குப் போய்ச் சேரும் வகையில் இந்தத் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதன் வாயிலாக இன்றைக்குத் தமிழகத்தில் 219 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, 18,000 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாலை வசதிகளும், குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன ; 2,717 பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன. இப்படி இன்ன பிற திட்டங்களும் கிராமப்புற வளர்ச்சிக்காகக் குறுகிய கால நிலையிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் பேசும்பொழுது இந்தத் திட்டத்திலே பல ஊழல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தத் தன்னிறைவுத் திட்டம், வறட்சி நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றும் நேரத்தில்தானா இப்படிப்பட்ட ஊழல்கள் மலிந்திருப்பதாகக் கூறுகிறீர்கள். இதே நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய சி. எஸ். அவர்கள் இந்திய உப கண்டத்தினுடைய நிதி அமைச்சராக இருந்த நேரத்தில், கலைஞர் அவர்கள் ஆட்சியிலே—1974 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்—இருந்தார்கள். அப்பொழுது பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அழைத்து வந்து, மதுராந்தகம் ஏரியிலே பெரிய விழா எடுத்து, தமிழகத்திலே இருக்கிற வறட்சியினைக் காணச் செய்து, தமிழகத்திற்காக நிதியினைப் பெற்றார்கள். அந்த நிதி இங்கு ஒழுங்காக வறட்சிப் பணிக்காகச் செலவு செய்யப்பட்டதா என்று பேசுகிற நேரத்தில் மாண்புமிகு சி. எஸ். அந்த நிதியை மக்களுடைய வறட்சியைத் தீர்ப்பதற்காகச் செலவிடவில்லை என்பதை நாடாளுமன்றத்திலே குறிப்பிட்ட அந்த நிலையினை நான் ஞாபகம் ஊட்ட விரும்புகிறேன். எனவே வாழாத பெண்ணினுடைய கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பதைப் போல், காமாலைக்காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்று சொல்வதைப் போல் இந்த அரசு நிறைவேற்றுகின்ற நல்ல பல திட்டங்களுக்கு நீங்கள் நல்ல ஆதரவு தராவிட்டாலுங் கூட, அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில், இந்த அரசுக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையில், மக்களுடைய நம்பிக்கைகளை அழிக்கின்ற வகையில், உங்களுடைய பேச்சுக்கள், செயல்கள் இருக்கக் கூடாது என்பதனை இந்த மன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, தங்கள் அரசியல் வாதங்கள் கருதி, மொழிப் பிரச்னையில் இன்று அரசியல் இலாபம் தேட நினைக்கிறார்கள் என்பதனை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்திலே, அவர்களுக்கு நான் வன்மையான, எனது ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, மொழி இனம் இவற்றைக் காப்பதற்காக ஏற்பட்ட உணர்ச்சி உணர்ச்சியின் பிழம்பு என்பதனை இந்த நேரத்திலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட இனத்தை திராவிட பண்பாட்டைக் காப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் என்பதையும் அரசியல் இலாபம் கருதி இங்கு சட்டமன்றத்திற்கு வந்து முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்து சுக போகங்களை அனுபவிக்க வில்லையென்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். எனவே அந்த வழியில் வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழுக்கு, தாய் மொழிக்கு இழுக்கு வருமானால், எங்கள் மொழியை அழிக்க, எந்த மொழி வந்திடினும் அதை எதிர்த்துப் போராடும் என்பதனை இந்த நேரத்திலே குறிப்பிட





விரும்புகிறேன். இங்கு பேசிய மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் குறிப்பிட்ட ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் "திராவிடர் கழகமாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், எங்களுடைய தாய் மொழிக்கு, தமிழ் மொழிக்கு, எங்கேயிருந்து அழிவு வந்தாலும், எந்த மொழி அதன் மேல் ஆதிக்கம் செலுத்த வந்தாலும், இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து நாங்கள் மொழியினைக் காப்போம்" என்று சொன்னதை நான் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் நமது மொழிக்கு ஆபத்து என்கின்ற நேரத்தில், கொதித்து எழுகின்ற இளைஞர்கள் இருக்கிற இயக்கம் தான் திராவிடர் இயக்கம் என்பதனை இந்த நேரத்திலே கூறி, அரசியல் இலாபத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் அல்ல என்பதனை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம் நேரு அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஏன் மொழிப் போராட்டம் என்கிறோம். நேரு அவர்கள் தந்த வாக்குறுதி மொழிகள் அத்தனையும் இன்று நாட்டிலே நடைமுறைப்படுத்தப்படுகிறதா, சட்டங்களாக்கப் பட்டிருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க ஆசைப்படுகிறேன். நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி ஆங்கில மொழி இந்த நாட்டினுடைய இணைப்பு மொழியாக தொடர்ந்து இருக்க வேண்டும் : இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதாகும். நேரு அவர்கள் கொடுத்த அந்த வாக்குறுதியைச் சட்டமாக்கவேண்டுமென்பது தான் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கை என்பதனை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நேரு அவர்கள் வாக்கு மொழி, உறுதிமொழி, சட்டமாக்கப்படாத வரையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய இலட்சியப் பயணத்தை நிறுத்தாது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக என் போன்ற எண்ணற்ற இளைஞர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தங்களுடைய உடைமைகளை, உயிர்களை இழக்கத் தயாராக இருக்கிறோம் என்பதனை இந்த நேரத்திலே கூறி, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வலியுறுத்தி பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காக உப்புலியாபுரம் தொகுதி மக்களின் சார்பாகவும், என்சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆளுநர் உரையில் இன்றைய தினம் ஏழை, எளிய மக்கள், பயன் அடைகின்ற வகையில் பல திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள்.

வுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் பாரதி. அதற்கேற்ப கிட்டத்தட்ட ரூ 180 கோடி செலவில் வேளாண்மைக்கு ஒரு விற்பனை ஒருங்கிணைப்பு மேம்படுத்தும் திட்டத்தினை உருவாக்கி, ஏழை, எளிய மக்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை வைக்கின்ற வகையிலே, கிடங்கு வசதிகளையும், பொருள்களைப் பதப்படுத்துகின்ற வசதிகளையும் ஏற்படுத்த, அதற்காக ரூ. 102 கோடியிலே ஒரு திட்டம் தயாரித்து, மத்திய அரசுக்கு அளித்து இருக்கிறார்கள். அதன்மூலம் ஏழை, எளிய மக்கள் இன்றைய தினம் தாங்கள் உற்பத்தி செய்கின்ற விவசாய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காமல், அல்லல்படாமல், இடையில் இடைத்தரகர்கள் பலனை அனுபவிக்க முடியாமல், அவர்களே அனுபவிக்க முடியும். ஆகவே, விவசாய மக்களுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், இன்றைய தினம் ஏழை, எளிய மக்களுக்காக, இப்படிப்பட்ட திட்டம் தீட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பதற்காக, ஏழை, எளிய விவசாய மக்கள் அவரை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

கூட்டுறவுத் துறையின் மூலமாக வாங்கிய கடனை 30—6—1981-க்குள் திருப்பிச் செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்கு அவர்கள் பெற்ற கடன்களுக்கு உண்டான வட்டி, அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்து அவர்கள் வாங்கிய அசலை மட்டும் கட்டினால் போதும் என்ற அளவுக்கு சட்டத்தினை உருவாக்கி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டித்து 31—12—1981 வரை கட்டலாம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். இதன் மூலம் பல லட்சக்கணக்கான மக்கள் பலன் அடைந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மக்கள் மிகவும் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதைப் போலவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் கொடுத்த தக்காவிக் கடனான ரூபாய் 27 கோடியை இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. எந்த அரசும் கடனைக் கொடுக்குமே தவிர, கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்வதில்லை. அவர்கள் கடனைக் கொடுத்துவிட்டு வறட்சிக்காலத்தில் தவணையை 6 மாதம் 6 மாதம் என்று நீட்டிக்கொண்டு சென்றிருக்கிறார்களே தவிர, காங்கிரஸ் கட்சி ஆண்டபோதும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தபோதும் சரி அவர்கள் யாரும் தள்ளுபடி செய்யவில்லை. ஆனால் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களே தங்கள் தேர்தல் கால வாக்குறுதியை நினைவிலே நிறுத்தி





இதைச் செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்
தள்ளுபடி செய்திருக்கிறார்கள். தக்காவிக் கடன் 27 கோடி
ரூபாய்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரண
மாக 27 லட்சம் குடும்பங்கள் கடன் சுமையில் இருந்து நிவாரணம்
பெற்று இன்றைய தினம் மகிழ்ச்சிகரமாக இருக்கிறார்கள்.

இங்கே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அருமை
நண்பர் இராசு அவர்கள் குறிப்பிடுகின்றபோது இங்கே ஆளும்
கட்சியைச் சேர்ந்த திரு. ஜே. சி. டி. பிரபாகரன் பேசும்போது
காந்தி கண்ட கிராம ராஜ்ஜியத்தை அமைக்க வேண்டும் என்று
சொன்னபோது, அதை அவர்கள் எதிர்த்துப் பேசுகின்ற நோக்
கத்தோடு, எந்தத் தகுதியின் அடிப்படையில் பேசுகின்றார் என்
பதை நினைத்துப் பார்க்காமல் பேசினார். இன்றைய தினம்
தன்னிறைவுத் திட்டம் என்பது தமிழகத்தில்தான் நடத்தப்
படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு
வரப்பட்ட இந்தத் திட்டத்தை, பக்கத்திலே உள்ள அண்மை
மாநிலங்களில் உள்ள அமைச்சர்களும், அதிகாரிகளும் தன்னிறை
வுத் திட்டம் என்றால் என்ன, எப்படி இது தமிழகத்திலே செயல்
படுகின்றது என்பதைப் பார்த்து, இதைப்போன்று தங்கள்
மாநிலத்திலே செயல்படுத்த முடியுமா என்ற எண்ணத்தை
உருவாக்குகின்றது. இந்தத் திட்டத்தினை 1980-81ம்
ஆண்டுகிட்டத்தட்ட 69 யூனியன்களுக்கும் 81-82 ஆம் ஆண்டு 150
ஊராட்சி ஒன்றியங்களிலும் கிட்டத்தட்ட 131 கோடி ரூபாய்
அளவுக்கு நிலையான சொத்துக்களை உருவாக்கிக் கொடுத்திருக்
கிறார்கள்

மேலும் கிராம மக்களுக்கு இன்னும் இணைப்புச் சாலைகள்
கொடுக்கப்படவில்லை. பள்ளிக்குச் செல்லும் மாணவர்
களுக்குப் போதுமான பள்ளிக் கட்டடங்கள் இல்லை.
இந்த நாடு சுதந்திரம் அடைந்து கிட்டத்தட்ட 36 ஆண்டுகள்
ஆகியும், பள்ளிக் கட்டடங்கள் போதுமான அளவுக்கு இல்லா
மல் இருக்கின்ற குறையை உணர்ந்து புரட்சித் தலைவர்
அவர்கள் தன்னிறைவுத் திட்டம் மூலமாக கிராமத்திலே இருக்
கின்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உரு
வாக்கிக் கொடுக்க, குடிநீர் வசதி, பள்ளிக் கட்டடங்கள் வசதி,
சுகாதார வசதி, பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ வசதி, கிராம
மக்களுக்குத் தேவையான இணைப்புச் சாலைகள், பஸ்
போக்குவரத்து வசதி, இவைகள் அனைத்தும் செய்து தர
வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தத்
திட்டத்தை உருவாக்கி 219 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னி
றைவுத் திட்டத்தை அமல் படுத்தி, பல லட்சக்கணக்கான ஏன்
பல கோடிக்கணக்கான மக்கள் பலனை அனுபவித்துக் கொண்டு
இருக்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் இருந்து மற்றொரு கிராமத்திற்குப் போக
இணைப்புச் சாலைகள் இல்லை, என்று இன்றைக்கு காங்கிரஸ்
கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் பேசுகின்றார்களே,

அவர்கள் ஆட்சி செய்கின்ற காலங்களிலே இத்தகைய அடிப்படை வசதிகளைச் செய்து தராதது ஏன் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இந்த முறையில் திட்டங்களை யெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றுகிறபோது, ஏன் எதையும் செய்யவில்லை, செய்யவில்லை என்று எதிர்க்கட்சியாக இருக்கிறோம், ஆகவே, எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இங்கே எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறீர்களா என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 2,500 பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 18,000 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் போடப்பட்டுள்ளன. அதனால் பல மக்கள் பலன் பெற்று இருக்கிறார்கள். இதுவரையில் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி கிராம மக்களுக்கு வசதிகளைச் செய்ய வேண்டும் என்று ஏன் எந்த அரசும் சிந்திக்க வில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டு தீவிரமாக செயல்பட்டுக் கொண்டுள்ளார் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தற்சமயம் 18 சதவிகிதம் அரிசன மக்களுக்கு என்றும், 15 சத விகிதம் பெண்களுக்கு என்றும் இடங்களை ஒதுக்கி பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்று இந்த அரசு திட்டமிட்டது. பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எல்லாவிதத்திலும் தயாராக இருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகளும், மற்றவர்களும் இப்போது தேர்தல் நடைபெற்றால், தன்னிறைவுத் திட்டத்தால் பயன் பெற்றுள்ள ஏழை எளிய கிராம மக்கள், அரிசன மக்கள், ஒன்றியத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து விடுவார்களோ என்று பயந்து வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். அதோடு மட்டுமல்ல, அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதால், அந்த அரிசனங்களும், பெண்களும் நாம் ஒன்றியத் தலைவராக வர வாய்ப்புத் தந்த இந்த அரசைத்தான் ஆதரிப்பார்கள் என்றும் நாம் ஒரு இடம்கூட வர முடியாது என எண்ணி இந்த ஒதுக்கீட்டை எதிர்த்து எதிர்க்கட்சிகள் வழக்கு மன்றம் சென்றுள்ளார்கள். அதனால் தடையை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த புரட்சித் தலைவர் அரசு எந்தத் தேர்தலையும், எந்த நேரத்திலும் சந்திக்கத் தயாராக இருக்கிறது. தேர்தலுக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் பயந்தது அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை இந்த அரசு செய்து இருக்கின்ற





காரணத்தினால், அந்த மக்கள் இந்த அரசைத்தான் ஆதரிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் வரவேண்டும் என்கிற முறையில் நாங்கள் தான் சொல்லிக்கொண்டு இருக்கிறோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பலர் சொல்லிக் கொள்வது உண்டு. ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் நாள் தமிழ் பல்கலைக் கழகத்தை தஞ்சையில் உருவாக்கியிருக்கிறார்கள். மேலும் பாரதியார் பிறந்த எட்டயபுரத்திலே பெண்களுக்கான பல்தொழில் பயிற்சி நிலையம் துவங்கவும் நடவடிக்கை, எடுத்து இருக்கிறார்கள். அதைப்போலவே, பிப்ரவரி 1-ம் தேதி முதல் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் இருக்க வேண்டும் என்பதற்காக கோர்ட்டுகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கொண்டுவந்து இருக்கிறார்கள். இன்றைய தினம் இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களை தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து, ஏழை எளிய மக்கள் நல்ல விதத்தில் வாழும் வகையில் திட்டங்களை நிறைவேற்றியிருப்பதால், அதன் பயனை முழு அளவில் பெற்றுள்ள ஏழை எளிய மக்கள் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ந. சிவஞானம்** : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது காங்கிரஸ் (ஐ) சார்பில் சில விளக்கங்களைத் தெரிவித்துக் கொள்ள வாய்ப்புத் தந்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாரதியார் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுகிறோம். அகில இந்திய அடிப்படையில் அனைத்து மாநிலங்களிலும் இப்போது அதைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மகாகவி பாரதியார் அவர்கள் சிறந்த கவிஞர் மட்டுமல்ல. இந்த நாட்டுக்கு சோசலிசக் கொள்கையையும், இந்த நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பதற்காக, 'ஒன்றே குலம்' என்ற லட்சியத்தை [illegible] நாட்டு மக்களுக்குக் கொடுத்தவர். அவருடைய பாடல்களை பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் உள்ள பாடப்புத்தகத்தில் சேர்க்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. ந. சிவஞானம்] [1982 பிப்ரவரி 9

இப்போது வறட்சி நிவாரணப் பணி வேலைகள் என்கிற வகையில் வேலைக்கு உணவு திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் என்று பல்வேறு திட்டங்கள் அரசால் நிறை வேற்றப்பட்டு வருகிறது. ஆனால் அப்படி நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் ஆளுங்கட்சிக்கு மட்டும்தான் முன்னுரிமை கொடுத்து, ஆளும் கட்சியினர் சொல்கிறவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11.50)

ஆக, இன்றைக்கும் ஆளும் கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டும்தான் தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும் அல்லது தேசிய வேலைவாய்ப்புத் திட்டமாக இருந்தாலும் அதிலே வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள், பயனடைகின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு ஆளுநர் உரையில் அத்தியாவசியப் பொருட்களை, அத்தியாவசிய பண்டங்களை வாங்குவதைப் பற்றியும், விநியோகத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொது நிர்வாகம்தான் உணவு தானியங்களை வாங்க வேண்டும், பொது நிறுவனங்கள்தான் உணவு தானியங்களை விற்கவேண்டும். கூட்டுறவுத் துறை போன்ற பொது நிறுவனங்கள் மூலம்தான் எல்லா மக்களுக்கும் அத்தியாவசியப் பண்டங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பெரும் கடன் சுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதவி காலத்திலே சிறு விவசாயிகளின் எல்லா கடன்களையும் ரத்து செய்து விடுவேன் என்று சொன்னார்கள், ஆனால் ஆளுநர் உரையில் சில சலுகைகளை மட்டுமே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதாவது வட்டியைத்தான் தள்ளுபடி செய்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்து ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக, மாறுபட்டதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் சொன்ன மாதிரி சிறு விவசாயிகள் கடன் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும்; அவர்களுடைய கடன் சுமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த ஒன்றாம் தேதி சரும்பு உற்பத்தியாளர்கள் உண்ணா விரதம் இருந்தார்கள். ஏன் என்று கேட்டால் கரும்புக்கு மிகக் குறைந்த விலை நிர்ணயக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவை எடுத்துக்கொண்டாலும், உத்திரப்



1982 பிப்ரவரி 9] [திரு ந. சிவஞானம்]

பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும், கர்நாடகத்தை எடுத்துக் கொண்டாலும் நம்முடைய மாநிலத்தைக் காட்டிலும் கரும்புக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. ஏறத்தாழ ஒரு டன்னுக்கு 20 ரூபாய், 25 ரூபாய் அதிகமாக அங்கே கொடுக்கப்படுகிறது. ஆகையால், இந்த அரசு உடனடியாக பக்கத்து மாநிலங்களின் விலை அளவுக்கு கரும்பு விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இயற்கை நீர் முழுவதும் பயன்படுத்தப் பட்டுவிட்டது. இந்த நிலையில் நாம் அண்டையில் இருக்கிற மாநிலங்களிலிருந்து அது ஆந்திர மாநிலமாக இருந்தாலும் சரி, கர்நாடக மாநிலமாக இருந்தாலும் சரி, கேரள மாநிலமாக இருந்தாலும் சரி, அங்கே வீணாகிற தண்ணீரைப் பெற்று நம்முடைய மாநில மக்களுக்கு பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நதிகளை ஒன்றாக இணைக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்திற்கு காவேரி தண்ணீரைக் கொண்டு வரும் பிரச்சனை இன்னும் முடியவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை அந்த பிரச்சனையில் மிகத் தீவிரம் காட்டி, விரைவில் திட்டத்தை நிறைவேற்ற நம்முடைய அரசு முன்வர வேண்டும்.

குறிப்பாக இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதாவது அவர்கள் அறிவிப்புப்படி பிப்ரவரி 15 தேதி மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்டிருக்கும் தண்ணீர் நிறுத்தப்படும் என்று சொல்கிறார்கள். அதனால் இலட்சக்கணக்கான ஏக்கரில் பயிராகியிருக்கும் தாளடிப் பயிர் வாடிவிடும். பயிர் வாடிவிடாமல் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பு. இன்றைக்கு நம்முடைய பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 20 அம்ச பொருளாதாரத் திட்டத்தை அறிவித்து, அதிலே உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். மேட்டூர் அணையிலிருந்து வரும் தண்ணீரை பிப்ரவரி 15–ந் தேதியோடு நிறுத்திவிட்டால் உணவு உற்பத்தித் திட்டம் பாதிக்கும். அது மட்டுமல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி திட்டமும் அதிகமாக பாதிக்கும் அபாயம் இருக்கிறது. தாளடிப் பயிரோடு கடலைப் பயிர் மற்றும் எண்ணெய் வித்துகள் பயிரும் சம்பந்தப்பட்டிருப்பதால், பிப்ரவரி 15–ந்தேதியிலிருந்து தண்ணீரை நிறுத்தி விட்டால் தமிழ் நாட்டின் விவசாயிகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கும் நிலை ஏற்படும். ஆகையால், பிப்ரவரி 15–என்ற அரசாங்கத்தின் முடிவை மாற்றி, மார்ச் 15–ந் தேதி வரையில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் ரெட்டிபாளையம் என்ற ஊரில் ஒரு துர்பாக்கியமான நிலையில் 7 பேர்கள் இறந்துவிட்டார்கள். அது ஒரு பரிதாபகரமான துயரம். அவர்கள் அன்றாடம் உழைத்து வாழ்கிறவர்கள்; அவர்களுடைய உழைப்பில்தான் அவர்களுடைய குடும்பங்கள் வாழ்க்கை நிலை இருந்தது. இந்த துயர சம்பவத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா 500 ரூபாய்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கியிருக்கிறார். அவர்களுடைய உழைப்பை நம்பி அந்த குடும்பங்கள் இருந்த காரணத்தால் அவர்களுக்கு இந்த 500 ரூபாய் உதவித்தொகை போதாது. அவர்களுக்கு தலா 5,000 ரூபாய் அளவுக்காவது உதவித்தொகை வழங்க தமிழகஅரசு உத்தரவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி மன்றத் தேர்தல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரசாங்கம் கொடுத்திருக்கின்ற அந்த விகிதாச்சாரத்தை எங்கள் கட்சி வரவேற்கின்றது. ஆனால் அதிலே உள்ள சிலகுறைபாடுகளின் காரணமாக இன்று கோர்ட் வரை செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே விரைவிலே நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை முடித்துக்கொண்டு ஊராட்சி மன்ற ஊராட்சி ஒன்றிய தேர்தல்களை விரைவிலே நடத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரத்தநாட்டிலே நடக்கின்ற விஷயம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒரத்தநாடு தொகுதி இருக்கின்றது. அதே போன்று திருவோணம் தொகுதியும் இருக்கிறது. உதாரணமாக ஒரு அமைச்சர் இப்பகுதிகளுக்கு வருகிறார் என்றால் ஒரத்தநாடு போன்ற ஆளும் கட்சித் தொகுதியாக அது இருந்தால் அங்கே சட்டமன்ற உறுப்பினர் விழாவிலே தலைமை தாங்குகிறார். திருவோணம் போன்ற எதிர்கட்சி உறுப்பினரின் தொகுதிக்கு அமைச்சர் ஒருவர் வருகிறார் என்றால் அங்கே நடக்கின்ற விழாவிலே ஒரு அதிகாரியைத் தலைமை தாங்கச் சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போன்று இருக்கிறது. ஆகவே அப்படிச் செய்யக்கூடாது என்று அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 1958—ஆம் வருஷம் பஞ்சாயத்து சட்டம் நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் நல்ல திட்டமாக உருவாக்கப்பட்டது. உள்ளாட்சி நிறுவனங்கள் மிக நன்றாக விளங்கியது. தமிழ்நாட்டிலேதான். ஆனால் இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்கள் இல்லாமல் இருக்கின்ற நிலைமையில் பஞ்சாயத்துத் தலைவர்களின் [illegible]



பவர் கிராமசேவிகாவுக்குப் போகப்போவதாக மக்கள் பயப்படுகிறார்கள். அப்படி அரசாங்கத்திலே இருந்து உத்தரவு வரப்போவதாகச் சொல்கிறார்கள். இப்போதே தலைவர்கள் இல்லாத நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் எவ்வளவு மோசமாக இருந்துகொண்டிருக்கின்றன என்பது மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கே தெரியும். ஆகவே வருங்காலத்திலேயாவது வருகின்ற பிரசிடென்ட்கள் வந்த பிறகு அந்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்ற உரிமை இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே பெரிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட முடியாத அளவுக்கு நிதிப்பற்றாக்குறை இருக்கின்றபோது அதுவும் குறிப்பாக பிரதமர் இந்திரா காந்தியம்மையார் அவர்கள் அண்மையிலே எல்லா மாநிலங்களும் சிக்கனத்தைக் கடைப் பிடிக்கவேண்டும் என்று தாக்கீது அனுப்பி இருக்கின்ற இந்த நிலைமையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் செல்வதற்காக ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் செலவிலே ஹெலிகாப்டர் ஒன்றை வாங்கி இருக்கிறார்கள். அந்த ஹெலிகாப்டர்** நவீன வசதியுடன் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட ஹெலிகாப்டர் இப்போது தேவைதானா? அந்த 70 இலட்சம் ரூபாய் செலவு மட்டும் இல்லை. அதனை இயக்குவதற்கு பைலட்டுகள் தேவை. அந்த ஹெலிகாப்டரை இயக்குவதற்கு விலையுயர்ந்த பெட்ரோல் போடவேண்டும். மேலும் பல்வேறு இடங்களில் அதை நிறுத்துவதற்கு ஹெலிப்பேட் என்ற விமானதளம் அமைக்க வேண்டும்.** அமைக்கவேண்டும் என்றால் எந்த அளவுக்கு இந்த அரசினுடைய வரிப்பணம் வீணடிக்கப்படுகின்றது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, திரு. புருஷோத்தமன் அவர்கள் ஹெலிகாப்டர் பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறார். உண்மை என்ன என்பதை அவர் புரிந்துகொள்ளவேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் அவர்கள் இங்கே வருகின்றபோதெல்லாம் நாம் பெங்களூரிலே இருந்து ஹெலிகாப்டர் வாடகைக்குக் கொண்டுவரவேண்டிய நிலைமை இருந்தது. அது மட்டுமல்ல. மீனவர்கள் ஆங்காங்கே கடலிலே சிக்கிக்கொண்டால் அவர்களை மீட்பதற்கு ஹெலிகாப்டர் தேவைப்படுகின்றது. அதுமட்டுமல்ல. சில நேரங்களில் பாதை வழியாகச் செல்ல முடியாமல் இருக்கின்ற சில ஊர்களுக்கு அமைச்சர்கள் செல்வதற்கு அது பயன்படும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வாறு குறுக்குக் கேள்வி கேட்பது சரியானதல்ல, முறையானதுமல்ல. அவர் நினைப்பது போல் எதுவும் நடைபெறவும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் [illegible]ப்பெற்றது.

இல்லை. ஆகவே அவராகவே கற்பனை செய்து கொண்டு பேசுவதும் நல்லதல்ல என்று நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12·00)

திரு. து. புருஷோத்தமன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு முறை கோடை காலத்திலே சட்டமன்றத்தை ஊட்டியிலே நடத்த வேண்டும் என்று திட்டமிட்டபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "கும்பி எரிகிறது, குடல் காய்கிறது, கோலேந்துபவர்களே உங்களுக்கு குளு குளு வாசம் ஒரு கேடா" என்று கேட்டார்கள். அது மிகப் பெரிய மக்கள் பிரச்னையாக உருவெடுத்ததன் காரணமாகத்தான், அந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சி அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. ஆகவே, இன்றைய தினம் மக்கள் வரிப் பணத்தை வீணடிக்கிற இதுபோன்ற திட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் ஏழை விவசாயிகளிடம் இருந்து கடனை திருப்பி வசூல் செய்து பெறும்போது அவர்களுடைய பெண்களிடத்திலே உள்ள வளையல்களைக் கூட கழட்டுகிற நிலை இங்கே இருக்கின்ற சூழ்நிலையில், இதுபோன்ற ஆடம்பரச் செலவுகளைப் பார்த்து அவர்கள் ஏன் கேட்க மாட்டார்கள்! * * * என்று கேட்கமாட்டார்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதுமட்டுமல்ல, விலைவாசி எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டது, அதைப் பிடிப்பதற்காகத்தான் நாங்கள் அங்கே செல்கிறோம் என்ற அளவுக்குச் சொல்வார்கள்............... (குறுக்கீடு).

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, குளு குளு ஊட்டியைப் பற்றி அண்ணா அவர்கள் சொன்னதைச் சொன்னார்கள். குளு குளு ஊட்டியைப்பற்றி சொன்னார்கள். அண்ணா அவர்கள் குளுகுளு காரைப் பயன்படுத்தவில்லை என்றும், அவருக்குப் பின்னாலே வந்தவர்கள்தான் பயன்படுத்தினார்கள் என்பதையும் அவர் அறிவாரா...............

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த அமைச்சரவை 9-ஆவது அமைச்சரவை. இதற்கு முன்னாலே பல அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்கள் [illegible] நாட்டிலே இருக்கக்கூடிய ஏழ்மையைப் போக்க [illegible] பெருக்க, தொழில்களைப் பெருக்க என்ற வகையில் [illegible] அரிய திட்டங்களை நிறைவேற்றினார்கள். [illegible] தினம் அவைகளை எல்லாம் நிறைவேற்[illegible]

நன்மைகளை மனதில் எண்ணாமல், ஆடம்பரச் செலவு செய்து வரிப் பணத்தை வீணாக்குகிற வேலைகளைத்தான் ஆட்சியாளர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு அடிக்கடி டெலிவிஷன் நிலையத்தாரிடம் கோபம் வந்துவிடுகிறது. தங்களுக்கு வேண்டிய செய்திகளை படங்களை வெளியிடவில்லை என்றால், அடுத்த நிகழ்ச்சிக்கு அந்த டெலிவிஷன் சம்பந்தப் பட்டவர்களை வரக்கூடாது என்று தடை விதித்து விடுகிறார்கள் அண்மையிலே திரைப்பட பொன் விழா நடைபெற்றது. அதிலே நல்ல பல காட்சிகளை எல்லாம் எடுத்து தொலைக்காட்சியிலே காட்டினா.ர்கள. அதிலே குறிப்பிட்ட ஒருவர் பங்கு கொண்ட நிகழ்ச்சிகைய காட்டவில்லை என்பதற்காக, டெலிவிஷன்காரர்கள் மீது கோபம் அடைந்தார் முதல்வர் அவர்கள். அதற்குப் பின்னாலே செய்திக துறையைச் சார்ந்தவர்கள், டெலிவிஷனில்தான் வரவில்லையென்றாலும, பத்திரிகைகளிலாவது அவற்றை வரச் செய்வே.:ம் என்ற எண்ணத்தில், எல்லாப் பத்திரிகைகளிலும் அதை வெளியிட அக்கறைக் கொண்டார்கள். ஆனால், அந்தப் படம் அவர்களிடத்திலே இல்லை என்ற காரணத்தினால், சென்னையிலே இருக்கிற ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று, எங்களிடத்தில் அந்தப் படம் இல்லை, எப்படியாவது அதை வெளியிட வேண்டும் என்று கேட்டு, அதன் நெகடிவை.வப் பெற்று, எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடச் செய்தார்கள். அப்படி வெளியிடவில்லை என்றால் எங்களுடைய பதவிக்கு ஆபத்து என்ற அளவுக்கு அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி * * ஏன் இவ்வளவு முக்கியத்துவம் என்று கேட்க ஆசைப்படுகிறேன். வேண்டுமானால் (குறுக்கீடு).

திரு ஆர். மணிமாறன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு * * பழி சுமத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு நடக்காத ஒன்றை நடந்ததாக இட்டுக் கட்டி, கற்பனை மயக்கத்திலே கூறுவதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா !

(மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் தலைமை.)

அப்படி என்றால், ஆளும் கட்சியினுடைய வரிசையில் உள்ள எல்லோருக்கும் அதைப்போன்றே பிரச்னைகளை—இல்லாத பிரச்னைகளை—இருப்பதாக இட்டுக்கட்டி சொல்கிற சாமர்த்தியம்

---

*மாண்புமிகு பேரவை துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சற்றேறக்குறைய இருக்கிறது. அதே பாணியை ஆளும் கட்சியும் கடைப்பிடிக்க நீங்கள் அனுமதிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உறுப்பினர் புருஷோத்தமன் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. து. புருஷோத்தமன்:** நாட்டில் உள்ள சட்டம்-ஒழுங்கு பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே நாளுக்கு நாள் கொள்ளை, கொலை, கற்பழிப்பு, கலவரம் போன்றவைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. நாட்டுமக்கள் பஸ்சில் பயணம் செல்லக்கூட பயந்த நிலைமையில் இருக்கிறார்கள். கொள்ளைக் கூட்டத்தினர் வழிமறித்து கொள்ளை அடிக்கிற நிலையில் இன்றையதினம் நாளுக்கு நாள் அது பெருகிக் கொண்டு வருகிறது. இதையெல்லாம் தடுக்க முடியாத இந்த அரசு அல்லது போலீஸ் துறை இன்றைய தினம் ஒரு அறிக்கை காணாமல் போய்விட்டது என்பதற்காக ஒரு அதிகாரியை கைது செய்து சித்திரவதை செய்திருக்கிறார்கள். உண்மைக் கொலைகாரர்களைக் கண்டுபிடிக்க முடியாத இந்த அரசு வேண்டுமென்றே கெஸடட் ராங்கில் உள்ள ஒரு அதிகாரியை * * * (குறுக்கீடு) * * *

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் பேசுகையில், இந்த மாநிலத்தில் நாளுக்கு நாள் கொலைகள் கூடிக்கொண்டிருக்கின்றன என்றுசொன்னார்கள். அது தவறான தகவல். க்ரைமிஸ் இன் இந்தியா என்ற பத்திரிகையில் 1975-இல் நடந்த கொலைகள் 970. 78, 79, 80-இல் 770 கொலைகள்தான் இந்த மாநிலத்தில் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லப்பட்டுள்ளது நிர்வாகத் துறை அறிக்கையில் கொலைகள் குறைந்து கொண்டிருக்கிறது, கூடவில்லை என்று சொல்லியிருக்க, கூடியிருக்கிறது என்று தவறான தகவலைச் சொல்கிறார்கள்.

**திரு. என். வி. என். சோமு:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களிடம், அவர்களால் நியமிக்கப்பட்ட போலீஸ் ஐ.ஜி.யின் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். அதைப் பார்த்து தெளிவடையட்டும்.

**திரு. து. புருஷோத்தமன்:** * * * * இதை மிகவும் வேதனையுடன் நீதிமன்றத்தில் அந்த அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார். இப்படிப்பட்ட காட்டுத்தனமான

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





செயலை, இந்த எண்ணம் யாருடைய மூளையிலிருந்து வந்திருக்கிறது! ஒரு முறை நடிகவேள் எம். ஆர். இராதா அவர்கள் சிறையிலிருந்து வெளியே வர ஒரு சில நாட்கள் இருக்கும்போது அவரை மீண்டும் சிறையில் வைக்க வேண்டுமென்பதற்காக * * * அந்த நேரத்தில் ஒரு பெரிய பிரமுகர் அந்த எண்ணத்தைச் சொன்னார்கள். அந்த வகையில் இன்றைய தினம் அந்த அதிகாரி கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால் நம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய மருமகன் முரசொலி செல்வம் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்களுக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் தெரியும், அவையில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் குடும்பத்தில், இருக்கிறவர்களில் சிறைக்கு, கைதாக பயப்படுகிறவர்கள் யாருமில்லை. போராட்டம் என்றால் அஞ்சி ஓடுகிற, பயந்து ஓடுகிற, பம்பாய்க்கோ, கோவாவிற்கோ செல்கிற அப்படிப்பட்ட கோழைகள் அந்தக் குடும்பத்தில் யாரும் இல்லை என்பது நாட்டு மக்களுக்கு நிச்சயமாகத் தெரியும். கைது செய்ய வேண்டுமென்றால் வீட்டில் கைது செய்திருக்கலாம். அலுவலகத்தில் கைது செய்திருக்கலாம். விமான நிலையத்திற்கு வழி அனுப்பச் செல்கிறவர்களை அதிகாலையில் உடுப்பணியாத குண்டர்கள், போலீஸ் உடையில் வராத அந்த குண்டர்கள், அவர்கள் யார் என்று சொல்ல முடியாத நிலையில் திடீரென்று ஆட்களை அப்படியே தூக்கி காரில் போட்டு கைது செய்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் குடும்பத்தில் உள்ள பெண்களை கிண்டலும், கேலியுமாக கேவலமாக நடத்தியிருக்கிறார்கள். ஒரு நடிகை வீட்டில் கல் எறிந்ததால், அதற்குப் பின்னால் இன்றையதினம்கூட மந்திரி வீட்டுக்கு இல்லாத அளவிற்கு போலீஸ் பந்தோபஸ்து செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த அரசாங்கம் இந்த பெண்களை இப்படி நடத்தலாமா, அது நியாயந்தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்களுடைய உதவியாளரை கைது செய்திருக்கிறார்கள் திடீரென்று, அதைபோல் வரிப்பணத்தை வீணடிக்கிற இந்த அரசாங்கம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட டைப்ரைட்டரை, தட்டெழுத்து இயந்திரத்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இது நியாயந்தானா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். குறிப்பாக நான் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் இன்றையதினம் எதிர்கட்சித் தலைவர் அவர்களை மனம் நோகச் செய்துவிட்டு, இதைப் பார்த்து இந்த மன்றத்தில் மகிழ்ச்சி அடையக்கூடிய நிலையை இன்றையதினம் இந்த அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது நடைபயணம் பற்றி கிண்டலும் கேலியுமாகப் பேசினார்கள். மறுநாள்தான் முதல் அமைச்சர் அவர்கள் நாங்களும் பாத யாத்திரை செய்து மக்களைச் சந்திப்போம் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் நடக்க வேண்டும் என்று சொன்னால் நீங்கள் ஓடவேண்டிய கட்டத்தில் இருக்கிறீர்கள்.

(பிற்பகல் 12–10)

இன்றைய தினம் தமிழகத்திலே உங்களுடைய கவர்ச்சி குறைந்துக் கொண்டு வருகிறது. எனவே, ப ஆண்டுகளுக்கு முன் நடந்த சினிமாப் படங்களை, தமிழகம் முழுவதும் காட்டிக் கொண்டு வருகிறீர்கள். அதன் மூலம் முதலமைச்சர் அவர்களுடைய கவர்ச்சியை இந்த நாட்டு மக்கள் மனதிலே தேக்கி வைக்க வேண்டுமென்று ஆளுங்கட்சிக்காரர்கள் செய்து வருகிறார்கள். நான் ஒன்றை இங்கே சவால்விட்டுக் கூற விரும்புகிறேன். ஆறு மாத காலத்திற்கு இந்தத் தமிழ் நாட்டில் முதலமைச்சர் அவர்கள் நடித்த படங்கள் காட்டப்படாமல் இருந்தால், நீங்கள் யார் என்று தெரியாமல் போய்விடும். இதனால், சினிமாப் படம் பார்க்கின்றவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. (குழப்பம்) இன்றைக்கு உங்களுடைய கவர்ச்சி மங்கிக் கொண்டு வருகிறது; மவுசு குறைந்துக் கொண்டு வருகிறது. ஆனால் நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதாகச் சொல்லுகிறீர்கள். .. .. ..

திரு மி. முசிறிப்புத்தன்: துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய தலைவர் அவர்கள் கூட தமிழ்நாட்டிலே வாலிப விருந்தைப் படைத்தார்கள். இன்றைக்கு அது ஓடவில்லை. ஆகவே, ஓடுகின்ற எங்கள் தலைவர் படங்களைக் கண்டு இவ்வளவு வயிற்றெரிச்சல் பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்: வயிற்றெரிச்சல் படவில்லை. சினிமாப் படங்கள் காட்டுவதைத் தவிர, உங்களிடம் என்ன கொள்கை இருக்கிறது! திட்டமிருக்கிறது! சினிமாப் படம் காட்டுவதைத் தவிர, வேறு ஏதாவது செய்திருக்கிறீர்களா! அதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் முதன் முதலாக புதுக்கோட்டை, வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகளில் ஏற்பட்டது. அந்த நேரத்திலே இந்த அரசு உடனே நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த நாடு முழுவதும் உள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல், கிராமங்களிலே உள்ள மக்கள், வேறு கிராமங்களுக்குச் சென்ற காட்சியை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆடு மாடுகளுக்கு வேண்டிய தீவனம் கிடைக்காமல், தண்ணீர் கிடைக்காமல் எந்த அளவுக்கு மாண்டு போயின! இந்த நாட்டிலே ஏற்பட்ட வறட்சியைப் போக்க, 13 மாவட்டங்களிலே கடந்த டிசம்பர் [illegible]





55 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி என்ன வறட்சிப் பணியைச் செய்தார்கள்? அந்த வறட்சிப் பணி வேலைகளை ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் செய்தார்கள்; அவர்களது உறவினர்கள் செய்யவில்லையா? என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படியிருந்தும், இன்றையதினம் குடிக்கத் தண்ணீர் இல்லை. இந்தப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இதை விட்டு விட்டு, 'தண்ணீர் தண்ணீர்' என்ற படத்தை பகிரங்கமாக தடை செய்ய முற்பட்டீர்கள். செய்ய முடிந்ததா? அந்தப் படத்துக்காரர் உங்களுக்குத் தண்ணீர் காட்டி விட்டார். இத்தகைய முயற்சிகளிலே தான் நீங்கள் ஈடுபட்டு வருகிறீர்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு. இன்றையதினம் மண்ணெண்ணை, பாமாலின் எண்ணை போன்றவைகள் எல்லாம் கிடைக்காமல் இருக்கிறது. மத்திய சர்க்கார் அனுப்புகின்ற இந்த எண்ணையை உரிய நேரத்திலே, காலத்திலே விநியோகம் செய்தீர்களா என்றால், இல்லை. இவைகள் நாட்டு மக்களுக்கு எளிதாகக் கிடைப்பதில்லை. ஆனால், அதிகப் பணம் கொடுத்தால், இவைகள் எல்லாம் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, வேண்டுமென்றே செய்யப்படும் செயற்கையான தட்டுப்பாட்டை, இந்த அரசும் அதிகாரிகள் போன்றவர்களும் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப் போல் .. .. ..

திரு. கோவைத்தம்பி: பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, 'தண்ணீர் தண்ணீர்' படத்தை அனைத்திந்திய அண்ணா தி.மு.க ஆட்சி தடை செய்ய முற்பட்டதாகச் சொன்னார். அதிலே வருகின்ற கருத்து, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. விற்கு உடன்பாடு இல்லை, அதைத் தடை செய்ய வேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் அதிலே வருகின்ற ஒரு கருத்து அதைச் சொல்ல விரும்புகிறேன். (குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

திரு. து. புருஷோத்தமன்: ஆண்டுக்கு ஆண்டு எண்ணை வித்துக்களின் உற்பத்தி குறைந்து கொண்டு வருகின்றது என்றும், அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எண்ணை வித்துக்களின் உற்பத்தியை உயர்த்த திட்டமிடப் பட்டுள்ளதென்றும், சமையல் எண்ணை உற்பத்தியைப் பெருக்க சிறந்த வகைத் தென்னங் கன்றுகளைப் பெரும் அளவில் உற்பத்தி செய்து, வழங்குவது [illegible] நடைபெற்றுக் கொண்டு வருகின்றது என்றும் [illegible] சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. து. புருஷோத்தமன்] [1982 பிப்ரவரி 9

சமையல் எண்ணெய் விலையைக் குறைக்க தென்னங்கன்றுகளை நட வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே சமையலுக்கு கடலை எண்ணெயும், நல்லெண்ணெயும் தான் உபயோகப்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் பக்கத்தில் இருக்கும் கேரள மாநிலத்தவர் பயன்படுத்துவது. தமிழகத்திலும் கேரள மக்களின் பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

இன்றையதினம் பல்வேறு இலாக்காக்களில் வேலைகள் சரியாக நடைபெறவில்லை. முறைகேடான காரியங்கள் நடைபெற்று வருகின்றன. வீட்டு வசதி வாரியத்தில் வீட்டு மனை ஒதுக்குவதில் எவ்வளவு முறைகேடுகள் நடைபெறுகின்றன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். லஞ்சங்கள் தாண்டவமாடுகின்றன. சைதாப்பேட்டையில் இருக்கும் அண்ணா தி.மு.க. அமைப்பாளருக்கு பல்வேறு இடங்களில் வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒதுக்கப்பட்ட அரசாங்க உத்தரவின் நகல் என்னிடத்தில் இருக்கிறது, கந்தசாமி, ஹவுசிங் செகரடரி' பெயரிட்டு அந்த உத்தரவைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அமைப்பாளரின் தந்தை பெயருக்கு ஒரு வீட்டை ஒதுக்கியிருக்கிறார்கள். அவருடைய அண்ணன் பெயருக்கு ஒரு வீட்டு மனை ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே நந்தனத்தில் 90 இ என்ற குடியிருப்பை ஒதுக்கியிருக்கிறார்கள். இதுதவிர நான்கு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பங்களாவை வீட்டு வசதி வாரியம் அவருக்கு வாடகைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு ஆளும் கட்சியைச் சார்ந்த அமைப்பாளர் என்ற காரணத்திற்காக ஏராளமான சலுகைகளை அளிக்கலாமா? அரசு ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு வீடு வாடகைக்கு கேட்டால் இல்லையென்று சொல்லிவிட்டு அண்ணா தி.மு.க, அமைப்பாளருக்கு ஏற்கனவே வீட்டு மனை ஒதுக்கப்பட்டவருக்கு கொடுக்கலாமா? ஏற்கனவே வீடோ, வீட்டு மனையோ இல்லாதவருக்குத்தான் வீடு ஒதுக்க வேண்டுமென்று விதி இருக்கும் போது அவருக்கு வீடு ஒதுக்கலாமா? அந்த வீட்டின் எண் 19, சி.ஐ.டி. நகர், உஸ்மான் ரோடு என்று இருக்கிறது. அந்த வீட்டை ரிப்பேர் செய்வதற்காக 25,000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். காம்பவுண்ட் வால் எல்லாம் போடப்படுகிறது. வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்படுகின்றன. இது முறை தானா? இப்படி வீட்டு வசதி வாரியத்தில் பல்வேறு ஊழல்கள். லாவண்யா என்ற நடிகைக்கு வீடு ஒதுக்கப்படுகிறது; சுவர்ணமுகி என்ற நடிகைக்கு ஒதுக்குகிறார்கள். நடிகர்களின் பெயரைச் சொன்னால் கோபப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கேவலமான முறைகேடுகள் இருக்கக் கூடாது என்று சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து பொதுவாக நாட்டிலே எதிர்க்கட்சிகள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஜனநாயக ரீதியில் ஈடுபடும்போது ஆளும் கட்சியினர் அதைத் தடை செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சிகளை மேற்கொள்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். குண்டர்களை முடுக்கிவிட்டு தடை செய்ய முயற்சிக்கிறார்கள். மதுரை அண்ணா தி.மு.க. தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகளில் இலவசமாகச் சென்று வர அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு கலவரம் செய்யும் நோக்கத்துடன் தகுந்த ஆயுதங்களோடு இலவசமாகச் செல்ல அரசு அனுமதிக்கிறது. சொக்கன், பி. தங்கதுரை, ஏ. பாலகிருஷ்ணன், எம். ஆர். கருப்பையா ஆகிய நான்கு பேரும் மதுரையிலிருந்து பழனி செல்ல இலவசமாக அனுமதிக்கப்படலாம் என்று கோட்ட மேலாளர் டி. கிருஷ்ணன் என்பவர் கையெழுத்திட்டு அனுமதிச் சீட்டு வழங்கியிருக்கிறார். அதன் போட்டோஸ்டட் காப்பியை நான் வைத்திருக்கிறேன்.



1982 பிப்ரவரி 9] [திரு. து. புருஷோத்தமன்]

(பிற்பகல் 12-20)

பாலகிருஷ்ணன் என்பவர் அண்ணா திராவிட முன்னேற்றச் சங்கத்தினுடைய பொதுச் செயலாளர். தங்கத்துரை, கருப்பையா ஆகியோர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சும்மா செல்லவில்லை. சோடா பாட்டில், சைக்கிள் செயின் போன்றவற்றை எடுத்துச் சென்று மறியலைத் தடை செய்ய வேண்டுமென்று அராஜகம் செய்யச் சென்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஜனநாயகத்திலே எதிர்க்கட்சி போராட்டத்தை அடக்குகின்ற தன்மை சரிதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே சாராய வாடை இல்லாத இடம் எதுவுமே இல்லை. நல்ல வேளை, இந்த அறிக்கையை நான் முகர்ந்து முகர்ந்து பார்த்தேன். சாராய வாடை இல்லை. இந்த அறிக்கையிலே எந்த இடத்திலேயும் சாராயம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. கள்ளச் சாராயத்திற்கும் அரசு சாராயத்திற்கும் வித்தியாசம் தெரியாத நிலைமையில் இன்றைக்கு போட்டி ஏற்பட்டிருக்கிறது. கள்ளச் சாராயம் அந்த அளவிற்கு இருக்கிறது. அதைத் தடுக்க முடியாத நிலையில் இந்த சர்க்கார் ஆண்டு கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கின்ற பல முறைகளைச் செய்வதாக நம்முடைய முதலமைச்சர் அங்கே சொன்னார்கள். ஆனால் ஈடுபட்டவர்கள் யார் என்று அவருக்குத் தெரிந்ததற்குப் பின்னாலேயே அப்படித் தடுக்கின்ற முயற்சியிலே அவர் ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு புகார்களை, ஊழல்களைக் கொண்ட அரசு தான் இது. இதைப்பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே எதுவுமே சொல்லப்படவில்லை. பொதுவாக ஆளுநர் உரையிலே செய்த சாதனைபற்றிச்சொல்ல வேண்டும். செய்யப் போகின்ற திட்டங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். இதிலே ஒன்றும் இல்லை என்று சொல்லி [illegible] நன்றி சொல்லி முடிக்கிறேன்.

திரு எஸ். அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுநர் உரையின்மீது நன்றி கூறுகின்ற வாய்ப்புக்காக நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அன்புக்குரிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. புருஷோத்தமன் அவர்கள் இங்கே பேசும்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பழைய படங்களை 6 மாதங்கள் நிறுத்திவிட்டால் ' மாஸ் ' குறைந்துவிடும் என்று சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். படத்தை மட்டுமல்ல, உங்கள் கணக்குப் பிரகாரம் எங்களுடைய முதல்வரை இந்த மாநிலத்தை விட்டு அல்லது இந்தியாவை விட்டு வேறு நாடுகளிலே அவரை உட்கார வைத்துக் கொண்டு அரசியல் நடத்த விரும்பினால் கூட அவருடைய கருத்துக்களை சுமந்து வருகின்ற வானொலி மூலமாக அல்லது பத்திரிகைகள் வாயிலாக கருத்துக்கள் வருமானால் நீங்கள் இரவு பகலாக பாடுபட்டாலும் தமிழக மக்களிடத்திலே இருக்கின்ற நம்பிக்கையைச் சிறிதும் அசைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் எண்ணுகின்ற அளவுக்கு ஏதோ ஒரு நடிகனாக இருந்து நாட்டை ஆள வந்துவிட்டதாக நீங்கள் சொல்வீர்களானால் இன்னும் அரசியல் தெளிவை நீங்கள் பெறவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. தெளிவாக நீங்கள் அரசியல் தெளிவு பெற்றிருப்பீர்களானால் இருவரும் ஒன்றாக இருந்தபோது அண்ணா அவர்கள் காலத்திலே எம்.ஜி. ஆருக்கு ஒரு பதவியும் தராத கழகம் அண்ணா மறைந்ததற்குப் பிறகு கலைஞர் அவர்கள் இந்த மாநிலத்தினுடைய பொருளாளர் பதவியை அவருக்குத் தந்தார். அப்போது அவர் நடிகராக உங்களுக்குத் தெரியவில்லையா ? அவரை வைத்து தான் கழகம் வளர்ந்தது என்பதை நீங்கள் உணர மறுப்பீர்களானால் உங்கள் எண்ணத்திலே அரசியல் தெளிவு பெறவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறதே தவிர நீங்கள் தெளிவுபெற்றவர்கள் என்பதைக் காட்டவில்லை.

அடுத்ததாக அவர் குண்டடிப்பட்டு மரணத் தருவாயில் இருந்த போது நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் அவரை வற்புறுத்தி எழுப்பி உட்கார வைத்து போட்டோ எடுத்து வால்போஸ்டர்களாக தமிழக மக்களிடம் காட்டி ஓட்டு வாங்கிய நிலையைப் பெற்றவர்கள் என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிடுவார்கள் என்கிறபோது எங்களைப் போன்ற அடித்தளத்திலிருந்து அண்ணா வழி வந்தவர்கள் உண்மையாகவே வேதனைப்படுகிறோம். நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், அதை எடுத்துச் சொல்வதிலே தவறு இருக்காது. அரசியல் விழிப்புண[illegible] பெற்றவர்களாக இருந்தால் ஆட்சி நடத்துகின்ற [illegible] சட்டத்திலே, திட்டத்திலே செயல்படுகின்ற மு[illegible] தவறுகள் இருந்து சொன்னால் வரவேற்கிறோம்.



இருக்குமானால் திருத்திக்கொள்ள முற்படுகிறோம். அதை விட்டு விட்டு பேசியது பத்திரிகைகளிலே வரவேண்டுமென்பதற்காக தூய்மை உள்ளம் படைத்தவனை, நல்ல உள்ளம் படைத்தவனை, நாடு செம்மையாகவேண்டுமென்று தன்னை அர்ப்பணித்து இரவும் பகலும் பாடுபடுகின்றவனை இழிவாக பேசினால் சரியாக இருக்காது. நடிகன் மேல் கல்லெறிந்தவுடனே தலைவர் மேல் அது போகவில்லையா ? உங்களுக்கு எல்லாம் இல்லாத பாசம் எம்.ஜி. ஆருக்கு கலைஞர் மேல் இருக்கிறது. கலைஞர் குடும்பத்தின்மேல் இருக்கிறது. ஆனால் கலைஞருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு வாழவேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் பாசம் அது. உண்மையாகவே எதிர்க்கட்சித் தலைவர் மீது பாசம் வைத்திருக்கின்றவர் என்று சொன்னால் அது எம்.ஜி.ஆர். அவர்கள்தானே தவிர, உங்களுக்கு உண்மையிலேயே அந்தப் பாசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அருமை நண்பர்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்கிறேன், இங்கே பேச வேண்டுமென்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டு குறை சொல்லிக் கொண்டிருப்பது என்பது அவ்வளவு சரியாக இல்லை என்பதைக் கூறிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

## 3. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 10—2—1982 (புதன்) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். தொடர்ச்சியும், பதிலுரையும். |
| [illegible]—1982 (வியாழன்) மற்றும் [illegible]—1982 (வெள்ளி) | நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி, 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் அன்று பேரவையில் வைக்கப் பெற்ற அறிக்கைமீது விவாதம். |

13—2—1982 (சனி).. திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் அன்று பேரவை முன் வைக்கப் பெற்ற அறிக்கை மீது விவாதம்.

14—2—1982 (ஞாயிறு). .. விடுமுறை.

15—2—1982 (திங்கள்)
16—2—1982 (செவ்வாய்)
மற்றும்
17—2—1982 (புதன்). } அரசினர் சட்ட முன்வடிவுகள்.

18—2—1982 (வியாழன்)
மற்றும்
19—2—1982 (வெள்ளி). } தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீதும் விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

2. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்— (தொடர்ச்சி.)

—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரையின்மீது எனக்குப் பேச வாய்ப் பளித்தமைக்காக என்னுடைய நன்றியைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கவர்னர் உரையிலே பாரதியார் விழா [illegible] கொண்டாடியதைப் பற்றியெல்லாம் மிகச் சிறப்பாக [illegible] யிருக்கிறார்கள். விழா எடுத்ததற்காகத் தமிழக அர[illegible] சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1982 பிப்ரவரி 9] [திரு. எஸ். சிவராமன்]

விவசாயக் கூலிகளாக இருப்பவர்களுக்குக் கூலியை உயர்த்த வேண்டும், நியாயமான அடிப்படையில் அவர்களுக்குக் கூலி கிடைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விவசாயக் கூலியைப் பார்க்கும் பொழுது, அதற்காகத் தாலுக்கா அளவிலே உயர் மட்டக் குழுவை ஏற்படுத்தி, அதில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சேர்ந்து அதன் மூலமாக நியாயமான கூலி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் விவசாயக் கூலிகளுக்கு நியாயமான கூலி கிடைக்க வழி ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தில் பல நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், எங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தில் பள்ளிக்கூடங்களைக் கட்டும் பொழுது அவைகளை ஆர். சி. ரூஃப் ஆகப் போட வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஆனால் தற்சமயம் அவை மாற்றப்பட்டு சிமெண்ட் அட்டை போட்டு ஒவ்வொரு பள்ளிக்கூடமாகக் கட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆர்.சி. ரூஃப் போட வேண்டுமென்பது அரசு எடுத்த முடிவு. ஆனால் இப்பொழுது ஏ.சி. ரூஃப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால், அந்தப் பள்ளியின் மாணவர்களுக்குக் கஷ்டமான சூழ்நிலைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆங்காங்கே இருக்கின்ற கிராமவாசிகள் தங்கள் எதிர்ப்பை அதிகாரிகளிடத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அதை மாற்றியமைக்க வேண்டுமென்று ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து கொண்டே போகின்றன. குறிப்பாக இளைஞர் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்திய நேரத்தில் அவர்களை அடிப்பதுதான் முறையாக நடந்து கொண்டிருக்கிறது. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்றால், நியாயமான முறையிலே பொருள்களைக் கொடுக்கிறோம், விலைகளைக் குறையுங்கள் என்று முதலாளிகளிடத்தில் சொல்ல வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு 56 பைசாவிற்குக் காபி விற்கப்படுகிறது. என்றால் மறுநாள் சாப்பிடும்பொழுது அது 60 பைசாவாக ஆகிவிடுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு மாநில அரசின் முயற்சியால் முடியு

வில்லை. ஆகவே இருக்கின்ற ஹோட்டல் முதலாளிகளை அழைத்து சுமுகமாகப் பேசி ஏறுகின்ற விலையைக் கட்டுப்படுத்த அரசு முன்வரவில்லை என்றால் அது இந்த அரசினுடைய நிர்வாக இயந்திரம் எந்த அளவிற்கு மிகவும் மோசமடைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காவிரிநீர்ப் பிரச்சினையைப்பற்றி எடுத்துக் கொண்டால், தண்ணீர்ப் பிரச்சினைக்காக மற்ற மாநில அரசுகளோடும், மத்திய அரசோடும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எங்கள் அமைப்பைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், அவர்கள் எத்தனை அணைகளைக் கட்டினாலும் நியாய மாக வரவேண்டிய தண்ணீர் ஆற்றில் எவ்வளவு மேல் ஊற்றுக்கள் வருகின்றனவோ அவற்றைக் கீழே விடவேண்டும். அதற்கு எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணா நதி திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையாவது உடனடியாகப் பரிசீலனை செய்து தண்ணீர் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 12-30).

அடுத்தது, இங்கே தொழில் துறையைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். தொழில் துறையில் நாங்கள் எவ்வளவோ மாறுதல்கள் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலையைப் பற்றி, கடந்த 1967க்கு முன்னாலே ஆட்சி புரிந்த காங்கிரஸ் கட்சி, அதற்கு ஆயத்தம் எடுத்துக் கொண்டது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் இரும்பாலை கொடுக்க வேண்டுமென்று எழுச்சி நாள் கொண்டாடினார்கள். ஆனால், இன்றைய தினம் இரும்பாலை பற்றி தமிழக அரசும் மாநில அரசும் இங்கே உள்ள அமைச்சர் பெருமக்களும் மத்திய அரசை அணுகி எந்த விதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வில்லை. இவர்கள், தொழில்களைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எந்தத் தொழிலைப் பெருக்குவார்கள் என்று தெரியவில்லை. சேலம் இரும்பாலை என்று சொன்னால், வெளியிலே இருந்து தகடுகளை வாங்கிக் கொண்டு வந்து எவர்சில்வர் பாத்திரங்களைத்தான் தயாரிக்கும் தொழிற்சாலையாக அது இருந்து கொண்டிருக்கிறது. நெய்வேலியிலே இருக்கிற நிலக்கரியையும், சேலத்திலே இருக்கிற இரும்புத் தாதுவையும் பயன்படுத்தி இரும்பாலை வைக்க, முயற்சி நடைபெறுகிறதா என்றால் இல்லை. அதைத் தமிழக அரசு, மத்திய அரசை வற்புறுத்தி அங்கே இரும்புத் தொழிற்சாலை உருவாக்க முன் வர வேண்டும். அதை விட்டு விட்டு, ஏதோ நாங்கள் மத்திய அரசைக் கேட்

றோம், அவர்கள் கொடுக்க வில்லையென்று குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல, ஆகவே, அந்த விதத்தில் தமிழகஅரசு சொல்லப்படுகின்ற கருத்துக்களுக்கு செவி சாய்க்காமல், கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறது. ஆகவே, இரும்பு தொழிற்சாலை உருவாக்க, தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின் இலாகாவில், தலத்திலேயே பில் போடுவது என்று சொல்லி, அங்கே ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் அந்தத் திட்டத்தின் மூலமாக, இதற்கு முன்பு அங்கே வேலை செய்த 4,600 காஷியர்களும், 4.000 கணக்காயர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை வழைப்பளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, கூட்டுறவு ஆலை என்ற பெயரில் நடந்தாலும், அங்கே இருக்ககூடிய சி.சி.ஓ. அதிகாரி தன்னிச்சையாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய சி.சி.ஒ. தான் தலைமைக் கரும்பாளர். அவர் பி.எஸ்.சி. படித்தவர். அவர் அங்கு 3 ஆண்டுகள் வேலையிலிருந்தார். தற்போது, சர்க்கரை ஆலைச் செலவிலே. எம்.எஸ்.ஸி. படிக்கச் சென்றிருக்கிறார். அங்கே இருக்கிற ஏ.சி.ஓ. வையும் மற்ற அதிகாரிகளையும் விட்டுவிட்டு அவர்கள் ஒன்றும் தரம் குறைவாக இல்லை ; ஆகவே, அங்கே இருக்கக்கூடியவர்களுக்கே பதவி கெடைுக்கலாம் ; அப்படிச் செய்யாமல், இந்த சி.சி. ஓ. என்ற அதிகாரியை, எம்.எஸ்.ஸி. படிப்பதற்காக, இரண்டு ஆண்டுகளுக்கு அவருக்குச் சம்பளம் மற்றும் பயணப்படி, முழு அலவன்ஸைக் கொடுத்து, மெடிக்கல் அலவன்ஸ்கூட கொடுத்து, அவரை அனுப்பியிருக்கிறார்கள், சர்க்கரை ஆலையினர் கேட்டால், அவர் திரும்பவும் சர்க்கரை ஆலையில் வேலையில் சேருவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு, அவர் வேலையில் அமரும்போது, அவருக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை எற்படுகின்றது. அதனால், சர்க்கரை ஆலை மீண்டும் நஷ்டத்திலே ஓட ஏதுவாக இருக்கும். அதைக் சண்காணித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் குடிநீர் பிரச்னை நீண்ட நெடுநாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அப்பகுதிக்காக, மணிமுத்தாறிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, ஒரு திட்டத்தைப் போட்டார்கள். அது இப்பொழுது செயல்படாததாக இருந்து கொண்டிருக்கிறது. அதை நிறுத்தி விட்டதாகச் சொல்லி கொண்டிருக்கிறார்கள். கள்ளக்குறிச்சி நகரசபையும் அளவிலே இருக்கிறது. அந்நிலையில், அங்கே [illegible] [illegible] கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கி[illegible]

இப்பொழுதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களது குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க, கள்ளக்குறிச்சி, சின்ன சேலத்திற்கென்று ஒரு ஸ்கீம் போடப்பட்டது. மீண்டும் அதை வலியுறுத்தி அப்பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும் மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்தவர்கள். காங்கிரஸ் கட்சியைப் பார்த்து, சொந்தக் காலில் நிற்கிறீர்களா என்றும் மைய அரசைப் பார்த்து குறையும் சொன்னார்கள். அவர்கள் மைய அரசின் ஆட்சியிலே நிர்வாகம் சரியில்லையென்று சொன்னார்கள். ஆனால் அவர்கள்தான் கேரளாவிலே முன்னால் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள். அங்கே ஊழல் நடைபெற வில்லையா? அங்கே மருத்துவக் கல்லூரியிலே அனுமதிப்பதற்கு ஜீரோ மார்க் வாங்கியவர்களுக்கு பாஸ் போட்டிருக்கிறார்கள். கோர்ட்டுக்குச் சென்ற பிறகு அவற்றை ரத்து செய்துவிட்டு மீண்டும் எம்.பி.பி.எஸ். தேர்வை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே மத்திய அரசை வேண்டுமென்றே குறை சொல்வதுசரியல்ல என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 10—2—1982 ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்
எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*19. பொது நூலகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஏழாவது சட்ட மன்றப் பேரவை).

*20. பொதுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற விருந்தினர் இல்லங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை).

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1982 பிப்ரவரி 10.

தை 28, துன்மதி திருவள்ளுவர், 2013

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்கடை ''.

அவரவருடைய பண்புகளை ஆராய்ந்து அறிந்து, அவற்றிற்கு ஏற்ற முறையில், அவர்களுக்கு ஒரு நன்மையைச் செய்யாவிட்டால் நாம் செய்யும் நன்மையால் அவர்களுக்குத் தீமையே உண்டாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்படும் பாம் ஆயில்.

*வினா எண். 121—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாம் ஆயில் ரேஷன் கார்டுகளுக்கு வாரத்தில் ஒரு நாள் மட்டும் விநியோகம் செய்யப்படுவதற்குப் பதிலாக மாதம் 30 நாட்களிலும் எப்போது வேண்டுமானாலும் வாங்க ஏதுவாக விநியோக முறையை மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் பாமோலின் எண்ணெய்யைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. இந்த எண்ணெய்யை மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து மாநில அரசுகளுக்கு மாதந்தோறும் ஒதுக்கீடு செய்கிறது. இப்பொழுது தமிழ்நாட்டிற்கு ஒரு மாதத்திற்கு செய்யப்படும். ஒதுக்கீடு 2,547 டன்கள். இவை போதுமானதாக இல்லை. மத்திய அரசை இந்த சமையல் எண்ணெய்யை அதிக அளவில் ஒதுக்கீடு செய்யக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிக அளவு ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மாதத்தில் அதிக நாட்களிலும் இந்த சமையல் எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றுக்கு 2,547 டன்கள்தான் பாமாலின் ஆயில் வருகிறது என்றும், அதிகமாகக் கிடைத்தால் மாதம் 30 நாட்களுக்கும் வினியோகம் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இந்த பாமாலின் ஆயில் இந்த நாளில்தான் விநியோகம் செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அது எங்கு இருந்தாலும், நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, தெரிவதில்லை. ஏதோ ஒரு நாளில் வினியோகம் செய்கிறார்கள். அதனால் முந்தியவர்களுக்கு உடனே கிடைத்து விடுகிறது. மற்றவர்களுக்கு கிடைக்கவில்லை. 1,000 கார்டுகள் இருந்தால் 400, 500 பேர்களுக்குத்தான் கிடைக்கும் நிலை இருக்கிறது. அதே மாதிரி அடுத்த மாதம் போடும்போதும் அதே 400, 500 பேர்கள்தான் வாங்குகிறார்கள். ஆகவே, இதை முறைப்படுத்தி, ஏற்கெனவே வாங்கியவர்கள் மீண்டும் வாங்காமல் இருப்பதற்கும், இதுவரை வாங்காதவர்கள் வாங்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தவும், இந்த வினியோக முறையை சீர்படுத்தி முறையாக வினியோகிக்க அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்க யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் மாதத்திற்கு ஒரு கிலோதான் தருகின்ற நிலையிலே இருக்கின்றது. அதுகூட எல்லா கார்டுதாரர்களுக்கும் போதாது. ஒருகோடியே 9 இலட்சம் கார்டுகளுக்கு ஒரு கிலோ என்று வைத்துக் கொண்டாலும், நமக்கு 10,900 டன்கள் தேவைப்படுகிறது. ஆகவேதான் 2,547 டன்களை அந்தந்த இடங்களிலே இருக்கின்ற கார்டுகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் பகிர்ந்து தருகிறோம். எப்போது வருகிறது என்று திட்டவட்டமாகத் தெரியாத காரணத்தால், வந்து சேருகிற நாளில் கொடுக்கிறார்கள். முதலிலே யார் யார் வாங்குகின்றார்களோ, அவர்கள் வாங்கிக் கொண்டு போனதற்குப் பின்னால் பற்றாககுறை ஏற்படுகின்றது. பின்னலே வருகின்றவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல முதல் மாதம் வாங்குபவர்கள் அடுத்த மாதம் வாங்காமலும், வாங்காத மற்ற கார்டுதாரர்களுக்கு கிடைக்கின்ற வகையிலும் வினியோகம் செய்ய யோசிக்கலாம். எனினும், எல்லா கார்டுதாரர்களுக்கும் வினியோகம் செய்ய இயலாத காரணத்தினாலும், 2, 3 நாளிலே வந்து சேருகிற உடன் முதலிலே வந்தவர்கள் வாங்கிக் கொண்டு போகிற காரணத்தினாலும், 10 ஆயிரம் டன்னாவது ஒதுக்க வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு கடுமையான [illegible] வதற்கு நன்றி. இருந்தாலும், இப்போது புதிதாகக் கார்டுகள் கொடுக்கப்படாததன் காரணமாக, பல பேர்கள் [illegible]

1982 பிப்ரவரி 10]

வாங்க நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு ரேஷன் கார்டுகளை சீக்கிரமாகக் கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 மாதங்களில் புதிதாகக் கார்டுகள் வழங்கும் நிலைமை இருக்கின்றது. அதற்கு இடையிலே தற்காலிகமாக வழங்கலாம் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, போதிய அளவுக்கு சப்ளை இல்லை என்ற காரணத்தால் அனைத்துக் கார்டுகளுக்கும் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். இந்த பாமாலின் ஆயில் வாங்குவதற்காக விடியற்காலை 4 மணிக்கே சென்று அங்கே படுத்துவிடுகிறார்கள். அவர்கள் வாங்கி விடுகிறார்கள். அப்படி முன்னாலே வந்து அன்று வாங்க முடியாதவர்களுக்கு, அவர்கள் மீண்டும் 4, 5 மணிக்கு வந்து படுத்துக் கொள்வதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு ஒரு டோக்கன் கொடுக்கும் சிஸ்டத்தை அடாப்ட் செய்து கொடுத்தால், அடுத்த நாள் அவர்கள் அந்த டோக்கனைக் காட்டினால் அவர்களுக்கு எண்ணை கிடைக்கும் என்ற நிலை ஏற்படும். அந்த முறையை அரசு கையாளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் ஒரு கிலோ 8.25-க்கு விற்கப்படுவதன் காரணமாகவும், மற்ற ஆயில் ரூபாய் 14, 15 17-க்கு விற்கப்படுவதன் காரணமாகவும், இதற்கு அதிக கிராக்கி இருக்கிறது. அதற்கேற்ப நமக்குக் கிடைக்குமானால், எல்லா கார்டுகளுக்கும் குறைந்த அளவு ஒரு கிலோ தர முடியும். டோக்கன் சிஸ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மிகவும் நல்ல யோசனை. யார் யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு அடுத்த நாளில் கிடைக்கும். அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு அன்றாடம் உபயோகிக்கும் பொருளாக இருக்கும் பாமாலின் எண்ணெய் தமிழகத்தில் கிராமத்தில் இருக்கும் ரேஷன் கார்டு இல்லாத ஏழை எளியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. இப்படிப்பட்ட அத்தியாவசியப் பொருளான அந்த எண்ணெய் வாரத்தில் ஒரு நாளோ அல்லது மாதத்தில் ஒரு நாளோ கார்டு இல்லாத ஏழை மக்களுக்கும் வினியோகிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கார்டு வைத்து இருப்பவர்களுக்கே கொடுக்க இயலவில்லை என்று சொல்கிறபோது, அது இல்லாதவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பது இயலாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 பிப்ரவரி 10

### பிற்பட்டோர் பட்டியல் குறித்த சட்டநாதன் குழுவின் பரிந்துரை.

*வினா எண். 122—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ல் தமிழக அரசு நியமித்த சட்டநாதன் கமிஷன் அறிக்கையில் பிற்பட்டோர் பட்டியலில் 9 முன்னேறிய சமூகங்கள் இடம் பெற்றுள்ளதை நீக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அப்பரிந்துரையின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) தமிழக அரசால் நியமிக்கப்பட்டு, திரு. சட்டநாதன் அவர்களது தலைமையின் கீழ் இயங்கிய தமிழக மாநில பிற்பட்டோர் நலக் குழு தனது அறிக்கையில் பிற்பட்டோர் பட்டியலிலுள்ள வகுப்புகளில் சில வகுப்புகளில் தங்களது உயர்வான நிலையின் காரணமாக, அரசு அளித்த சலுகைகளைப் பெருமளவிற்குப் பெற்று முன்னேறியுள்ளன என்றும், இதன் காரணமாக, முன்னேற்றமடையாத ஏனைய வகுப்புகள் மேற்சொன்ன முன்னேற்றம் அடைந்த வகுப்புகளுடன் இணையாக போட்டியிட முடியவில்லை என்றும், இந்த முறை கேட்டினைச் சரிசெய்ய அரசு துரித நடவடிக்கை எடுத்து, முன்னேற்றமடையாத இதர பிற்பட்ட வகுப்பினரைப் பாதுகாக்க வேண்டும் எனவும், பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) பிற்பட்டோர் நலக்குழு, அங்ஙனம், முன்னேற்றமடைந்த வகுப்புகளில் பெயர்களைக் குறிப்பாகக் குறிப்பிடாமல் போனமையால், அரசு அவர்களது பரிந்துரையின் மேல் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க இயலாமல் போய்விட்டது.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டநாதன் கமிஷன் அறிக்கையிலே பிற்பட்டோர் நலப் பட்டியலில் 9 முன்னேறியச் சமூகங்கள் இடம் பெற்று இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த முன்னேறிய வகுப்பினர் யார் யார் என்பது அந்தக் கமிஷன் அறிக்கையிலே சொல்லாவிட்டாலும், அரசுக்கு அந்த வகுப்பினர் யார் யார் என்பது தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் கமிஷன் அறிக்கையிலே 177 வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. அதிலே 10-15 வகுப்பினர் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்று குறிப்பிட்டு இருந்தால்



1982 பிப்ரவரி 10]

அது பற்றி நாமும் யோசித்து இருக்கலாம். அப்படி யோசித்து இருந்தாலும் அதை நடைமுறைப்படுத்த இயலுமா என்பதையும் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. புதிதாகப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்களே தவிர ஏற்கனவே சேர்த்து இருப்பவர்களை அந்தப் பட்டியலில் இருந்து எடுத்துவிட எளிதாக இயலுமா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். இருந்தாலும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்ற அடிப்படையில் பிற்பட்டோர் வகுப்பில் உள்ளவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். பிற்பட்டோருக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலேயே மிகவும் பிற்பட்டோருக்கு என்று ஒதுக்கலாமா என்று அரசியல் கட்சித் தலைவர்களோடு கலந்துபேசி, ஒரு முடிவுஎடுக்க வேண்டும் என்று யோசனை இருக்கிறது. காரணம் அரசு அளித்து வரும் சலுகைகள் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்குப் போய்ச் சேராமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்குப் போய்ச் சேரும் வகையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னேறிய வகுப்பினர் பின் தங்கியோர் பட்டியலில் இடம் பெற்றுவிட்டதால், பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய வகுப்பாக உள்ள வன்னியர்களுக்கு வேலை வாய்ப்பு, இடஒதுக்கீடு ஆகியவற்றில் சரியான வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே அப்படிப்பட்ட நிலையை நீக்க வேண்டுமானால், வன்னியரை மோஸ்ட் பேக்வார்ட் என்ற பட்டியலில் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 177 பிற்பட்ட வகுப்பினர் உள்ள அந்தப் பட்டியலில் 39 வகுப்பினர் மோஸ்ட் பேக்வார்ட் என்று பிரித்து வைத்து இருக்கிறார்கள். அப்படி பிரித்து வைத்து இருந்தாலும், வேலைவாய்ப்பு, கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வதில் பேக்வார்ட், மோஸ்ட் பேக்வார்ட் என்கிற பாகுபாடு பார்ப்பது இல்லை. சிலபல சலுகைகளை அரசு தருகின்ற நேரத்தில்தான் இந்த 'மோஸ்ட் பேக்வார்ட்' என்கிற அடிப்படையில் தரப்படுகின்றது. வன்னியரைப் பொறுத்தவரையில் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் எடுத்துச் சொல்லலாம்.

[முற்பகல் 9-10]

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, சுதந்திரம் பெற்றதே சுபிட்சம் அடைவதற்காகத்தான். ஆனால் சுதந்திரம் அடைந்த பின்னால் வசதி படைத்தவர்கள் வலியர்களாகி விட்டார்களா அந்த நிலைக்கு காரணமானவர் யார்? அப்படி முன்னேறிய வகுப்பினரை பிற்பட்ட பட்டியலில் சேர்த்தவர் யார்? அதனால் எத்தனை பேர் பயன் பெற்றார்கள் என்ற விவரங்களைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விவரம் அளிக்கவும் இயலாது. அந்த முயற்சியும் தேவையில்லை. ஆனால் இருக்கின்ற நிலையை எப்படி சீர்படுத்துவது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை சொன்னால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, மிகவும் பிற்பட்டோர் என்று ஒரு பிரிவு ஏற்கனவே இருந்து, தற்போது நீக்கப்பட்டதாக அறியப்படுகிறது. அது உண்மையா? ஆம் எனில் அதற்கான காரணத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி ஒன்று இருந்து, அது நீக்கப்படவில்லை. மிகவும் பிற்பட்டோர் என்று 39 வகுப்பினர் இருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் போயர் வகுப்பினர், மீனவர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் போன்றவர்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு தனியாக சில சலுகைகளை அளித்து வருகிறது.

திரு. என். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, சட்டநாதன் அவர்கள் அளித்த அந்த அறிக்கையிலே 177 வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்றும் அவர்களிலே 39 வகுப்பினர் மிகவும் பிற்பட்டோர் வகுப்பினர் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த மிகவும் பிற்பட்ட வகுப்பில் குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். மிகவும் பிற்பட்டோர் பட்டியலைச் சேர்ந்த குற்ற பரம்பரையினருக்கு இட ஒதுக்கீடுகளில் தனியாகப் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, குற்றப் பரம்பரையினருக்கு, அவர்கள் தனியாக வைக்கப்பட்டு, தனியாகச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய முழு விவரமும் அளிக்கப்படும்.



## மாவட்டங்களைப் பிரித்தமைப்பது குறித்த வர்கீஸ் கமிட்டியின் பரிந்துரைகள்.

*வினா எண். 123— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களைப் பிரிப்பது சம்பந்தமாக வர்கீஸ் கமிட்டியின் பரிந்துரை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பெரிய மாவட்டங்களை நிர்வாக வசதிக்காக பிரிக்க வேண்டுமென்று டி. ஏ. வர்கீஸ் கமிட்டி சொல்லியிருக்கிறது. அப்படி பிரிக்கிறபோது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தொடரும் செலவு 37 இலட்சம் ரூபாயும் தொடராச் செலவு 367 இலட்சம் ரூபாயும் ஆகிறது. இதைக் கணக்கில் கொண்டு, நிதி வசதிக்கு ஏற்பத்தான் அவருடைய பரிந்துரையை செயல்படுத்த முடியும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டு அரசுக்கு சமர்ப்பித்த வர்கீஸ் கமிட்டி தன்னுடைய பரிந்துரையில் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகளில் ஆறு மாவட்டங்களையாவது உருவாக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். எப்போது அந்த மாவட்டங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்? மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதியையும், திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியையும் இணைத்து திண்டுக்கல்லை தனி மாவட்டமாக அமைக்க வேண்டும் என்று அரசுக்கு அந்தக் குழு அறிவித்திருக்கிறதா? அதை விரைவில் செயல்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது. அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் கமிட்டி மேலிடத்திலே செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறதே தவிர, கீழ் இடங்களிலே என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் வருவாய் சரகம் (ரெவின்யூ பிர்க்கா) தான் வருவாய்த் துறையில் அடிமட்டத்தில் இருக்கிற அலுவலகம். அதைப் பிரிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. ஆனால், இந்த அரசு 774 வருவாய் சரகங்களை இன்றைக்கு 1,097 ஆக உயர்த்தி, இதுவரை 200-க்கு மேற்பட்ட வருவாய் சரக அலுவலகங்களுக்கு உடனடியாக அலுவலகக் கட்டடங்களும் கட்டிக்கொடுத்து, வருவாய்த்துறையில் சீர்திருத்தம் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, மாவட்டங்களைப் பிரிப்பதிலே ஏற்படுகின்ற செலவைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு ஏற்பட்ட பிறகு மாவட்ட நீதிமன்றம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகு, திண்டுகல்லை தலைமையிடமாகக் கொண்டு, அது ஒரு தனி மாவட்டம் ஆகும் அந்தஸ்த்தைப் பெறும் நிலையில் இருக்கிறது. ஆகவே, அதைத் தனியாகப் பிரிப்பதனால் செலவும் குறைவாகத்தான் ஆகும். எனவே, மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க முன்னுரிமை அளிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து எது பிரிக்கப்படும் என்பதை நான் சொல்ல முடியாது. அது பற்றி அமைச்சரவைதான் முடிவு செய்ய வேண்டும், முதலமைச்சர்தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால், மதுரை மாவட்டத்தைப் பிரிப்பது முன்னுரிமையிலே வரும் என்பதை மட்டும் என்னாலே இப்போது சொல்ல முடியும்,

**திரு. ரா. உமாநாத் :** தலைவரவர்களே, அட்மினிஸ்ட்ரேட்டிவ்லி பிரிக்கப்பட்ட சில மாவட்டங்கள் இருக்கின்றன. நிதித்துறையிலும், கல்வித்துறையிலேயும், போலீஸ் துறையிலும் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டம் கூட மேற்குத் தஞ்சை, கிழக்குத் தஞ்சை என்று ஏற்கெனவே அட்மினிஸ்ட்ரேட்டிவாக பிரிக்கப்பட்டுவிட்டது. அதற்குரிய கணக்குகளைத் தனித்தனியாகப் போட வேண்டியதுதான் பாக்கி. ஆகவே அப்படிப்பட்ட விஷயங்களில் கலெக்டரை நியமித்து அங்கெல்லாம் ரெகுலரைஸ் பண்ண வேண்டியதுதானே, ஏன் அப்படிச் செய்யவில்லை என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, கலெக்டர் மட்டும் போட்டால் போதும் என்ற நிலைமை இல்லை. மற்ற நிர்வாகச் செலவுகளும் இருக்கின்றன என்பதை நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டால் என்னைப் பொறுத்த வரையில் நிர்வாகத்திலே கீழே இருக்கின்றவர்களை முதலிலே பிரிக்கவேண்டும் என்றுதான் கருதுகிறேன். நமது முதலமைச்சர் பதவிக்கு வந்ததற்குப் பிறகு வட்டங்களையும், வருவாய் கோட்டங்களையும், பிர்க்காக்களையும் பிரித்துக் கொண்டு வருகிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரிக்க வேண்டுமென்றால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிலே 39 எம். பி, க்கள் இருக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்திலே இது போன்று இரண்டு மடங்கு எம்,பி. க்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு முதலமைச்சரே போதும் என்றுதான் வைத்துக்



கொண்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கவில்லை. ஆகவே கலெக்டர் ஒருவராக இருந்தாலும் கூட அவருக்குக் கீழே பல நிர்வாக அதிகாரிகளை வைத்துக் கொண்டு நிர்வாகத்தைச் செம்மையாக நடதத முடியும் என்பதைத் தெரிவிதுக்சொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை பிரித்துவிட வேண்டும் என்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகும் அதற்குத் தலைநகரை எங்கே வைப்பது என்பதில்தான் அது தடைப்பட்டிருக்கின்றது. மையஸ் கமிஷன் சிபாரிசின்படி அந்த மாவட்டத்தின் தலைநகர் எப்படி இருக்கவேண்டும் என்று பார்த்தால் சிவ கங்கைதான் என்று நாம் முடிவுக்கு வரவேண்டி இருக்கின்றது. ஆகவே, பொதுமக்களுடைய வசதியைக் கருதி சிவகெங்கையைத் தலைநகராகக் கொண்டு அந்த மாவட்டத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா !

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே சொல்லி இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து அதற்கு தலைநகர் எப்படி ஏற்படுத்துவது என்பது பற்றி எல்லாம் அவர்கள் சொன்னதற்குப் பிறகு நான் விளக்க வேண்டியதில்லை. மேலும், மொத்தமாக சமுதாயத்தினுடைய நலனைக் கருதி காரியங்கள் செய்யப்படுகின்றபோது தங்களுடைய சொந்த நன்மையைக் கருதி அதாவது தங்களுடைய ஊருக்குப் பக்கத்திலே தான் தலைநகர் வரவேண்டும் என்று பெரும்பாலோர் கருதுவதால்தான் சிக்கல் ஏற்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரக்கோணம் தாலுக்காவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட நிலம்.

*வினா எண். 124—திரு. வி. வ். சுவாமிநாதன் மற்றும் திரு. இரா. முத்தையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய செஞ்சிலுவை சங்கத்தினர் (Disaster relief complex) கட்டுவதற்காக அரக்கோணம் தாலுகாவில் இலவசமாக நிலம் கேட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு இலவசமாக எவ்வளவு நிலம் வழங்கி உள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) மற்றும் (ஆ) தலைவரவர்களே, செஞ்சிலுவைச் சங்கத்தினர் துயர் துடைப்புக் கூடம் கட்டுவதற்காக 10 ஏக்கர் நிலம் இலவசமாக அரசு கொடுத்திருக்கின்றது.

[1982 பிப்ரவரி 10

திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இதுவரையில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் எவ்வளவு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட புயல் பாதுகாப்பு இல்லங்கள் மொத்தம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 25 இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் இருபது இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். தொடர்ந்து இதைப் போன்று கட்டுவதற்குப் பணம் தருவதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றது.

திரு. இரா. முத்தையா : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெற்றிருக்கிற நிலம் அவர்கள் எந்தக் காரியத்திற்காகக் கேட்டார்களோ அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்துகிறார்களா என்பது கண்காணிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எந்த நிறுவனத்திற்கும் எவ்வளவு நிலம் கொடுத்தாலும் அந்த நிறுவனம் எதற்காக கேட்கிறதோ அதற்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்று கண்டிஷன் போட்டு அவர்களுக்குக் கொடுக்கிறோம். அப்படிப்பட்ட கண்டிஷனிலே இருந்து அவர்கள் விலகிச் செல்வார்களேயானால் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமலேயே அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கின்றது.

திரு. மு. சுந்தரம் : தலைவரவர்களே, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு அருகிலேயே இந்தியா ஸ்டீல்ஸ் என்ற தொழிற்சாலை இருக்கின்றது. அந்த தொழிற்சாலையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பல மைல் தூரத்திலே இருந்து வேலைக்கு வருவது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு வீட்டுமனை வேண்டும் என்று அரசிடத்திலே கோரி இருக்கிறார்கள். ஆகவே.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி டிசாஸ்டர் ரிலிப் சென்டர் ஏற்படுத்துவது பற்றி. ஆகவே, வீடுகட்ட நிலம் பற்றி இப்போது கேட்கக் கூடாது.

**மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையின் 125ஆவது பிறந்த நாள் விழா.**

*வினா எண் 125—திரு. என். இடும்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பெரியார்களுக்கு அரசின் சார்பில் விழா எடுக்கும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் யாருக்கு விழா எடுக்கப்பட்டது ?

1982 பிப்ரவரி 10]

(ஆ) தமிழ்த்தாய் வாழ்த்து வழங்கிய மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் 125 ஆவது பிறந்த நாள் விழா அரசின் சார்பில் கொண்டாடுவதற்கு உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தமிழ்நாடு அரசு 1979–80 ஆம் ஆண்டு, பாரதிதாசன், சோமசுந்தரபாரதியார், பாவலர் செய்குதம்பி, வ.உ.சி., பாரதியார், பேரறிஞர் அண்ணா, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, ராஜாஜி, திருவள்ளுவர், டாக்டர் உ.வே.சு.ஐயர், வீரமாமுனிவர் ஆகிய தமிழ்ப் பெரியார்களுக்கு விழா எடுத்தது.

(ஆ) 1979–80-ல் மனோன்மணிய நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 125 ஆவது விழாவைக் கொண்டாட உத்தேசித்து அது இயலாமல் 127 ஆவது ஆண்டு விழாவாக 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது.

(முற்பகல் 9–20)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார்களுக்கு அரசின் சார்பில் விழா எடுக்கும் வகையில் மறைந்த நமது பெரியவர் திரு. வி. கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் விழா எடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ? அதைப் போலவே மாயவரத்தில் கவிஞர் வேதநாயகம் அவர்கள் பெயராலே விழா எடுக்க அரசு இந்த ஆண்டு முயற்சி எடுத்தும் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வராத காரணத்தினால், அது ஒத்தி வைக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டு விட்டதே. அதைத் தொடர்ந்து, திருவையாற்றில் ஆண்டுதோறும் நடக்கிற தியாக பிரம்ம உற்சவத்தைப் போல் கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கும் விழா எடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அந்த விழாவினைக் கொண்டாடுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. நிச்சயமாகக் கொண்டாடும். திரு. வி.க. அவர்களுக்கு விழா கொண்டாடுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருவையாற்றில் நடைபெறும் தியாகப் பிரம்ம உற்சவ விழாக்களை, வானொலியிலும், (டி.வி.) தொலைக் காட்சியிலும் நேரடி அஞ்சல் செய்து ஒலி/ஒளி பரப்புவதைப்போல, கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கு எடுக்கும் விழாவினையும், தமிழிலே முதல் நவீனத்தை எழுதியவர் என்ற முறையிலும், தமிழிலே பல அறிய கவிதைகளை எழுதிய பெரியவர் என்ற முறையிலும், வானொலியிலும், தொலைக் காட்சியிலும் நேரடி அஞ்சல் செய்வதற்கு தமிழக அரசு ஆவன செய்ய முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு எடுக்கிற விழாக்களுக்கு, தொலைக்காட்சி நிலையத்தினரையும், வானொலி நிலையத்தினரையும், நேரடி அஞ்சல் செய்வதற்கான முறைகளுக்காக அழைப்பு அனுப்புவோம். அவர்கள் வந்து அந்தப் பணியைச் செய்வார்கள். ஆகவே, இந்த விழாவை எடுக்கிறபோதும் அந்த ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெரியார்களுக்கு விழா எடுப்பதைப்போல, 1965-ல் தாய் மொழி நம் தமிழ் மொழிதான் என்று போராட்டத்தில் ஈடுபட்டு, வெங்காடுமைச் சாக்காட்டில், வெந்தணலில் வீழ்ந்து, சிறகொடிந்த பறவைகள் போல் தங்கள் இன்னுயிரை ஈந்த, தமிழ் இளைஞர்களுக்கு, அவர்களின் நினைவாக, ஜனவரி 25 ஆம் தேதியை தமிழக அரசு வீர வணக்க நாளாக பிரகடனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனியாகக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**உயர்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் நீதிபோதனை வகுப்புகள்.**

*வினா எண் 126—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் நீதிபோதனை (Moral Instruction வகுப்புகள் நடத்தப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை வரும் கல்வி ஆண்டிலேயே அமுலுக்குக் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது அமுலில் இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றி. ஆனால் 3 மாதங்களுக்கு முன்னால் நாளேடுகளில் வந்த செய்தியின்படி மீண்டும் அந்த மாரல் இன்ஸ்டிரக்ஷன் செக்ஷனை உயர்நிலைப் பள்ளிகளில் துவக்க இருப்ப





தாகச் செய்தி வந்திருக்கிறதே. அதைப் படித்துத்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஆனால் அமைச்சர் அவர்கள் அமுலில் இருப்பதாக சொல்கிறார். இருந்தால் சரி. ஆனால் என்னுடைய ஐயம் என்னவென்றால் இருந்தும் சரியாக நடைமுறையில் செயல்படவில்லையா அல்லது செயல்படவே இல்லை என்றால் மீண்டும் தொடங்க அரசு முயற்சி எடுக்குமா என்பது தான்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடத்தில் தரப்பட்டிருக்கிற விவரத்தின்படி இப்போது இருக்கிறது. ஆனால், ஒழுக்கக் கல்வி, மற்றும் சமுதாயக் கல்வி இவற்றை நம் பள்ளிக்கூடங்களில் உள்ள வகுப்புகளில் பயன்படுத்தக்கூடிய திட்டமாக பாட திட்டம் ஒன்றை வகுப்பதற்காக ஒரு குழுவை அரசு அமைத்திருக்கிறது. அதன் அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒழுக்கக் கல்வி பாடத் திட்டங்களை மாற்றியமைத்து இன்னும் சிறந்த முறையில் நடத்தப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம் : இளம் வயது மாணவர்கள் மனதை பக்குவப்படுத்தத்தான் உயர்நிலைப் பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நீதி போதனை மனதைப் பக்குவப்படுத்துவதற்கு மிக முக்கியமான ஒன்றாக இருப்பது யோகாசனம். யோகாசனப் பயிற்சியையும் உயர்நிலைப் பள்ளிகளில் துவக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : யோகாசனப் பயிற்சியை பள்ளிகளில் தருவதற்கு எந்தவிதமான தடையையும் அரசு விதிக்கவில்லை.

திரு. இல. பலராமன் : நீதி போதனை என்று சொல்லும் போது எந்த முறையில் தரப்படுகிறது? அதாவது மதச் சார்புள்ள நீதி போதனையா அல்லது வேறு எந்த முறையில் நீதிபோதனை இன்று போதிக்கப்படுகிறது அல்லது அரசு போதிக்கக் கூறியிருக்கிறது ? இதற்காக தேர்வு வைத்து அந்த மதிப்பெண்ணையும் தேர்வு எண்ணோடு சேர்த்து மதிப்பெண் இடப்படுகிறதா ? அல்லது அதற்கான ஆலோசனையை வழங்க இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒவ்வொருவரும் ஒழுங்காக இருக்க வேண்டும், ஒழுக்கத்தோடு இருக்க வேண்டும் என்பது எல்லோரும் விரும்புகிற ஒன்று. அதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் மதங்கள். அவர்கள் அதை வளர்ப்பதற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதில் எந்தளவிற்கு வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது மதத்தைப் பின்பற்றி எந்தளவிற்கு ஒழுங்காக நடந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்கிற அளவிற்கு அதைப் புரிந்துக் கொள்ளலாம். இன்னொரு முறையிலும் அதை வெளிப்படுத்த விரும்புகிறோம். சமுதாயக் கடமை, சமுதாயப் பொறுப்பு என்ற வகையில் ஒவ்வொருவருக்கும் அதை உணர்த்தி அந்த

அடிப்படையில் நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என்ற ஒரு முற்போக்கான கருத்தையும் அந்த அடிப்படையிலும் மாணவர்களுக்கு ஒழுங்கைச் சொல்லித் தருவதற்கு முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்கள். நீதி போதனை, ஒழுக்கக் கல்வி என்பதோடு சமுதாயக் கல்வியையும் தர வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தத்தான் புதிதாக ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. இன்று மத்திய கல்வி அமைச்சரின் கல்வி ஆலோசகரான திரு. ஜோஷி அவர்கள் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களை நாம் சொல்லியிருக்கிறோம். அதற்காக நாம் மதத்தை கூடாது என்று சொல்லவில்லை. அதைப் பற்றி நாம் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் ஒரு பக்கம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்தக் கருத்தையும் ஒரு பக்கம் சொல்லி சமுதாய நோக்கில் மாணவர்களை வளர்க்க விரும்புகிறோம். மதக் கருத்துக்கள், ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதற்காக அதைப் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு உரிமை இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : அண்மைக் காலத்தில் மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இலங்கை மலேஷியா போன்ற நாடுகளில் ஒழுக்க போதனையைக் கட்டாய பாடமாக வைத்திருக்கிறார்கள். அதேபோல் இங்கும் உயர்நிலைப் பள்ளிகளில் அதைக் கட்டாய பாடமாக வைத்து அதில் தேர்வு எழுதச் செய்வதற்குண்டான அறிவிப்பை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒழுக்கப் போதனை இப்போது கட்டாய பாடந்தான். அதை ஒரு பீரியட் சொல்லித் தர வேண்டும். மாணவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற முறையில் இருந்து வருகிறது. பரீட்சைக்கு அதை வைத்துக் கொள்ளவில்லை. பரீட்சைக்குரிய பாடமாக அதை ஆக்கவும் நாம் விரும்பவில்லை. ஒழுக்கம் பற்றி நல்ல முறையில் உணரத்தக்க வகையில் சொல்லித் தந்து இயல்பாகவே ஒழுக்கத்தோடு நடந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறோம்.

## முசிறியில் முன்சீப் நீதி மன்றம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 127—திரு. எம்.கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுகா, முசிறியில் முன்சீப் கோர்ட் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம், (ஆ) திருச்சி மாவட்டம் முசிறி தாலுக்காவில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் நிதிநிலைக்கேற்ப [illegible] ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும்.



## இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளுக்கான பதவி உயர்வு.

*வினா எண் 128—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளை அரசின் வரிசைப் பட்டியலில் உள்ளவாறு மாவட்ட நீதிமன்ற நடுவர் (District Munsif) வேலைக்கு வேலை உயர்வு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

(முற்பகல் 9-30)

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வெளியிட்டுள்ள அந்த வரிசைப் பட்டியலில் 1—7—1979 ஆம் தேதிய வரிசைப் பட்டியல்படி இல்லாமல் முன்னால் இருப்பவர்களை விட்டுவிட்டு 141, 142, 162, 163, 171 என்று பின்தங்கிய வரிசையிலே உள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், வரிசைப் பட்டியலிலேயே இல்லாத ஒரு நபருக்கும் அந்த வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹைகோர்ட் சர்குலர் நோடிபிகேஷன் 134/80 என்ற எண்ணில் அப்படி ஒரு வேலை கொடுக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? இப்படி நீதித் துறையில் வரிசைப்படி இல்லாமல், எந்த ஒரு அடிப்படையில் அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசு செய்தது அல்ல. உயர்நீதி மன்றம், நீதித் துறை செய்கின்ற ஒரு நடைமுறை. இந்த குறிப்பிட்ட பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் 1965-லேயிருந்து சப் மாஜிஸ்திரேட்டுகள் தற்காலிக நிலையில் இருக்கிறார்கள். அதைப்போலவே டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள் 1975-லே இருந்து தற்காலிக நிலையில் இருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் முன்சீப்புகள் பதவிகளை பூர்த்தி செய்கின்ற நிலை ஏற்படுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதுபோல் சப் மாஜிஸ்திரேட் அளவில் மட்டும் தேர்ந்தெடுப்பதில்லை. விருப்பம் கேட்கப்பட்டு, தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். அப்படி விருப்பம் தெரிவிக்க பலர் முன்வராத காரணத்தால் வரிசைப்படி நியமிக்க முடிவதில்லை. முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் விருப்பமும் கேட்கப்படுகிறது. அப்படி விருப்பம் தெரிவிக்கும் போது, மீண்டும் தேர்வுவைத்து உயர்நீதிமன்றம் தேர்ந்தெடுக்கிறது. அப்படி

[1982 பிப்ரவரி 10

விருப்பப்படி இந்த தேர்வு நடக்கின்ற காரணத்தால், 'seniority cannot be strictly followed, என்று உயர்நீதி மன்றம் சொல்லியிருக்கிறது.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் பத்திரிகையிலே அரசுத் துறையில், வெவ்வேறு துறைகளிலே பணியாற்றுபவர்களை ஜுடிஷியரிக்கு போஸ்ட் செய்திருக்கிறார்கள். அதைப்போலவே, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள், அனுபவம் குறைவாக இருப்பவர்கள் விருப்பம் தெரிவித்ததன் காரணமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் வரிசைப் பட்டியலிலே உள்ளவரை ஒதுக்கிவிட்டு வரிசைப் பட்டியலிலே இல்லாதவர் எப்படி விருப்பம் தெரிவித்திருக்க முடியும். அனுபவம் அதிகம் இருப்பவர்களை நியமித்தால். நீதித் துறை ஒழுங்காக இயங்கும் என்பது அரசுக்குத் தெரியுமா? இனி வருங்காலத்திலாவது, அனுபவம் உள்ளவர்களை மேல் பதவிகளுக்கு நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னபடி அரசு எடுக்கின்ற முடிவல்ல இது. வரிசைக்கிரமம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதால், நான் சொல்கிறேன். இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட் பட்டியலையும், முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் பட்டியலையும், இரண்டையும் எடுத்துப் பார்க்கவேண்டும் இந்த இரண்டு வரிசைப் பட்டியலிலும் உள்ளவர்களை தற்காலிகமாக நியமிப்பதன் காரணத்தினால், விருப்பம் கோரப்படுகிறது. சீனியராகமா இருப்பவர்கள் விருப்பம் தெரிவிக்காமல் இருந்திருப்பார்கள். ஜுனியராக இருப்பவர்கள் விருப்பம் தெரிவித்திருப்பார்கள். அவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது. Ser io ity c.nnot bc St i.tly f llowd என்ற நிலை வருகிறது. அதைவிட தற்காலிகமாக நியமிக்கின்ற காரணத்தால், அவர்கள் திருப்பி பேரன்ட் துறைக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது சர்வீஸ் கமிஷன் இவர்களை ரெகுலரைஸ் செய்கின்றபோது, வழக்கறிஞர்களிடமிருந்து தேர்தெடுக்கும்போது இந்த நிலை மாறும். விரைவில் சர்வீஸ் கமிஷன்இவர்களை ரெகுலரைஸ் செய்யும்போது, இந்த நிலை மாறுபடும்என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகளுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்போது, 10, 12 ஆண்டுகள் அனுபவம் பெற்ற பின்னால்தான் சாதாரணமாக டிஸ்டிரிக்ட் முன்சிப் பதவிக்கு தேர்ந்தெடுக்கும் நிலை இருக்கிறது. ஆனால் இந்த இரண்டையும் இன்டக்ரேட் செய்து இரண்டு வகுப்புகளுக்கும் நேரடியாக டிஸ்டிரிக்ட் முன்சிப்-கம்-ஜுடிசியல் மாஜிஸ்திரேட் பதவி கொடுக்கும்போது தகுதியும், அனுபவமும் இல்லாத இரண்டாவது வகுப்பு



1982 பிப்ரவரி 10]

மாஜிஸ்திரேட்டுகளை டிஸ்டிரிக்ட் முன்சீப்பாக உயர்த்தப்படுகின்ற நிலை, இந்தத் திட்டத்தில் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அரசு இதைத் தவிர்ப்பதற்கு அனுபவம் பெற்ற, குறைந்தது 5 ஆண்டுகள் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களை தேர்ந்தெடுக்க உயர் நீதி மன்றத்திற்கு ஆலோசனை வழங்கி அதை நடைமுறைப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்டக்ரேஷன் ஆப் ஜுடிசியரி என்ற ஸ்கீமைப் பொறுத்தவரைக்கும் நீதிபதிகளுக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கின்றன என்பதல்ல. பொதுமக்களுக்கு என்ன பலன் கிட்டுகிறது என்பதுதான் முக்கியம். இன்டக்ரேஷன் ஆப் ஜுடிசியரியின் நோக்கமே,ஒரே கூரையின்கீழ் சிவில், கிரிமினல் அதே நேரத்தில் பர்ஸ்ட் கிளாஸ் அபென்ஸ், செகண்ட் கிளாஸ் அபென்ஸ் ஆகிய அனைத்துமே ஒரே இடத்தில் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக, பர்ஸ்ட் கிளாஸ் அபென்சுக்கு 10, 15 மைல் தூரமிருந்தால் செகன்ட் கிளாஸ் அபென்சுக்கு ஒரு 10மைல்தூரம் செல்லவேண்டும் சிவில் வழக்குகளுக்கு இன்னொரு 10 மைல் செல்லவேண்டும் என்ற நிலைமை இல்லாமல் அண்டர் ஒன் ரூப் எல்லா அபென்சுகளுக்கும் நீதி வழங்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

ஆகையால் அதை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உயர்நீதி மன்றம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போலவே செகண்ட்கிளாஸ் மாஜிஸ்திரேட்ஸ் அனைவரும் சிவில் வழக்குகள் நடத்துவது பர்ஸ்ட்கிளாஸ் அபென்சுகளை விசாரிப்பது ஆகிய தகுதி பெற்றவர்களாக ஆக்கப்பட வேண்டுமென்பதைப் படிப்படியாகக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். இப்பொது இன்னும் ஒரு பிரச்சினை எழுந்திருக்கிறது. if tney are equated tc thecadie ci Fi s. Clas mag i t -es, அவர்களுடைய எமால்யூமென்ட்ஸ் அந்த அளவுக்கு உயர்ந்துவிடுகிறது. பணியைச் செய்யாமல் பதவி மட்டும் கொடுக்கப்பட்டு விட்டால் பே கமிஷனைப் பொறுத்தவரை செகண்ட்கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகள், ரெவின்யூ துறையில் இருப்பவர்கள் என்ற ாகுபாடு செய்யவில்லை. கிட்டத்தட்ட இரண்டாயிரம், மூவாரம் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ் பதவி உயர்வு தர வண்டும். சம்பளம் தரவேண்டுமென்ற கோரிக்கை வர வாய்ப்பிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில அரசு சொல்லியிருக்கிறது. சகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் இத்தகைய வழக்குகளை நடத்த குதி பெறும் வகையில் ரிப்ரெஷன் கோர்ஸ் நடத்தப்பட வேண்டு மன்றும், ஒருங்கிணைந்த திட்டத்தை தமிழகம் முழுவதும் ரே நேரத்தில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் அரசு சால்லியிருக்கிறது.

[1982 பிப்ரவரி 10

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் சொல்லிய முறைப்படி பல இடங்களில் முன்சீப் கோர்ட்டுகளில் அதிகாரிகள் நியமிக்கப்படுவதில்லை செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ் பஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்களாக ஆக முடியாத அளவுக்கு பல்வேறு இடங்களில் அவல நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? உயர்நீதி மன்றத்தில் அங்கிருக்கிறவர்களுக்கு ப்ரொமோஷன் மற்ற சவுகரியங்கள் கிடைக்காமல் போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதில் உண்மையான நிர்வாகத்தில் இருக்கும் அவல நிலையை எடுத்துச் சொல்லி தீர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அந்த நிலை இருந்த நிலைதான் 31 இடங்கள் செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களிலும் ஆறு இடங்களில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் நீதிமன்றங்களிலும் நீதிபதி இல்லாத நிலை எடுத்துச் சொல்லப்பட்டது. உயர்நீதி மன்றம் 1965-ல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகள் ஆகியவற்றுக்கு 11:9 என்ற ரேஷியோவில்—அதாவது 11 பேர் வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றால் 9 பேர் நிர்வாகத் துறையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற விதி இருந்தது. ஆனால் 1965-ல் இருந்து வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து யாரையும் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. தற்போது அந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு வழக்கறிஞர்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டும் வகையில் 5:1 என்ற விகிதத்தில்—அதாவது 5 பேர் வழக்கறிஞர்கள் பட்டியலில் இருந்து நியமிக்கப்பட்டால் ஒருவர் மட்டும் நிர்வாகத் துறையில் இருந்து நியமிக்கப்பட வேண்டுமென்ற முறையில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த ஒருவரும் உயர்நீதிமன்றத்தில் பணியாற்றுகிறவர்களாக, சட்டத் துறையில் பணியாற்றுகிறவர்களாக இருக்கவேண்டுமென்றும் சட்டப் பயிற்சி இருப்பவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் அரசு உத்தரவிட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்கு இதை விளக்கிச் சொன்ன பிறகு 31 நீதிமன்றங்களில் காலியாகியிருக்கும் இடங்களிலும், ஆறு டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளிலும் இந்த முறையில் நியமனம் செய்ய வேண்டுமென்று அரசு கூறியிருக்கிறது.

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம்.

*வினா எண் 129— திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம், தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது?



1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 1979–80 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் 1980-81 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் கும்பகோணம் வட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

*வினா எண். 130— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: திரு. பொ விஜயராகவன்: திரு. து. புருஷோத்தமன்:

மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். விஜயபாலன்: இத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? இத் திட்டத்திற்காக அரசுக்கு ஆகும் செலவுத் தொகை எவ்வளவு?

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 1979–80 இல் இத் திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் 6,965 பேர்கள். இன்சூரன்ஸ் செய்த நிலத்தினுடைய பரப்பளவு 12,566 ஏக்கர்; அதே போல் இன்சூரன்ஸ் செய்த தொகை 72,34,272 ரூபாய். 1980 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் 2,734 பேர்கள் இதன் மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள். அதிலே ஈட்டுத் தொகையாக 4,51,260 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1979 ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் 28,52,855 ரூபாய்க்கு பயிர் இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இ. முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டமானது தஞ்சை மாவட்டத்தைத்தவிர ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

---

* 339–341-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1982 பிப்ரவரி 10

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, புரட்சித்தலைவரின் அரசு அறிவித்திருக்கிற இந்த புரட்சித் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத் திலாவது செயல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே• எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் அமல் நடத்தப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இராமநாத புரம் மாவட்டத்திலேயும் அது அமல் நடத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் பகுதியில் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர் களே, சில பயிர்கள் இயற்கையின் சீற்றத்தினால் மட்டுமல்லா மல் புழு பூச்சியினால் நோய்கள் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கும் இந்த பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தத் திட்டமே அதற்குத் தான். வறட்சி, வெள்ளம், புயல், பூச்சி, நோய்கள் போன்றவற்றால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளால் பாதிக்கப் படுகின்ற பயிர்களுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம் இரண்டாம் போகத்திற்கு மட்டும் கொடுக்கப்படுவதால் அமைச்சர் அவர்கள் அறி வித்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறுவையிலேதான் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப் படக்கூடிய நிலைமை, புயல், வெள்ளம், வறட்சி நோய் போன்றவற்றினால் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது அப்படிப் பாதிக்கப்படுகின்றவர்களின் நன்மை யைக் கருதி, குறுவைக்கு, முதல் போகத்திற்கு இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆரம்பத்திலே இரண் டாவது போகத்திற்கு என்று இருந்தபோதிலும் 80 ஆம் ஆண்டு பிரத்தியேக ஏற்பாட்டின் மூலமாக 6 வட்டங்களுக்கு அரசு முதல்போகத்திற்கும் அதை விரிவுபடுத்தியிருக்கிறது.



1982 பிப்ரவரி 10]

தமிழ் நாட்டிலுள்ள குரூப் மருத்துவ மனைகள்.

*வினா எண் 131—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டத் தொழிலாளர் நலச்சட்டப்படி ஏற் படுத்த வேண்டிய குரூப் மருத்துவமனைகள் (Group Hospitals) தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த மாதிரி குரூப் மருத்துவமனைகள் எத்தனை ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(இ) இல்லை என்றால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாட்டில் குரூப் மருத்துவமனைகள் அமைக்கப்படவில்லை?

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) தோட்டத் தொழிலாளர் நலச் சட்டப்படி மருத்துவ வசதிகள் தொழிலாளர்களுக்கு செய்து தரவேண்டும். தொழி லாளர்களுக்குச் தேவையான நவீன மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதை கருத்தில் கொண்டு கோயம்புத்தூரில் 20–2–81, உதகையில் 17–6–81 மற்றும் சென்னையில் 23–8–81 அன்றும் நடைபெற்ற முதலாளிகளின் பிரதிநிதிகள், மருத்துவப் பணித் துறை இயக்குநர் மற்றும் மருத்துவ அலுவலர் (தோட்டங்கள்) கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழான விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்டு இம்மாற்றம் செய்ய வேண்டுமெனில் முதலாளி களின் சங்கங்களை கலந்தாலோசித்து அவர்களின் கருத் துக்களையும் கவனிக்கவேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

எனவே தற்பொழுது தொகுதி மருத்துவ மனைகள் ஏற்படுத்த வில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏறத்தாழ ஐயாயிரத்திற்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் இருக் கின்ற குமரி மாவட்டத்திலே இப்படி ஒரு பெரிய மருத்துவமனை இல்லாததால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவேண்டியிருக்கிறது Lean on bed முறை என்பதினால் அந்த மருத்துவமனைகளில் அதிகமான செலவு ஏற்படுகிறது. ஆகவே அங்கு அனுப்பப்படவில்லை. எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு ஹையர் ட்ரீட்மெண்ட் வசதி கிடைக்காத நிலை இருக்கிறது மேலும்

அந்த மருத்துவமனைகளுக்குச் செல்ல பயணக் கட்டண மும் உண்டு என்பதால் அங்கே உள்ள தோட்ட முதலாளிகள் ஹையர் ட்ரீட்மென்ட் கொடுக்காமல் தப்பித்துக் கொள்ளுகின்ற நிலைமையைக் கணக்கில் கொண்டு அங்கே குரூப் மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான நவீன மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதைக் கருத்திற் கொண்டு தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழான விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி அரசு ஆவன செய்யும் .

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, தற்பொழுது அப்படிப்பட்ட மருத்துவ வசதி செய்து கொடுக்காமல் இருக்கும் முதலாளிகளிடமிருந்து, அந்தத் தொழிலாளர்கள் மற்ற மருத்துவ மனைகளுக்குச் சென்று வைத்திய உதவி பெற்றால் அதற்கான செலவுப் பணத்தை வசூலித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆலோசனைப் பரிசிலனை செய்யலாம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தோட்டங்களிலே வசிக்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் மலையிலே இருப்பவர்களுக்கு அடிக்கடி பஸ் போக்குவரத்து இல்லாதிருப்பதால் அந்தத் தோட்டங்களில் இருக்கின்ற டிஸ்பென்சரியில்தான் வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை, நாலுமுக்கு எஸ்டேட், குதிரைவெட்டி, ஊத்து போன்ற இடங்களில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பம் வசிக்கின்ற இந்த இடங்களில் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்திக் கொ[illegible] முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்க வேண்டியது தோட்ட அதிபர்களின் கடமையாகும். கார்டன் ஹாஸ்பிடல், குரூப் ஹாஸ்பிடல் என்று வைத்து, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களை மனதிற்கொண்டு, ஏற்கனவே பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருப்பதால் எவ்வளவு அதிகமாகத் தொழிலாளர்களுக்கு வசதி செய்[illegible]க்க முடியுமோ [illegible] செய்ய அரசு ஆவன செ[illegible]



## அம்பத்தூர் நகரிய பஜார் தெருவில் வடிகால் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 132—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி அம்பத்தூர் நகராட்சி நகரியம் பஜார் தெருவில் வடிகால் அமைக்கும் திட்டம் எப்போது நிறைவு பெறும் ?

(ஆ) இதற்குண்டாகும் செலவுத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) 1982 மே மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ரூ. 7.03 இலட்சம்.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாண்டுக் காலமாக அந்தப் பகுதியில் இருந்து வரும் பிரச்சினை இது. அந்தப் பணி வேகமாகத் துவக்கப்பட்ட போதிலும் கூட, இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தை ஆராய்ந்து வெகுவிரைவிலே முடித்துத் தருவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பணி 1982 மே மாதம் முடிவடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இடையிலே The work is held up now for want of Cement என்று இருக்கிறது. எனவே, சிமெண்ட் கொடுக்க வேண்டிய மாண்புமிகு அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கொடுப்பார்களேயானால் இந்தப் பணியை மே மாதத்திலே முடித்து விட முடியும்.

**திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேளை சிமெண்ட் கிடைக்காததால் அதை வேலை பாதியிலே நிறுத்தப்பட்டிருக்குமேயானால் இருப்புக் குழாய்களைப் போடுவதாலோ அல்லது மாற்று வழியிலோ அந்தப் பணிகள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாதியிலே நிறுத்தப்படவில்லை. இங்கேயிருக்கின்ற நோட்டின் பிரகாரம், The work is held up now for want of Cement என்று இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மே மாதத்திலே முடித்து விட வேண்டுமென்று இருக்கிறது. 10, 15, 20, [illegible] நாட்கள் வேண்டுமான[illegible] அதிகமாகலாம். இப்பொழு[illegible]

[1982 பிப்ரவரி 10

சட்டமன்றத்தில் இது பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதை மனத்தில் இறுத்தி மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களை அணுகுமாறு அதிகாரிகளிடம் சொல்கிறேன். சிமென்டை விரைவிலே பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறேன்.

### தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதி

*வினா எண் 133—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களிடம் இருந்து பிடிக்கப்படும் வைப்பு நிதியில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு கடன் கொடுக்கப்படுவது போல் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கடன் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுடைய வைப்பு நிதியில் இதுவரையில் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் திருமணத்திற்கு மட்டும் கடன் கொடுக்கப்படுகிறது. அதை தொழிலாளர்களின் ஆண் குழந்தைகள் திருமணத்திற்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 9—2—80-லிருந்து ஆண்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. அதனால்தான் விடையிலே 'ஆம்' என்று சொன்னேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களின் ஆண் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய கடனுக்காக வைப்பு நிதி அலுவலகத்தில் லோன் கேட்டு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு விண்ணப்பித்தும்கூட திருமணம் முடிக்கப்படும் நேரம் வரையில் அந்த லோன் கிடைக்கப்படுவதில்லை ; அதற்குப் பிறகு பின்னால் கூட கிடைக்கப்படுவதில்லை. எனவே, தவிர்க்க முடியாத காரணத்தால் வேறு சில இடங்களில் கடனைப் பெற்றுத் திருமணத்தை முடித்து விடுகிறார்கள்.

(முற்பகல் 9—50)

அதிலே, பின்னர் கேட்டால்கூடக் கொடுக்கப்படுவதில்லை. எப்படி இருந்தாலும், அந்தத் திருமணக் கடன் கேட்டபிறகு, திருமணத்திற்கு முன்னால் கடன் கொடுக்க முடியாவிட்டாலும் திருமணம் முடிந்ததற்குப் பின்னாலாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 10]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னதாகவே கொடுக்க வேண்டுமென்பதை இந்த அரசு வலியுறுத்தும்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. திருமணத்திற்கு ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்பே திருமணப் பத்திரிகை உட்பட சேர்த்து அனுப்பி வைத்தால்கூட, திருமணம் முடிந்து இரண்டு மூன்று மாதங்கள் முடிந்தபிறகுகூட பணம் கொடுப்பதில்லை. அந்தத் தாமதத்திற்கு என்ன காரணம்? அந்தத் தாமதத்தைத் தவிர்த்து, திருமணத்திற்கு 1 வாரம், அல்லது 10 நாட்களுக்கு முன்னதாகவே கேட்ட கடனைக் கொடுப்பதற்குரிய உத்தரவாதத்தை அந்த பி. எஃப். காரியாலயம் மூலமாக அளிக்க, அமைச்சர் முன் வந்து நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளை (Sentiments expressed by the Hon. Members) கருத்திலே கொண்டு, இன்றைய தினம் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமாகச் சொல்லி தாமதத்தைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## பெண்கள் பணியாற்றும் தொழிலகங்களில் குழந்தைகள் காப்பகம் நிறுவும் திட்டம்.

*வினா எண். 134—**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்கள் பணியாற்றும் எல்லாத் தொழிலகங்களிலும் குழந்தைகள் காப்பகம் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தொழிற்சாலை சட்டத்தின் பிரிவு 48-ன்படி முப்பதும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவப்பட வேண்டும். அத்தகைய தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. குமரி அனந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 30 பெண் தொழிலாளர்களுக்கு மேலே இருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலும் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது விதிமுறையாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அப்படி எத்தனை தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன

என்பதையும் அமைக்கப்படாத தொழிற்சாலைகள் எத்தனை என்பதையும் அப்படி அமைக்கப்படாத தொழிற்சாலைகளில் உடனடியாக அமைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ் நாட்டில் உள்ள பெண்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை 3,747. இவைகளில் 732 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். முப்பதும் அதற்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பணியாற்றும் தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் தொழிற்சாலை சட்டத்தின் பிரிவு 48-ன்படி நிறுவப்பட வேண்டும். இவற்றில் 353 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 379 தொழிற்சாலைகளில் குழந்தைகள் காப்பகம் அமைக்க தொழிற்சாலை ஆய்வாளர்களால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

1–1–1980 முதல் 31–12–1981 முடிய 171 வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. அதில் 125 வழக்குகளில் உரிமையாளர்கள் தண்டிக்கப்பட்டார்கள். 3 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. இரண்டு நிர்வாகத்தினர் குழந்தைகள் காப்பகம் அமைத்துவிட்டதாலும் மூன்றாவது நிர்வாகம் புதிய தொழிற்சாலையாக இருப்பதாலும், முந்தைய இரு ஆய்வுகளின்படி வழக்குகள் தொடரப்பட்டதாலும் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. 40 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. குழந்தைகள் காப்பகம் அமைக்காத தொழிற்சாலைகளின் பேரில் காரணம் காட்டும் அறிக்கை அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. குமரி அனந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு தொடர்பான, கோர்வையான பதிலை அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே அமைக்கப்பட்ட காப்பகங்களிலே உள்ள குழந்தைகளுக்கு முறையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறதா, ஊட்டச்சத்து கொடுக்கப்படுகிறதா என்பதையெல்லாம் பார்வையிட அரசாங்கத்தினுடைய ஏற்பாடு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான, நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதற்காக உள்ள ஆய்வாளர்கள் அடிக்கடி சென்று பார்க்கிறார்கள். அப்படி பார்ப்பதன் விளைவாகத்தான் 'பிராசிக்யூஷன்ஸ்' நடந்திருக்கின்றன. இருந்தாலும், அதிலே மிக விரைவாகச் செல்ல முடியாததற்குக் காரணம், தொழிற்சாலை சட்டம் 48-ன் கீழ் அவை அமைக்கப்பட வேண்டும். 92-வது பிரிவில் [illegible]





தண்டனை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்டனை 3 மாதம் அல்லது ரூ. 2,000 என்றுதான் இருக்கிறது. கூடுமான வரையில் அபராதத்தை அதிகமாகப் போடுவதில்லை. ஒரு வேளை, சட்டத்தைத் திருத்தி, தண்டனையைக் கொஞ்சம் கடுமையாக்கினால், அந்த எண்ணம் விரைவிலே நிறைவேறும் என்று அரசு கருதுகிறது. சட்டத்தைத் திருத்தி, மாற்றி, உபயோகமான சட்டமாகக்கொண்டு வருவதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறோம். அந்தக் குழு இதைப் பரிசீலனை செய்து, அதிலே தண்டனை அதிகம் இருக்க வேண்டும், அல்லது வேறு விதமாக இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்யுமானால் அதை கவனிக்கலாம். அப்படி பரிந்துரை செய்யவில்லையென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை மனதிலே வைத்து, இந்த அரசு அதைத் தீவிரமாகப் பரிசீலிக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில், 'ஷூ ஃபாக்டரிகள்' இருக்கின்றன. அந்த பாக்டரிகளில் ஆயிரம், இரண்டாயிரம் பெண்கள் வேலை செய்கின்றார்கள். அந்தத் தனியார் நிறுவனங்களிலும் இதுபோன்று குழந்தைகள் காப்பகங்களை நிறுவ அரசு முன்வந்து ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைச் சட்டம் உள்ள எல்லா இடங்களிலும்—அதற்காகத்தான் 732 தொழிற்சாலைகள் என்று சொன்னேன்—இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். நாங்களும் பரிசோதனை செய்து பிராசிக்யூஷன் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, நான் இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தில் இதைச் செய்யவில்லை என்ற விவரத்தை அரசுக்குத் தெளிவாக அனுப்பினால், உங்களுக்கு வரக்கூடிய புகார்களையும் அரசுக்கு அனுப்பினால், அதைக் கவனிக்க அரசுக்கு உதவி செய்தவர்களாவீர்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட முந்திரி ஆலைகள் இருக்கின்றன. அவைகளில் ஆயிரக்கணக்கில் பெண் தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள். அங்கே எந்த இடத்திலும் இத்தகைய குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படவில்லை. அவைகளை உடனடியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக சர்ப்ரைஸ் செக் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

[1982 பிப்ரவரி 10

இராமச்சந்திரபுரம் நீர்ப்பாசனக் குளத்தின் உட்பகுதியில் செய்யப்பட்டுள்ள நில ஆக்கிரமிப்பு.

*வினா எண் 135—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளாத்திகுளம் தொகுதி இராம சந்திரபுரம் நீர்ப்பாசனக் குளத்தின் உள்பகுதி அரசு நிலங்களில் அதே ஊரைச் சேர்ந்த கிராம அதிகாரியும் முன்னாள் ஊராட்சி தலைவரும் சட்டத்திற்கு புறம்பாக விவசாயம் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்ததற்கு அபராதம் வசூலிக்கத் தேவையான நடவடிக்கையை விளாத்திக்குளம் வட்டாட்சியர் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துள்ளார். இது குறித்து வட்டாட்சியர் அறிக்கை கிடைத்த பின், மேற்படி சட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

குண்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கம்.

*வினா எண். 136—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அருப்புக்கோட்டை தொகுதி இலுப்பையூர் அருகாமையில் குண்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம் 1979-1980-ஆம் ஆண்டு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அணைக்கட்டு சேதமடையவில்லை. அணைக்கட்டை சார்ந்த சில பகுதிகள் (Appurtenant work) சேதமடைந்தன.



1982 பிப்ரவரி 10]

உத்திர மேரூர் ஏரியை விரிவு படுத்தும் திட்டம்.

*வினா எண். 137—திரு ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உத்திரமேரூர் ஏரியை ஆழப்படுத்தவும் வலுப்படுத்தவும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை பெற்ற திட்டங்களின் மீதான ஆய்வுகள் முடிவுற்றபின், உத்திரமேரூர் ஏரியை விரிவுபடுத்தும் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஏரியை விஸ்தரிக்கும் திட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஏன் நிறுத்தி வைக்கப்பட்டது? அதோடு இந்த ஏரியின் கொள்ளளவு எவ்வளவு என்பதோடு இதன் மூலம் எத்தனை ஏக்கர்கள் பயன் பெறும் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த உத்திரமேரூர் ஏரியில் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு 5,448.22 ஏக்கர்கள் ஆகும். ஆனால் சராசரியாக 4,978.77 ஏக்கர் வரையிலும் பயிரிடப்படுகிறது. அதனால்தான் இதைத் தனியாக இப்போது உடனடியாக எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேலும் இதை சீர்திருத்த வேண்டும் என்று சொன்னால் 30 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அதற்காக 200-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கிறது. அதைவிட ஏரிகளை நவீனப்படுத்துகின்ற திட்டத்தை எடுத்துச் செயல்படுத்தும்போது இதையும் கவனிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

(முற்பகல 10-00)

வடமாமாந்தூரில் மேற்கொள்ளப்பட்ட கனிவள ஆராய்ச்சி

*வினா எண் 138—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் வடமாமாந்தூரில் கனிவள ஆராய்ச்சி செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1982 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) 1975-76-ஆம் ஆண்டுகளில் இந்திய அரசு நிறுவனமான பாரத தங்க சுரங்கங்கள் லிமிடெட் (Bh . G ld Mi s Ltd.) பூர்வாங்க சோதனைகளை மேற்கொண்டது. இச்சோதனைகளின்போது ஒரு சுரங்க வழியினையும் (A i L v l) 30மீ ஆழ இடைவெளியில் இரு மதள சுரங்கத்தினையும் அமைத்து இந்திய சுரங்க அமைப்பினரால் (I di n Bur au Mi s) மாதிரிகள் சேகரித்து ஆய்வு செய்தது. மேற்படி ஆய்வின் மூலம் இப்பகுதியில் உள்ள படிவமானது குறைந்த கன்டென்ட் உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இப்படிவத்தைப் பயன்படுத்த இயலாது என ஆய்வுப் பணிகள் கைவிடப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கனிவள ஆராய்ச்சி கைவிடப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தற்சமயம் எந்த நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது? அது நல்ல முறையில் இருக்கிறது என்று ஜப்பான் நாட்டுக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு அரசு அதைப்பற்றி மீண்டும் ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலைமை கைவிடப்பட்டுவிட்டது என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்று அந்தப் பகுதியில் தமிழ்நாடு ஜியாலஜி துறை மூலம் ஆய்வு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 139 மற்றும் 140 ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நூற்பாலைகள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 139—டாக்டர் சே. சமயம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தருமபுரி மாவட்டத்தில் ஓர் நூற்பாலை ஏற்படுத்த ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆம். தர்மபுரி மாவட்டத்தில் சுமார் ஏழு கோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1982 பிப்ரவரி 10]

*வினா எண். 140 .— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆம். புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ஏழுகோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பு ஆலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரரம் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஒரு நூற்பாலை ஏற்படுத்த அரசு தீர்மானித்து உள்ளது என்பதற்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நூற்பாலையை எங்கே அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது ? தருமபுரி மாவட்டத்தில் எந்தவித தொழில்களும் இல்லாத காவேரிப்பட்டிணம் தொகுதியில் அதை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு குழு இடம் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவே அதற்குப் பின்னாலே அரசு எந்த இடத்தில் அமைப்பது என்பதைப் பற்றி முடிவு செய்யும் இப்போது அந்த மாவட்டத்தில் அமைப்பது என்பதை மட்டும் உறுதி செய்ய இயலும்

திரு. இரா தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்து முடிந்து விட்டதா ? நிலம் ஆர்ஜிதம் செய்து விட்டதால் அங்கே தங்களுடைய நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு அந்த நூற்பாலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது ஆரம்ப வேலைகள் இன்னும் சில மாதங்களில் முடிவு பெறும் வேலைக்கு ஆட்கள் எடுக்கின்றபோது குறிப்பாக நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

திரு. இரா தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கும் ஆலங் குடியில் அந்த நூற்பாலையை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன் ஏற்கனவே இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது

திரு பி எஸ் துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் நூற்பாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் தருமபுரிக்குப் பக்கத்தில் நான்கைந்து நூற்பாலைகள் ஏற்கனவே இருக்கின்றன ஆகவே, பர்கூரில் அந்த நூற்பாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை இல்லாத மாவட்டங்களில் ஒரு நூற்பாலை ஆரம்பிப்பது என்கிற அடிப்படையில் புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களில் நூற்பாலை அமைக்க முடிவு செய்துள்ளோம் தருமபுரி மாவட்டத்தில் தனியார் துறையில் நூற்பாலைகள் இருந்தாலும், கூட்டுறவு நூற்பாலை இல்லை அந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் அந்த நூற்பாலையை அமைப்பது என்பது குறித்து முடிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து அறிவித்தவுடன் அந்த நூற்பாலை எங்கே அமைப்பது என்பது குறித்துப் பின்னால் முடிவு செய்யப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கு முடிவு செய்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் அந்தக் கூட்டுறவு நூற்பாலை எத்தனை ஸ்பின்டில்லை வைத்து நடத்தப்போகிறார்கள் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு அதற்குபைக்கத்திலே தனியார் துறையில் இருக்கக்கூடிய காவிரி நூற்பாலையை அரசு ஏற்று நடத்தி வருகிறது அது அரசாங்கத்தாலே முழுமையாக, தேசியமயமாக்கப்பட்டு நடத்தப்பட்டால், காவிரி நூற்பாலை நிற்காமல் ஓடிக்கொண்டு இருக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது ஆகவே, அரசு அதைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்[illegible] 25,000 கதிர்த் திறன் (ஸ்பின்டில்ஸ்) கொண்ட கூட்டு[illegible] நூற்பாலை அமைக்கும் திட்டம் இருக்கிறது முதலில் 12,[illegible] கதிர்த்திறன் கொண்ட நூற்பாலை தொடங்கப்படும் [illegible] பாலை அமைக்கப்படும் இடம் புது கோட்டை என்று சொ[illegible] வில்லை புதுக்கோட்டை மாவட்டம் என்று சொன்னே[illegible] காவேரி நூற்பாலையைப் பொறுத்தவரையில் தனியாகக் கேள்[illegible] போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

2 தகவல் கோரல்.

(அ) மின் கட்டணம் செலுத்துவது பற்றிய புதிய முறை.

திரு. ப. பொன்னுரங்கம் தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறேன் மின் கட்டணம் செலுத்துவது பற்றிய பிரச்சனை இது மின் கட்டணம் செலுத்துவதில் இந்த மாதம் முதல் ஒரு புதிய முறையை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரியம் பற்றிய விவாதம் வரும்போது அதுபற்றிப் பேசலாம் ; உட்காருங்கள்

(ஆ) இசைவு மறுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சினை

திரு. அ. ரகுமான்கான் மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன் * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **** உங்கள் உரிமைப் பிரச்சனைக்கு நான் 'கன்செண்ட்' கொடுக்கவில்லை

திரு. அ. ரகுமான்கான் : *****

திரு. துரைமுருகன் : *****

மாண்புமிகு பேரவைத் தலைவர் நீங்கள் கொடுத்திருந்த அவை உரிமைப் பிரச்னையை அவையில் எடுத்துக்கொள்ள அனுமதி மறுத்திருக்கிறேன் அதைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும் இப்போது நீங்கள் சொல்வது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

[illegible]ண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்கவில்லை என[illegible] சொல்லிவிட்டேன் காரணத்தை அறையில் வந்து கே[illegible]கள் * * * *

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

(முற்பகல் 10 10)

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தங்களுடைய அனுமதியோடு ஒரு வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன்' தங்களுக்கு முடிவான தீர்ப்பைச் சொல்லக்கூடிய உரிமை இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் ஆனால் பொதுமக்கள் பேசத்தக்க வகையில் ஒரு பிரச்சினை சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒரு உறுப்பினரைப் பற்றி வெளியிலே பரவி இருக்குமே யானால் அது தவறு என்பதை வெளியிடுவதற்கான ஒரு வாய்ப்பு இந்த சட்ட மன்றத்தின் மூலமாகத்தான் ஏற்படவேண்டும் ஆகவே பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப் பொதுமக்கள் படித்துப் பார்க்கிறபோது ஏதோ ஒரு குற்றம் எப்படியோ நடைபெற்றுவிட்டது என்று எண்ணக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்குமேயானால், அப்படி எதிர்க்கட்சித் தலைவரின் மீதோ அல்லது எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் மீதோ அப்படி ஒரு எண்ணம் ஏற்படக்கூடிய நிலைமை பொதுமக்களிடத்தே உருவாக்கப்பட்டிருக்கின்றபோது அதற்குக் காரணமாக உள்ள சூழ்நிலை எது என்பதை அறிந்துக்கொள்வதற்குக் கூட உரிமைப் பிரச்னை கொண்டுவருதவன் மூலமாகத்தான் தாங்கள் தகுந்த ஆதாயத்தைத் தர முடியும் எதிர்க்கட்சி தலைவரைப் பற்றி எந்தப் பத்திரிகையிலே வேண்டுமானாலும் யார் மூலமாக வேணடுமானாலும் சட்டமன்றத்தின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு வேண்டுமானாலும், ஒருவேளை சபாநாயகரே அனுமதித்தார் என்ற பெயரைப் பயன்படுத்தியே வரக்கூடுமானால் அது அவைத்தலைவருடைய பெருமைக்கு ஏற்றதல்ல, அது அவையினுடைய பெருமையையும் பாதிபதாகத்தான் ஆகும் என்ற காரணத்தாலேதான் மாண்புமிகு உறுப்பினர் சற்று உணர்ச்சிவசப்பட்டு அதை எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பிறருடைய உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடியும் (குறுக்கீடு) ரீ கன்சிடர் பண்ண வேண்டும் என்று கேட்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் திரும்பவும் எழுதிக் கொடுக்கட்டும். அதைப்பற்றி நான் ஆலோசிக்கிறேன்.

(இ) தள்ளுபடி செய்யப்பெற்ற வினா.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதிக்காக கேள்வியை இங்கே போட்டு அதன் மூலம் அமைச்சர்களிடமிருந்து ஒரு அஷ்யூரன்ஸ் வாங்கலாமா என்று எண்ணித்தான் கேள்விகளைக் கொடுக்கிறார்கள் நானும் அதே மாதிரி என்னுடைய நிலக்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய ஒரு தொகுதியாக இருப்பதால் அங்கே ஒரு நூற்பாலை வைக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தக் கேள்வி காரணமில்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அது ஏன்?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி யெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். கவர்னர் உரையிலே பேசலாம் என்பதால் தள்ளுபடி செய்து இருப்பார்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே நூற்பாலை அமைக்கப்படுவது பற்றிய கேள்வி அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோது நிலக்கோட்டையில் நூற்பாலை பற்றி கேட்டபோது ஏன் அனுமதிக்கவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரையின் மீது சபையிலே பேசுவதற்கு அம்மையார் அவர்களுக்கு ஸ்பெஷலாகவே அனுமதி கொடுத்தேனே; அவரது தொகுதியான நிலக்கோட்டையில் நூற்பாலை அவ்வளவு முக்கியமானதாக இருந்தால் (குறுக்கீடு) அவர்கள் பேசியபோது முதலிலே நூற்பாலை பற்றித்தானே பேசி இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மற்றவற்றை யெல்லாம் பேசிவிட்டு இப்போது கேள்வி கேட்டால் நான் என்ன செய்ய முடியும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்செந்தூர் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கபெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், ப. தீர்த்த ராமன், ப. நெடுமாறன், மு. அப்பாதுரை, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி., எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, பொ. உத்திராவதி சு. பாலன், ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், கு. ரமணி, ரா. உமாநாத், எஸ். இராசாராமன், அ. ரகுமான்கான், சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், நா. சுந்தரராஜ் பொ. விஜயராகவன், ஆகியோர் '' கடந்த 26-1-1982 அன்று திருச்செந்தூர் முருகன் கோயிலில் அர்ச்சனை செய்துவந்த அண்ணாவி என்ற முத்துசுப்பிரமணியம்என்பவர் காவல் துறையினரால் பயங்கரமாக தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் அந்தப் பகுதியில் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு குமரி அனந்தன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் 26–1–1982 ஆம் தேதியன்று, அங்கே சுவாமி தரிசனத்திற்காக வந்திருக்கிற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த குழந்தையின் செயின் காணாமல் போய்விட்டது. அதற்காக அந்தக் குடும்பத்தை ஆலய தரிசனத்திற்காக அழைத்துச் சென்ற அர்ச்சகர் அண்ணாவி என்ற முத்துச் சுப்பிரமணியத்தை போலீசார் சித்திரவதை செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றித்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

உண்மையான திருடர்களைப் பிடித்து போலீசார் விசாரித்தால் அது வேறு விஷயம். ஆனால் எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் ஆதாரத்திற்கான அடிப்படைக் கூட இல்லாமல், இந்த அண்ணாவியை அழைத்துக் கொண்டு போய் போலீஸ் நிலையத்திலே மூர்க்கத்தனமாக சித்திரவதை செய்திருக்கிறார்கள். அவருடைய உடம்பு பூராவும் இரத்தக் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள், அது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

*திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவர் அவர்களே, இதே போன்ற நிலையில் அவர் 3 நாட்கள் போலீஸ் நிலையத்திலேயே சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார். அவருடைய உறவினர்கள் மேலதிகாரிகளுக்கு தந்தி கொடுத்த பின்னால், ஊரில் உள்ள சர்வ கட்சிகளும் ஒன்று சேர்ந்து இதை எதிர்த்து ஒரு ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்து, அறிவித்த பின்னால் 3 நாட்கள் கழித்து அவரை போலீஸ் நிலையத்திலிருந்து உறவினர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவர் மீண்டும் மருத்துவ மனையில் அவருடைய உறவினர்களால் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவருடைய ரத்தம் தோய்ந்த ஆடைகள் காவல் துறையினரால் ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. போலீசார் செய்த சித்திரவதைகளின் காரணமாக புத்தி பேதலித்த நிலையிலே அவர் இருக்கிறார். இது குறித்து எல்லாக் கட்சிகளும், ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சினையில் குரல் கொடுத்திருக்கிறார்கள். என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே காவல் துறையினர் சர்வாதிகாரமும், அக்கிரமமான முறையிலே எந்த ஆதாரமும் இல்லாமல் அவரைச் சித்திரவதை செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். என்பதும், அந்தப் பகுதியின் மக்கள் மத்தியிலே ஒரு பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி யிருக்கிறது. எனவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி பரிபூரணமாக விவாதிக்க

வேண்டும். இது ஒரு நிகழ்ச்சி மாத்திரமல்ல தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் குறித்து, போலீஸ் அடக்குமுறை, அக்கிரமங்கள் குறித்து, தமிழ்நாடு பூராவும் உள்ள பல பகுதிகளிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே இதை விவாதிப்பதின் மூலம் மற்ற பிரச்சினைகளுக்கும் பரிகாரம் ஏற்படும் என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் இன்னும் இரண்டு தினங்களில் ஒரு கமிஷன் மீது விவாதிப்பதற்கு முன்னாலேயே, திருச்செந்தூரில் நடைபெற்ற முத்து சுப்பிரமணியத்தினுடைய போலீஸ் சித்திரவதை குறித்து இந்த சபையிலே விவாதிக்க நேர்ந்ததற்கு நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இந்தச் சம்பவத்தைப் பார்க்கிற போது, குற்றவாளி என்று எண்ணி, விசாரணைக்காக நாங்கள் காவல் நிலையத்திற்கு அழைத்துப் போகிறோம் என்று சொல்லி, அங்கே இருக்கக்கூடிய காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்திருக்கிறார்கள். அங்கேயே அவரைத் தொடர்ந்து விசாரணை செய்வதற்குப் பதிலாக திருநெல்வேலியில் இருக்கக்கூடிய யாரோ ஒரு காவலரிடம் அவரை ஒப்புவித்து, அவரை அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்திற்கு அழைத்துச் சென்று 2 தினங்கள் மிகவும் கேவலமான முறையில் சித்திரவதை செய்திருக்கிறார்கள்.

அவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அவரை மிக மோசமான முறையில் நடத்தியிருக்கிறார்கள். அவர் அணிந்திருந்த பூணூலைக் கூட அறுத்து மிகவும் கொச்சையான முறையில் துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்த பிறகு, அங்கே இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும், ஆளும் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட்ட, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, முன்பு ஒரு முறை ஒரு சுப்பிரமணியத்திற்கு நேர்ந்த நிலை இவருக்கும் வந்து விடக்கூடாது என்ற முன் எச்சரிக்கையின் காரணமாக—மிகப் பெரிய ஊர்வலம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்ததை அறிந்ததின் காரணமாக, அவரை உடனடியாக அந்தக் கிராமத்திலிருந்து காவல் நிலையத்திற்கு வரவழைத்து, முத்து சுப்பிரமண்யம் அவர்கள் காவல் நிலையத்திலேயே இருக்கிறார், நீங்கள் வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று அவருடைய உறவினர்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10–20]

இன்று தமிழ்நாட்டில் நடைபெறுவது ஜனநாயக ஆட்சிதானா இல்லையென்று சொன்னால் போலீஸ் ஆட்சியா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் விளக்குங்கள்.

**திரு. மு. அப்பாதுரை :** ஆக. இன்றைக்கு போலீசின் அத்து மீறிய செயல்கள் தொடர்ந்து வந்து இன்று அந்த முத்து சுப்பிர மணியன் என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவரது உயிருக்கு ஆபத்தானதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. திருச்செந்தூரில் இந்தச் சம்பவத்தையொட்டி மக்களிடையே கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழகத்தில் மீண்டும் ஒரு கமிஷன் ஏற்பட வேண்டாம் என்ற நிலை உருவாக வேண்டுமென்று சொன்னால் இதைப் பற்றி இந்த அவையில் முழுமையாக விவாதிக்க வேண்டும். ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் போலீஸின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதி அளிக்கக்கூடிய விதத்தில் தொடர்ந்து பல நடவடிக்கைகள் நடந்து வருவதில் ஒரு பகுதி யாகத்தான் இந்தத் திருச்செந்தூர் சம்பவம் என்று தான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பார்க்கிறது என்று உங்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே நேற்று முன் தினம் இந்த அவையில் பேசும் போது வாடிப்பட்டி போன்று வேறு பல ஊர்களில இப்படிப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன என்று உறுப்பினர்கள் சொன்னார் கள். போலீஸ்காரர்களின் நடவடிக்கைகள் இன்னும் மாறவில்லை என்ற ஒரு நிலைதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை வேதனை யோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1950க்கு முன்பு ஏதாவது தகவல் வேண்டுமென்றால் ஏதாவது காரணத்தை சொல்லி போலீஸ் பாதுகாப்பில் இருப்பவர்களை கடுமையாக சித்திரவதை செய்து பெற்றுக் கொண்டிருந்தார்கள். அதே நிலை தான் இன்றும், சுதந்திரம் பெற்று, குடியரசு மலர்ந்து 31 ஆண்டு களாகியும் கூட போலீஸைப் பொறுத்த வரையில் மேலும் மேலும் கொடுமைப்படுத்துகிற நிலைக்குத்தான் போய்கொண்டிருக் கிறது என்ற நிலையில் அதன் உச்ச கட்டமாக திருச்செந்தூர் வந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இந்த திருச்செந்தூருக்கும் சுப்பிரமண்யத்திற்கும்—திருச்செந்தூரில் இருப்பது சுப்பிரமணியர் கோவில் தானே—தொடர்பான நிலை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அண்ணாவி என்ற முத்து சுப்பிரமண்யம் தொழில் வருகிற யாத்திரீகர்களை அழைத்துச் சென்று கோவிலில் உள்ள எல்லா இடங்களையும் காட்டி, தேங் காய் பழம் உடைத்து வருகிறவர்களை உபசரித்து அனுப்பி[illegible]





அதன் மூலம் யாத்திரீகர்கள் கொடுக்கிற காசை வைத்துக் கொண்டு ஜீவனம் நடத்தக்கூடிய ஒரு ஏழை எளிய அர்ச்சகராகத் தான் அவர் இருக்கிறார். ஒரு குழந்தையின் கழுத்தில் உள்ள செயின் காணாமல் போய்விட்டது என்ற புகாரை போலீஸில் கொடுத்து இவரை அடித்தால் அந்தச் சங்கிலி கிடைக்கும் என்று அவர்கள் தூண்டியதன் அடிப்படையில், அவர்கள் சொல்வதைக் கேட்டு போலீஸ் இந்த அண்ணாவி என்பவரை கடுமையாக சித்திரவதை செய்ததோடு மட்டுமல்லாமல் ஏதாவது தங்கள் மேல் கேஸ் வந்துவிடக் கூடாதே என்ற முறையில் தங்களைப் பாது காத்துக் கொள்ள போலீஸ்காரர்கள் இவரை ஒரு இடத்திற்குக் கூட்டிப் போய் வைத்து அவர் வாயில் வேண்டுமென்றே பலவந்த மாக சாராயத்தை ஊற்றி இவர் குடித்திருக்கிறார் என்று பொய் கேஸ்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் தீர் மானத்திற்கு நான் இசைவு கொடுக்க வில்லை. எனவே பிரச்சி னைக்குள் போக வேண்டாம். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** இதைவிட உச்ச கட்டத்திற்குப் போய்விட்டார்கள். அவரை சம்பந்தமில்லாத திருநெல்வேலி ஸ்டேஷனுக்கு வரவழைத்து சித்திரவதை செய்து கடைசியில் அவர் உயிருக்கு ஆபத்து வரக்கூடிய ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுவிட்டது. அதைப் பார்த்த பிறகுதான் இவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது. அவருக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஆளுகிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி இவையெல்லாம் சேர்ந்து கூட்டம் போட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகுதான் இவர் போலீஸ் கஸ்டடியில் இருக்கிறார் அவரைக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம். சொல்ல வேண்டிய விஷயம் பூராவும் சொல்லியாகிவிட்டது.

**திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்** அவர் உடல் பூரா வும் ரத்த காயமாகி இருக்கிறது. அதற்குப் பின்னால்தான் அவர் ஆஸ்பத்திரியில் அட்மிஷன் செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். அவரது நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து அனைத்துக் கட்சிகளும் உண்ணாவிரதம் இருந்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரர்முத்தி என்கிற சொரணம் [1982 பிப்ரவரி 10

ஆகவே, இப்படிப்பட்ட போலீஸ் கொடுமைகளை நிறுத்துவதற்கு எந்த முறையில் நிறுத்துவது என்பதற்காக விரிவாக விவாதிப்பதோடு மட்டுமல்லாமல் இந்த சம்பவங்களுக்கு காரணமாக இருந்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சம்பவங்களை விசாரிக்க தற்போது ஆர். டி.ஓ. போடப்பட்டிருக்கிறார். அது போதுமானதாக இல்லை. எனவே, உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்பதை விவாதிப்பதற்காகவும் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்க வேண்டுமென்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி திருச்செந்தூர் சுப்பிரமணிய சாமி ஆலயத்தில் தரிசனத்துற்காக ஒரு குடும்பம் வந்திருக்கிறது. அங்கே வருகின்றவர்களை அழைத்துச் சென்று, கோவிலில் உள்ள எல்லா இடங்களையும் காண்பித்து, அதன் பிறகு அவர்கள் கொடுக்கின்ற அந்தக் காசைப்பெற்று, அநத இடத்திலே உள்ள மக்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும், கோவிலிடத்திலும் நல்ல பெயர் வாங்கிய அர்ச்சகர் அண்ணாவி என்பவர். அப்படிப்பட்ட அவர் அன்றையதினம் வந்த ஒரு குடும்பத்தினரை அழைத்துச் சென்று கோவிலைச் சுற்றிப்பார்த்த நேரத்திலும் கூட, அந்தக் குடும்பத்தினரை எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவித்திருக்கிறார். குழந்தை மேல் நகைகள் போடப்பட்டிருக்கிறதே ஜாக்கிரதையாக இருங்கள் என்று அவ்வப்போது அவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறார். அவர்கள் சுற்றிப் பார்த்து சென்றுவிட்ட 10, 15 நிமிடங்களுக்குப் பிறகு வெளியே சென்றுவிட்ட பிறகு, குழந்தையின் ஒரு 10 கிராம் நகை காணவில்லை என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். போலீசார் அந்தப் புகாரைப் பெற்றுக் கொண்டு எந்தவிதமான ஆலோசனையும் செய்யாமல் நல்ல பெயர் எடுத்து வந்த அர்ச்சகர் அண்ணாவி அவர்களை உடனே அழைத்து மிகக் கொடூரமாக அடித்திருக்கிறார்கள். அப்படி அடித்ததோடு மட்டுமல்ல. போலீஸ் ஸ்டேஷனுக்கும், மற்ற இடங்களுக்கும் அழைத்துச் சென்று மிருகத்தனமாக அடித்திருக்கிறார்கள். துன்புறுத்தியிருக்கிறார்கள். என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல. இன்றையதினம் திருச்செந்தூரிலே இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நல்ல பெயர் எடுத்த ஒருவருக்கு இப்படிப்பட்ட கதி ஏற்பட்டிருப்பதைக் கண்டு எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கொதித்தெழுந்து போலீசாரின் அநாகரீகமான செயலைக் கண்டித்திருக்கிறார்கள். அதன் பிறகு தான் அவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது குறித்து அங்குள்ள மக்கள் போலீசின் இந்த மோசமான நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 10] [திரு. சு. பாலன்]

ஆகவே. இப்படி தொடர்ந்து பல சம்பவங்கள் ஏற்படுகின்ற காரணத்தை ஆராயவும், போலீசார் வேண்டுமென்றே இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகின்றார்களா என்பதை அறியவும், நாம் ஒரு குழுவை அமைத்து இப்படிப்பட்ட செயல்கள், காரியங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க நாம் இன்றைய இதர அலுவல்களையெல்லாம் நிறுத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்

[முற்பகல் 10·30]

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் சுப்பிரமணியர் சுவாமி கோவிலில் நடைபெற்ற சம்பவம் குறித்து எனக்கு முன்னால் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்கிறேன். உண்மையில் அந்தச் சம்பவம் வருந்தத்தக்க சம்பவம் என்று சொல்வதோடு தமிழகத்தில் ஆட்சி பீடத்தில் இருக்கக்கூடிய அண்ணா தி. மு. க. அரசுக்கு இழுக்கைத் தேடுகிற சம்பவமாக கருதவேண்டும். திருச்செந்தூர் என்று சொன்னாலே தமிழக மக்கள் மத்தியில் ஒரு அச்சம் மட்டுமல்ல, ஒரு அலர்ஜியான சூழ்நிலை உருவாக்க்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கோயிலில் பணியாற்றுகிற சாதாரண ஊழியரான அர்ச்சகர் அண்ணாவி என்பவரை காவல் துறையினர் அடித்துத் துன்புறுத்தி இருக்கிறார்கள். அந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது திருநெல்வேலியில் இருக்கக்கூடிய காவலர் ஒருவரும் வந்து தனியாக அவரை அழைத்துப் போய் அடித்திருக்கிறார். சாராயத்தை வேண்டுமென்றே ஊற்றி தொந்தரவுகளைக் கொடுத்திருக்கிறார்கள். மூன்று நாட்களுக்குப் பின்னர் அண்ணாவியின் தாயார் * * * *

அறங்காவலர் குழுவிடம் வந்து என்னுடைய மகனை எங்கே என்று கேட்ட பின்னால் காவல் நிலையத்திற்குப் போன் செய்து கேட்டபோது மூன்று நான்கு நாட்கள் வைத்திருந்து விடுவித்து விட்டதாகக் கூறியிருக்கிறார்கள்

அந்த மூன்று நான்கு நாட்களில் அவர் பல்வேறு வகையான இம்சைகளுக்கு ஆளாயிருக்கின்றார். ஒரு சாதாரண அர்ச்சகருக்கு இந்த அளவுக்கு கொடுமைகள் நடத்தப்பட வேண்டுமா? திருட்டுக் கேசை விசாரிக்க வேண்டிய முறை உண்டு. இப்போது நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சியானது அரசாங்கத்திற்கு ஒரு அவப்பெயர் தேடும் வகையில் அமைந்திருக்கிறது. காவல் துறையினர் தமிழகம் பூராவும் இந்தமாதிரி நிலைமைகளைத் தொடர்ந்து

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1982 பிப்ரவரி 10

ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இது போன்ற சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று சொன்னால் உயர் மட்ட நீதிபதியை வைத்து விசாரணை செய்து மேலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு பாதுகாக்க வேண்டும். அந்த வகையில் முழு விசாரணை நடத்துவதுபற்றி எடுத்துக்கூற இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோவைத்தம்பி ;** பாயிண்ட் ஆப் ஆர்டர். * * * * * * * என்று உறுப்பினர் அவர்கள் பேசும் போது கூறினார். அவ்வாறு கூறுவது சரியா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பொ. விஜயராகவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அண்மையில் திருச்செந்தூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைப் பற்றி இந்த மாமன்றத்தில் கொடுக்கப்படிருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவில் அர்ச்சகர் அண்ணாவி என்பவரை திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவராகக் கருதி அந்த ஊரில் இருக்கும் போலீசார் மட்டுமல்லாது திருநெல்வேலியில் இருக்கும் போலீசாரும் அவரை இழுத்துச் சென்று பல நாட்கள் அடித்து துன்புறுத்தி இம்சித்து கொடுமைக்குள்ளாக்கியிருக்கிறார்கள். செய்யாத குற்றத்திற்கு இவ்வளவு மிகுந்த வேதனையை அனுபவிக்கக்கூடிய துர்ப்பாக்கியமான நிலை தமிழகத்தில் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கொஞ்சகாலத்திற்கு முன்னால் திருச்செந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியினால் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டு கமிஷன் போடப்பட்டு ரிப்போர்ட் எல்லாம் வந்து நாம் நாளையும் நாளைய மறுதினமும் விவாதிக்க இருக்கிறோம். அதே திருச்செந்தூர் பொதுமக்களின் உணர்வுகளைத் தூண்டுகிற வகையில் இப்போது ஒரு நிகழ்ச்சி நடைபெறீறிருக்கிறது. பொதுவாக இன்றைக்குத் தமிழகத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நிலமை போலீஸ் ராஜ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு காவல் துறையின் அடக்கு முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. இது போன்ற நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வாடிப்பட்டி நிகழ்ச்சி பற்றி மாமன்றத்தில் நேற்றுக் கூட எடுத்துக் கூறப்பட்டது. வாடிப்பட்டியில் போலீஸ் துறையைச் சார்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒரு ஆசிரியையை அடித்து துன்புறுத்தியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கொடுத்த பிரச்சினை மீது மட்டும் கருத்துக்களை கூறவேண்டும். மற்ற பிரச்சினைக்குள்ளே போகக் கூடாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 பிப்ரவரி 10]

**திரு. பொ. விஜயராகவன் :** இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இந்த திருச்செந்தூர் சம்பவத்தைப் பற்றி உண்மையை விசாரித்தறிந்து நடவடிக்கை எடுக்க நீதி விசாரணை ஏற்படுத்த வேண்டுமென்பதை எடுத்து விளக்குவதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூரிலே 26—1—1982 அன்று திருநெல்வேலியிலிருந்து சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு தரிசனத்திற்கு வந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையினுடைய நகையைக் காணவில்லை என்பதற்காக அண்ணாவி என்ற முத்து சுப்பிரமணியம் என்ற அர்ச்சகர் காவலரால் அழைத்துச் செல்லப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அவருடைய பூணூலைக்கூட அறுத்து அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அடித்த அடியை அந்தக் கொடுமையைத் தாங்கமுடியாமல் அவர் புத்தி பேதலித்த நிலையில் இருக்கிறார்.

பொதுவாகக் காவல் துறையைச் சோந்தவர்கள் ஒரு ஊரிலே பதவியை ஏற்றவுடனே அந்த ஊரிலே நல்லவகர்ள் யார், கெட்டவர்கள் யார் என்பதை உடனடியாகத் தெரிந்து கொள்ள முடியாது. கூடுமானவரை போலீஸ் ஸ்டேஷன்களிலே ரௌடிகளின் துணை கொண்டு தான் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. சாராயம் குடித்துவிட்டு தெருக்களிலே சண்டை போடுகிறவர்களை விட்டு விடுகிறார்கள். கைகளிலே கம்புகளை வைத்துக்கொண்டு அடிதடிகளில் இறங்கக்கூடிய மிகப் பெரிய ரௌடிகளை விட்டுவிடுகிறார்கள். ஆனால் அப்பாவி அகப்பட்டுக்கொண்டால் அவர்களை எவ்வளவு மிருகத்தனமாகத் தாக்கமுடியுமோ அவ்வளவு தாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இத்தகைய முறை தொடராமல் இருப்பதற்காக விளக்கம் நாம் அவர்களிடம் கேட்டால் நியாயம் தம் பக்கம் இருப்பதாகத்தான் அவர்கள் சொல்வார்கள். எனவே சிறப்பாக ஒரு நீதிபதியைப் போட்டு, உண்மையிலேயே அந்தச் சம்பவம் நடந்ததா. அவர் அழைத்துச் சென்று மிருகத்தனமாக காவல் துறையினரால் தாக்கப்பட்டாரா என்பதை விசாரித்து அறிந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூரிலே நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து மன்ற உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாக கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 10

காவல் துறை மானியத்திலே பேசவேண்டிய பல்வேறு கருத்துக்களை இதிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு அரசு அந்த அளவுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது என்றுதான் இதிலே வருமே தவிர 50 ஆயிரம் காவல் துறையினர் இருக்கின்ற நிலையிலே ஆங்காங்கே ஒன்றிரண்டு இருக்கிறது என்றால் அவைகளையெல்லாம் காவல் துறை மானியத்திலே பேசுகின்றபோது தெரிவிக்கலாம். இன்றைக்கு மாநிலங்கள் எப்படி இருக்கின்றன, இந்தியாவே எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறலாம்.

குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றிச் செய்தித் தாள்களிலேயும் மற்ற வகைகளிலேயும் வந்த விவரங்களை வைத்து ஒவ்வொருவரும் அறிந்த வரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது தவறு என்று நான் குறிப்பிட மாட்டேன். எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி இந்த அரசு என்ன கடமையை, பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டிருக்கிறது என்பதை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

26—1—1982 அன்று இரவு 9 மணி அளவில் நெல்லை நகரைச் சேர்ந்த பழனிச்சாமித் தேவர் திருச்செந்தூர் கோயிலிலே அர்ச்சகராக இருக்கும் அண்ணாவி என்கிற முத்துசுப்பிரமணியம் என்பவருடன் திருச்செந்தூர் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். தாம் கோயிலில் வழிப்பட்டுக் கொண்டிருந்தபோது அர்ச்சகர் அண்ணாவி தம் குழந்தையிடமிருந்து 11 கிராம் எடையுள்ள தங்க நகையைக் கழற்றிவிட்டதாக தாம் சந்தேகப்படுவதாகக் கூறினார். பழனிச்சாமித் தேவரை புகார் மனு அளிக்கும்படி காவல் துறையினர் கேட்டுக்கொண்டபோது தன் தந்தையுடன் கலந்தாலோசிப்பதாகக் கூறிவிட்டு சென்றார். அது சம்பந்தமாக திருச்செந்தூர் காவல் நிலையத்தில் பொதுப் பதிவேட்டில் குறிப்பு மட்டும் எழுதிவைக்கப்பட்டது. 28—1—82 அன்று காலை சுமார் 7 மணி அளவிலே பழனிச்சாமித் தேவர் மறுபடியும் காவல் நிலையத்திற்கு வந்து அண்ணாவியின் மீது சந்தேகத் திருட்டுப் புகார் ஒன்றைக் கொடுத்தார். அதில் அண்ணாவி தன் உறவினரிடமிருந்து நகையை வாங்கித் தருவதாகக் கூறி பழனிச்சாமி தேவருடன் நெல்லைக்கு வந்திருந்ததாகவும் கூறியுள்ளார். இது சம்பந்தமாக திருச்செந்தூர் காவல் நிலையத்தில் 65/82 பிரிவு 379-இன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடத்தப்பட்டது. அன்று இரவு சுமார் 9—30 மணி அளவில் திருச்செந்தூர் அரசு மருத்துவ மனையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் திருச்செந்தூர் காவல் நிலையத் தலைமைக் காவலர் 1655 என்ற எண்ணுடையவர் மருத்துவ மனைக்குச் சென்று அங்கே உள் நோயாளியாக அனுமதிக்கப்பெற்ற அண்ணாவியிடமிருந்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டார். அண்ணாவியின் வாக்குமூலத்தில் தான் நெல்லை நகரக் காவல் நிலையக் காவலர் 2660 என்ற எண்ணுடைய ஆசைத்தம்பி மற்றும் பழனிச்சாமித் தேவர் ஆகியோரால்



1982 பிப்ரவரி 10] [டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

தாக்கப்பட்டதாகக் கூறினார். நெல்லை நகரக் காவல் நிலையக் காவலர் 2660 என்ற எண்ணுடைய ஆசைத்தம்பி, புகார் மனுக் கொடுத்த பழனிச்சாமித் தேவருடைய உறவினர் என்று சொல்லப்படுகிறது.

(முற்பகல் 10·40)

ஆகவே, திருச்செந்தூரில் இதன் காரணமாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கு 66/82-இன் கீழ், இதிலே இ. த. ச. 342, 323 நெல்லை வட்ட வருவாய் அதிகாரி அவர்களுக்குக் காவல் நிலைய ஆணைகள் 145-இன் கீழ் விசாரணைக்கு அனைத்துக் கட்டுகளுடன் 2—2—1982-இல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புகாரில் கூறப்பட்டுள்ள காவலர் ஆசைத்தம்பி இப்பொழுது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை சீராக நடைபெற திருச்செந்தூர் காவல் துறை ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும், தலைமைக் காவலரும் வேறு வேறு ஊர்களுக்கு உடனடியாக மாற்றுதல் செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கு தற்பொழுது நெல்லை வட்டார வருவாய் அதிகாரியின் விசாரணையில் உள்ளது. விசாரணையின்படி, விசாரணையின் முடிவை ஒட்டி குற்றவாளிகள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, பழனிச்சாமி தேவர் மீதும், குறிப்பிட்ட காவலரின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால் அதிலே என்ன நியாயங்கள் ஏற்பட வேண்டுமோ அந்த நியாயங்களைச் செய்ய இந்த அரசு என்றைக்கும் ஆயத்தமாக இருக்கும். அதன் காரணமாக விசாரணைக்குக் குந்தகம் ஏற்படுமோ என்பதற்காகத்தான் அங்கேயிருந்த காவல் துறை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், இப்படி மூன்று பேர்களையும் வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றிவிட்டு விசாரணை செய்யும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யார் தன்னை அடித்ததாகக் குறிப்பிட்டாரோ அந்தக் காவலர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார். இது பற்றி அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்பதை இங்கே நான் அரசின் சார்பாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதன் காரணமாக, இதை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

### 4. கவன ஈர்ப்புகள்.

#### (அ) நெல் லெவி கொள்முதல் முறை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் மி. வின்சென்ட், உ. சுப்பிரமணியன், இரா. அருணகிரி, என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஆர். உமாநாத், டி. மணி, செ. சிவ சாமி, தி. நல்லப்பன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. மி. வின்சென்ட் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, '' நெல் கொள்முதலுக்கு உள்ள லெவி நிபந்தனைகளால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாவதும் அதனால் அரிசி வியாபாரிகள் கடைகளை மூடியுள்ளதும் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 'மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

கடந்த ஆண்டு மாநிலத்தின் பெரும்பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டது. 1980 நவம்பர் மாதம்வரை பொது விநியோக முறையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 7,500 டன்கள் முதல் 11,000 டன்கள்வரை விற்பனையாகி வந்த அரிசியின் அளவு 1980 டிசம்பர் மாதத்திலிருந்து அதிகரித்து, 1981 ஆகஸ்ட் மாதத்தில் 79,000 டன்கள் விற்பனையாகியது. அதற்குப் பிறகு கூட மாதம் ஒன்றுக்கு 60,000 டன்கள் முதல் 70,000 டன்கள்வரை விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பொது விநியோக முறையில் அரிசி விற்பனை அளவு அதிகரித்ததால் கொள்முதலை தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாம் மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு பெற்றபோதும், அதை முழுமையாக எடுக்க முடியவில்லை. மத்திய அரசு மத்தியத் தொகுப்பிலிருந்து 1981 ஜனவரி முதல் 1981 டிசம்பர்வரை 6,10,000 டன்கள் அரிசியை தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்தது. இந்திய உணவுக் கழகத்திடம் தமிழ் நாட்டில் கையிருப்பிலிருந்த மக்கள் விரும்பி வாங்கக் கூடிய தரமான அரிசி முழுவதும் எடுக்கப்பட்டது. ஒதுக்கீட்டின் மீதி அரிசியை அக்கழகம் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கொண்டு வந்து தர [illegible]



கொண்டது. போதுமான இரயில்வே வேகன்கள் கிடைக்காததால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி முழுவதையும் இந்திய உணவுக் கழகத்தால் தர முடியவில்லை. 1981ஆம் ஆண்டு முழுவதற்கும் 4,07,818 டன்கள்தான் தர முடிந்தது. நெல்/அரிசி கொள்முதலுக்கு வர்த்தக லெவியையும், ஆலைகள்மீது லெவியையும் விதிக்க வேண்டியது அவசியம் என்று மீண்டும் மீண்டும் இந்திய அரசு வற்புறுத்தி வந்தது. இந்த நிலையில் பொது விநியோக முறைக்குத் தேவையான அரிசியைப் கொள் முதல் செய்ய 20—1—1981 முதல் தமிழ் நாட்டில் மொத்த வர்த்தகர்கள் வாங்கும் நெல்/அரிசிமீது 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டது. இந்த லெவி 1—10—1981 முதல் 50 சத வீதம் ஆக உயர்த்தப்பட்டது.

பல மொத்த வணிகர்கள் சரிவர கணக்கு காட்டாமல் லெவி ஏய்ப்பு செய்வதாக புகார்கள் வந்ததால் மொத்த வணிகர்கள் கணக்குகள் தீவிரமாக ஆய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு தீவிரமாக ஆய்வு செய்வதை மொத்த வர்த்தகர்கள் பலர் எதிர்க்கின்றனர். மொத்த வர்த்தகர்கள் தங்கள் கணக்குகளை சரியாக வைத்துக் கொண்டு அரசுக்கு சேர வேண்டிய லெவியை ஒழுங்காக செலுத்தியிருந்தால் கணக்கு காட்டுவதற்கு அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் வைத்திருக்கும் நெல்/அரிசிக்கு ஏற்கனவே லெவி கொடுக்கப்பட்டு விட்டது என்பதை நிரூபித்தாலும், வெளி மாநிலங்களிலிருந்து வந்தது என்பதை நிரூபித்தாலும் அவற்றிற்கு லெவியினின்றும் விலக்கு உண்டு.

மொத்த வியாபாரிகளின் கணக்குகளை லெவி அமுலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆய்வு செய்வது அதிகாரிகளின் கடமையாகும். லெவி அமுலில் இருக்கும்போது இக்கடமை இன்னும் முக்கியமாகிறது. இந்த நிலையில் மொத்த வர்த்தகர்கள் கணக்கு காண்பிப்பதை ஏன் தவிர்க்க வேண்டும் என்பதும், அதை எதிர்த்து ஏன் கடைகளை மூட வேண்டுமென்பதும் புரியவில்லை.

கிராமப்புறங்களில் விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து விற்கும் நெல்லை வாங்க மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தேவையோ அங்கெல்லாம் நேரடிக் கொள்முதல் நிலையங்களை திறந்து சாதாரண ரக நெல்லை குவிண்டால் ரூ. 115-க்கும், சன்னரக நெல்லை குவிண்டால் ரூ. 119-க்கும் மிகச் சன்னரக நெல்லை குவிண்டால் ரூ. 123-க்கும் வாங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் 537 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமும் 12 நடமாடும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமும், 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கப்படுகிறது. விவசாயிகள் விற்க முன் வரும் நெல் முழுவதையும் வாங்க அரசு தயாராக உள்ளது. எனவே, கிராமப்புறங்களில் நெல் கொள்முதல் செய்ய தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 10*

1981 சம்பா பருவத்தில் லெவி மூலம் 1,51,000 டன்கள் நெல்லும் அரிசி கொள்முதல் செய்யப்பட்டன. 1981 குறுவை பருவத்தில் லெவி மூலம் 1,66,000 டன்கள் நெல்லும், 8,300 டன்கள் அரிசியும் வாங்கப்பட்டன. நடப்பு சம்பா பருவத்தில் லெவி மூலம் இதுவரை சுமார் 85,000 டன்கள் நெல்லும் 20,000 டன்கள் அரிசியும் வாங்கப்பட்டுள்ளன. 1981ஆம் ஆண்டில் 6,70,955 டன்கள் அரிசி பொது விநியோக முறையில் விற்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தனியாருக்கு விற்பனை செய்வதை தடுப்ப தில்லை. விவசாயிகளிடமிருந்து நெல் வாங்கும் மொத்த வியாபாரிகள்தான் வர்த்தகர் லெவி தர வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு சிரமம் ஏற்படவில்லை. லெவி தராமல் ஏமாற்றப் பார்க்கும் வியாபாரி களின் கணக்குகள் கவனமாக சோதிக்கப்படுவதையும், சட்டத் துக்கு புறம்பாக நெல் அல்லது அரிசி கடத்திச் செல்லும் லாரிகளை சோதனை செய்வதையும் விரும்பாத சிலர்தான் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக கூறுகின்றார்கள்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவரவர் களே, விவர அறிக்கையில் மத்திய அரசு 1981ஆம் ஆண்டு 6,10,000 டன்கள் அரிசியைத் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்தது என்றும், போதுமான இரயில்வே வேகன்கள் கிடைக் காததால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி முழுவதையும் இந்திய உணவுக் கழகத்தால் தர முடியவில்லை என்றும், 1981ஆம் ஆண்டு முழுவதற்கும் 4,07,818 டன்கள்தான் தர முடிந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு ஒதுக்கிய அரிசியை மாநில அரசு முழுமையாக எடுக்கவில்லை என இந்த மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி, மத்திய அரசைச் சார்ந்த இந்திய உணவுக் கழகத்தால் தர முடியவில்லையா, மாநில அரசு பெற்றுக் கொள்ள முன் வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல், குமரி மாவட்டத்தில் 12,500 டன் நெல் கொள் முதல் செய்ய வேண்டுமென உத்திரவிட்டுள்ளது. அங்கே பெரிய விவசாயிகள் கிடையாது, சிறிய விவசாயிகள் பாதிக்கப் படாமல்...........................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அறிக்கை அளித்த பின் பேசக் கூடாது. கேள்வியாகக் கேட்க வேண்டும்.

**திரு. மி. வின்சென்ட் :** குமரி மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க, டார்ஜெட் ஃபிக்ஸ் செய்யாமல் முடிந்த வரையில் நெல்லைக் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா ?



*1982 பிப்ரவரி 10]*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து டிசம்பர் திங்கள்வரையில் மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டாலும் அவர்கள் ஒதுக்கீடு செய்தது, ஆறு இலட்சத்துப் பத்தாயிரம் டன்கள். என்றா லும் கூட இங்கே வந்து சேரும்படியான நிலைமைகள் ஏற் பட்டது 4,07,818 டன்கள்தான். மத்திய அரசு அப்படி ஒதுக்கீடு செய்தாலும்கூட மற்ற இடத்திற்கு மாற்ற வேண்டிய வேகன்களைத் தர வேண்டிய பொறுப்பும் மத்திய நுகர் பொருள் வாணிபக் கழகத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. மத்திய அரசு வாகன்களை மொத்தமாக நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு என்று ஓரளவிற்கு ஒதுக்கிவிடுகிறது. நுகர்பொருள் வாணிபக் கழகத்தினர் அவர்கள் ஆங்காங்கு வைத்திருக்கின்ற சேமிப்பிலிருந்து பல்வேறு மாநிலங்களுக்கும், கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும், மற்ற இடங்களுக்கும் அனுப்ப வேண்டிய அவசியம் வருகிறபொழுது அவர்கள் எவ்வளவு வேகன்களை ஒதுக்குகிறார்களோ அந்த வேகன்கள் கொண்டு வருகிற, அளவிற்குத்தான் இங்கே அரிசி வந்து சேருகிறது. வேகன்களைப் பொறுத்து பற்றாகுறை ஏற்பட்டதன் காரணமாக வந்து சேர வேண்டியவைகள் வந்து சேரவில்லை என்று நான் குறிப்பிடுகிறேனே தவிர, மத்திய அரசு கொடுக்க வேண்டாமென்று நினைத்தது என்று குற்றம் சொல்லவில்லை. இதிலே குறை ஏற்பட்டது என்று சொல்கிறோமே தவிர, குற்றம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை. 6,10,000 டன்கள் ஒதுக்கீடு செய்தது உண்மை. அவை இங்கு வந்து சேர வேண்டுமென்றால், நாம் எப்படி போய் எடுக்க முடியும ? மத்திய நுகர்பொருள் வாணிபக் கழகத் திடம்தான் வேகன்கள் தரப்படுகின்ற பொறுப்பு இருக்கின்றது. அதைப் பயன்படுத்துகின்ற பொறுப்பு உணவு வாணிபக் கழகத் திற்கு ஏற்படுகின்றது. அவர்கள் எவ்வளவு ஒதுக்குகிறார்களோ, அவ்வளவுதான் வரும். வந்து சேர்ந்தது 4,07,818 டன்கள் தான். அந்தக் குறிப்பு தான் இங்கே தரப்பட்டிருக்கிறது. நாகர்கோவிலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனிக்கேள்வி போட்டால், அதுபற்றிய விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, லெவி கொள்முதல் செய்வதில் ஆட்சேபணை கிடையாது. ஆனால், அதனாலே விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற கஷ்டம் அதிகமாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லித்தான் ஆக வேண்டும். முதலாவதாக, விலை குறைவாக இருக்கிறது என்ற குறைபாடு இருக்கிறது. அங்கங்கே, 'செக் போஸ்ட்' களைப் போட்டு, ஒரு தாலுகாவுள்ளேயே நடமாட்டம் தடைபடுத்தப்படுகிறது. இதை அரசு சட்ட பூர்வமாகத் தீர்மானித்திருக்கிறதா என்று எங்களுக்குத் தெரியவில்லை. அங்கே, விவசாயி கொண்டு போகிற நெல்லைக் [illegible]

சோதித்து, நீ பட்டா வைத்திருக்கிறாயா ? உண்மையிலே நீ விவசாயியா ? இல்லை வியாபாரியா என்றெல்லாம் கேட்டு பல தொல்லைகளுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். ஆகவே, லெவி கொள்முதல் மூலமாக விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசு உணர வேண்டும். லெவி கொள்முதல் அமுல்படுத்தப்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அவல நிலையை, கஷ்டத்தை நீக்க சுலபமான முறைகளை ஏற்படுத்தி, விவசாயிகளை இம்சிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் லெவி வாங்குவது பெரும் வர்த்தகர்களிடத்தில் இருந்தும், அரிசி மில்களிடமிருந்தும்தான். விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து விற்கும் நெல்லை ஒரு குவிண்டால் ரூ. 115-க்கு வாங்குகிறோம். ஆகவே, விவசாயிகளுக்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படக் கூடாது என்பதற்காக, விவசாயிகளுக்கு லெவி வைக்கவில்லை. விவசாயிகளிடத்திலே நாம் கொள்முதல் செய்யவில்லை. ஆனால், கொள்முதல் செய்கின்ற இடங்களுக்கு விவசாயிகள் கொண்டுவந்து கொடுத்தால் வாங்குவதற்காக, தமிழ்நாட்டில் 537 நேரடிக் கொள்முதல் நிலையங்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். 12 நடமாடும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமும், 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. அவர்களாக வந்து கொடுத்தால், வாங்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், நாம் பெரிய வர்த்தகர்களிடமிருந்துதான் லெவி கொள்முதல் வாங்குகிறோம். விவசாயிகளிடத்திலே லெவி வாங்குவதில்லை. விவசாயிகளிடத்திலே வாங்கினால் ஒரு குவிண்டால் விலை ரூ. 115. ஆனால், வெளியிலே ரூ. 125, ரூ. 130, சென்ற ஆண்டைப்போல் இன்னும் சில இடங்களில் ரூ. 160, ரூ. 165-க்குக் கூட வாங்கப்படுகிறது. ஆகவே, விவசாயிகளை நாம் விட்டு வைத்திருப்பதற்குக் காரணம், அதனால் வருகின்ற இலாபம் விவசாயிகளுக்குப் போக வேண்டுமென்பதற்காகத்தான். பெரு வியாபாரிகள் 50 சதவீதம் கொடுத்து விட்டு, மீதி 50 சதவீதத்தை வெளியிலே விற்கின்றபொழுது லெவியில் ஏற்படுகின்ற நஷ்டத்தை, ஓப்பன் மார்க்கெட்டிலே விற்பதிலே சரிக் கட்டிக் கொள்ளலாம். ஆகவே, மத்திய அரசாங்கம் நிர்ணயித்த ரூ. 115 என்றுதான் விலை வைத்திருக்கிறோம். தனி விவசாயிகளைப் பொறுத்தவரை எந்தக் கஷ்டமும் இல்லை. விவசாயிகளிடத்திலேயிருந்து எந்தக் குறைபாடும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால், விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால், விவசாயிகள் தங்களிடத்திலே இவ்வளவு இருக்கலாம், அதைத் தான் வைத்திருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னால், ஏற்படாது. ஆனால், பெரிய முதலாளிகள், மற்றும் விவசாயிகளிடம் ஒவ்வொரு சமயத்திலும் அவர்கள் கையில் எவ்வளவு நெல் [illegible]





இருக்கும் என்ற கணக்கெல்லாம் இருக்கிறது. விவசாயிகளுக்குச் சொந்த உபயோகத்திற்கு எவ்வளவு மூட்டைகள் தேவை என்று சொல்லி விட்டால், அவர்களுக்குக் கவலை ஒன்றும் இல்லை. ஆனால், நடைமுறையில், மொத்த வியாபாரிகள், நெல்லை வாங்கிக் கொண்டு, விவசாயிகள் வீட்டிலேயே வைத்து விட்டு உங்களுடையது என்று சொல்லி விடுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே தான் பல தவறுகள் நிகழ்கின்றனவே தவிர விவசாயிகளைப் பொறுத்தவரை லெவி இல்லை. அவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கு எவ்வளவு வைத்துக் கொள்கிறோம், விற்பனைக்கு எவ்வளவு வைத்திருக்கிறோம் என்று கணக்குக் கொடுத்து விடுவார்களானால், எந்த ஒரு சங்கடமும் இல்லை. நான் குறிப்பிட்ட தவறுகளை செய்பவர்கள்கூட ஒருசில பெரு வியாபாரிகள்தானே தவிர, எல்லோரும் செய்வதில்லை. சில பேர் செய்வதன் காரணமாக சில பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரை எந்தக் கஷ்டமாவது ஏற்படுமானால் அதை உடனடியாகத் தீர்க்க அரசு ஆயுத்தமாக இருக்கிறது. அந்த வகையிலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வருவாய்த்துறைத் அதிகாரிகளுக்கும் ஆணையிட்டிருக்கிறோம். விவசாயிகளைப் பொறுத்தவரை எந்தக் கஷ்டமும் ஏற்படக் கூடாது என்றுதான் நாம் ஆணையிட்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-50).

திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே லெவி கொள்முதல் மூலமாக பாதிக்கப்படுவது முழுக்க முழுக்க விவசாயிகளே. காரணம் வியாபாரிகள் அந்த விவசாயிகளிடமிருந்து வாங்கக்கூடிய நெல்லுக்கு அவர்கள் கொள்முதல் லெவி அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று மிகக் குறைவான விலையில் விவசாயிகளிடம் இருந்து வாங்குகிறார்கள். அதைத் தீர்ப்பதற்காக நிரந்தர நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் லெவிக் கொள்முதலை அதிகப்படுத்தியும், நீர்ப்பாசனம் இல்லாத இடங்களில் மிகக் குறைவான அளவிலோ அல்லது முழுமையாக நீக்குகின்ற உத்தரவினை அரசு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வியாபாரிகள் வாங்குகின்ற நெல், எந்த நிலைமையிலும் அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலைக்கும் குறைவாக இருக்கக் கூடாது என்ற உத்தரவினை பிறப்பிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பெரும்பகுதியான லெவிக் கொள்முதல் செய்கின்ற நிலைமை தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்துதான் அமைகிறது. அதற்கு அடுத்தபடியாக திருச்சி மாவட்டம் வருகிறது. மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையிலும் அங்கே உற்பத்தியாகிற அளவுக்கு, அங்கே மக்களுக்குப் பயன்படுகிற அளவு, விற்பனை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 10

ஆகின்ற அளவு, முன் ஆண்டிலே ஏற்பட்ட நிலைமைகளை அடிப்படையாகவைத்து 10 ஆயிரம் 15 ஆயிரம் 20 ஆயிரம் டன்கள் என்று கொள்முதல் வைத்திருக்கிறார்கள். அதிலே கடுமை வேண்டாம் என்று வைத்திருக்கிறோம். 6 லட்சம் டன்கள் கொள்முதல் செய்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால், 1982 ஆம் ஆண்டு முழுவதும் நாம் விநியோகிப்பதற்கு நிலைமை வந்துவிடுமானால் கூட, சில பல காலத்திற்கு லெவி வாங்காமல் நிறுத்திவிடலாம். அந்த டார்ஜட் வரவேண்டும். 1 கோடியே 9 லட்சம் கார்டுகளுக்கு ஓராண்டு முழுவது விினியோகிப்பதற்கு உத்தரவாதம் செய்ய வேண்டி இருக்கின்ற காரணத்தினாலேதானே தவிர, மற்ற மாவட்டங்களில் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்குகளின் அடிப்படையில்தான் டார்ஜட் வைத்திருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்திலே, திருச்சி மாவட்டத்திலே அதிகமாக நாம் கொள்முதல் செய்கின்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக் கூடிய விவர அறிக்கையில் உணவு வர்த்தகர்கள் ஒழுங்காக கணக்குக் காட்டினால் உபத்திரவம் ஏற்படாது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நேரடியாக அறிந்து கொண்டது என்னவென்றால், சோழவந்தானிலே நெல்லைக் கொள்முதல் செய்கிறபோது அந்த வர்த்தகர்கள் நாம் கேட்கும் லெவியைக் கொடுத்து விட்டார்கள். அது மதுரைக்கோ திண்டுக்கல்லுக்கோ வந்ததற்குப் பின்னாலே அங்கே இருக்கக் கூடிய தாசில்தாரோ, அல்லது உணவு சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ சொல்லுகிறார்கள். நாங்கள் இங்கே எங்களுடைய கோட்டாவை நிறைவேற்ற வேண்டும், ஆகவே இங்கே ஒரு லெவி கொடுக்கவேண்டும் என்று இரட்டை லெவி முறை இன்று அனுஷ்டிக்கப் படுவதால்தான் இந்த சிரமங்கள் வந்திருக்கின்றன என்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அடுத்து இப்படிப்பட்ட கொள்கையை அமலாக்குகிறபோது அந்தந்தப் பகுதியிலே இருக்கும்படியான அதிகாரிகள் எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் இன்று வியாபாரிகளிடத்திலே சிக்கலை ஏற்படுத்துகிறது. இன்றைக்கு மதுரை நகரத்திலே அரிசி ஆலைகள் ஓடவில்லை. அதனால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை இல்லை. பல இடங்களிலே கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, வேலூர் திண்டுக்கல், மதுரை போன்ற இடங்களுக்கு விசேஷமான கவனம் செலுத்தி இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு முயற்சி செய்யுமா ? இந்த இரட்டை லெவி முறையைக் கைவிடுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்த வியாபாரம் செய்கின்றவர்களுடைய கணக்குகளை பரிசோதனை செய்வதற்கு சட்டப்படி அதிகாரிகளுக்கு [illegible]



1982 பிப்ரவரி 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உரிமை இருக்கிறது. அவர்கள் எவ்வளவு வாங்கினார்கள்,
எவ்வளவு விற்றார்கள் எவ்வளவு லெவி கொடுத்தார்கள் என்ற
முழு விவரங்களையும் அளித்து விடுவார்களானால் அதிலே சிக்
கல்கள் ஏற்படவழியில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கூறுவது போன்று அல்லாது, நாம் திட்டவட்டமாகசொல்லி இருக்
கிறோம். ஒரு இடத்திலேதான் லெவி வாங்கவேண்டும். அவர்கள்
சொல்வது போன்று இரட்டை முறையில் லெவி வாங்கும்
நிலைமை இருக்குமானால் அதைக் சுட்டிக் காட்டுவார்களானால்
இதற்கான முயற்சியை நாம் மேற்கொண்டு, அதைத் தடுக்க
இருக்கிறோம். அதுமட்டுமல்ல அட்வான்ஸ் லெவி கூட வாங்க
வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். ஆந்திராவிலிருந்து
வருகின்ற நெல் அரிசிக்கு லெவி வாங்கும் நிலைமையில்லை. அது
வந்ததற்குப் பிறகு இங்கே இருக்கக் கூடியவர்கள் அதை
வெளி மாநிலத்திற்கு கொண்டு செல்வார்களானால் அப்போது
தான் அதற்கு லெவி தரவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.
மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற சூழ்நிலை இருக்கு
மானால் எந்த இடத்திலே இரட்டை லெவி இருக்கிறது என்று
சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும். எந்த இடத்
திலும் இரட்டை லெவி வாங்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சித்
தலைவர்களுக்கு திட்டவட்டமாக சொல்லி இருக்கிறோம். குறிப்
பாகச் சொல்லவும் இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே,
இங்கே வைக்கப்பட்டிருக்கிற கொள்கை அறிக்கையில் போதுமான
அளவுக்கு ஸ்டாக் அரசின் கையிலே இல்லாததன் காரணமாக
பொதுவினியோக முறையிலே குறைபாடு இருக்கக் கூடிய நிலை
ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக குமரி மாவட்டத்திலே மாதம் 30
கிலோ கொடுக்கப்பட்டு இருந்தது. பின்னர் 10 கிலோவாக ஆகி,
இப்போது 5 கிலோதான் சில இடங்களில் கொடுக்கும் அளவுக்கு
குறைந்திருக்கிறது.

இந்த நிலைமையிலே போதுமான அளவுக்கு பொதுமக்க
ளுக்கு வினியோகம் செய்து சொள்வதற்காக, விவசாயிகள்
தாங்களாகவே கொடுத்தால்தான் பெற்றுக் கொள்ளவேண்டும்
என்பது அரசின் கொள்கை. அதைப் பற்றி பெரும் நிலப்பிர
புக்கள், அவர்கள் தேவைக்கு அதிகமான நெல்லை ஓப்பன் மார்க்
கட்டிலே விற்கக்கூடிய அளவுக்கு இருக்கும் நெல்லை, லெவி
என்ற முறையிலே கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையை
அரசு எடுக்கவேண்டும். இன்று மக்கள் தேவையை கணக்கில்
எடுத்துக் கொண்டு மக்களுக்குப் பொது வினியோக முறையிலே
வழங்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. இப்படி அதிக
மான அளவிலே நெல் வைத்திருக்கின்ற நிலப்பிரபுக்களுடைய பட்
டியலை தயாரித்து. அவர்களிடம் இருந்து நெல்லை கொள்முதல்
செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா என்
பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியது
போல் உற்பத்தியாளர்களிடமிருந்து லெவி வாங்கும் முறை [illegible]

நாம் கையாளவில்லை. ஒரு 5—6 ஆண்டுகளுக்கு முன்பு கையாண்ட முறை வேறு. தற்போது பொதுவாக உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்காமல், மொத்த வியாபாரிகளிடமிருந்து லெவி கொள்முதல் செய்வது என்கிற முறையை மேற்கொண்டு வருகிறோம். இப்போது அரசு வினியோகம் செய்யும் அளவில் குறிப்பாக முதியவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ என்றும், சிறுவர்களுக்கு வாரத்திற்கு ½ கிலோ என்றும் அரிசியை எல்லா மாவட்டங்களிலும் வினியோகித்து வருகிறோம். மொத்தமாக 24 கிலோ அல்லது 30 கிலோ அரிசி கொடுக்கவேண்டும் என்று, அதை மாற்றுவதற்கு இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கும் அறிக்கையிலே விவசாயிகள் தனியார்களுக்கு விற்பனை செய்வதைத் தடுக்கவில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அப்படி இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதால் சில விளக்கங்களைக் கேட்கவிரும்புகிறேன். சாதாரணமாக, விவசாயிகள் தனியார்களிடத்தில் கொண்டுபோய் விற்றால், அவர்கள் 125 ரூபாய் குவிண்டாலுக்குக் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அரசாங்கத்திற்குக் கொடுத்தால் 115 ரூபாய் தான் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. சில்லரை வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து வாங்குகிறபோது 150 ரூபாய் கூட ஒரு குவிண்டாலுக்குக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் இப்படி சில்லரை வியாபாரிகளிடத்தில் விற்பதற்காக விவசாயிகள் 3 கோட்டை, 4 கோட்டை நெல்லை எடுத்துச்செல்லும்போது, அவர்களை பிடிக்கும் நிலைமை ஏற்படுகிறது. அம்பாசமுத்திரத்திற்கு அருகில் உள்ள ஆம்பூரிலும், ஆழ்வார் குறிச்சியிலும் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. 1 வாரத்திற்கு முன்பு பிடித்தும் இன்னும் அந்த மூட்டைகள் கிணற்றில் போட்ட கல் போல் அவர்கள் வசமே இருக்கிறது. நானும் போய் ரெப்ரசென்ட் செய்து விட்டு வந்தேன். அப்படியும் திரும்பக் கொடுக்கவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட தவறுகளைத் தடுக்கவும் நிவர்த்தி செய்யவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விவசாயிகள் சிறு அளவில் தனியார்களுக்கு விற்பனை செய்வதை நாம் தடுப்பது இல்லை. ஆனால் சில்லரை வியாபாரிகள் நேரடியாகக் கொள்முதல் செய்வதை நாம் தடுத்து இருக்கிறோம். மொத்த வியாபாரிகளிடமிருந்துதான் சில்லரை வியாபாரிகள் தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொள்ள வேண்டும். காரணம், மொத்த வியாபாரிகளும், சில்லரை வியாபாரிகள் என்று லைசென்சு பெற்று இருக்கிறார்கள். அதன் காரணமாக லெவி வாங்குவதற்கு முடிவது இல்லை. சில்லரை வியாபாரிகளைப் பொறுத்தவரையில் லெவி இல்லை. ஆகவே, விவசாயிகள் 6-7 பேர் ஒன்று சேர்ந்து விற்பதற்காக லாரியில் எடுத்துக்கொண்டு போகிறபோது அவர்களைப் பிடித்துக் கேட்டால் நாங்கள் ஒன்றாக சேர்ந்து இதனை எடுத்துச் செல்லு



போகிறோம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) வண்டி கட்டிக் கொண்டு போகிறபோதும் அப்படித்தான் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் எடுத்துக்கொண்டு போகிறபோது அவர்களை பிடிக்கின்ற நேரத்தில், அவர்கள் கூட்டாக எடுத்துக்கொண்டு போகின்றவர்களின் பெயரையும் சொல்லி, எடுத்துக்கொண்டு போய் கொடுக்கின்ற இடத்தையும் சொல்லிவிட்டால், அவர்கள் கொண்டு போய் கொடுத்த இடத்தில் நாம் லெவியைப் பெற முடியும். எங்கேயாவது விவசாயிகளுக்குச் சங்கடம் ஏற்பட்டு இருக்குமானால், அல்லது உற்பத்தியாளர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட நிலைமை இருக்குமானால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே பொதுவாக சிறுவிவசாயிகள் அரசாங்கத்திற்கு கொடுக்க விரும்பினால் நாங்கள் வாங்குகிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறாகள். ஆனால் அரசாங்கம் நிர்ணயித்து இருக்கும் விலை அதற்கு அட்ராக்டிவ்வாக இல்லை என்கிற பிரச்சினை இருக்கிறது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் இருக்கும் அரசாங்கம் சாதாரண ரகத்திற்கு 125 ரூபாய் கொடுக்கிறது. மத்திய அரசு கொடுக்கக்கூடாது என்று சொன்ன பின்னாலும் ரூ. 125 கொடுக்கிறது. அதைப்போலவே கர்நாடகத்தில் இருக்கிற அரசு மத்திய அரசு பிக்ஸ் செய்து இருக்கும் விலையை விட கூடுதலாக 10 ரூபாய் கொடுக்கின்றது. நம்முடைய மாநில சர்க்கார் அமைத்து இருக்கின்ற ஹை-லெவல் கமிட்டியிலே, ஆளும் கட்சி உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக 130 ரூபாய் கொடுக்கவேண்டியது நியாயம் என்று சொல்லியிருக்கின்ற போது, நம்முடைய சர்க்கார் ரூ. 115 தான் சாதாரண ரகத்திற்குக் கொடுக்கிறது. ஹைலெவல் கமிட்டியில் ஏகமனதாக எடுக்கப்பட்ட அந்த முடிவுப்படி வாங்குவதற்கு அரசாங்கம் ஏன் முன்வரக்கூடாது என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 11—00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, மத்திய சர்க்கார் 115 ரூபாய்க்குமேல் கொடுக்கக்கூடாது என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்குமேல் கொடுப்பதாக இருந்தால் ரிசர்வ் வங்கி மூலம் நமக்கு வரும் பணத்தில் தடங்கல் செய்கிறார்கள். அவர்கள் நிர்ணயித்த விலைக்கு மேல் கொள்முதல் விலையை உயர்த்திக்கொடுத்தால் அதற்கு பொறுப்பு ஏற்க முடியாது என்று சொல்கிறார்கள் மேற்கு வங்கத்தில் கூடுதலாகக் கொடுக்கிறார்கள் என்றால் அவர்கள் மத்திய சர்க்காரின் உத்தரவை மீறி செய்கிறார்கள். அதைப்போல கர்நாடகத்திலும் மீறி செய்கிறார்கள். நாம் மத்திய சர்க்கார் உத்தரவை மீறக்கூடாது நியாயமாக நடந்து கொள்ள வேண்

மென்ற அடிப்படையில் அவர்கள் நிர்ணயித்த விலையைக் கொடுக்கிறோம். அவர்கள் கூடுதல் கொடுக்கலாம் என்று அனுமதிதால் நாம் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்கலாம்.

**திரு. டி. மணி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தின் லெவி கொள்முதல் காரணமாகவும் எங்கள் மாவட்டத்தின் எல்லையில் விளவங்கோடு, கல்குளம் பகுதிகள் இருப்பதாலும் அங்கே அரிசி பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தாலும் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது விளைச்சல் அதிகமாக இருக்கிற காரணத்தால் அரசாங்கம் கொள்முதல் செய்வதில் ஏற்படுத்தியிருக்கிற விதிகளை சிறிது தளர்த்தி, ஒரு மாறுதல் செய்து, சிறிய விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க அரசாங்கம் நேரடியாக அவர்களிடம்கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் இவ்வளவு ரூபாய்க்குத்தான் கொள்முதல் செய்யலாம் என்று விலை நிர்ணயம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதனால் குவிண்டால் ஒன்றுக்கு 115 ரூபாய் கொடுக்கப்படுகிறது. தனியாரிடம் கூடுதல் விலைக்கு விற்கலாம் என்று அனுமதி அளித்திருக்கிறோம். அப்படி விற்கும் போது வியாபாரிகளிடமிருந்து லெவி கொள்முதல் செய்கிறோம். ஆகவே, இப்போதைய நிலையில் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்கலாம் என்று மத்திய சர்க்கார் அனுமதி அளிக்காதவரையில் நாம் கூடுதல் கொடுக்க வழியில்லை.

**திரு. செ. சிவசாமி :** துணைத் தலைவரவர்களே, சட்டப்பூர்வமாக நெல், அரிசி போக்குவரத்தில் கட்டுப்பாடு எதுவும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலேதான் லெவி வாங்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படி இருக்க, தொடர்ந்து 5 ஆண்டுகளாக பஞ்சத்தில் வாடிய இராமநாதபுரம் மாவட்டத்தில் லெவி என்ற பெயரால் பல கொடுமைகள் நடக்கின்றன. எங்கு பார்த்தாலும் செக்போஸ்ட் போட்டு, நெல் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தி, பறிமுதல் செய்யப்படுகிறது. சாலைக் கிராமத்தில் வேதமுத்து என்ற விவசாயியிடம் 47 மூட்டை நெல்லை அபகரித்திருக்கிறார்கள். அதனால் அங்கே சிறு விவசாயிகள் நெல்லை மார்க்கெட்டுக்குக் கொண்டு போய் நல்ல விலைக்கு விற்க முடியவில்லை. இப்படிப்பட்டநிலையை நீக்க வேண்டும். சிறு விவசாயிகளிடமிருந்து அபகரித்த நெல் மூட்டைகளை திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பரமக்குடியில் சாதாரண அரிசி ஆலை வியாபாரி ரசீது போட்டும்கூட அங்கிருந்து 9 மூட்டை நெல்லை அபகரித்து வந்திருக்கிறார்கள்.





இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கை இருப்பதால் இன்றைக்கு நிலைமை மோசமாக இருக்கிறது. இதை மாற்றியமைக்க, மீண்டும் சுமுக நிலை ஏற்பட, சாதாரண ஏழை எளிய விவசாயிகள் நெல்லை மார்க்கெட்டுக்குக் கொண்டுபோய் நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மட்டும்தான் கொள்முதல் திட்டம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. மாநிலம் பூராவும் கொள்முதல் திட்டம் இருக்கிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் அதிகமாக கொள்முதல் செய்யும் திட்டத்தை வைத்திருக்கிறோம். மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கிற மொத்த வியாபாரிகள் வாங்கிவிற்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த வியாபாரிகள் இல்லை என்றால் அங்கே கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மொத்த வியாபாரிகள் வாங்கி விற்கும்போது லெவி கொடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பறிமுதல் செய்திருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நல்லமுறையில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழக அரசு நெல்லுக்கு நிர்ணயித்திருக்கிற விலை குறைவாக இருப்பதால் வியாபாரிகள் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும்போது அதிகமான விலை கொடுத்து வாங்குகின்ற காரணத்தால் விவசாயிகள் அவர்களிடம் கொடுக்கிறார்கள். வியாபாரிகள் அதிக விலை கொடுத்து வாங்குகிறபோது இந்தவிலை கொடுக்கவேண்டியதிருப்பதால் அதிலே சிக்கல் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் 2, 3 மூட்டை நெல்லை இரட்டை மாட்டு வண்டியிலே, வைத்து, சந்தையிலே கொண்டு போய் விற்கக்கூடிய சிறு விவசாயிகளையும் தடுத்து நிறுத்தி அதிகாரிகள் பறிமுதல் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ரேஷன் கார்டில் ஒரு நபருக்கு ஒரு கிலோ, அரை கிலோ என்று கொடுக்கிற காரணத்தால் மக்கள் அந்த அரிசியை தேவையான அளவுக்கு பெற முடியாமல் இருக்கிறது. அதனால் வெளி மார்க்கெட்டில் அரிசி வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, அதற்கு தடையில்லாமல் ஏற்பாடுகளைச் செய்வதோடு அரசு கொள்முதல் செய்யும்போது கோயில்கள், மடங்கள் இவைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலத்திலிருந்து கிடைக்கின்ற நெல்லை முழுமையாக கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முதலிலேயே நான் குறிப்பிட்டபடி ஒரு வரைமுறை [illegible] கொள்முதல் செய்யப்படுகின்றது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 பிப்ரவரி 10

மொத்த வியாபாரிகளிடத்திலேதான் லெவி கொள்முதல் செய்யப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. கட்டுப்பாடியான விலை கிடைக்கவேண்டும் என்பது ஒரு பக்கம் இருக்கின்றது. விலைவாசி ஏறிவிடக்கூடாது என்ற பிரச்சினையும் இன்னொரு பக்கம் இருக்கின்றது. நாம் இந்த இரண்டு பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே விலைவாசி அதிகமாக ஏறிவிடாத வகையிலே உற்பத்தியாளர்களுக்கு போதுமான விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக நாம் மத்திய அரசினிடத்திலே விலை நிர்ணயம் சம்பந்தமாக பல தடவை வற்புறுத்தி வருகிறோம். மேலும் பொருட்களை குறைந்த விலையிலே மக்களுக்கு வினியோகிக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டதால்தான் லெவி முறை கொண்டு வரப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் உற்பத்திப் பொருளின் விலையினை அதிகமாக்க வேண்டும் என்று சொல்கின்றபோது அப்படி விலை ஏறினால் தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்று கன்ஸ்யூம் பண்ணுகின்ற மாநிலங்கள்தான் அதிகமாக பாதிக்கப்படும் என்றும் பஞ்சாப், அரியானா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் கமர்சியலாகச் செய்வதால் அவர்களுக்குத்தான் விலையினை ஏற்றினால் லாபம் என்றும் ஆகவே நமக்கு நஷ்டம்தான் என்றும் ஆகவேதான் அதிகவிலை ஏற்படுத்தவில்லை என்றும் காரணம் கூறுகிறார்கள். ஆகவே, இந்த நிலையிலே கட்டுப்படியாகக் கூடியவிலையிலே வியாபாரிகளுக்கு சற்று கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி மாணவர்கள் கைது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் சி. த. சிதம்பரம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

**திரு. சி. த. சிதம்பரம்:** தலைவரவர்களே, ''உண்ணாவிரதம் இருந்த காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரிமாணவர்கள் கைது செய்யப்பெற்றது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வர், தற்போதைய நிலவரம் குறித்து தந்துள்ள விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொங்கல் விடுமுறைக்குப்பின் 23—1—1982 அன்று அக்கல்லூரி திறக்கப்பட்டது. அன்று முதல்வர் ஊரில் இல்லை. பல மாணவர்கள் கல்லூரிக்கு முன்நின்று அவர்கள் [illegible]



1982 பிப்ரவரி 10] [திரு. செ. அரங்கநாயகம்]

தரவாக அனைவரையும் (மாணவர்கள், ஆசிரியர்கள், ஆசிரியல்லாத பணியாளர்கள்) கல்லூரிக்குள் செல்லவேண்டாமென கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் கோரிக்கை யாதெனில் தற்போதைய கல்லூரிமுதல்வரை பதவிநீக்கம் செய்யவேண்டும் என்பதாகும். ஏனென்றால் கடந்த ஆண்டு இம்முதல்வரின் காரை எரித்ததாக கூறப்படும் 12 மாணவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர். 27—1—1982 அன்று மதுரை—காமராஜ் பல்கலை கழக ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களுடைய ஆதரவை மாணவர்களுக்கு வெளிப்படையாக அறிவித்தனர். அவர்களும் மாணவர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதமிருந்தனர். அச்சடித்த விளம்பர சீட்டுகளையும் மாணவர்களுக்கு ஆதரவாக வெளியிட்டனர். அன்று மதுரை—காமராஜ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை சார்ந்த ஆசிரியர்களும் மற்றும் 40 ஆசிரியரல்லாத அலுவலகப் பணியாளர்களும் ஒட்டுமொத்தமாக சிறுவிடுப்பு எடுத்தனர் அன்றே (27—1—1982) அழகப்பா கல்லூரி நிர்வாகமும் தற்போதைய முதல்வரே பதவியில் தொடர்ந்து பணியில் இருக்கவேண்டுமெனத் தீர்மானம் எடுத்தது. 28—1—1982 அன்று கல்லூரி விடுதியிலுள்ள பெரும்பாலான மாணவர்கள் வீட்டுக்குத் திரும்பினர். கிளர்ச்சியில் ஈடுபட்ட ஆசிரியர்களும் ஆரிசியரல்லாத பணியாளரும் தொடர்ந்து 28—1—82, மற்றும் 29—1—82 கல்லூரிக்குச் செல்லவில்லை. 3—2—82 அன்று அக்கல்லூரி திறக்கப்பட்டுவிட்டது.

**திரு. சி. த. சிதம்பரம்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்ட 71 மாணவர்களும் விடுதலை செய்யப்படுவார்களா? அமைதி ஏற்பட வேண்டும் என்ற சூழ்நிலையில் வழக்குகள் வாபஸ் பெறப்படுமா? 30 பேர் தண்டிக்கப்பட்டிருப்பதாக இப்போது சொன்னார்கள். ஆனால் நீதிமன்றத்திலே 18 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 12 பேர்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, 18 பேர்கள் குற்றமற்றவர்கள் என்றும் நிரபராதிகள் என்றும் சொல்லப்படுவது உண்மையா? ஆகவே 12 பேர்கள் குற்றவாளிகள் என்பது தீர்ப்பானாலும் மொத்த வழக்குகளும் வாபஸ் பெறப்படுமா? சென்ற ஆண்டும் அக்கல்லூரி சரியான முறையிலே நடைபெறவில்லை, அதே போன்று இந்த ஆண்டும் அந்த நிலைமை ஏற்படாத அளவுக்கு நல்ல முறையிலே அக்கல்லூரி நடைபெறுவதற்குரிய முயற்சிகளை அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அந்தக் கல்லூரி அமைதியாக நடப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடத்தை மட்டும் சொல்லிக் கொடுக்க முற்படாமல் ஒழுக்கத்தையும் கற்றுத் தருகின்ற முறையிலே அரசு ஆவன செய்யுமா? ஆகவே மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்காக பழைய கால முறையான குருகுலக் கல்வி முறையினை அரசு மீண்டும் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்ற முறையிலே ஆசிரியர்கள் அவர்களுக்குச் சொல்லித்தந்து அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-10).

5. அரசினர் சட்ட முன்வடிவு.

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாக பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபச்சாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற இந்தக் கட்டத்திலேயே அதனை அறிமுகம் செய்வதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் பிரஜைகளுடைய அடிப்படையான ஃபண்டமெண்டல் ரைட்ஸையே கருவறுக்கிறது. அதற்காக, கள்ளச் சாராயம் காய்ச்சுவது சரியான செயல் என்று சொல்லவில்லை—ஃபண்டமெண்டல் ரைட் என்று சொல்லவில்லை; மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்வதை ஃபண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லவில்லை. ஆனால் யார் எந்தக் குற்றம் செய்தாலும் விசாரணைக் கூட இல்லாமல் சிறைப்படுத்துவது என்ற நடைமுறையில், விசாரணைக்கு வாய்ப்புக் கொடுக்க மறுப்பதைத் தான் பண்டமெண்டல் ரைட்ஸ் என்று சொல்லி ஆட்சேபிக்கிறேன்.



பச்சை இளம் குழந்தைகளை கொலை செய்த கொடியவர்கள் பில்லா, ரங்காவைக் கூட விசாரணை செய்தார்கள். அவர்களுக்குக் கூட விசாரணை உரிமை கொடுக்கப்பட்டது. அதன் மேல் அப்பீல் கொடுக்கப்பட்டது. அதற்கு மேலே ஜனாதிபதிக்கு பெட்டிஷன் போடும் உரிமை கொடுக்கப்பட்டது. அதற்கு மேல் சுப்ரீம் கோர்ட்டிற்கு எழுதிக் கேட்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறபோது,—அவர்களுடைய குற்றத்தை கம்பேர் பண்ணுகிறபோது, இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றங்கள் மிகச் சிறியதாகவே இருக்கிற காரணத்தால் விசாரணை உரிமையை மறுப்பது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரண விளக்க நோக்கத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற நோக்கத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை என்பது என் கருத்து. இந்தச் சட்டத்தை அமுல் படுத்துகிற போது, நிரபராதிகளும் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வேண்டும். நிரபராதிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது என்று சொல்லக் கூடும். ஆனால் சட்டம் உண்மையாக நடைமுறையில் பயன்படுத்தும்போது, அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்.

அதே போலத்தான் நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் பாஸ் பண்ணுகிறபோது, இந்தச் சட்டம் தொழிற்சங்கங்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட மாட்டாது என்று ரிபீடட் அஷ்யூரன்ஸ் கொடுக்கப்பட்டது. ஆனால் 3 நாட்களுக்கு முன்னர், எந்தெந்த தொழில்களில் வேலை நிறுத்தம் செய்தால் கைது செய்யப் படுவார்கள் என்று பகிரங்கமாக நோட்டிபிகேஷன் சென்டிரல் கவர்ன்மெண்டிலிருந்து வந்திருக்கிறது. முன்னால் இல்லை என்று சொல்வார்கள். பின்னால் எல்லாவற்றிற்கும் வந்துவிடும். ஆகவே விசாரணை இல்லாமல் கைது செய்யப்படுவது என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒருகால் ஆட்சியாளர்கள் சொல்லக் கூடும், தர்மபுரியிலும் மற்ற இடங்களிலும், விசாரிக்காமல் சுடவே செய்கிற போது, இது என்ன காவலில் வைக்கப்படுவதுதானே, இது என்ன பெரிய விஷயமா, என்று கேட்கலாம். அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமாக இருந்தாலும் கூட, மத்திய சர்க்கார் எப்பொழுது என்ன செய்யும் என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. முன்பு ஒரு முறை இந்த அரசை டிஸ்மிஸ் செய்யவில்லையா? அப்படி மறுபடியும் செய்து, மறுமுறை எலக்ஷன் வைக்கிறபோது, இப்போது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் செய்கிற வேலைகளை எல்லாம், எதிர்த்து இதே சட்டத்தின் கீழ் அவர்கள் உங்களையே கைது செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம். ஆகவே தான் சொல்கிறேன். இந்தச் சட்டம் உங்களுக்கு எதிராகவே பயன்படுத்தக்கூடிய சட்டம் என்பது ஒன்று. (மணியடிக்கப் பெற்றது) நான் மெரிட்சுக்குள் போகவில்லை. அறிமுகம் செய்வதை எதிர்த்துத்தான் பேசுகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1982 பிப்ரவரி 10

மற்றொன்று, ஊழல்கள் வளர்வதற்கும் இந்தச் சட்டம் இடம் அளிக்கும் என்பது. எப்படியென்றால், இந்தச் சட்டத்தைக் காட்டி பயமுறுத்தி பல ஆபிசர்களும், மற்றவர்களும் இதிலே பணம் ஈட்ட முடியும். ஆகவே அந்த வகையிலும் இது தேவை இல்லாத ஒரு சட்டம்.

அடுத்து, துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கா[illegible] சொல்ல விரும்புகிறேன். உங்களைப் போன்ற வழக்கறிஞர்[illegible] அனைவரையும் பாதிக்கக்கூடிய சட்டமாகவும் இது இருக்கிறது. எப்படியென்றால், கிராபிங் என்ற முறையில் நிலத்தை பிடுங்கி கொடுக்கும்போது பிரச்னைகள் எழுந்து, அந்த வழக்குகளை வழக்கறிஞர்கள் நடத்தினால், இந்தச் சட்டத்தின்படி, அதை தூண்டிவிடுபவர்களும் தண்டிக்கப்படுவார்கள். ஆதலால் வழக்கறிஞர்களையும் பாதிக்கக் கூடிய அளவில் இந்தச் சட்டம் இருக்கிறது.

வக்கீல் ஆஜராகும் போது நீங்கள் அதை ஊக்குவிக்கக்கூடியவர் என்று உங்களையும் டீடெயின் செய்யலாம் ஆகவே இப்படிப் பட்ட காரணங்களினால் இந்தச் சட்டத்தை இன்ட்ரொட்யூஸ் செய்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வக்கீல்கள் சென்று வழக்காடுகிறார்களே தவிர அவர்கள் உடந்தையாக இருக்க முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வழக்கறிஞர்கள் வழக்கறிஞர்கள் சட்டத்தின்படி தங்கள் கடமையை ஆற்றுகிறார்கள். ஆகவே, ஸ்லம் க்ராபேர்ஸ்-யை ஊக்குவிக்கிறார்கள் என்று கூறுவதை தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**திரு. ரா. உமாநாத் :** Why should you remove it? That is my interpretation.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று தங்கள் கட்சிக்காரர்களுக்காக வழக்காடுகிறார்களே தவிர, ஒரு கொலைக் கேஸில் ஆஜராகிறவரை கொலைக் குற்றத்திற்காக இதுவரை யாரையும் கைது செய்தது இல்லை. ஆகவே வழக்கறிஞர்களை ஈடுபடுத்திப் பேசுவது தவறு. அந்தக் குறிப்பு தேவை இல்லை. (குறுக்கீடு).

**Hon. Thiru C. PONNAIYAN :—**Advocates are there to assist the clients, but not to about the clients.



**திரு. வ. சத்தியமூர்த்தி :** திரு. உமாநாத் அவர்கள் வழக்கறிஞர்களை தவறு செய்யத் தூண்டுபவர்களாக ஒரு இலக்கணத்தைச் சொல்கிறார்கள் புதிதாக. அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அதை அவைக் குறிப்பில் ஏற்றலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவரவர்கள் [illegible]த்தைச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை [illegible]றுத்தாகிவிட்டது. வழக்கறிஞராகிய தாங்களும் அதை மறுத்து விட்டீர்கள். ஆக, இரண்டும் இருக்கட்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவந்திருக்கக் கூடிய இந்த சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாக எதிர்க்கிறேன். காரணம், குடும்பப் பெண்களைக் கூட விபசாரிகள் என்று சொல்லி கைது செய்து விடமுடியும். பொது அமைதிக்கு பங்கம் விளைத்தார் என்று அரசாங்கமும் அதிகாரிகளும் கருதினால் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம். இந்த அரசை விமர்சிக்கிற அரசியல்வாதிகளைக் கைது செய்யலாம். ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை, ஒரு ஆண்டு தடுப்புக் காவல் என்பது மட்டுமலல, ஒரு ஆண்டுக்குப் பிறகும் வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கலாம். ஒரு ஆண்டு சிறையிலிருந்து நோ ஜாமீன், ஜாமீனில் வரமுடியாது, நோ கோர்ட், நீதிமன்றத்திற்குக் கொண்டு போக முடியாது என்ற வகையில்தான் விதிகள் உள்ளன. சர்க்காரும் அதிகாரிகளும் யாரைப் பார்த்து விபசாரிகள் என்று சொல்கிறார்களோ, குண்டர்கள் என்று சொல்கிறார்களோ, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறவர் என்று சொல்கிறார்களோ அவர்களை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைக்கக்கூடிய கடுமையான சட்டம் இது. சொல்லப் போனால் இது ஒரு இடி அமின் ஆட்சியில் இருக்கலாம், ஒரு (Za.) ஜார் ஆட்சியில் இருக்கலாம், அல்லது ஒரு முசோலினி ஆட்சியில் இருக்கலாம், ஆனால் ஆயிரம் மலர்கள் பூக்கட்டும் என்று சொல்லிய அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிற இந்தச் சர்க்கார் இப்படிப்பட்டதொரு கறுப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதை எதிர்க்கிறோம்.

ஏற்கனவே ஒரு சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்று இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி சமூக விரோத சக்திகளை கைது செய்யலாம். அப்படி கைது செய்தால் ஏழு நாட்களுக்குள் மத்திய அரசிடம் தகவல் சொல்லியாக வேண்டும். தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கூடாது, இந்தச் சட்டத்தின்கீழ்தான் கைது செய்ய வேண்டும் என்று நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் இது அரசியல்வாதிகளைப் ப்ளாக்மெயில் செய்கிற சட்டம், பொதுமக்களை ப்ளாக்மெயில் செய்கிற சட்டம், இது ஒரு ப்ளாக்மெயில் சர்க்கார் என்று கூறி இதை வன்மையாக எதிர்க்கிறேன்.

[1982 பிப்ரவரி 10

டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் பார்டி ஆப் தி ஆக்ட்-க்குள் போகாமல் இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துவதே தவறு என்பதை நான் இங்கே உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

I want to draw your attention to Rule 123. ''சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் ஒன்று ஆளுநர் பரிந்துரை அல்லது குடியரசுத் தலைவரின் முன் ஒப்புதல் இன்றி கொண்டு வரப்பெற முடியாது எனப் பேரவைத் தலைவர் கருதுவாரேயாயின் அத்தகைய சட்ட முன்வடிவு அல்லது திருத்தம் பற்றிய முன்னறிவிப்பு வந்தவுடன், அந்தச் சட்ட முன்வடிவு அல்லது திருத்தத்தை, பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்க அதிகாரம் பெற்றவருக்குப் பேரவைத் தலைவர் அனுப்ப வேண்டும். அவ்வாறு பரிந்துரை அல்லது முன் இசைவு அளிக்கப் பெற்றால் அன்றி, அத் தீர்மானம் அலுவல் பட்டியலில் சேர்க்கப் பெறக் கூடாது'' என்றிருக்கிறது.

If you belive that this Bill should not be presented before this, House, without the consent of the President or the Governor .................(interruptions).

(முற்பகல் 11-20)

I want you to read this Article 200 of the Constitution wherein it has been stated: " Provided further that the Governor shall not assent to, but shall reserve for the consideration of the President, any Bill which in the opinion of the Governor would, if it became law, so derogate from the powers of the High Court as to endanger the position which that Court is by this Constitution designed to fill " அதாவது இங்கே அரசியல் சட்டத்தின் அடிப்படையிலேயே நம்முடைய நாட்டிலே உயர்நீதி மன்றங்கள் பல இருக்கின்றன. அதற்குப் பல நீதிமன்றங்கள் இருக்கின்றன. இங்கே சொல்லப்படுகின்ற குற்றங்கள் எல்லாம் அங்கே சாதாரணமான சட்டத்தின் அடிப்படையிலே, அவர்கள் They can be tried in any court of law and sentenced to varying terms of imprisonment or whatever is necessary.

அப்படியிருக்க இந்தச் சட்ட முன்வடிவை அமுல்படுத்துவது சரிதானா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த சட்டமுன்வடிவை அறிவித்தபோதே, இதற்கு நிச்சயமாக ஆளுநர் அவர்களோ அல்லது ஜனாதிபதியோ ஒப்புதல் அளிப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா என்பதை முதலில் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி உங்களுக்கு சந்தேகம் இருக்குமானால், then it is better to refer this to the Advocate-General. He is a member of this House.



1982 பிப்ரவரி 10] [டாக்டர் கே. சௌரிராஜன்]

அதைவிட இன்னும் அதிகமான, கேவலமான ஒரு நிலைமை இருக்கிறது. அது என்னவென்றால், சிடி முனிசிபல் ஆக்டின் கீழ், அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டால் கோர்ட்டிலே தண்டனை வழங்கப்படும். உங்கள் வீட்டில், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய வீட்டில் அனுமதியில்லாமல் ஒரு காம்பவுண்ட் கட்டிவிட்டால், உங்களை இந்தச் சட்டத்தின் மூலமாக பிரிவென்டிவ் டிடென்ஷன் என்ற முறையில் கைது செய்ய முடியும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

I am not prepared to sign the arrest warrant of my own. I want your ruling on this subject, whether this bill should get the approval of the President or the Governor.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் எனக்கு பயம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்கு பயப்படவில்லை.

Dr. K. SOWRIRAJAN : I want your ruling. I want to know whether this will be referred to the Advocate-General.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜனாதிபதி அல்லது ஆளுநர் ஒப்புதல் கொடுப்பது பற்றி நீங்கள் சொல்ல முடியாது.

டாக்டர் கே. சௌரிராஜன் : ஹைகோர்ட்டின் அதிகாரத்தைப் பறிக்கின்ற அளவில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த விவாதம் தேவையில்லை. அவரவர்களுடைய அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருடைய அதிகாரத்தையும் பறிக்கவில்லை.

Dr. K. SOWRIRAJAN : Will you refer this to the Advocate General or not ? He is a member of this House. I do not like to be a party to this. Therefore, I am walking out of this House.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலே விளக்கத்தைத் தருகிறேன். அவர்கள் வெளியேற வேண்டாம்.

(Dr. K. Sowrirajan staged a walk-out)

[1982 பிப்ரவரி 10

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுத்து, அவர்களை தடுப்புக் காவலில் வைப்பதற்காக என்று கூறி, இந்த அரசு ஒரு சட்ட முன்வடிவை இந்த அவையிலே அறிமுகம் செய்வதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடுமையான ஆட்சேபணையை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான குற்றங்களை புரிபவர்களைத் தண்டிப்பதற்கு நடமுறையிலேயே இன்றைக்கு பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. கிரிமினல் புரசீஜர் கோட் இருக்கிறது; இந்தியன் பீனல் கோட் இருக்கிறது. இந்தச் சட்டங்கள் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு, இதைத் தடுப்பதற்கு போதுமான அதிகாரங்கள் இந்த அரசுக்கும், போலீசுக்கும் இருக்கிறது. ஆனால், அதை விடுத்து இன்றைய தினம் இம்மாதிரியான சட்டம் அவசியம் என்று கூறினால், அது விநோதமாக இருக்கிறது. இன்றைய தினம் சாதாரணமாக அரசு புறம்போக்கு நில்ங்களில் குடிசை போட்டால், அதை இப்போதுள்ள சட்டத்தின் கீழ் தடுப்பதற்கு அவர்களை கைது செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு, கிராமங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போடுவது.. அதற்கு அடமானம் பெறுவது. அடமானம் பெறுவதற்கு முயற்சிப்பது போன்ற இம்மாதிரியான காரியங்கள் சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கிறது. அதற்கு இம்மாதிரியான் சட்டத்தைப் பயன்படுத்தி அவர்களை சமூக விரோதிகள் என்ற பெயரால் விசாரணை இன்றி தடுப்புக் காவலில் வைப்பது. சிறைப்படுத்துவது என்பது அரசியல் அடிப்படையான மனிதனுக்குள்ள உரிமையை பறிக்கக்கூடியதாகும். அத்தகைய முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, இந்தச் சட்டம் எதைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்படுகிறதோ அது நடைமுறையில் பயன்படப் போவதில்லை. அரசியலில் எதிர்க்கக் கூடியவர்களை வஞ்சம் தீர்ப்பதற்கான முறையில்தான் இந்தச் சட்டம் பயன்பட உதவியாக இருக்கும். இதை அமுல் செய்யக்கூடிய பொறுப்பு போலீஸ் அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எவ்வாறு அமுல் செய்வார்கள் என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். போலீஸ் அதிகாரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக என்று கொல்லி நக்ஸலைட்டுகளைக் கொலை செய்கின்ற நிகழ்ச்சிகளை



1982 பிப்ரவரி 10] [திரு. இரா. கருப்பையா]

எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இம்மாதிரியான முறையில் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைப்பதற்குள்ள அதிகாரங்களைக் கொடுக்கக்கூடிய இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யக்கூடிய இந்த நேரத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கடுமையான ஆட்சேபணையைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. இ. முத்துராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ்க் குற்றம் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றம் செய்பவர்கள், சட்டவிரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆளும் கட்சிக்கு வேண்டாதவர்களையும் மாற்றுக் கட்சியினரையும் அடக்குகின்ற ஒரு காரியத்தைச் செய்கிற வழிவகை இந்தச் சட்டத்தில் இருக்கிறது. அது போக ஏற்கனவே காவல் துறையினர் தங்களுடைய இஷ்டம்போல் எந்த அளவுக்குப் பொதுமக்களைக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்பதைப் பல்வேறு செயல்கள் மூலம் நாம் அறிந்துவருகிறோம். இந்தச் சட்டத்தின் மூலம் காவல் துறையினருக்கு மேலும் அதிகாரங்கள் கொடுக்கப்பெற்று பொது மக்கள் மத்தியில் ஒரு அமைதியில்லாத சூழ்நிலையை உருவாக்கும் நிலைமையை ஏற்படுத்துமாதலால் இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றங்களுக்கு அன்றாட நடைமுறைச் சட்டங்களிலேயே தண்டனையளிக்க வழிவகைகள் இருக்கின்றன. அதுவே போதுமானது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் பொது வாழ்வில் இருப்பவர்களைப் பழிவாங்க போலீஸ் அதிகாரிகளுக்கு ஆதாரமாக போய்விடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. நாம் அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். 'மிசா' போடப்பட்ட காலத்தில் போலீஸ் எவ்வாறு நடந்துகொண்டது என்பதைப் பார்த்திருக்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவிலே குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றங்களின் மீது நடைமுறைச் சட்டங்களின் படியே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வழிவகை இருப்பதால் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதையே நான் எதிர்க்கிறேன்.

[1982 பிப்ரவரி 10

*திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமூக விரோதிகளைக் கடுமையாக ஒடுக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. ஆனால் சமூக விரோதிகளை ஒடுக்குவது என்ற பெயராலே வரைமுறை இல்லாத அதிகாரங்களை அதிகாரிகளுக்கு நாம் வழங்குவோமானால் அவர்கள் அதை துஷ்பிரயோகம் செய்யக் கூடிய அபாயம் இருக்கிறது. மத்திய அரசு கொண்டு வந்த தேசீயப் பாதுகாப்புச் சட்டத்தை எந்த நோக்கத்தோடு எதிர்த்தோமோ அதே நோக்கத்தோடு இதையும் நாங்கள் எதிர்த்தாக வேண்டிய கடமையில் இருக்கிறோம். குறிப்பாக இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒன்று—அதிகாரி யாரை வேண்டுமானாலும் குறிப்பிட்ட காரணங்களைச் சொல்லி உள்ளே வைத்தால் அதற்குப் பின்னால் ஆலோசனைக் குழுவுக்குப் போய் அவர்கள் பரிந்துரை செய்து விடுதலை செய்யலாம். அப்படி விடுதலை செய்யப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று அந்த அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

இது போன்ற அதிகாரங்களை நாம் அதிகார வர்க்கத்திற்கு வழங்குவோமானால் தமிழ் மக்களின உரிமைகளைப் பறிக்கும் ஆகவே இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்கிற இந்தக் கட்டத்திலேயே எங்கள் கட்சியின் சார்பில் இதற்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே இந்தச் சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றன. எனவே இது தேவையற்றது என்பதை நான் ஜனதா கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறோம், குறிப்பாக கள்ளச் சாராயம் காய்சுகிறவர்களை பிடிப்பதற்கும் தண்டிப்பதற்கும் Prohibi ion Act இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிந்திருக்கிறார்கள். மருந்துப் பொருட்கள் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு Food Ad l erat on Ac' இருக்கிறது. இந்தச் சட்டம் அமலில் இருக்கிறது. அப்படிக் குற்றம் செய்தவர்கள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்காக சட்டம் இருப்பதும், சட்டப்புத்தகத்திலே அது இருப்பதும் பற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். குண்டர்களைத் தண்டிப்பதற்கு I. P. C. இருக்கிறது. விபச்சாரத்தைத் தடுப்பதற்கும் ஒழிப்பதற்கும் விபச்சாரம் சவிய்கிறவர்களைத் தண்டிப்பதற்கும் Suppressi n of Immoral



1982 பிப்ரவரி 10] [திரு பி. முகமது இஸ்மாயில்]

ra fic Acr இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே நில ஆக்கிரமிப்பாளர்களைத் தண்டிப்பதற்கும் அகற்றுவதற்கும் Land Encroachment Act இருக்கிறது. எனவே இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கின்றபோது இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதால் இதிலே ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று நாங்கள் அஞ்சுகிறோம். எனவே இந்தச் சட்டம் தேவையற்றது என்பதை தெரிவித்து ஆரம்பக் கட்டத்திலேயே ஜனதாக் கட்சி இதை எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அ... ளே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் ... பேசுகின்றபோது Boob-le‍gar O di ance யின் கீழ் ...யப்படுகிறவர்களுக்குக் கூட 7 நாட்களில் பரிகாரம் ... ஆனால் இதிலே கைது செய்யப்படுகிறவர் ...ரு ஆண்டு ஆனாலும் கூட பரிகாரம் கிட்டாது ...ற பொருள்படும்படியாகப் பேசினார்கள்.

திரு, அ. ரகுமான்கான்: நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னது தேசீயப் பாதுகாப்புச் சட்டத்திலே கைது செய்யப்பட்டால் அது சம்பந்தப்பட்ட விவரங்களை மத்திய சர்க்காருக்கு குறிப்பிட்ட தேதிக்குள் தெரிவித்தாக வேண்டும். ஆனால் நீங்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தால் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டியது இல்லை. ஒரு ஆண்டு அல்ல, பல ஆண்டுகள் கூட சிறையில் வைக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தேசீயப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்படவேண்டிய அளவுக்கு என்ன என்ன வரைமுறைகள் நியதிகள் கையாளப்பட வேண்டுமோ அதே முறைகள் தான் இந்தச் சட்டமுன்வடிவிலும் நடைமுறைப்படுத்த இருக்கிறது. நான் ஒன்றை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். திரு. முகம்மது இஸ்மாயில் அவர்களும் திரு. ஆண்டித்தேவர் அவர்களும் திரு. ரகுமான்கான் அவர்களும் இருக்கின்ற சட்டத்தின் மூலமே இது போன்ற குற்றங்களைத் தடுக்க முடியாதா என்று கேட்டார்கள். இருக்கின்ற சட்டங்களுக்கும் N.S.A. and P.D.A. ஆகிய சட்டங்களுக்கும் பெரிய மாறுபாடுகள் இருக்கின்றன. விபச்சாரத்திலே ஒருவர் ஈடுபடுகிறபோது, குண்டர் தொழிலிலே ஈடுபடுகின்றபோது ஏழைகள் இன்னலுக்கு ஆளாகிற காரணத்தினால் ஏற்படுகிற குற்றம். T e exis i g provisions of the Law will take ca e of t e n என்பதன்கீழ் வருகிறது. ஆனால் இந்தச் சட்டத்தின் காரணமாய் consequence of such ac ivity what would even ually re ul is public disorder or distu rbance to Public renquili y என்று

[திரு. சி. பொன்னையன்] [1982 பிப்ரவரி 10

அடிப்படையிலே வருகிறபோது N.S.A. வைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதே அடிப்படையிலே விபச்சாரத்திலே ஈடுபடுகிறவர்களாயிருந்தாலும் சரி, விபச்சாரத்தை நடத்து கிறவர்களாய் இருந்தாலும் சரி, குறிப்பாக ஒன்றும் புரியாத வர்களை Wo.ne. are kidnapped and used for pros i ution. என்ற அளவுக்கு இருக்கின்ற பல தகவல்களை செய்திகள் மூலமாக பாரதம் தழுவிய நிலையில் நாம் கேள்விப் பட்டிருக் கிறோம். அந்த அளவிலே பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுகிற அளவில் நிலைமைகள் இருக்கிறபோது இந்தச் சட்டம் தேவை என்பது இந்தச் சட்டத்திலே உள்ள விளக்கத்தின் மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் வாழ்நாள் முழுவதும் சிறையிலே இருக்கவேண்டுமென்று சொ...கள். அது ரெக்கார்டாகி இருக்கிறது. வாழ்நாள் ...ாவும் இல்லை: மூன்று மாத காலத்தில் மீண்டும் அட்வைசரி கமிட்டிக்கு வந்து சரியா, இருக்கிறதா என்றெல்... பார்த்து (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, நான் சொல்லும் தகவல் வேறு; அமைச்சரவர்கள் சொல்லும் தகவல் வேறு. நான் சொன்ன கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு சொல்லுகிறார்கள் என்று கருது கிறேன். இங்கே அமைச்சரவர்கள் கொண்டு வந்த சட் டத்தைப் படித்துப் பார்த்தேன். ஏற்கனவே ஒரு முறை குற்றம் சுமத்தப்பட்டு அதிலே கைது செய்யப்பட்டால் அவர் சிறையிலே வைக்கப்படுகிறார்; கோர்ட்டுக்குப் போக முடி யாது. அட்வைசரி போர்டுதான் முடிவு செய்ய வேண்டும் மூன்று மாத காலம். பிறகு ஓராண்டு தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படி வெளியே வந்த பிறகு அதே சட்டத்தின் கீழ் கைது செய்யலாம்; உள்ளே கொண்டு போகலாம்; வெளியே வந்த பிறகு பழையபடி கைது செய்யலாம். எனவே, இந்தச் சட்டத்தினுடைய அடிப்படையிலே தடுப்புக் காவல் என்பது காலங்காலமாக நீடித்துக்கொண்டே போகலாம். நீங்கள் போட்ட அட்வைசரி போர்டு அரசாங்கம் போட்ட போர்டு. அதுதான் தீர்மானிக்க வேண்டும். அது தீர் மானித்தால் ஏழை எளிய மக்களைச் சிறையில் தொடர்ந்து வைக்கலாம். பழையபடி எக்ஸ்டென்ட் செய்யலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தற்போது நடைமுறையில் உள்ள I.P.C. Criminal Procedure case போன்றவைகளையெல்லாம் தனிப்பட்ட நபர் தவறு செய்யும் பொழுது, தனிப்பட்ட நபர் பாதிக்கப்படும்பொழுது, அப்படிப் பாதிக்கப்படுகிறாரே அவரைப் பொறுத்துத்தான் அங்கே இருக் கின்ற சட்டத்தைப் பயன்படுத்த முடியும். ஆனால் N.S.A. P.DA போன்றவைப்போல், Whe. he publica. l rge. are affecap இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.



1982 பிப்ரவரி 10] [திரு. சி. பொன்னையன்]

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்லும்பொழுது முசோலினி சர்க்காரா என்று கேட்டார்கள். முசோலினி சர்க்காரா என்று கேட்டதற்காகச் சொல்கிறேன். இந்தச் சட்டம் தமிழகத்திலே மட்டும்தான் முதன்முதலாக வந்தது என்பதுபோல திரு ரகுமான்கான் அவர்கள் பேசக்கூடாது. ஏற்கனவே பஞ்சாப் மாநிலத்திலே இருக்கிறது. இராஜஸ்தான் மாநிலத்திலேயும், உத்தரப் பிரதேசத்திலேயும் பீகாரிலேயும் இருக்கிறது; மகாராஷ்டிரத்திலே இந்த நடைமுறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பே...பொழுது இதற்கு கவர்னர் அனுமதி தருவாரா: பிரசி ...ம் ...மதி தருவாரா என்றெல்லாம் கேட்டர்கள். ...ம் மைய அரசுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு ...றப்பட்டு தான் வெளியிடப்பட்டிருக்கிறது.

3?4 (b) of the con tit tio .

பிரகாரம் பிரசிடென்ட் அவர்களின் முன் அனுமதியை இந்தச் சட்டத்திற்கு பெற வேண்டியதில்லை.

2?7 (3) o the cons itu io .

பிரகாரம் ஆளுநர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றாலே போதும். ஆகவே, சட்டத்திற்கு உட்பட்டுத்தான் நடை முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைவிட மேலாக, This is a subjec covered by the Conc rre ce Li t of t e constitutio . The Sta e ha go t e Power to legislat re.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கருப்பையா, மூத்து ராமலிங்கம் ஆகியவர்கள் பேசும்பொழுது இதை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தைக் பொறுத்தவரைக்கும், ஏற்கனவே சொன் னதைப் போல, விபச்சாரம் நடத்துபவர்கள், குண்டர்களாக இருந்து ஏழைகளைக் கொடுமைப்படுத்துகின்றவர்கள், கள்ளச் சாராயத்தில் ஈடுபட்டு விஷத்தைக் கலந்து பலர் இறப்பதற்கு காரணமாக இருப்பவர்கள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வந்து, பொதுமக்கள் பெரும்பான்மையாகப் பாதிக்கப்படும் பொழுது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் விவாதத்திற்கு வரும்பொழுது விளக்கங்களைக் கூறி முடிவு செய்யலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்பொழுதுதான் பயன்படுத்த முடியுமே தவிர (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில்லை அறிமுகப்படுத்து கின்ற நேரத்தில் இவ்வளவு பெரிய விவாதம் அனுமதிக்கப்படுவது கிடையாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே பேச அனுமதிக்கப்பட்டகாரணத்தினால் நான் பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறேன்.

திரு மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்திலே வருகின்ற குண்டர்கள் என்ற பகுதியைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் தொடர்ந்து நான்கைந்து தடவைகள் ஒரே வாக்கியத்தை உச்சரித்திருக்கிறார்கள். அது வேறுவிதமான விபரீதமான விளைவுத்திற்குப் போய்விடும் என்பதற்காகச் சொல்கிறோம். ஏழைகளைக் கொடுமைப்படுத்தும் குண்டர்கள், பணக்காரர்களைக் கொடுமைப் படுத்துவதிலிருந்து பாதுகாக்க என்று சொல்கிறார். அப்படிச் சொல்லும்பொழுது, ஏழைகள் என்பவர்கள் எந்தவிதமான ஆபத்திற்கும் ஆளாகமாட்டார்கள் என்ற பொருள் தொனிக்கிறது. எனவே பொதுமக்களைப் பாதிக்கின்ற அளவிற்குக் காரியங்களைச் செய்கின்ற குண்டர்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஏழைகளைத்தான் குண்டர்கள் கொடுமை செய்வார்கள். பணக்காரர்களைக் கொடுமை செய்வதில்லை என்றோ அல்லது பணக்காரர்களைத்தான் கொடுமை செய்வார்கள், ஏழைகளைக் கொடுமை செய்வதில்லை என்றோ பொருள் வந்துவிடக்கூடாது. ஆகவே, இதைத் திரும்பத் திரும்பச் சொன்னதால் சட்டத்தை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் அல்ல.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குண்டர்களிடமிருந்து பணக்காரர்களுக்கும் பாதுகாப்பு வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுமக்கள் எல்லோருக் கும் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: This is applicable to the Public at large என்று கூட நான் சொன்னேன். விளக்கம் கூறுகின்றபொழுது, This is applicable to the public at large என்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவருக்கு அதைத்தான் சொல்கிறேன். அதிகப் படியான பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் ஏழைகளாக இருக்கிற காரணத்தாலே, [illegible] கத்தின் அடிப்படையில் சொன்னேனே ஒழிய, இந்தச் [illegible] தைப் பொறுத்தவரைக்கும் This is applicable to the Public at large என்பதை நான் கூறிக் கொண்டு, மாண்புமிகு பேரவைத் [illegible] அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த [illegible]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின்கீழ்க் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்ய பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுப பவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று, நிறை வேறறப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

***திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, நேற்றைய தினம் இந்த விவாதம் முடிவதாக இரு தாலும், மாண்புமிகு முதலமைச்சருக்கு உடல் நலம் இல்லா லிருந்து, எனக்கும் இரண்டு நாட்களாக உடலில் நலம் இல்லா லிருந்த காரணத்தால், முதலமைச்சருடைய உடல் நலக் குற எனக்கு உதவியாயிற்று என்றுதான் நான் கருதுகிறேன். இரு தாலும இன்றைக்கும் என்னுடைய குரலிலே தெளிவு இல்லாம இருக்குமானால் அதற்காக அவையிலே இருப்பவர்கள் அந் குரலிலே ஏற்படுகின்ற வேற்றுமையைப் பொறுத்துக்கொ வார்கள் என்று கருதுகிறேன்.

ஆளுநர் உரை மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவ களும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைத் தெ வித்தார்கள். ஆளுநர் உரை ஏதோ ஒரு சடங்கு போல் கரு படுவதாக இருக்குமானால் அது இந்த அவைக்குப் பெரு சேர்ப்பதாக ஆகாது. ஆளுநர் உரை மூலமாக அரசு தன்னுடை குறிக்கோளை விளக்குகிற வகையில், நடைமுறைப் படுத்து திட்டங்களை அவைக்கு எடுத்து வைக்கின்ற வகையில், வி மாகக் கூறுகிறது என்ற அடிப்படையில் ஆளுநர் உரை என்பது ஆண்டுக்காலத்திற்கு, எதிர்காலத்திலே இந்த அரசு எப்படிப்ப முறையில், எந்த நோக்கத்தோடு, எந்தக் கடமைகளை நி வேற்ற இருக்கிறது என்பதனையும் விளக்குவதாகும். அப்ப காண்கின்றபொழுது கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலுள்ள கருத்துக்கள், இந்த ஆண்டு உரை நிகழ்த்தப்படுவதற்கு முன் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அதை நி வேற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிரு வேண்டும், துவக்கம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றுதான் கரு

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

வேண்டும். அப்படிச் சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே தெரி
வித்த கருத்துக்கள் இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முன்னதாக
நிறைவேற்றப்படாத அல்லது முடியாத நிலைமை அரசுக்கு இருக்கு
மானால் அல்லது ஏதேனும் சில காரணங்களால் அந்த இலட்சியங்
கள் கைவிடப்பட்டிருக்குமானால் அதை இந்த ஆண்டு ஆளுநர்
உரை மூலமாகத் தெரிவித்து விடுவது என்பது அரசுக்கு நன்மை
செய்கின்ற ஒரு காரியமாகத்தானிருக்கும் ஆனால், கடந்த
ஆண்டு ஆளுநர் உரைபற்றி ஒரு சிறு கவலைகூட எடுத்துக் கொள்
ளாமல் இந்த ஆண்டு ஆளுநர் உரை மறுபடியும் வழங்கப்படு
கிறது என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றபொழுது, ஆளுநர்
உரையை, எதிர்க்கட்சிகள் நன்றி தெரிவிக்க விரும்பவில்லை
யென்று சொல்கின்ற முறையிலே எதிர்ப்பதைப் போல, ஆளு
கின்ற அரசும்கூட, ஆளுங்கட்சியும்கூட ஒப்புக்கு நன்றி தெரி
விக்கிறதே தவிர, உண்மையில் பின்பற்றி நடப்பதற்காக அல்ல
என்பதை முதலிலே நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு ஆளுநர் உரையில், இந்த ஆண்டு ஆளுநர் உரை
யில் குறிப்பிடப்படுவதைப் பால், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம்
போன்ற சில பல்கலைக் கழகங்களை உருவாக்குகின்ற கடமை
யாக, அடிப்படையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு அவை
உருவாக்கப்படுகின்றன. ஆனால், கடந்த ஆண்டு ஆளுநர் உரை
யில் மிக முக்கியமான ஒரு பகுதியாக, அதனுடைய ஐந்தாவது
பாராவில், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்று துவக்கப்
படும் அந்தத் தமிழ்ச் சங்கத்தில் மிகச் சிறந்த தமிழ்த் துறை
நிபுணர்கள் எல்லாம் இடம் பெறுவார்கள். உலகம் எங்கும்
உள்ள அறிஞர்களோடு தொடர்பு கொண்டு அந்தத் தமிழ்ச் சங்
கம் இயங்கும் அதற்கான அடிப்படை பணிகள் அத்தனையும்
நிறைவேற்றப்படும் என்று, ஒரு ஆலோசனையாகக் கூட அல்ல,
ஒரு திட்டமாகக் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அப்படி
அறிவிக்கப்பட்டு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கோட்
பாட்டைச் செயல்படுத்துவதற்கு அதன் மூலமாக இந்த மாநில
அரசு பெரு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று தெரிவிக்கப்
பட்டது.

அப்படி ஒரு உலகத் தமிழ்ச் சங்கம் உருவாக்கியதாகவோ
உருவாக்குவதற்கான சில கடமைகளை மேற்கொண்டிருக்கி
றோம் என்றோ இந்த ஆண்டு தெரிவிக்கப்படவில்லை. அது
தவைதானா, அல்லவா என்று எண்ணிப்பார்த்து தெரிவிக்
டாத காரணத்தால், இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிரு
ம் என்று சொன்னாலும் கூட, அந்த விளக்கம் சென்ற ஆண்டு
ளுநர் உரையிலே சொல்லப்பட்ட கருத்து, அடியோடு கைவிடப்
படக் கூடிய நிலைமை வருமானால் அதை ஏற்றுக் கொண்டு
மைய சொல்கின்ற மனப்பாங்கு வேண்டும் என்று நான் விரும்பு
கிறேன்.



1982 பிப்ரவரி 1'] [திரு. க. அன்பழகன்]

அதேபோல கடந்த ஆண்டு தமிழ் மாநிலத்திற்குத் திட்டக்
குழு அடிப்படையிலே ஒதுக்கப்படுகிற நிதி, எந்த அடிப்படையிலே
ஒதுக்கப்பட வேண்டும் என்பதில் மாநிலத்தின் பின்தங்கிய நிலை,
நபர் வாரி வருமான அடிப்படையிலே தீர்மானிப்பதற்குப் பதி
லாக, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் சதவிகிதம்,
மாநிலத்தின் நபர்வாரி திட்டச் செலவு ஆகியவற்றின் அடிப்
படையில் தீர்மானிக்கப்படும் என்று மத்திய அரசினுடைய திட்ட
குழுவிட்த்திலே, மாநில அரசு வலியுறுத்துகிறது என்ற கருத்து
ஆளுநர் உரை மூலமாக இந்த அவைக்கு ஒரு உறுதிமொழியாக
தரப்பட்டது. அந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டதா? காட்
கில் பார்முலாவிலிருந்து ஏற்பட்ட மாற்றங்களில் இந்தக் கொள்
கைக்கு ஏதேனும் இடம் கிடைத்ததா? அல்லது இந்தக் கொள்கை
களை ஏற்றுக் கொள்ள மறுத்ததா மத்திய திட்டக் குழு என்ற
கருத்து இப்பொழுது தெரிவிக்கப்படவில்லை.

அதேபோல, கடந்த ஆண்டு விலைவாசி ஏற்றம் விஷம்
போல ஏறிவருகிற அளைவுகளைச் சுட்டிக்காட்டுகிறபோது,
அந்த விளைவுகளாலே அரசு ஊழியர்களுக்கும், தொழிலாலர்
களுக்கும் ஊதிய உயர்வு அளித்தால் கூட, அந்த ஊதிய உயர்வு
மூலமாக மறுபடியும் விலைவாசி ஏறுகிற நிலைமைதான் ஏற்
பட்டு வந்திருக்கிறது என்றாலும், பயன் அடைகிறவர்கள் ஏறத்
தாழ நடுத்தர வர்க்கத்தினர், அல்லது அரசு ஊழியர்கள் அல்லது
தொழிலாளர்கள்-ஆர்கனைஸ்டு லேபரர்கள் என்ற தரத்தைச்
சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் மிகப் பெரும்
பான்மையான ஏழை மக்கள், கிராமத்திலே உள்ள மக்கள் அன்
றாடம் கூலி பெருகின்ற உழைப்பாளிகள், எந்த விதமான பல
னும் பெறாமல் இருக்கிறார்கள். அந்த அமைதிப் பெரும்பான்
மையினர் பெரும் அவதிக்கு ஆளாகின்றனர். அமைதியாக இருக்
கின்ற, போராடுவதற்கு சக்தியற்ற அதற்கு ஒரு தோழமை
உணர்ச்சி பெற முடியாத. ஒரு கூட்டு சக்தியா உருவாகாத மக்க
ளுக்கு, பெரும்பாலான கிராமத்திலே வாழ்கிற அடித்தட்டு மக்
கள், அதிலும் குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்
கள்தான் பெரும் அவதிக்கு ஆளாகின்றனர் என்ற கருத்து கடந்த
ஆண்டு ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டது.

அந்த விஷ வட்டம் விலைவாசி ஏற்றத்தாலே, பண வீக்கத்
தாலே, கள்ள மார்க்கட்டாலே, கருப்புப் பணத்தாலே, செல்
வாக்கு மிக்கவர்களுடைய சுகபோக வாழ்வுக்காக உருவாக்கப்
படுகிற அந்த விஷ வட்டம் எந்த மக்களைப் பாதிக்கிறது என்
கடந்த ஆண்டு சுட்டிக்காட்டி, பரிகாரம் காணவேண்டும்
என்ற நோக்கம் இருப்பதாக அரசு தெரிவித்தது இந்த ஓராண்டு
காலத்தில் அந்தப் பரிகாரம் காணுகிற முயற்சியில் எந்த வகையி
லேயும் வெற்றி பெற்றதா, ஏதேனும் முயற்சித்ததா எந்த அடிப்
படை பணியாகிலும் நடைபெற்றிருக்கிறதா என்று கேட்டால்,
அது கவர்னர் உரை, அவ்வளவுதானே தவிர, அது அரசாங்கம்

மேற்கொள்ளவேண்டிய கடமைக்கு ஆதாரமான உரையல்ல என்பதைப்போல, அந்தக் கருத்து அப்படியே கைவிடப்பட்டு இருக்கிறது. மறுபடியும் இந்த ஆண்டு விலைவாசி ஏற்றத்தைப்பற்றி குறிப்பிடுகிறபோது, மத்திய அரசு, விலைவாசி ஏற்றத்தைக்கட்டுபடுத்த வேண்டிய, பொருளாதார கொள்கையை உருவாக்க வேண்டிய கடமை உடையது, என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு இருந்தாலும், மாநில அரசின் விலைவாசி, நினைத்தபடி ஏறாமலும், நினைத்தபடி சிலர் ஏற்று வதற்கு இடம் தராமலும் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு கடமை இருக்கிறது என்ற நினைப்பும் கூறப்பட்டாலும்கூட, அடித்தட்டிலே உள்ள அல்லியுருகிற மக்களைப் பற்றிய குறிப்பு இந்த ஆண்டு கைவிடப்பட்டது. காரணம், அது ஆய லாத காரியம் என்று ஒருவேளை அரசு கருதி இருக்கலாம். ஆனால் சென்ற ஆண்டு பேசுகிறபோது ஆளுநர் உரை மூலமாக, தாங்கள் ஏதோ ஒரு அரும்பணி ஆற்றப்போவதாகத் தெரிவித்து கருத்து கைவிடப்பட்டது என்பதை நான் வருத்தத்தோடு—அந்த ஆளுநர் உரைக்கு மாறுபாடாக அல்ல—அந்த ஆளுநர் உரை கைவிடப்பட்ட இந்த ஆளுநர் உரைக்கு, என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50).

அதேபோல, சென்னை நகரத்திற்கு குடிநீர்த் திட்டம் ஒன்று உடனடித் தேவை என்று அறிஞர்அண்ணாஅவர்களாலே கருதப்பட்டு, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கிற போதே வீராணம் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, அவர்கள் மறைந்து விட்ட காரணத்தாலே, அந்தத் துர்ப்பாக்கியமான நிலையில் அந்தப் பொறுப்பை யேற்றுக் கொண்ட கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, அதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பெரும் அளவிற்கு நிறைவேற்றப்பட்டு விட்டது என்று சொல்லா விட்டாலும் குறிப்பிட்ட அளவிற்கு அந்தப் பணிகள் நடைபெற்று இருந்தன. அப்படி நடைபெற்ற பணிகள் செம்மையாக, சீராக நடைபெற வில்லை அல்லது குறைபாடுகள் இருக்கின்றன என்று சிலர் குற்றம்சாட்டினாலும் கூட, அது முழு அளவுக்கு செம்மையாக நடைபெறாவிட்டாலும் கூட, குறிப்பிடத்தக்க குற்றங்கள் அந்தத் திட்டத்தில் இல்லை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அது நிறைவேற்றப்பட முடியாத ஒருதிட்டம் என்று குறிப்பிடப்படமுடியாது, 'பீசிபிள்' திட்டம் தான் என்பதை இடையிலே எமர்ஜென்சி காலத்தில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னரும், இந்த ஆளுங் கட்சி வந்ததற்குப் பின்னாலும் கூட, நிபுணர்கள் அது கைவிடப்படத்தக்க ஒரு திட்டம் என்று தெரிவித்ததாகக் கருதப்படத்தக்க அளவிற்கு எதுவும் சொல்லப்பட வில்லை.



இருந்தாலும் கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் சென்னைக்கு உடனடியாக ஒரு குடிநீர்த் திட்டம் தேவை என்று சொல்லி, ஒரு பெரிய அளவில் கட்டளைப் பொறி மதகிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கான ஒரு முயற்சி இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டு, அங்கேயிருந்து சென்னைக்கு ஒரு பெரிய கால்வாய் அமைத்து ஒருநாளைக்கு 99.5 கோடி லிட்டர் தண்ணீர் கிடைக்கத்தக்க அளவிற்கு இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது 5 ஆண்டு காலத்திற்கு தினம் லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் அளவிற்கு 459 கோடி ரூபாய் செலவில் அந்தத் திட்டம் 5 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படக் கூடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அந்தத் திட்டத்தைப் பற்றிய எந்தக் குறிப்பும் தெரிவிக்கப்படவில்லை. அந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு இருந்து இருக்கக்கூடும். எதிர்ப்பு ஏற்படுவதற்குக் காரணம் இருக்கிறது. அது நிறைவேற்றப்பட முடியுமா என்பதில் உள்ள ஐயத்தையும் நான் கடந்த ஆண்டு பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறேன். நிறைவேற்றுகிறபோது ஏற்படக்கூடிய இடையூறுகள் என்னென்னவாக இருக்கும் என்று அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோதே நான் கவலை தெரிவித்தேன். ஆனால் அதற்குப் பின்னாலே ஏடுகளில் வந்த செய்திகளைப் பார்க்கிறபோது, கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டு வருவது என்று தமிழக அரசு இறுதி முடிவாக எடுத்து இருக்கிறது என்றும், கிருஷ்ணா ஆற்று நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவது பற்றித்தான் தமிழக அரசு முழு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்ற கருத்தும் ஏடுகளில் வெளிவந்தது.

கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கொண்டு வருவதற்காக இன்றைக்கு முழு அளவிற்கு முயற்சி எடுத்துக் கொண்டால் கூட, எனக்குத் தெரிந்த அளவிற்கு நான் சொல்கிறேன், நான் பொறியியல் நிபுணன் அல்ல-ஆனால் நிபுணர்கள் சொல்வதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வது இல்லை என்பதால் நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்பதால் சொல்கிறேன்-இன்னும் 15 ஆல்லது 20 ஆண்டுகள் ஆகக்கூடும் சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருவதற்காக இந்த ஆண்டு, இந்தத் திங்கள், இந்தத் தேதியிலேயே அதற்கான முழு அளவுப் பணிகள் தொடங்கப்படுமானால் கூட 1997-ஆ ஆண்டு அல்லது கி. பி. 2000 ஆண்டிலே தான் கிருஷ்ணா ஆற்று நீர் சென்னை நகரத்திற்கும், சென்னையைச் சுற்றிப் பெருநகரமாக வளர்ந்து கொண்டு இருக்கும் பகுதிகளுக்கும் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்று நாம் எதிர்பார்த்தாலும் கூட, அந்தக் கட்டளைக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அல்லது 459 கோடி ரூபாய் ஆகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருப்பதால், அதைவிட ஏறத்தாழ குறைந்தது 4 மடங்கு அதிக செலவாகும் அவ்வளவு பெரிய திட்டத்தை நாம் எதிர்பார்த்து 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் காத்து இருப்பதை விட, இடைக் காலத்தில் இடைவெளிக்காக நம்முடைய தேவையை நிறைவு

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

செய்கிற வகையில் ஒரு 20—30 கோடி ரூபாய் செலவில் அந்த வீராணம் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், தற்காலிகத் தேவைக்கு, உடனடித் தேவைக்கு 3 ஆண்டு காலத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், இந்த 10 ஆண்டுகால இடைவெளியில் உள்ள தேவையை சமாளிக்கும் திட்டமாக வீராணம் திட்டத்தைப் பயன்படுத்தக் கூடும் என்ற நம்பிக்கையை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசியல் கண்ணோட்டத்தின் காரணமாகவும், கட்சிக் கண்ணோட்டத்தின் காரணமாகவும், தமிழ்நாடு மக்களை தவிக்க விட்டு விடக்கூடாது என்ற காரணத்தால் தான் சொல்கிறேன். கலைஞர் கருணாநிதி அவர்கள் தொடங்கிய திட்டத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வலுக்கட்டாயமாகத் திணிப்பதாகக் கருதக்கூடாது. அதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய திட்டம் என்று கூட ஏற்றுக் கொள்ளலாம்.

நான் இரண்டொரு நாட்களுக்கு முன்னால் கேள்விப்பட்டேன். வீராணம் திட்டத்திற்காகப் போடப்பட்ட குழாய்கள், எந்த வழியில் புதைக்க வேண்டும் என்பதற்காக போடப்பட்டுள்ளனவோ ஆங்காங்கு பாலங்கள் அமைக்கப்பட்டு அந்தந்த பாலங்கள் மீது அமைக்கப்பட வேண்டிய குழாய்களை அகற்றுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு இருப்பதாக அறிகிறேன். அகற்றுவது என்பது கடினமான காரியம் தான். எளிதான காரியம் அல்ல. ஆகவே, அகற்றுவதை விட்டுவிட்டு, அதைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா என்பதை நிபுணர்களைக் கொண்டு ஆராய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திட்டத்தைச் சொல்லி, அதற்குப் பிறகு இது திராவிட முன்னேற்றக்கழக அரசு போட்ட திட்டம், இது காங்கிரஸ் கட்சி அரசு போட்ட திட்டம் அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்ட திட்டம் என்று அந்தத் திட்டங்களைக் கைவிட்டு விடுவதாலே பாதிக்கப்படக்கூடிய மக்கள் தமிழ் நாட்டு மக்கள் இழக்கக்கூடிய பொருள். ஏற்படக்கூடிய விளைவுகள் இந்த நாட்டு மக்களை பாதிக்கும், அதுவும் சென்னை நகர மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதை மட்டும் மனதிலே எண்ணிப் பார்த்து, ஒரு பொது நோக்கத்தோடு அதற்குத் தகுந்த முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் காள்ளவிரும்புகிறேன்.

அதைப்போல கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைத்தான் நிறைவேற்றப் போகிறோம் என்று சொல்வீர்களேயானால் அதை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை முழு அளவுக்கு நிபுணர்கள் மூலம் ஆராய்ந்து ஒரு அறிக்கை பெற்று, அந்த அறிக்கையை இந்த அவையிலே வைத்து விவாதிக்க வேண்டும், அது



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

450 கோடி ரூபாய் திட்டம் என்பது கடந்த ஆண்டு புள்ளிவிவரம். இந்த ஆண்டு புள்ளி விவரப்படி அது 650 கோடி ரூபாய்க்கு போகலாம்.

அதிலே மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது, அவர்களுடைய திட்டம் ஒன்று நிறைவேறாத காரணத்தைச் சொல்லுகின்றபோது சிமின்ட் வழங்குகிற அமைச்சர் இப்போதாவது சற்று அதிக அளவுக்கு கவனம் செலுத்துவார் என்று நம்புகிறேன் என்று இந்தச் சட்டமன்றத்திலே சொல்லுகிற ஒரு பரிதாபகரமான நிலைமையிலே தான் அமைச்சர் அவர்களே இருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறபோது, சிமின்ட் கிடைக்காத காரணத்தால் மட்டும் இவ்வளவு பெரிய இடையூறு இருக்குமானால், சிறு சிறு திட்டங்களுக்கே இத்தகைய இடையூறுகள், குழப்பங்கள் ஏற்படுமானால் பெரிய திட்டங்களில் ஏற்படுகிற பெரிய விளைவுகளுக்கு நம்மை நாமே ஆளாக்கிகொள்ளலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப் போல கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவித்தார்கள். சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 'மாஸ் ரேபிட் ட்ரான்சிஸ்ட் சிஸ்டம் ' என்ற ஒரு திட்டத்தை, அது ஒரு விரைந்த போக்குவரத்துத் திட்டம்-மத்திய அரசு உதவியோடு நிலத்திற்கு அடியிலே நடைபெறுகின்ற போக்குவரத்துத் திட்டமாக இல்லை என்றாலும், மேற்பரப்பிலே நடைபெறுகின்ற போக்குவரத்துத் திட்டமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே. ஒரு விளக்கம், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும் போது, 'சிமின்ட் வழங்குகின்ற அமைச்சர் இனிமேலாவது கவனம் செலுத்துவார்' என்ற தொழிலாளர் நல அமைச்சர் கூறியதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. ஏனென்றால், அப்படிச் சொல்லும்போது நான் இது வரையில் கவனிக்கவில்லை என்று அர்த்தம் வரும். நான் கவனிக்காமல் இல்லை. சிமின்ட் போதவில்லை; கூடுதல் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கவனம் செலுத்தவில்லை என்று அவர்கள் சொல்லவில்லை.

திரு. க. அன்பழகன்: தொழில் துறை அமைச்சரின் திறமையை நான் பாராட்டுகிறேன். சிமின்ட் கிடைக்கவில்லை என்று நாடு பூராவும் கூக்குரல் எழுந்து கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு சிமின்ட் கிடைக்கவில்லை, ஆனால் பணக்காரர்களுக்கு கிடைக்கிறது. 8 மாடி வீடு கட்டுகிறவர்களுக்கு சிமின்ட் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது; சாதாரணமாக வீடு கட்ட சிமின்ட் கிடைக்கவில்லை. தாசில்தார் அலுவலகத்திலே சிமின்ட் வேண்டுமென்றால் ஒரு மூட்டைக்கு 5 ரூபாய் அதிகம் வைத்து

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

கொடுத்தால்தான் கிடைக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் இரண்டு மூட்டை சிமின்ட் வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால் ஏற்கெனவே ஒருவர் பெயரில் விண்ணப்பத்தை பதிவுசெய்து வைத்துக் கொண்டு, 50,60 மூட்டை என்று செல்வாக்கு படைத்த ஒரு கட்சிக்காரருக்கு கொடுக்கிறார்கள்; திருப்பி அவரிடம் மேலும் 20 ரூபாய் ஒரு மூட்டைக்கு என்று கொடுத்தால் தான் சிமின்ட் கிடைக்கிறது. ஆளும் கட்சிக்காரர்களே கூட இந்த குற்றச்சாட்டைச் சொல்வார்கள் என்று கருதுகிறேன். வேண்டுமானால் நானே அவர்களைச் சொல்லச் சொல்கிறேன். எனவே சிமின்ட் விநியோகம் என்பதும் சிமின்ட் வழங்குவது என்பதும் ஒரு அமைச்சருடைய திறமையினால் மட்டும் ஆகிற காரியம் அல்ல. மொத்தமாக ஏற்பட்டிடிருக்கிற குறைபாட்டை உணராமல் ஏதோ அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் சொன்ன காரணத்தை மட்டும் வைத்து அமைச்சர் கவனம் செலுத்துவாரானால் அதற்குக்கூட நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் கட்டிடத் தொழிலாளர்கள் சிமின்ட் கிடைக்காமல், அதனால் அவர்களுக்கு வேலை கிடைக்காமல் கடந்த ஆறு மாதமாக தொடர்ந்து கூக்குரல் எழுப்பப்பட்டு, அதன் தொடர்பாக அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு, அன்றாட கூலிக்கு வழியில்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டு, இன்றைக்கு 300 பேர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலே, சேலம் பகுதியிலே, வேறுபல பகுதிகளிலே சிறையிலே இருக்கிறார்கள். அவர்களை விடுவிக்காமல், கைது செய்து விட்டு, ஜாமீனிலே போகும்படி சொல்லக் கூடிய ஒரு பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. எனவே இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை சிமின்ட் என்பதையும், அந்த அடிப்படை சிமின்ட் இன்னும் சொல்லப்போனால் வலுத்தவன் கைக்குத்தான் அது சிமின்டாக இருக்கிறதே தவிர வலுக்காதவன் கைக்கு அது சிமின்டாக இல்லை என்பதையும், அப்படி கிடைத்தாலும் கூட அது கலப்படம் செய்யப்பட்ட சிமின்டாக இருக்கிறது என்பதையும் அந்தக் கலப்பட சிமின்டை ஒன்றிரண்டு இடங்களில்தான் கண்டு பிடிக்கிறார்களே தவிர பரவலாக இருக்கிற கலப்படத்தை நிறுத்தக்கூடிய சக்தி இந்த அரசுக்கு இல்லை என்பதையும், அந்த இலாகாவை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் எண்ணிப்பார்த்து தனியாகவாவது வேதனைப்படுவார் என்று நான் நம்புகிறேன்.

இந்த 'மாஸ் ரேபிட் சிஸ்டம்' கூட கடந்த ஆண்டிலே வலியுறுத்தப்பட்டு, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கப்பட்டது. தமிழக அரசு இதற்காக வலியுறுத்தும் என்று அப்போதே இங்கே தெரிவிக்கப்பட்டது. சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடி என்பது முதலமைச்சரும் சேர்ந்து உணரக்கூடிய ஒரு காரியம்தான். போக்குவரத்திலே ஏற்படுகிற தாமதமும் சென்னை மாநகர மக்களுடைய கடமைகளை எவ்வளவு பாதிக்கிறது என்பது எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய ஒன்று. இது மத்திய அரசு ஏற்றுக்கொள்கின்ற ஒன்ற.



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

இடையிலே திராவிட முன்னேற்றக் கழகப் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்களும் மற்றவர்களுமாக இதற்காக வலியுறுத்தி வாதாடினார்கள். இந்த அரசும் வலியுறுத்தி இருக்கிறது. ஆனால் கிடைத்ததா இல்லையா, இந்தத் திட்டம் வருகிறதா இல்லையா, இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இது ஏன் சேர்க்கப்படவில்லை. சேர்க்கப்பட்டதாக இந்த ஆண்டு ஏன் அறிவிக்கவில்லை என்பதை அரசுதான் தெரிவிக்கவேண்டும்.

அதைப் போலவே பொதுவாக எந்தச் சட்டம் வந்தாலும் அது ஏழை மக்களுக்காகத்தான் என்ற ஒரு கருத்து இன்றைக்கு கூறப்படுகிறது. அது ஏழை மக்களுக்குத்தான் பயன்படுகிறதா அல்லது வழக்கறிஞர்களுக்குப் பயன்படுகிறதா என்பது கேள்விக்குரிய ஒன்று.

அடுத்தபடியாக, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையின் அடிப்படையில் ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துகொண்டிருக்கிற இளைஞர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 12 இலட்சம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே ஏறிக்கொண்டுதான் வந்தது.

[நண்பகல் 12—00]

அது ஏறத்தாழ 3 இலட்சமாக இருந்தது இந்த ஐந்தாறு ஆண்டு காலத்திலே 12 இலட்சமாக உயர்ந்திருக்கின்றது. நாட்டினுடைய பொதுவான நிலைமை அதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இந்த அரசு ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேர்களுக்கு இரண்டு இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதாக அவ்வப்போது சொல்லி வந்தது. அப்படிச் சொல்லிய அடிப்படையிலே வேலை வாய்ப்பு பற்றி கேட்கப்படுகிறபோது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவும் வேறு பல திட்டங்களின் மூலமாகவும் அன்றாடம் வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 50 இலட்சம் பேர் என்று சொன்ன கணக்கு வேலை நாட்கள் கணக்குத் தான். எனவே வேலை நாட்கள் கணக்கு என்று சொன்னால், ஒரு இலட்சம் பேருக்கு 200 நாட்களுக்கு வேலை கிடைத்ததாகவோ அல்லது இரண்டு இலட்சம் பேருக்கு 100 நாட்களுக்கு வேலை ஒரு ஆண்டிலே கிடைத்ததாகவோ தான் அர்த்தம். ஆகவே அந்த வகையிலே அந்தக் கணக்குமென் டேஸ் ஓர்க் என்ற கணக்கு அங்கே தானாக வந்துவிடுகின்றது. அதன்படி பார்க்கின்றபோது வேலை கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு இலட்சம் பேர்களுக்கும்கூட முழு அளவுக்கு நிலையான வேலை கொடுக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் வேலை கிடைக்கவேண்டிய 12 இலட்சம் பேர்களுக்கு ஆதாயம் கிடைக்கவில்லை. அந்த 12 இலட்சம் பேர்களுக்கும் வேலை

கிடைக்காத காரணத்தால் எத்தனைக் குடும்பங்கள் அவதிக்கு ஆளாகின்றன என்ற கணக்கை அரசாங்கம் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆனால் கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்ட கருத்தை நான் அப்படியே இங்கே படித்துக் காட்டினால்தான் இந்த அரசு எந்த அளவுக்கு சொல்கின்ற கருத்துக்களைச் செயல்படுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகின்றது என்பதை நான் எடுத்துக்காட்ட முடியும். எனவே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். அந்த அறிக்கையின் 38-வது பாராவிலே ''வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர எனது அரசு நடவடிக்கை எடுக்கும். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற மைய-மாநில அரசின் கொள்கையை ஒட்டித் தொடங்கும் முதல் முயற்சியாகும்.'' என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் அந்த முதல் முயற்சி எப்போதாவது தொடங்கப்பட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆளுநர் உரையே இப்படி அவமதிக்கப்படுமேயானால், ஆளுநர் மூலம் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் கூட நிறைவேற்றப்படாது போகுமேயானால் எப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏழைக் குடும்பம் என்பதற்கு ஒரு இலக்கணம் தரப்பட்டு பதிவு செய்கின்ற இடத்திலே ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்னார் என்ற காரணத்தாலே இப்படிப் பதிவு செய்ய வேண்டும் என்ற முறையினையும் வகுத்து அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இன்னின்ன முறை வைத்தோம் என்று சொல்கின்ற நிலைமை இந்த அரசுக்கு உண்டா என்று கேட்டால் வேலை வாய்ப்பு தேடித் தருகின்ற அலுவலகத்தை நிர்வகிக்கின்ற அமைச்சராக இருந்தாலும், மொத்தமாக இந்த அரசாங்கமாக இருந்தாலும் அதற்கு எந்தப் பதிலையும் தரக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை அவர்களால் தகுந்த பதிலைச் சொல்லக்கூடிய நிலைமை இருக்குமேயானால் நான் மகிழ்ச்சி அடைவேனே தவிர வருத்தப்பட மாட்டேன்.

அதேபோன்று பொதுவாகவே ஆழ்ந்து எண்ணிப் பார்க்கின்றபோது இந்த அரசு அவசரச் சட்டங்களை நம்பி ஆட்சி நடத்துகின்ற அரசாங்கமாக தன்னை உருவாக்கிக் கொண்டு வருகின்றது. அவசரச் சட்டம் என்பதைப் பொறுத்தவரையிலே யாரேனும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் சிலர், இப்படி அவசரச் சட்டம் போடுவதன் மூலமாக இன்னின்னவற்றைத் தடுத்து விடலாம், அடக்கி விடலாம் என்று ஆலோசனை சொல்லக்கூடும். அறிஞர் அண்ணா அவர்கள் மிகச் சிறந்த ஒரு நாடகத்திலே அவரே நடிக்கின்ற ஒரு கட்டத்திலே 'வல்லவனுக்கும் புல்லும் ஆயுதம் என்று சொல்வார்கள். ஆகவே வல்லமை இல்லாதவனுக்கு





தன்னுடைய துப்பாக்கியைக்கூட எதிரிக்குப் பயன்படுவதற்காகத்தான் தூக்கிக் கொண்டு இருப்பானே தவிர அவனாலே அதைக் கொண்டு செயலாற்ற முடியாது. ஆகவே எந்த ஒரு அரசாங்கத்தின் நிலைமையையும் வைத்து நான் கருதிப் பார்க்கின்றபோது அவசரச் சட்டம் என்பது அரசாங்கத்தின் பலகீனத்தின் சின்னம்தான் அது. மத்திய அரசாக இருந்தாலும சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி அவசரச் சட்டம் என்று சொல்கிறபோது சட்டமன்றத்தினுடைய உரிமை மறைமுகமாகப் புறக்கணிக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தினுடைய உரிமை மறைமுகமாகப் புறக்கணிக்கப்படுகின்றது எனவும், எனவே மறுபடியும் பாராளுமன்றத்தின் மூலமாகத்தான் இப்படிப்பட்ட சட்டங்கள் வடிவு பெற வேண்டும், அப்படி இல்லாமல் அவை வரக்கூடாது என்று பாராளுமன்றத்தின் தலைவர்களாக இருந்த பெருமக்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அதே முறையிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போதுகூட சற்று நேரத்துக்கு முன்னாலே இங்கே ஒரு அவசரச் சட்டம் வந்தது. 'விபச்சாரக் குற்றத்திலே ஈடுபடுகின்றவர்களையும், ஈடுபடுத்துகின்றவர்களையும் அதேபோன்று குண்டர்களாக இருந்து சமுதாயத்திலே கேடு செய்கிறவர்களையும், கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களையும் ஒடுக்குவதற்காகவும் அவைகளைச் செயலற்றவர்களாக ஆக்குவதற்காகவும் அவசரச் சட்டம் கொண்டு வரப்படும் என்று சொன்னால் அது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்திலே உள்ள குற்றங்களுக்காக அதிகாரிகளுக்கு அளவு கடந்த அதிகாரம், நினைத்தபடி செயலாற்றக் கூடிய அதிகாரம் தருவது என்பது, சமுதாயக் குற்றத்தைக் குறைக்கக் கூடிய காரியம்தானா என்பதை இதுவரை நடைபெற்ற எந்த ஒருஆட்சியாக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும், காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் இப்படிப்பட்ட அதிகாரங்களை அதிகாரிகளின் இடத்திலே கொடுப்பதனால் மட்டும் நடைபெறுகின்ற காரியங்கள் நியாயமாக நடைபெற்றிருக்கின்றதா என்று ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி செயலாற்றுகின்றவர்கள் யார் ? காவல்துறையைச் சேர்ந்தவர்கள். காவல்துறையினுடைய கண்ணியம் இன்று எந்த அளவுக்கு அமைந்திருக்கின்றது. காவல்துறையினை முழுவதும் நம்புவதாக அவர்கள் தெரிவிப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். காவல்துறை தந்த அறிக்கையை இந்த சட்டமன்றத்திலே படித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையைப் படித்து விட்டு என்ன சொன்னார்கள் ? ''சென்னை நகரிலே நடைபெற்ற ஊர்வலத்திலே குண்டர்கள் காலித்தனமாகப் பல தவறுகளைச் செய்தார்கள். போலீஸ்காரர்களைத் தாக்கினார்கள். அதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்'' என்று முதலமைச்சராக உள்ள நான்

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

சொன்னாலும் கூட, ஒரு கட்சியின் தலைவன் என்ற முறையிலே இந்தக் காவல்துறை தந்த அறிக்கையை மறுக்கிறேன் என்ற கருத்தை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், முதலமைச்சராக எண்ணி பார்ப்பதை விட்டு விட்டு, தனிப்பட்ட எம். ஜி. ஆர். ஆக எண்ணிப் பார்ப்பார்களேயானால், காவல்துறையை நம்பித் தான் இப்படிப்பட்ட கடுமையான சட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமா என்று எண்ணுவார்கள். ஏனென்றால் காவல்துறையின் நிலைமை அப்படி.

திருச்செந்தூரில் அர்ச்சகராக ள்ள முத்து அண்ணாவி என்ற ஒருவரை எப்படியெல்லாம் காவல் துறையினர் நடத்தினார்கள் என்பதைப் பற்றி காலையிலே இங்கே கூட விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தின் முடிவிலே மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். யாரோ ஆசைத்தம்பி என்ற காவலர் ஒருவர், சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார் என்று. அண்ணாவியை அடித்ததோடு விட்டு விட்டார்கள். ஆகவே ஆசைத்தம்பி சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஒருவேளை அண்ணாவிக்கு உயிர் போயிருக்குமேயானால், ஆசைத்தம்பிக்கு பிரமோஷன் கொடுத்திருக்கக்கூடும்.

எனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமை காவல் துறையில் இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்தக் காவல் துறையை, நம்பி இந்தச் சட்டங்களை ஒப்புவிப்பதா எனற கேள்வி எழும். எந்தக் காவல் துறையை கள்ளச் சாராயத்திற்கு துணை இருக்கிற காவல் துறையை நம்பியா? அல்லது நாட்டிலே நடக்கிற பல்வேறு குற்றங்களைக் கண்டு பிடிக்க முடியாமல், கண்டு பிடிக்க முனைந்தாலும் கூட, தடுக்கப்பட்டால், வேண்டாம் என்று விட்டு விடுகிற நிலைமையிலே இருக்கிற காவல் துறையை முழு அளவிற்கு நம்பியா? காவல் துறையிலே கண்ணியம் உள்ளவர்கள் பலபேர்கள் இருந்தாலும்கூட, கண்ணியம் அற்றவர்களின் சூழலில் ஏற்படுகிற பிடிகளிலிருந்து தப்பிக்க முடியாமல் கண்ணியம் உள்ள காவல் துறை அதிகாரிகளும்கூட ஒரு விஷ வட்டத்திற்குள்ளே சிக்கிக் கொண்டிருக்கிறார்களே அந்த வட்டத்திற்குள்ளே உள்ள அதிகாரிகளை நம்பியா? எதை நம்பி ஒப்படைக்க முடியும்?

எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களை கொடுமைப்படுத்துவது என்று மட்டும் அல்லாமல் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களையும் காவல் துறையினர் நினைத்தால் கொடுமைப்படுத்த முடியும் என்பதை, நேற்றைய தினம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன்.



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

ஆளும் கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் என்பதை நான் விட்டுவிடுகிறேன். இரண்டு கட்சியிலும் இல்லாத பொது மக்கள் எந்த கதிக்கு ஆளாவார்கள்? எந்தக் கட்சித் தயவும் இல்லாமல் பொது வாழ்விலே மனிதன் வாழக்கூடாதா? எந்தப் பொது இயக்கத்தின் தொடர்பும் இல்லாமல் ஒரு ஏழை வாழக் கூடாதா? சமூகத்திலே யாருடைய சிபாரிசும் இல்லாமல் மனிதன் கடமைகளைச் செய்து வாழக் கூடிய நிலைமையை காவல் துறை காப்பாற்றும் என்று நீங்கள் நம்புவதாக இருந்தால், நான் எந்தச் சட்டத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயார்.

ஆனால் நீங்கள் கொண்டு வந்த மதுவிலக்குச் சட்டம் எங்கே போயிருக்கிறது? மது விலக்குச் சட்டத்தை கடுமையாக்கினீர்களே ஏற்பட்ட பலன் என்ன? உங்கள் நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம். விளைவு என்ன? அந்த மதுவிலக்குச் சட்டத்தின் மூலமாக சுற்று வட்டத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஊழல் புகார்கள் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். அந்தச் சட்டமே இன்றைய தினம் தோற்றுப் போய்விட்டது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுடைய கட்சியின் சார்பிலே அறிஞர் அண்ணா அவர்களுடைய கல்லறைக்கு முன்னாலே உறுதி மொழி எடுத்துக் கொள்கிறபோது, மது விலக்கினால் வரக் கூடிய கொடுமைகளை மக்களிடத்திலே பரப்புவதற்கு, நாமெல்லாம் உறுதி மொழி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். நல்ல எண்ணம். அந்த நல்ல எண்ணத்தை வெற்றி பெறச் செய்வதற்காக என்ன தொடர் முயற்சி அல்லது ஆக்க பூர்வமான முயற்சி நம்மிடத்திலே இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த ஆக்கபூர்வமான முயற்சி என்பது ஒரு பக்கம் இருந்தாலும் கூட, மதுவினால் வரக்கூடிய கொடுமைகளை மக்களிடத்திலே சொல்கிற மனம் நமக்கு இருந்தாலும்கூட, நம்மை சேர்ந்த அனைவரும் அதற்கு முழு அளவுக்கு ஒத்துழைப்பார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் நம்புகிறாரா?

எங்களுடைய கட்சியிலுள்ள அத்தனை பேரையும் நான் கட்டுப்படுத்த முடியாது. அதுபோல் உங்களுடைய கட்சியிலுள்ள அத்தனை பேரையும் கட்டுப்படுத்த முடியுமா? அப்படியே கட்டுப்படுத்தினாலும், குடிப்பது தவறு என்று சொன்னாலும், அதை விற்பனை செய்வதை தவறு இல்லை என்று சொல்லக்கூடிய அளவு ஒரு மனப்போக்கு நாட்டிலே வளர்ந்து கொண்டிருக்கிற நேரம், அதிலும், விற்பனை செய்பவர்களைவிட சாராயம் காய்ச்சுபவர்கள்தான் பலமிக்கவர்களாக நாட்டிலே பல இடங்களில் உள்ளார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

நேற்றையதினம்கூட அச்சிட்ட ஒரு நோட்டீஸ் எனக்கு வந்தது. அந்த ஒரு நோட்டீசைத்தான் இப்பொழுது வைத்திருக்கிறேன். ஓமலூர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிராக—ஓமலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் இரத்தினவேலு கவுண்டரின் அராஜகம் என்று தலைப்பு இடப்பட்டு வந்திருக்கிறது. நான் அதை அப்படியே ஒப்புக்கொண்டு சொல்வதாக அவை கருதக் கூடாது. அவர் ஒரு வேளை நேர்மையாளராக இருக்கக் கூடும். ஆனால் மாத வருமானம் 25,000 அளவுக்கு, 5 போலீஸ் ஸ்டேஷன்களில் இருந்து மொத்தமாக வருகிறது என்று அந்த ஊர் பொதுமக்கள்-அதுவும் வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். அதுவும் எந்த வியாபாரிகள் சங்கம் என்றால், அரசாங்கத்திலிருந்து குத்தகை எடுத்துச் சாராயம் காய்ச்சும் சாராய வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஒருவேளை அவர்கள் வேண்டும் என்றே சொல்கிறார்களோ என்னவோ? ஏனென்றால் அவர்களும் ஒரு மாமூல் தரவேண்டிய அவசியம் இருக்கிறது. அதை ஒழுங்காக கொடுத்திருக்க மாட்டார்கள். அதிலே தகராறு வந்திருக்கலாம். எனவேதான் இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நேரத்தில், நான் முதலமைச்சர் அவர்களுடைய இடத்திலிருந்து எண்ணிப்பார்ப்பவனாக இருந்தால், செய்ய முடியாது அந்தக் காரியத்தை. இந்த அரசாங்கம் செய்ய விரும்புவதாக காட்டிக் கொள்வதற்காக, அவசரச் சட்டங்களிலே போய்ச் சிக்கிக்கொள்கிறோம் என்றுதான் கருதுவேன்.

நேற்றைய தினம்கூட ஒரு அவசரச் சட்டத்தை, பத்திரிகைகளின் உரிமைகளை பறிக்கக்கூடிய ஒரு சட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அவதூறு எழுதினால், அந்த அவதூறை எதிர்த்து வழக்கு போடக்கூடிய அளவில் ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எத்தனையோ வழக்குகளும் அப்படிப் போடப்பட்டிருக்கின்றன.

[பிற்பகல் 12–10]

நீதிமன்றங்களில் சந்திக்கலாம். அதையும் மீறி அவர்கள் ஒரு கட்டத்திற்கு மேல் போவார்களேயானால் பொது மக்கள் தீர்ப்பளிக்கலாம். பேரறிஞர் அண்ணா அவர்கள் இயக்கத் தோழர்கள் நடவடிக்கைகள் பற்றி எங்களிடம் சொன்னபோது, சொன்னார்கள், '' பப்ளிக் பெராமீட்டர் '' என்றைக்கும் இருக்கிறது என்று. அவனவன் யோக்கியதையை பொது மக்கள் தீர்மானிப்பார்கள் என்று, அண்ணா அவர்கள் சொன்னார்கள். எனவே, அதற்கு மேல் தவறாக ஒரு பத்திரிகை ஆசிரியர் எழுதுகிறார் என்று சொன்னால், பொது மக்கள் தீர்மானிக்க வேண்டும். அல்லது கூடிக்கலந்து பேசி அதன் மூலம் ஒரு புது நோக்கம் உருவாக்கப் பெற வேண்டும். ஒரு கட்சிக்கு ஒரு நீதி என்பதற்காக ஒரு அவசரச் சட்டம் பயன்படும் நிலை ஏற்படக்கூடாது. அந்த அவசரச் சட்டம் மூலம் நீதிமன்றங்களின் உரிமைகள் தடுக்



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

கப்படுகின்றன என்ற சந்தேகம் எழக்கூடாது. ஆனால், இந்த ஆட்சிக்கு அந்த மனப்பாங்கு இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், நான் இன்னொன்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளைக் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, நெல் கொள்முதல் செய்ய வேண்டும், லெவி முறையில் அதைப் பெற வேண்டும் என்றால் ஏழை மக்களுக்கு, பொதுமக்களுக்கு வினியோகம் செய்வதற்காக என்று அரசாங்கம் சொல்கிற கொள்கையில் மாறுபாடு இல்லை என்று சொன்னாலும் லெவி முறை மூலம் எவ்வளவு தவறுகள் நடைபெறுகின்றன என்பதை இந்த அரசு ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். லெவிமுறை செயல்படும் முறை குறித்து இரண்டு நாட்களுக்கு முன்னால் மதுரையிலிருந்து எனக்குத் தெரியாத ஒருவர் எனக்கு டெலிபோன் செய்து நீங்கள் சட்டமன்றத்தில் கேளுங்கள் என்றார்கள். நாங்கள் நேற்றையதினம் கேட்டபோதும், இன்றைய தினம் கேட்டபோதும் சில விளக்கங்கள் தரப்பட்டன. வியாபாரிகளிடம் 50 சதவீதம் லெவி என்று சொல்லும்போது வியாபாரிகள் பல இடர்ப்பாடுகளுக்கு ஆளாகிறார்கள். ஏற்கெனவே 40 சதவீதம் லெவி என்றிருந்ததை 50 சதவீதம் என்று சொல்லும்போது அவர்களுக்கு அரிசி, நெல் விற்பதில் இடர்ப்பாடு ஏற்படத்தான் செய்யும்.

இன்னொன்று. லெவி முறையில் வாங்கிய விலையை விட விலையைக் குறைத்துத் தர வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. அதனால் ஆலை முதலாளிகளாக உள்ளவர்கள் அதற்கு மறுப்பு தெரிவிப்பார்கள். ஆனால், இதுவல்ல முக்கியமானது. இந்த லெவியால் அரசுக்கு நெல் அல்லது அரிசி எந்த அளவிற்கு பெறப்படுகிறது என்றாலும் அப்படிப் பெறப்படுகிற முறையில் இடையில் வாங்கப்படுகிற கமிஷன் பெறாமல இருக்க, விலை குறைத்து வாங்குவதைக் கைவிட்டு உதவுவதற்காக அதிகாரிகள் செய்கிற வசூல் இருக்கிறதே அது சாதாரணமானதல்ல. விவசாயிகள் கூட இந்தச் சிக்கலுக்கு ஆளாகிறார்கள். விவசாயிகள் வீட்டில் இருபது அல்லது முப்பது மூட்டை நெல் இருக்குமானால் அவர்கள் அதில் இலாபம் சம்பாதித்தால் அது நாட்டுக்குக்கேடு அல்ல. முப்பது மூட்டையில் இருபது மூட்டை வியாபாரியிடம் வாங்கிய மூட்டைகளை வைத்திருக்கிறாய் என்று அதிகாரிகள் சொல்ல அவர், ஐயா, வியாபாரி என்னிடம் பணத்தைக் கொடுத்துவிட்டான் அதை உங்களிடத்தில் கொடுத்தால் நஷ்டம் என்று, சொன்னால் அப்படியானால் மூட்டைக்கு பத்து ரூபாய் எடு என்று கேட்கிற நிலை பலவிடங்களில் இருக்கிறது. லெவி முறை மூலம் விவசாயிகள் கூட மறைமுகமாகத் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். லெவி முறை வியாபாரிகளுக்கா? விவசாயிகளுக்கா? விவசாயிகளிடம் இருந்து வண்டிகளில் நெல் கொண்டு வரும்போது ஏற்படுகிற இடையூறுகள் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் எடுத்துக்காட்டினார்கள். ஒரு சாதாரண ஏழ

விவசாயி கூட நெல்லை, அரிசியையோ விற்று வாழ வேண்டிய நிலை இருக்கிறது. அந்த வாழ்க்கை நடத்த இடையூறாக அதிகாரிகள் தலையிடுவது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், எப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. என்று சொன்னால், அதிகாரிகள் தாங்கள் நினைத்த அளவிற்கு இடையில் புகுந்து விளையாடுவதற்கு ஒரு பெரும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதிகாரிகள் தவறே செய்யவில்லை என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களோ அல்லது மற்ற அமைச்சர்களோ சொல்வார்கள் என்று நான் கருதவில்லை. அதிகாரிகள் செய்கிற தவறுகளைக் கண்டுபிடிக்க எங்களால் முடியவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, தவறே செய்யவில்லை என்று சொல்ல முடியாது. அப்படி செய்யக் கூடிய அதிகாரிகள் யார் என்று எங்களுக்குத் தெரியுமா என்று கேட்பார்களானால் நாங்கள் தெரிவித்ததற்குப் பிறகு அந்த அதிகாரிக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பதால் கூறியும் பயனில்லை. முன்னர் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தில் இலட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு பணம் பாழ்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் இந்த அவையில் தெரிவிக்கப்பட்டதற்குப் பின்னால்கூட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, நாங்கள் குற்றச்சாட்டை ஒருவர்மீது கூறி அவரை அரசுக்கு வேண்டியவராக ஆக்குகிற வாய்ப்பை அவருக்கு உருவாக்கித் தருவதைவிட இவ்வளவு திறமையானவரை கை விட்டுவிடக்கூடாது என்று கருதுகிற ஒரு மனப்பான்மைக்கு இடம் தருவதை விட—தனிப்பட்டவர்களைக் குறிப்பிட்டுச் சொல்வதில் அர்த்தமும் இல்லை, தேவையும் இல்லை, என்றே கருதுகிறேன். ஆனால், அரசின் பொறுப்பு அவர்கள் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய மிகப் பெரிய நிர்வாக இயந்திரத்தின் மூலம் இவர்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

விவசாயிகளுக்கு அடிப்படையான வருவாய் வருவதாக இருந்தாலும் அந்த வருவாயை உயர்த்துவதைத் தவிர அடித்தட்டு மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இன்னொரு தகுந்த வாய்ப்பு கிடையாது. பெரும் விவசாயிகள் அதனால் இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுமானால் பெரிய வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதிக்கவில்லையா? பெரிய முதலாளிகள் கோடிக்கணக்கில் கள்ளப்பணம் சம்பாதிக்கவில்லையா? மிகப் பெரிய தொழில் விற்பன்னர்கள் சம்பாதிக்கவில்லையா? எனவே, விவசாயிகள் முப்பது, நாற்பது ஏக்கர்கள் வைத்துக்கொண்டு, அண்ணன், தம்பி என்று ஆளுக்கு பத்து ஏக்கர்கள் என்று நாற்பது ஏக்கர்கள் வைத்துக்கொண்டு பெரிய விவசாயிகள் குடும்பங்கள் சம்பாதிக்கிறார்கள் என்றால் கூட அது குற்றமாகாது. அந்த விவசாயிகள் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டு வருகின்றனர். நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று இப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கரும்பு விலையை உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். கரும்பிலிருந்து அவர்கள் தயாரிக்கக்கூடிய வெல்லம் அல்லது ஜீனி போன்றவைகளின் விலை குறைந்து போய்விட்ட காரணத்தினால், அவர்கள் இழப்புக்கு ஆளாகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், விவசாயிகளுக்கு, கிராமப்புற மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற கருத்து தெரிவித்திருப்பதால், அவைகளின் விலையை உயர்த்துவதற்கு அரசு ஏதேனும் ஒரு தகுந்த முயற்சியை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஆளுநர் உரையிலே ஒரு ஷாக் டிரீட்மென்ட், என்பது போல விவசாயிகளுக்கெல்லாம் அச்ச உணர்வு ஏற்படத் தக்க வகையில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மின்சாரத்துறை இழப்பிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இழப்பை ஈடுகட்டுவதற்காக விவசாயிகளும் தலை கொடுக்க வேண்டுமென்றும், இந்தக் கட்டண உயர்வை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் விவசாயிகளுக்காகப் பேசுகிறேன் என்று கருதுவதைவிட, உணவு உற்பத்திக்காகப் பேசுகிறேன் என்று அருள் கூர்ந்து கருத வேண்டும். மின் கட்டண உயர்வின் காரணமாக உணவு உற்பத்தி எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்பதை மனதிலே வைத்து, மின்சார கட்டணத்தை உயர்த்தத்தான் வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட, அதற்குச் சில காரணங்களைக் கூறினாலும் கூட, விவசாயிகளைப் பொறுத்த வரைக்கும் எந்த அளவுக்கு அனுகூலமாக அரசு நடந்து கொள்ளலாம் என்பதை பரிசீலித்தாக வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மின் உற்பத்தி போதுமான அளவிலே இல்லாத கட்டத்திலிருந்து, இன்றைக்குப் போதுமான அளவுக்கு இருக்கின்றது என்ற அளவுக்கு வந்துவிட்ட காரணத்தினால், மின்சாரம் வழங்குவது தற்போது முறையாக, மின் வெட்டு தற்போது அறவே நீக்கப்பட்டுவிட்டதென்றும், மின் வெட்டு இல்லையென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த கருத்து இங்கே இடம் பெற்றிருக்கிறது. ஆனால், உண்மை நிலை என்னவென்று கேட்டால், மின் வெட்டு நினைத்த நேரத்தில் எல்லாம் நடைபெற்று வருகிறது. சென்னை நகரத்திலே இரவு 7 மணி முதல் 8 மணிவரை பல பகுதிகளில் மின்சாரம் தடைபடுகின்ற நிலை ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகின்ற இந்த மின் வெட்டு நிலை, கிராமங்களிலேயும் ஏற்படுகின்றது. ஏற்கெனவே காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரையில் அல்லது பகல் 2 மணியிலிருந்து இரவு 10 மணி வரையில் அல்லது இரவு 8 அல்லது 10 மணியிலிருந்து காலை 6 மணி வரையில், குறித்த கால அளவில் விவசாயிகளுக்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைக்கும் என்று சொன்னாலும், இப்படிப் பாதிக்கக்கூடிய நிலைமையும் ஏற்படு

கிறது. இப்படி நினைத்த நேரத்தில் மின் வெட்டு ஏற்படுகின்ற காரணத்தினால், மின் அழுத்தம் திடீர் திடீரென்று குறைகின்ற காரணத்தினால், பல இடங்களில் விவசாயிகளின் மோட்டார் பம்பு செட்டுகள் பழுதடையக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் 24 மணி நேரமும் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, இப்படிப்பட்ட நிலை ஏற்படுகின்றபோது, விவசாயிகள் 500, 600, 2,000, 3,000, ரூபாய்கள் இழப்பு ஏற்படக்கூடிய ஒரு பரிதாபகரமான ஒரு நிலைமை ஏற்படுகின்றது என்பதையும், நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, குறிப்பிட்ட 8 மணி நேரம் அல்லது 10 மணி நேரத்தில் எந்த நேரத்திலும் மின்சாரம் தொடர்ந்து, தரமாகக் கொடுப்பதற்கான, இடையில் நிற்காமல் இருப்பதற்கான தகுந்த முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும்...........

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மின் கட்டண உயர்வைப் பொறுத்த வரையில் நமது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒரு கருத்தை குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே எப்படி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்றால், மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லி, அதற்கு பயனீட்டாளர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பொதுவாக குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு மட்டும் மின் கட்டணத்தை உயர்த்தப் போகிறோம் என்ற பொருள்பட கூறுவது சரியான பிரதிபலிப்பாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்வெட்டைப் பற்றியும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மின்வெட்டைப் பொறுத்த வரையிலே, நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். மின் சக்தியைப் பொருத்தவரை நம் கையில் இருப்பு இருக்கிறது. மின் உச்சத் தேவை, பீக் டிமாண்டைப் பொறுத்தவரை பற்றாக்குறை இருக்கிறது. குறிப்பாக, காலை 6 மணி முதல் 9 மணி வரை பற்றாக்குறை இருக்கிறது. அதற்காக முறை வைத்து இப்போது மின்சாரத்தைத் தருகிறோம். ஆனால், இரவு 7 மணி முதல் 8 மணி வரை மின்சாரம் வரவில்லை என்றால், அதற்கு பொதுவான குறைபாடு காரணமாக இருக்காது, ஒருவேளை அந்தப் பகுதியில, குறிப்பிட்ட இடத்தில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக இருக்குமே தவிர வேறல்ல.

(பிற்பகல் 12–20)

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசும்போது, விவசாயிகளுக்கு மட்டும் உயர்த்த போகிறோம் என்று நாங்கள் சொல்லவில்லை ; எல்லோரையும் சேர்த்து ஒன்றாகத்தான் கருதுகிறோம் என்ற கருத்தைச் சொன்னார்கள்.





எல்லோரையும் சேர்த்துக் கருதாதீர்கள், விவசாயிகளைச் சற்றுப் பிரித்துத் தனியாகக் கருதுங்கள் என்று நான் கூறுகிறேன். விவசாயிகளைப் பிரித்துக் கருத வேண்டுமென்று சொல்லக் காரணம் விவசாயிகளுடைய வருமானம் மொத்த அளவு, பயிர் செய்யும் செலவு அளவு ஆகியவற்றைக் கவனிக்கிற போது மின்சாரத்தின் மூலந்தான் அந்த இழப்பை ஓரளவு ஈடுகட்டித் தரும் அவசியம் இருக்கிறது. அந்தப் பயன் கிராமங்களுக்குப் பரவலாகச் சேரும் ஒன்றாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகளை எல்லோருடனும் சேர்த்துக் கருத வேண்டாம்.

மின்சார இணைப்பைத் தருவதைப் பொறுத்தவரை மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எல்லா விவசாயிகளும் எவ்வளவு, மோட்டார் பம்புகள் வேண்டுமானாலும் வாங்குங்கள் அவைகளுக்கெல்லாம் இணைப்பு தரப்படும் என்று அரசாங்கத்தின் மூலமாக அல்லது துறையின் மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டு, அதன் காரணமாக ஆயிரக்கணக்கான பம்பு செட்டுகளை வாங்கி வைத்தவர்கள் கடந்த நான்கு ஆண்டு காலமாக மின்சார இணைப்பு கிடைக்கப் பெறாமல் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். இதை விடப் பெரிய குற்றச்சாட்டு வேறு என்ன வேண்டும் எதற்காக ' நீங்கள் எல்லாம் பம்பு செட் வாங்கி வையுங்கள்' என்று விவசாயிகளிடத்தில் சொல்ல வேண்டும்? வாங்கி வைத்த பம்ப் செட்டை வைத்து பூசை செய்து கொண்டிருப்பதா ? நான்காண்டுக் காலம் இணைப்புக் கிடைக்கவில்லை என்பதோடு மட்டுமல்ல—இப்போது அந்தத் துறையின் மூலம் வெளியிடப்பட்டிருக்கும் ஒரு அறிக்கை கூறுவது— ஊனமுற்றவர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும், மின்சார ஊழியர்களுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் அவர்களுடைய பம்ப் செட்டுகளுக்கு முன்னுரிமை கொடுத்து மின் இணைப்புத் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு கிராம வட்டாரத்தில் 400 பேர் மின் இணைப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், நான்கு பேருக்கு இணைப்பு கிடைக்கிறது. அந்த நான்கு பேருக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்காக நான்கு பர்லாங்கு தூரம் மின் கம்பி நீட்டப்படுகிறது. இடையில் உள்ளவர்களுக்குத் தரப்படவில்லை. யாருக்கு மின் இணைப்புத் தருவதற்காக நான்கு பர்லாங்கு தூரம் நீட்டிக்கப்படுகிறது ? மின்சார ஊழியர்களின் நிலத்திற்கு மட்டும் தருவதற்காக. மின்சார ஊழியர்களுக்குச் சலுகை தரவேண்டுமென்பதை விரும்புகிறவன், என்றாலும் கம்பி போடப்படும் வழியில் உள்ளவர்களுக்கு நன்மை செய்யாமல் எதற்காக சில பேருக்கு மட்டும் இணைப்புத் தர வேண்டும் என்பது விளங்கவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த முறை வைப்புகள்—பிரையாரிடிஸ் எல்லாம் மாற்றப்பட்டுள்ளன. மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படும்போது இதைப் பற்றி விரிவாகச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன் : அவை அமலில் இல்லை என்பதைப் பாராட்டத் தயாராக இருக்கும் எனக்கு எது அமலில் இருக்கிறது என்பதை விரைவில் தெரிந்துக் கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பம்ப் செட்டுகளைப் பொறுத்தவரை எந்தத் தேதியில் மனுக்கள் கொடுத்திருக்கிறார்களோ அந்தத் தேதியை தன்மையாக வைத்து மின்சார இணைப்பு கொடுக்கப்படுகிறது. 1968–69 ஆம் ஆண்டில் மனுப் போட்டவர்களுக்குக் கூட மின்சாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் எடுத்துப் பார்த்து இப்போதுதான் படிப்படியாக மின் இணைப்புக் கொடுத்து வருகிறோம். நிறையப் பேர்களை பம்ப் செட்டுகள் வாங்குங்கள் என்று நான்காண்டுகளுக்கு முன்னால் சொன்னதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி ஒரு விவரத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். திருவண்ணாமலை மின் திட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் அப்போதிருந்த பொறியாளர்கள்—முதலில் பம்ப் செட்டுகள் வாங்க எவ்வளவு பேர் ரெடியாவார்கள் என்ற நோட்டீசைக் கொடுத்தார்கள். யாரும் ரெடியாகவில்லை. பிறகு யார் யார் மனுப் போட்டு இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் தயாரா என்று நோட்டீஸ் கொடுத்தவுடன் எல்லோரும் ரெடியாகி விட்டார்கள். தமிழகம் முழுவதும் அந்த நிலைமை இல்லை. திருவண்ணாமலை, தென்னாற்காடு பகுதியில் மட்டும் அதற்காகத் தனி டிவிஷன் போட்டு விரைவுபடுத்தும் வகையில் அரசாங்கம் கடந்த ஓராண்டுக் காலமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. க. அன்பழகன் : திருவண்ணாமலை, தென்னாற்காடு மாவட்டம் அவர்கள் இருக்கிற வட்டாரம், அதற்காக நன்றி கூறும்போது, நான் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்ற போதும் இந்தக் குறைபாட்டை என்னிடம் சொன்னார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படியானால் திருவண்ணாமலை பற்றி உங்களுக்கு அக்கறை இல்லையா ?

திரு. க. அன்பழகன் : நான் திருநெல்வேலியை மறந்துவிட்டு திருவண்ணாமலையைச் சிந்திப்பதில்லை. திருநெல்வேலியில் மட்டுமல்லாது வேறுபல மாவட்டங்களிலும் இந்தக் குறைபாடுகள் கூறப்பட்டு வருகிறது. குறை போக்குவது என்றால் விஜிலெண்ட் ஆகத் தொடர்ந்து நடைபெற்றுக் காரியங்கள் நடைபெறுவதாக இருக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஆளுநர் உரை மீது சில முக்கியமான கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ' ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் 514 கோடி ரூபாய் அளவினதாக இருந்த போதிலும், வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் நீங்கலாக 600 கோடி





ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படும் நிலை ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகிறது ' என்று சொல்லியிருக்கிறார்கள். 600 கோடி ரூபாய் என்று ரூபாய்க் கணக்கில் பார்க்கிறபோது அது மிகப் பெரிய தொகையாகத் தெரியும். ஆனால் அதனால் ஏற்படுகிற விளைவுகள் என்ன, அந்தப் பணிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டன. ஸ்பெசிபிகேஷன் படி நடக்க வேண்டிய அளவுக்கு அந்தப் பணிகள் எந்த அளவுக்கு எந்த முறையில் செய்யப்பட வேண்டுமோ அந்த முறையில் செய்யப்பட்டிருக்கிறதா ? சாலைகள் முறைப்படி போடப்பட்டிருக்கின்றனவா ? பள்ளிக்கூடங்கள் சரியாகக் கட்டப்பட்டிருக்கின்றனவா? எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன ? எந்த முறையில் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டன என்பதை இரண்டாண்டு காலத்திற்கு ஒரு முறை ஸ்பெஷல் கமிட்டி அல்லது இன்ஸ்பெக்ஷன் கமிஷன் என்ற முறையில் குழு நியமித்து மாவட்டந்தோறும் விசாரித்தால் தவிர பல பணிகள் செலவுக் கணக்குகளுக்குத்தான் பயன்படுமே தவிர, அந்தப் பணிகள் நிறைவேறின என்று சொல்ல முடியாது. வறட்சிநிவாரணப் பணியிலும் சில தனிப்பட்டவர்களின் வறட்சி நல்ல முறையில் நிவாரணம் பெற்றது. ஆனால் ஊர் வறட்சி நல்ல முறையிலே நிவாரணம் பெறவில்லை. அந்த விவரங்களுக்குள்ளே இப்போது நான் செல்வது அவசியமில்லை. எனவே அந்த சூழ்நிலையில் 600 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று பெருமைப்படுகிறோம் என்கிற அதே நேரத்தில் 550 கோடி ரூபாயாவது முறையாகத்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை, அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது டெண்டர்கள் மூலமாக வேலை செய்கிறவர்களாக இருந்தாலும் சரி நாமினேஷன் ஒர்க்காக இருந்தாலும் சரி, எப்படி நடைபெற்றது என்பதை பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற நேரத்திலே, அந்தச் சாலைகளைப்பற்றி எங்களிடத்திலே தெரிவிக்கிறவர்கள் இது கடந்த ஆண்டு நாமினேஷன் ஒர்க் மூலமாக போடப்பட்ட சாலை என்கிறார்கள். போட்டார்களா என்று கேட்டால் போட்டதாகத்தான் கணக்கு என்கிறார்கள். போடப்பட்டதற்கு என்ன அடையாளம் என்றால் பக்கத்திலே இருக்கிற மண்ணை வெட்டி இந்தக் கரையோரத்திலே போட்டார்கள் என்கிறார்கள். கப்பி போட்டார்களா என்றால் அந்தக் கப்பியை இங்கேயிருந்து அள்ளிக் கொண்டுபோய் இன்னொரு சாலையைப் போட்டுக் கொண்டார்கள். ஒரு இடத்திலே கப்பி போடுவது, அளக்கப்படுவது, அதிகாரிகள் ஒப்புக் கொள்வது, பணம் பட்டுவாடா செய்வது வாங்கிக் கொள்கிறவன் அதை அள்ளிக் கொண்டு போய் இன்னொரு இடத்திலே போடுவது அப்படி நடைபெற்றிருக்கின்ற இடங்கள் மட்டும் தமிழ்நாட்டிலே 150-க்கு மேல் இருக்கின்றன என்பதை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன். நான் கிராமப் பகுதியில் வாழ்கிறவன் அல்ல. ஆனால் இத்தனை அமைச்சர்கள்

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

இருந்துக் கொண்டிருக்கின்ற ஒரு அரசாங்கத்தை ஏமாற்றுவது என்பது நிருவாகத்தின் அடித்தட்டிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்குமானால் ஆட்சி எதற்காக ?

இன்னும் சொல்லப் போனால் வெறும் அரசியல்வாதிகளாக இருக்கின்றவர்கள் ஆட்சிக்கு வந்தாலும் கூட நான் வருத்தப்பட மாட்டேன், வேறு வழியில்லை என்று. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகப் பெரிய தொழிலிலே கொடி கட்டிப் பறந்து அந்தச் சூழ்நிலையை விட்டு அரசியலிலே ஏதோ மாற்றம் செய்வதாக வந்து அமர்ந்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் அவருடைய ஆட்சியில் அவர் எந்த நிலைமை இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்திருந்தாரோ அதற்கு நேர்மாறாக நடக்கிறபோது அதை அவரே கவனிக்காத நிலைமை இருக்குமானால் அதைவிட வருந்தத்தக்க ஒரு சூழ்நிலை வேறு காணமுடியாது.

தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சற்றுப் பெருமையாகச் சொல்லப்படுகிறது. 159 ஒன்றியங்களில் அதற்குப் பிறகு இத்தனை ஒன்றியங்களில் அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து விட்டது என்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால் வேலை கொடுக்கப்பட்டது யாருக்கு என்ற பட்டியலிலே ஏதோ ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், 100-க்கு 60 பேர்கள், 70 பேர்கள் தி.மு.க. வை சேர்ந்தவர்கள் அந்த வேலையைச் செய்தார்கள் என்றார்கள். தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் வேலை செய்திருந்தாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் வேலையைத் செய்திருந்தாலும் அந்த வேலைகள் கொடுக்கப்பட்ட முறை என்ன ? கான்ட்ராக்ட் முறை, ஒப்பந்த முறைகளுக்கு டெண்டர்கள் கோரப்பட்டு டெண்டர்கள் அடிப்படையிலே அந்த வேலைகள் தரப்பட்டனவா ? அல்லது நாமினேஷன் முறையிலே தருவது என்றால், கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த அந்த உத்தமமான காரியத்தை நிறைவேற்றுவதைப் போல் ஒரு பெரிய குற்றமல்லவா ?

இந்த அமைச்சரவையின் பொறுப்பிலே உள்ள பெருமக்கள் ஏற்கெனவே தெரிவிக்கவில்லையா ? கான்ட்ராக்ட் முறையை ஒழிக்கப் போகிறோம், காண்ட்ராக்ட்டிலே 100க்கு 25 பங்கு 30 பங்கு லாபம் பெறுகிறார்கள், அதற்கு இடம் தந்துவிடக் கூடாது, ஆகவே காண்ட்ராக்ட் முறையை விட்டுவிட்டு அரசாங்க பணியாட்களைக் கொண்டு இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று ஒரு காலத்திலே தெரிவித்தீர்கள். அப்போது கான்ட்ராக்ட் முறையை விட்டுவிட்டோம் என்று சொன்னீர்களே என்று கேட்டால் இப்போது கான்ட்ராக்ட் முறையை விட்டுவிட்டு நாமினேஷன் முறையிலே வேண்டியவர்களுக்குத் தருகிறோம். அதிகாரிகளிடத்திலே நாமினேஷன் முறையிலே பெற்றுக்கொள்கிறோம் என்ற நிலைமையிருக்குமானால் அஸ் எ மேட்டர் ஆப் பாலிசி, கொள்கை முறையில் ஒரு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாத ஒரு தவறான கொள்கையை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்



1982 பிப்ரவரி 10] [திரு. க.அன்பழகன்]

டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகவில்லையா ? நாமினேஷன் என்றால் ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு நீ இந்த வேலையைச் செய் என்று தருவது. எந்த அடிப்படையிலே தருவது ? வேலை செய்வதற்கான முன் பாத்தியதை, உரிமைகள், அல்லது ஏதேனும் தகுதிகள், திறமைகள் அல்லது நாணயம் இவை அவருக்கு இருக்கிறது என்று கருதி தரப்பட்டதா ? எனக்கு செல்வாக்கு இருக்கிறது என்று சொன்னால் நான் 10 பேருக்கு நாமினேஷன் வேலை வாங்கித் தருகிறேன். 10 பேர்களுக்கு நாமினேஷன் வேலை வாங்கித் தந்தால் ஆளுக்கு 50 ஆயிரம் மதிப்பிற்கு வேலை செய்வார்கள், 5 லட்சத்திற்கு வேலை செய்வார்கள், அவர்களிடத்திலே நான் சொல்கிறேன்—புட்லூர் தண்டபாணி கொலை நடப்பதற்குக் காரணமாய் இருந்த சூழ்நிலையைப் போன்றவற்றை எண்ணி நான் சொல்கிறேன். ஒரு வேலைக்கு ஐயாயிரம் என்னிடத்திலே கொடுத்துவிடு என்று. கமிஷனர் 50 ஆயிரத்திற்கு ஐயாயிரம் வழக்கமாகப் பெறுவது. எஞ்சினியர் 50 ஆயிரத்திற்கு 2,500 தந்தால் போதும் என்று பெறுவது. அப்புறம் நாமினேஷன் என்றால் என்ன ? நாமினேஷன், முறையிலே குறைகள் ஏற்படுகின்றன என்பது உலகம் தெரிந்த ஒன்று. அந்தக் குறைகள் ஏற்படாமல் இருக்க ஒப்பந்த முறையைக் கையாண்டால், ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். கான்ட்ராக்ட் முறையைக் கைவிட்டுவிட்டு நாமினேஷன் முறையைக் கொண்டு வந்து அரசாங்கத்தினுடைய பணம், பொதுமக்களுடைய வரிப் பணம், நீங்கள் எதற்காக நிதி ஒதுக்கினீர்களோ அது முறையாக மக்களுக்குப் போய் சேரவில்லை என்று சொன்னால் தவறா?

[பிற்பகல் 12—30]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள், தன்னிறைவுத் திட்டத்திலே நாமினேஷன் முறை செயல்பட்டு வருவதாகத் தவறான கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்திலே எல்லாப் பணிகளுமே டெண்டர் போடப்பட்டு காண்ட்ராக்ட் முறையில்தான் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்ற திட்டம் பணியாளர்களின் மூலம்தான் செய்யப்பட்டு வருகிறதே தவிர காண்ட்ராக்ட் முறையிலே செய்யப்படுவதில்லை.

150 இடங்களிலே பாதைகள் போடப்படாமல் பணத்தைப் பறிமுதல் செய்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பட்டியல் இருந்தால் தயவு செய்து எங்களிடத்தில் கொடுக்க வேண்டும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் காண்ட்ராக்ட் முறையில்தான் செய்யப்படுகிறது. ஆனால், டெண்டர் முறையில் செய்யப்படுகிறது. டெண்டர் முறையில் செய்யப்படும்பொழுது நமக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்க முடியாது. யார் குறைந்த பட்ச தொகைக்கு டெண்டர் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க முடியுமே தவிர, வேறு யாருக்கும் கொடுக்க முடியாது. ஆகவே அந்த முறையைத்தான் கையாளுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : நான் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் அரசு வேறு விதமான விளக்கங்கள் பெற விரும்பினால் எனக்குத் தடையில்லை. அது தன்னிறைவுத் திட்டமாக இல்லாவிட்டால் இன்னொரு திட்டத்தின் மூலம் என்று கருதிக்கொள்ள வேண்டும். இன்ன திட்டத்தைத்தான் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கம் எனக்கு இல்லை. அரசாங்கத்தின் பணம் இப்படிப்பட்ட வேலைகளில் தவறாகச் செலவு செய்யப்படுகிறது என்பதற்காகத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

150 இடங்களின் பட்டியலைத் தாருங்கள் என்று சொன்னார்கள். அந்தப் பட்டியல் தயாரிக்கும் வேலையை இன்னும் கொஞ்ச நாள் கழித்து பார்த்துக் கொள்வேன். அமைச்சரவர்கள் விரும்புகிறபொழுது செய்ய வேண்டும் என்பது அல்ல. 150 இடங்கள் அல்ல, இன்னும் பல நூற்றுக்கணக்கான இடங்களில்.........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு தலைவரவர்களே, ஆதாரம் இருப்பதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அது சட்டமன்றக் குறிப்புகளிலேயும் இருக்கிறது. எனவேதான் கேட்கிறேன், ஆதாரம் இருந்தால் நீங்கள் இங்கே கொடுக்கலாம், உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறோம்.

திரு. க. அன்பழகன் : அதற்கு ஆதாரம், நான் போய் வந்த சாலைகள்தான், நான் போய் பார்த்த அந்தச் சாலைகள்தான். அதன் நிலைமைகளை நீங்கள் பார்க்க வேண்டும். அப்படியில்லை என்றால் குற்றம் இல்லை என்று சொல்லுங்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திருவண்ணாமலை வட்டாரத்திற்குச் சென்றபொழுது அங்கே சரியாக வேலை நடக்கவில்லை என்பதற்காக எவ்வளவு பெரிய நடவடிக்கையை எடுத்தார்கள் ; அதனுடைய விளைவு என்னவாயிற்று என்பது அவர்களுக்குத் தெரியும்.

நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், ஏமாற்றுங்கள் மிகுதியாக இருக்கின்றன ; அரசாங்கத்தின் பணம் அரசாங்க ஊழியர்கள் மூலமாகச் சில வேலைகள் செய்யப்படுகிறபொழுது கூட, எந்த இலாக்காவால் செய்யப்பட்டாலும் அந்தப் பணத்தின் முழுப் பலனும் மக்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படி கிடைக்கவில்லை என்று சொல்லும்பொழுது, அதைத் தனிப்பட்ட குற்றச்





சாட்டாகக் கருதாமல் அரசாங்கம் இப்படிப்பட்ட குறைகளை எப்படி நிவர்த்தி செய்வது, எந்த முறையில் அவைகளை மாற்றுவது என்ற அடிப்படையில் எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

அடுத்து ஆளுநர் உரையில், நில பதிவேடுகளில் நில உரிமையாளர், குத்தகைதாரர் முதலிய விவரங்களை நாளது வரை எழுதிவைக்கும் திட்டம் 1979 ஜுன் 1ஆம் தேதியன்று தொடங்கியது என்று அருக்கிறது. அதற்கு முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே நிலப் பதிவேடுகள் அமைக்க வேண்டுமென்ற திட்டம் நடைமுறைக்கு வரவேண்டுமென்ற முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அப்பொழுது எந்தக் காரணத்தினாலே அது விரைந்து செயல்பட முடியாமல் போயிற்று என்பதை என்னால் சொல்ல முடியாது. மேலும் ஆளுநர் உரையில் சொல்கிறார்கள், இத்திட்டத்தின்கீழ் 72,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலம் குறித்த பெரும் பணி இன்னும் செய்து முடிக்கப்படாமல் உள்ளது என்று. 72,000 சதுர கிலோ மீட்டர் என்றால் ஏறத்தாழ தமிழகத்தில் பாதி என்று அர்த்தம். எனவே, 72,000 சதுர கிலோ மீட்டர் என்ற அந்த வார்த்தையை போடுவதன் மூலம் ஏதோ ஒரு பணி பெருமளவிற்கு நடைபெற்றிருப்பதைப்போல தோற்றத்தை உருவாக்கும். ஆனால் பெருமளவிற்கு நடைபெறவில்லை என்பதுதான் உண்மை. அதற்குக் காரணம் என்ன? கிராம அதிகாரிகளை அவசரச் சட்டத்தின் மூலம் நீக்கி விட்டீர்கள்? எப்படி ரெவின்யூ இலாக்கா ஒழுங்காக செயல்பட முடியும்? யார் நீக்கப்பட்டிருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்களின் பணியிடங்கள் காலியாகவே இருக்கின்றன. அதனால் ஏற்பட்ட தொய்வு அல்லது பொதுமக்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் இதுவரையில் எப்படி மாற்றப்பட்டது. அவர்களுக்கு மேற்பட்ட அதிகாரிகள் அந்தக் கிராம மக்களுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட தொண்டு அல்லது சர்வீஸைச் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்களா? 72,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள நிலம் குறித்த பணி, 1979 ஆம் ஆண்டிலேயே தொடக்கப்பட்ட பணியில் இன்னும் 1982 ஆம் ஆண்டு பணியிலேயும் கூட நிறைவேற்றப்படாமல் மிச்சம் இருக்கிறது என்றால் என்ன காரணம்? இவ்வளவு பெரிய குறை ரெவின்யூ இலாகாவில் இருப்பதற்குக் காரணம் அவசரப்பட்டு எடுத்த முடிவு என்பதை நினைவுபடுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, நீண்ட காலமாக, முப்பதாண்டுக் காலமாக நிலத்தை அளந்து யார் உரியவர் என்று ஆக்காமல் இருக்கிறது. கிராமங்களில் ஒருவர் பெயரில் அனுபவம் இருக்கிறது; வேறொருவர் பெயரில் பட்டா இருக்கிறது. இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்ற காரணத்தால் இந்த அரசு வந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நில அளவை மேம்பாட்டுத்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1982 பிப்ரவரி 10

திட்டத்தின் மூலமாக அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொல்லி அவ்வாறு நடைமுறைபடுத்தப்பட வேண்டிய உத்தரவின்பேரில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், 28 வருவாய் வட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதே வேகத்தில் போனால் அது 10 ஆண்டுகள் ஆகும் என்பதை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளிலோ அல்லது 3 ஆண்டுகளிலோ முடிக்க வேண்டுமென்பதற்காகத் துரிதப்படுத்த வேண்டுமென்கிற ஒரு கொள்கை விளக்கம் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. க. அன்பழகன் :** அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல துரிதப்படுத்துவது சரிதான். துரிதப்படுத்துவது என்று இன்றைக்கு முயற்சித்தாலும் அதற்கு இன்னும் எவ்வளவு காலமாகும் என்று எனக்குத் தெரியாது எப்படியோ செயல்பட்டால் சரி.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இரண்டு ஆண்டு அல்லது 3 ஆண்டிற்குள் என்று போடப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

**திரு. க. அன்பழகன்:** நான் கடந்த ஆண்டு வெளியான உரையை படித்தவன் என்ற காரணத்தால் இந்த ஆண்டு அறிக்கை பற்றிய கருத்தை அடுத்த ஆண்டுதான் தெரிவிக்க முடியும்.

தொடர்ந்து இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையைப்பற்றி சொல்கிற பொழுது, அறிஞர் அண்ணாவினுடைய இரு மொழிக் கொள்கையை ஒரு தொடரிலே எடுத்துக் காட்டி அதற்குப் பிறகு நீதிமன்றங்களில் எல்லாம் தமிழ்மொழி ஆட்சி மொழியாக ஆக வேண்டும், சிவில் கோர்ட் என்று சொல்லப்படுகிற உரிமையியல் நீதிமன்றங்கள் அனைத்திலும் தீர்ப்புகளும் ஆணைகளும் தமிழில் வரையப்பட வேண்டும், அதுவும் இந்த ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே, கொள்கை அடிப்படையிலே எங்களுக்கு எந்த மாறுபாடும் கிடையாது. அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் நடைமுறையிலே ஏற்படக்கூடிய சிக்கல்களுக்குக் காரணம் அரசாங்கம் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யத் தவறியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அந்த முன்னேற்பாடுகளைச் செய்வதன் மூலமாகத்தான் அரசாங்கத்தினுடைய ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்குமானால், அந்த ஆணை காப்பாற்றப்படும். ஆணை பிறப்பிக்கப்படுகிறபொழுது, அந்த ஆணை காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்படாமல் இருக்குமானால் அந்த முன்னேற்பாடுகளைச் செய்வதன் மூலமாக, அந்த ஆணையை நிறைவேற்றுவதற்குத் தகுந்த முன் நடவடிக்கையை மேற்கொள்வது கடமை என்று நான் நினைவூட்டுகிறேன்.



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

அதுமட்டுமல்ல, இன்றைக்குச் சில வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகவும் நான் அறிகிறேன். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற அடிப்படையிலே, நான் எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இது மாநில அரசாங்கத்தினுடைய உரிமை என்பதையும், மாநில அரசாங்கத்திற்குத் தமிழ்நாட்டிலே உள்ள உயர்நீதிமன்றம் தவிர, மிச்ச நீதிமன்றங்களிலே எப்படிப்பட்ட மொழி பயன்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவிக்கின்ற உரிமை கூட இல்லையென்று சொன்னால், அப்படிப்பட்ட கருத்து தமிழ்நாட்டு மக்களையோ, அல்லது மாநில மக்களையோ மதிக்கிற கருத்தாகாது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசாங்கத்தின் அதிகாரிகள், ஒரு குறிப்பு எழுதித் தருவார்களானால்,..............

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் என். வி. என். சோமு அவர்களும் சில நாட்களுக்கு முன்பே இதைச் சுட்டிக்காட்டினார்கள்.

1. Negotiable Instrument Act.
2. Sale of Goods Act.
3. Civil Procedure Code.
4. Indian Contract Act.
5. Transfer of Property Act

ஆகிய இந்தச் சட்டங்கள் மிக அத்தியாவசியமான சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு இன்னும் அனுப்பப்படாத நிலையில் ஆணை பிறப்பிக்கப்படுகின்றபொழுது அங்கே தமிழிலே நிர்வாகத்தை நடத்துவது சிரமம் என்ற முறையிலே கூறினார்கள். இந்த அனைத்துச் சட்டங்களும் மொழி பெயர்க்கப்பட்டு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு விட்டன.

**திரு. க. அன்பழகன் :** உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு விட்டால் மட்டும் கூடப் போதாது. அதிலே அவர்கள் ஓரளவுக்குப் பயிற்சி பெற்று, அதைப் பக்குவமாகக் கையாளுவதற்கும், கையாள்வதிலே அதிலே குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கும் ஓரளவு நீங்கள் இடைக்காலம் தந்துதான் ஆக வேண்டும். அந்த இடைக்காலத்தை நீங்கள் நீதிமன்றத்தோடு கலந்து உருவாக்கிக்கொள்வது, நாளையதினம் இந்தச் சட்டத்தினுடைய தன்மையால், தமிழை ஆட்சிமொழியாகப் பயன்படுத்திய காரணத்தால் ஏதோ இழுக்கு வந்துவிட்டது என்று, நாம் செய்கிற குறைகள் தமிழ்மீது ஏறாமல் இருப்பதற்கு அருள் கூர்ந்து அதைக் கவனிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்

கொள்கிறேன். அதே போல், அரசு, ஏதாவது ஒன்றை அறிக்கையாக அதிகாரிகள் தருவார்களானால், அதைப் புதியதாக எண்ணிக்கொண்டு அறிவிக்கிற ஒரு முறையும் இருக்கிறது. பள்ளிக் குழந்தைகளுக்குத் தொழு நோய் இருக்கிறதா என்பதை கண்டறிய வரும் ஆண்டிலிருந்து விரிவான சோதனைத் திட்டம் ஒன்றை அரசு தொடங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது என்ன கோட்டையிலே தொடங்குவதா ? ஏற்கனவே தொடங்கப்பட்டதெல்லாம் என்ன ஆயிற்று ? எத்தனை முறை இது தொடங்கப்பட்டிருக்கிறது ? தொழுநோயும் புதிதல்ல, பள்ளிக்கூடமும் புதிதல்ல, சோதனை முறையும் புதிதல்ல, அதற்கென செய்யப்பட்ட அறிவிப்புகளும் புதிதல்ல. நான் இருந்த காலத்திலே மாறி, மாறி அறிவிக்கப்பட்ட திட்டம் உருப்படியாக நடைமுறைப்படுத்தாத சூழ்நிலையில் இன்றைக்கு மறுபடியும் முறைப்படியாக தொடங்கும் என்று அறிவிப்பதை விட இனியாவது முறையோடு எவ்வாறு செயல்படும் என்று தெரிவிக்கிற முறை இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தன்னுடைய காலத்தில் இருந்த கஷ்டத்தை எல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தொடர்ந்து அதிலே ஒரு சிக்கல் இருக்கிற காரணத்தால்தான் எல்லா மாணவர்களையும், தொழுநோய் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அதற்காக பரிசோதனை செய்ய டிஸ்டிரிக் எஜுக்கேஷனல் ஆபீசர்களோடு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நாம் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி இருக்கிறோம். அதனுடைய விளைவாக, திருச்சி மாவட்டத்தில் சென்ற ஆண்டு 5 இலட்சம் பேர்களிலே 1½ இலட்சம் பேர்கள் பரிசோதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 5 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களிலே 3 இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்கள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இது சிக்கலாக இருக்கக்கூடிய ஒரு பிரச்னை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பிரச்னையிலே நல்லவகையிலே முன்னேற்றத்தை நாம் கண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

**திரு. க. அன்பழகன் :** எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த ஆண்டிலேயே முடித்துவிட முடியுமா ?........

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பித்து இருக்கிறோம். முடியும் என்று எதிர்பார்க்கிறோம்,





**திரு. க. அன்பழகன் :** நீங்கள் ஆரம்பிக்கவில்லை. அதை நான்தான் ஆரம்பித்தேன். நான் அந்த அமைச்சர் பொறுப்பிலே இருந்தபோது ஆரம்பித்தது, ஆகவே, ஆரம்பிப்பது என்பது அவ்வப்போது ஆரம்பித்து கொண்டுதான் இருக்கிறோம் என்பது முறையல்ல. எதுவும் நிறைவாகவும் முழுமையாகவும், ஒரு கட்டுப்பாடாகவும், முழு பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்றப்படுகின்ற நிலைமை இல்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன். நான் அந்தப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே கூட ஓரளவு நடைபெற்றது. நாம் திரும்பத் திரும்ப சில திட்டங்களைப் போடுகிறோம். அதை முழு அளவுக்கு நிறைவேற்றுவதற்கான சக்தி, ஆற்றல் அற்றவர்களாகத்தான் நாம் இருக்கிறோம். அதுவும் தொழுநோயைப் பொறுத்தவரையில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற அந்த 2 ஆண்டு 3 ஆண்டு காலத்தில் ஒரு முறையாவது சோதிக்க வேண்டும் என்பதற்கான முயற்சியாக, அதற்கு வரையறுத்த ஒரு சட்டம் தேவையானால் கூட கொண்டு வந்து உரிய பணியாளர்களை நியமித்து சோதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. :** 'தங்கள் யோசனைக்கு நன்றி. இப்போதே நல்ல வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

We have succeeded and we have been able to idenify a number of cases.

**திரு. க. அன்பழகன் :** அமைச்சர் விவரம் கொடுக்கின்ற காலத்தில் தக்க விளக்கங்களைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

மேலும் தொழிலாளர் நல உரிமைக்காக சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டங்களில் இன்று தமிழ்நாடு தொழில் நிறுவனங்களில் பதவியில் நிலைநிறுத்துவதற்கான சட்டமாக வந்திருக்கின்றது. ஆனால், அந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகிறபோது தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பட்டியல் ஒன்று அந்த இலாகாவினாலே கைக்கொள்ளப்பட வேண்டும். அந்தப் பட்டியல் இருக்குமேயானால்தான் அவர்களை நிரந்தரமாக வேலைக்கு வைக்காமல் நீக்கப்படுவதற்கான நிலை இல்லாமல், பதிவு செய்வது என்ற முறையில், குறித்த காலத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலமாக இந்தச் சட்டம் எந்த வகையிலும் மீறப்படாதவாறு பாதுகாப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன்.

அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதாக சொல்வதிலே மட்டும் இந்த அரசாங்கத்திற்கு ஒரு தனி ஆர்வம் இருக்கிறது. அந்த முறையிலே நம்முடைய தமிழக அரசும் தெரிவித்திருக்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்டவர்

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 10

களுக்காக இலவச வீடு கட்டித் தருவதற்கான வாய்ப்பும் வசதியும் எனக்கு இல்லை என்று மாண்புமிகு முலதமைச்சர் அண்மையில் நெய்வேலியில் பேசுகிறபோது தெரிவித்து இருக்கிறார்கள். இலவசமாக கட்டித் தர முடியாது, கடன் தருகிற திட்டத்திலே தான் கட்டித்தர முடியும் என்றார்கள். அப்படி ஆதிதிராவிட சமூக நல வளர்ச்சிக்காக செய்கிற காரியங்களை இன்னின்னவை என்று தெரிவித்து இருந்தாலும் கூட, அரசாங்கம் எந்த அளவுக்கு தாங்கள் சொல்லுகிற திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பதற்கு Comptroller & Auditor-General of India அவர்கள் தந்திருக்கிற ஒரு அறிக்கையிலே இந்த கருத்தை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த அறிக்கையில் 1979—82 ஆம் ஆண்டு என்பதைப் பற்றி இருந்தாலும், இந்த அரசாங்கம் உணர்வதற்காக அதை நான் சொல்லுகிறேன். 30 ஆம் பக்கத்தில்........

Against 150 hostels for Adi Dravidar (100) and backward classes (50) envisaged for construction, only 101 hostels for Adi Dravidar were sanctioned by the Government up to 1978—79; no further hostels were sanctioned thereafter. As of March 1981, 29 hostels were yet to be completed. Construction had also not commenced (March 1981) on the 50 Centrally sponsored hostels for which funds (Rs. 100 lakhs) had been received in March 1980.

பணம் கிடைத்தும் கூட, ஓராண்டுக் காலம் வரையில் அந்தப் பணி தொடங்கப்படவில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதேபோல........

A hostel completed at a cost of Rs. 2.39 lakhs in April 1978 had not been taken over (March 1981) by the District Backward Classess Welfare Officer, as the hostel would accommodate only 50 students against the required capacity of 150 students. The accommodation is not utilised.

Under the housing scheme for fishermen in coastal areas, construction had not yet commenced (March 1981) in respect of 1,394 houses (estimated cost Rs. 83.64 lakhs) sanctioned during 1977—78 (449 houses) and 1978—79 (945 houses) for want of site, approach loads, finalisation of contract, etc.

இப்படி இரண்டு ஆண்டுக் காலம் அந்த வேலைக்கு நிதி ஒதுக்கப்பட்டும் மீனவர்கள் வட்டாரத்தில் கட்டப்பட வேண்டிய அந்த 1,394 வீடுகள் கட்டப்படுவதற்கான எந்த வேலையும் தொடங்கப்படவில்லை என்பது ஆடிட்டர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் அதைப்போலவே



1982 பிப்ரவரி 10] [திரு. க. அன்பழகன்]

39 houses at a cost of Rs. 1.57 lakhs out of 54 houses constructed by the Company during 1976-78 for fishermen at Devipattinam were lying vacant due to defects in construction and non-provision of amenities. —

இவையெல்லாம் ஆதித்திராவிட மக்களுக்காகவும், அவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் வளர்ப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் தமிழக அரசால் அமைக்கப்பட்ட கார்ப்பரேஷனில் ஏற்பட்டு இருக்கும் குறைகள். இப்படிப்பட்ட குறைகளைக் களைவதில்தான் ஒரு ஆட்சியின் உயர்ந்த நோக்கம். செயல்முறை இருக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் மேலும் சில கருத்துக்களைச் சொலல வேண்டும் என்று எண்ணி இருந்தாலும் கூடப் போதுமான அளவிற்கு நான் அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால். வாய்ப்பு இல்லை என்று கருதுகிறேன். குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன், சட்டம். ஒழுங்கு அமைதி இவைகளைக் காப்பாற்றுவதற்கான பொறுப்பை ஒரு அரசாங்கம் எந்தக் கோணத்தில் அணுகுகிறது என்பதிலேதான் வெற்றி கிடைக்குமே தவிர அதிலே கட்சிக் கண்ணோட்டம் இடம் பெற்றாலும். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கண்ணோட்டம் இடம் பெற்றாலும், அடக்குமுறை என்ற கண்ணோட்டம் ஏற்பட்டாலும், அது தேவைப்படுகிற அளவிற்கு, எதிர்பார்க்கின்ற அளவிற்கு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளுக்கு இடையூறாக வன்முறையில் ஈடுபடுகிறவர்களை அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும் என்கிற தத்துவத்தை நான் ஏற்றுக்கொண்டாலும், சமுதாயத்திற்குக் கேடு செய்யும் கடும் வன்முறைகளை அனுமதிக்கக் கூடாது என்பதை ஏற்றுக்கொண்டாலும் கூட, அப்படி அடக்குகின்ற முறையில் அரசாங்கம் முறை தவறி நடந்துவிடக்கூடாது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் நக்சலைட்டுகளாக இருந்தாலும் சரி, அல்லது தீவிரவாதிகளாக இருந்தாலும் சரி, ஒரு கொள்ளைக் கூட்டமாக இருந்தாலும் சரி—கொள்ளைக் கூட்டத்திடம் கூட சில அரசாங்கங்கள் சமாதானம் பேசிக்கொள்கின்ற காட்சிகளை நாம் பத்திரிகைகள் மூலமாக அறிந்து இருக்கிறோம்—அல்லது அந்தக் கொள்ளைக் கூட்டங்களிலே நாகரீகமான சில கொள்ளைக் கூட்டங்களைக் கூட நாம் காண்கிறோம் — மத்திய சர்க்காரை ஏதாவது ஒரு வகையில் ஏமாற்றி வருகின்ற கொள்கைக் கூட்டங்களை நாம் பார்த்து இருக்கிறோம் — எமர்ஜென்சி காலத்தில் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட காட்சிகளையும் கண்டு இருக்கிறோம் — இப்படிப்பட்ட முறையில் தவறு செய்கிறவர்கள், குற்றம் செய்பவர்கள் பற்றி நாம் எண்ணிப்பார்க்கப்போமே

யானால், அவர்கள் சமுதாயத்தின் மொத்த சூழ்நிலையில் முறை தவறி நடந்தவர்கள் என்கிற அனுதாபத்தைக் கண்ணோட்டத்தோடு அவர்கள் செய்கிற காரியங்களை வளர்த்து விட வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், அத்து மீறிய நடவடிக்கைகளைத்தான் தடுக்கிறோம் என்று சொன்னாலும், அவர்கள் அஞ்சும் அளவிற்குத்தான் அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று சொன்னாலும், உயிரைப் பறிக்கும் அளவிற்கு செயல்படுவது நல்லதல்ல. ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட அந்தக் கண்ணோட்டமும், கருத்தும் சரியல்ல என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடந்த மாதம் 19-ம் தேதி நடைபெற்ற 'பந்த்' கொள்கை அடிப்படையில் தேவைதானா, அல்லவா என்கிற வேறுபாடு எங்களுக்கும் இருந்தாலும்கூட, அந்த பந்த் மேற்கொள்ளப்படுவதற்கான காரணங்கள், நியாயமான காரணங்கள், ஏற்றுக்கொள்ளக் கூடியதே என்கிற அளவில் ஆதரவு தெரிவித்தாலும், அந்த பந்தில் ஈடுபட்டவர்கள் ஏழை எளிய மக்கள், ஆதி திராவிடர்கள், மிகவும் பின் தங்கிய மக்கள். ஆகவே, அப்படிப்பட்ட பந்த் நடைபெறுகின்ற அந்த ஒரு நாளில் ஒரு வட்டாரத்தில் வண்டிகள் ஓடவில்லை என்றால் அதனால் பொதுமக்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்பட்டு விடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவூட்ட விரும்புகிறேன். அது ஒரு பெரிய பாதகம் அல்ல. இதனை ஒடுக்க வேண்டும் என்பதற்காக, காவல் துறையைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய அரசாங்கத்தின் மிகப் பெரிய செல்வாக்குக்கு எதிராக இப்படிப்பட்ட பந்தா என்று எண்ணி, மிகப் பெரிய அடக்குமுறையில் ஈடுபட்டு, அதன் காரணமாக 8 பேர் உயிர் பிரிந்து இருக்கும் துக்ககரமான நிலை வருந்தத்தக்கது. அதற்காக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அந்த உயிர் துறந்த தோழர்களின் குடும்பத்தாருக்கு இந்த அவையின் மூலம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஆழ்ந்த அனுதாபத்தோடு அந்த உணர்வோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்

காவல் துறை அத்து மீறி போய்விட்டதா, அத்து மீறிப் போகவில்லையா என்பதை யார் தீர்மானிப்பது? காவல்துறையினர் கூறுகின்ற கருத்துக்களே அதற்கு முடிவாகிவிட முடியுமா? தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காவல் துறை சுடுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், காவல் துறை தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளத்தான் செய்தார்களா என்பதை நாம் அறிய வேண்டும் ஒரு இடத்தில் அந்தக் காரணத்திற்காக செய்யப்படவில்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. நன்னிலம் வட்டாரத்தில் காவல் துறையினர் ஒரு கிராமத்தில் நுழைந்து அத்துமீறி அட்டகாசம் செய்ததை நான் அதற்கு ஒரு வார காலத்திற்குப் பின்னாலே [illegible]

அறியும் வாய்ப்பு பெற்றவன். இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்று இருப்பதால், ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அரசாங்கம் உண்மை நிலை என்ன என்பதை அறிந்துகொள்ள நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 12.50)

முதலமைச்சர் அவர்கள் என்னை கேலியாக எண்ணமாட்டார்கள் என்று நம்புகிறேன், நீதி விசாரணை மட்டும் எங்களைக் கட்டுப்படுத்துமா ? அந்த நீதி விசாரணைக்கு மட்டும் நாங்கள் உட்பட வேண்டுமா என்று கேட்டுவிடக்கூடாது. ஆனால் உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள் என்று ஆளும்கட்சியினுடைய தலைவராக இருக்கிற முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டு தமிழகத்திலிருக்கிற பல்வேறு சூழ்நிலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக நாம் இன்னும் ஆழ்ந்து சிந்தித்துப் பொதுநல உணர்வோடு நம்முடைய கடமையை செய்யவேண்டியவர்களாவோம் என்பதை நினைவூட்டி சமுதாயத்தைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டிய ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

" பற்றாக்குறை மிரட்டுகிறது. அகவிலை அலைக்கழிக்கிறது. கள்ளவாணிபம், கொள்ளை இலாபம், குறுக்கு வழிகள், கலப்படம் போன்ற கேடுகள் நாட்டை பாழ்படுத்துகின்றன. கொடி பறக்கிறது கோலாகலமாக. கூடவே கொடுமைகள் நெளிகின்றன அடக்குவார் யார் என்று கேட்டபடி, நம் சமுதாயம் ஜாதி வேற்றுமையாம் பொருளாதார மாறுபாட்டினாலும் செல்லரித்துக் கிடக்கிறது. மேலும் செல்லரித்துக்கொண்டே வருகிறது. தீண்டாதார் என்போரை சகல துறைகளிலும் ஜாதி பேரால் ஏமாற்றம் தீண்டாதோர் ஆகியுள்ளோம், அடிமைப்பட்டுள்ளோம். தமிழகம் உலகத்தில் ஒரு பகுதியாக இருக்கலாம், ஆனால் அது யாருடைய வேட்டைக்காடாகவும் இருந்திட ஒரு நாளும் ஒருப்படமாட்டோம் " என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை எண்ணிப்பார்த்து செயலாற்றவேண்டி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின்மீது இங்கே இதுவரையில் ஏறத்தாழ 49 பேர்கள் அவரவர்களுடைய கட்சியின் கொள்கையைத் தெளிவுபடுத்தி, ஆளுநர் உரையிலே எதை அவர்கள் எதிர்பார்த்தார்கள் என்று குறிப்பிடுகிறார்களோ அவைகள் பற்றி திருப்திகரமாக எந்த கருத்தும் இல்லையென்று அவர்கள் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

அதைப்போலவே வரவேற்று, அது நல்ல அறிக்கைதான், சொல்லவேண்டிய முறையில் சுருக்கமாக எடுத்துக் கூறி, நிதி நிலை அறிக்கையின்போது தெளிவுபடுத்த வேண்டியவைகளைத் தெளிவுபடுத்த அப்போது வாய்ப்பு கிடைக்கிறது என்ற கருத்தை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 10

அடிப்படையாகக் கொண்டு, மேலெழுந்தவாரியாக கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது என்பதை வைத்து அவரவர்களுடைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இத்தகைய கருத்துக்களை வெளியிடுகின்ற நேரத்தில் யார், யார் எந்த எந்த கோணத்திலிருந்து கருத்துக்களை வெளியிட்டிருப்பார்கள் அல்லது வெளியிட முயன்று இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்த வகையில் நான் தரம் பிரித்து அவர்களுடைய உயர்வு தாழ்வு என்று அர்த்தமல்ல அவர்களுடைய நிலமைகளைப்பற்றி நான் பிரித்துப்பார்த்து அவர்களுக்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆளுநர் உரையில் இந்தத் தமிழ் மாநிலத்தில் சென்ற ஆண்டு நடைபெற்ற விவரங்கள் அனைத்தும் வெளியிடப்படவோ அல்லது என்ன என்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெளிவாக புள்ளி விவரங்களோடு சேர்த்து வெளியிடவோ இயலாது என்பதை இங்கு உள்ளவர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். ஆனால் பொதுவாக ஒரு ஆளுநர் அறிக்கையைப் பெற்று படித்த பிறகு எதிர்பார்க்கின்றவர்கள் எந்த எந்த கோணத்திலிருந்து பார்க்கிறர்கள் என்று நான் பிரித்துப் பார்க்கும்போது இங்கே ஆட்சியை நடத்திக் காண்டிருக்கிற கட்சியை சேர்ந்தவர்களிடமிருந்து அறிக்கைக்கு பாராட்டும் நன்றியும் வருவதோடு தங்களது தொகுதிக்கு மேலும் என்னென்ன தேவை என்று விரும்புகிறார்களோ அவைகளைச் சுட்டிக்காட்டுவ்தும் அவர்களுடைய நோக்கமாக அமைந்துவிடுகிறது என்பதை நாம் அறிவோம்.

அதுபோலவே இங்கே இந்த ஆளுநர் அறிக்கையிலே பேசிய வர்களில் ஒரு தரப்பினர் ஒரு கருத்தை ஒட்டுமொத்தமாக பல்வேறு வகையில் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்ற வாய்ப்பில் அந்தக் கொள்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். தமிழக மக்களுக்கு எப்படியாவது நன்மைகள் கிடைக்கவேண்டும், நல்லது நடக்கவேண்டும், இந்த நாட்டில் அமைதி வேண்டும், எல்லோரும் ஒன்று பட்டு செயல்பட வேண்டும், எந்தெந்த தொகுதியிலிருந்து அவர்கள் வந்திருந்தாலும் ஒட்டு மொத்தமாகத் தமிழ்நாடு முழுவதற்கும் தேவையான நல்ல காரியங்களைச் சிக்கலின்றி, குறையின்றி நடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு கருத்துக்களை எதிர்கட்சியின் வரிசையிலே இருந்தாலும் அவர்கள் கூட எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதுபோலவே இன்னொரு தரப்பினர் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே அரசு சரிவர காரியங்களைச் செய்துவிட்டிருந்தாலும்கூட அதிலே தங்களுடைய கொள்கைகளையும் இணைத்துச் செயல்படவில்லையே என்கிற குறையின் காரணமாக தங்களுடைய கொள்கைகளையும் அதிலே இணைக்கின்ற சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்ற நோக்கத்தோடு நல்லதை வரவேற்றும் அவர்களுக்கு வேண்டியவற்றை வற்புறுத்தியும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.



1982 பிப்ரவரி 10] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இன்னொரு தரப்பினரை எடுத்துக்கொண்டால் அவர்களிலே ஒருசிலர் ஏனோ குற்றத்தை மட்டுமே காணவேண்டும் என்று கருதி குறை இல்லாத இடத்திலேகூட குறையைக் காண முனைந்து குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியதை நாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தோம். அதிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையிலே பணியாற்றுகின்ற பேராசிரியருக்கு ஒருவகையிலே நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தக் குற்றச்சாட்டை அவர்கள் சொன்னாலும், எங்களைப் பற்றி குறை கூறுகின்ற அந்த நேரத்திலேகூட சிரித்துக்கொண்டே அவற்றை எடுத்துச் சொன்ன அந்தப் பாங்கினை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கே இருக்கின்ற மாமன்றத்தினர் அத்தனைபேரும் இந்த அரசைப் பாராட்டத்தான் வேண்டும் என்று நான் எண்ணுவேனேயானால் அது எங்களையே நாங்கள் புரிந்துகொள்ளாதவர்களாகத்தான் அமையும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் அவர்களுடைய எண்ணங்களை வெளியிடுவதற்கும் தங்களது தொகுதிகளிலே மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்ததை நிறைவேற்றுவதற்காவும் பொதுவாகத் தங்கள் கட்சியின் கொள்கைக்களை வெளியிடுவதற்கும் இதைவிட வேறு வாய்ப்பு இல்லை என்கின்ற காரணத்தாலும் இங்கே குறிப்பேட்டில் பதிவு செய்வதற்காகவும் கூட சிலவற்றைச் சொல்கிறார்கள் என்பதிலே நாங்கள் அக்கறை காட்டுகிறோமே தவிர அலட்சிப்படுத்தவில்லை. அதிலே கூட நாங்கள் புரிந்துகொள்வதற்கு ஏதாவது கிடைக்குமா என்று தான் பார்க்கிறோமே தவிர அவைகளை அலட்சியப்படுத்தவோ அக்கறை காட்டாமல் ஒதுக்கித் தள்ளிவிடுவதற்கோ நாங்கள் தயாராக இல்லை என்பதை இங்கே சொல்வது என்னுடைய கடமை.

பொதுவாக இங்கே பேசியவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வரும்போது தேர்தல் நேரத்திலே நாங்கள் வெளியிட்ட அறிக்கையிலே என்னென்ன குறிப்பிட்டோமோ அவற்றை நாங்கள் செய்யாமல் மக்களை ஏமாற்றுகிறோம் என்கிற எண்ணத்தை வெளியிலே சொல்வதோடு மட்டுமல்லாமல் இங்கே வேறு வகையான வார்த்தைகளில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டி இருக்கின்றது. அந்த வகையில் நான் இங்கே தேர்தல் நேரத்திலே தேர்தல் அறிக்கையிலே என்ன சொன்னோம் என்பதையும் அந்தத் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொன்னதை நாங்கள் எப்படி ஏறத்தாழ இந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற முயன்று வருகிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

1980 ஆம் ஆண்டு நாங்கள் அளித்த தேர்தல் அறிக்கையில் நாங்கள் என்ன சொன்னோமோ, அதை நாங்கள் எப்படி பயன்படுத்துகின்றோம், எப்படி நிறைவேற்ற முயற்சிக்கின்றோம் என்பதை ஒரு வகையில் நான் வெளியிட முயன்று, அது இங்கே

இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்களுக்கு நியாயம்தான் என்று படுமேயானால், அதுவே எங்களுக்கு முழு மனநிறைவைத் தரக்கூடிய ஒன்றாகும் என்று நாங்கள் கருதுவோம். தேர்தல் நேரத்திலே என்னென்ன வாக்குகளை கொடுத்தோம் என்ற வகையில், சிலவற்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். விவசாயிகளை நாங்கள் கொடுமைப்படுத்துகிறோம் என்றும், விவசாயிகளை நாங்கள் கவனிப்பது இல்லை என்றும், விவசாயிகளை நாங்கள் வீணாக கைது செய்கிறோம் என்றும் பல்வேறாக குற்றம் சாட்டுவதோடு மட்டுமல்லாமல், குறைகூறும் அன்பர்களுக்கு, விவசாயிகளுக்கு என்ன செய்தோம், விவசாயத்திற்காக என்னென்ன திட்டங்களை தீட்டினோம் என்று சொல்வதன் மூலமாகத்தான், வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று கூறுகிற அன்பர்களுடைய கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், அந்தக் கருத்திற்கு பதில் தருவதற்காக விவாதத்திற்கு அதை எடுத்துக் கொள்ளவிரும்புகிறேன்.

நாங்கள் குறிப்பிட்டிருந்தது, விவசாயிகளின் உற்பத்தி பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் இடு பொருள்கள் குறைந்த விலையில் கிடைத்து, விவசாயிகளுக்கு ஆதார விலையை முன்கூட்டியே அறியவும், விவசாய சங்கப் பிரதிநிதிகளின் துணைக் கொண்டு, நடுவர் குழு மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். இன்னொரு இடத்தில், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து, அதன் தலைவருக்கு ஏறக்குறைய அமைச்சருக்கு உரிய உரிமையோடு பதவி அளித்து, அனைத்துக் கட்சி விவசாய பிரதிநிதிகளையும், அந்தக் குழுவிலே அங்கம் வகிக்கச் செய்து அந்தப் பரிந்துரைகளை ஏற்று செயலாற்ற நாங்கள் முனைவோம் என்று கூறியிருந்தோம். அதையும் இத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வேளாண்மை உற்பத்தி பொருள்களுக்கு நியாயவிலை கொடுப்பது என்பதிலே, நாங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது போல இந்தியப் பேரரசு நிர்ணயித்த விலையை விட, அதிகமான விலையை நாங்கள் கொடுத்துக் கொண்டு வந்தோம் என்பதை இந்த மன்றம் அறியும். இந்த ஆண்டு ஏன் அதை உயர்த்தவில்லை என்ற பிரச்சனை எழுந்தபோது, மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மத்திய அரசு சொன்னாலும் நீங்கள் ஏன் அதை உயர்த்திக் கொடுக்கக் கூடாது? ஏன் அதை உயர்த்திக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். அதாவது நாங்கள் அதை மீறி செயல்படவில்லை என்று சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். உடனே அவர்களுக்கே உரித்தான வகையில் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சிரித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.





அவருக்குத் தேவை, இந்தியப் பேரரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீறி செயல்பட அஞ்சுகிறது என்ற அப்படிப்பட்ட விளக்கம் கிடைக்குமா என்பது. அப்படி அவர் காத்திருந்த நிலையில் உணவு அமைச்சரின் ஒரு சுருக்கமான பதிலை வைத்துக் கொண்டு, அதன் முழு விளக்கத்தையும் எண்ணிப் பார்க்காமல், ஏதோ இந்த அரசு அச்சப்பட்டு, அவர்களுடைய கட்டளைக்கு அடங்கி நடப்பது போல, அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்பது போல சிரித்தார்கள். இன்னும் சிலரும் சிரித்தார்கள். எப்படியாவது சிரிப்பு ஏற்பட்டால் எனக்கு மகிழ்ச்சிதான்.

ஆனால் அதற்கு முன்னால் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இதை பிளாக் லிஸ்ட்டில் சேர்த்து விடுவோம் என்ற அந்தப் பின்னணியை தயவுசெய்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ரிசர்வ் வங்கி எப்படிப்பட்ட கட்டளையிடுகிறது, மறுக்கிறது என்பதோடு அப்படிப்பட்ட கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டால் வெவ்வேறு காரியங்கள், மற்ற உதவிகள் இவைகளுக்கெல்லாம் தரக்கூடிய பணம் அதோடு நிறுத்தப்பட்டுவிடும் என்பதையும், இங்கே என்னென்ன திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறீர்களோ, நாங்களும் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ அவைகள் எதையுமே செய்ய முடியாமல்கூட ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிடும் என்ற நிலைமையில் கூடுமானவரையில் இந்தியப்பேரரசோடு சுமூகமான வகையில் மீண்டும் மீண்டும் கேட்டு எழுதி பதில் பெற்று, அவர்களுக்கு விளக்கம் தந்து அவர்கள் கருத்துக்களை மாற்றுக் கொள்ளச் செய்ய நாங்கள் விரும்புகிறோமே தவிர வேண்டுமென்றே ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி அதனால் நாம் போடுகிற திட்டங்கள் அத்தனையும் தடைப்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணம்தானே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுக்கும் அவர்களைப் போன்ற கருத்துக்களைக் கொண்டவர்களுக்கும் பணிவான என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகிறேன். இங்கே விலையை உயர்த்தியதோடு மட்டுமல்ல, நாங்கள் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று மைய அரசுக்கு சிபார்சு செய்தோம். வற்புறுத்தினோம். இயலாது என்று கூறியது மட்டுமல்ல, உயர்த்தக்கூடாது என்றும் இறுதியாக பதில் வந்தது. இங்கே அமைக்கப்பட்டிருக்கிற உச்ச மட்ட விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தும் கூட அவர்கள் சொல்லியும் நீங்கள் செய்யவில்லையே என்று கேட்டார்கள். அந்தக் கட்சி எங்கள் கட்சிதான் என்றாலும் இந்தக் கட்சி மாத்திரம் — ஏன் அவர்கள் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. நாங்களும் அதைப்பற்றிச் சிந்தித்து, 147 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசுக்கு எழுதினோம். ஆகவே அதிகமாகக் கொடுக்க வேண்டும், போதுமான அளவில் உற்பத்தியாளர்களுக்குப் பணம் சேரவேண்டும், கிடைக்க வேண்டும் என்பதில்

இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஆனால் தன்னிச்சைப்படி செய்யமுடியாத சூழ்நிலை. நாம் திட்டங்கள் தீட்டுவது என்றாலும் மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒட்டுமொத்தமாக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவு செய்யலாம் என்றாலும் கூட மத்திய அரசினுடைய திட்டக் குழுவிடம் நாம் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் இந்த அரசு என்னென்ன செய்யமுடியுமோ அந்த வகையில் அந்தளவிற்கு இந்த அரசு தன் கடமையைச் செய்திருக்கிறது என்பதையும் தேர்தல் நேரத்தில் என்ன சொன்னோமோ அதைச் செய்ய நாங்கள் முயன்றுகொண்டிருக்கிறோம், செய்து காட்டினோம் என்பதை தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருந்தாலும் மறந்துவிடமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது, இது சம்பந்தப்பட்ட வரையில் மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட வேண்டும். விலை நிர்ணயிக்கவேண்டிய உரிமை அந்த விவசாயிகள் உற்பத்தி செய்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்ற கருத்து நம் யாருக்கும் வேறுபட்ட கருத்தல்லவென்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு முன் நமக்கிருக்கிற வசதி வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டியிருப்பினும் மக்களுடைய ஒத்துழைப்போடு, விவசாயிகள் துணையோடு, ஆதரவோடு அந்தந்தச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை ஆங்காங்கே நாம் நியமித்து ஆவன செய்ய முற்பட்டோம் என்பதை இந்த மாமன்றம் மறந்து விடாது அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். அதில் பங்குகொண்டிருக்கிறார்கள். அதேபோல் தன்னிறைத் திட்டத்திலு அதைச் சொல்லியிருக்கிறோம். கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லி தேர்தல் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டதற்காகத்தான் அதைத் தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டுவந்து குடிநீர் அவசியம் என்கிற வகையில் பாதை வசதி வேண்டுமென்கிற வகையில் இவைகளையெல்லாம் நாம் நிறைவேற்றுவதற்கு முன் வந்து திட்டம் தீட்டி அதை நிறைவேற்றுகிறோமே தவிர அந்தத் திட்டத்தில் எங்கேயாவது தவறுகள் நடந்திருக்குமானால் பேராசிரியர் அவர்களும் மற்றும் உங்களைப் போன்ற கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டது போல் அதை நாங்கள் அலட்சியப் படுத்தவில்லை.

(பிற்பகல் 1.10)

தவறுகளைத் திருத்த வேண்டுமென்பதிலே எங்களுக்கு ஏராளமான ஆர்வம், அக்கறை இருக்கிறது. எங்கே தவறுகள் நடக்கிறது என்று தெரிவித்தால், அங்கே அதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். முன்பே இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டது





போல், இன்னொன்றுக்கும் நாங்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். படித்து, வேலையில்லாது இருப்பவர்கள் யாராவது ஒரு கூட்டுறவு சொசைடி அமைப்பைப்போல் ஏற்படுத்திக் கொண்டு, அவர்கள் இந்த வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்து, அரசுக்கு விண்ணப்பம் செய்தால், அதிகாரிகளிடத்தில் கேட்டால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்றுகூட நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களுக்குப் பணம் இல்லை என்றால், அரசு கடன் கொடுத்தாவது அவர்களுக்கு அந்தப் பணிகளைக் கொடுக்க வேண்டும் என்றும் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். இது யாருக்கோ நியமனம் அளிக்கவேண்டும். அப்படி நியமனத்தின் மூலம் இந்தப் பணிகளுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையாக இல்லை என்பதையும் நான் தெளிவாக அந்த எண்ணத்திலே செயல்படுகிறோம் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு விளக்குவதற்காக அல்ல, உங்களுக்குத் தெரிந்ததுதான், முன்பே சொன்னதுதான் என்றாலும், மீண்டும் அதை நீங்கள் தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்ன தவறுகள் நடந்து விட்டது என்பதை எடுத்துச் சொல்லுங்கள். நாங்கள் அதற்கும் மாற்று வழி கண்டுபிடிக்க முற்படுகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

இன்னொன்றையும் கூறுகிறேன். யாராவது அப்படிப்பட்டவர்கள் இருந்தால், இவ்வளவு ரூபாய்க்குச் சொந்தக்காரர்கள், இவ்வளவு சொத்து இருக்கிறது, 10,000 ரூபாய் இருக்கிறது, அதை முன்பணமாகக் கட்டுவார் அல்லது அதற்குத் தகுந்தவர் என்று மற்றவர் சிபார்சு செய்ய வேண்டுமென்று இருந்ததைக் கூட நாங்கள் மாற்றி, அதுகூட தேவையில்லை என்று சொல்லியிருக்கிறோம். படித்த இளைஞர்கள், பட்டம் பெற்றவர்கள் அவர்களுக்குத் தெளிவா இந்தக் காரியத்தில் ஆக்கமும், ஊக்கமும் இருந்தால், அந்த உறுதி அவர்களுக்கு இருக்குமானால், அப்படிப்பட்டவர்களை இன்னார் என்று சொன்னால், அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்து உதவ வேண்டுமென்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே, இதிலே எங்களுக்கு வேறு வகையான எண்ணமோ, நோக்கமோ, எதுவுமே இல்லை.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ, யாருக்கோ நலனைச் செய்ய வேண்டுமென்பதற்காக, தன்னிறைவுத் திட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அதிகமான அந்த வாய்ப்பை, அந்தப் பணிகளைச் செய்யக்கூடிய உரிமையை கொடுத்துவிட்டோம் என்று இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தவறான தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்பதோடு, அதற்காக என்னிடத்திலே இருக்கின்ற புள்ளி விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், பட்ஜெட் கூட்டத் தொடரிலே இதற்கு அதிகமான புள்ளிவிவரங்களை, அந்தந்தப் பிரச்னைகளின் மீது நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 10

இருப்பினும் இங்கே ஒன்றிரண்டை படித்துக்காட்ட விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளை முதலில் எடுத்துக் கொள்வோம். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளைப் பற்றிய புள்ளி விவரங்களை முழுவதும் படிக்க விரும்பவில்லை என்றாலும், ஒன்று இரண்டை பற்றிப் மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். வேண்டுமானால், என்னிடத்திலே உள்ள குறிப்புகள் அனைத்தையும் அச்சிட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்புவதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் எண்ணிக்கை 1,771. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 695. பணிகளின் எண்ணிக்கை 185. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், நாங்கள் ஆளைப் பார்த்துக் கொடுக்கவில்லை.

தகுதியைப் பார்த்து அங்கிருக்கும் அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை நான் இங்கே குறிப்பிடும்போது ஏதோ, யாரையோ குறை சொல்வதற்காக இந்தப் புள்ளி விவரத்தைத் தருகிறேன் என்று கருதக்கூடாது. சில அதிகாரிகள் தவறுகள் செய்கிறார்கள் என்பதற்காக எல்லா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவும், உண்மைகளைச் சொல்லுவதற்காகவும்......

* திரு. துரை முருகன் : எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒன்று கேட்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பிட்ட இத்தனை ஒப்பந்தக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், 600-க்கு மேற்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் எதன் அடிப்படையில் இவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள் ? எந்த ஆதாரத்தை வைத்து முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு சொல்லுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்தை வேண்டுமென்று கேட்பார்களானால் இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் விளக்கம் முழுவதையும் தரத் தயாராக இருக்கிறேன். ஒன்றை நான் குறிப்பிட வேண்டும். இதற்கு முன்னால் அவர்கள் என்னென்ன பணிகளில் ஈடுபட்டார்கள், எந்தெந்தப் பணிகளை எடுத்து அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்ற குறிப்புகள் இருக்கின்றன. ஒரு வட்டத்தில் நான் சென்று பார்த்தேன். அந்தப் பாதையைப் பார்த்துவிட்டு என்னென்ன சொன்னேன் என்பது தெரியுமென்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது கூட ஒருவருடைய ஏற்பாட்டில்தான் நடந்திருக்கிறது.



1982 பிப்ரவரி 10]

திரு. துரை முருகன் : நான் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் ஒப்பந்தக்காரர்களாக இல்லையென்று வாதிட வரவில்லை. ஆனால் நீங்கள் சொன்ன குறிப்பின்படி இவ்வளவு பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்லுகிறீர்கள்? முதலமைச்சர் அவர்கள் பின்னால் அதற்கான விவரங்களைத் தருகிறேன் என்று சொன்னாலும், முன்னால் செய்தி எப்படி வரும் என்றால் 600-க்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று வரும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இப்படி ஒவ்வொன்றுக்கும் நான் விளக்கம் சொல்ல ஆரம்பித்தால் எப்போது பேச்சை முடிப்பது என்று தெரியவில்லை. கேட்பதற்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு இருக்கிறது. விவரங்களைத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. துரை முருகன் : தவறான செய்தி பத்திரிகையில் வரக்கூடாது என்பதற்காகத்தான் கேட்கிறேன். நான் கூடச் சொல்லலாம்—1,200 பேர்களில் 900 பேர்கள் அ. தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்; பின்னால் விவரம் தருகிறேனென்று சொல்லலாம். அப்படி புள்ளி விவரத்தைப் பின்னால் தருகிறேன் என்று சொன்னால் ஒப்புக் கொள்வார்களா ? ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன முறையில் செய்திகள் பத்திரிகையில் வரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரங்களைத் தருவதாக முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்.

திரு. துரை முருகன் : நான் பேசும்போது கூட அவ்வாறு சொல்லிவிட்டு. பின்னால் ஆதாரங்களைத் தருகிறேன் என்று சொன்னால் ஒப்புக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதை அவர் தாங்கிக் கொள்ளமாட்டார் என்பது எனக்குத் தெரியும். நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுப்பணித் துறையில் அந்த மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 371 ; அதிலே தி.மு.க. ஒப்பந்தக்காரர்கள் செய்தது 145. (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும். இன்னின்னார் யார் யார் என்பதை படித்துச் சொல்ல விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் எண்ணிக்கை கோவை மாவட்டத்தில்—தி.மு.க. 37 ; அண்ணா தி.மு.க. 93 ; இந்திரா காங்கிரஸ் 67 ; இந்திய கம்யூனிஸ்ட் 6 ; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 2 ; ஜனதா 10 ; மற்றவர்கள் 154.

திரு. துரை முருகன் : நீங்கள் சொல்லுவதை மறுக்கவில்லை. என்ன ஆதாரம் அதற்கு ?

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எத்தனை பேர்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இது எங்களுடைய கட்சி என்பதற்காக நான் மறைக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கிற அந்தத் தகவல்களை இங்கே நான் வெளியிடுகிறேன். நீங்கள் கேட்ட கேள்விக்கு விவரமான பதில் உங்களுக்குத் தரப்படும்.

திரு. துரை முருகன் : குறுக்கீடுவதற்காக மன்னிக்கவேண்டும். தன்னிறைவுத் திட்டத்திலே கான்ட்ராக்ட் தருகிறார்கள். கான்ட்ராக்ட் போடுகிறபோது அந்த பாரத்திலே தி.மு.க. அண்ணா தி.மு.க. என்று போடுகிறார்களா என்றால் கிடையாது. அண்ணா தி.மு.க. 93 என்று சொல்கிறார்கள். அதை எப்படி எடுக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். முன்னால் அவர்கள் அந்தத் தகுதியிலே வந்து அந்த இடத்தைப் பெறுகிறார்கள் என்பது அந்த உண்மையான விளக்கம் ஆகும். தரத்தை மாத்திரம் வைத்துப் பார்க்கிறபோது எத்தனை கான்ட்ராக்ட்கள் அவர்கள் செய்திருக்கிறார்கள், தகுதியுள்ளவர்களா என்று பார்க்கிறார்கள். தி. மு. க. வா இல்லையா........

திரு. துரை முருகன் : அவர்கள் உண்மையிலேயே தி.மு.க. வைச் சேர்ந்தவர்களா என்பதுதான் கேள்வி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தி.மு.க. துணைத் தலைவர் பேசுகின்றபோது ஒன்றும் குறுக்கீடுகள் இல்லை. அதுமாதிரிப் போனால் நல்லது. எல்லா கட்சிகளும் இருக்கின்றன என்றுதான் சொல்லி இருக்கிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கான்ட்ராக்ட் டெண்டர் இது போன்ற கணக்குகளை முதல்வர் அவர்கள் சொன்னதுபோல் நாமினேஷன்களிலே எத்தனை கட்சிக்காரர்களுக்கு தரப்பட்டு இருக்கிறது என்ற விவரம் அவர்களிடத்திலே இருக்கிறதா ? ஏனென்றால் நாமினேஷனின்போது அதிகாரிகள் இஷ்டப்படி யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். கான்ட்ராக்ட் என்றால் முன் தகுதி இவைகள் பார்க்க வேண்டும். அதை வைத்துக் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நாமினேஷனிலே எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். அப்படி [illegible]ந்த எந்தக் கட்சிக்கு எல்லா மாவட்டங்களிலும் எந்த [illegible] [illegible]ரம் தரப்பட்டது ?





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. நிச்சயமாகத் தரப்படும் என்று உறுதிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கேட்டதற்காக 4, 5 பேர்களை அனுப்பி இருக்கிறார்கள். திரு முத்தியாலு, தண்டராம்பட்டு, திரு முத்துகிருஷ்ணன், தண்டராம்பட்டு, திரு சி. கிருஷ்ணன், கீழ்ப்பெண்ணாத்தூர், திரு மணி, தென்காமிபனூர், திரு கனகநாதன், தண்டராம்பட்டு அதுபோல் தருகிறார்கள். இதுபோல் உள்ளவைகளை நான் பெற்று இந்த மாமன்றத்திலே வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்காக, நீங்கள் கேட்டதற்காக நான் படிக்காமல் இருந்தாலும் இந்த அரசு உண்மையிலேயே அதிகாரிகளிடம் ஒப்படைத்து அதிகாரிகள் எது சரி என்று கருதுகிறார்களோ அந்த அளவுக்கு அந்தப் பணியை ஒப்படைக்கிறார்களே தவிர இதிலே யாருடைய வற்புறுத்தலும், இவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற பரிந்துரை செய்வதும் இல்லையென்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே இந்தப் பணிகளுக்காக, அவைகளை ஏற்றுக் கொண்டவர்கள், யார் யார் அந்தப் பணிகளைச் செய்வதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்களோ அவர்கள் எப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே தெளிவாகக் கூறினார்கள், மற்றவர்களும் இங்கே கூறியிருக்கிறார்கள். பணம் செலவழிக்கப்படுகிறது, அது பொதுமக்களுக்குப் போய் சேரவில்லை என்று பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இடங்களில் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு உதாரணமாக தென் ஆற்காடு மாவட்டத்திலே மேல்நிலை நீர்த்தொட்டி கட்டப்பட்டு திறப்பு விழாவும் நடத்தப்பட்டது. அது நடந்து ஒன்றிரண்டு வாரத்திற்குள் அது இடிந்து விழுந்தது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து அவர்மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. அவர் அதை மீண்டும் கட்டிக் கொடுக்க முன்வந்து அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே தெரிந்த இடங்களில் அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதில் இந்த அரசு எவ்வளவு சவனம் செலுத்துகிறது என்பதை இங்கே எடுத்துக்காட்டுவதற்குத் தான் ஒரே ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட்டேன். இதுபோல் பல நிகழ்ச்சிகள் உண்டு. பல்வேறு தரப்பட்டவர்கள் ஆங்காங்கே தவறு செய்கிறார்கள், செய்துவிட்டு அரசின் மீது பழி சுமத்தப்படுகிறது என்பதையும் நான் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

ஆகவே இவைகளையெல்லாம் 'ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போழுது அதிகாரிகள் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும் ஆகும் ; என்னுடைய அமைச்சரவையும் அதைத் தான் விரும்புகிறது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறே[illegible]

அதுதான் எங்களுடைய பொறுப்பு என்பதை உணர்ந்து, அதைத் தட்டிக் கழிக்காமல் நிறைவேற்றித் தருகிறோம் என்ற உறுதியையும் கூட சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு அறிக்கையில், முதல் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளை வைத்துத்தான் இதை நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது என்று பேராசிரியர் அவர்களும் குறிப்பிட்டார்கள்; மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் ஒன்றைக் கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். எங்கள் தேர்தல் அறிக்கை என்னென்ன சொல்லிற்று என்பதையும், என்ன உறுதி கொடுத்தோம் என்பதையும் என்னோடு சேர்ந்து தேர்தலிலே ஒத்துழைத்தவர்களுக்கு, அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அதைவிட, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் நாங்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதற்காகவாவது இதைக் கண்டிப்பாக அவர்கள் படித்துத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அந்த வகையில் ஒவ்வொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொன்னால், அந்த அளவிற்குத் தன்னிறைவுமதிட்டம் என்பது நாங்கள் கொடுத்த வாக்குறுதியினுடைய—அந்த ஒன்பது அம்சத் திட்டம் என்று கேட்டார்களே நாராயணசாமி நாயுடு விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள்—நாங்கள் அதிலே 10 என்ற எண்ணிக்கையிலே சேர்த்து நாங்கள் என்னென்ன சொல்லியிருக்கிறோமோ அவைகள் அத்தனையையும் நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்..

அதிலே நீர்ப்பாசன வசதியைப்பற்றி நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அதற்காகப் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்கும் வகையில் 1977ஆம் ஆண்டு அரசால் ஒரு குழு அமைக்கப்பட்டது. மாற்றுப் பயிர் மீது விதிக்கப்படும் தண்டத் தீர்வையை ரத்து செய்வது பற்றியும் தனது ஆலோசனையைக் கூறுமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்குழு சமீபத்தில் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கையை அமைச்சரவை விவாதித்து முடிவு செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது. அதை வரும் ஆண்டில் எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்பதை நிர்ணயித்து அதை அமுலுக்குக் கொண்டு வருவோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையிலே ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். எந்தவொரு அரசியல் கட்சியுமே தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்த அந்த வருஷமே தான் வாக்குறுதி கொடுத்த அத்தனையையும் நிறைவேற்றிவிட முடியும் என்று இங்கே யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பார்க்க மாட்டீர்கள். அப்படிக் குறை சொல்லவும் நீங்கள் முன் வர மாட்டீர்கள் என்பதிலே உங்கள் அனுபவத்தின் மீது





எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த நான்கைந்து ஆண்டுகளில் எந்த நடவடிக்கையுமே எடுக்காமல் இருந்தால் அந்தப் பிரச்சினை வரும். நீங்கள் சொன்னீர்கள், எதையாவது தொடங்கினீர்களா என்றால் அது நியாயம்.

சென்ற ஆண்டு நாங்கள் ஆரம்பிப்போம் என்று சொன்ன பல்கலைக் கழகத்தை நாங்கள் ஆரம்பித்தோம். திருச்சியிலேயும், கோவையிலேயும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் ஆரம்பித்தோம். உலகத் தமிழ்ச் சங்கம் எங்கே என்று பேராசிரியர் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் தமிழ்ப் பற்று அதை அவர்களால் கேட்காமல் இருக்க முடியாது. நான் அதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் மதுரையில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது என்பதையும், விரைவில் தொடக்க விழா நடைபெறும் என்பதையும் இங்கே நான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இடம் தேடுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. ஊருக்கு வெளியிலே அமைப்பதா, ஊருக்குள்ளேயே அதாவது நகரத்திற்குள்ளேயே அமைப்பதா என்பதைச் சிந்தித்து, அதற்காக அமைச்சர்களையும் அணுகி அவர்களைப் பார்க்கும்படி செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரையும் அங்கே போய்ப் பார்த்து அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கச் செய்திருக்கிறோம். ஆகவே, அது நிச்சயமாக நடைபெறும். அப்படிச் சொன்னதை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைத் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருந்தோமா என்றால் இல்லை தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னோமா என்றால் இல்லை. ஆனால் கிராம மேம்பாடு என்று சொன்னோம். அந்த மேம்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் தன்னிறைவுத் திட்டம்என்ற பெயரில் நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இது போன்றவைகளை இங்கே நான் குறிப்பிடும் பொழுது விவசாயிகளுக்காக என்னென்ன செய்தோம் என்பதைச் சொல்லும் பொழுது. படி அரிசி எங்கே........

[பிற்பகல் 1–30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** எனக்கு இன்னும் 1½ மணி நேரத்திற்கு மேல் வேண்டும். இங்கே பேசியவர்கள் எத்தனை உறுப்பினர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். அதைச் சொல்லும்போதே பிரச்னைகள் வருகின்றன. அவற்றிற்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, வெளியே போய், நாங்கள் சொன்னோம். கேட்டோம். இந்த முதலமைச்சர் பதிலே சொல்லாமல் போய்விட்

டார், இவைகளுக்கெல்லாம் என்ற குற்றச்சாட்டுகளுக்கு நான் ஆளாகத் தயாராக இல்லை. ஆகவே என்னிடம் இருக்கிற பதில்களை நான் முழுவதும் படிப்பதற்கு மற்றவர்களுக்குத் தந்திருக்கிற நேரம், அத்தனை பேரும் பேசுவதற்கு நீங்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாலையிலே வைத்துக் கொள்ளலாமா, அல்லது தொடர்ந்து பேசுகிறீர்களா, என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்) நாளைக்கு பால் கமிஷன் அறிக்கை மற்றும் வேறு சில எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

**திரு. என். சங்கரய்யா :** நாளைக்கு எப்பொழுதும் போல் அதை எடுத்துக்கொள்ள வேண்டியது. மற்றபடி அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி முடிவெடுத்தால்தான் சரியாக இருக்கும். மாலை, எங்களுக்கு வேறு அவசரமான சூழுக் கூட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, மாலை சாத்தியமில்லை. நாளை காலை வழக்கம் போல் எடுத்துக் கொண்டு, பிறகு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளை காலை கேள்வி நேரத்தை நீக்கிவிட்டு வைத்துக் கொள்ளலாமா?

**திரு. துரை முருகன் :** கேள்வி நேரம் இருக்கட்டும். அதை நீக்காதீர்கள், அது எங்களுடைய உரிமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 11—2—1982 ஆம் தேதி காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1—33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

* 99. நீதிபதி திரு சி. ஜே. ஆர். பால் அவர்களைக் கொண்ட விசாரணைக்குழு அளித்த அறிக்கையின் மீது அரசு மேற் கொண்ட நடவடிக்கை பற்றிய குறிப்பாணை சம்பந்தமாக, பொது (சட்டம் ஒழுங்கு—அ) துறையின் 1—2—1982 ஆம் தேதி யிடப் பெற்ற 161 ஆம் எண். அரசாணைக்கான மூல இணைப்பின் ஆங்கில மொழியாக்கம் (1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60·1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

## இணைப்பு.

*(239ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 130-க்கான விடையைக் காண்க.)*

### விவர அறிக்கை.

(அ) பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1979—80 ஆம் ஆண்டு முதல் முன்னோடி திட்டமாக இம்மாநிலத்தில் அமுலில் உள்ளது.

(ஆ) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை அமுலாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களிலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வாங்கும் விவசாய அங்கத்தினர்களை திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதன் வாயிலாக இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது. உறுப்பினர்களிடம் இருந்து தவணைக் கட்டணத் தொகையைச் சங்கங்களின் வாயிலாக வாங்கி பொதுக் காப்பீட்டுக் கழகத்துக்குச் (General Ins rarce Corporation of I dia) செலுத்துவதும், விளைச்சல் குறிப்பிட்ட அளவுக்குக் கீழிருந்தால் பொதுக் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஈட்டுத் தொகை பெற்று சங்கங்களின் வழியாக உறுப்பினர்களுக்கு உறுப்பினரின் கடன் கணக்கில் அத் தொகையை செலுத்துவதும் மத்திய கூட்டுறவு வங்கியின் பொறுப்பாகும். ஒரு விவசாயி காப்பீடு செய்யக்கூடிய அதிகபட்சத் தொகை 2,000 ரூபாய் ஆகும். இவ்வாறு எல்லா விவசாயிகளுக்கும் சேர்த்து ஓராண்டிற்கு காப்பீடு செய்யப்படும் தொகை சுமார் ஒரு கோடி ரூபாய் என வைத்துக் கொண்டால், இதில் 75 சதவீதமான 75 இலட்ச ரூபாய் பொதுக் காப்பீட்டுக் கழகம் பொறுப்பேற்கும். மீதி 25 சதவீத மான 25 இலட்ச ரூபாயை மாநில அரசு தமிழ்நாடு மாநிலப் பயிர்க் காப்பீடு நிதியிலிருந்து பொறுப்பேற்கும். (Tam l Nadu Corporalion Insurarce Fund) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் நெறி முறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) மாநில அரசு ஈட்டுத் தொகையிலும் தவணைக் கட்டணத்திலும் 25 சதவீத அளவிற்குப் பங்கேற்று கூட்டுக் காப்பாளராக இருக்கும்.

(2) காப்பீடு தொகை, வட்ட (Taluk) அடிப்படையில் இருக்கும். பொதுக் காப்பீட்டுக் கழகம் விவசாயிகளுடன் நேரிடைத் தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளாது. அவ்வட்டத்தைச் சார்ந்து இயங்கி வரும் மத்தியக் கூட்டுறவு வங்கி வாயிலாகத் தொடர்பு கொள்ளும். ஒரு வட்டத்திற்கு ஒரு பயிருக்கு ஒரு

ஈட்டுறுதி ஆவணம். (Policy) மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்படும். மத்திய கூட்டுறவு வங்கிக்கு எவ்விதத் தரகும் (commission) இல்லை.

(3) தவணைக் கட்டண விகிதமும், ஈட்டுத் தொகையைக் கணக்கிடுதலும் ஒரு வட்டத்திலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும்.

(4) மாநில வேளாண்மை மற்றும் புள்ளி விவரத் துறைகளால் நடத்தப்படும் அறுவடைப் பரிசோதனைகள் மூலம் விளைச்சல் மதிப்பிடப்படும். தனித்தனி விவசாயி அடிப்படையில் விளைச்சல் மதிப்பீடு செய்யப்படாது. ஒரு வட்டத்தில் 16 அறுவடை பரிசோதனை, ஆனால் ஒரு கிராமத்தில் இரண்டிற்கு மேல் அதிகமாகாமலும், நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அறுவடைப் பரிசோதனையில் அந்தந்த வட்டத்திலுள்ள விவசாயிகள் கலந்து கொள்ளும் பொருட்டு முன்னதாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

(5) தவணைக் கட்டணத் தொகை விவசாயிகளின் பயிர்க் கடனோடு சேர்த்துக் கொள்ளப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தப்படுகிறது. இதன் பொருட்டு, பயிர்க் காப்பீடுத் திட்டத்தை ஏற்க விவசாயிகளின் ஒப்புதல் பெற கடன் பத்திரத்தில் வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

(6) கொடுக்கப்பட வேண்டிய காப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட்டவுடன், முழுத் தொகையும் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தப்படும். மத்திய வங்கி அத்தொகையை விவசாயிகளுக்குத் தரப்பட்ட கடன் தொகைக்குச் சரி செய்து கொள்ளும்.

(7) ஈட்டு அளவை விட பயிர் விளைச்சல் குறையும் பகுதிகளில் ஈட்டுத் தொகை வழங்கப்படும். பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் விளைவு தெரிவிக்கப்பட்டு ஈட்டுத் தொகை கடன் தவணை தேதி துவங்குவதற்கு முன்னதாகவே கொடுக்கப்பட்டால் கடன் சரி செய்யப்பட்டு விவசாயி புதுக்கடன் பெற ஏதுவாகும்.

(8) ஈட்டு அளவை விட எந்த அளவுக்கு விளைச்சல் குறைவு படுகிறதோ அந்த விகிதத்தில் ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

உதாரணமாக, ஒரு வட்டத்தில் நெல் விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 1,000 கிலோ என்று வைத்துக் கொண்டால் ஈட்டளவு இந்த விளைச்சலில் 80 சதவீதம் அதாவது 800 கிலோ என்று நிர்ணயிக்கப்படும். விவசாயி இந்தப் பயிருக்கு 500 ரூபாய் பயிர்க்கடன் வாங்கியிருந்தால், காப்பீடு செய்த ஆண்டில் சராசரி





விளைச்சல் ஏக்கருக்கு 600 கிலோவாக இருந்தால் 200 கிலோ குறைவாகக் கொள்ளப்பட்டு கடன் தொகையில் 200/800—¼ பங்கு ஈட்டுத் தொகையாக கொடுக்கப்படும் வட்டித் தொகையும் சேர்த்துக் கொள்ளப்படுவதால் கடனும் வட்டியும் சேர்ந்து 530 ரூபாய் என்றால் அதில் ¼ பங்கு அதாவது 132.50 ரூபாய் ஈட்டுத் தொகையாகக் கொடுக்கப்பட்டு கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். வட்டத்தில் விளைச்சல் மொத்தமாக பொய்த்துவிட்டால் கடனும் வட்டியும் சேர்ந்து 530 ரூபாயும் ஈட்டுத் தொகையாகக் கொடுக்கப்பட்டு கடன் கணக்குக்கு வரவு வைக்கப்படும்.

(9) வறட்சி, வெள்ளம், புயல், பூச்சிகள், நோய்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்புகளை மட்டுமே இத்திட்டம் ஈடு செய்யும். போர் மற்றும் அணு சக்தியால் ஏற்படும் பாதிப்புக்கள் இத்திட்டத்தில் சேரா.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

**வியாழக்கிழமை 1982, பிப்ரவரி 11.**

**தை 29, துன்மதி, திருவள்ளுவர் 2013,**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*" நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்*
*யாநலத்து உள்ளதூஉம் அன்று.*

*" நாவின் நன்மை ' என்று சொல்லப்படும் நலத்தினைப் பெறவேண்டியது எல்லாருடைய கடமையுமாகும். இந்த நன்மை வாழ்க்கையில் அடையும் எல்லா நன்மைகளையும் விட உயர்ந்தது சிறந்தது.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

பிற மாநிலங்களிடமிருந்து மின்சாரம் பெற மேற்கொண்ட முயற்சிகள்.

*வினா எண் 141—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின் *துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பிற மாநிலங்களிடமிருந்து (கேரளா அல்லாமல்) நமது மாநிலத்திற்கு மின்சாரம் பெற முயற்சிகள் ஏதேனும் செய்யப்பட்டதா ?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?*

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : *(அ) மற்றும் (ஆ) ஆந்திர மாநிலத்திலிருந்து உபரி மின்சாரத்தைப் பெறுவதற்காக ஆந்திர மின்துறை அமைச்சருடன் கடந்த ஆண்டு சென்னையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆந்திரம் சிறிதளவே உபரி மின்சாரம் உள்ள மாநிலமாக உள்ளதால் அம்மாநிலம் மின்சாரம் வழங்குவதில் நிலையான வாக்குறுதி ஏதும் தர இயலவில்லை. கர்நாடகா ஒரு மின்சாரப் பற்றாக்குறை மாநிலம். அங்கிருந்து உபரி மின்சாரம் பெற வாய்ப்புகள் இல்லை.*

[1982 பிப்ரவரி 11

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திடம் இருந்தும், கர்நாடக மாநிலத்திடம் இருந்தும் நம்முடைய தேவைக்கு மின்சாரம் பெற முயற்சி செய்தும் அது பலன் அளிக்காத நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இம்மாதிரியான சூழ்நிலையிலே தமிழகத்திலே நீர் மின்நிலையங்கள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இருந்தும், அவைகளைச் செயல்படுத்துவதில் காலதாமதமும், தயக்கமும் காட்டுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலம் பற்றாக்குறை மாநிலம். ஆந்திர மாநிலம் இந்த ஆண்டு ஓரளவுக்கு நமக்கு உதவி செய்யலாம் என்ற கருத்து இருக்கிறது. ஆகவே ஆந்திர மாநில முதலமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்த கேட்டுக் கொண்டேன். என்னை பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் வரச் சொன்னார். ஆனால் ஆந்திர முதல் அமைச்சர் அவர்கள் பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாளன்று அவசரமாக டெல்லிக்குப் போக வேண்டியதால், பிப்ரவரித் திங்கள் இரண்டாவது வாரத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கடிதம் எழுதியுள்ளார். நம்முடைய மாநிலத்தில் நீர் மின் திட்டத்தை நிறுவுவதைப் பற்றித் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுவது என்பது சாதாரண விஷயம் அல்ல. இந்தக் கேள்வியே சென்ற ஆண்டு போடப்பட்டதாகும். இப்போதுதான் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் மிகவும் திறமையாகப் பதில் சொல்லக் கூடியவர். சென்ற சட்டசபைக் கூட்டத் தொடரிலே என்னுடைய தொகுதியிலே இருக்கக் கூடிய சண்முகா நீரழின் திட்டம் நிறைவேற்றப்படும் என்று விரிவான பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இப்போது நான் கேள்விப்படுவது அந்தத் திட்டம் கைவிடப்படும் என்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் திட்டம் என்ன ஆனது என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திற்குத் தேவையான மின்சாரத்தை வேறு மாநிலங்களில் இருந்து யூனிட் என்ன விலைக்கு நாம் வாங்குகிறோம். கேரளத்திலே இருந்து 1975 ஆம் ஆண்டு, குறைந்த விலையில் வாங்கிய மின்சாரம் இப்போது அதிகமாகி உள்ளது. அப்போதே அவர்கள் 10, 15 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னது என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆந்திராவிலே இருந்து நாம் ஒப்பந்த அடிப்படையிலே இன்னும் மின்சாரம் வாங்கவில்லை. அதனால் என்ன விலை என்று சொல்வதற்கு இயலாது. ஆனால் கேரளாவிலே இருந்து நாம் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்கு யூனிட், ஒன்றுக்கு 28 பைசா கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அதனுடைய விலை மிகவும் வேகமாக உயர்ந்துக் கொண்டேதான் வருகிறது. 1974 ஆம் ஆண்டிலே, 7, 8 பைசா என்று இருந்தது இப்போது 28 பைசா என்று ஆகியிருக்கிறது.

நாம் வாங்க வேண்டிய நிலையில் இருப்பதால் என்ன விலை கேட்டாலும் கொடுத்து வாங்க வேண்டிய அவசியமும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். முதன்முதலில் இடுக்கி நீர் மின் நிலையத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது, அந்தத் திட்டத்தில் தமிழ்நாடு அரசும் மூலதனம் இடலாம் என்று ஒரு யோசனை வழங்கப்பட்டதாக அறிகிறேன். அதைப்போலவே, அங்கே உற்பத்தியாகும் மின்சாரத்தையும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் தமிழகம் பெறலாம் என்றும் அப்போது ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஏனோ அந்த யோசனையை அப்போது கைவிட்டு விட்டார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நாம் வாங்குகிற விலையைப் பற்றி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் அதை வினியோகிக்கும் போது எந்த அளவிற்கு அதற்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மிகக் குறைந்த அளவிற்கு 12 பைசா ஒரு யூனிட்டு என்று கொடுக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தின் ஒரு நாளைய மின்சாரத் தேவை மொத்தமாக எவ்வளவு ? நாம் வெளி மாநிலத்தில் இருந்து குறிப்பாக, கேரள மாநிலத்தில் இருந்து எவ்வளவு யூனிட் மின்சாரம் வாங்குகிறோம் ? அது போக பற்றாக் குறை எவ்வளவு ? அந்தப் பற்றாக்குறை காரணமாக திடீர் திடீரென்று மின்சாரம் நிறுத்தப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, விவசாய பம்ப் செட்டுகளுக்கு காலையிலோ அல்லது மாலையிலோ ஒரு முறை வைத்து தட்டுப்பாடு இல்லாமல் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சுமாராக ஒரு நாளைக்கு 3 அல்லது 3½ கோடி யூனிட்டுகள் நமக்குத் தேவைப்படுகின்றன. நம்முடைய பற்றாக்குறை ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி யூனிட்டுகள். இந்த நிலைமையின் காரணமாகத்தான் பிற மாநிலங்களில் இருந்து நாம் மின்சாரத்தை வாங்க வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் இருந்து மின்சாரம் பெற முயற்சி செய்யப்படுகின்ற அதே நேரத்தில், நம்முடைய மாநிலத்திலே உள்ள கல்பாக்கம் அணு மின் நிலையம் இன்னும் துவங்கப்படாமல் இருப்பதையும், ஏற்கனவே இயங்கி வந்த எண்ணூர், தூத்துக்குடி மின் நிலையங்கள் சரியாக இயங்கவில்லை என்பதையும் அரசு அறியுமா ? அது உண்மையா ? கல்பாக்கம் அணு மின் நிலையத்திற்குத் தேவையான ஹெவி வாட்டர் கிடைத்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையம் ஜூன் மாதத்தில் இருந்து இயங்கும் என்று தகவல் தரப்பட்டுள்ளது. அதற்கு வேண்டிய ஹெவி வாட்டர் கிடைத்து விட்டதா என்கிற விவரம் இல்லை. தூத்துக்குடி மின் நிலையமும், எண்ணூர் மின் நிலையமும் எந்த அளவிற்கு முழுமையாக உற்பத்தியைச் செய்ய முடியுமா அந்த அளவிற்கு மின் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, கேரள மாநில அரசோடு நாம் செய்து கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதால் இனி இதே விலைக்கு அவர்கள் மின்சாரம் கொடுப்பது இல்லையென்றும், அதேபோல், 1984 ஆம் ஆண்டுக்குப்பின் நமக்கு மின்சாரம் வழங்கப்போவது இல்லை என்று கேரள அரசு சொல்லி இருக்கிறது என்றும் அறிகிறேன். ஆகவே, கேரள அரசோடு தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்தி, போதிய அளவிற்கு மின்சாரம் பெற அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரள அரசு அப்படிச் சொல்லியதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. கேரள அரசோடு போட்ட ஒப்பந்தம் பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதி அதாவது இன்றோடு அது முடிகிறது என்று கருதுகிறேன். ஆனாலும், அந்த மாநிலம் உபரி மாநிலமாக இருப்பதால், தொடர்ந்து தருவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, மீண்டும் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்.





AMBATTUR INDUSTRIAL ESTATE.

*THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Rural Industries be pleased to state :

(a) the total number of Industrial units located at the Ambattur Industrial Estate; and,

(b) the total capacity of the Ambattur Industrial complex to provide plots to open industrial units.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 974 கூடங்கள்.

(ஆ) அம்பத்தூர் சீர்திருத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டையில் உள்ள நிலப்பரப்பு மொத்தம் 773 ஏக்கர். அது 372 மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 712.967 ஏக்கர் அளவுள்ள 333 மனைகள் தொழில் முனைவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்டன.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொழிற்பேட்டையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ? அந்தத் தொழிற்பேட்டையில் எத்தனை இடங்கள் உடல் ஊனமுற்றோருக்கு தொழில் தொடங்குவதற்காக முன்னுரிமை அளித்து ஒதுக்கப்பட்டுள்ளன அல்லது, அப்படி ஒதுக்குவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மூலக்கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்திலேயே 773 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னேன். அதில் 712 ஏக்கர் அளவிற்கு இப்போது ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 61 ஏக்கர் நிலத்தை 39 மனைகளாகப் பிரித்து ஒதுக்கீடு செய்வதற்கு தயாராக இருக்கிறது. இவற்றிற்கு ஒதுக்கீடு கோரி விண்ணப்பங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. இதனை தொழில் நுட்ப அதிகாரிகள் குழு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. விரைவில் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, மொத்தம் 974 தொழிற்கூடங்கள் என்று இருக்கிறபோது எத்தனை தற்போது இயங்கி வருகின்றன ? புதிதாகக் கட்டப்படுகிற தொழிற்கூடங்கள் எத்தனை ? கட்டப்பட இருக்கிற அந்தத் தொழிற்கூடங்களில் பணி எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, 974 தொழிற்கூடங்களில் தற்போது 793 தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. நான்கு வகைகளில் அவை செயல்பட்டு வருகின்றன. வாடகைத் தொழிற்கூடங்களில் இயங்கும் தொழில்கள் 245. சீர்திருத்தப்பட்ட முறைகளில் அமைந்துள்ள தொழில்கள் 239. சிட்கோ உதவித் திட்டத்தின்கீழ் அமைந்துள்ள தொழில்கள் 209. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக்டார்) 100 ஆக 793 தொழிற்கூடங்கள் தற்போது இயங்குகின்றன. அடுத்து, 181 தொழிற்கூடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன. சிட்கோ உதவித் திட்டத்தின் கீழ் அமைகின்ற தொழிற்கூடங்கள் 81. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக்டார்) 100. ஆக இரண்டு இனங்களில் 181 தொழிற்கூடங்கள் வருகிற ஏப்ரல் மாதம் இறுதிக்குள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்கூடங்கள் இயங்குவது பற்றிச் சொன்னார்கள். தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு அம்பத்தூரில் மட்டுமல்லாமல் சென்னையை சுற்றியுள்ள தொழில் நகர்களில் இருக்கிற அரசுக்குச் சொந்தமான காலி நிலங்களை இப்படி தொழிற்கூடங்கள் அமைக்க குத்தகை முறையில் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

பொள்ளாச்சியிலுள்ள "Top Slip" பகுதியை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 143—திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சிப் பகுதியில் உள்ள "Top Slip" பகுதியை வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அழகு படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதை மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

*1982 பிப்ரவரி 11]*

**திரு. எம். வி. இரத்தினம் :** தலைவரவர்களே, இயற்கை எழில் மிக்க அந்தப் பகுதியில் சிறந்த வனவிலங்கு சரணாலயம் இருக்கிற காரணத்தாலும் அந்தப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தாலும் தமிழக சுற்றுலா வாரியம் பரிந்துரை செய்திருக்கிற காரணத்தாலும் விரைவில் அழகுபடுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, அதற்குத்தான் முதலிலே விடை அளித்திருக்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட உலாத்தலங்கள் என்ற அளவில் சில பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதிலே டாப்சிலிப், ஆனமலை, திருமூர்த்தி ஆகிய மூன்று இடங்களும் பரிசீலனைக்கு உட்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதிகள் நிதிநிலைக்கு ஏற்றவாறு வரிசையாக முறைப்படுத்தி, சீர் திருத்தப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு, மாவட்ட உலாத் தலங்களாக மாற்றப்படும் என்பதையும் அவை மக்களுக்கு கவர்ச்சிகரமாக அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் டாப்சிலிப் என்ற இடம் தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இடையில் எல்லையாக இருக்கிற மலைப்பகுதியில் இருக்கிற அருமையான இடம். அந்த இடத்தை சுற்றுலா ஸ்தலமாக அபிவிருத்தி செய்தால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில் பொள்ளாச்சி தாலுக்காவில் வால்பாறை மலையும் சோலையாறு மலைப்பகுதி முழுவதும், அங்கிருந்து செல்லக்கூடிய பாதையில் இருக்கக்கூடிய அட்டகட்டி வாட்டர் ஃபால்சும் அருமையான இடங்கள் ; அந்தப் பகுதிகளையும் சுற்றுலா ஸ்தலங்களாக அபிவிருத்தி செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்ட ஆனை மலைப் பகுதி என்பது வால்பாறையைத்தான் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறேன். டாப்ஸ்லிப், வால்பாறை, திருமூர்த்தி மலைப்பகுதிகள் தான் இப்போது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன.

**திரு. எம். வி. இரத்தினம் :** மாண்புமிகு பேர்வைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே கிரேஸ் ஹில்ஸ் பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா !

[1982 பிப்ரவரி 11

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, வால்பாறை என்று தெரிவிக்கின்றபோது அந்தப் பகுதியிலே என்னென்ன சிறப்பான பகுதிகள் எல்லாம் மக்களைக் கவரு கின்ற வகையிலே இருக்கின்றனவோ அவைகள் எல்லாவற் றையும் இணைத்துத்தான் அந்தப் பகுதிகள் மேம்பாடு செய்யப் படும்.

**திரு. மா. சின்னராசு :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த அந்த லிஸ்டிலே பல இடங்கள் பற்றி அறிவித்தார்கள். கோவை மாவட்டத்திற்கு மிக அருகாமை யில் இருக்கின்ற சிறுவாணியின் அடிப்பகுதியிலே முண்டந்துறை என்று அழைக்கப்படுகின்ற பகுதி கோவை குற்றாலம் என்று கூட அழைக்கப்படுகின்ற நிலைமையில் இருக்கின்றது. அங்கே மிக அருமையான அருவி இருக்கின்றது. ஆகவே அதையும் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மாவட்ட உலாத்தலக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் :** தலைவரவர் களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்ற போது 3, 4 இடங்களை சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு நிதிநிலை சரியில்லை என்று சொன்னார்கள். ஆகவே மத்திய அரசினிடத்திலே இருந்து இதற்கு ஏதாவது உதவி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, இதுபோன்று சுற்றுலாத்தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு திட்டம் என்ற பெயராலும், மலைப் பகுதி மேம்பாடு திட்டம் என்ற பெயராலும் தான் அவர்கள் நிதியுதவி செய்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழே வருகின்ற பகுதிகளிலே அந்தப் பகுதிகள் அடங்குமானால் அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு அந்த நிதியுதவியினைப் பயன்படுத்த இயலும்.

**திரு. என். இட்டப்பா :** தலைவரவர்களே, சில ஆண்டு களுக்கு முன்பு நமது அரசு மாயூரம் பகுதியிலே உள்ள தரங்கம் பாடி பகுதியில்............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கோவை மாவட்டத் தைப் பற்றிய கேள்வி, எனவே மாயூரம் பற்றிக் கேட்டால் பதில் இருக்காது.

*1982 பிப்ரவரி 11]*

**அதங்கோட்டாசானுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம்.**

***வினா எண் 144—திரு. பொ. விஜயராகவன், திரு. டி. மணி :** *மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*சங்க காலத்தமிழறிஞர் அதங்கோட்டு ஆசான் அவர்களுக்கு அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில் நினைவுச் சின்னம் அமைக்க தமிழக அரசு முன் வருமா ?*

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அதங்கோட்டாசானுக்கு அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம் அதங்கோட்டில், சிலை ஒன்று நிறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. பொ. விஜயராகவன் :** தலைவரவர்களே, அந்தச் சிலையினை நிறுவுவதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றதா ? அந்தச் சிலையில் வேலைகள் தொடங்கப்பட்டு விட்டனவா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, அந்தச் சிலையினை உருவாக்குவதற்காகவும், அதை நிறுவுவதற்காகவுமான அடிப்பீடங்கள் அமைப்பதற்காகவும் அரசு 65 ஆயிரம் ரூபாய் செலவிடலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கின்றது. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு பகுதியில் கல்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த ஆதங்கோடு என்னும் இடத்தில் குழித்துறை-மாங்காட்டுச் சாலையின் சந்திப்பில் இருக்கின்ற சர்வே நம்பர் 475-ல் அமைக்கலாம் என்று அரசு தீர்மானித்திருக்கின்றது. ஆனால் அந்த அதங்கோட்டு ஆசான் அவர்களுடைய உருவத்தினை நிர்ணயிப்பதற்காக பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இருந்ததால் தான் சிலை வைப்பதிலே தாமதம் ஏற்பட்டிருக்கின்றது. அதங்கோட்டு ஆசான் அவர்களின் ஆதாரபூர்வமான உருவமோ வேறு படங்களோ கிடைக்காத நிலைமையில் திருவள்ளுவர் கோட்டத்தில் வரையப்பட்டிருக்கின்ற அந்த உருவத்தின் அடிப்படையிலே அமைக்கலாமா என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தமிழ் அறிஞர்களிடத்திலே வேறு ஏதேனும் சான்று உருவங்கள் இருக்கின்றனவா என்று கேட்கப்பட்டு. அதற்கான பரிசீலனைகள் மேற்கொண்ட காரணத்தினாலேதான் அந்தச் சிலையினைநிறுவும் பணி தாமதமாகி இருக்கின்றது. இப்போது விரைவிலே அந்தப் பணி துவங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. விஜயராகவன் :** தலைவரவர்களே, அதங்கோட்டு ஆசான் அவர்கள பிறந்த இடமான அதங்கோட்டிலே இருக்கின்ற அந்த ஊர் மக்கள் அங்கே சிலை வைப்பதற்காக

[1982 பிப்ரவரி 11

ஒத்துழைப்புத் தருவதோடு கொஞ்சம் நிலத்தையும் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே அந்த நிலத்திலே தமிழ் படிக்கின்ற வகையிலே ஒரு நூலகத்தையும் சேர்த்து வைத்தால் நன்றாக இருக்கும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதற்கான நிலம் கூடத் தருவதற்கு அவர்கள் தயாராக இருப்ப தால் அதையும் சேர்த்து பரிசீலனை செய்து ஒரு நல்ல நூலகத் தினை அமைக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-20).

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்கள் வேறு சில இடங்களைச் சர்வே எண். 485/2, 638/2-ல் உள்ள பகுதிகளை யெல்லாம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிலர், மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, இடத்தை தருவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே நூல் நிலையம் போன்ற நிலையங்களை உருவாக்குவதைப் பற்றி இனி மேல்தான் அரசு பரிசிலனை செய்ய இருக்கிறது.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, சங்க காலத் தமிழறிஞர் அதங்கோட்டாசானுக்கு, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கையின் அடிப்படையில் நினைவுச் சின்னம் அமைக்கப் போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகள் செய்வதைப் பற்றிச் சொன்னதற்கு நன்றி. ஆனால் கடந்த ஜனவரி மாதம் 18 செண்ட் நிலத்தை இலவசமாகக் கொடுத்ததாக தகவல்கள் இருக்கின்றன. ஆகவே அந்த இடத் தில் நினைவுச் சின்னம் எழுப்புகிற காலத்திலே, ஒரு 100, 200 பேர்கள் வந்து தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஆய்வு நடத்து வதற்கோ, தமிழ் படிப்பதற்கோ வசதியாக இருக்கும் பொருட்டு, ஒரு மண்டபத்தையும் சேர்த்துக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதங்கோட்டாசான் நினைவு மன்றத் தலைவர் திரு. கோவிந்தராசன அவர்கள சர்வே எண். 485/2 என்ற இடத்தை சிலை நிறுவதற்காக அரசுக்கு இலவசமாக கொடுத்து அதற்கான இசைவும் தெரிவித்து ஒப்பந்தம் தந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அந்த இடத்திலேயே சிலையை வைக்கலாம் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அரசு முதலிலே சிலையை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. சிலை நிறுவப்பட்டதற்குப் பிறகு அடுத்த திட்டமாக மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனை களை எல்லாம் பரிசீலித்து எவ்வப்போது அந்த வசதிகள் ஏற் படுமோ அதைப் பார்த்து நிறைவேற்ற அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் :



1982 பிப்ரவரி 11]

மாயூரத்தில் காவிரியாற்றின் குறுக்கே உள்ள பழைய பாலம்.

***வினா எண் 145—திரு. என். இட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தில் காவிரியாற்றின் குறுக்கே உள்ள பழைய பாலத்தை விரிவுப்படுத்திப் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இல்லை.

**திரு. என். இட்டப்பா :** தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாகவே அந்தப் பகுதி மக்கள் அந்தப் பாலத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் அகலப்படுத்த வேண்டும் என் றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் மாயூரத்திற்கு வருகை தந்த போது மாயூரத்திற்கு எந்த வரம் வேண்டுமானாலும் தருகிறோம் என்று சொல்லிவிட்டு அந்த வரத்தைக்கூட தராமல் இருக்கும் நிலைமையை மாற்றுவதற் காகவாவது நமது மாண்புமிகு இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்பு கிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே வரம் கேட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பாலம். ஆகவே பாலத்தைக் கட்டுவது மிகவும் சிரமமாக இருக்கிறது.

**திரு. என். இட்டப்பா :** தலைவர் அவர்களே மாயூரம் நகராட்சியைப் பொறுத்தவரையில் டெஃபிசிட் முனிசிபாலி டியாக இருக்கிற காரணத்தாலும் பன்னெடுங்காலமாக அந்தப் பாலத்தை அகலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிற காரணத்தினாலும் நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னாலே குறுகிய அளவு உள்ள போக்குவரத்திற் காக அமைக்கப்பட்ட பாலம் என்ற முறையிலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய அதிகப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப் பதற்காகவும் அரசே முன் நின்று அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல மாயூரம் பகுதி பற்றாக்குறை முனிசிபாலிட்டியாகத்தான் இருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்ட சுமார் 7 லட்சம் ரூபாய் தேவை என்ற வகையில் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. அதில் 25 சதவீதம் நகராட்சியின் பங்குத் தொகையாகக் கொடுக்க வேண்டும்.

[1982 பிப்ரவரி 11

நகராட்சியில் பணம் இல்லை என்ற காரணத்தினால் தான் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே நிதி நிலைமை போன்றவைகள் சீராக இருக்கிற நேரத்தில் சண்டிப் பாக பாலம் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே இருக்கிற அந்தப் பாலம் அகலக் குறைவாக இருக்கிற காரணத் தாலும் பழைய பாலமாக இருக்கிற காரணத்தாலும் அங்கே போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுவதும், அடிக்கடி அந்த இடத்திலே விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதும் சகஜமாக இருப்பதாக சொல்லப்படுகிறது. விபத்துக்களைத் தடுப்பதற்காகவும், பழைய பாலம் இடிந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப் படாமல் இருப்பதற்கும், உடனடியாக அந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்வதாக இல்லை. வருகிற ஆண்டுகளில் பரிசீலிக்கலாம்.

## கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்.

*வினா எண். 146—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). கிராமப்புற வேலை வாய்ப்பு தேசிய திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு மத்திய அரசு 1980—1981-ம் ஆண்டிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியுள்ளது ?

(ஆ). எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ). இது பற்றிய முழு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ). 1980—1981-ம் ஆண்டிற்கு மத்திய அரசு கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ரூ. 1,059.508 லட்சங்கள் ஒதுக்கீடு செய்தது.

(ஆ) மற்றும் (இ). 75 விழுக்காடு இம்மாநிலத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் சொற்ப நில விவசாயிகள் ஆகியோர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் 25 சதவிதம் விழுக்காடு வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு என்ற அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்தது.



1982 பிப்ரவரி 11]

. வேலைக்கு உணவுத் திட்டம் அக்டோபர் திங்கள் 1980 முதல் திருத்தி அமைக்கப்பட்டு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் மத்திய அரசு சார்புத் திட்டமாக மாற்றப்பட்டது. 33,000 டன்கள் அரிசியை தமிழ் நாட்டிற்கு வழங்கியிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒதுக்கக்கூடிய இந்தப் பணத்தை கிராம சேவாக்கள் மூலம் மஸ்டர் ரோல் தயார் செய்து அந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது விதி. ஆனால், நடைமுறையில் அப்படியில்லை. இது கான்ட்ராக்டர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டு ஆஃபர் மூலம் கொடுப்பதை அரசு அறியுமா ? இதைக் கண்காணிக்க சர்வகட்சிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த வேலைகள் கோட்ட வளர்ச்சி அலுவலகத்தில், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள தகவல் பணியாளர்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. காண்ட்ராக்ட் முறை இல்லை. ஆனால் ஒப்பந்தமுறை இருக்கும் என்று சொன்னால் தயவு செய்து அதை எங்களிடம் சொல்ல வேண்டும். ஒப்பந்தமுறை இருக்கக் கூடாது என்பதுதான் மத்திய அரசின் நோக்கமுமாகும். ஆகவே அங்கே கான்ட்ராக்ட் முறை கூடாது என்பதற்காகத்தான் கிராம நல அலுவலர்கள் மற்ற பணியாளர்களை வைத்து இத்திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் இந்தத் திட்டம் குறிப்பாக இந்தியாவிலே இருக்கிற அத்தனை மாநிலங்களிலும் தமிழ்நாட்டில்தான் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை சமீபத்தில் இந்திய அரசுக் குறிப்புகள் கூறிக் கொண்டிருக்கின்றன. பைனான்ஷியல் எக்ஸ்பிரஸிலும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். ரங்கசாமி : கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டத்தின் கீழ் எந்தெந்தப் பணிகள் செய்யப்படுகின்றன ? சென்ற ஆண்டு இந் தேசியத் திட்டத்தின் கீழ் இந்தப் பணிகள் பராமரிப்புக்கு எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஆகவே இத்திட்டத்தின்கீழ் அந்தப் பராமரிப்புப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்படுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடுமானவரையில் கிராமப்புற வேலைவாய்ப்புத் தேசியத் திட்டத்தின் மூலமாக இன்று வளர்ச்சிப்பணிகள், குறிப்பாக பள்ளிக் கட்டடங்கள், சாலைகள் அமைத்தல் போன்ற திட்டங்களும் இந்தப் பணியில் சேர்த்து செய்யப்பட்டு வருகிறது.

[1982 பிப்ரவரி 11

திரு. ரா. உமாநாத் : இந்தத் திட்டத்தின்கீழ் வேலை செய்யக்கூடியவர்களுக்கு அரிசி அல்லது தானியங்கள் வடிவத்தில் ஊதியம் கொடுக்கப்படுகிறதா ? அப்படிக் கொடுக்கப்படுகிறது என்றால் அது மாநில அரசின் கோட்டாவில் இருந்து கொடுக்கப்படுகிறதா அல்லது அதற்கென மத்திய அரசு அனுப்புகிறதா? அந்த ஸ்டாப்புக்காக கூடுதலாக இத்திட்டத்தின்கீழ் ஏதாவது கொடுக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1980—81 இல் 33,000 டன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் தவணையாக 12,500 டன் வழங்கப்பட்டது. இரண்டாவது தவணையாக கடந்த நான்கு நாட்களுக்கு முன்னால் மீண்டும் 12,500 டன் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கி இருக்கிறது. அரிசியும் கொடுக்க வேண்டும், பணமும் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைத்தான் நாமும் அமுல் படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மத்திய அரசு தமிழகத்திற்கு இவ்வளவு பணம் ஒதுக்கியதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நம் அரசு எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா? தமிழகத்தில் இத்திட்டம் சிறப்பாக நடைபெற்று வருவதாக பத்திரிகையில் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். நம் மாநிலத்தில் சிறப்பாக நடப்பதை நாங்களும் வரவேற்கிறோம். ஆனால் அதில் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. நாங்களும் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்ததா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முழுவதும், நூற்றுக்கு நூறு, மத்திய அரசின் திட்டமாக 1980—81 இல் இருந்தது. ஆனால், இந்த ஆண்டிலே அதாவது கடந்த அக்டோபர் மாதம் 1980-க்குப் பின்னால்; இந்தத் திட்டம் மாநில அரசு, மத்திய அரசு திட்டமாக மாற்றப்பட்டது. இந்த ஆண்டிலே மட்டும் மத்திய அரசு 7 கோடியே 90 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. மாநில அரசும் அதேபோல் 7 கோடியே 90 இலட்சம் ரூபாய் கொடுத்து, ஏறத்தாழ 15 கோடி ரூபாய் இந்த ஆண்டிலே மட்டும் தேசிய கிராமப்புற வளர்ச்சித் திட்டத்திற்காக கொடுக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த வேலை மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்று நாம் சொல்லவில்லை ; மத்திய அரசே பாராட்டியிருக்கிறது. பல்வேறு பிரச்னைகளை பரிசீலனை செய்து, ஆய்வுகள் நடத்தி



1982 பிப்ரவரி 11] (திரு. ப. குழந்தைவேலு)

அவர்கள் அலுவலர்கள் பார்த்த பின்னால்தான், இங்கேதான், அதுவும் " தி ஒன்லி ஸ்டேட் " என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். Tamil Nadu is the only State where NRDP work is being done என்று சொல்லி அவர்கள் இதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இதை நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், இத்திட்டத்திற்காக 2.83 கோடி மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு அதிகமான புள்ளி விவரம் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அந்த அளவிற்குப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் எந்தத் திட்டத்திலும் ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். திரு வேங்கடம் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், எந்தத்திட்டத்திலும் குறைபாடுகள் இருக்கலாம். அது இயற்கைதான். ஆக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டுமல்ல, எந்த ஆட்சி நடைபெற்றாலும், எந்தத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகிறபோது ஒரு சில தவறுகள் ஏற்படத்தான் செய்யும். அந்தத் தவறுகளைத் திருத்தி நல்ல முறையிலே, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது ஒரு அரசின் கண்காணிப்பாக இருக்க வேண்டும். அதைத் தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.

## வசிஷ்ட நதியின் குறுக்கே பாலம்.

*வினா எண். 147—திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம். ஆத்தூர் வட்டத்திலுள்ள பெரிய கல்வராயன்மலை போகும் வழியிலுள்ள செல்லியம்பாளையத்திற்கும் இராமநாயக்கன்பாளையத்திற்கும் இடையில் வசிஷ்ட நதி ஆற்றில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அரசு அதுபற்றி பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) தகுந்த தருணத்தில் பரிசீலனை செய்யப்படும்.

[1982 பிப்ரவரி 11

பாம்பன் பாலம்.

*வினா எண் 148— திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்பன் பால வேலை என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பாம்பன் பால வேலை இதுகாறும் 36 விழுக்காடுகள் அளவிற்கு வேலைகள் முடிவு பெற்ற நிலையில் உள்ளது. இப்பால வேலையை எடுத்திருந்த ஒப்பந்தக்காரர்கள் வேலையில் முன்னேற்றத்தை சரிவர காட்டத் தவறியதாலும், வேலையை ஒரேயடியாக நிறுத்திவிட்டதாலும், அவரது ஒப்பந்தம் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் அன்று முழுமையாக ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள வேலைகளை செய்து முடிக்க புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் சில குறிப்பிட்ட வேலைகள் துறையின் மூலமாகவும் சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மீதமுள்ள வேலைகளை மறு ஒப்பந்தத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலத்தில் பால வேலையை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1978-லே கடல் கொந்தளிப்பின் காரணமாக பாம்பன் பாலத் திட்ட வேலைகள் தடைப்பட்டன. 6 கோடி ரூபாய் என்று ஆரம்பிக்கப்பட்ட அந்த வேலை, இன்றைக்கு 11 கோடி ரூபாயைத் தாண்டிப் போகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து 4 ஆண்டுகளாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், இதுவரைக்கும் 76 கண்களில் 6 கண்களுக்குத்தான் வேலை நடந்திருக்கிறது. மீதமுள்ள 70 கண்களுக்கு வேலை நடைபெறவில்லை. அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த வேலையை ஏற்கெனவே மத்திய அரசு அமைச்சர் எல்லாம் கூட பார்த்துச் சென்றிருக்கிறார்கள். சமீபத்திலேகூட வீரேந்திர பாடேல் அவர்கள் இந்த பாம்பன் பாலத்து வேலையை பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஏற்கெனவே நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதற்குப் பின்னால், இப்போதும்கூட இந்த அரசின்



1982 பிப்ரவரி 11]

துறையின் மூலமாக சில பகுதிகளைச் செய்யலாம் என்று நீதித்துறை ஆணையிட்டு இருக்கின்ற காரணத்தினால், அதன்படி நடத்தப்பட்டு வருகிறது. நீங்கள் சொல்வதுபோல் 36 சதவிகித வேலை முடிவடைந்திருக்கிறது. கடந்த 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளிலே அன்றே இந்த வேலை முடிந்திருக்க வேண்டும். 1974-லே ஆரம்பிக்கப்பட்டது. இந்த 4 ஆண்டுகளிலே முடிந்திருக்க வேண்டும். ஆனால், இப்போது 1982 ஆம் ஆண்டு வந்துவிட்டது. ஆக, அந்த அளவிற்கு இந்த வேலைகள் மிகமிக தாமதமாக நடைபெற்று வந்திருக்கிறது. இதிலே நாவிகேஷன் அண்டு நான்-நாவிகேஷன் ஸ்பான் என்று சொல்லக்கூடிய பகுதிகளில், நாவிகேஷன் ஸ்பான் என்பது முக்கியமானது. அந்தப் பகுதியில் சரியாக வேலை நடைபெறவில்லை என்ற காரணத்திற்காகவும், பல்வேறு காரணங்களுக்காகவும், ஏற்கெனவே இருந்து வந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இப்போது இந்த வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இன்னும் 3 ஆண்டுக் காலத்தில் முடிவடையும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : ஏற்கெனவே இருந்த ஒப்பந்தக்காரர்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே செய்த வேலைகள் எவ்வளவு ? கடல் கொந்தளிப்பு காரணமாக அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதற்கு என்ன தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுதான் பிரச்சினையாக இருக்கிறது. கடந்த 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று வீசிய புயலின் காரணமாக பல்வேறு சாதனங்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன, பழுதடைந்தன என்று கோரி நஷ்ட ஈடு கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற தொகையை நம்மால் கொடுக்க முடியாது என்று சொன்னோம். அதன் காரணமாக நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கினார்கள். அப்படிப்பட்ட நிலை காரணமாகத்தான் பல வேலைகள் மெதுவாக நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

திரு. உ. சுப்பிரமணியன் : இந்தக் குறை வேலையை ஒப்பந்தக்காரர்கள் மூலமும் அரசுத் துறையிலும் செய்வதாகச் சொன்னார்கள். அந்தப் பாலம் அமைக்கும் பணி கேந்திரமான இடத்தில் இருக்கும் காரணத்தால் மிக விரைவாகப் பால வேலை முடித்தால் நாட்டுக்கு நல்லது என்ற காரணத்தால் முழுவதும் அரசுத் துறையிலேயே அந்த வேலையை எடுத்து நிறைவேற்ற முன்வருவார்களா ?

[1982 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது ஒரு முக்கியமான பாலமாக இருக்கிறது. கடலின் குறுக்கே வேறு எந்த இடத்திலும் பாலம் இல்லை. தமிழ்நாட்டில்தான் அத்தகைய பாலத்தை அமைக்க இருக்கிறோம். நாம் இப்போது பாரதியார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். '' சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் '' என்று பாரதியார் பாடினார். இன்றைக்கு அந்த முறையில் இந்தப் பாலத்தைக் கட்டும் பணியில் நாங்கள் ஈடுபட்டுருக்கிறோம். எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : பாம்பன் பால வேலை முதல் ஒப்பந்தத்தில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது ? 1982 ஆம் ஆண்டு எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது ? ஒப்பந்தக்காரர்கள் வாங்கிய ஸ்டேயை வெகேட் செய்ய அரசு தீவிர முயற்சி எடுக்குமா ? ஒப்பந்தக்காரர் யார் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1972 இல் போடப்பட்ட திட்டம் இது. அப்போது போட்ட மதிப்பீடு 538 இலட்சம் ரூபாய். இப்போது அது எட்டு கோடி, பத்து கோடியைத் தாண்டிவிடுகிறது. ஒப்பந்தக்காரர்கள் பெயர் நீலகண்டன் பிரதர்ஸ்,

அங்கம்பாக்கம் கிராமத்திற்கும், திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 149—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தாலூகா அங்கம்பாக்கம் கிராமத்திற்கும் திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கக்கோரும் பொதுமக்கள் வேண்டுதல் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வினாவில் குறிப்பிட்டுள்ள பணியை வருங்காலத்தில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செயலாக்க பரிசீலிக்கப்படும்.



1982 பிப்ரவரி 11]

தனியாக தொழில் நடத்தும் மருத்துவர்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதற்கான அனுமதி.

*வினா எண். 150—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியாகத் தொழில் நடத்தும் மருத்துவர்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்கப்படுகிறார்களா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தகுதி பெற்ற மருத்துவர் மற்றும் சார் நிலை பணியாளர்கள் பணியாற்றிவரும் தூசி புகாததும், சுகாதார முறையோடு கூடிய துப்புரவான சூழ்நிலையில், அறுவை சிகிச்சைக்குத் தேவையான கருவிகளுடன் கூடிய, தகுதிகளை உடைய தனியார் மருத்துவ மனைகளுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது.

திரு. து. புருஷோத்தமன் : சென்ற ஆண்டு நம் மாநிலத்தில் எவ்வளவு பேருக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்யப்பட்டது ? தனியாகத் தொழில் நடத்தும் டாக்டர்கள் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகள் எத்தனை செய்தார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அப்ரூவ்டு சர்ஜரி லிஸ்ட் டிஸ்ட்டிரிக்ட் வைஸாக இருக்கிறது. சென்னையில் 19 இடங்கள், கோவையில் 50 இடங்கள், மதுரை மாவட்டத்தில் 26 இடங்கள்—நீண்ட பட்டியல் ஒட்டுமொத்தமாக 218 இடங்களில் ஏறத்தாழ 4 சதவிகிதம் ஆப்பரேஷன் தனியார் துறையில் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன் : இந்தத் திட்டத்திற்காக அரசு உதவித் தொகையாக எவ்வளவு தொகை கொடுக்கிறதோ அதை இடைத் தரகர் மூலம் கொடுக்காமல் நேரடியாக தனிப்பட்ட டாக்டர்களுக்குத் கொடுத்தால் அவர்களுக்கு ஊக்கம் ஏற்பட்டு அதிகமான அறுவை சிகிச்சை செய்ய ஏதுவாக இருக்கும். தற்போது தனிப்பட்ட டாக்டர்கள் குடும்பநல அறுவை சிகிச்சை செய்வதற்குப் பதிலாக கருச் சிதைவை அதிகமாகச் செய்கிறார்கள். அந்தத் தடுத்து இதற்கு அதிகமான ஊக்கம் கொடுக்க அரசிடம் திட்டம் உண்டா ?

[1982 பிப்ரவரி 11

[முற்பகல் 9–40]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருத்தடைக்கு அகில இந்திய அளவிலே ஒரு சட்டம் மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் பர்க்னன்ஸி ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறது. அதை எம்.டி.பி. என்று சொல்வார்கள். அதன்படி அதை அரசு மருத்துவ மனைகளிலே செய்யலாம், அதே நேரத்திலே தனியார் மருத்துவ மனைகளிலேயும் செய்யலாம் ; அதற்கென்று தொகை கொடுப்பதில்லை. டியூபெக்டமி, வாசக்டமிக்கு மட்டும் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவ மனையிலே ஒரு குறை இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சரியாகத் தொகை கொடுப்பதில்லை, தாமதமாக வருகிறது என்ற குறைபாடு இருந்தது. இண்டியன் மெடிக்கல் அசோசியேஷன் ரெப்ரசன்டேடிவ்ஸை கலந்துகொண்டு தற்போது அப்படிப்பட்ட குறைபாடு இல்லாமல் அதே நேரத்திலே தவறுகளும் இல்லாமல் கண்காணிக்கவும் ஆப்பரேஷன் செய்கிறவர்களுக்கு தாமதம் இல்லாமல் உடனடியாகப் பணத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனையிலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தனியாக தொழிலை நடத்துவதைத் தடை செய்வதற்கான குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இது கொள்கைப் பிரச்சினை. கேள்வி நேரத்திலே கொள்கைப் பிரச்சினை பற்றி பேசக்கூடாது. இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது என்றாலும் இந்த மானியக் கோரிக்கை வருகிறபோது அதைப்பற்றிப் பேசலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : சைனாவிலே ஒரு குழந்தைக்கு மேல் பெறக்கூடாது என்று இருக்கிறது. அங்கே பிறப்பு விகிதம் 2.1 சதவீதத்திலிருந்து 1.2 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சைனாவிலே நடந்த அந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு மாநாட்டிலே நம்முடைய கொறடா கலந்து கொண்டார்கள். அவர்கள் இதைப்பற்றி ஏதாவது திட்டம் கொடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். 2-க்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்ற கோஷம் 1-க்குப் பிறகு எப்போதும் வேண்டாம் என்று மாற்றப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.



1982 பிப்ரவரி 11]

திரு. இ.சட்டநாத கரையாளர் : தலைவர் அவர்களே, வாசக்டமி செய்வதற்கும் மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் பர்க்னன்ஸி செய்வதற்கும் குறைந்த பட்சக் கல்வித் தகுதி என்ன வைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்கு டிரெயினிங் இருக்கிறது. எம்.பி.பி.எஸ். படித்திருக்க வேண்டும், டி.ஜி.ஓ. படித்திருக்க வேண்டும் எம்.பி.பி.எஸ். படித்திருந்தாலும், டி.ஜி.ஓ. படித்திருந்தாலும் அதற்கென்று இன்சர்விஸ் டிரெயினிங் கொடுத்துதான் அதைச் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

கோவை நகரிலுள்ள ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி.

* **வினா எண். 151**—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரத்தில் உள்ள ஆரிய வைத்திய பார்மஸி என்ற ஆயுர் வைத்திய நிறுவனம் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்துகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள் ?

(இ) அக்கல்லூரிக்கு அரசு கொடுக்கிற உதவிகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

(ஆ) 68 மாணவர்கள்.

(இ) இந்தக் கல்லூரிக்கு, இம்மாநில அரசு இதுவரை எவ்வித நிதி உதவியும் வழங்கவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆயுர்வேத வைத்திய முறை வளர்ந்து வருவதற்கு பயிற்சி பெற்ற மருத்துவர்களை உருவாக்குவதற்கு இந்தக் கல்லூரி முதன் முதலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்தக் கல்லூரிக்கு அரசு நிதி உதவி ஏன் செய்யாமல் இருக்கிறது ? அவர்களிடத்திலேயிருந்து அதைப்பற்றி அது சம்பந்தமாக வேண்டுகோள் வரவில்லையா அல்லது அரசே ஆயுர்வேத வைத்திய முறைக்கு செய்யத் தேவையில்லை என்று முடிவுக்கு வந்துவிட்டதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யுனானி வைத்தியம் ஆகியவற்றை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே அவர்கள் நமக்கு ஒரு கருத்தை அனுப்பியிருக்கிறார்கள்.

The Ayurvedic Trust, Coimbatore has sent a proposal to the Government of India, Ministry of Health and Family Welfare through the State Government for sanction of a capital grant of Rs. 2 lakhs for constructions of an Outpatient Wing. The remarks of the Director of Indian Medicine have been called for. They are considering the matter. Taking into consideration the Hon.'ble Member's opinion it will be considered sympathetically.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி நமது அரசின் மூலமாகவே மத்திய அரசுக்கும் வேண்டுகோள் விடுத்து மத்திய அரசினுடைய உதவிகள் கிடைத்துள்ளது. அது மாத்திரமல்ல. இன்றைக்கு ஆயுர்வேத வைத்திய முறை வளர்ந்து வருகிற முறை. அதிலே சில விசேஷமான வைத்தியங்கள் செய்யப்படும் என்பதை அறிந்து உலக சுகாதார ஸ்தாபனம் அவர்களைக் கலந்து ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய அளவுக்கு அதற்கு உதவி செய்வதற்கு, அதை அபிவிருத்தி செய்வதற்கு நிதி உதவியும் மற்ற இதர உதவிகளும் செய்ய அரசு முன்வருமா ஹோமியோபதி சித்தா போன்ற வைத்திய முறைக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு நல்ல கண்ணோட்டத்தோடு நல்ல நோக்கத்தோடு ஆயுர்வேத முறைக்கு உதவி செய்யப்படுவதில்லை என்ற கருத்து நிலவுவதை இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அப்படிப்பட்ட கருத்து இல்லாமல் செய்வதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும், மேற்கொண்டு வருகிறது என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த நிறுவனம் என்னென்ன தேவை என்று நம்மிடத்திலே கேட்பார்களோ—பணத் தேவை மட்டும் கிடையாது, அதைக் கேட்கவில்லை—அவர்கள் கேட்டதெல்லாம் அங்கே வேலைகள் செய்ய எந்தவிதமான இடையூறுகளும் இருக்கக் கூடாது என்று ரெப்ரசண்டேஷன் மூலம் தெரிவித்து, அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களும் செய்ய ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரிய வைத்திய பார்மஸி என்ற நிறுவனம் உலகத்திலேயே புகழ்பெற்ற நிறுவனம் என்பதையும், அதன் தலைமை கேரளாவிலிருந்து கோவைக்கு, அதாவது தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்பதையும் கருத்திற் கொண்டு, அந்தக் கல்லூரிக்கு உதவி கொடுப்பது என்பது தமிழக அரசானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் செய்யக்கூடிய பாக்கியம் என்று கருதி அமைச்சரவர்கள் அதிக உதவியைச் செய்து அந்தக் கல்லூரியை ஊக்குவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிறுவனம் ஏதாவது திட்டவட்டமாக இப்படிப்பட்ட உதவி தேவை என்று நம்மிடத்தில் அணுகுவார்களேயானால் அதைப்பற்றி நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 152— திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) கூகலூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக ஆணை பிறப்பித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கே அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாகத் துவக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அதற்காக

The Government sanctioned a total expenditure of Rs. 17.28 lakhs under recurring and Rs. 96.49 lakhs under non-recurring. The total expenditure of the Scheme for 1981-82 has been restricted to 71.19 lakhs.

[1982 பிப்ரவரி 11

ஒட்டுமொத்தமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எவ்வளவு தொகை வேண்டுமோ அதை ப்ரப்போர்ஷனேட்டாக செலவழிக்க அரசாங்கம் தயாராக இருக்கும்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சுகாதார நிலையத்திற்கும் மற்றொரு சுகாதார நிலையத்திற்கும் இவ்வளவு தூரம் இருக்க வேண்டுமென்று சட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் சில யிடங்களிலே கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சட்டத்தை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வ. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவ மனைக்கும் இன்னொரு மருத்துவ மனைக்கும் 8 கிலோ மீட்டர் அல்லது 5 மைல் இருக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று வருகிறது. சென்ற ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஜாஸ்தியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நம்முடைய இறுதி இலட்சியம் என்னவென்றால், ஒரு ஒன்றியத்தில் ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் போதாது ; 50,000 பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று கொண்டு வர வேண்டுமென்பது இறுதி இலட்சியம். இருந்தாலும் படிப்படியாகத்தான் இதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் நேரத்தில் இந்த விதி விலக்கு தர வேண்டியிருக்கும். நிச்சயமாக அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல விதி விலக்கு தேவைப்படும் இடங்களில் அதுபற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு .அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் கட்டுவதற்கான நில ஆர்ஜிதம் முடிந்துவிட்டதா ? எப்பொழுது கட்டிடம் கட்டப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஆண்டுக்குள்ளே கட்டி முடித்து விடப்படும்.



1982 பிப்ரவரி 11]

குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கான ஊக்க ஊதிய உயர்வு.

*வினா எண். 153—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த ஊக்க ஊதிய உயர்வு தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஊதிய உயர்வுத் தொகையை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

சென்னையிலுள்ள அரசு விரைவுப்பேருந்து நிலையம்.

*வினா எண். 154—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள அரசு விரைவுப் பேருந்து நிலையத்தில் பயணிகள் ஓய்வு அறை (waiting room) கட்ட அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பரிசீலித்து வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, ஓய்வு அறைகள் கட்டப்படும் அதே சமயத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் எல்லோரும் சாப்பிடும் அளவிற்கு மலிவான விலையில் உணவுப் பண்டங்களைக் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த வகையில் சிற்றுண்டிச்சாலை வைப்பதற்கும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 11

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதற்கான ஏற்பாடு நடந்தாகிவிட்டது. விரைவாக அதன்மீது நடவடிக்கை எடுத்து, அந்தக் காரியத்தை அங்கேயும் செய்வதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலே இயங்கி வரும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திருச்சிக்கு மாற்றப்படும் என்று சமீபத்தில் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அப்படிப் பரிசீலனையில் உள்ள இந்தப் பயணிகள் ஓய்வறை திருச்சியில் கட்டப்படுமா அல்லது சென்னையில் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, திருச்சிக்கு மாற்றப்பட வேண்டுமென்ற கருத்து அரசிடம் இருக்கிறது. திருச்சியிலே தேவையான அத்தனை ஏற்பாடுகளையும் செய்தபின்பு இங்கே மற்ற ஏற்பாடுகள் செய்யப்படும். ஆனால், திருச்சிக்கு மாற்றினாலும், இங்கே வரக்கூடிய பேருந்துகள் வந்து போய்க்கொண்டுதானிருக்கும். எனவே, இங்கே வரக்கூடிய பயணிகளுக்கு அது எப்போதும் தேவையாக இருக்கும். இங்கேயிருந்து தலைமையிடம் மாற்றப்பட்டாலும், ஓய்வு அறை தேவை என்பதைப்பற்றி கருத்து மாற்றம் இல்லை.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் நடத்துனர்கள், ஓட்டுநர்கள் மதுரை, திருச்சி, விழுப்புரம் போன்ற இடங்களில் தங்குகிறார்கள். அவர்கள் தங்கும் இடம் சுத்தமாகவும் வசதியுடனும் அமைய அவர்கள் தங்கும் கட்டிடங்கள் புதுப்பிக்கப்படுமா? புதிய தங்கும் விடுதிகளையும் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துக் கழகம் துவங்கி 1½ ஆண்டுகள்தான் ஆகியிருக்கின்றன. அதற்குள்ளே நாம் பல இடங்களில் கட்டியிருக்கிறோம். ஏற்கனவே நான் அறிவித்ததைப்போல், அவர்கள் தங்குவதற்கு அத்தனை வசதிகளோடு அங்கங்கே கட்டிடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உள்ள அரசு விரைவுப் பேருந்து நிலையத்திலுள்ள பயணிகள் ஓய்வறை இன்றைக்கு தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மை



1982 பிப்ரவரி 11]

தானா ? ஆம் எனில், அதைத் திரும்ப நம்முடைய அரசு தனது பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, பயணிகளுக்குத் தங்கும் வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே மூலக்கேள்வி சென்னையைப் பற்றியது. மதுரையைப்பற்றிய முழு விவரம் இல்லையென்றாலும், உறுப்பினர் சொன்னவாறு எதுவும் நடப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. நாம் தான் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே தவறுகள் நடந்திருக்குமானால், அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 155—திரு. மி. வின்சென்ட், திரு. டி. மணி, திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கல்குளம் தாலுகாவில் குளச்சல் துறைமுகம் விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் முடிந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆய்வு முடிந்துள்ளது.

(ஆ) அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, மோனோசைட், கர்கான், இலுமினேட், ரொட்டைல் போன்ற விலை உயர்ந்த அணு தயாரிக்கும் தாதுக்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இன்று இது மைனர் போர்ட்டாக இருக்கிறது. அதை இன்டர்மீடியரி போர்ட்டாக விரிவுபடுத்த இந்த அரசு மைய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே. துறைமுகத்தை விரிவுபடுத்த ஆய்வுப் பணிகள் முடிந்ததா என்பதுதான் மூலக் கேள்வி. பொறியியல் பொறியாளர் ஆய்வு செய்து ஏறத்தாழ ரூ. 90,000 செலவழித்து, அதைச் சீரமைப்பதற்காக இப்பொழுது விளக்கங்கள் கொடுத்திருக்கிறார்கள். எதை எதைச் செய்ய வேண்டுமென்று அரசு முடிவெடுத்து, பின்னாலே செய்வதாக இங்கே

குறிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு துவக்கி, 1984—85-ல் முடிக்க இருக்கும் இத்திட்டத்திற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு சொல்லத் தயங்காது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கான ஆய்வு நடந்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதிலே குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து 1980—81-லே சுமார் ரூ. 20 கோடி மதிப்புள்ள முந்திரிப் பருப்பு அடுத்த மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து ஏற்றுமதியாகிறது. அடுத்த மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து ஏற்றுமதி ஆவதால், அதன்மூலமாகப் பெறுகின்ற அயல்நாட்டுச் செலாவணியின் பங்கை மத்திய அரசாங்கத்திலிருந்து அடுத்த மாநிலத்தினர் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே, அந்த அயல் நாட்டுச் செலாவணி நமக்கே கிடைக்க, குளச்சல் துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யஅந்த துறைமுக வேலையைத் துரிதமாகச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே கொண்டுதான் இதை வேகமாக செய்ய வேண்டுமென்று சொல்லி, நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அந்த அறிக்கை இப்பொழுது அரசிடத்திலே இருக்கிறது. அரசு இப்பொழுது அதன்மீது வேகமான நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் ஒரு இயற்கையான துறைமுகம். ஆழமான, இயற்கையான அந்தத் துறைமுகத்தை விரைவு படுத்தினால் மட்டுமே, தொழில் துறையில் மிகவும் பின்தங்கியிருக்கிற அந்த மாவட்டத்திலிருக்கிற முந்திரித் தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், தரமானதாகக் கிடைக்கிற ரப்பரை மூலப் பொருளாக வைத்து, ரப்பர் தொழிற்சாலைகள் அமைக்கவும் அங்கே கிடைக்கிற டிட்டோனியம் மற்றும் அங்கே தயாரிக்கப்படுகிற கயிறுகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அந்தத் தொழிற்சாலைகளை மத்திய அரசு உதவியோடு அங்கே நிறுவவும், இந்தத் துறைமுகத்தை அங்கே விரிவுபடுத்துவது மிக முக்கியமானது என்ற காரணத்தினால், வெகு விரைவில் அந்தத் துறைமுகத்தை வருகிற ஆண்டில் விரிவுபடுத்த மைய அரசை இந்த அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியதைப் போல இது 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, 50 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுவதாக கருத்து சொல்லி இருக்கிறார்கள். 1982—83-லே 15 இலட்சம், 1983—84-லே 15 இலட்சம், 1984—85-லே 20 இலட்சம் செலவழிக்கப்படும் என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் படிப்படியாகத்தான் செலவழிக்க முடியும். உடனடியாக வேலை துவங்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது.

உதகையிலிருந்து விரைவுப் பேருந்துகள் விடும் திட்டம்.

*வினா எண். 156—திரு. கே. உச்சி : மாண்மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகையிலிருந்து சென்னை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற ஊர்களுக்கு விரைவு வண்டி விடும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இத்தடங்களில் பேருந்துகளை இயக்க இருக்கிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதிகளில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. இடையிலே அவற்றை நிறுத்தி விட்டார்கள். அதை உடனடியாக விடுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், இப்போது நம்மிடத்திலே இருக்கின்ற சாதாரண பேருந்துகள் மலைப் பகுதியில் போக முடியாது. அப்படி மலைப் பகுதிகளிலே ஓடுவதற்குத் தேவையான அமைப்புகளை உடைய பேருந்துகளை வாங்க அரசு நடவடிக்கை எடுத்து, அவைகளை வாங்கி, கூண்டு கட்டுவதற்காக விட்டிருக்கிறது. அந்த வேலை முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் திருப்தியாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1982 பிப்ரவரி 11

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்துகளை அரசு விடுவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நீலகிரி போன்ற பகுதிகளில் எல்லா இடங்களிலும் விரைவுப் பேருந்துகள் இருந்தாலும், டெர்ரஸ் எஸ்டேட் என்று சொல்லப்படுகின்ற தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு விரைவுப் பேருந்து விடுவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்யும் பகுதிகளுக்கு விரைவுப் பேருந்துகள் விடுவதால் அது அவர்களுக்கு எந்த வகையிலும் பயன்படாது. எனவே அங்கே நகரப் பேருந்து தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், அதிகாரிகளை அனுப்பி தேவையான நடவடிக்கை எடுக்க நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஆவன செய்வோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர் பிரிவில் உபயோகிக்கப்பட்ட போலிப் பயணச் சீட்டுகள்.**

*வினா எண். 157—திரு செ. செம்மலை, திரு.பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர்ப் பிரிவில் போலிப் பயணச் சீட்டுகள் தயாரித்து உபயோகித்த நடத்துனர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

(ஆ) அதனால் போக்குவர்த்துக் கழகத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) போலிப் பயணச்சீட்டு தயாரித்த நடத்துனர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

(ஆ) இதுபற்றி புலனாய்வு நடைபெறுகிறது. புலனாய்வுக்குப் பின்னர்தான் நட்டம் பற்றிக் [illegible] முடியும்.

1982 பிப்ரவரி 11]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்டவர்கள் மீது ஏதாவது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? வருங்காலத்தில் இது போன்று போலிப் பயணச்சீட்டு அச்சடித்து உபயோகிப்பதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, குற்றப் பிரிவு எண். 129/81-ன்படி இ.பி.கோ. 120 (பி), 409, 420, 466, 471, 477 என்ற பிரிவு களின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் அவர்களாக அச்சகத்தை அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படை அரசு முடிவெடுத்துள்ளது. அல்லது எல்லாப் போக்குவரத்து கழகங்களுக்கும் சேர்ந்து ஒரே இடத்தில் அச்சகம் அமைப்பது என்ற அந்த முடிவை இப்போது அரசு எடுத்து அதை நன் முறைப்படுத்தும் முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. மட்டுமல்லாமல் இதற்கு முன்னாலே டிக்கட் கொடுப்பதற்காக இன்வாய்ஸ் கொடுப்பதற்காகவும் ஆங்காங்கே எழுத்தர் பொறுப்பேற்றிருந்தார்கள். இப்போது அதை மாற்றி காங்கே இருக்கின்ற கிளை மேலாளர்களே நேரடியாக அ செய்ய வேண்டும். அவர்களுடைய கையொப்பம் அதிலே இரு வேண்டும் என்ற ஏற்பாட்டை நாங்கள் செய்திருக்கிறோம்.

அதே போன்று, இந்த டிக்கெட் புத்தகம் அடிப்பதிலே இதற்கு முன்னாலே சாதாரண பேப்பரைப் பயன்படுத்திக் கொண்டு இருந்தார்கள். இப்போது நாங்கள் அதை மா ங்கிகளிலே இருக்கின்ற செக் புத்தகத்தை அடிக்கின்ற பே பரைப் பயன்படுத்தி வருகிறோம். அதே போன்று இன்வாய்ஸை பொறுத்த வரையில் இதற்கு முன்னாலே சிறிய இன்வாய்ஸை பயன்படுத்தினார்கள். தேவையானால் அதற்கு அடி இன்வாய்ஸ் கூடுதலாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதிலே தவறு ஏற்படுகின்ற காரணத்தால் அதை மாற்றி ஒரே இன்வாய்ஸாக பெரிய அளவில் மாற்றி இருக்கிறோம்.

அதே போன்று, பரிசோதகர்களைப் பொறுத்தவரையில் 3 பிரிவுகளாகப் பிரித்து, கிளை மேலாளர், நிர்வாக இயக்குநர் இவர்களுக்குக் கீழே பல பிரிவுகளாகப் பிரித்து அவர்கள் நினைத்த நேரத்தில் திடீரென்று போய் பரிசோதனை செய்யும் நடவடிக்கை எல்லாம் எடுக்கப்பட்டு, இது மேலும் நடக்காமல் இருப்பதற்கு அத்தனை நடவடிக்கைகளையும் மிக வேகமாக எடுத்துக் கொண் டிருக்கிறோம்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நடத்துனர்களைத்தான் கைது செய்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவ்வளவு பெரிய தவறு நடந்துள்ளதற்கு வெறும் நடத்துனர்கள் மட்டும் காரணமாக இருந்திருப்பார்கள் என்பது நம்பக்கூடியதாக இல்லை. பின்னணியில் அதிகாரிகள் யாராவது ஈடுபட்டு இருப்பதாக அமைச்சருக்குத் தகவல் கிடைத்து இருக்கிறதா? அப்படிக் கிடைத்து இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது பற்றி காவல் துறையால் புலன் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதிலே நான்கு நடத்துனர்கள் ஈடுபட்டதாகத் தெரியவந்ததால் அவர்களைக் கைது செய்து இருக்கிறார்கள். அதைப் போலவே, அச்சகத்தில் உள்ள நான்கு பேர் சம்பந்தப்பட்டு இருப்பதாகத் தெரிய வந்ததால், அந்த 4 பேரும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். காவல் துறை யார் யார் மீது சந்தேகம் இருக்கிறது என்று சொல்கிறார்களோ, அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளதா அல்லது மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் இட்படிப்பட்ட தவறான நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளது குறித்து அரசுக்குத் தகவல் தெரிய வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு புகார் எங்களுக்கு வந்தவுடனேயே [illegible]கள் அத்தனைப் போக்குவரத்துக் கழகங்களிலும் அதற்காகத் [illegible]யாக ஆட்களை அனுப்பி, அது போன்ற காரியங்கள் ஏதாவது [illegible]பெறுகின்றனவா என்று தீர பரிசீலித்துப் பார்த்து இருக்[illegible]றோம். அது மட்டுமல்ல, இப்போது அரசாங்கம் [illegible]து இருக்கும் நடவடிக்கை ஆங்காங்கு பேருந்துகளில் பயணம் செய்து விட்டு கீழே இறங்கும்போது அந்தப் பயணிகளிடத்தில் இருந்து சீட்டுகளை வாங்கிக் கொண்டு வந்து, அதை உண்மையான டிக்கட்டுகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அதிலே தவறு இருக்கிறதா என்றும் பார்த்து, வருகிறோம். இதற்காகவும் ஆட்

களை நாம் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் நியமித்து இருக்கிறோம். வேறு எந்தப் போக்குவரத்துக் கழகங்களிலும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும், அதையே நம்பிக் கொண்டு இருக்காமல், அதைத் தீவிரமாகப் பார்த்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்.**

* **வினா எண். 158—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கதர், பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, ஆம். கதர் நெசவாளர்கள் 500 பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அரசு ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் எத்தனை கதர் நெசவாளர்கள் இருக்கின்றனர் ? எத்தனை பேருக்கு எந்தெந்த இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ளன ? அதனுடைய மதிப்பீடு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் கீழ் ஏறக்குறைய 6,000 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலோருக்கு சொந்தத்தில் வீடு இல்லை என்கிற நிலைமையில் உள்ளனர். முதற்கட்டமாக அவர்களில் 500 கதர் நெசவாளர்களுக்கு வீட்டைக் கட்டிக் கொள்வதற்காக அரசு மானியமாக தலா ஆயிரம் ரூபாய் என்கிற அடிப்படையில் 1981–82 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டது. நெசவாளர்கள் வீட்டில் தறி இயங்கவும், வசிக்கவும் போதுமானதாக இருக்கும் வகையில் குறைந்த பட்சம் 300 சதுர அடி இடம் தேவை என்கிற அடிப்படையில் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அத்தகைய வீடுகள் கட்டப்படுகின்றன. அப்படிப்பட்ட வீடுகள் கட்ட ரூ. 7,500 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. இதற்காக வங்கியிலிருந்து ரூ. 5,000 கடனாகவும், நெசவாளர்களின் பங்கு ரூ. 1,500 என்கிற அடிப்படையிலும், அரசு மானியமாக ரூ. 1,000 கொடுக்கப்படுகிறது. இந்தத்

திட்டத்தின் மூலம் தஞ்சை மண்டலத்தில் கும்பகோணம், விழுப்புரம், புதுக்கோட்டை, கரூர் ஆகிய இடங்களிலும், திருப்பூர் மண்டலத்தில் ஈரோடு, திருப்பூர், நாமக்கல் போன்ற இடங்களிலும், மதுரை மண்டலத்தில் நாகர்கோயில், திண்டுக்கல், ஸ்ரீவில்லிப்புத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களிலும் வீடுகள கட்ட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் சுதேசி இயக்கத்தை பரப்புவதற்காக அனைவரும் கதர் கட்ட வேண்டும், நூல் நூற்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கதர் தத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் இருப்பதால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, காந்திய வழியில் கதர் நெசவாளர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்ற எண்ணத்தினால்தான் தமிழக அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்திருக்கிறது. மத்திய அரசு இதற்கு உதவ முன்வந்தால் நிச்சயமாக இந்த அரசு அதை ஆதரிக்கும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது திண்டுக்கல் பகுதியில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வீடுகளை சின்னாளம்பட்டியில் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, சின்னாளம்பட்டியில் கதர் நெசவாளர்கள் இருந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவரவர்களே, கும்பகோணத்தில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அறிவித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கின்ற பட்டு நெசவாளர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, கும்பகோணத்தில் இருக்கிற நெசவாளர்கள் அனைவரும் கதர் பட்டு நெசவாளர்களாக இருப்பதால் அங்கே 100 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. துரை ராமசாமி : தலைவரவர்களே, கதர் உற்பத்தியில் முதலாவதாக இருக்கிற வெள்ளக்கோவில் பகுதியிலும் வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, 1981–82-ல் 500 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது. படிப்படியாக எங்கெங்கு கதர் நெசவாளர்கள் இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயதான ஆதரவற்றவர்களுக்கு வாழ்வளித்துவரும் தனியார் நிறுவனம்.

*வினா எண். 159— திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயதான ஆதரவற்றவர்கட்கு சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்று வாழ்வளித்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அது மாதிரியான அமைப்பு [illegible] துறையில் ஏற்படுத்தும் எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : (அ) ஆம். சென்னை மாநகரில், பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-3-ல் ''நண்பர்கள் விரும்பும் கழகம்'' (Friend in Need Society ) என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் 60 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலோ இந்திய ஆண், பெண் இருபாலரையும் பேணி பாதுகாத்துவருகிறது.

(ஆ) இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : தரைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை வழங்குகிறதா ? எந்த ஆண்டு முதல் வழங்கப்படுகிறது ? தற்போது இந்த நிறுவனத்தில் எத்தனை பேர்கள் தங்கியிருக்கிறார்கள். ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்திற்கு 1910 முதல் ஒவ்வொரு வருஷமும் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் 15,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனத்தில் 24 ஆண்களும், 15 பெண்களும் இருந்து வருகிறார்கள்.

[1982 பிப்ரவரி 11

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தில் இருக்கிற வயோதிகர்கள் ஓய்வு நேரத்தில் ஏதாவது சிறு தொழில் செய்கிறார்களா? அப்படி இல்லை என்றால் சிறு தொழில் செய்ய அவர்களுக்கு அரசு ஏதாவது வசதி செய்து கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அவர்கள் சிறுதொழில் செய்வதற்கான குறிப்பு என்னிடம் இல்லை; விசாரித்து கூறுகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, இப்போது அந்த நிறுவனத்தில் 24 ஆண்களும் 15 பெண்களும் இருப்பதாகத் தெரிவித்தார்கள். திக்கற்ற நிலையிலே வயோதிகர்கள் நாட்டிலே நிறையபேர் இருக்கிற காரணத்தால் அந்த இடங்களை அதிகரிக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு முதியோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டிருப்பதால் ஆதரவற்ற முதியோருக்கு என்று ஒரு இல்லத்தை ஆரம்பிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இந்த தனியார் நிறுவனத்திற்கு மத்திய சமூகநல போர்டிலிருந்து உதவி பெற இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நாங்கள் எழுதி கேட்கிறோம். மத்திய அரசு அதற்கு நிதி வழங்குவதாக இருந்தால் அதைப்பெற்று, காரியங்கள் செய்ய நாங்கள் முன்வருவோம்.

செம்பியமாதேவியிலுள்ள கோழிப்பண்ணை.

*வினா எண். 160— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டைத் தொகுதி செம்பியமாதேவி ஊரில் உள்ள கோழிப்பண்ணை மூடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மீண்டும் செயல்பட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையினரால், இப்பண்ணையின் கட்டிடங்களை மீண்டும் பயன்படுத்த எவ்வித சாத்தியக்கூறும் இல்லை. எனவே, இதர துறையினர் எவரேனும் கோரினால், இக்கட்டிடங்களை வாடகைக்கோ, அல்லது குத்தகைக்கோ விடப்படும்.

திரு. எஸ். சிவராமன் : தலைவரவர்களே, இந்தக் கோழிப் பண்ணைகள் தமிழ்நாட்டில் எத்தனை மூடப்பட்டுள்ளன ? மூடப்படுவதற்கான காரணம் என்ன ? மூடப்பட்டவைகளை மீண்டும் திறக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 3213, வேளாண்மை நாள். 18—1—1969 என்பதன்படி செம்பியமாதேவியிலுள்ள கோழிப்பண்ணைதான் மூடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பண்ணை மட்டும்தான் மூடப்பட்டது.

திரு. எஸ். சிவராமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 39 யூனிட்டுகள் அமைக்கப்பட்டதாகவும், 1969-ஆம் ஆண்டு அவை அத்தனையும் மூடப்பட்டதாகவும் தெரிகிறது. அவை லாபகரமான முறையிலே நடைபெறவில்லை என்பதால் மூடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கோழிப் பண்ணை என்பது விவசாயிகள் குடிசைத் தொழில் செய்கின்ற வகையிலே ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ஆகவே அந்தத் திட்டத்தை மீண்டும் ஏற்படுத்தி சிறிய குடிசைத் தொழில் செய்கின்ற வகையிலே கோழிப்பண்ணையை அரசு அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவசன் : தலைவரவர்களே, இப்போது \உள்ள கட்டிடங்கள் நல்லமுறையில்தான் காணப்படுகின்றது. ஆனால் அங்குள்ள கதவுகள், ஜன்னல்கள் போன்றவை எல்லாம் காணவில்லை என்றும் மின் இணைப்பு சாதனங்கள் இல்லை என்றும் சொல்லப்படுகின்ற நிலைமை இருப்பதால் மறுபடியும் அதைச் சீர்திருத்தவேண்டும் என்றால் 37,800 ரூபாய் செலவாகும். மேலும் அதனை டாப்கோ நிறுவனம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினோம். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். அடுத்து அங்கே கால்நடை டிஸ்பென்சரி வைக்கலாம் என்று சொல்லப்பட்டபோது அதற்கும் 37,800

ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டதால் அவ்வளவு செலவு செய்து அதை மீண்டும் செயல்படுத்துவது மிகவும் கடினமான தாக இருக்கும் என்பதால் தான் அது மூடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[(குறிப்பு)—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. அறிவிப்புகள்.

**(அ) மதுரை காமராஜ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர். : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நான்கு உறுப்பினர்களின் பதவிக் காலம் 30—10—1981-ல் முடிவடைந்து விட்டதால் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ளது :—

(1) திரு. சி. த. சிதம்பரம்

(2) திரு. ஏ. சந்திரசேகரன்

(3) திரு. வி. பாலகிருஷ்ணன்

(4) திரு. ஆர். டி. கோபாலன்

முறைப்படி நியமனம் செய்யப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட நால்வரும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று [illegible]

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) தஞ்சாவூர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் எக்ஸ்ரே பிலிம் தட்டுப்பாடு.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, 'தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே பிலிம் மற்றும் கெமிக்கல்ஸ் தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள் படும் இன்னல் குறித்து' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

எக்ஸ்ரே பிலிம்ஸ் மற்றும் கெமிகல்ஸ் தட்டுப்பாடு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சில மருத்துவமனைகளிலிருந்தது உண்மையே நாகப்பட்டிணத்திலுள்ள அரசு தலைமையிட மருத்துவ மனையில் 11—11—1981 முதல் 14—12—1981 வரை எக்ஸ்ரே பிலிம்கள் இல்லாமல் இருந்தன. அரசு மருத்துவமனைகளுக்கு வேண்டிய எக்ஸ்ரே பிலிம்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் மத்திய அரசு பொது நிறுவனத்திடமிருந்து பெறப்பட வேண்டியதால் மேற்படி நிறுவனத்தை பல முறை கேட்டுக் கொண்டும் கூட எக்ஸ்ரே பிலிம்கள் 14—12—1981 அன்றுதான் பெறப்பட்டன. அதுபோல ரசாயன பொருள்கள் 8—1—1982 அன்று பெறப்படடன. தற்போது நாகப்பட்டிணம், கும்பகோணம், மன்னார்குடி, மாயவரம், பட்டுக்கோட்டை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, சீர்காழி, நன்னிலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே பிலிம்களும் ரசாயன பொருள்களும் இருப்பதாக மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநர் அறிவித்து இருக்கிறார்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு வேண்டிய எக்ஸ்ரே பிலிம்களுக்கான தேவைப்பட்டியல் 21—1—1982அன்று இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்திடம் அனுப்பப் பட்டிருப்பதாகவும் இன்னும் பிலிம்கள் பெறப்படவில்லையென்று தெரிகிறது. ஆனால் தற்போது கீழ்க்கண்ட எக்ஸ்ரே பிலிம்கள் கையிருப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

15''×12''—500

14''×11''—600

[டாக்டர். எச். வி. ஹண்டே] [1982 பிப்ரவரி 11

இதுவரை இம்மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிலிம் எடுப்பது இல்லை என்ற புகார் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை என்று மேற்படி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் கூறுகிறார்.

அரசு இராஜா மிராசுதார் மருத்துவ மனையைப் பொறுத்த மட்டில் கீழ்க்கண்ட அளவுகள் கொண்ட எக்ஸ்ரே பிலிம்கள் பெறுவதற்கான தேவைப்பட்டியல் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்திற்கு டிசம்பர் 1981-ல் அனுப்பப்பட்டது.

15''×12''

14''×11''

12''×10''

12''×6''

10''×8''

8½×''6½''

6½''×4¾''

இவைகளில் பெரிய அளவுகள் உள்ள பிலிம்கள் பெறப்பட்டுள்ளதாயும் ஆக இப்பொழுது பெரிய எக்ஸ்ரே பிலிம்கள் இருப்பு கீழ்க்கண்டவாறு உள்ளன.

15''×12''—1,400

14''×11''—1,500

சிறிய அளவு பிலிம்கள் இன்னமும் பெறப்படவில்லை என்று தெரிகிறது. இதைத் தவிர, தஞ்சாவூரில் சில நேரங்களில் மின்சாரம் தடை காரணமாக காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை மின்சார சப்ளை இல்லாமல் இருந்த சமயங்களில் மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே எடுப்பது தடைபடுகிறது என்றும் மேற்படி மருத்துவ மனை முதல்வர் கூறுகிறார். அதனால் அவசர சிகிச்சைக்கு மட்டும் எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படுவதாக மருத்துவக் கல்லூரி முதல்வர் கூறியுள்ளார்.

**திரு. செ. இராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற தலைமையிட மருத்துவ மனைகளிலும் அரசு மருத்துவ மனைகளிலும் எக்ஸ்ரே பிலிம் இல்லை என்று சொல்லி விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு மட்டும்தான் எக்ஸ்ரே எடுக்கப்படும் என்றும் மற்றவர்கள் வெளியிலே தனியார்களிடம் சென்று எக்ஸ்ரே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏழை எளியவர்களால் எப்படி தனியார்களிடம் சென்று எக்ஸ்ரே எடுக்க முடியும். ஆகவே உடனடியாக அரசு மருத்துவ மனைகளுக்கு தேவையான அளவுக்கு எக்ஸ்ரே பிலிம் வழங்கப்படுமா? அப்படிப்பட்ட தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1982 பிப்ரவரி 11]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே தட்டுப்பாட்டிற்கான காரணங்கள் பற்றிய விவர அறிக்கையிலே விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதும் தொடர்ந்து அந்த நிலைமை நீடிக்கின்றதா என்றால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. முன்பு அந்த நெருக்கடி இருந்தபோது சில விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரமான முறையிலே சிகிச்சை அளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு மட்டும் எக்ஸ்ரே எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மற்ற எலக்டிவ் சர்ஜரி என்பதைப் பொறுத்தவரையிலே 4, 5 நாட்களுக்கு பிறகு கூட எக்ஸ்ரே எடுத்து சிகிச்சை அளிக்க முடியும் என்பதால் தான், அந்த நெருக்கடி இருந்த காலத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. ஆனால் இப்போது அந்தப் பிரச்சினை இல்லை. ஒருவேளை எந்த மருத்துவ மனையிலேயாவது எக்ஸ்ரே பிலிம் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் தலைமையிடத்திலே சொல்லிவிட்டு வேறு ஏதாவது மருத்துவ மனைகளிலே உபரியாக எக்ஸ்ரே பிலிம் இருக்குமேயானால் அவர்கள் அந்த இடத்திலே இருந்து பெற்றுக் கொள்கின்ற வகையிலே ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம்.

**திரு. செ. இராமலிங்கம்:** தலைவரவர்களே, மின்சாரத் தட்டுப்பாடு என்பது நம்முடைய மாநிலத்திலே நிரந்தரமான ஒன்றாக இப்போது ஆகிவிட்டது. ஆகவே, ஜெனரேட்டர் மூலமாக எக்ஸ்ரே எடுக்கின்ற வகையிலே ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஜெனரேட்டர் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, படிப்படியாக எல்லா ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பிட்டல்களிலேயும் நாங்கள் ஜெனரேட்டர் வைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறோம். தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குக் கூட கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்.

**(ஆ) சென்னை மாநகரில் தொத்து நோய்கள் தடுப்பு நடவடிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் க. பாலன் எல். இளையபெருமாள், அ. செல்வராசன், இரா. தாமரைக் கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. பாலன் : தலைவரவர்களே, "சென்னை மாநகரில் அம்மை போன்ற தொத்து நோய்கள் பரவுவதைத் தடுக்க உடனடி தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை மாநகரில் 1979, 1980, 1981-ம் ஆண்டுகளில் சின்னம்மை நோயால் பாதிக்கப்பட்டு தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை மாதவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாதம். | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|
| ஜனவரி .. .. .. | 148 | 256 | 272 |
| பிப்ரவரி .. .. | 169 | 567 | 470 |
| மார்ச் .. .. | 171 | 649 | 701 |
| ஏப்ரல் .. .. .. | 125 | 321 | 341 |
| மே .. .. .. | 35 | 58 | 90 |
| ஜூன் .. .. | 35 | 18 | 41 |
| ஜூலை .. .. | 29 | 33 | 48 |
| ஆகஸ்டு .. .. | 38 | 58 | 81 |
| செப்டம்பர் .. .. | 35 | 70 | 52 |
| அக்டோபர் .. .. | 32 | 33 | 46 |
| நவம்பர் .. .. | 33 | 61 | 56 |
| டிசம்பர் .. .. | 101 | 123 | 325 |
| மொத்தம் | 951 | 2,247 | 2,522 |

இதிலிருந்து இந்நோயினால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரை (அதாவது மழைக்காலம் முடிந்து கோடைக்காலம் ஆரம்பமாகும் வரை) அதிகமாயுள்ளது தெரியவரும். இந்நோய் நச்சுக்கிருமிகளால் மக்களிடையே காற்று மூலம் மேலும் விஷக்கிருமிகள் நோயாளியின் இருமல், மற்றும் சளி மூலமாகவும் பரவுகிறது. பெரியம்மை நோய் வராமல் தடுக்க அம்மைப்பால் வைப்பது போல் சின்னம்மை வராமல் தடுக்க எந்த தடுப்பு





மருந்தும் கிடையாது. தனிநபர் சுகாதாரத்தையும் ,சுற்றுப்புற சுகாதாரத்தையும் பேணிக்காத்தால் இந்நோய் அதிக அளவில் பரவாமல் தடுக்க உதவும். மேலும், பாதிக்கப்பட்டவர்களை தொற்று நோய் மருத்துவமனையில் சேர்ப்பதும், அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்துவதிலும், பொது சுகாதாரத்தை துறையினருக்கு நோய் கண்டுள்ளதைப்பற்றி தெரிவித்தலும் இந்நோய் பரவாமல் தடுக்க உதவும். பல்லாண்டு காலமாக நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்களால் பொது மக்களிடமிருந்து இந்த வகையில் போதுமான ஒத்துழைப்பு கிடைக்க வாய்ப்பில்லை என்பது அனைவரும் அறிந்ததே. ஆயினும், இவ்வாண்டு 2,500க்கும் மேற்பட்டோர் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து மாநகராட்சி இந்நோய் பரவாமல் தடுக்க தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என கூறிக்கொள்கிறேன்.

திரு. கு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையில் வைக்கப்பட்டிருக்கக் கூடிய அறிக்கையில், ஜனவரி மாதம் 1981 ஆம் ஆண்டு 272 பேர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், பிப்ரவரி மாதம் 1981ல் 470 என்றும், மார்ச் மாதம் 701 என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரியில் எவ்வளவு பேர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணமே திடீர் என்று சென்னையிலே இப்படிப்பட்ட அம்மை நோயினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுதான். அத்தோடு இந்த நோய் வருவதற்கான காரணம் சுற்றுப்புறம் சுகாதாரமாக இல்லாத காரணத்தால்தான் என்றும், அதனால்தான் நோய் பரவுவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரம் அத்தகைய சுகாதார கேடு உள்ளதாக இருப்பதினால்தான் இப்படி திடீர் என்று மக்கள் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சென்னை மாநகரத்தில் எங்கெங்கே மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்து அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக ஒரு ஸ்பெஷல் ஸ்குவாடு போட்டு, மருத்துவம் செய்யவும், சுற்றுப் புற சுகாதாரத்தை பேணிக் காக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்ட கேள்வி சின்ன அம்மை எனப்படும் சிக்கன்-பாக்ஸ் பற்றியது. ஸ்மால் பாக்ஸ் எனப்படும் பெரிய அம்மை தற்போது அறவே இல்லை. ஒழிக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்த சிக்கன்-பாக்ஸ் அம்மை சாதாரணமாக ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களிலேதான்

அதிகமாக வரும். இந்த நேரத்திலேதான் உலகத்திலே பல பகுதிகளிலும் இந்நோய் காணப்படும். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே கூட இம்மாதங்களில் ஜாஸ்தியாக காணப்படுவதை அறியலாம். ஸ்டேச்சுடரியாக சட்டரீதியாக, எங்கே சிக்கன்-பாக்ஸ் எனப்படும் இந்நோய் காணப்பட்டாலும் அந்நோயாளிகளை உடனடியாக, மருத்துவமனைகளுக்கு சென்று சேர்த்து மருத்துவ வசதிகளைப் பெறவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். இப்போது அவ்வாறே மருத்துவ வசதிகளைப் பெறுவதால், ஓரளவிற்கு பரவாயில்லை. முன்பெல்லாம் என்ன செய்வார்கள் என்றால், வீட்டிலேயே வைத்துக் கொள்வார்கள். அப்படி வீட்டிலேயே வைத்துக் கொள்ளும் நோயாளிகளின் தொகையை குறைத்து, மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியிருக்கிறோம்.

இன்னும் சில இடங்களில் அப்படிப்பட்ட பழைய பழக்கங்கள் இருக்கிறது. என்றாலும், உடனடியாக அந்நோயைக் கண்டறிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி ஒரு ஸ்குவாடு ஏற்படுத்தி, ஆங்காங்கே அனுப்பி சிகிச்சை அளிக்கலாம். இதனால் நல்ல பலன் ஏற்படும். இது மிகவும் நல்ல யோசனை என்று வரவேற்கிறேன். ஆகவே இதற்காக மாநகராட்சியும், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் இலாகாவும் சேர்ந்து திட்டமிட்டு பணியாற்றும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, மாநகராட்சியும், சுகாதார இலாகாவும் சேர்ந்து இந்தப் பணியைச் செய்யும் என்று சொன்னார்கள். மாநகராட்சியிலே இது சம்பந்தமாக போடப்பட வேண்டிய அதிகாரிகளின் பதவி கடந்த 3 ஆண்டுகளாக காலியாகவே இருப்பதாக சொல்கிறார்களே, அது அமைச்சருக்குத் தெரியுமா? அந்தப் பதவி நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டும் டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸிலிருந்து இன்னும் அதற்கான உத்தரவை அனுப்பாமல் இருக்கிறார்களே அது ஏன்? இந்தச் சின்ன அம்மை எனப்படும் நோய் பரவுவதற்குக் காரணமே சுற்றுப்புற சுகாதார சீர்கேடு என்று சொல்கிறார்கள். அத்தோடு தண்ணீர் சப்ளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே, தண்ணீர் கொடுப்பதிலும், துப்புரவு பணிகளிலும், கழிவு நீரகற்று பணிகளிலும் ஒரு கோ-ஆர்டினேஷனும் கோவாப்பிரரேஷனும் தேவை. இவைகளைத் தனித் தனி இலாக்காக்களாக பிரித்து விடப்பட்டதினால்தான் அம்மை மட்டுமல்ல இன்னும் பல தொற்று நோய்கள் வரக் காரணமாக இருக்கிறது ஆகவே இவற்றை ஒழுங்குபடுத்த ஒரு ஸ்குவாடு போட்டு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக [illegible] என்று அறிய விரும்புகிறேன்.

*1982 பிப்ரவரி 11]*

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடிய யோசனை 3 இலாக்காக்களுக்கும் இடையே கோவாப்பி ரேஷன் வேண்டும் என்கிறார். அந்த முறையை நாங்கள் கடைப் பிடிக்கிறோம். சென்ற 6 மாதங்களுக்குள்ளாக ஒரு 5, 6 முறை கள் செயலகத்திலே, மாநகராட்சியின் ஸ்பெஷல் ஆபீசர், செக்ரட்டரி—ஹெல்த் ; செக்ரட்டரி—ஆர்.டி.எல்.ஏ. போன்ற மூன்று துறை அதிகாரிகளும் அவ்வப்போது கலந்து பேசி கோ-ஆர்டிநேஷனை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் இப்போதிருக்கும் சென்னை பிரச்சனை என்ன வென்றால், சிக்கன் பாக்ஸ் எனப்படும் இந்த சின்ன அம்மை நோய்க்கு தடுப்பு முறைகள் கிடையாது என்பதே. ஸ்மால்-பாக்ஸுக்கு உண்டு. அந்த முறைகள் கடைபிடிக்கப்பட்டு, இப் பொழுது அந்நோய் முழுவதும் நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சிக்கன்-பாக்ஸைப் பொருத்தவரையில் சுற்றுப்புற சுகா தாரத்தை முறையாக பேணிக் காப்பதே முக்கியம். அதற்காகத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு சு. பாலன் அவர்கள் சொன்ன மாதிரியாக ஒரு ஸ்குவாடு ஏற்படுத்தி சுகாதார நடைமுறை களையும், அந்நோயாளிகள் வீட்டிலேயே மருத்துவ வசதி களைப் பெறவும் நடவடிக்கைகளை எடுக்க முடியும். அதை எடுக்க இவ்வரசு தயாராக இருக்கிறது. மற்றபடி 3 இலாக்காக் களையும் ஒரே இலாக்காவாக மாற்றுவது என்பது கொள்கை பிரச்சனை, அதை கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே சொல்ல முடியாது.

(முற்பகல் 10-20)

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தச் சின்ன அம்மை நோய் வந்தால் அதைத் தடுப்பதற்கும், வந்தால் அதைப் போக்குவதற்கும் மருந்தே கிடையாது என்று சொல்கிறார்கள். ஆனால் கிராமங்களில் அம்மை நோய் வந்தால் வேப்பிலை மிக முக்கிய மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. வேப்பிலை, மாட்டுக் கோமியம் ஆன்டிசெப்டிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, கிராமப்புறங்களில் பயன்படுத்தக்கூடிய மருந்துகளை நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளிலும் வேப்பிலையை அரைத்து மாத்திரைகளாக விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** சிக்கன்பாக்ஸைப் போக்குவதற்கு சிகிச்சை இல்லை என்று நான் சொல்லவில்லை. அதைத் தடுப்பதற்கான முறையில் ஊசி கிடையாது என்றுதான் சொன்னேன். சிக்கன்-பாக்ஸ் வந்தவுடன் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படுவார்களேயானால் அல்லது மருத்துவ மனையில் சேர்க்கப்படுவார்களேயானால் உடனடியாக செய்ய எல்லா சிகிச்சைகளும் இருக்கின்றன. அதனால் ஏற்படக்கூடிய காம்பிளிகேஷன்ஸைத் தடுத்துவிட முடியும். டிஸ்ட்ரிக்ட் ஹெல்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 பிப்ரவரி 11

க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் தாலுகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் அதற்கான பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அதைப் பயன்படுத்தினால் மார்ட்டா லிட்டி ஸீரோவாக, எந்த விதமான உயிர்ச் சேதமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னை பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவிற்கு நான் டிஸ் அப்ருவல் தந்திருக்கிறேன். இதில் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் விநோதமானவையாக இருக்கின்றன.

''To give: oppor unities for all persons

என்று தந்திருக்கிறார்கள். அதாவது ஸீலிங் வைத்திருக்கிற காரணத்தினால் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது என்று இந்த அரசு சொல்லுகிறது. முதலில் மதுரையில் ஸீலிங் வைத்திருக்கிறோம். ஆறு ஆண்டுகள் என்பது ஸீலிங். மூன்றாண்டுகள் அதற்கு மேல் மூன்றாண்டுகள், அதற்குப் பிறகு செனட்டில் மெம்பராக இருக்க முடியாது. ஸீலிங் வைத்து எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கிறோம். என்று சொல்கிறார்கள். அதற்காக இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிறேன் ஆனால் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மதுரை மாநகராட்சியில் மேயரது காலத்தை............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவை விவாதிக்கும் போது அதைப்பற்றி விரிவாகப் பேசுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : மேயரின் பதவிக் காலம் ஒரு ஆண்டு என்பது இரண்டு ஆண்டுகளாக ஆக்கப்பட்டது. அனைத்துக் கட்சிகளுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், கிஸ்தவராக இருந்தாலும் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற வகையில் ஒரு ஆண்டு என்று..........



1982 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேயருக்கும் செனட்டுக்கும் என்ன சம்பந்தம்!

திரு. ப. பொன்னுரங்கம் : இதை அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி—:''1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக அண்ணாமலைப் பல்கலைக் கழக, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (ஆ) தமிழ் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (இ) பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக (திருத்தம் தனிவிதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : : தலைவர் அவர்களே 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (திருத்தம் தனி விதித் துறைகள்) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவை முன் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஈ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1982.**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி.**

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் பேச வாய்ப்புத் தந்து, போதுமான நேரமில்லாத காரணத்தால் இன்று தொடர்வதற்கு அனுமதி தந்த உங்களுக்கும், அதை ஏற்றுக் கொண்ட மாமன்ற உறுப்பினர்களுக்கும் முதலில் நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்னென்ன செய்துள்ளோம் என்பதை ஆளுநர் உரையிலே விரிவாக எடுத்துக் கூற முடியாவிட்டாலும், இங்கே கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு பதில் சொல்லுகின்ற முறையில் அதற்கு விளக்கம் தருவதற்கு எனக்கு வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், அதை நான் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை. என்று கருதுகிறேன். நாங்கள் தேர்தலில் மக்களைச் சந்தித்தபோது சில கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து, எதை எதை நாங்கள்





செய்ய வேண்டுமென்று சொன்னோமோ, அவைகளை எப்படி நடைமுறைப் படுத்துகிறோம் என்பதை எடுத்துக் கூற வேண்டிய மிகப் பெரிய கடமை எனக்கிருக்கிறது. என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இங்கே நான் தொடர்ந்து பேசத் தொடங்குகிற போது, சில மாமன்ற உறுப்பினர்களுடைய சந்தேகங்களுக்கு பதில் சொல்லுகின்ற வாய்ப்பில் மேலும் சில தகவல்களை தருகின்ற நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிய அந்த உணர்வோடு, இன்று நான் ஒன்றைத் தொடரலாம் என்று கருதுகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்பதைப் பற்றி நாங்கள் அதிகமாக விளம்பரம் செய்கிறோம் என்றோ அல்லது அதைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறோம் என்றோ யாருக்காவது தவறான செய்தி வந்திருக்குமேயானால் அது உண்மைக்கு மாறானது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் கிராமப் பொருளாதாரம், கிராம மேம்பாடு, கிராமத்திற்கென புதிய அவசர நிலைமைகளில் செய்ய வேண்டிய காரியம் என்ற வகையில் மூன்றாகப் பிரித்து, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டு, அதை நடைமுறைப் படுத்த முயற்சிக்கிறோம். நிதி நிலை எந்த அளவிற்கு ஒத்துழைக்கிறதோ, அந்த அளவிற்கு அவைகளை செயலாக்க நாங்கள் முனைகிறோம். அந்த வகையில் நாங்கள் 1980—81 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் முதற் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த தன்னிறைவுத் திட்டத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்ற மாமன்ற உறுப்பினர்களானாலும் சரி, வெளியே உள்ள மக்களானாலும் சரி, அவர்களுக்கெல்லாம் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சார்பாக இந்தப் புள்ளி விவரங்களைப் படிக்கும்போது, மாமன்ற உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுமையாக கடைபிடிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 10-30)

குடிநீர் வசதித் திட்டங்கள் 2609 : செலவழிக்கப்பட்ட தொகை 18·03 லட்சம், இணைப்புச் சாலைகள் 6587· 6 கிலோ மீட்டர் செலவழிக்கப்பட்ட தொகை 1236.32 லட்சம். சிறு பாலங்கள் எண்ணிக்கை 3043, செலவழிக்கப்பட்ட தொகை 350.[illegible]

லட்சம். ஆதிதிராவிடர்களுக்கான இடுகாட்டுக்குச் செல்லும் காலை வசதி ஏற்படுத்தித் தர அமைக்கப்பட்ட சாலைகள் 927.21 கிலோ மீட்டர் செலவழிக்கப்பட்ட தொகை 79.87 லட்சம். சிறு பாலங்கள் என்றவை கயில் மேலும் பல இடங்களில் கட்ட வேண்டுமென்று கணக்கிட்டு 1123 நிறைவேற்றப்பட்டன. 68.20 லட்சம் மேற்கொண்டு செலவழிக்கப்பட்டது. ஊரக மருந்தகங்கள் 82 செலவு தொகை 47.42 லட்சம் தாய் சேய் நல நிலையங்கள் 237 செலவழிக்கப்பட்ட தொகை 118.87 லட்சம் பள்ளிக் கட்டிடங்கள் 947 செலவழிக்கப்பட்ட தொகை 486.48 லட்சம்.

அதே போல் இரண்டாவது கட்டமாக எடுத்துக் கொள்ளபட்ட 150 வட்டாரங்களில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின விவரம் வருமாறு—

குடிநீர் வசதிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 5.922 முடிக்கப்பட்ட எண்ணிக்கை2,891. 31-12-1981 வரை செலவழிக்கப்பட்ட தொகைக்கு 1,342.96 லட்சம் இணைப்புச் சாலைகள் 11,534.95 கிலோ மீட்டர் குறியீடு : முடிக்கப்பட்டவை 4,994.99 செலவழிக்கப்பட்ட தொகை 1,672·41 லட்சம். சிறு பாலங்கள் குறியீடு 11,256 ; முடிக்கப்பட்டவை 5,916; செலவழிக்கப்பட்ட தொகை 1,053'98 லட்சம். ஆதித் திராவிடர் மயானத்திற்குச் செல்லும் சாலை 742'60 கிலோ மீட்டர் குறியீடு ; முடிக்கப்பட்டவை 505·10 கிலோ மீட்டர் ; செலவழிக்கப்பட்ட தொகை 31·05 லட்சம். சிறு பாசன வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் 933 ; முடிக்கப்பட்டவை 386 ; செலவழிக்கப்பட்ட தொகை 32'68 லட்சம். ஊரக மருந்தகங்கள் எண்ணிக்கை 170 ; முடிக்கப்பட்டவை 6 ; செலவழிக்கப்பட்ட தொகை 113·48 லட்சம். தாய் சேய் நல விடுதிகள் எண்ணிக்கை 492 ; முடிக்கப்பட்டவை 33 ; செலவழிக்கப்பட்ட தொகை 75·94 லட்சம். பள்ளிக் கட்டிடங்கள் எண்ணிக்கை 1,774 ; முடிக்கப்பட்டவை 355 ; செலவழிக்கப்பட்ட தொகை 677·32 லட்சம்.

இதையெல்லாம் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் காரணம் இந்த அரசு எந்தெந்த வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறதோ அதைப் பயன்படுத்தி நாங்கள் தேர்தல் காலத்தில் சொன்னவைகளை நடத்தி முடிப்பதற்கு எப்படியும் எங்கள் கடமைகளைச் செய்கிறோம் என்பது மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றாலும் இங்கே அவற்றை வெளியிடுவதன் மூலம் மாமன்றத்தின் வெளியிலே உள்ளவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் குறிப்பிடுகிறேன்.

1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நாங்கள் தேர்தல் அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தோம். கிராமப் புறங்களில் பெண்களுக்குத் தனிக் [illegible]பிடங்கள் இல்லை; அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று [illegible]தில் அது பற்றி நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

1980—81-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 69 முதல் [illegible]னிறைவுத் திட்ட ஒன்றியங்களிலே ஒவ்வொரு ஒன்றியத்[illegible] 2 வீதம் 138 கழிப்பிடங்கள், ஒவ்வொன்றிற்கும் 6,330 [illegible] வீதம் 8·74 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள[illegible]பதையும் இரண்டாவது சட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றி[illegible]களில் நிறைவேற்றுவது குறித்து ஆராய்கையில் தமிழகத்[illegible] உள்ள 16 ஆயிரம் கிராமங்களில் ஆடவர்—பெண்டிர் இரு [illegible]கும் ஒவ்வொரு கழிப்பிடத்திற்கு 14,100 ரூபாய் வீதம் கழிப்[illegible] அமைக்கும் திட்டத்தை 22·56 கோடி ரூபாய் செலவில் [illegible] ஆண்டுகளிலே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இவைகளை நான் குறிப்பிடும்பொழுது இன்னொன்றை நினை[illegible] படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சிவராமன், சி[illegible] சேலம், காங்கிரஸ்-ஐ கட்சியைச் சேர்ந்த நண்பர் அவர்[illegible] அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தை எப்படி நடைமுறை[illegible] படுத்துகிறார்கள் என்பதைப் பற்றிமாவட்ட ஆட்சித்தலைவருக்[illegible] (தென் ஆற்காடு மாவட்டம்) நன்றியறிதலைத் தெரி[illegible]விக்கும் வகையில் எழுதிய ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.—

''அன்புடையீர், வணக்கம். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் மாநில அரசுமூலமாக வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொண்டு எனது தொகுதியில் பெரும்பான்மை பகுதிகளில் ஏரி மராமத்து பணிகள் பொதுப்பணித் துறையினால் செய்யப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்டதால் கடந்த பருவ மழையின்போது செய்யப்பட்ட பணிகளால் ஏரியில் பின்னால் தண்ணீர் தேங்க சௌகரியமாக இருந்தது. அந்த அளவிற்குத் தங்கள் பெரு முயற்சியாலும் பொதுப் பணித் துறையின் செயற் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர்களால் பணிகள் உடனுக்குடன் பார்வையிடப்பட்டு எந்த ஊழல் புகார்களுமின்றி நடைபெற்றமைக்கு தொகுதி மக்களின் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இதை நான் சொல்வதற்குக் காரணம் தன்னிறைவுத் திட்டத்தில் நாங்கள் அக்கறைக் கொண்டு அங்கங்கே சில தவறுகள் நடந்திருந்தாலும்கூட கட்சிபேதம் பாராமல் எந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொ[illegible] என்பதில் தேவையை முன்னிட்டு மட்டுடுமே நாங்கள் அக்க[illegible] காட்டி அதிகாரிகள் அந்தப் பணிகளைச் செய்தார்கள் என்பதற்கு நான் எடுத்துக்காட்டாக இதை [illegible] பயன்படுத்திக் கொண்டேன்.

[திரு. எம். ஜி. இராமசந்திரன்] [1982 பிப்ரவரி 11

வறட்சி நிவாரணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. எஸ். இராசு, எம். எல். ஏ. அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் பேசும் பொழுது வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நாம் 137 கோடி கேட்டு மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 13 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையைச் சமாளிக்க பல்வேறு நிவாரணப் பணிகளை எடுத்துக் கொள்ள 137 கோடி ரூபாய் அளவுக்கு விரிவான குறிப்புகள் தயாரித்து அவை மத்திய அரசுக்கு அனுப்பி மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்பட்டது உண்மை. மத்திய அரசு ஆய்வுக் குழுவை 1981 ஏப்ரல் 1,2,3,4 தேதிகளில் மாநிலத்திற்கு அனுப்பி வைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் 46 கோடியே 90 லட்சம் ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்தது.

ஜூலை மாதத்திலே கீழ்க்கண்ட இனங்கள் மீது மத்திய அரசாங்கத்திற்கு நிர்ணயித்த உச்சவரம்பை உயர்த்தும்படி கேட்டுக் கொண்டோம். அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பு குழாய்க் கிணறு அமைப்பதற்கு 8 கோடி. கூடுதலாகக் கோரப்பட்ட தொகை 3·62. நகராட்சி பேரூராட்சி குடிநீர்த்திட்டங்களுக்கு 2 கோடி கூடுதலாகக் கோரப்பட்டது. 40 லட்சம், சென்னை மாநகராட்சிக் குடிநீர்த் திட்டங்கள், அதற்காகக் கொடுக்கப்பட்ட தொகை 87 லட்சம்.

(முற்பகல் 10—40)

நீர்பாசன வேலைக்கு கொடுக்கப்பட்ட அளவு 15 கோடி. கூடுதல் கோரப்பட்ட தொகை 1.50 கோடி.

இதுபோன்று சாலைப் பணிகள், அணைகள், குட்டைகள் மேம்பாடு இவைகளுக்கெல்லாம் அவ்வப்பொழுது அவர்கள் குறிப்பாகக் கொடுத்து, ஏறத்தாழ 8 கோடியே 92 இலட்சம் கூடுதல் கோரப்பட்டிருந்தது. அவர்கள் ஓரளவுக்குக் கொடுக்க முன் வந்தார்கள். அவர்கள் கொடுத்த தொகை போக தமிழக அரசு அதிகமாகச் செலவழித்திருக்கிறது என்றாலும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் இதே வறட்சிப் பணிகள் நடைபெறச் செய்ய வேண்டிய அவசியத்தில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபொழுது மைய அரசிலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்பதையும், இப்பொழுது எவ்வளவு ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்ப்போமானால் அவர்கள் இப்பொழுது உண்மை நிலையை நன்கு உணர்ந்து, மேலும் அதிக அளவிற்கு உதவித் தொகையைக் கொடுக்க முன்வந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அவர்கள் திரும்பப் பெறுகின்ற பணமாக இருந்தால்கூட அவர்கள் அதைக் கொடுக்க முன் வந்தார்கள் என்பது, செலவழிக்க அனுமதிக்கப்பட்டோம் என்பது ஒருவகையில் உதவியாக இருந்தது என்பதை நாம் ஏற்றுக் கொண்டு பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரக் குடிநீர்ப் பணிகளைப் பொறுத்தவரையில் மட்டும் புதிதாக ரூபாய் 87 இலட்சத்தைக் குடிநீர்ப் பணிகள் என்ற தலைப்பில் அதிகமாகச் சேர்த்துக் கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்த நேரத்தில் வேறு பிரச்சினையை இணைத்து நான் பேசலாம் என்று கருதுகிறேன்.

சென்னை குடிநீரைப் பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. வீராணம் திட்டத்தைத் திரும்ப எடுத்துக் கொள்வது; தொடர்ந்து நடத்துவது என்பதைப் பற்றியும், அதை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கலாம் என்பதை இங்கே பேராசிரியர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மற்ற மாமன்ற உறுப்பினர்களும் இங்கே வெவ்வேறு முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் இராமசாமி என்பவரைக் கொண்டு அதைப்பற்றி விசாரித்தபொழுது அது இலாபம் தரத்தக்கதாக இல்லை என்பதை அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும், அப்படி அதை ஏற்றுக்கொண்டால் கூட நம்முடைய தேவை பூர்த்தி அடையுமா என்றால் அது அடையாது என்ற வகையில் அவைகள் இருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பதவிக்கு வருவதற்கு முன் 1980 தேர்தலின் பொழுது கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதைப்பற்றி நாங்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிறோம். கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வரலாம் என்று நாங்கள் விரும்புவதை அதிலே குறிப்பிட்டபொழுது, அதற்கு அடிப்படைக் காரணம் நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் ஆந்திராவின் முதலமைச்சராக இருந்த சென்னா ரெட்டி அவர்கள் மிக அக்கறை காட்டியது மட்டுமல்ல அதை எந்த அளவிற்கு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அதைச் செயலாக்கலாம் என்ற எண்ணத்தையும் அவர்கள் சொல்லி, மற்ற மாநிலங்கள் தர வேண்டிய 10 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் தரத் தயங்கினாலும்கூட, எங்களைப் பொறுத்தவரையில் தர வேண்டிய 5 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதையொட்டி அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு நடந்து

கொண்டிருந்தது. ஆனால் தாமதம் ஆவதைப் பார்த்து இனி இது பயன்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் வேறு. மற்றவர்கள் குழாயில்தான் கொண்டு போக வேண்டும் என்றும் வேறு சிலர் ஓப்பன் சேனல் மூலம் கொண்டு போகலாம் என்றும் இப்படி அவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடு கொண்டு அதன விளைவாகக் கிருஷ்ணா நதித் தண்ணீர் வருவது என்பது இயலாத காரியமாகிவிடுமோ என்று இருந்த நேரத்தில், சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்களோ, அதே கருத்தை மீண்டும் இப்பொழுது சொல்லி அதை நடத்துவது உதவிகரமாக இருக்கும் என்று குறிப்பிட்டதோடு அண்மையில் சில சாதகமான எண்ணங்களையும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தவொரு குறிப்பை நான் இங்கே எடுத்துக்காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வீராணம் திட்டத்தில் 2.5 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். கால்வாயின் நீளம் 192 கிலோ மீட்டர். ஆகக் கூடிய செலவு ரூ. 150 கோடி. கட்டளைக் கால்வாய்த் திட்டம் 15 டி.எம்.சி. 451 கிலோ மீட்டர் நீளம். ஆகக்கூடிய செலவு ரூ. 203 கோடி. கிருஷ்ணா நதி திட்டம் 15 டி.எம்.சி. 260 கிலோ மீட்டர் நீளம். ஆகக்கூடிய செலவு ரூ. 188 கோடி. இந்த ரூ. 188 கோடி, 260 கிலோ மீட்டருக்கு எப்படி வருகிறது என்ற கேள்வி இருக்கும். அதற்கு ஒன்றைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் ஒரு யோசனையைச் சொல்லி இருக்கின்றார்கள். அவர்களுக்கும் பாசன வசதிக்காகத் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதிலே நாங்கள் ஸ்ரீசைலம் வரை கொண்டு வருகிறோம். அதாவது, ஆந்திரப் பிரதேசத்திலேயே இருக்கிறது. அதை குந்தேறு என்கிற நதியின் வழியாகக் கொண்டு வந்து, அதை சோமசீலம் அணைக்கட்டிலே சேர்த்து, அதுவரையிலே நாங்கள் கொண்டு வந்து விடுகிறோம்—அவர்களுக்குத் தேவை.—ஆகவே, அதை விடுத்து, மேற்கொண்டு அங்கேயிருந்து நீங்கள் செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கொண்டு வருவதற்கு, நீங்கள் பாதித் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது. அதிலே, குறிப்பிட்ட இடத்திலிருந்து, 163·9 கிலோமீட்டர்தான் போட வேண்டியிருக்கிறது. ஆகவே, மீதிப் பகுதிக்கு, அந்த இடங்களுக்குப் பாதி பாதி, அல்லது, இன்னும் கொஞ்சம் அதிகம் அல்லது குறைவு என்ற விதத்திலே பேசி முடித்தோமானால் நாங்களும் செலவு செய்கிறோம், நீங்களும் செலவு செய்யுங்கள் என்கிற வகையில் தான் அந்த ரூ. 188 கோடி என்ற நிலை வந்திருக்கிறது. இதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசும் உதவியாக இருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் எடுத்து பரிசீலிப்பது மட்டுமல்லாமல், அதை ஏற்றுக் கொண்டு, உடனடியாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு

என்ன, என்ன செய்ய வேண்டுமோ அதை மைய அரசோடு தொடர்புகொண்டு, ஆந்திர அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

இங்கே இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த 5 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வந்தால் மட்டும் போதாது. சென்னையிலே இதற்காகக் குழாய் அமைப்பது என்பது மிகப் பெரிய செலவு ஆகக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டும். ஏறத்தாழ, 50 ஆண்டுகளுக்கு முன்னால், போட்ட குழாய்களை எல்லாம் இப்பொழுது திரும்பவும் மாற்ற வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கின்றோம். அதற்குத் தனியாகப் பணம் தேவைப்படும். அந்தப் பணியை எடுத்துச் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் கட்டளைக் கால்வாயா, கிருஷ்ணா நதியா, எதை நாங்கள் எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்ற சந்தேகம் யாருக்காவது இருக்குமானால் கிருஷ்ணா நதி நீரை விரைவில் கொண்டு வருவோம். அதில் அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதால், முதலில், 5 டி.எம்.சி. கிடைக்கிறது. அதற்குப் பிறகு, மகாராஷ்டிரா மாநிலம், கர்நாடகா மாநிலம், 5 டி.எம்.சி., 5 டி.எம்.சி. என்று 10 டி.எம்.சி. தர இருக்கிறது. அது முன்னால் ஏற்றுக்கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில், நம்பிக்கையின் அடிப்படையில் அது தொடர்கிறது என்ற காரணத்தால், உடனடியாக சென்னை மாநகராட்சிக்கு, மாநகரத்தினுடைய மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகின்றோம்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீரை சென்னை நகரத்தின் குடிநீருக்காக இங்கே கொண்டு வருகிற திட்டத்தை இந்த அரசு விரைவிலே அமுலாக்கும் என்று முதலமைச்சர் அறிவித்ததற்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே ஆந்திராவிலிருந்து, தமிழக எல்லை வரை இந்தக் கால்வாய் விவசாயக் கால்வாயாக வருகிறது. அங்கே இருந்து தமிழகத்திற்கு வருகிறபொழுது குடிநீருக்கு மட்டும் கொண்டு வராமல் செங்கல்பட்டு மாவட்டத்திலே 5½ இலட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கக்கூடிய ஒரு கால்வாயாகவும் அது இருக்க வேண்டும். அதற்கு நாம் வற்புறுத்தவேண்டும். அதற்கு மேற்கொண்டு 55 டி.எம்.சி. தண்ணீர் தேவை. ஆகவே, அந்த 15 டி.எம்.சி.யை 70 டி.எம்.சி. யாகப் பெறுவதற்கு நம்முடைய முதலமைச்சர் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்திலே 5½ இலட்சம் ஏக்கருக்குப் பசன வசதி அளிக்க முடியும் என்பதையும் முதலமைச்சருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1982 பிப்ரவரி 11

[முற்பகல் 10–50].

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுமாறன் அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு நன்றி. ஆனால் '' ஆசைக்கோர் அளவில்லை, அகிலம் எல்லாம் கட்டி ஆளினும் '' என்பது போல, ஒரு 5 டி.எம்.சி. கிடைக்குமா உடனே என்று காத்திருக்கும்போது 70 டி.எம்.சி.. வேண்டும் என்று கேட்கும்போது அது நம்மை எங்கோ கொண்டு போய் உட்கார வைத்து, இந்தப் பலனையும் தாமதமாக்கி, திட்டமே இல்லாமல் போய்விடும் நிலை இருக்கக் கூடாது. முன்னே அவர்களிடம் தகராறு. நீங்கள் திறந்த கால் வாயில் கொண்டு போகிறீர்கள் ; நீங்கள் பயன்படுத்திக் கொள் வீர்கள், தமிழகத்திற்கு அனுப்புவதாகச் சொல்லி ; ஆகவே நாங்கள் அனுமதிக்க மாட்டோம். குழாயிலேதான் கொண்டு போகவேண்டும் என்று வற்புறுத்தியதனால்தான், இவ்வளவு நாட்கள் தாமதம் ஆயிற்று. அவர்கள் பாசனத்திற்கு எடுத்து கொள்ளுகிறார்கள் அதுவும் நல்ல எண்ணத்தில் அவர்கள் சேமித்து வைக்கின்ற சோமசிலா என்னும் இடத்தில் இருந்து திருப்பி நமக்குத் தருகிறார்கள், என்றால் அது நல்ல எண்ணத்தின் அடிப்படை என்பதை நாம் தயவு செய்து மறந்து விடக் கூடாது. அதை விட, வேறு வகையில் ஏதாவது முறை கையாளப்பட வேண்டுமானால் அதைப் பற்றி நாம் அனைத்துக் கட்சியினரும் உட்கார்ந்து பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்பதில் இதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டளைக் கால்வாய் என்று சொல்லும்போது காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றியும் இதோடு இணைத்துப் பேசுவது பிரச்சினையோடு பிரச்சினையாக முடியும் என்று நான் கருதுகிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி அண்மைக்காலத்தில், கர்நாடக அரசினுடைய முதலமைச்சர் என்னுடைய நெருங்கிய நண்பராக நானும் அவரும் கூறிக்கொள்ள கூடியவர்கள் — 2 முதலமைச்சர்களாக இருந்தாலும், அவர்களுடைய பசியைப் பற்றி அவரவர்கள்தான் பேச வேண்டும் : தங்களைப் பற்றிதான் பேசிக்கொள்வார்கள் என்று சொல்வது போல, அவர்கள் அவர்களைப் பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள், நாம் நம்மைப் பற்றி பேசிக்கொள்ளுகிறோம் என்பதைப் போல ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் இப்போது இருக்கின்ற தண்ணீர் எல்லாம் தங்களுக்கே போதவில்லை என்று கூட சொல்லி இருக்கிறார்கள் என்ற நிலையில்தான் பேசுவோம் என்கிற நிலை தொடர்ந்து இருந்தது. நாங்கள் கர்நாடகத்தில சென்று பேசியபோது, அந்தக் கூட்டத்தை முடித்துவிட்டதாகச் சொல்லாமல் அது தொடருகிறது, என்கிற நிலையிலே இருக்கட்டும் என்ற எண்ணத்தோடு தான் விரும்பினோம் ஆனால் அதற்கு பிறகு அவருடைய பேச்சுக்கள் அவர்கள் மேகதாது திட்டத்திலே அக்கறைகாட்டு



வதை எண்ணுகிறபோது, அது நிச்சயமாக தமிழகத்திற்கு மாபெரும் ஆபத்தை மட்டுமல்ல, அநியாயத்தை செய்வதாக இருக்கிறது என்பதை உணருகிற காரணத்தால், இனி மைய அரசுடன்தான் நாம் தொடர்பு கொண்டு இதற்கு ஒரு வழிகாண வேண்டும் என்ற நிலைமையிலே இருக்கிறோமே தவிர, எவ்வளவு தான் அண்டை மாநிலங்களோடு நல்ல உறவு வேண்டும் என்று எண்ணினாலும், இந்தப் பிரச்சினையில் கர்நாடகத்தோடு தனியாகப் பேசி எந்தப் பயனும் பெறமுடியாது. என்கிற அந்த அளவுக்கு எங்களுடைய உள்ளம் ஏமாற்றத்தை அடைந்து விட்டது என்று சொல்லுகிற அளவுக்கு, அந்தக் கர்நாடக மாநில முதல் அமைச்சர் மற்றும் அவருடைய அமைச்சர்கள் பேச்சுக்களும், செயலும் ஆளாக்கிவிட்டது என்று இந்த மன்றத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே இனி மைய அரசுதான் ஒரு முடிவைச் சொல்வது என்ற நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவே, நாம் பேச வேண்டியது மைய அரசோடுதானே தவிர, கர்நாடக அரசோடு பேசுவதில் பயன் இல்லை என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமக்குத் தேவையெல்லாம், நாம் விரும்புவதெல்லாம், ஒன்றே ஒன்றைத்தான். இப்போது நாம் பயன்படுத்துகின்ற அளவு. எந்த அளவுக்கு உற்பத்தி செய்கின்றோமோ அந்த நிலங்களுக்கு உற்பத்திக்குப் பாதகம் இல்லாத நிலையில் நமக்குத் தண்ணீர் கிடைக்க உத்திரவாதம் வேண்டும். அதுதான் நாங்கள் பேசிய கொள்கை. அந்தக் கொள்கையில் இருந்து தமிழக அரசு பின் வாங்கவில்லை. அதைத்தான் இதுவரையில் வற்புறுத்தி வந்திருக்கிறது என்பதை திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் கவனித்துப் பார்க்கும் போது, கட்டளைக் கால்வாயிலிருந்து வருகின்ற தண்ணீரை, அந்தப் பகுதியில் மழை பெய்து அந்த நதியிலே கலந்து கடலிலே போய்க் கலந்து வீணாகிப்போகும் அந்தத் தண்ணீரை புதுக் கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் திருப்பி, அந்தப் பகுதிகளில் அதைப் பயன்படுத்தலாம் என்கிற திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதை ஆய்வு செய்யச்சொல்லியிருக்கிறோம். இதிலே யாரும் தவறு சொல்ல முடியாது. குற்றம் காண முடியாது. நாம் வேறு விதமாக காவிரி ஆற்று நீரை மேட்டூரில் இருந்தோ அல்லது வேறு வகையிலோ எடுத்தால், தவறாக எடுத்துக்கொண்டோம் என்றும் நம்மீது பழி சுமத்த முடியாது. ஆகவே, இயற்கை தமிழகத்திற்குத் தருகின்ற அந்த மழைத் தண்ணீரை நாம் அந்தப் பகுதிகளுக்குத் திருப்பி, அந்தப் பகுதிவாழ் மக்களுக்குப் பயன்படும் வகையில், அங்குள்ள ஏரி, குளம் ஆகியவற்றை நிரப்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி, இப்போது நாம் நிறைவேற்றுகின்ற தன்னிறைவுத் திட்

[திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

டத்தின் மூலம் ஆங்காங்கு ஏரி குளம் ஆழமாக்கப்பட்டு, சீர
மைக்கப்பட்டுள்ளதால் அவற்றில் அதனைத் தேக்கி வைத்து,
பயன்படுத்தலாம் என்பது எங்களுடைய எண்ணமாகும். இந்
தத் திட்டமும் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நேரத்தில் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கு
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகள் சொல்
வதை நீங்கள் கேட்கமாட்டீர்கள் அல்லது அதிகாரிகள் சொல்
வதைக் கேளுங்கள்' என்று இரண்டு விதத்திலும் வெவ்வேறு
பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றபோது சொல்லப்பட்டது.
சில சமயங்களில் அதிகாரிகள் சொன்னார்கள். கட்டளை
கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய திட்டம் என்று
சொல்லி, அதற்காக வரைபடம் எல்லாம் போட்டு, ஒழுங்காக
அதற்காக கணக்கு எல்லாம்போட்டு, எல்லாவற்றையும் செய்த
பிறகு, நான் எப்படி இந்தத் திட்டம் நிறைவேற்றுவதற்கு உத்தர
வாதம் தர முடியும் என்று இவைகளையெல்லாம் பரிசீலித்துப்
பார்த்த அதிகாரிகள் சொன்னால் என்ன செய்வது? எங்கே
எவ்வளவு ஆழம் இருக்கிறது, எவ்வளவு நீளம் இருக்கிறது,
எங்கே சரிசமமாகச் செய்யவேண்டும் என்று லட்சக்கணக்கான
ரூபாய் செலவு செய்து ஆய்வுப் பணிகளை நடத்தியவர்கள்,
இதற்கு நான் எப்படி உத்தரவாதம் தர முடியும் என்றுகேட்டு,
இந்தத் திட்டத்தை செயல்படுத்தவேண்டும் என்று நீங்கள்
சொன்னால் நான் உழைக்கிறேன் என்று இப்படிப்பட்ட நிலை
மையில் பேசினால் நான் என்ன செய்வது? இப்படிப்பட்ட முறை
யில் எல்லா அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்று நான் சொல்ல
மாட்டேன். ஒரு சில அதிகாரிகள் உண்மையாக இருக்கிற காரணத்
தால் தான் சில திட்டங்களை நிறைவேற்ற முடிகிறது. அதற்கு
எதிர்க்கட்சிகளின் பாராட்டுக்களையும் பெறமுடிகிறது, அந்த
நிலையில் அவைகள் அமைகின்றன என்றும் நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே
மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் காவிரி நீர்
பற்றிக் கருத்தைச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். அவ
ருக்கு இப்போது நான் அளித்த பதில் திருப்திகரமாக இருக்கும்
என்று நம்புகிறேன். அதைப்போலவே, மற்ற நண்பர்களும் பேசி
னார்கள், சிலர் பேசும்போது குறிப்பிட்டார்கள் மாண்புமிகு
உறுப்பினர் சிவசாமி என்று கருதுகிறேன்—அவர்கள் பேசும்
போது இராமநாதபுரம் மாவட்டத்தையும், தஞ்சை மாவட்
டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்லி,
அப்படிப் பிரிக்கப்படுகின்றபோது அந்த மாவட்டத்தின் தலை
நகரம் அந்த மாவட்டத்திலேயே இருக்கவேண்டும் என்கிற
கருத்தையும் சொன்னார்கள். மதுரை இரண்டு மாவட்டத்
திற்கு தலைநகராக இருப்பதால் தான் இதைச் சொன்
னார்கள் என்று கருதுகிறேன். அந்த அச்சம் எழுந்தது



982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்று கருதுகிறேன். நான் ஒன்றைத் தெரிவிக்கவிரும்புகிறேன்.
அப்படி அந்த மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது, அனைத்துக்
கட்சித் தலைவர்கள் கொண்ட குழு அமைத்து, அவர்கள் ஆங்
காங்கு மக்களைச் சந்தித்து, மக்கள் கருத்தை அறிந்து, அவர்
களின் நல்ல யோசனையை ஏற்று, அவர்கள் கொடுக்கின்ற அந்த
நல்ல கருத்துக்களின் அடிப்படையில் இவைகள் பிரிக்கப்படும் என்
பதையும், அப்படிப் பிரிக்கப்பட்ட பிறகு அந்த மாவட்டங்களுக்குப்
பெயர் வைக்கின்றபோது, முன்பு நாங்கள் என்ன சொன்னோமோ
அந்த உறுதி மொழியை நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதையும்
இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்ளும்போது, பல
பேருக்கு கொஞ்சம் நிம்மதியாக இருக்கும், திருப்தியாக இருக்கும்.
மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் போன்றவர்களுக்கு சிரிப்
பும் மகிழ்ச்சியும் ஏற்படும். அதைப்போல் இன்னொரு பெரிய தலை
வரின் பெயர் வைக்கலாம் என்கிறபோது மற்றவர்களுக்கும் மகிழ்ச்
சியும் சந்தோஷமும் ஏற்படும். இராமநாதபுரம் மாவட்டம்
என்று அதையும் வைத்தால் அதுவும் சிலருக்கு மகிழ்ச்சியைத்
தரலாம். இதையெல்லாம் நாம் உணர்ந்து அந்த பொறுப்பு
களை எல்லோரும் பகிர்ந்துகொண்டு நிறைவேற்றுவோம் என்ற
எண்ணத்தில் இவைகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த
வேலையை நிறைவேற்ற, அந்தப் பொறுப்பை நிறைவேற்ற
இங்கே தலைவர்களாக இருக்கும் அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த
வர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்றுதான் பணிவோடு
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

நாட்டில் அமைதி இல்லை என்றும், நாட்டிலே அவ்வப்
போது அவசரச் சட்டங்கள் போடப்படுகின்றன என்றும் அவ
சரச் சட்டத்தை நம்பியே ஒரு ஆட்சி இருந்து விடக்கூடாது
என்றும் இங்கே மாமன்ற உறுப்பினவர்கள் குறிப்பிட்டுச் சொன்
னார்கள். நான் அவர்கள் சொன்னதை மறந்துவிட வில்லை ;
மதிக்கிறேன். அதைப்பற்றி சிந்திக்கவும் வேண்டும் என்ற அக்
கறை இருக்கிறது. அலட்சியப்படுத்தவில்லை. ஆனால் அந்தத்
தேவை அவ்வப்போது ஏன் ஏற்படுகிறது என்று தயவுசெய்து
சிந்திக்கவும் அப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்
பட்டால் கூட அவை அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதை
கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு அவசரச் சட்டம் இப்போது கையில் இருக்கிறது அல்லது
நிறைவேற்றப்பட்ட சட்டம் இருக்கிறது என்று வைத்துக்கொள்
ளுங்கள். அதைப் பயன்படுத்துகிறோமா, எப்படி பயன்படுத்து
கிறோம் என்று எண்ணிப் பார்க்கும்போதுதான் ஒரு அரசு ஒரு
சட்டத்தைக் கொண்டு வந்தது எந்த நோக்கத்தில்? யாருக்காகக்
கொண்டுவரப்பட்டது? எப்படிப்பட்டவர்களுக்காகக் கொண்டு
வரப்பட்டது? எத்தகைய செயல்களைத் தடை செய்வதற்காகக்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

கொண்டுவரப்பட்டது? எத்தகைய வன்முறை எண்ணங்கள் தோன்றக்கூடாது? அதற்கு இடம் தரக்கூடாது என்பதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதை எல்லாம் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். சிந்தித்துப் பார்க்காமல் நீங்கள் கருத்து சொல்லியிருக்கமாட்டீர்கள். ஆனால் சிந்தித்துப் பார்க்கும் போது பொதுத் தன்மையில் இருந்து சிந்தித்தோமேயானால் சிலவற்றை நியாயம் என்று சொல்வதற்கு நமது உள்ளம் இடம் கொடுக்கும்.

இந்த 'பந்த்' 19-ந் தேதி நடைபெற்றது. அதைப்பற்றி எல்லோருக்கும் கோபம் இருக்கும். சில சமயங்களில் ஆத்திரம் கூட வரும். துப்பாக்கிச் சூடு, துப்பாக்கித்தானா, இது துப்பாக்கித் துறைத்தலைவர்தானா என்று கேட்பதுபோல பல கேள்விகள் கேட்கக்கூடும். ஆனால் துப்பாக்கியை வைத்துக்கொண்டு சுடுவதற்காகத் தான் இருக்கிறோம் என்ற நிலைமை இருக்குமானால், அப்படி காவல் துறையினர் செயல்பட்டால், காவல் துறையினருக்கு ஆபத்து வரவேண்டிய அவசியமே இருக்காது.

இந்த மாமன்றத்திலே ஒரு உறுப்பினர் குறிப்பிடும்போது சொன்னதாக எனக்கு நினைவு இருக்கிறது. எதற்கெடுத்தாலும் சுட்டுத்தள்ளுகிறார்கள். கேட்டால் நக்சலைட் என்று சொல்கிறார்கள் என்றார். அதிலும் அடிக்கடி இந்த மாமன்றத்திலே பேசியவர்களில் பலர் தர்மபுரி பற்றி அதிகமாகப் பேசினார்கள். அதற்குப் பெயர் தர்மபுரிதான். ஆனால் எதிர் பாராத விதமாக அங்கே அதர்மம் அதிகமாக நடைபெறுகிற நிலைமை ஏற்பட்டதால்தான் அதைத் தடுப்பதற்கு என்ன செய்வது என்கிற நிலைமை அரசுக்கு கேள்விக் குறியாக வந்து, இதைத்தவிர வேறு வழியில்லையோ என்ற நிலைமை உருவாக்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். நான் விவாதத்திற்காக அல்ல, அனுபவப் பூர்வமாகச் சொல்கிறேன்,

இப்போது சில இடங்களில் சில காரியங்கள் நடைபெறுகின்றன. எங்கே துன்பப்படுகின்றவர்கள், வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களோ அங்கே சென்று தங்களுடைய கட்சியின் கொள்கையை புகுத்தி, அவர்களை ஊக்குவித்து சில வன்முறைகளில் சென்றும்கூட முயற்சி செய்தால்தான் உரிமை கிடைக்கும் என்ற வகையில் சில எண்ணங்களை வைத்து, அவர்களை ஊக்குவிக்கின்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற செய்தியை நான் சொன்னால் அத்தனைக் கட்சிகளும் அதைத்தான் செய்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன். ஒருவேளை அந்தக் கட்சிக்கு அந்தக் கொள்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்தக் கட்சியில் [illegible]

யாராவது ஒருவர் அந்தப் பணியைச் செய்வதாக இருந்தால் அதனால் கட்சிக்கும் கெட்ட பெயர், நாட்டுக்கும் தொல்லை, உயிருக்கும் ஆபத்து வருகிறது.

நான் எதிர்பாராத முறையில், ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேலூருக்குச் சென்றுவிட்டு திரும்பி வண்டியிலே வந்தபோது, அங்கே இருந்த மக்கள் சொன்ன சொற்கள், அவர்கள் உரத்த குரலில் கூறிய வார்த்தைகள் வாழ்த்துவதாக இல்லை. வெளியே திருவண்ணாமலையிலும் மற்றப் பகுதிகளிலும் எங்கெங்கே நக்சலைட்டுகள் இருந்தார்கள் என்று நாம் படித்திருக்கிறோமோ, நமக்கு செய்தி கிடைத்ததோ அந்த இடங்களில் எல்லாம் பொது மக்கள் நடமாட முடியவில்லை; அந்த மக்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று கூறியதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

நக்ஸலைட்டுகள் என்றால் அவர்கள் சுடப்படத்தான்வேண்டும் என்பது இந்த அரசினுடைய கொள்கை அல்ல. பல நக்ஸலைட்டுகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பலர் விடுதலை கூட செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நக்ஸலைட்டுக்களாக இருந்தாலும் இப்போது எங்கள் கட்சிக்கு வந்துவிட்டார்கள், இப்போது அவர்கள் அந்த நிலைமையிலே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு அதுபற்றி விசாரித்து அறிந்து அவர்களை விடுதலை செய்யவும் நாங்கள் முன்வந்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்கின்றபோது நக்ஸலைட்டுகள் என்றால் சுடப்படத்தான் வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைக் கண்டிப்பாக நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், இது உண்மை.

**திரு. ரா. உமாநாத் :** நக்ஸலைட்டுகள் சுடப்படத்தான் வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நக்ஸலைட்டுகளும், நக்ஸலைட் அல்லாதவர்களும் என்ற ஒரு பெயர்ப்பட்டியலுடன் இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே இரண்டு பக்கத்திற்கு ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அதிலே ஒவ்வொருவரும் எப்படி சட்ட விரோதமாகக் கொல்லப்பட்டார்கள் என்று விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்ற போது அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பெர்சனல் நாலெஜ் இல்லை என்று சொல்கின்றபோது அதைப்பற்றி ஒரு ஜுடிஷியல் என்கொயரி என்ற வகையிலே விசாரணை செய்ய வேண்டாமா? ஆகவே அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நக்ஸலைட்டுகள் என்று சொல்லப்படுகின்றவர்களின் பேச்சுக்கள் எல்லாம் தவறானவை என்று நான் சொல்லவில்லை. நான் குறிப்பிடாததை மாண்புமிகு உறுப்பினர் அவர்

கள் சொன்னார்கள். வன்முறையைத் தூண்டுகின்ற பேச்சுக்களை யார் பேசினாலும் அது தவறுதான் என்பது இந்த அரடைய கொள்கை. ஆனால் ஒரு சில பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் உண்மையாகிவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்பிவிடுவார்களா என்பது எனக்குத் தெரியாது. அப்படியானால் எத்தனையோ பத்திரிகைகளில் வருகின்றவை எல்லாம் உண்மை என்று நாம் நம்பிவிட்டோமானால் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போன்று ஒவ்வொருவரும் கண்ணாடியைப் பார்த்துவிட்டு எங்கேயோ போகவேண்டியது தான். அரசியலை விட்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இப்படிப் பல செய்திகள் வருகின்றன. இண்டியன் எக்ஸ்பிரஸ் என்று சொல்கிறார்கள். சில சமயங்களில் இந்த நிருபர்கள், எழுத்தாளர்களுக்கு எல்லாம் சில நல்ல கல்யாண குணங்கள் இருக்கின்றன, பெருந்தன்மையான குணங்கள் இருக்கின்றன. பாராட்டுவதற்குரிய குணங்கள் இருக்கின்றன. கல்யாண குணங்கள் என்பது திருமணத்தை மட்டும் கூறுகின்ற வார்த்தை அல்ல. (குறுக்கீடு) அப்படிப்பட்டவர்கள் எழுத வேண்டும் என்று விரும்பினால் யாரைப்பற்றியும் எதையும் எழுத முடியும். அதற்கு அளவே இருக்காது. ஆனால் நக்ஸலைட்டுகளைப் பற்றி நான் மீண்டும் சொல்கிறேன். படித்தவர்கள், இளைஞர்கள் திரும்பத் திரும்ப நியாயங்களை எடுத்துச் சொல்லி நியாயம் கிடைக்காத நேரத்தில் விரக்தி மனப்பான்மை என்று சொல்லப்படுகிறதே அது போல் அவர்கள் மனதிலே ஒரு துறவு என்ற நிலைமை ஏற்பட்டு, என்ன உலகம் இது நியாயமே இல்லையே என்று சொல்வது போல் அந்த உணர்வுக்கு ஆளாகின்ற இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஏதாவது ஒரு வழியிலே தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று "இருப்பதும் ஓர் உயிர், அது போவதும் ஓர் முறை, போனால் போகட்டுமே" என்று அண்ணா அவர்கள் சொன்னதை நல்லவற்றிற்கு என்று வைத்துக்கொள்ளாமல் போனால் போகட்டுமே பத்து பேர் சாகட்டுமே என்று எண்ணி அந்த நிலையில் காரியம் செய்கின்றவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள், ஆங்காங்கே தோன்றுவார்கள், அல்லது தோற்றுவிக்கப்படுவார்கள்.

இந்த நிலையில்ஆங்காங்கே உருவாகின்றவர்களைத் தடுக்க வேண்டியது பொறுப்புள்ள மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் மற்றும் அரசினுடைய கடமையாகும் என்பதை நான் நிச்சயமாக எண்ணுகிறேன். வன்முறையில் எந்த நாடும் ஒரு ஒழுங்கான அரசியல் அமைப்பை அமைத்துக்கொள்ள முடியாது என்பதை உள் நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டிலே கூட அதைப்பற்றி புரிந்துகொள்ளக் கூடிய நிகழ்ச்சிகள் அண்மைக் காலங்களில் நடப்பதை நாம் காண்கிறோம். ஆகவே நமது நாட்டுக்கு, நமது மாநிலத்திற்கு எது சரி என்று தோன்றுகிறதோ அவைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்தாகும்.

1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(முற்பகல் 11-10).

அந்த வகையில் எந்தவிதமான பொதுத்தன்மைக்கும் தேவையானது என்று கருதப்பட்டால் கூட, அனுபவப்பட்டவர்களால், தியாகம் செய்தவர்களால், கொள்கைக்காக வாழ்பவர்கள் கூட, அது நியாயமாக உள்ளது தானே என்று எண்ணினாலும் கூட அதில் ஈடுபடுகிற வழி இருக்கிறதே, அந்த வழிமுறைகளைத் தான் நான் சொன்னது, ஒழுங்குப்படுத்த வேண்டிய நிலைமையிலே இருக்கிறது என்று. ஆகவே தான் கூடுமான வரையில் கைது செய்யத்தான் நாம் விரும்புகிறோமே தவிர, கைது செய்து அதன் மேல் நடவடிக்கை எடுக்கத்தான் விரும்புகிறோமே தவிர, வேறு அல்ல.

ஆனால் அது முடியாமல் போய், காவலர்களுக்கு ஆபத்து வருகிறது ; அல்லதுஒன்றிரண்டு உயிர்கள் அங்கே இதனால் போய் விட்டது என்ற நிலை வரும்போது, இனி இப்படிப்பட்டவர்களை விடக் கூடாது என்ற வகையில் சொன்னாலும் சரி, தற்காப்பு என்று சொன்னாலும் சரி, தப்பித்து போய்விடக் கூடாது என்ற நிலைமையிலே அப்படி நடந்ததுஎன்று சொன்னாலும் சரி, காவலர்கள் அந்த நடவடிக்கைகளில் இறங்கி யாருடைய உயிராவது இழக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்குமேயானால், நமக்கு நிச்சயமாக அதில் மகிழ்ச்சி இல்லை. எனக்கு அந்த அனுபவம் உண்டு. நான் இறந்திருந்தால் என் குடும்பம் என்ன ஆகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தவன் நான், படுக்கையில் இருந்தபோது. ஆகவே, இளைய வயதில் உள்ளவர்கள், குடும்பத்தினரை பின்னால் வாழ வைக்கக் கூடிய தகுதி உள்ளவர்கள், இறந்து விட்டால் அந்தக் குடும்பம் என்ன ஆகும் என்பதையும் நாம் சிந்திக்காமல் இல்லை. (குறுக்கீடு).

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே தர்மபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக போலீஸ் எடுத்த அத்து மீறிய நடவடிக்கைகள் நியாயம் தான் என்று வாதிடக் கூடிய முதலமைச்சர் அவர்கள், அந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி விசாரணை பற்றி பாரு நமக்கு நன்றாக தெரிகிறது. நீதி விசாரணைக்கே நீதி விசாரணை வேண்டுமோ என்பது போன்ற ஒரு நிலைமை நாட்டிலே உருவாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீதி விசாரணை என்ன பாடுபடுகிறது, நீதி அசாரணைக்கே நீதி விசாரணை தேவையோ என்ற ஐயம் வருகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார். நீதி விசாரணையின் விளைவாக வந்திருக்கக் கூடிய சில முடிவுகள் அரசாங்கத்திற்கு விரோதமாக வந்திருக்கிறது என்பதினால் தான், அதற்கு மேலும் விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்களா ? (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் துரை முருகன் அவர்களும், கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு நன்றி கூறுவதிலிருந்தே அவர்களுடைய மகிழ்ச்சி எனக்குத் தெரிகிறது. ஆனால் ஒன்றை நான் திருமபத் திரும்பச் சொல்ல வேண்டும். நீதி விசாரணைக்கே நீதி விசாரணை வேண்டுமோ என்ற நிலை நாட்டிலே இருக்கிறது என்றுநான் சொன்னதை வைத்துக் கொண்டு, அரசுக்கு எதிராக ஏதோ தீர்ப்பு வந்துவிட்டது போலவும், அதற்காக நான் கவலைப் படுவதாகவும் யாரும் கற்பனைப் பண்ணவேண்டாம்.

எந்த ஆபத்தும் வரக்கூடிய அளவிற்கோ, எங்கள் மீது பழி சுமத்தக் கூடிய அளவிற்கோ எந்தத் தீர்ப்பும் வரவில்லை என்பது மட்டுமல்ல எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்தக் கமிஷனாக இருந்தாலும் அதை வரவேற்போம் என்பதையும் ; இந்தக் கமிஷனை போட்டவனே நான்தான் என்பதையும் மாண்புமிகு உமாநாத் அவர்கள் அறிவார்கள். அது அவர்கள் அறியாத விஷயம் அல்ல. அதுவும் இந்தக் கமிஷன் நடந்து முடிகிற வரையில் யார் யார் என்ன சாட்சி சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பற்றிக்கூட நான் கவலைப்பட்டவன் அல்ல. அதுவும் உண்மை தெரிந்தவர்களின் உள்ளம் சொல்லும்.

ஆகவே, கமிஷன் என்பது பற்றி நான் சொல்கிறபோது, ரே கமிஷனையும், சதாசிவம் கமிஷனையும் சேர்த்துக் எடுத்துக் கொண்டுபாருங்கள் என்றுதான் சொல்கிறேன். எங்கெங்கேயெல்லாம் அவைகள் அலைக்கழிக்கப்படுகின்றன. எங்கெங்கெல்லாம் அடே வாங்குகிறார்கள், எங்கெங்கெல்லாம் அவைகள் நின்றுக் கொண்டிருக்கின்றன என்பதை கவனித்தேயாக வேண்டும். ஆகவே, நீதி விசாரணைகள் வேண்டும் என்பதிலே நமக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் எத்தகைய காரியங்களுக்கு, அந்தச் செயல்முறைகள் நடந்த பிறகு அவைகளைப் பற்றித் தெரிந்துக் கொள்வதற்காக நீதிவிசாரணை முறையை வைக்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திப்பது அவசியம். அது தவறாகாது. ஆனால் எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை தான் என்றால் அதற்கு முடிவே இருக்காது. இதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஒத்துக் கொள்வதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீதி விசாரணையில் உண்மை வெளிவரும் என்றிருக்குமானால் அது நமக்கு மகிழ்ச்சி தான். இதே பால் கமிஷன் முன்பு ஒரு முறை விசாரணை நடந்து தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்த ஒருவருக்கும் ஒரு வழக்கறிஞருக்கும் ஏற்பட்ட தகராறில் நாம் தான் நியமித்தோம், இந்த அரசு நியமித்தது. மன்றமும் ஏற்றுக் கொண்டது. தீர்ப்பும் வந்தது. அதற்குப் பிறகு வழக்கு மன்றத்தில் என்ன பாடுபட்டது என்பதை நாம் பார்த்தோம். இவைகளை வைத்துக்கொண்டு பார்த்தால் நீதி விசாரணைக் கமிஷன் ஒரு தீர்ப்பைச் சொல்லி விட்டால் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிற நிலைமை நாட்டிலே இல்லை. அப்படி நீதி விசாரணைக்குப் பிறகு ஒரு வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டிய கட்டாயமும் நமக்கு இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். யார் விசாரிப்பது, நியாயமான முறையில் அதைச் செய்ய வேண்டுமென்று வரும்போது அந்தக் காரியங்களை நன்றாகப் புரிந்து அந்த அடிப்படையிலே நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். இப்போது திருமெய்ஞ்ஞானபுரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் இங்கே கூறி இருக்கிறார்கள். அங்கேதான் நான் ஒரு பிரச்னையை அவை முன்னால் வைக்க விரும்புகிறேன்.

குற்றம் செய்கிறார்கள். குற்றம் செய்துவிட்டு அவர்கள் தப்பிவிடுகிறார்கள். அப்படியானால் தப்பிவிடுகிறவர்களைத் தேட வேண்டிய பொறுப்பில் அவர்கள் அங்கே இருக்கிறார்கள், கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்யவேண்டிய பொறுப்பு போலீஸுக்கு இருக்கிறது என்பதில் நம்மில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. அதற்காக அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகள் அராஜகமான நடவடிக்கைகளாக இருக்குமானால் அதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். ஆனால் அப்படிப் போகிறவர்களுக்கு ஆயத்தி, அவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி அவர்கள் உயிரையே பலி வாங்குகிற அளவிற்கு செயலாக, நடவடிக்கையாக மாறுகிறது என்றால் அதிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டாமா ? காவல் துறையினரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மருத்துவமனைகளிலும் இருக்கிறார்கள். அதே போல் சிலர் இறந்து போயிருக்கிறார்கள். அப்படி இறந்தவர்களுக்காக நாம் வருத்தப்படுகிறோம். ஒரு நியாயமான காரணத்திற்காக இறந்தார் என்றால் இயற்கையாக இறந்தார் என்றால் கவலையில்லையென்றாலும் அப்படியும் கூட சில சமயங்களில் இறந்தவர்களுக்காக அவர்கள் தகுதி, நாட்டிற்கு அவர்கள் தேவை என்று வரும்போது நாம் கண்ணீர் விடுகிறோம் கட்சி சார்பற்ற முறையில்.

இது அப்படியல்ல. வாழ வேண்டியவர்கள் இடைக்காலத்தில் சுடப்பட்டு இறக்கிறார்கள் என்றால் எவ்வளவு அநீதி ஏற்படுகிறது. ஆனால் ஒரு பணியை ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு அந்தப் பணியைச் செய்கிற நேரத்தில் அதை நிறைவேற்றுகிற முறை தவறு என்று சொல்லி அவர்களை சயாதானப்படுத்தி அனுப்ப வேண்டுமென்று சொன்னால் உயிர் போகிற நேரத்தில், இனி உயிர் தப்பாது என்ற நிலையேற்படும்போது என்ன செய்ய முடியும்? அமரர் அண்ணா அவர்கள் ஒரு இடத்தில் பேசியதாக எனக்கு நினைவு. புழுவால் எதையும் செய்ய முடியாது. ஆனால் திரும்பத் திரும்ப அதை சித்திரவதை செய்து கொண்டிருந்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றாலும் அது நெளிந்தாவது தன் எதிர்ப்பைத் தன் வேதனையை உடலால் வெளிப்படுத்த முனையும் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது எவ்வளவுதான் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அமைதியாக இருக்க வேண்டும், துப்பாக்கியை எடுத்துச் சுடக் கூடாது என்றாலும் அவர்கள் சாகடிக்கப்படக் கூடிய நிலைமைக்கு வந்த பிறகு அவர்கள் எப்படி தங்களைக் காத்துக் கொள்ளாமல் இருக்க முடியும் ?

**திரு. ரா. உமாநாத் :** அவர்கள் கடமையை நிறைவேற்றுவதற்கு கைது செய்வதற்காகச் சென்ற போது சுற்றி வளைக்கப்பட்டு போலீஸிக்கே ஆபத்து வருகிற போது வேறு வழி என்ன என்ற முறையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், அப்படி அல்ல இது என்பதற்கு நாங்கள் சரியான உதாரணம் கொடுத்தோம். திருமெய்ஞானபுரம் கிராமத்திற்கு முந்திய கிராமங்களில் போலீஸ் நுழைந்த போது அங்கே ஒவ்வொரு வீட்டுக்குள்ளேயும் நுழைந்து அவர்கள் பித்தளைப் பாத்திரங்கள் உட்பட நசுக்கியும் முதல் அமைச்சர் அவர்கள் படத்தை உடைத்தும் அங்கே எந்தவிதமான காயமும் எந்தவிதமான தாக்குதலும் இருந்ததாக யாரும் கூறமுடியாதே. அப்படியானால் அங்கே போய் நாசம் செய்வது என்ற நோக்கத்தில் அந்தக் கிராமத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்திருக்கிற போது அதே நோக்கத்தோடுதான் திருமெய்ஞானபுரம் போய் துப்பாக்கிச் சூடு செய்திருக்கிறார்கள். நான் கூறினேன் பிச்சைக் கட்டளைக் கிராம நிகழ்ச்சி பற்றி.

(முற்பகல் 11-20.)

**மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் எனக்காக பேசியதற்காக நான் முதலில் நன்றி கூறுகிறேன். அவர் பேசியது எனக்கு உதவி செய்வதாக அமைந்திருக்கிறது. எம்.ஜி.ஆர். படம் அங்கே இருந்தது. அதை உடைத்திருக்கிறார்கள் என்றார்கள். இதிலிருந்து என்ன வெளிப்படுகிறது. எங்களுக்கு ஆதரவானவர்கள

1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

தான் அப்படி வைத்துக்கொள்ள முடியும். அவர்கள் நடவடிக்கை எடுக்க; தங்கள் கடமையைச் செய்யப் போகின்ற போது, யார் எதிர்த்தாலும் அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து வெளிப்படுகிறதே தவிர, எம்.ஜி.ஆர். படம் உள்ளே மாட்டியிருந்ததற்காக அவர்கள் கடமையிலே இருந்து தவறு செய்தார்கள் என்று யாரும் கூற மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட இது உதவியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிலரை வீட்டினுள்ளே சென்று தேட வேண்டிய அத்யாவசியம் வரலாம். இப்போதுகூட அண்மையில், வழக்கு மன்றத்தில் இப்படிப்பட்ட பிரச்சினை வந்த நேரத்தில், எப்படிப் போய் கண்டுபிடிப்பது என்பதைப் பற்றியெல்லாம் தீர்ப்பு வரப் போகிறது. அப்படி வந்தபிறகு, அதைப் பற்றிப் பேசலாம் என்றாலும், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தவறு நடந்திருக்குமானால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் நான் உறுதியாகக் கூறுகிறேன். அதை நம்ப வேண்டும்.

நேற்றைக்கு முன்தினம் என்று நான் கருதுகிறேன். சிலர் பேசும்போது சொன்னார்கள். நமது திரு. அம்பிகாபதி என்றுதான் கருதுகிறேன். காவல் துறையிலே இருப்பவர்கள் வன்முறை செய்கிறார்கள் என்று கூறினார்கள். அவர் வரலாற்று அம்பிகாபதியாக இல்லாமல், வன்முறைக் கவிஞரா படுபவராக இருக்கிறார். அவர் இப்போது அவையிலே இல்லை. அப்பேர்பட்ட எண்ணத்தை அவர் வெளியிட்டார்கள். ஏதோ பந்த் நடக்கிறது. வேலை நிறுத்தம் நடக்கிறது அப்போது ஒரு பஸ் போகிறது, கற்களை வீசும்போது இரண்டு கண்ணாடிகள் உடைந்தால் என்ன நஷ்டம். அதற்குக்கூட வேண்டுமா என்று சொன்னார்கள். அந்த வண்டியிலே போகின்ற பொதுமக்களுக்கும் அதனால் துன்பம் ஏற்படுகிறது. அது தொல்லை இல்லையா? ஆபத்து இல்லையா?

சிலர் சொல்வார்கள்—பெரிய யானையை புளியங்கொட்டையால் அடித்து கொன்றுவிட முடியுமா என்று. படாத இடத்தில் பட்டால், உயிர் போகும். தவறி கீழே விழுந்தால், பிறகு எழுந்து 5, 10 அடி நடக்கின்றபோது சிலர் செத்து விடுகிறார்கள். காரணம், மண்டையில் படாத இடத்தில் அடிபடுகிறது. அதைப்போல், அந்தப் பேருந்தில் செல்கின்ற மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத வகையில், அந்தப் பேருந்தைத் தாக்குவது, அந்த ஓட்டுநரைத் தாக்குவது, நடத்துனரைத் தாக்குவது, அதிலிருக்கும் குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிப்பது என்பது எப்படி நியாயமாகும் என்று கருத்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

கிறீர்கள் என்பதை நான் திரு. உமாநாத் அவர்களைக் கேட்கவில்லை; அந்தக் கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இதை நியாயம் என்று சொல்ல முடியுமா?

வேலை நிறுத்தம் செய்கிறவர்களை நாங்கள் வேலை செய்துதான் தீர வேண்டுமென்று சொன்னால், அது வேறு. நாங்கள் வேலை செய்ய மாட்டோம், அது எங்கள் விருப்பம், எண்ணம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நாங்கள் வேலை நிறுத்தம் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, வேலைக்கு செல்லுகின்றவர்களைத் தாக்குவது, தடுப்பது அல்லது பொது மக்கள் பயணிகள் வண்டிகளில் போகும்போது, அந்த பேருந்துகளை தாக்குவது எப்படி நியாயம் என்று சொல்ல முடியும்? இது வேலை நிறுத்தமா? அல்லது வேலைக்குச் செல்லுகிறவர்களை நிறுத்துவதா? எனவே, இது வேலை நிறுத்தமல்ல. வேலை நிறுத்தம் என்றால், வேலைக்குச் செல்ல மாட்டோம் என்று தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, சட்டப்படி எது வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்வோம் என்று சொன்னால், அது ஒரு கட்சியின் முடிவு. அதை ஒத்துக்கொள்ளுகிறேன். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் பேருந்துகளிலே போகின்றவர்கள் என்ன தவறு செய்தார்கள்? அவர்கள் தாங்கள் போகவேண்டிய இடங்களுக்குப் போக வேண்டாமா? அவர்கள் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டாமா? அப்படி பேருந்துகள் போவதைத் தடுப்பதானால், அழிப்பதானால், அதுவும் அவைகள் நாட்டுடைமையாக வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், இவைகள் யாருடைய உடைமையாக இருந்தாலும், திரும்ப வாங்கி, மக்களுக்கு அவைகளைப் பயன் படுத்துவது என்றால் எப்படி முடியும்?

தீப்பந்தம் எறிகிறார்கள். தீ பரவுகிறது. கீழே இறங்க முடியாமல் உள்ளே சிக்கிக் கொண்டு அவதிக்குள்ளாகி விடுகிறார்கள். ஆபத்தில் சிக்கிவிடுகிறார்கள். அந்த மக்களின் நிலைமை என்னாவது? அதைத் தடுக்க வேண்டாமா? அதைத் தடுக்க காவல் துறையினர் சென்றால் அவர்களுக்கும் ஆபத்து என்றால் என்ன ஆகும்? இங்கே சிலர் சொன்னார்கள்— இத்தனை கொலைகள், இத்தனை கொள்ளைகள் இத்தனை திருட்டுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகமாக நடக்கின்றன என்று சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாரும் தவறாக எண்ணக்கூடாது. எந்தப் போராட்டம் நடந்தாலும் அந்தப் போராட்டத்திற்கு முன்னால் காவல் துறையினர் சிலரைக் கைது செய்கிறார்கள், அவ்வாறு காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து



982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வெளியே விடுகிற வரையில் குற்றங்கள் குறைகின்றன என்ற புள்ளி விவரத்தை வைத்திருக்கிறேன். அதை நான் சொல்லும்போது தவறாக எண்ணக்கூடாது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்து போராட்டம் நடத்தும்போதும் குற்றங்கள் குறைந்தன. அதற்குப் பிறகு அவர்கள் விடுதலை செய்யப்படும்போது குற்றங்கள் அதிகமானால் நாட்டின் நிலைமை என்னாவது? முப்பத்தைந்து லட்சம் மக்களைக் கொண்ட மாநகராட்சியில் 500 பேர்களைக் கைது செய்து உள்ளே வைத்தவுடன் நாட்டில் குற்றங்கள் குறைகின்றன என்றால் என்ன அர்த்தம்? இது ஒரு அரசியல் கட்சிக்கு எப்படிச் சொந்தமாகும். அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்கள் தனியாக இருக்கிறார்கள். எந்தக் கட்சி போராட்டத்தில் இறங்கினாலும் அதைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் அவர்கள். அவர்கள் எல்லாம் கட்சிக்காரர்களா? அதே போல் பேருந்தை தீயிட்டுக் கொளுத்துகிறவர்கள், கல் எறிபவர்கள் ஆகியவர்களை எல்லாம் கட்சிக்காரர்களாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது "இவர்கள் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கிறீர்கள்" என்று கேட்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்?

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பேராசிரியர் அவர்கள், சொன்னார்கள். அவசரச் சட்டத்தை நம்பியே இந்தக் கட்சி இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவசரச் சட்டத்தைப் போடுகிறவர்கள் வேண்டுமென்றே போடவேண்டிய அவசியம் கிடையாது. முன்பு ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வார்கள் என்ற நிலைமை ஏற்பட்டபோது கொண்டு வந்தோம் ஆனால் நாங்கள் அதைப் பயன்படுத்தவே இல்லை. அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் வந்த பிறகும் போக்குவரத்துப் பணியாளர்களிடத்தில் பேச்சு வார்த்தை நடத்தி அதிக ஊதியம் கொடுத்து பிரச்சினையைத் தீர்த்தோமே தவிர அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவே இல்லை. சட்டமன்றத்தில் அதைக் கொண்டு வரக் கூடாது என்று சொன்னதை ஏற்றுக்கொண்டு அறிமுகப்படுத்த இருந்ததை வேண்டாமென்று தடுத்து நிறுத்தினோம். இந்த அரசின் எண்ணம், எங்கள் எண்ணம் உண்மையில் புதிய புதிய அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்து போட்டு — எல்லோரையும் பயமுறுத்துவதற்கு அல்ல. நீங்கள் எல்லாம் பயப்படுகிறவர்கள் என்று நான் நம்பவேண்டுமா? அவசரச் சட்டம் கொண்டு வந்தால் பயந்து விடுவீர்களா? "நான் மறைந்திருக்கத் தீர்மானித்தால் யாரும் என்னைக் கண்டு பிடிக்க முடியாது" என்று இதே மன்றத்தில்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

உமாநாத் அவர்கள் சொன்னார்கள். அவசரச் சட்டத்தை வைத்து உங்களை மிரட்டி விடலாம், நிறுத்திவிடலாம் என்று எண்ணியது கிடையாது......

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்து யாரையும் அச்சுறுத்துவது நோக்கமல்ல என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தில் பேசும்பொழுது ''திருக்குறளுக்கு உரை எழுதுவதைக் கூட தடை செய்யும் அளவுக்கு அவசரச் சட்டம் கொண்டு வரலாமா என்று சொந்த அனுபவத்தின் மூலம் உணருகிறேன்'' என்று பேசியிருக்கிறார்கள். திருக்குறளுக்கு அரசாங்கம் மையம் ஏற்படுத்தி அதிலே சில உரையாசிரியர்களை அமைத்து அவர்கள்தான் எழுத வேண்டுமென்பது முறைதானா? திருக்குறளுக்கு உரை எழுதுவதற்குக் கூட தடை செய்ய அவசரச் சட்டம் என்றால் அது எந்த விதத்தில் நியாயம்?

[முற்பகல் 11-30.]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று என்ன நடந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான்கான் அவர்கள்முழுமையாக தெரிந்திருந்தால் என் பக்கமே அவர்கள் வாதாடியிருப்பார்கள். அங்கே பேசிய தமிழ்ப் பேரறிஞர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். திருக்குறளுக்கு விளக்கம் தருகிறவர்கள் அதற்கு விவரமான கருத்துக்களை வெளியிடுகிறவர்கள், வெவ்வேறு விதமாக எழுதிவிடுகிறார்கள். ஆகவே ஒவ்வொருவருடைய—அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப, அவரவர்கள் கொள்கைக்கு ஏற்ப அல்லது நம்பிக்கைக்கு ஏற்ப, அனுபவத்திற்கு ஏற்ப அவர்கள் ஆய்ந்தியிருக்கிற முறைக்கேற்ப அவர்கள் வெளியிடுகிறார்கள், ஆகவே படிக்கிறவர்கள் எந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்கிறார்களோ அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் அந்தக் குறளுக்கு. ஆகவே அது பொருத்தமாக இல்லை. ஆகவே பேரறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்று எழுதி வைப்பார்களானால் மாணவ மாணவியருக்கு அது பயன்படும். அதிலே சர்ச்சைகள் வராது என்றார்கள். அதற்கு நான் உதாரணத்தையும் சொன்னேன். ஒருவருக்கு, அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு அம்மையாருக்கு நான் தொலைபேசியில் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னேன். இந்தப் போராட்டங்கள் இவைகளைப் பற்றிப் பேசும்பொழுது நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒரு குறளை நான் படித்து நீங்கள் தயவுசெய்து படித்துப் பாருங்கள் என்றேன். எந்த எண் என்று கேட்டார்கள். நான்

சொன்னேன். அவர் படித்துவிட்டு என்னை நீங்கள் விபச்சாரி என்று நேராகச் சொல்லியிருக்கலாமே—இந்த அவையிலே நான் வார்த்தைக்காகச் சொல்லுகிறேன், மன்னிக்கவேண்டும் ஏன் இப்படி மறைமுகமாக நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள் என்று சொன்னார்கள். உடனே என்னிடமிருந்த அந்த குறளுக்கு என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறதோ அதைப்படித்துக்காட்டி இதுதான் அம்மா அதற்குப் பொருள் நான் அப்படிச் சொல்ல வில்லை என்றேன். உடனே அவர்கள் படித்துக் காண்பித்து அதுதான் என்றார்கள். அவர்கள் சொன்னது வேறு மதத்தைச் சேர்ந்தவர் ஒருவர் மொழியில் எழுதிய குறள் புத்தகம் தமிழ்ப் பேரறிஞர் கன்னியப்ப நாயக்கர் எழுதியது நான் சொன்ன புத்தகம் என்று கூறினேன். அங்கே நிலைமையைச் சுட்டிக் காட்டினேன். இப்படி இருக்கிறது ஆகவே இதுபோன்றவைகளை பற்றி மாணவர்களுக்கு மற்றவர்களுக்கு அவர்கள் படிக்கிறபோது ஒரு குறளுக்கு இன்னதுதான் பொருள் என்ற வகையில் ஏன் இருக்கக்கூடாது என்று சொன்னேனே தவிர குறளுக்குக்கூட தடை விதிக்க வேண்டுமென்று அவ்வளவு கீழ்த்தரமான புத்தியுடைய ராமச்சந்திரன் இங்கே இல்லை. அவன் இருக்க மாட்டான் என்பதைச் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் தெரிவித்த அந்தக் கருத்து அவருக்கு ஏற்பட்ட ஆழ்ந்த சிந்தனையின் விளைவாக தோன்றிய ஒரு காரணம் என்று கருதினாலும் கூட திருக்குறளுக்கு இருக்கிற பெருமையே கூட பல குறள் கருத்துக்களை வெவ்வேறு விதமான தத்துவ எண்ணங்களைக் கொள்வதற்கு வாய்ப்பு இருப்பது திருக்குறளுக்கு இருக்கிற மிகப் பெரிய பெருமையாகும். அடியோடு தவறான கருத்துக்கள் என்று சில கருத்துக்ளை உரையாசிரியர்கள் யாரேனும் சொல்வார்களானால் மறுக்கக்கூடுமே தவிர பல கருத்துக்களிலே வேறுபாடுகள் வராமல் இருக்கவே முடியாது. ஒவ்வொரு சொல்லுக்கும்கூட புதல்வர் என்று சொல்கிற சொல்லுக்கும் மக்கள் என்று சொல்கிற சொல்லுக்கும்—பொருள் வேறுபாடு கருதுகிறவர்களும் உடன்பட்டு ஏற்றுக்கொள்கிறவர்களும் உண்டு. எனவே சொல்லுக்குச் சொல் அது உணர்த்துகிற பொருள், நிலைமை காரணமாக இடம் காரணமாக வேறுபடுவதற்கான வாய்ப்பும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்டு தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளாகப் பல்வேறு உரையாசிரியர் எழுதி வந்த கருத்துகளிலே வேறுபாடுகள் ஏற்படுவதும் திருக்குறளுக்குப் பெருமையே தவிர அது பெரிய ஒரு குறையாக கருதப்படமுடியாது. எனவே எந்த ஒரு காரணத்தினாலும் சிந்தனை வளர்ச்சிக்குத் தடைபோட்டுவிடக் கூடிய முடிவுக்கு யாரும் வந்துவிடக்கூடாது என்பதையும் அதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன என்பதையும் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1982 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் விளக்கத்தை நான் புரிந்து கொண்டேன். ஏற்றுக்கொண்டேன் என்பதல்ல, புரிந்துகொண்ட டேன். ஒன்றை நான் குறிப்பிடவேண்டும். குறள் எல்லோரா லும் வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லே. வேறு பல கருத்துக்களைச் சொல்லியிருக் கின்ற எப்பற்ற நூல்களைவிட குறள் மிக மிக உயர்ந்தது என்பதிலே நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அதே நேரத்திலே பள்ளி மாணவ மாணவியர்கள் படிக்கும்பொழுது வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் படிக்கின்ற நேரத் திலே தெரிந்துகொள்கிற நேரத்திலே அவர்கள் உச்சரிக்கின்ற நேரத்திலே வேறுபாடான கருத்துக்கள் வருமானால் அது அந்தக் குறளுக்கு இருக்கிற மரியாதையை குறைத்துவிடக் கூடாது என்ற அச்சமே தவிர அ ற்கு இருக்கின்ற அந்தக் தகுதியினால் தான் எத்தனை வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம் என்ற அதற்குரிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஒருவர் பேச்சுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கருத்தை எடுத் துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமானால் பேச்சு வன்மை யுடையவர்கள் திறமையை எடுத்துக்காட்டுகிறது என்று நாம் பெருமைப்பட முடியும்.

ஆனால் நாட்டிலே சர்ச்சைகள் வளர்வதற்கு இடம் கொடுக் கக்கூடாது. எதைப் பொதுநூலாக ஆக்க வேண்டும், தேசிய நூலாக ஆக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோமோ, எதைச் செய்ய வேண்டுமென்று கேட்கின்றாமோ அதற்கு உரித் தானநிலையில் ஒரு குறிப்பிட்ட கருத்து அதற்கு உண்டு என்று வரையறுத்து அதிலும் இராமச்சந்திரன் அல்ல, குறள் தெரியாத தமிழ் தெரியாத என்னை வைத்துச் சொல்லவில்லை : அங்கே யிருந்த பெரியவர்கள், பேரறிஞர்கள் சொன்னதைத்தான்— பெயரைக் குறிப்பிடக் கூடாது என்று விட்டு வைத்திருக்கிறேன்— அவர்கள் சொல்லியதைத்தான் பெயரைச் சொன்னாலும் பரவா யில்லை என்று நினைக்கிறேன், சொல்லி விடுகிறேன்—முத்தமிழ் காவலர் போன்றவர்கலெல்லாம் சொன்னதற்குப் பிறகுதான் நான் அதைச் சொன்னேனே தவிர என்னுடைய சொந்தக் கருத்து அல்ல. அவர் சொன்ன பிறகு, அதைப் பின்பற்றி இன்னும் பலபேர் சொன்னபிறகு, நான் என் கருததை இதற்குத் துணை யாக வைத்தேனே தவிர வேறல்ல.

இதை வைத்துக்கொண்டு, குறளுக்குக்கூட ஒரு சட்டம் கொண்டுவர விரும்புகிறேன் என்று நான் சொன்னேன் என்று எடுத்துக்கொண்டால், நான் வெளியிலே எதையுமேபேசக்கூடாது என்பதுபோல எனக்கு ஒரு தடைச் சட்டம் அவசரச் சட்டம் போடுவதைப்போல ஆகிவிடுமே தவிர இது வேறாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.



1922 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்)

அதிலும் இந்த அவசரச் சட்டம் என்பது அவசரத்தால் செய்யப்படுகிற சட்டமே தவிர, அவசியத்தால் செய்யப்படுகிற சட்டமே தவிர, நிதானித்துப் பேசி, விவாதித்து, அதற்குப்பிறகு கொண்டு வருவதற்கான இடைவெளி தராத காரணத்தால் இதைக் கொண்டு வந்ததாக வேண்டுமென்ற நிலை வருகிறதே தவிர வேறல்ல என்பதை இங்கே நான் திரும்ப திரும்பச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அந்த அவசரச் சட்டத்திலே சொல்லப்படுகின்றவைகள் எவை என்பதில்தான் மாறுபாடு. இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள் என்று கருதுகிறேன். நமது சட்ட அமைச்சரவர்கள் சொன்ன தற்குச் சொன்னார்கள். ஒரு விளக்கத்திற்குச் சொல்லும் பொழுது பொது மக்கள் என்று சொல்லுங்கள் என்று சொன்னார்கள் பொழு அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதைப்பற்றிப் பேச்சு நடந்தது அது வேறு விஷயம்.

இதுபோல பொதுக் கருத்துக்களைச் சொல்லும்பொழுது யாரிடமிருந்து, எங்கேயிருந்து அந்தக் கருத்துக்கள் வருகின்றன என்று கருதாமல், எத்தகைய கருத்துக்கள் வருகின்றன என்பதை எண்ணிப்பார்ப்பதுதான் இந்த மாமன்றத்திலே இருப்பவர்களின் தகுதி என்பதை நாம் நிர்ணயித்திருக்கிறோம். மற்றவர்கள் புரிய நாம் நடத்திக் காட்டி இருக்கிறோம்.

அந்த வகையிலே இந்த அவசரச் சட்டம் வருவது, அதை மறுபடியும் அவையிலே கொண்டு வருவதெல்லாம் அவசரச் சட் டத்தை வைத்தே நடத்துவது என்பது அல்ல. அப்படிச் சொன் னால் இதற்கு முன்னால் இருந்த அரசுகளும்கூட அவசரச் சட்டங் களைக்கொண்டு வந்திருக்கின்றன. அதை நான் சொல்வது குன்ற சொல்வதற்காக அல்ல. அந்தச் சூழ்நிலைகளை மற்றவர்கள் உரு வாக்கினால் ஒரு அரசுக்கு அதைச் செய்வதைத் தவிர வேறு வழி யில்லை என்ற நிலையில்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கொண்டு வரப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன் ஒன்றை மட்டும் நான் படித்துச் சொல்ல விரும்புகிறேன்

1975 ஆம் ஆண்டு 20 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன; 1980 ஆம் ஆண்டு 15 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன; 1981 ஆம் ஆண்டு 19 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன. இதைச் சொல்வதிலிருந்து நீங்கள் தவறு செய்யவில்லையா, ஆகவே, நான் செய்யக் கூடாதா என்கிற கேள்விக்கு நான் வர வில்லை. அப்படி அவசரச் சட்டத்தை உண்டாக்குகின்ற நிலை யை ஏற்படுத்துகின்றவர்கள் தவறு செய்கிறார்கள் அப்படிப்பட்ட அவசரத்தை ஆளுகின்றவர்களுக்கு உண்டாக்கு

கிறார்கள். ஆகவேதான், அவர்கள் கொண்டு வரவேண்டி இருக்கிறதே தவிர இதில் வேறு நோக்கம் இல்லை என்பதை இங்கே நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவசரச் சட்டம் என்ற ஒரு வார்த்தையை வைத்துக்கொண்டு எந்தெந்த ஆண்டுகளில் எவ்வளவு அவசரச் சட்டங்கள் வந்தன என்ற ஒரு கருத்தின் அடிப்படையில் ஒரு விளக்கத்தைத்தர நேரிட்டிருக்கிறது முதல்வர் அவர்களுக்கு. அவசரச் சட்டங்களெல்லாம் கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் அல்ல ; ஆனால் கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் அவசரச் சட்டங்களின் வடிவிலே வருவது தான் மிகப்பெரிய தவறே தவிர வசூலிக்க வேண்டிய வரியை வசூலிக்க முடியாத சட்டம் ஏற்படுகிறபொழுதோ அல்லது ஏற்கெனவே நடைமுறையிலே உள்ள ஒரு சட்டம் தொடர்ந்து நீடிக்க முடியாத நிலை, சட்டமன்றம் கூடாத ஒரு இடைக்காலத்திலே ஏற்படுகிறபொழுதோ ஏற்கெனவே உள்ள அரசாங்கத்தினுடைய கடமைகளைத் தொடர்ந்து நீடித்துச் செய்வதற்கான வாய்ப்புக்களைத் தரக்கூடிய அவசரச் சட்டங்களைப்பற்றி ஏன் இந்த அவசரச் சட்டம் என்று கடுமையாக யாரும் விமர்சிப்பது இல்லை ஆனால் உரிமைகளை அடக்கக்கூடிய வகையில் வந்து விடுகிறது என்று ஐயப்படுகின்றபொழுதுதான் அப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் அதுவும் சட்டமன்றத்திலே வாதிக்கப்படாமல் அவ்வளவு கடுமையான அவசரச் சட்டங்கள் தேவையா என்ற கேள்வி எழுகிறதே தவிர எல்லா அவசரச் சட்டங்களுக்கும் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அவசரச் சட்டத்தை நம்பியே வாழக்கூடாது என்று சொன்னதற்குத்தான் இந்த விளக்கங்கள். அதைப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனால் இதிலே போடப்பட்டிருக்கிற அவசரச் சட்டங்கள் பற்றி விரிவாக நான் படிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அவசரச் சட்டங்களை வெளியிட்ட பிறகு அதைப் பயன்படுத்துகின்ற முறை எப்படி என்பதையும் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருகின்றோம் என்றால் இன்றைய தினம் அதைக் கொண்டு வந்தாலொழிய நாளைய தினம் நாட்டிலே அமைதி இருக்க முடியாது என்று இருக்குமானால் கொண்டு வருவார்கள். இன்றைய தினம் யாருக்காவது ஏழைகளுக்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன. என்றால் அதைத் தவிர்க்க வேண்டும். இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடக் குறிப்பிட்டுச் சொன்னார்கள் கடன் நிவாரணச் சட்டம் பற்றி அதுவும் ஒரு பாதுகாப்புச் சட்டம்தான.



அதுபோல், கல்லூரி முதலியவற்றிலே ஒழுங்கு ஒழுக்கம் ஏற்படுத்துவதற்காக அவசரச் சட்டம் என்றால் அதுவும் தேவையான சட்டம்தான். இங்கே நான் சொல்ல வேண்டியவைகளைச் சொல்வதால் நான் சொல்கின்ற உதாரணங்கள் எல்லாம் அந்தப் பணியிலே இருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் பொருத்தம் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. ஆகவேதான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு ஒரு செய்தி வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு ஆசிரியர் அங்கே உள்ள ஒரு மாணவியைத் தவறாகப் பயன்படுத்த முனைந்தார் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்காக ஒரு போராட்டம் ஏற்பட்டு பஸ்மீது கல்லை விட்டெறிந்தார்கள் என்றால் பஸ் என்ன செய்தது - அந்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லலாம். நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல் ஒரு மாணவர் தவறு செய்துவிட்டார் ஆசிரியர் கண்டித்துவிட்டாரா ; உடனே மாணவர்கள் அது உயர்நிலைப்பள்ளியானாலும் சரி கல்லூரியானாலும் சரி ஆசிரியருக்கு எதிராகப் போராட்டம் அல்லது மாணவர்களுக்கெதிராக ஆசிரியர் போராட்டம் என்றால் இந்தப் போராட்டங்களின் விளைவு எங்கே போய் சேருகின்றது என்பதுதான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய முக்கியமான ஒரு அவசரமான நிலையாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவசரச் சட்டம் என்பதில் இங்கே கொண்டு வந்திருக்கிற அவசரச் சட்டம் தடுப்புக் காவல் சட்டம். அதைப் பற்றிக் கொஞ்சம் காரசாரமாகப் பேசினார்கள், கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். யாராக இருந்தாலும் யார் ஆட்சியிலே இருந்தாலும், அதிகாரிகள் கடுமையான சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருந்தாலும் சரி அல்லது சாதாரணமான சட்டத்தை நடைமுறைப் படுத்துகிற சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருந்தாலும் சரி, அவர்களுடைய செயல் முறை கடுமையாகவும் ஆகும். இல்லை அது மிகச் சாதாரணமான முறையியே பயன்படுகின்ற நிலைமையும் ஆகும். ஒரு ஆய்வாளர் சொல்லியிருக்கிறார். நானே என்னுடைய காவல் நிலையத்தில் 20 திருமணங்களை நடத்தி வைத்தேன் என்று—பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்தார். சட்டம் இல்லையா ? நலம் செய்து குடும்பங்களை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறார். ஆகவே சட்டங்களைக் கையாளுகின்றவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்து சட்டங்கள் பயன்படும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

அதே போல், அரசு இப்படி உத்திரவிடுகிறதே, அதைச் செய்தே தீர வேண்டுமென்று விரும்புவதற்குப் பதிலாக இன்னமும் அதிகமாகச் செய்து நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் இருப்பார்கள். அல்லது இந்த அரசுக்குக் கெட்டப் பெயர் வந்து விட்டுப் போக வேண்டுமென்பதற்காகச் செயல்படக்கூடியவர்களும் எங்கேயாவது ஒருவர் இருவர் இருந்தாலும்

இருக்கலாம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர அந்தச் சட்டத்தை எதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ அதற்குப் பயன்படுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினமும் அதற்கு முந்தைய தினமும் இங்கே பேசியவர்கள் சாராயக் கடைகளைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலே பேராசிரியர் அவர்கள் மிக மன வேதனையோடு சொன்னார்கள். தவறுகள் நடந்து கொண்டே இருக்கின்றன என்றார்கள். அது எப்படி துணிவோடு நடக்கிறது என்றால் கைது செய்து உள்ளே சென்றவுடன் ஜாமீனில் வெளியே வருகிறார்கள். மறுபடியும் அந்த வேலைகளை அவர்கள் தொடர்கிறார்கள். அதற்கிடையில் யார் யாருக்கு என்ன என்ன கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதுபோல் கொடுக்கப்பட வேண்டியிருந்தால் கொடுக்கப்படலாம். அதனால், அவர்கள் தப்பித்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இவையெல்லாம் இருக்கும்போது அத்தகையவர்களைக் கைது செய்து வெளியே வர முடியாமல் செய்கின்ற நிலைமை ஏற்படுமானால் அதனால் இந்த நாட்டிற்கு நல்லது விளையுமானால் அதற்காக ஒரு சட்டம் கொண்டு வருவதில் தவறில்லை என்பதுதான் இந்த அரசின் நோக்கம். கடுமையாக இந்தச் சட்டம் கொண்டு வந்தோம் நல்ல எண்ணத்தோடு என்றால் அந்த நல்ல எண்ணத்தோடுதான் இது வருகிறதே தவிர எந்தக் கட்சியையும் பழி வாங்குவதற்காக அல்ல என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்வேன். அந்த எண்ணம் இல்லை.

முதலில் யாராவது கைது செய்யப்படுவார்கள் என்று தோன்றி இருந்தால், எங்களுக்கு வேண்டியவர்கள் யாராவது தவறு செய்தால் அவர்கள்தான் முதலிலே கை வைக்கப்படுவார்களே தவிர, அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் என்பதை இங்கே நான் அறுதியிட்டு கூறுகின்றேன். அப்படி பலர் மேல் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின் அடிப்படையிலே கூட, அதைத் தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் யாராவது அதிகாரிகளே எங்காவது தவறு செய்தால், அவர்களையும் கைது செய்வதற்கும் கூட இந்த சட்டம் பயன்பட வேண்டி வரலாம் என்பதை நான் சொல்வதை நீங்கள் நம்பவேண்டும் என்பது என் வேண்டுகோளாகும். ஆகவே அவசரச் சட்டம் கொண்டு வருவது என்பது பழி வாங்குவதற்காக அல்ல.

ஆனால், அதோடு இன்னும் சொல்லுகிறார்கள். பத்திரிகைகளையே தடை செய்ய வேண்டும்; எதிர் கருத்து எழுதினால் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு



செய்கிறார்கள், என்று சொல்லப்படுகிறது. ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. 'எம். ஜி. இராமச்சந்திரன் வீட்டில் சி.பி.ஐ. சோதனை. எம். ஜி. இராமச்சந்திரன் வீட்டில், ராமாவரம் தோட்டத்தில் சி.பி.ஐ. சோதனையிட்டார்களாம்' இந்த 'ளாம்' இல்லை; அது கூட இல்லை. 'சோதனை இட்டார்கள்'. 'பல மணி நேரம் சோதனை இட்டார்கள்', அப்புறம் மாம்பலத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் சோதனை இட்டார்கள். இப்படி ஒரு செய்தி பத்திரிகையிலே வருகிறது என்றால், அதற்கு என்ன ஆதாரம். இன்கம்டாக்ஸ் ஆபீசர் வந்தால் அது உடனே வெளியே தெரியும் ஒத்துக் கொள்வதிலே நமக்கு ஒன்றும் நட்டம் இல்லை, அது எங்கும் நடக்கிற காரியம் சி.பி.ஐ. வந்து தேடுகிறார்கள் என்றால், தேவை இருந்தால் தேடுவார்கள். எங்கே போக வேண்டுமோ போவார்கள். கண்டு பிடிப்பார்கள். தண்டனை கொடுக்கப்பட வேண்டி இருந்தால் சட்டப்படி கிடைக்கும். ஆனால் இல்லாத ஒன்றை, நடக்காத ஒன்றை, இப்படிப் பத்திரிகையிலே நடந்ததாகப் போடுகிறார்களே, இதுபோல செய்திகளைத் தவறாக, வேண்டுமென்றே வெளியிடுகிறவர்களை எப்படி செய்வது. எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தாகிவிட்டது. எனக்காக இதைக் கொண்டு வரவில்லை. இன்னும் பல இருக்கின்றன. அவைகளுக்காகத்தான் ஆகவே எதிரொலி மேல், அந்த நிர்வாகி மேல், ஆசிரியர் மேல் எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். கைது செய்திருக்கிறார்கள் என்றால்— அவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள் மறந்து விடக் கூடாது. நானும் கூட மான நஷ்ட வழக்கு போட்டு இருக்கிறேன். ஆட்சிக்கு வந்த 2, 3 மாதங்களில் நான் ஏதோ லஞ்சம் வாங்கினேன் என்று போட்டிருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. நான் சாட்சிச் சொல்ல இருக்கிறேன். அப்போது உண்மை என்னவென்று வெளியே தெரியும். இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், வேண்டுமென்றே, யாரையும், எதையும்—அது நீதிபதியாக இருந்தாலும் சரி, வழக்குறைஞராக இருந்தாலும் சரி, போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி, எந்த அரசியல் கட்சித் தலைவரானாலும் சரி, எழுதுகிறார்கள். நான் இந்தப் பத்திரிகையை மாத்திரம் குறிப்பிடவில்லை. வேறு எந்தப் பத்திரிகையானாலும் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடுவதைத் தடுப்பதற்கு எந்த வழியும் காணப்படவில்லை. பத்திரிகைகளுக்கு என்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் கவுன்சிலுக்கு அனுப்பினால், அவர்கள் இவர்களுக்கு அனுப்பிக் கேட்பார்கள். அதோடு சரி, அதற்குப் பிறகு என்ன நிலைமை - மீண்டும் அதேபோலத்தான் வெளி வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான், டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு வழக்குப் போட்டிருக்கிறார்கள். அவர் கார் வாங்கி விட்டார் என்றோ, ஏதோ ஒரு வழக்கு, அதன் மேல் போட்டிருக்கிறார்கள். வெளியே வந்து விட்டார்கள். வழக்கு நடக்க இருக்கிறது. உண்மையா, பொய்யா என்பது அங்கே தெரியும். தெரிந்து

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

பிறகு என்ன நடவடிக்கை என்பதை இந்த மன்றமே உணரும். குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டால், ஹண்டே அவர்களுக்கு என்ன தண்டனை என்பது இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். அது இல்லையானால் வழக்கு மன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்படுகிறதோ அதற்குரிய தண்டனை என்பது அங்கே அவர்கள் தீர்மானிப்பார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு என்ன வழி. ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள். நாங்கள் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். ஏதோ ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பத்திரிகைகளையே நடத்த முடியாமல் செய்து விட வேண்டும் என்ற ஆசை இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது.

(முற்பகல் 11–50)

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பாக 'எதிரொலி' பத்திரிகை என்று சொல்லி, சாதாரணமாக பத்திரிகைகள் தவறான செய்திகளைத் தொடர்ந்து வெளியிடுகிறது என்றும் சொன்னார்கள். தவறான செய்திகளை, ஒருவர் மீது அவதூறு ஏற்படுகின்ற வகையில் ஒரு செய்தியை பத்திரிகைகள் வெளியிடுமானால்,, அந்தப் பத்திரிகையை தண்டிக்க ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. 'எதிரொலி' பத்திரிகை மீது கிட்டத்தட்ட 17 வழக்குகள் போடப்பட்டு இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். ஆகவே, ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின் மூலமே மான நஷ்ட வழக்குப் போடவோ, அல்லது அந்தப் பத்திரிகை நிர்வாகிகள், ஆசிரியர்கள் ஆகியோரை தண்டிக்கவோ சட்டம் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதால், நீங்களே உண்மையிலேயே தவறு செய்கிறபோது அந்தத் தவறைச் சுட்டிக் காட்டி பத்திரிகைகள் எழுத முடியாத நிலை ஏற்படும். ஆகவே, இது தேவை இல்லாத ஒரு சட்டம். அதையும் கொண்டு போய் போலீஸ்காரர்கள் கையில் கொடுத்து இருக்கிறீர்கள். எது தவறு எது சரி என்று தீர்மானிக்கும் பொறுப்பு போலீஸ்காரர்கள் கையில் கொடுப்பது முறைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் இந்த சட்டத்தை யார் மீதாவது பயன்படுத்த வேண்டுமானால், அது பற்றி ஆய்வு செய்ய ஒரு குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும். அந்தச் சட்டம் தெரிந்த குழு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பது பொருத்தம்தானா என்றும் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு தான் நடவடிக்கை தொடர வேண்டிவரும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். சட்டம் இருக்கிறது என்பதால் உண்மையை மட்டுமே எழுதட்டுமே,



1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அல்லது இப்படி நடக்கிறது என்று சந்தேகிக்கும் முறையில் எழுதட்டுமே, அதற்கு மறுப்பாவது கொடுத்து விட்டுப் போகலாம். ஆனால் இப்படி நடைபெறுகிறது என்றும், நடந்து விட்டது என்றும் பத்திரிகைகளில் போடுகிறார்களே, அதை எப்படித் தடுப்பது. இப்படி தவறான செய்தி போட்டுள்ளீர்களே, மறுப்பு போட வேண்டும் என்று சொன்னால், 7 காலம் தலைப்பில், 8 காலம் தலைப்பில் போடப்பட்ட அந்த செய்திக்கு எங்கோ ஒரு மூலையில் 'திருத்தம்' என்று சொல்லி போட்டு விட்டு, இருந்தாலும், நமக்கு வந்த தகவல் படி அது சரியானதுதான் என்றும் போடுகிறார்கள். இப்படிப்பட்டவைகளுக்குதான் என்னுடைய வருத்தத்தை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் என்னுடைய கருத்தையும் வெளிப்படுத்த விரும்புகிறேன். எந்தக் காரணத்திற்காகவும் எந்தப் பத்திரிகை மீதும் வீணான முறையில் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. அப்படி எங்காவது செய்யப்பட்டு விட்டால், அதற்காக இந்த மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். பொறுப்போடு செயல்படுகின்ற எந்த அரசியல் கட்சி மீதும் வேண்டுமென்றோ அல்லது எந்தப் பத்திரிகையின் மீதும் வேண்டும் என்றோ நடவடிக்கை எடுப்பதை இந்த அரசாங்கம் செய்யாது. எங்காவது தவறு நடந்து இருக்கிறது என்று சுட்டிக் காட்டினால், நாங்கள் நிச்சயமாக அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுப்போம் என்கிற உறுதியை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. எந்தப் பத்திரிகையாவது தவறு செய்து இருக்கிறது என்று சொன்னால், அந்த நிர்வாகி முதலில் கைது செய்யப்பட்ட பின்பு தான் அந்தக் கமிட்டிக்கு அனுப்புவார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை முழுமையாகக் கேட்டுக் கொண்டால் நல்லது. இப்போது என்ன நடைபெறுகிறது என்றால் கைது செய்த பிறகு அந்தக் குழுவிற்கு அந்த வழக்கை அனுப்பி வைக்கிறோம். அவர்கள் பரிசீலித்து, அவரை வைத்துக் கொள்வது என்றால் தான் வைத்துக் கொள்கிறோம் அதன் பிறகு தான் வழக்கு மன்றத்தில் அது செல்கிறது. ஆகவே, வேறு பாதுகாப்புகள் இல்லாமல் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** அந்த இடைக்காலத்தில் அந்தப் பத்திரிகை ஆசிரியர் சிறையில் வைக்கப்பட்டுத்தானே இருப்பார். மேலும், அந்தக் குழு அப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பது தவறு என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தவறு செய்கின்றவர்கள் மீண்டும் அதே தவறைச் செய்யக் கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். அதைத் தவிர வேறு எண்ணம் இல்லை. வேறு பழி உணர்வும் இல்லை. யார் மீதும் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன அந்த விளக்கங்கள் அடிப்படையில் முறையாக நடைபெறக் கூடிய வாய்ப்பு இருக்குமானால், ஒரு வேளை அது நியாயமாகக் கூட தோன்றக் கூடும். ஆனால், ஆளும் கட்சி அல்லது அரசாங்கம் அல்லது அதை நடத்துகின்றவர்களுக்கு அப்படிப்பட்ட சட்டத்தின் மூலமாக ஏதோ ஒரு பாதுகாப்பைப் பெற முடியும் என்று நம்புவதைப் போல, எதிர்க்கட்சித் தலைவர் பற்றியும் வேறு கட்சித் தலைவர்கள் பற்றியும் அல்லது அரசாங்கத்தை நடத்தாத வேறு பலரைப் பற்றியும் இப்படித் தவறாக எழுதப்படுகிறபோது, இதே பாதுகாப்பு இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைக்குமா என்பதையும் முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா — யாராவது வேண்டும் என்றே தவறாக அரசாங்கத்தில் இருப்பவர்களைப் பற்றி எழுதுகிறபோது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதைப்போல, எதிர்கட்சித் தலைவரைப் பற்றியும் யாராவது தவறாக திட்டமிட்டு எழுதுவார்களானால், அப்போது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய நிலைமை உண்டா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இது எல்லோருக்கும் பொருத்தம் உடையது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். அப்படி இல்லாவிட்டால். திருத்தம் தேவையானால் நாங்களே திருத்தம் கொண்டுவர விரும்புவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படியும் இது பொதுவாகத்தான் இருக்க வேண்டுமே தவிர அரசுக்காக மட்டும் இது பயன்படும் சட்டமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு என்ன வழி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய, திருத்தம் தேவையானால் அரசே திருத்தம் கொண்டுவர தயாராக இருக்கிறது.

நியாய விலையில் மக்களுக்கு உணவு கிடைக்க வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஏறத்தாழ 16,000 கடைகளை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிறோம் என்றாலும் முழுமையாக உணவுப் பொருள் கிடைக்கிறதா,



என்பதிலே பலருக்குச் சந்தேகம் இருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும்.

இங்கே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 500 குடும்பங்கள் உள்ள இடத்தில் ஒரு நியாயவிலைக் கடை இருக்க வேண்டுமென்ற கோரிக்கை, அந்த எண்ணம் விருப்பம் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும், அந்தக் கட்சியினுடைய இந்த கொள்கைக்கு யார், யார் சொந்தக்காரராக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இருக்கிறது என்பதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்; இந்த அரசும் ஏற்றுக்கொள்கிறது. அந்த 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்று சொல்லும்போது பணியாளர்கள், எத்தனை பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தோம். அதைப்போலவே கணக்கிட்டுப் பார்க்கும்போது, எத்தனை பேர்கள் பணியிலே ஈடுபட்டால் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் கணக்கிட்டுப் பார்த்தோம். ஆனால் அந்த வகையில் அதை எப்படி அமுல்படுத்துவது என்பதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று இங்கே சொல்லும் போது அந்தக் கடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாம் தந்தாக வேண்டும்.

ஆளுநர் உரையிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உற்பத்திச் செய்பவர்கள், நுகர்வோர்கள் — இவர்களே ஒருங்கிணைந்து அமைப்புக்களை உருவாக்கி, இவர்களே அதில் பங்குதாரர்களாக நடைபெறும் ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தினால். இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி, அது பயன்படுமானால் அதை செய்ய அரசு சிந்திக்கிறது என்ற வகையில் அந்தக் கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே எப்போதும்போல், வழக்கம்போல் இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அல்லது ஒரு நண்பர் அவர்கள் சொல்லும் போது சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி சரியாக இருக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். வாங்குவோர் உற்பத்திச் செய்வோர் — அவர்கள் இருவரும் இணைந்த ஒரு குழு அமைத்து, அதாவது கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் இந்த விநியோகத்தை ஏற்று நடத்த முடியுமா, நடக்கக்கூடியதா என்று கேட்டார்கள். நான் ஒரு சந்தேக விளக்கத்தைப் பெற விரும்பவில்லை; இருக்கிற சந்தேகத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

விலைவாசி குறையவேண்டும்; உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறதே தவிர உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு தேவையான அளவுக்கு, அவர்கள் செலவு செய்கிற அளவுக்கு வருமானம் கிட்டவில்லை;

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

இலாபம் இல்லை என்பது குறை. இதையும் கூறுகிறோம்.
ஒரு பக்கம் விலைவாசி உயருகிறது. இன்னொரு புறம் பொருட்
களை எந்த அளவுக்கு செலவு செய்து உற்பத்திச் செய்கிறார்
களோ அவர்களுக்கு தேவையான அளவுக்கு கிடைக்க
வில்லை. அப்படியானால் இடையிலே யார் நஷ்டப்படுவது என்
பதுதான் கேள்வி.

(நண்பகல் 12-00)

பொதுமக்களுக்கு அதிலும் உத்தரவாதமுள்ள சம்பளத்
தைத் பெற முடியாத நிலைமையில் இருக்கின்ற அந்த உழைக்கும்
வர்க்கத்திற்காகக் கேட்கக்கூட நாதயற்ற நிலையில் அவர்கள்
இருக்கிறார்கள் அந்த கோடிக்கணக்கான உழைக்கும் வர்க்கத்
தனர் இன்றைய தனம் அத்தியாவசியமான பொருட்களை
வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றால் அங்கே விலை உயர்ந்
திருக்கின்றது என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்களுக்குத்
தேவையான அளவுக்கு வருமானம் உயர்த்தப்படுகிறதா
உயர்த்தப்பட முடிகின்றதா ? உயர்த்தும்படி செய்ய யாராவது
முன்வந்து கேட்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. விவ
சாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுக்க
வேண்டும் என்று சொன்னோம். எவ்வளவு போராட்டத்திற்குப்
பிறகு சில இடங்களிலே அது கொடுக்கப்படுகின்றது என்பதை
நாம் மறந்துவிடக்கூடாது. அதிலே எத்தனை நடவடிக்கைகள்;
எத்தனை தகராறுகள் ? வெளியிலே இருந்து ஆட்களைக்
கொண்டுவரக்கூடாது என்று தடை. அவைகளை எல்லாம்
செய்த பிறகும் சட்டத்தை விதித்து உத்தரவிட்டதற்குப்
பிறகும் இதுதான் நிலைமை என்றால் சாதாரண மக்கள் என்ன
செய்வார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? இன்றைய தினம்
என்.ஜி.ஓ.-க்களைக் எடுத்துக்கொண்டால் அவர்களுக்காகக்
கேட்பதற்கு சங்கங்கள் இருக்கின்றன. பல சங்கங்களோ
சங்கமோ எப்படி இருந்தாலும் அவர்களுக்குக் கேட்பதற்கு
ஆட்கள் இருக்கிறார்கள். தொழிற்சாலையிலே வேலை செய்
பவர்களுக்குக்சாகக் கேட்க ஆட்கள் இருக்கிறார்கள். அப்படி
பலர் மாதச் சம்பளம் பெறுகின்றவர்கள் என்ற நிலைமையிலே
அரசினிடத்திலே சம்பளம் பெறுகின்றவர்களாக இருந்தாலும்,
தனியார்களிடத்திலே சம்பளம் பெறுகின்றவர்களாக இருந்தா
லும் அப்படிப்பட்ட பணியிலே இருப்பவர்களுக்கெல்லாம் கேட்க
நாடு இருக்கிறது. ஆனால் அடபடி இல்லாத கோடிக்கணக்கான
ஏழை மக்களுக்கு அன்றாடம் வேலை செய்து சம்பாதிக்கிற
மக்களுக்கு இந்த விலைவாசி உயரும்போது அதற்கேற்றவாறு
அவர்களுக்கும் போதிய வருமானம் வேண்டும் என்று கேட்க
யார் இருக்கிறார்கள். நம்முடைய கருத்துக்களைச் சொல்கிறோம்
விலைவாசி உயரக்கூடாது ஏழைகள் கஷ்டப்படு



1982 பிப்ரவரி 11] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

வார்கள் என்று சொல்கிறோமே தவிர அதற்காக என்ன
வழி செய்வது என்பது பற்றி யாரும் தனியாக சிந்தித்தோ
அல்லது கூட்டாக சிந்தித்தோ இன்னும் எந்த முடிவும் எடுக்க
வில்லை, அப்படி எடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம்
அல்ல. ஆகவே நியாய விலைக் கடைகளின் மூலம் நியாயமான
விலையில் பொருட்கள் கிடைக்கும் என்றால் அதாவது அவர்
களுக்கு கிடைக்கின்றதே என்ற மகிழ்ச்சியாவது அவர்களுக்கு
இருக்கும். ஆனால் அதை நிறைவேற்றுவதும் எளிதல்ல.

பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு விலை
குறைந்துவிடக்கூடாது. வாங்குபவர்களுக்கு விலை உயர்ந்து
விடக்கூடாது. ஆகவே, இவர்கள் இருவரும் சேர்ந்து விலை
யினை நிர்ணயிக்கின்ற முறையை ஏற்படுத்தி அந்த கடைக்கு
அவர்கள் சொந்தக்காரர்களாக இருப்பார்களேயானால் வரு
கின்ற லாபமும் அவர்களுக்கே பங்காகக் கிடைக்கின்ற உரிமை
இருக்கும். அப்படிப்பட்ட நிலைமையில் சாதாரண மக்களைப்
பற்றி அவர்களால் சிந்திக்காமல் இருக்க முடியாது. ஆகவே
வெறும் உத்தரவுகளை மட்டும் வைத்துக்கொண்டு நடவடிக்கை
யில் இறங்க முடியாது. அங்கே இருக்கின்ற மக்களின் வாழ்க்கை
நிலைமையைப் பற்றியும் பரிசீலித்து, வாரத்துக்கு ஒரு முறை
அல்லது மாதத்திற்கு இரு முறை அவர்கள் கூடி பேசி இதுதான்
விலை, இதைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று
நிர்ணயிக்கின்ற அந்த உரிமை அவர்களுக்கு இருக்குமானால்
நிச்சயமாக அதைப்பற்றி சிந்திக்க முடியும். சிந்தித்து பணியாற்ற
முடியும். ஆகவே, அந்த எண்ணத்தைத்தான் நாங்கள் வெளி
யிட்டிருக்கிறோம் ஆளுநர் அறிக்கையின் மூலமாக என்பதை
நான் இங்கே சொல்கின்றபோது அப்படிச் சொல்வது பொருத்த
மாக இருக்கும் என்று கருதுவீர்களேயானால் தயவுசெய்து
யோசனை சொல்லுங்கள். அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த
வர்களையும் கொண்ட குழுவை அமைப்போம். அதைப்பற்றி
சிந்தித்து உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் வாங்குகின்றவர்
களும் ஒன்றாக இணைந்து அந்தக் கருத்தைச் செயலாற்ற முன்
வரட்டும். பிரச்சினை அதிகமாக இருக்க முடியாது. வாங்கு
பவர்களும் உற்பத்தி செய்பவர்களும்தான் விலையை நிர்ணயிக்கப்
போகிறார்கள். இருவருக்கும் கட்டுப்படியாகின்ற விலையைத்
தான் அவர்கள் நிர்ணயிப்பார்கள். அப்படி நிர்ணயிக்கப்படு
கின்றபோது இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களுக்குத் தொட
ராமல் விரைவிலே அதைத் தடுத்து நிறுத்த முடியும் என்று நாம்
நினைக்கிறோம். இந்த எண்ணம் சரியல்லை என்றால் மாற்று
கருத்து சொல்லுங்கள்.

மாற்று கருத்தைச் சொல்லி நாம் உட்கார்ந்து பேசுவதற்கு
வாய்ப்பு தாருங்கள், நாங்கள்அழைத்தால் தயவுசெய்து வந்து உட்
கார்ந்து பேசுங்கள் நாங்கள் சொல்கின்ற கருத்துக்களை ஏற்க
வில்லை என்றால் மறுத்துக் கூறலாம். ஏற்கவில்லை என்றால்

ஏற்கவில்லை என்று சொல்லுங்கள் தவறில்லை. ஆனால் கலந்துகொள்ள வேண்டும் என்று அனைவரையும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். இதிலே கருத்து வேறுபாடே இருக்க முடியாது. ஒரு பக்கம் விலைவாசி உயர்ந்துகொண்டே போகின்றது. அதைக் குறைக்க வேண்டும் இன்னொரு பக்கம் விலையினை உயர்த்திக் கொடுக்க வேண்டும் அவர்களுக்குத் தேவையான பணம் கிடைக்கவில்லை. இது எவ்வளவு பெரிய பிரச்சினை ?

நான் வேடிக்கையாக ஒன்றைச் சொல்வேன். இறைச்சி வேண்டும் ஆனால் ஆட்டைக் கொன்று விடக் கூடாது என்று சொல்வார்கள். '' எப்படிக் கிடைக்கும் ? உயர்த்தினால்தான் கட்டுப்படியாகும் என்கிறார்கள். கரும்பு விலையை உயர்த்த வேண்டும், அதை 300 ரூபாயாக ஆக்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக 175 ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம். கரும்பு விவசாயிகளுக்கு கொடுங்கள் என்று சொன்னோம். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலர், 300 ரூபாய் வேண்டும், போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். எனவே, எங்கே போய் நிற்கும் இது ? இதைப்போன்ற பிரச்னைகளையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கரும்புக்கு விலை கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அண்டை மாநிலங்களிலே கொடுக்கப் படுவதைப் போல, தமிழ்நாட்டிலும் கொடுத்தால் என்ன ? விவசாயிகளுக்கு கட்டுப்படியாக வேண்டும் என்று சொல்வதிலே தவறு இல்லை. கர்நாடகத்திலே அரசாங்கம் விதிக்கக்கூடிய அனைத்து விவசாய வரிகளையும் விவசாயிகளுக்கே கிடைக்கும் படி செய்திருக்கிறார்கள். அதேபோல ஆந்திராவிலும் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் பர்சேஸ் டாக்ஸ் என்று சொல்லக்கூடிய அந்த வரிகளிலிருந்து ஒரு பகுதியை மட்டும் கொடுக்கிறார்கள். முழுவதுமாக கொடுப்பார்களே யானால் இன்னும் 15 ரூ. 20 ரூ. அளவுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கும். அதை ஏன் முதலமைச்சர் அவர்கள் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்ககள் எங்களை வந்து சந்தித்துப் பேசினார்கள். நாங்கள் ஒன்றைச் சொல்லி முதலிலே ஒத்துக் கொண்டார்கள். பிறகு மீண்டும் எங்களைச் சந்தித்து, விவாதித்து அதிகமாக பணம் தருகிற யோசனையைச் சொல்லி, அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று சொல்லிச்சென்றார்கள்.



என்பதை இங்கே கூற விரும்புகிறேன். அதுவரையிலும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதில் கலந்து கொள்ளவரவில்லை என்றால்........(குறுக்கீடு).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, அரசாங்கம் கூட்டிய உயர் மட்டக் குழுவில், தொழில் அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டார்கள். அந்தக் குறிப்புகளைப் பார்த்தாலே முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாக புலனாகும். அதில் அரசினுடைய கருத்தும் ஒன்றாக இல்லை. ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கக்கூடியவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார்களே தவிர, எல்லோரையும் அழைத்துப் பேசி ஏற்பட்ட முடிவு அல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே குழுவை நாங்கள் தான் அமைத்தோம் ஆனால் அந்தக் குழு சொல்வது அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் இன்னும் ஒரு ஆயிரம் கோடி ரூபாய் கிடைத்தால் பரவாயில்லை என்று சொல்லவேண்டிவரும். ஆனால் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களை நாங்கள் அழைக்கவில்லை. அவர்களே சந்திக்க வேண்டும் என்று கேட்டு எங்களை வந்து சந்தித்தார்கள். அதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு........(குறுக்கீடு).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : :** ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் பூராவும் கொடுப்பதைப் பற்றிச் சொல்லி, தமிழ்நாட்டிலும் அப்படி கொடுத்தால் என்ன என்று கேட்டேன்........

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அங்கேயெல்லாம் என்ன நிலைமை என்பது மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரியும். அங்கே சர்க்கரையினுடைய இனிப்புச் சத்து எவ்வளவு என்றும், இங்கே எவ்வளவு என்றும் அவர்களுக்குத் தெரியும். அதையும் கொஞ்சம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு ஒரு பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்பதிலே நான் மீண்டும் அதைப்பற்றி விளக்கம் தரவேண்டும் என்று கருதுகிறேன். விளக்கம் என்று சொல்வதைக் காட்டிலும், எல்லோரும் ஒத்துக்சொள்ள வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும், அவரவர்கள் யோசனையை தெரிவிப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு அந்தப் பிரச்னை குறைய வேண்டும் என்பதற்காகவும் சொல்கிறேன். தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இடைத்தரகர்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

களை நீக்கியாக வேண்டும். இடைத்தரகர்களை நீக்கியாக வேண்டும் என்றால், அரசு அவைகளை வாங்கி விநியோகிக்க வேண்டும்.

அரசு அவைகளை வாங்கி விநியோகிப்பதற்கு முன், யார் அந்தப் பொருள்களை வாங்குகின்றார்களோ, வாங்கிப் பயன் படுத்துகின்றார்களோ அவர்களே விற்பனை செய்கின்றவர் களோடு இணைந்து இதில் செயல்படுபவர்களாக இருந்தால் மிகப் பெரிய பிரச்னைகள் குறைக்கப்படும். ஆங்காங்கு விளை கின்ற பொருள்களின் தரத்திற்கேற்ப, தேவைக்கேற்ப, எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகின்றதோ, அதற்கேற்ப அந்தந்த ஊர்களுக்கு எவ்வளவு அனுப்பவேண்டும் என்பதற்காகவும் நல்ல முறையில் செயல்படமுடியும் என்று நான் கருதுகிறேன் அவைகளைச் செய்தாக வேண்டும் என்றும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அதே நேரத்தில் அரசியலுக்குப் போக வேண்டியிருக்கிறது, அரசியல் கட்சிகளைப் பற்றியல்ல.

மருதுபாண்டியர்கள் பற்றி இங்கே கருத்து சொல்லப்பட்டது. மருது பாண்டியர்களுக்கு நினைவுச் சின்னம் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக் கிறது. அந்த மூவர் குழு பரிசீலனை செய்துகொண்டிருக் கிறார்கள். யார் உண்மையான வாரிசுகள், அவர்களுக்கு எப் படிப்பட்ட உதவி செய்ய வேண்டும் என்பதும், அந்தச் சின்னத்தை எப்படி நிறுவுவது என்பது பற்றி அதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அறிக்கை வந்தவுடன் இந்த அரசு அதை நிறைவேற்றும் என்பதைச் சொல்லிக்கொள்ள விழை கிறேன்.

இன்னும் பலர் பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள், கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. முகமது இஸ்மாயில் அவர்கள் எல்லைப் பாதுகாப்பு என்ற பெயரில் கன்னியாகுமரியைச் சேர்ப்பதற்காகப் போராடியவர் களுக்கு உதவித் தொகை கொடுப்பதில் தாமதம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் தேதியிலேயே உத்தரவு போடப்பட்டு விட்டது. அவர்களுக்கு அது கிடைக்கும் என்பதையும் மேலும் அப்படிப் பட்டவர்கள் யாராவது இருப்பார்களேயானால் அதற்கு இந்த அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்பதையும் அதேபோல தமிழ் மொழி காப்பதற்காக தங்களை தியாகம் செய்துகொண்டவர்களுக்கும் இந்த அரசு தக்க நிவாரண உதவி

செய்ய முன்வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (கைதட்டல்) அதில் பெயர் மாற்றம்தான் என்பதை எல்லோரும் தெரிந்துகொண்டிருப்பார்கள். அந்த பெயர் மாற்றத்தைக் கொண்டுதான் நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாரஸ்ட் ரேஞ்சர்ஸ் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தேர்வு செய்யப்பட்டவர்களை ஏன் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் வேலை உயர்த்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன். இதற்காக 32 பேர்களை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கிராம அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கியதைப் பற்றி பேசி இருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி நான் விரிவாகப் பேச முடியவில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துவிட்டது. அளித்து விட்டார்கள் என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் உச்சநீதி மன்றம் இடைக்கால தடையை நீக்கியது ரிட் மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கும் வரையில் முழுநேர கிராம அதிகாரிகளை நிரந்தர அடிப்படையில் நியமிக்க வேண்டாம் என்றும் இந்த அவசரச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட கிராம அதிகாரிகளுக்கு ரிட்மனுக்கள்மீது அவர்களுக்கு செலுத்தப்பட்டு வந்த தொகை அவசரச் சட்டத் தேதியிலிருந்து நீதிப்பேராணை மனுக்கள் தீர்மானிக்கப்படும் வரை பிரதிவாதிகள் செலுத்திக்கொண்டே வர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தீர்ப்பு. தீர்ப்பில் இப்படி குறிப்பிட்டதை. வீணடிக்கிறீர்களே என்று ஒரு சிலர் பேசுகிறார்கள், கருத்துக்கள் வெளியிடுகிறார்கள். அதே நண்பர்கள் இந்த மன்றத்தில் பேசியிருந்தார்களானால் அந்த மன்ற உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன். அவர்களே சொன்னார்கள் அவர்களுக்கு ஓய்வூதியம் தந்தாகவேண்டும், நஷ்டஈடு தரவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். இப்போது வழக்குமன்றத்தின் தீர்ப்புப்படி நடந்துகொண்டால் இவ்வளவு நஷ்டத்திற்கும் நீங்கள்தானே காரணம் என்கிறார்கள். இதைக் கொடுக்க வேண்டுமென்று விரும்பியவர்களில் அவர்களும் உண்டு என்பதில் உங்கள் கவனத்தைத் திருப்புவதோடு, அதை நீங்கள் விரும்புகிறீர்கள், அது வேறு வழியில் நடந்தால் கூட நீங்கள் சந்தோஷப்பட வேண்டும், மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல பிரச்னைகள் — நான் இரண்டு மணி நேரத்தில் முடித்துவிடுகிறேன். என்று சொன்ன காரணத்தால் அதைக் குறைத்துக்கொண்டு வருகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1982 பிப்ரவரி 11

அவியனூர் என்ற இடத்தில் ஆதிதிராவிடர்களே இல்லை நாமினேஷன் தாக்கல் செய்வதற்குக்கூட அங்கே ஆள் இல்லை. அதைஎப்படிச் சேர்த்திருக்கிறீர்கள் என்ற குறைபாடு சொல்லப் பட்டது. எனக்கு வந்த தகவல்படி, அவியனூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தகைய சூழ்நிலையில் ஒதுக்கப் பட்டுள்ளது என்ற குறிப்பு இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய பிரிவு 30 (ஏ) இன் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக வெளியிட்டுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரம் இன்னும் வெளி யிடப்படவில்லை. இதுபற்றி 1982 ஆம் ஆண்டு மே திங்கள் தான் கிடைக்கும். எனவே, 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக் கெடுப்பின் அடிப்படையிலே செய்யப்பட வேண்டியிருந்தது. அவிய னூரைப் பொறுத்த வரையில் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 48.18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மொத்த ஜனத் தொகை 1,035. அதிலே 523 ஆண்கள் ; 512 பெண்கள் இருக்கிறார்கள். அவியனூர் ஊராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது, 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் நாள் தினத்தந்தியில் வெளியானது. இதுகுறித்து தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து அறிக்கை பெறப்பட்டது. அவியனூர் ஊராட்சியில் 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி விவரம் பின்வருமாறு, தாழ்த்தப்பட்ட மக்கள் ஜனத் தொகை 1,388. இதர வகுப்பினர் 1,412. 1964 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் நாளைய ஊரக வளர்ச்சி இணை ஆணையாளர் ஆணைப் படி, அவியனூர் ஊராட்சி அவியனூர் என்றும், அழகியபெரு மாள் குப்பம் என்றும் இரு ஊராட்சிகளாகப் பிரிக்கப்பட்டது. அதன் காரணமாக முன்பு இருந்த ஆதி திராவிடர் குடியிருப்பு தவிர, எஞ்சிய வருவாய் கிராமம் அவியனூர் ஊராட்சியாகும். அழகிய பெருமாள் குப்பம் என்பது ஆதி திராவிடர் குடியிருப்பு, இதர மக்கள் குடியிருப்பு, ரெட்டிக் குப்பம் மற்றும் அவியனூரி லிருந்து பிரிக்கப்பட்ட குடியிருப்பு ஆகியவைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட் டுள்ளன. ஊராட்சியின் பெயர்—அவியனூர். மொத்த ஜனத் தொகை 2,148. தாழ்த்தப்பட்டோர் 1,035. அழகிய பெரு மாள் குப்பத்தில் மொத்த ஜனத் தொகை 924. தாழ்த்தப்பட் டோர் தொகை 430. இப்போது நேரடியாகப் பார்வையிட்ட போது, முன்னால் அவியனூர் ஊராட்சியிலிருந்து அழகிய பெருமாள் குப்பம் ஊராட்சிக்கு மாற்றப்பட்ட அவியனூர் ஆதித் திராவிட மக்கள் தொகை, தவறுதலாக மக்கள் தொகைக் கணக் கெடுப்பின் போது அவியனூர் ஊராட்சியில் சேர்க்கப்பட்டுள் ள என்று தெரிய வருகிறது என்று மாவட்ட ஆட்சித் [illegible]

தெரிவித்துள்ளார். தவிர, முன்னால் அவியனூர் ஊராட்சியிலிருந்து ஆதித் திராவிட குடியிருப்பு முழுவதும, அழகிய பெருமாள் குப்பத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால், இப்போது அவியனூர் ஊராட்சியில் ஆதித் திராவிடர்கள் இல்லை என்பது உண்மைதான் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில், அவியனூர் ஊராட்சிக்கு அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை அதிக விழுக்காடுள்ள ஊராட்சி அழகிய பெருமாள் குப்பம் ஊராட்சிதான் என்றும், இந்த ஊராட்சியில் உயர் நீதி மன்ற தடை நீக்கப்பட்டதும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கலாம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார். இதை நான் படித்ததற்குக் காரணம்.....

**டாக்டர் மு. கருணாநிதி :** : எங்களால் எடுத்துக் கூறப்பட்ட குறைபாடுகள் உண்மைதான் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு குறைபாடுள்ள நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவியனூர் ஊராட்சியில் ஆதித் திராவிடர்கள் இல்லையென்று அறிவிக்கின்ற நிலை இருக்கின்றபோது, அந்த ஊராட்சி மன்றம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்படி தனியாக ஒதுக்கப்பட்டிருக்க முடியும் ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த காலத்தில், எப்படி எப்படி மாற்றம் கொண்டு வந்தார்கள், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலே எப்படிப் பிரித்தார்கள் என்பதையும் நான் படித்துச் சொல்லி, அதற்குப் பிறகு விவாதித்து, இன்றைக்கு அரசிடமுள்ள புள்ளி விவரங்களைச் சொல்லி, அதிகாரிகள் கொடுத்துள்ளதைத் தெளிவாக்கி, அது உண்மைதான் என்று சொன்னால், இதை எப்படிச் சேர்த்தீர்கள் என்ற கேள்விக்கே இடம் இருக்கிறதா என்பது சந்தேகம்.

(பிற்பகல் 12—20.)

அதிகாரிகள் கொடுத்த தகவலில் இருந்து அது எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தை வைத்துத் தீர்மானிக்கப்பட்டது என்பதை எடுத்துச் சொல்லுகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன். தவறாக இருப்பின் எடுத்துச் சொல்வார்களானால் அதுதான் நாட்டுக்கு மிகவும் தேவையான ஒன்று, உதவிகரமான நிலைமையை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** அவியனூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த மக்கள் கலெக்டரிடம் பெட்டிஷன் கொடுக்கிறார்கள். அப்போது கலெக்டர் ரிப்போர்ட்டைப் பார்த்தீர்களா ? அதைப் பற்றி கலெக்டர் விசாரித்தாரா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் மீண்டும் சொல்லுகிறேன். இந்தத் தகவலைத் தருவதற்குக் காரணம்— எதிர்க்கட்சி தலைவர் அறிக்கை தினத்தந்தி பத்திரிகையில் வந்தது, அதைப் பார்த்தவுடன் ' இப்படி வந்திருக்கிறது ; இதற்குப் பதில் என்ன என்று கேட்டு வந்த பதிலைத்தான் தந்திருக்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** அந்த ஊர் மக்கள் எங்கள் ஊரில் அரிசனங்களே இல்லை என்று கலெக்டரிடம் பெட்டிஷன் கொடுக்கிறார்கள்.....''

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** குறுக்கீட்டை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நிலைமை என்று வெளியிட்ட பிறகு மாவட்ட ஆட்சி தலைவர் தவறு செய்து விட்டால் என்று சொல்லுவது போல் ' அது எப்படி' என்று கேட்டார்கள். அதை விதண்டாவாதம் என்று சொல்லுவதா அல்லது ஏதோ விவாதம் புரிய வேண்டுமென்ற ஆசையில் சொல்லுவது என்றுதான் கருத வேண்டும்.

**திரு. எல். இளையபெருமாள் :** இந்த சர்ச்சையில் நான் சம்பந்தப்பட்டவன் என்பதால் விளக்கத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். 1965 ஆம் ஆண்டு முதல் ஒரு அரிசன மகனே ரெட்டி குப்பம், அழகிய பெருமாள் குப்பம், அவியனூர் ஆகிய மூன்று இடங்களிலும் சேர்ந்து இருந்து தொடர்ந்து முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் தங்கவேலு அவர்களே தலைவராக வந்து கொண்டிருந்தார்கள். 1965 ஆம் ஆண்டுக்குப் பிறகு அங்கே அரிசன மக்களே தலைவராக வந்து விடுகிறார்கள் என்ற காரணத்திற்காக அதைப் பிரிக்க வேண்டுமென்ற முறையில் செய்யப்பட்டது. இதனால் அரிசன மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்காத நிலைமை ஏற்பட்டு விட்டது. இதுபோன்று பல இடங்களில் இந்த அவல நிலைமை இன்றும் இருக்கிறது, வருங்காலத்திலும் வரக்கூடும். ஆகவே, வருங்காலத்தில் இந்த நிலைமை ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் சொல்லியதைப் பற்றி நான் விசாரித்து எந்த ஆட்சிக் காலத்தில் எப்போது அப்படிச் செய்யப்பட்டது என்பதை இந்த அவையில் தெரிவிக்க முனைகிறேன்.

**திரு. துரைமுருகன் :** கலெக்டருக்கு அந்தப் பகுதி மக்கள் கொடுத்த பெட்டிஷன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?



***டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அவியனூர் கிராமத்தில் ஆதித் திராவிடர்கள் இல்லாத நிலைமை 1965 ஆம் ஆண்டில் வந்தது என்று முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். அதைத் திரு. இளையபெருமாள் அவர்களும் உறுதிப்படுத்தினார்கள். எந்தச் சூழ்நிலையில் அவியனூர் கிராமத்தில் ஆதித் திராவிடர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருந்தாலும் இன்றைக்கு தனிப் பஞ்சாயத்தாக அறிவிக்கப்பட்ட பிறகு அந்தப் பஞ்சாயத்தில் ஊராட்சி மன்ற தலைவர் தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்யக்கூட, வாக்காளர் பட்டியலில் ஆதித் திராவிடச் சகோதரர் அல்லது சகோதரி பெயர் இல்லாத நிலையில் எப்படி அந்த ஊரில் தேர்தல் நடைபெறும் ? அந்த இயலாமை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டும் கூட கவனிக்காத காரணம் என்ன ? இத்தகைய ஓட்டை உடைசல் நிறைந்த சட்டத்தினால்தான் பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறாமல் போய்விட்டது என்பதை இப்போதாவது அரசு உணருகிறதா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டையா உடைசலா என்பது எல்லாம் நதியிலே போகும்பொழுதுதான் தெரிகிறது. நாம் நல்ல மாலுமி என்றுதான கருதுகிறோம் நல்ல நிபுணர்கள் என்று நம்புகிறோம். ஆனால், அவர்கள் கேள்விகள் கேட்ட பிறகுதான் பதில் சொல்ல வேண்டிய பழக்கத்திலே வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது வழக்கத்தை மாற்றுவதற்கு தீவிர நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு இந்த அரசு வந்தபிறகு இதுவரையில் 11,355 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 60,399 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 27,774 வீடுகள் நடப்பு ஆண்டில கட்டப்பட்டு வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள், ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் வீடுகள் வீதம் 2 இலட்சம் வீடுகள் கட்ட அரசு முடிவு எடுத்து ஆணையிட்டுள்ளது. மேலும், 67,334 வீட்டு மனைப்பட்டாக்கள் ஆதி திராவிடர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இவைகளையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் தேர்தல் நேரத்திலே நாங்கள் என்ன என்ன சொன்னோமோ அவைகளை எந்த வகையில் செயலாற்றுகிறோம் என்ற புள்ளி விவரத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக 4-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே ஆதி திராவிடர் மலைவாழ்மக்கள் நலனுக்காக மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் மைய அரசு 206.80 இலட்சம் ஒதுக்கியது,

மாநில அரசு அந்தத் திட்டத்தின் கீழ் செலவிட்டது 244.99 இலட்சமாகும். இதிலிருந்து மாநில அரசு மத்திய அரசு ஒதுக்கிய தொகையை விட அதிகமாகவே ஒதுக்கியிருப்பது நன்கு விளங்கும். எனவே, உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதைப்போன்று வேறு எந்தப் பணிக்கும் நிதி மாற்றமோ நிதிப்பயன்படுத்தியமையோ நடைபெறவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1980–81-ஆம் ஆண்டில் மையஅரசு திட்டங்களுக்கு 244.02 இலட்சம் மட்டுமே இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. ஆனால், இத்திட்டங்களுக்கு 469.26 இலட்சம் ஆதி திராவிட நலத் திட்டங்களுக்காக மாநில அரசு செலவு செய்து வருகிறது. ஆகவே, நிதிமாற்றமோ அல்லது நிதி பயன்படுத்தாமையோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லுகிறபோது நிதி மாற்றம் என்று சொன்னார்கள். நான் தான் அதைச் சொன்னது. நான் சொன்ன வருஷமானது 1974–75-இல் பேக்வர்ட் கிளாஸ் என்ற தலைப்பிலே வந்த பணம் செலவு சரியாக இடப்படவில்லை என்று இந்த மாமன்றத்திலே சொல்லப்பட்டதை நான் சொன்னேன். இந்த 20 மாதங்களில் மாற்றப்பட்டதாக பத்திரிகைகளிலே வந்ததாகச் சொல்லப்பட்டு திரு. இளையபெருமாள் சொல்வது தவறு என்றுகூட அமைச்சர், காரியதரிசி அறிக்கைகள் மூலம் வந்தது. நான் இப்போது சொல்வது கூட வட இந்தியாவிலே தான் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் என்பதை பேக்வர்ட் என்று சொல்வது, இங்கே ஷெட்யூல்ட் கேஸ்ட், பேக்வர்ட் கிளாஸ், மோஸ்ட் பேக்வர்ட் கிளாஸ் என்பது நம்முடைய மாநிலத்திலே சொல்வது. அப்படி அந்த பணம் கொடுக்கப்படவில்லை என்பது ஒன்று. மற்றொன்று கல்விக்காக கல்லூரியில் படிக்கிற மாணவர்களுக்கு கொடுக்கிற பணம், மத்திய அரசு கொடுக்கிற பணத்தைத்தான் கொடுக்கிறார்களே ஒழிய, அவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகையாக கல்லூரியிலே செலவழிக்கின்ற தொகைக்கும் அதிகமான தொகை 1967 ஆம் ஆண்டு திரு. காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அந்த மாணவர்களுக்குக் கொடுக்கிற பணத்திலே செலவு போக அதிகமான செலவு கல்லூரிகளிலோ, பள்ளிகளிலோ உண்டாகுமானால் அதை மாநில அரசு கொடுத்து வந்தது. அந்த உதவியும் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற கருத்திலே நான் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியும் இருக்கிறேன், சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1974 பற்றிப் பேசவில்லை. 1982-இல் என்ன செய்யப்போகிறோம், 1981-இல் என்ன செய்தோம் என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டும் இப்போது. அந்த விவர

ணையில் இறங்காமல் நாங்கள் செய்தது சரியாகச் செய்திருக்கிறோம் என்பதிலே உங்கள் மகிழ்ச்சியிலே நாங்கள் பங்கு கொண்டு 1981–82-இல் ஒழுங்சாக நடந்திருக்கிறது..........

(பிற்பகல் 12–30)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பழைய கதைக்காகச் சொல்லவில்லை. அது பத்திரிகைகளில் வருகின்றபொழுது கேட்கின்ற கேள்விக்காகச் சொல்லி வந்தது. 1980–81-ஆக இருந்தாலும், 1981–82 ஆக இருந்தாலும், கல்லூரிகளிலேயும், பல்கலைக் கழகங்களிலேயும் படிக்கின்ற மாணவர்களுக்குக் கொடுப்பது போதுமானது அல்ல. மத்திய அரசு கொடுப்பதைத்தான் கொடுக்கிறீர்கள். அதற்கு அதிகமான செலவைத் தாங்கள் கொடுக்கவில்லை. ஆகவே இப்பொழுதாவது கருணைகூர்ந்து, அவர்கள் படிக்கின்ற கல்லூரிகளில் செலவாகின்ற அளவிற்கு உண்டான நிதியைக் கொடுத்தால் நிச்சயமாக நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். ஆனால், அதே சமயத்தில், பின் தங்கிய மாணவர்களுக்குக் கிடைக்கும்படியான நிலையிலே— நான் அதைப் பொறாமையாகச் சொல்லவில்லை, அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்குக் கல்லூரியிலே கிடைக்க வேண்டிய பணமெல்லாம் கொடுக்கும்பொழுது இந்த மாணவர்களுக்கும் இந்தக் கஷ்டநிலையிலே இருந்து வருகிறார்கள் என்பதை அரசு யோசித்து வருங்காலத்திலேயாவது தந்தால் முதலமைச்சரவர்களுக்கு நான் நன்றி தெரிவிப்பேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் இந்த அரசு மத்திய அரசு கொடுத்ததை விட அதிகமாக ஒன்றும் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு எண்ணத்தை நான் சொன்னால், யாரும் தவறாகக் கருதக்கூடாது.

ஒரு பொறியியல் நிபுணர் மக்களுடைய வரிப்பணத்தில் படித்துப் பட்டம் பெற்று பதவிக்கு வந்து சம்பாதிக்கிறார். அதே போல மருத்துவத் துறையிலேயும் வருகிறார்கள். இது போன்று பல துறைகளில் அவர்கள் மக்களுடைய வரிப்பணத்திலிருந்து படித்துப் பட்டம் பெற்று வருகிறார்கள்; அது மைய அரசானாலும், மாநில அரசானாலும், பதவிக்கு வந்த பிறகு தங்களைப்போன்று படிக்கின்றவர்களுக்கு அவர்கள் என்ன உதவிகளைச் செய்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைப் படித்துப் பட்டம் பெற்ற நிலையிலுள்ளவர்களாவது சிந்திப்பார்களேயானால் அது கொஞ்சம் உதவியாக இருக்கும். இதைப்போன்ற சந்தேகங்களெல்லாம் ஏற்படாமல் அது உதவிகரமாக அமையும் என்று நான் கருதுகிறேன். பல வேளைகளில் நாம் என்ன செய்ய முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கருதுகிறார்கள். நாம் எல்லாம் ஒன்று

சேர்ந்தால் எதையாவது நல்லது செய்ய முடியும். ஆகவே, ஒன்று சேர்ந்து நாட்டுக்காக எதையாவது செய்வோம் என்று முடிவெடுத்துக்கொண்டோமானால் அது நிச்சயமாக நல்ல முடிவாக இருக்கும் என்று சொல்லி, நிறையக் குறிப்புகள் இருந்தாலும், மேலவையில் பாக்கியை வைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி, இரண்டு மணி நேரம் கேட்டேன், இரண்டு மணி நேரத்திற்கு மேலேயும் ஆகிவிட்டது. ஆகவே, என்னுடைய பேச்சை முடித்துக்கொண்டு, இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** தலைவரவர்களே, சில கட்சிகளின் சார்பாகத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதி விசாரணை நடத்தப்படாததைப்பற்றிக் குறிப்பிடாததைப்பற்றித் திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அதில் அரசின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆர். டி. ஓ. அவர்கள் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திருவாளர்கள் டி. மணி, கே. எம். தங்கமணி ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் எஸ். இராசாராமன், எல். பலராமன், ஏ. சந்திரசேகரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றவனாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் ப. நெடுமாறன், சு. பாலன், பி. முகமது இஸ்மாயில் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர். :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

'' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும்—

1982ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 1ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



## 6. அரசினர் தீர்மானம்.

'பால் கமிஷன் '' பரிந்துரைகள் மீதும், அரசு எடுத்த நடவடிக்கைக் குறித்தும் விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர். :** அடுத்து அரசினர் தீர்மானம்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாள் அன்று அவைமுன் வைக்கப்பெற்ற, திருச்செந்தூரில் இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த சரிபார்க்கும் அதிகாரி திரு. சி. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் நாள் அன்று இறந்ததற்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பெற்ற சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சி. ஜே. ஆர். பால் அவர்களது தனி நபர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீது, 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் தேதியிட்ட, பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161-ஆம் எண். அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப் பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். :** அமைச்சர் ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

*** ** ***

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். :** இவை ஒன்றும் அவைக் குறிப்பிலே ஏறாது.

[பிற்பகல் 12—40]

***திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானம் அமைச்சர் அவர்கள் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்காகத் தரப்பட்டிருக்கிற ஒரு தீர்மான வடிவத்தை மட்டும்தான் பெற்றிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால், தீர்மானம் என்ற சொல் வருகிற காரணத்தால் இந்தக் கமிஷன் அறிக்கையைக் குறித்து அரசாங்கம் மேற்கொள்ளுகிற தீர்மானத்தை இதிலே காட்டப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இந்த தீர்மானம் புரொசிஜர்

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. க. அன்பழகன்] [1982 பிப்ரவரி 11]

என்ற முறையில் சட்டமன்றநடைமுறைக்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானமே தவிர, அரசாங்கத்தினுடைய முடிவை எடுக்கக்கூடிய தீர்மானம் இங்கே கொண்டு வரப்படவில்லை, அது நிறைவேற்றப்படவேண்டிய ஒன்று அல்ல என்று விளக்கம் தரப்படுமானால், பாயின்ட் ஆப் ஆர்டருக்கு விளக்கம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** : பால் கமிஷன் அறிக்கை மீது விவாதிப்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் அவையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பேசும்போது உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைப் பேசலாம். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு கிடையாது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான் அப்படிக் கருதவில்லை. இங்கே தீர்மானம் என்ற வார்த்தை வருகிற காரணத்தால் அரசாங்கம் மேற்கொள்கிற தீர்மானம் என்ற கருத்தைக் கொண்டு தான், பாய்ன்ட் அப் ஆர்டர் எழுப்பப்பட்டது இது அரசாங்கம் மேற்கொள்ளுகிற தீர்மானம் அல்ல. அவையிலே விவாதிப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு என்பது போன்ற ஒன்று என்பதை விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது அசன்டாவிலே இன்குலூட் பண்ணுவதற்கு, அரசின் தீர்மானம் என்ற வடிவிலே வருகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** I have given the resol tion

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** : இது அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது விவாதத்திற்காக. உறுப்பினர்கள் அவ்வப்போது பேசலாம். கருத்துக்களைச் சொல்லலாம்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே, இதிலே எங்களுக்கு உரிமை இருக்கிறது. அரசாங்கத்தினுடைய ஸ்டான்ட் என்ன என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** : உங்களுக்கு மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற 234 பேர்களுக்கும் அந்த உரிமை இருக்கின்றது.

**டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, தீர்மானம் கொடுத்தது மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் என்றாலும் கூட, அரசே எடுத்துக் கொண்டு இதை விவாதத்திற்கு கொண்டு வந்திருக்கிற காரணத்தால், அரசின் சார்பிலே இந்தத் தீர்மானம் முன் மொழியப்படலாம். அதிலே தவறு இல்லை.



1982 பிப்ரவரி 11]

**Tiru T. VENKATA REDDY :** On a point of order, Mr. Deputy Speaker Sir, The English copy of the Paul Commission Report has not been circulated to me in spite of my requisition.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** : எல்லாருக்கும் கிடைத்திருக்கிறது. உங்களுக்கும் வரும்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே லீகலாக ஒரு தவறு இருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். "சி.ஜே. ஆர். பால்" அவர்களது தனி நபர் விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீது, 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் தேதியிட்ட, பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161-ஆம் எண். அரசாணையில் இணைப்பில் குறிப்பிடப் பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பால் கமிஷன் பரிந்துரை மீது அல்ல விவாதம், அந்தக் கமிஷன் அளித்த பரிந்துரை மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை பற்றி மட்டும்தான் இங்கே விவாதிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அது சரியாக இருக்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். பரிந்துரையைப் பற்றித்தான் இங்கே விவாதிக்க வேண்டுமே தவிர, பரிந்துரை மீது அரசாங்கம் அளித்திருக்கிற ஆணையின் மீது விவாதம் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது எந்த வகையிலே பொருத்தம் என்பதை எனக்கு விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, கமிஷன் ரிப்போர்ட்டை பேஸ் பண்ணித்தான் அரசாங்கத்தின் ரிப்போர்ட் இருக்கின்றது. அரசு நடவடிக்கையைப் பற்றி விமர்சிக்கின்றபோது பரிந்துரையும் சேர்த்துத்தான் வரும்.

***டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், விசாரணைக் கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீது, 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் தேதியிட்ட, பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161-ஆம எண். அரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்", என்கிற வாசகம் அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்துப் பேச வேண்டும் என்பது போல் இருக்கிறது. எனவே தான் திரு. நெடுமாறன் அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் சரியானது அல்ல. அந்த வாக்கியம் எப்படி அமைய வேண்டும் என்று சொன்னால், சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. சி.ஜே.ஆர். பால் அவர்களது தனி நபர் விசாரணை

கமிஷன் அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீதும், 1982-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ஆம் தேதியிட்ட பொது (சட்டம், ஒழுங்கு-அ) துறையின் 161-ஆம் எண். அரசாணையில் இணைப்பில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கை குறித்தும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதில் ஒன்றும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. திருத்திக் கொள்ளலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் தேதியன்று திருச்செந்தூரில் இந்து அறநிலையத் துறையைச் சேர்ந்த சரிபார்க்கும் அதிகாரி திரு. சி. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் அடித்து கொலை செய்யப்பட்டு, தூக்கிலே தொங்கவிடப்பட்டு, அதன் காரணமாக பலரும், பல்வேறு அரசியல் கட்சிகளும் எழுப்பிய புகார்களின் அடிப்படையில் நீதியை எந்தச் சிரமப்பட்டாகிலும் வெளியே கொண்டுவரவேண்டும் என்று போராடிய பக்கங்களுக்கு முதன் முதலிலே இந்த மன்றத்தின் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மறைந்த திரு. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் அவருடைய இலாகாவினராலேயே கூறப்படுகின்ற விதத்தில் ஒரு நேர்மையான அதிகாரி ஆவார். அவரை அடித்துக் கொலை செய்து தூக்கிலே மாட்டிவிட்டார்கள் என்று அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் போராட்டம் எழுப்பி, அதன் பிறகுதான இந்த விசாரணை செய்யும் நிலைமை வந்தது. அப்படி மறைந்த அந்த சுப்பிரமணியப்பிள்ளை அவர்களுக்கும் நம்முடைய அஞ்சலியை நாம் இங்கே செலுத்துவதன் மூலம் நாமும் மனிதன்தான் என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்க உதவும் என்று நான் கருதுகிறேன்.

நடைபெற்ற சம்பவங்கள் குறித்து அதைப் பற்றி வைக்கப்பட்டுள்ள அந்த தஸ்தாவேஜுகளைப் பார்த்தால், என்னால் ஓரளவிற்குப் புரிந்து கொள்ள முடிகிறது. திரு. சுப்பிரமணியப் பிள்ளை என்கிற வெரிபிகேஷன் ஆபீசர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது சாகடிக்கப்பட்டாரா, அல்லது தற்கொலை என்று உலகத்துக்கு முன்னால் காட்டப்பட்டாரா என்பதைத்தான் கண்டறிய வேண்டிய முக்கியமான பொறுப்பு பால்கமிஷனுக்குக் கொடுக்கப்பட்டது. இதை எவ்வாறு தவிர்க்கலாம், இனி மேல் அங்கே வரும் வெரிபிகேஷன் ஆபீசர்—ஒரு வேளை சுப்பிரமணியப் பிள்ளை சாகடிக்கப்பட்டார் என்பது உண்மையானால், பிறகு வரக்கூடிய வெரிபிகேஷன் ஆபீசர்களும் இப்படி சாகடிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம்; குளியல் அறையில் குழாய் இருக்கலாமா, அது உயரமாக இருந்தால் தானே அதிலே எடுத்து மாட்டுவதற்குச் செள





கரியமாக இருக்கும், அந்தக் குழாய்களே இல்லாமல் இருந்துவிட்டால் கொலையை மறைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு வழி இல்லாமல் போகுமே என்று ஆராய்வதற்குத்தான் இந்த அரசாங்கத்தை பல எதிர்க்கட்சிகள், நியாயவாதிகள் அத்தனை பேரும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், இன்னும் சொல்லப்போனால், எங்களுடைய கட்சியின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருச்செந்தூரிலிருந்து வந்து இருக்கக்கூடியவர்களையெல்லாம் நேரடியாகக்கேட்டு, அதைப் புலன் விசாரணை செய்து, அது தற்கொலை அல்ல, கொலை தான் என்று சொன்னதற்குப் பிறகும் கூட, அரசாங்கம் அப்படியா, அதை நாங்கள் விசாரித்துப் பார்க்கின்றோம், அதை விசாரித்துப் பார்த்து உண்மையைக் கண்டறிய முனைகிறோம் என்று சொன்னார்களா என்றால் இல்லை.

(பிற்பகல் 12–50.)

அவசரம் அவசரமாக எங்களுடைய தலைவரை இழித்தும் பழித்தும் இவர் கற்பனையிலே பேசுகிறார் என்று சொன்னிர்களே தவிர நடைபெற்ற சம்பவத்தின் உண்மை என்ன என்பதைக் கண்டறிய முயற்சி செய்யவில்லை. இது தொடர்பாகச் சொல்லப்படுகின்றவைகளிலே எது உண்மை, எது உண்மையல்ல என்பதைக் கண்டறிய வேண்டும் என்ற முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபட்டதா என்று பார்த்தால் ஆரம்பக் காலத்திலிருந்தே அவர்கள் ஒரே போக்கிலேதான், ஒரே நோக்கிலேதான், செய்தது சரி, நடைபெற்ற சம்பவங்கள் சரி, அதை நியாயப்படுத்த வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும் என்பதிலே இருந்ததே தவிர, உண்மை என்ன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதிலே அரசாங்கத்தின் நடவடிக்கை இல்லை. அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்கிறவர்கள் இந்த கொலையைச் செய்தார்கள, முதலமைச்சரே நேரடியாக இருந்து இந்த கொலையைச் செய்தார் என்று நாங்கள் சொல்லவில்லை. முதலமைச்சரும் அல்ல மற்றவர்களும் இதிலே நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை.

ஆயிரக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான அறங்காவலர் குழுக்கள் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான அறங்காவலர்கள் இருக்கிறார்கள். வருமானம் வரக்கூடிய கோவில்களிலே அறங்காவலர்களாக வருவதற்கு போட்டி அதிகமாக இருப்பது நமக்குத் தெரியும். வருமானம் இல்லாத கோவில்களுக்கு பணி செய்ய பக்தர்களும் போக மாட்டார்கள். காரணம் அங்கே அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. அதனால் வருமானம் இல்லாத கோவில்களில் போட்டியும் இராது, தகராறும் இராது. சுப்பிரமணிய பிள்ளை போன்றவர்களும் அங்கே போக மாட்டார்கள், கொலை நடக்க வேண்டிய அவசியமும் இருக்காது.

இந்தச் சம்பவத்தைப் பார்க்கின்ற மற்ற மாநிலத்தவர்கள் என்ன நினைப்பார்கள் சில இலட்சங்களே வருமானம் வரக் கூடிய ஒரு கோவிலை நிர்வகிக்க சக்தியற்ற, அந்தக் கோவில் நிர்வாகத்தைச் சரியாக நடத்த முடியாத அரசாங்கம் இங்கே இருக்கிறது என்று தான் மற்ற மாநிலத்தில் இருப்பவர்கள் நினைப் பார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

நேற்றையதினம் வந்த பத்திரிகையை பார்த்தால் தெரியும். திருப்பதியிலே இருக்கிற கோவிலில் ஏறத்தாழ 26 கோடி ரூபாய் தங்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். பல கோடிக் கணக்கான ரூபாய் அங்கே வருமானம் வருவதாகச் சொல்கிறார்கள். நீங்கள் கேள்வி பட்டதுண்டா? நீங்கள் அந்தக் கோவிலிலே இருக்கிற அதிகாரிகளை இப்படி யெல்லாம் செய்தார்கள் என்று கேள்விப் பட்டது உண்டா அல்லது பத்திரிகையிலே இப்படி செய்தி வந்தது உண்டா? அங்கும் இருக்கலாம் ஒன்றிரண்டு குறைபாடுகள்.. நாணயத்தை எண்ணக் கூடியவர்கள், தங்கக் காசுகளை எண்ணக் கூடியவர்கள் ஒன்றிரண்டை எடுத்து மறைத்து வைத்திருக்கலாம். ஒரு பவுன், இரண்டு பவுன் நகைகளை எண்ணக் கூடியவர்கள் எடுத்து வைத்துக் கொண்டார்கள்; அதைப் பார்த்த அதிகாரிகள் கையும் களவுமாகப் பிடித்தார்கள்; தண்டனை வாங்கிக் கொடுத் தார்கள் என்றுதான் திருப்பதி கோவிலிலே இருந்து செய்தி வருமே தவிர இப்படிப்பட்ட கொலையும், கொள்ளையும், கொள்ளையடிப்பவர்களை தடுக்கின்ற அதிகாரியை கொலை செய் வதையும் போன்ற செய்திகள், நிலைமைகள் மற்ற மாநிலங்களில் இல்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே இந்த ரிப்போர்ட்டினை வைத்திருக்கிறீர்கள். கமிஷனை நியமித்தீர்கள். இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீதிபதி விசாரணையை நீதிபதி கொண்டு விசாரிக்க வேண்டிய நிலைமை வருமோ என்று சொன்னார்கள். அந்த எண்ணம் பொதுமக்களுக்கும் வரக் கூடாது; அரசாங்கத்திற்கும் வரக்கூடாது. நீதி விசாரணை என்று வைத்துவிட்டால் அது சரியாக இருந்தாலும், தவறா இருந்தாலும், அதனுடைய முடிவுகள் எப்படி இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதுதான் இது வரையில் கையாளப்பட்ட அனுசரிக்கப்பட்ட ஒரு முறையாகும்.

நீங்களே ஒரு நீதிபதி விசாரணை வைத்திருக்கிறீர்கள். அந்த நீதிபதி இந்தச் செய்திகளைத் தந்திருக்கிறார். நீதிபதி பால் அவர்கள் சுப்பிரமணிய பிள்ளை தற்கொலைதான் செய்துக் கொண்டார்; டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்களும் மகாதேவன் அவர்களும் அதைப்போல இராஜாராம் அவர்களும் மற்றவர் களும் கூறுவது உண்மைதான்; இது தற்கொலைதான் என்று சொல்லிவிட்டால் அப்போது உங்கள் நிலைமை என்ன? பால் தவறு செய்து விட்டார் என்று சொல்வீர்களா? பால் கமிஷன் தவறான முடிவை தந்து விட்டது என்று சொல்வீர்களா? ஒரு





கமிஷன் என்று போட்டு விட்டால் அந்த கமிஷன் முடிவை அமுல் படுத்த வேண்டும். இதிலே என்ன குடி முழுகிப் போய்விடும். எத்தனையோ கொலைகள் நடக்கின்றன. கொலைகாரர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அரசாங்கத்திற்கு வேண்டியவர்களாக கூட இருக்கலாம்.

அந்த குற்றவாளி தப்பி விடுவது என்றால் அரசாங்கத்திற்கு அது கௌரவத்தைக் கொடுக்குமா? அது நியாயமா? நேர்மையா என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். இது உண்மையிலேயே கொலையாக இருக்குமேயானால் அரசாங்கம் அதைத் துருவிப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர,

The Government should not sit in judgement over the Commission itself.

ஒரு விசாரணைக் கமிஷன் என்று வைத்து விட்டால் அந்தக் கமிஷனின் முடிவு சரியில்லை என்று செக்ரட்டேரியட்டிலே, இருக்கின்ற செக்கரட்டரிகளும், டெபுட்டி செக்கரட்டரிகளும், செக்ஷன் ஆபீசர்களும் அதைக் கன்சிடர் செய்ய வேண்டும், அவர்கள் கொடுத்துள்ள ஆதாரங்களை அப்ரசியேஷன் செய்ய வேண்டும், என்றெல்லாம் எடை போட்டுப் பார்ப்பதைப்போன்று பால் தவறு செய்து விட்டார் விசாரணைக் கமிஷன் தவறு செய்து விட்டது என்று சொல்லப்படுவது சரியா! இது என்ன ஒரு அப்பலேட் கோர்ட்டா! கமிஷனுக்கு மேலே அரசாங்கம் ஒரு அப்பலேட் கோர்ட்டா! அந்தக் கமிஷனை அரசாங்கம் நியமிக் கின்றது என்றால் அரசாங்கத்தினுடைய அதிகாரத்தை எல்லாம் ஒன்று திரட்டி நாங்களாக விசாரிப்பதற்குப் பதிலாக ஒருவரை நியமித்து இருக்கிறோம், அவர் விசாரித்து என்ன சொல்கிறாரோ அதை ஏற்றுக் கொள்வோம் என்றுதானே அர்த்தம். ஆனால் அவர்கள் சொல்வது அரசாங்கத்திற்கு விரோதமாக இருக்கின்றது என்ற காரணத்தால், அது காட்டிக் கொடுத்துவிடக் கூடிய, நிலைமையிலே இருக்கின்றது என்ற காரணத்தால் அவர்கள், முடிவை அப்ரிஷியேஷன் செய்கிறீர்கள்.

The commission should have believed this and the commission had mis-believed him.

என்று நீங்கள் அப்ரிஷியேஷன் பண்ணியது சரியல்ல. அசவே இப்படித்தான் அவர்களுடைய முடிவு இருக்க வேண்டும் என்று சொல்வீர்களேயானால் அதற்கு முடிவே இருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று ஒரு கமிஷன் என்பதல்ல, எத்தனைக் கமிஷன் போட்டாலும் அந்தக் கமிஷன் களுக்கு மேலே எல்லாம் இப்படி நீங்கள் உட்கார்ந்துக் கொண்டு விளக்கம் கொடுத்தீர்கள் என்றால் அது சரியல்ல. நீங்களே ஒரு முடிவான எண்ணத்தை வைத்துக் கொண்டு ஒரு கமிஷனை, அமைக்கின்றபோது ஒருவேளை அந்தக் கமிஷன் உங்களுக்குப் பாதகமாக இருந்தால் அதை ஏற்றுக் கொண்டு படம் பிடித்து

[திரு வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 பிப்ரவரி 11

பத்திரிகையிலே போடலாம் என்றும், அதாவது சுப்ரமணியப் பிள்ளை தற்கொலைதான் செய்து கொண்டார் அவர் அடித்துச் சாகடிக்கப்படவில்லை என்று விளம்பரப்படுத்துவதற்கு விரும்பினீர்களா ! ஆகவே விசாரணைக் கமிஷன் முடிவு உங்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கும் என்று நீங்கள் நியமித்தீர்களா ? இதுபற்றி நீங்கள் நேர்மையாக எண்ணிப் பார்க்க வேண்டும். விசாரணைக் கமிஷன் என்று வைத்து விட்டாலே,

The decision on the finding of the Commission is always binding on the Government who appointed the Commission.

அதைப் பெருந்தன்மையோடு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் : இன்றையதினம் சட்டமன்றத்திலே இதை எடுத்துக் கொள்வதற்கு முன்பு ஒன்றைச் சொன்னார்கள். இந்த கமிஷன் ரிப்போர்ட்டை இங்கே வைத்தது பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ரிப்போர்ட்டினை மன்றத்திலே வைத்து மன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சகல கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க வேண்டும் The [illegible] ed. அப்படி அரசாங்கமே ஒரு முடிவு எடுத்து விட்டது என்றால் அது சரியல்ல. அறங்காவலர் குழுவைக் கலைக்க மாட்டோம் என்றும் கலைப்பது சாத்தியக்கூறல்ல என்று முடிவெடுப்பதும் சரியல்ல. பால் அவர்கள் என்ன சொன்னார் ? '' அறங்காவலர் குழுவின் தலைவராக டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்கள் இருக்கின்ற வரையில், அந்த அறங்காவலர் குழு இருக்கின்ற வரையில் அதிகாரிகள் உண்மையைச் சொல்ல மாட்டார்கள், ஆனால் நான் பார்த்த அளவிலே இந்தச் சாவு தற்கொலை அல்ல, இது கொலைதான் '' என்பதை ஒரு ப்ரைமா பேசியாக பால் அவர்கள் சொன்னதற்குப் பிறகு அறங்காவலர் குழுவைக் கலைத்திருக்க வேண்டுமா ! அல்லது கலைத்திருக்கக் கூடாதா ? யார் அந்த டாக்டர் பாலகிருஷ்ணன்? எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் என்றால் இப்படிச் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் ராஜினாமா செய்ய மாட்டேன் என்று சொல்கிறார் என்று சொல்லலாம். அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் ராஜினாமா செய்ய மாட்டேன் என்று சொல்கிறார் என்று சொல்லலாம். ஆனால் அவர்கள் யார் ?

14,000 பஞ்சாயத்துக்களை கலைத்தீர்கள். 1977ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு. அப்போது சட்டம் எங்கே போனது ? ஆகவே இந்த அறங்காவலர் குழுவை மட்டும் கலைக்க முடியாது என்று ஏன் சொல்கிறீர்கள் என்றால் ஏற்கெனவே அரசாங்கம் எடுத்துவிட்ட ஒரு முடிவிற்கு வலுவூட்டுவதற்காகத்தான் அறங்காவலர் குழுவினைக் கலைக்க மாட்டோம் என்று சொல்கிறீர்கள்.

[பிற்பகல் 1-00.]

நினைத்தால் கலைக்க முடியாதா நமது முதலமைச்சர் அவர்கள்? அங்கே இருக்கக்கூடிய அறங்காவலர் குழுவை அழைத்து நீங்களாகவே ராஜினாமா செய்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கக்கூடாதா? அல்லது அந்தக் கமிஷனிடத்திலே கலைக்கச் சொல்லி உத்தரவு போட்டு அவர்கள் கலைக்க முடியாது எறுச் சொன்னார்களா?

அறங்காவலர் குழுத் தலைவரைப் பற்றி — எனக்கு நேரிடையாக அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன் அவர்களைப்பற்றி, ரௌடி ஷீட் ஓபன் செய்யுங்கள் என்று டெப்புட்டி சூப்பிரண்டெண்டுக்கு எழுதியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உத்தமர், நேர்மையாளர்தான் இந்த அறங்காவலர் குழுவிற்குத் தலைவராக இருக்கிறார்........(குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தகவலை மாத்திரம் சொல்லிவிடுகிறேன். அறங்காவலர் குழுத் தலைவரான டாக்டர் பாலகிருஷ்ணன் மீது ரௌடி ஷீட் ஓபன் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதே திருச்செந்தூரில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் மீதும் ரௌடி ஷீட் ஓபன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசியல்வாதிகள் மீது ரௌடி ஷீட்டுகள் ஓபன் செய்யப்படுவது எல்லாம் எந்தெந்த அடிப்படையில் செய்யப்படுவது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறை இன்னொரு தவற்றால் சரி செய்து விட முடியாது. அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் பாலகிருஷ்ணன் பெயரில் ரௌடி ஷீட் ஓபன் செய்வது என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகின்ற நேரத்திலே வருகிறது என்றால், அது முனைப்பாக கவனித்து பார்க்க வேண்டிய விஷயமாகும். ஆகவே, அதற்கு முன் உதாரணம் காட்டி, அவர் மீது குறையில்லையா, இவர் மீது குறையில்லையா என்ற வகையில் சொல்லக்கூடாது.

அதுமட்டுமல்ல, அந்தக் கொலையைப் பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவரே — குன்றி மலையான் என்று பெயர் போட்டிருக்கிறார்கள். — இந்தக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கிறார். அந்தக் குன்றிமலையான் என்பவர் சொல்கிறார், இப்படி இப்படியெல்லாம் கொலை செய்யும் முயற்சி நடைபெற்றது என்று விளக்கிச் சொல்கிறார்.

எல்லோரும் சேர்ந்து அந்த வெரிபிகேஷன் ஆபீசரை திருச்செந்தூரிலே உள்ள விருந்தினர் மாளிகையில் அடித்தார்கள். சுவற்றிலே மோதினார்கள். கடலிலே தூக்கி எறிய வேண்டும் என்று சொன்னார்கள். ஜனங்களேல்லாம் சுற்றிலும் கூடி விட்டார்கள். அவர்கள் பார்த்துவிடுவார்களே என்று போலீசார் அவர்களை அடித்து விரட்டினார்கள். அதற்குப் பிறகு அவரை படிக்கட்டிலே மோதினார் பாலகிருஷ்ணன் என்று சொல்லியிருக்கிறார். இப்படியெல்லாம் சொல்லியிருக்கக்கூடியவர்கள் யார் ! எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்.

ஆனால் அந்த குன்றிமலையானைப் பற்றி டாக்டர் பால ருஷ்ணன் என்ன சொல்கிறார் என்றால், அவர் தமக்கு நேர் எதிரி — என்று சொல்கிறார். அவர் கட்சிக்குள்ளேயே இருப்பவர், கட்சிக்குள்ளேயே இருக்கும் கலகக்கட்சித் தலைவர் என்று சொல்லியிருக்கிறார். . டாக்டர் பாலகிருஷ்ணன் செய்தது தவறு என்றும், வெரிபிகேஷன் ஆபிசரை கொலை செய்து, அவரைத் தூக்கிலே போட்டு விட்டார்கள் என்றும் அவர் சொன்னதற்காக அவர் என்னுடைய எதிரி என்று சொன்னால் என்ன நியாயம் ? அவர் செய்தது கொலை அல்ல. நடைபெற்றது தற்கொலைதான் என்றும் சொன்னால் என்ன நியாயம் ?

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நமது கிராமங்களிலே சொல்வார்கள். அரசாங்க கோழிமுட்டை அடித்தால் அம்மியும் உடையும் என்று. ஒரு கோழி முட்டை இருக்கிறது. அதைத் தரையில் எறிந்து பாருங்கள் அந்த முட்டை உடைந்துபோகும். ஆனால் அரசாங்க அதிகாரிகள் சொல்வார்கள் ; அரசாங்கம் சொல்லும், எங்களிடம் ஒரு கோழி முட்டை இருக்கிறது. அதை போட்டால் அம்மியும் உடைந்து விடும் என்று. ஏனென்றால் சொல்வதை அவ்வளவு வலுவாக அழுத்தம் திருத்தமாகச் சொல்வார்கள். அதற்கு அடையாளம் தான் இந்தக் கூற்று. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இப்படித்தான் விசாரணைக் கமிஷன் வருவதற்கு முன்னாலேயே, இது தற்கொலைதான் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். ........(குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தின் அடிப்படையில் சபையில் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார் என்றே தொடர்ந்து சொல்லிக்கொண்டே வருகிறார் (குறுக்கீடு) இதற்கு விளக்கம் அளிக்க வேண்டிய நேரத்திலே என்னாலேயே விளக்கிச் சொல்ல முடியும் என்றாலும், ஒரு தகவலைக் கூறிவிட்டால், மேற்கொண்டு பேசுவதற்கும், பேசுபவர்களுக்கும் வசதியாக இருக்கும் என்ற வகையில் தெரிவித்துவிடுகிறேன். அரசாங்கத்தின் கொள்கைகளையும், அறிக்கைகளை



யும் வழக்கமாக அரசாங்கத்தின் சார்பில் தெரிவிப்பதைப் போலத்தான் நானும் தெரிவித்தேன். என்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்லவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** எங்களுடைய தலைவர் அவர்கள் இது தற்கொலை அல்ல கொலைதான் என்று சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேக வேகமாக முன் வந்து அதை மறுக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? தற்கொலையா அல்லது கொலையா என்பதை விசாரணைக் கமிஷன் வைத்து விசாரித்து முடிவு தெரிவதற்குள், தற்கொலை தான் இது, கொலையல்ல என்று மறுக்கிறார்களே....

'What infe ence, we, people have to draw from the statement of the Minister

ஆகையினால்தான் நான் சொல்ல விரும்புகிறேன். குன்றி மலையான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வர் என்றாலும் உண்மையைச் சொல்லிவிட்ட காரணத்தால் அவர் எனக்கு எதிரான கழகக் கோஷ்டியைச் சேர்ந்தவர் என்று வர்ணிக்கப்படுகிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த முடிவு களை எடுக்கிறார்கள். எந்தத் தேதியில் இந்த கமிஷன் சம்பந்த மாக இந்த அரசு முடிவுகளை எடுத்தார்கள் ? என்னென்ன தேதிகளில் என்னென்ன முடிவுகளை எடுத்தார்கள் ? 1-ம் தேதி இங்கே வைக்கிறார்கள். இந்த அரசாங்கம் எடுத்த முடிவுகள், இன்னும் எடுக்க வேண்டிய முடிவுகள், எடுக்கக்கூடிய முடிவுகள் இந்த ரிப்போர்ட்டை அரசாங்கம் பரிசீலனைசெய்து சட்டமன்றத் தில் வைத்து பரிசீலித்ததற்குப் பிறகு அரசாங்க முடிவு இவை என இன்னொரு நாளைக்கு அந்த முடிவை எடுக்கக்கூடாதா ? சட்டத்தில் இடமில்லையா ? ஆகவே அரசாங்கம் ஒரு முடி விற்கு வந்துவிட்டது. இது கொலைதான், இருந்தாலும் அவர்கள் கட்சிக்காரர் செய்துவிட்டார், அவர்களை, தங்களை ஆதரிக்கிற வர் அப்படிச் செய்து விட்டார் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற இயல்பான ஒரு ஆசை. அந்த இயல்பான ஆசை காரண மாக நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் இதற்கு பாதுகாப்பாக இருப்பார்களோ என்று எங்களைப் போன்றவர்கள் சந்தேகிக்கா மல் இருக்க முடியவில்லை. (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்னொன் றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நீங்கள் ஒரு மிகச் சிறந்த வழக்கறிஞர். இன்னும் சொல்லப்போனால் நீங்கள் கிரி மினல் வழக்குகளில் நிறைய வழக்குகளை நடத்தியிருக்கிறீர்கள். கொலை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. இவைகள், எல்லோரும் நேராகப் பார்த்துத்தான் கொலை செய்வது அல்ல. அரசாங்கத்தின் ஒய்வு பெற்ற டாக்டர்

அவர்கள் என்ன சொல்கிறார்கள் ? இது தற்கொலை இல்ல,
கொலைதான் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதையும்
கமிஷன் முன் வந்து அவர்கள் சொல்லுகிறார்கள். அரசாங்கம்
என்ன சொல்கிறது தெரியுமா? அந்த ஓய்வு பெற்ற நிபுணர்
பிணத்தை பார்க்கவில்லை என்று. பிணத்தைப் பார்த்துத் தான்
ஜட்ஜ் ஜட்ஜ்மென்ட் கொடுக்கிறார்களா டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்
செஷன்ஸ் கோர்ட்டில். அல்லது உயர்நீதி மன்றத்தில் இருக்கக்
கூடியவர்கள் அதற்குப் பிறகுதான் முடிவிற்கு வருகிறார்களா?
அவர்கள் பார்க்கவில்லை என்று அரசாங்கம் ரிப்போர்டின்
முடிவில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் இவர்களுக்கு மனம்
இல்லை அது கொலை என்று ஒப்புக்கொள்வதற்கு.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். ஒருவன் தற்
கொலை செய்துகொள்ள வேண்டுமென்றால் தானே தன்னந்
தனியாக மரத்திலோ அல்லது உயரமான இடத்திலிருந்தோ
தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்றால் முதலில் தற்
கொலை செய்துகொள்ள வேண்டுமென்று முடிவெடுத்தவன்
மரத்திற்கு மேலே ஏறுவான். மரத்திற்கு மேலே ஏறி கிளையில்
உட்கார்ந்துகொண்டு அதில் ஒரு சுருக்கு போட்டு தன் கழுத்திலும்
சுருக்கு போட்டுக்கொண்டு 'தொப்' என்று குதிப்பான். ஆனால்
எட்டடி உயரத்தில் உள்ள ஒரு பைப்பில் ஒருவன் ஏறி அதிலும்
மாட்டி இதிலும் மாட்ட முடியாது என்று அந்த நிபுணர்
சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன், அதை ஏற்றுக்
கொள்வது சரியல்ல என்று அரசாங்கம் முடிவு எடுத்தால் என்ன
அர்த்தம் ? (மணியடிக்கப்பட்டது.) ஆக, நடைபெற்ற சம்ப
வங்கள், நடைபெற்ற கொலை இவைகளை மறைக்க வேண்டும்
என்பதற்காகத்தான் ஒரு நேர்மையான, நியாயமான அதிகாரியை.

I am not taking much of your time.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். யார் சொல்கிறார்
கள் ? அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர் அபிடவிட் கொடுத்திருக்
கிறார். அவர் சொல்கிறார். வெரிபிகேஷன் ஆபீசர் வருவ
தற்கு முன்னதாகவே உண்டியல் உடைக்கப்பட்டது, உண்டி
யல் திறக்கப்படுகிற சமயத்தில் சீல் இருக்கிறது என்று வெரிபி
கேஷன் ஆபீசர் ரிக்கார்டில் கையெழுத்து போட வேண்டும்.
கையெழுத்து போட்டாரா ? அந்த ஆபீசர் 7-30 மணிக்கு
வந்தது வாஸ்தவம் என்றால் 12 மணிக்கு அல்லது 11 மணிக்கு
அவர் சாகடிக்கப்பட்டிருக்கிறார் என்றால் இவ்வளவு நேரமாக
ஏன் கையெழுத்து போடவில்லை ? காரணம், அங்கே உண்டியல்
உடைக்கப்பட்டது. அந்த உண்டியல் உடைக்கப்பட்டு அதி
லுள்ள, அதில் இருக்கக்கூடிய பத்து இலட்சம் ரூபாய் பெறக்
கூடிய வைர வேல் களவாடப்பட்டது என்று சொல்வது உண்மை
யாக இருக்குமோ என்ற அடிப்படையில்தான் வெரிபிக்கேஷன்
ஆபீஸர் வருவதற்கு முன்னதாக உடைக்கப்பட்ட காரணத்தால்





"I will not sign the hundial regis e . It should be opened in my
presencc. Who are you to open the Hundi before I come?"

ஆகையினால் நான் கையெழுத்து போடமாட்டேன் என்று சொன்
னதற்குப் பிறகுதான், அவர் ரிட்டயரிங் ரூம் அல்லது விருந்தினர்
மாளிகைக்கு சென்ற பிறகுதான் ரெஜிஸ்தரை எடுத்துக்கொண்டு
இங்கே கையெழுத்து போடு என்று வாதாடியிருக்கிறார்கள்.
அங்கே. யார் ? அங்கே நிர்வாக அதிகாரியாக இருக்கக்கூடிய
வர், அங்கே வேலை செய்யக்கூடிய பணியாளர்கள், மற்றுமுள்ள
அறங்காவலர் குழுவைச் சார்ந்த இன்னும் சிலர் இவர்கள் அத்
தனை பேர்களும் சென்று வற்புறுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு
ஆதாரபூர்வமான நகல்கள் இருக்கின்றன.

[முற்பகல் 1-10]

இந்த விசாரணைக் கமிஷனைப் பற்றி இந்த மன்றத்திலும்,
பொதுமக்களும் நம்ப வேண்டுமென்றால், அது கொடுத்திருக்
கக்கூடிய தீர்ப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
ஆனால், இந்த விசாரணைக் கமிஷனில் இந்த அரசாங்கம்
எப்படி நடந்துகொண்டது ? இந்த விசாரணைக் கமிஷனை
மத்திய அரசாங்கம் நியமித்தது போலவும், மாநில அரசு
அதற்கு வேறு ஸ்டாண்டிலே இருப்பதுபோலவும் இருக்கிறது.
இந்த விசாரணைக் கமிஷனில் அதிகாரிகள் அணிவகுத்து, இது
தற்கொலைதான், தற்கொலை தான் என்று ஒருவருக்கு பின்
ஒருவராக சொல்ல வைத்தது ஏன் ? இதிலே குற்றவாளி யார் ?
அறங்காவலர்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் யார்- திருச்செந்
தூரிலே ஒருசிலர் கொள்ளையடிக்க வேண்டுமென்ற நோக்கத்
திற்காக, வைர வேலை யாருக்கோ கொடுக்கவேண்டுமென்ற
நோக்கத்திற்காக செய்த ஒரு தவறு என்பதை அரசாங்கம்
சரியாக விசாரணை செய்யவில்லை.

யார் போட்ட விசாரணைக் கமிஷன் இது மத்திய அரசாங்கம்
போட்ட விசாரணைக் கமிஷனாக இருக்குமானால்,
நீங்கள் வாதாடலாம். நீங்கள் எடுத்த நிலை சரியில்லை என்று
சொல்லலாம். மத்திய அரசாங்கம் ரே கமிஷன் போட்டிருக்கிறார்
கள். அந்த ரே கமிஷன் விசாரணை சமயத்தில், தமிழ்நாடு அரசாங்
கம் கோடிக்கணக்கான ரூபாய்களை லஞ்சமாக வாங்கவில்லை
என்று சொல்லுங்கள். எரி சாராய ஏற்றுமதியில் நீங்கள்
கொள்ளை அடிக்கவில்லை என்று சொல்லுங்கள். அது நியாயம்
ஆனால் நீங்கள் போட்ட விசாரணைக் கமிஷனை நீங்களே
நம்பவில்லை.

இப்போது சதாசிவம் கமிஷன் போட்டிருக்கிறீர்கள். ஒரு
வேளை தப்பித் தவறி சதாசிவம் கமிஷன இந்த அரசாங்கம்,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறு செய்து
விட்டார்கள் என்று சொல்லிவிட்டால், அதையும் இப்படித்
தான் கன்சிடர் செய்வீர்கள் என்பதற்கு இது அடையாளம்

அதேபோல், இராமமூர்த்தி கமிஷனை இந்த அரசாங்கம் போட்டிருக்கிறது. முதலமைச்சர் பேரிலும் அதேபோல் வருவாய்த்துறை அமைச்சர் பேரிலும், அதுபோல் பல அமைச்சர்கள் பேரிலும் கமிஷனைப் போட்டியிருக்கிறீர்கள் அதனுடைய முடிவு அரசாங்கத்திற்கு ஒருவேளை விரோதமாக வருமேயானால். வராது என்பது எனக்குத் தெரியும்.—ஒருவேளை வருமேயானால், முதலமைச்சர் அவர்களும், மற்ற அரசாங்க அதிகாரிகளும் இராமமூர்த்தி கமிஷன் செய்தது தப்பு, இதை இப்படிப் பார்த்திருக்கவேண்டும். இதை அப்படி கன்சிடர் செய்திருக்க வேண்டும் என்று அப்பலெட்கோர்ட்போல நீங்கள் அதன்மீது உட்காரப் போகிறீர்களா ?

இந்தக் கொலையைச் செய்வதற்கு மிக முக்கியமான காரணமாக இருந்தவர், ராஜினாமா செய்திருக்க வேண்டும். இன்னார் என்று நான் சொல்லவில்லை. முதலமைச்சர் என்று சொல்லவில்லை. குறைந்தபட்சம் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சராவது ராஜினாமா செய்திருந்தால், அது நியாயமாக இருந்திருக்கும். ஆனால் ராஜினாமா செய்ய மாட்டார்கள். என்றைய தினம் மக்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறார்களோ அன்றைய தினம் தான் செல்வார்கள் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

2. **அறிவிப்புகள்.**—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 12—2—1982 (வெள்ளி) மற்றும் 13—2—1982 (சனி) | நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 2—2—1982 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கை மீதும் விவாதம். |
| 14—2—1982 (ஞாயிறு) | விடுமுறை. |

1982 பிப்ரவரி 11]

| | |
|---|---|
| 15—2—1982 (திங்கள்) | .. திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 30-4-1982 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கை மீதும் விவாதம். |
| 16—2—1982 (செவ்வாய்) 17—2—1982 (புதன்) | .. அரசினர் சட்டமுன்வடிவுகள். |
| 18—2—1982 (வியாழன்) | .. (1) அரசினர் சட்ட முன்வடிவுகள் (2) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980—81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம். பேரவை மாலையிலும் கூடும். |
| 19—2—1982 (வெள்ளி) | .. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980—81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம். |

### (6) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

### நீதிபதி பால்கமிஷன் அறிக்கை மீதும் அரசு நடவடிக்கை குறித்தும் விவாதம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவையிலே இன்று வாதத்திற்கு எடுக்கப் பட்டிருக்கின்ற நீதிபதி பால் அவர்கள் அறிக்கையின் மீதும் அது தொடர்பாக அரசாங்கம் வைத்திருக்கிற குறிப்பின்மீதும் சில கருத்துக்களைச் சொல்லக் கிடைத்த வாய்ப்புக்காக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

திருச்செந்தூர் அலை கடலருகே முருகன் இருக்கிற மிக உயர்ந்த தலம். அந்தத் தலத்திலே சோதனை அதிகாரியாக அல்லது சரிபார்ப்பு அதிகாரியாக இருந்த திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மரணம் குறித்து ஏற்பட்டிருக்கின்ற ஐயத்தின் அடிப்படையிலே நீதிபதி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்

[திரு. குமரி அனந்தன்] [1982 பிப்ரவரி 11

ஒரு விசாரணைக் கமிஷனாக அவர்கள் அளித்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் இங்கே விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முதலில் ஐயத்திற்கு இடமானது என்று சொல்லப்பட்ட காரணத்தினால் விசாரணை நடத்தப்பட்டாலும் விசாரணைக் கமிஷன் அறிக்கையைப் படித்துப் பார்த்ததற்குப் பின்னாலே பல்வேறு சேதிகள் நமது கவனத்திற்கு வருகின்றன.

முதலில் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சரிபார்ப்பு அதிகாரி அவர்கள் ஏறத்தாழ 60 பேர் இருந்து உண்டியல் பணத்தை எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில் அந்தப் பணத்தில் சில ரூபாய் நோட்டுக்களை எடுத்து இடுப்பில் சொருகுகிற அளவுக்கு ஒரு வாய்ப்பு அவருக்கு இருந்திருக்குமா, முடியாது என்பது எங்கள் கருத்து அத்தனை பேர் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு எடுக்க முடியாது என்பதும் அப்படி அவர் எடுத்ததை யாராவது பார்த்தார்களா என்று சொன்னால் அப்படிச் சொல்பவர்கள் கொடுத்திருக்கிற வாய்மொழி தவறானது அல்லது ஐயப்பாட்டுக்குரியது என்றுதான் கருதவேண்டும். கந்தன் என்பவர் ஒருவரும் இன்னொரு பெயரும் அடையாளமும் தெரியாத ஒருவரும் பார்த்ததாகவும்! பார்த்து அறங்காவலர் குழுத் தலைவர் பாலகிருஷ்ணனுக்கு தொலைபேசி மூலம் சொல்லப்பட்டதாகவும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது அடையாளம் தெரியாத பொதுமக்களில் ஒருவர் என்று சொல்லப்படுகிறபோது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிற கருத்துடையோர் டாக்டர் பாலகிருஷ்ணன் அந்த ஷவர் பாத் குழாய் சுப்பிரமணிய பிள்ளை உடலைத் தாங்குமா என்று பார்ப்பதற்காக அங்கே வழியே சென்று கொண்டிருந்த ஒருவரை அழைத்து நீங்கள் ஒரு வேட்டியை முறுக்கி தொங்கப் போட்டுப்பாருங்கள்; கழுத்திலேயே சுருக்குப் போட முடிகிறதா என்று கேட்டுக்கொண்டேன் என்றும் அவர் முடியாது என்று சொன்னார் என்றும் சொன்னபோது அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியும் என்று சொன்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுவது தவறாகத் தெரியவில்லை. ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னால் இரண்டையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். அது காது வழி வந்த செய்தி; இது நீதிபதி வழி வந்த செய்தி. ஆதலின் நீதிபதி வழி வந்த செய்தியை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இரண்டாவது செய்தியாக தோட்டி ஆறுமுகம் வெண்டிலேட்டர் வழியாக, பால்கணி வழியாக குழாயில் தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்ததாக சாட்சியம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விசாரணை நடக்கிறபோது அதை விசாரித்தறிவதற்கு தோட்டி ஆறுமுகம் இல்லை. வேட்டியில் தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த தோட்டி ஆறுமுகம் உலகத்திலேயே இல்லை. அவர் இறந்திருக்கிறார். அவர் இறந்தது



1982 பிப்ரவரி 11] [திரு. குமரி அனந்தன்]

ஐயப்பாட்டுக்குரியது என்று சிலர் சொல்வதில் உண்மைஇருக்கிறது என்பதை நாம் உணர்ந்து, விசாரணைக் கமிஷன் சுப்பிரமணிய பிள்ளை இறந்ததற்கு மட்டுமல்லாது தோட்டி ஆறுமுகம் செத்ததற்கும் கூட ஒரு விசாரணைக் கமிஷன் வைத்தால் நல்லது என்பது என்னுடைய கருத்து. ஆக, தோட்டி ஆறுமுகம் இறந்திருக்கிறார் என்று சொல்லுகிறபோது சுப்பிரமணிய பிள்ளை தற்கொலை செய்து கொள்ளவில்லை என்பதற்கு மேலும் ஒரு கருத்துக்கு உட்படுகிற நான், அவர் கொலைக்குத்தான உட்பட்டிருக்க வேண்டுமென்று மேலும் ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது, எந்த வேட்டி அவருடைய கழுத்தை முறுக்கி இறுக்கிக் கொன்றதோ அந்த வேட்டி சாட்சியத்திற்கு வந்தது என்று சொல்லும்போது முதலில் அந்த வேட்டியில் இருந்த நீளம் அடுத்தாற்போல் வருகிற நேரத்தில் 22 சென்டி மீட்டர்கள் குறைந்திருக்கிறது. சாதாரணமாக, துணிகள் காலம் ஆக ஆக நீளும் என்றும் சொல்வார்கள் அல்லது சுருங்கும் என்றும் சொல்வார்கள். இரண்டு விதத்திலும் இருக்கிறது. இங்கே சுருங்கியிருக்கிறது. 22 சென்டி மீட்டர். அதுவும் 22 சென்டி மீட்டர் சுருங்கியிருப்பது ஐயத்திற்கு இடமளிக்கிறது.

அடுத்தாற்போல், நீதிபதி அவர்கள் எவ்வளவு தூரம் உற்று கவனித்து இந்தக் காரியத்தை செய்திருக்கிறார்கள் என்பது அவருடைய ரிப்போர்ட்டில் தெளிவாகத் தெரிகிறது. அது என்ன வென்றால், இந்த உண்டியல்கள் திறக்கப்படுவது என்பது சரி பார்க்கும் அதிகாரி வருவதற்கு முன்னால் திறக்கப்படக்கூடாது என்கிற வாதத்திற்கு வைக்கும்போது இதற்கு முன்னாலே அப்படித் திறக்கப்பட்டது. ஆனால், அதிகாரி புகார் செய்யவில்லை என்று எடுத்துச் சொல்வது இந்தக் கமிஷன் வரம்புக்கு உட்பட்டது அல்ல.

(பிற்பகல் 1-20)

நம்முடைய பிரச்சினையெல்லாம் இப்போது என்ன நடந்தது என்பதுதான். இப்போது என்ன நடந்தது என்பதைப் பார்க்கிறபோது நிர்வாக அதிகாரி அங்கே இருத்தல் வேண்டும், அங்கே அறங்காவலர் குழுத் தலைவர் இருத்தல் வேண்டும், அங்கே சரி பார்க்கும் அதிகாரி இருத்தல் வேண்டும் என்றால் உண்டியல் திறக்கப்படுகிறபோது இரட்டைப் பூட்டுக்களிலே இரண்டு சாவிகள், இரண்டு சாவிகளில ஒரு இணை அறங்காவலர் குழுத் தலைவரிடமும். இன்னொரு இணை நிர்வாக அதிகாரியிடமும் இருத்தல் வேண்டும் என்று சொல்கிறபோது—அறங்காவல் குழுத் தலைவர் என்ன சொல்கிறார் என்றால் அந்தச் சாவியை இசக்கிமுத்து என்பவனிடம் கொடுத்தேன், அவன் நம்பிக்கைக்குரியவன் என்ற காரணத்திற்காக கொடுத்திருக்கக்கூடும், இசக்கிமுத்துவிடம் கொடுத்தேன் என்று சொல்கிறார். ஆனால் விதிமுறை என்ன சொல்கிறது. அதனைப் பூட்டி சாவியைக் கொடுக்கும்போது

அறங்காவலர் குழுத் தலைவரிடம் கொடுக்க வேண்டும் அல்லது
தகுதிவாய்ந்த அதிகாரி அந்த அறங்காவலர் குழு உறுப்பினர்
களிலே எவரிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறாரோ
அவரிடம்தான் அந்தச் சாவி கொடுக்கப்பட வேண்டுமென்று
சொல்லப்பட்டிருக்கிறது. அறங்காவலர் குழுத் தலைவரிடம் அது
இருத்தல் வேண்டும் அல்லது அந்த அதிகாரி எந்த அறங்காவலர்
குழு உறுப்பினரிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடு
கிறாரோ அவரிடம்தான் இருக்க வேண்டுமென்றால் அந்தச் சாவி
ஒன்று அறங்காவலர் குழுத் தலைவரிடம் இருத்தல் வேண்டும்.
இன்னொன்று அறங்காவலர் குழு உறுப்பினரிடம் இருக்க வேண்
டும். எப்படி இரண்டு பதவிகளையும் வகிக்காத இசக்கிமுத்து
விடம் அந்தச் சாவி போகும்? இப்படி இசக்கிமுத்து கையிலே
சாவியைக் கொடுத்துவிடுகிற அளவுக்கு அறங்காவலர் குழுத் தலை
வர் பொறுப்பேற்றிருக்கிறார் என்று சொன்னால் எந்தத் தடவை
யும் உண்டியல் திறக்கிற நேரத்திலே நான் போவதில்லை என்று
அவர் சொன்னால் அந்த அறங்காவலர் குழுத் தலைவர் 1979-
ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்ட அந்தத் தலைவர் அவர் தான்
இருக்கவேண்டுமென்ற அளவுக்கு என்ன உயரிய பண்புகளை அவர்
படைத்திருக்கிறார் என்பதை அரசுத் தரப்பிலே உள்ளவர்கள்
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தடவை உண்டியல் திறக்கப்படுகிற நேரத்திலேயே அடுத்த
தடவை எப்போது உண்டியலைத் திறக்க வேண்டுமென்று முடிவு
எடுக்கப்படுகிறது. அந்த முடிவு எல்லோருக்கும் அறிவிக்கப்படு
கிறது. சாவியை வாங்கிக் கொண்டு போகிற பொறுப்பிலே அறங்
காவலர் குழுத் தலைவர் இருக்கிறார். ஆனால், இந்தத் தடவை
யும் அப்படி அறிவிக்கப்பட்டிருந்தபோதும் சாவியை வைத்திருக்
கின்ற பொறுப்பு அவருக்கே இருந்த போதும் அறங்காவலர் குழுத்
தலைவர் என்ன செய்தார் தெரியுமா? திருச்செந்தூரிலே
இருக்கின்ற உண்டியலை எண்ணுவதற்குப் போகாமல் பக்கத்
திலே இருக்கிற சொம்மிடிப்பட்டியிலே தென்னங்கன்று வாங்கு
வதற்குப் போனாராம். தென்னங்கன்று வாங்குவது என்பது,
இந்த நாட்டிலே இப்போது இலட்சோப இலட்சம் மக்கள் வந்து
வணங்குகிற கோயிலிலே இருக்கின்ற உண்டியலை எண்ணுவதை
விட முக்கியமானது என்று நம்முடைய டாக்டர் பாலகிருஷ்ணன்
என்று சொல்லப்படுகிற அறங்காவலர் குழுத் தலைவர் நினைக்
கிறார். அது சரிதானா? அப்படியென்று உண்மையிலேயே
நினைத்திருக்கக் கூடுமா? அல்லது உண்மையிலேயே வராமல்
இருந்து இருக்கக்கூடுமா? என்ற ஐயப்பாடுகள் நமக்கு எழு
கின்றன.

இன்னொரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அவர் வரு
வதற்கு முன்பு உண்டியல் திறக்கப்படுமானால் ஏன் தொலை
பேசியில் மேலே இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சொல்லவில்லை
என்று சொல்கிறார்களே, அவரை எங்கே சொல்லவிட்டார்கள்?





எல்லோரும் அவரைச் சுற்றிச்சுற்றி வந்து அவரிடம் கேள்விகள்
கேட்டதாகச் சொல்லப்படுகிறது, அவர் தாக்கப்பட்டதாகச்
சொல்லப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அவர் யாரிடம் அந்
தச் செய்தியைச் சொல்ல முடியும்? இன்னொன்று. அறங்கா
வலர் குழுத் தலைவராக இருந்தாலும் சரி மற்றவர்களும் சரி
அங்கே ஒரு காரியத்தை ஒருப்போலவே மறக்காமல் செய்திருக்
கிறார்கள். எல்லோரும் ஒருப்போலவே சொல்வதற்கு
முனைந்து இருக்கிறார்கள். ஒருபோலவே சொல்வதற்கு முனைந்
தவர்களிலே அறங்காவலர் குழுத் தலைவரைப்பற்றி நீதிபதி
சொல்கிறார்; அவர் சொல்கிற சாட்சியத்தைப் பார்க்கிற
போது அவர் நேர்மையாகச் சொல்கிறார் என்பதை நம்ப முடிய
வில்லை, அவர் ஒரு நேர்மையான மனிதர் என்பதையும் என்
னால் நம்பமுடியவில்லை என்று சொல்கிறார் என்றால் மாண்பு
மிகு அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற அன்புக்
குரியவர்களுக்குச் சொல்கிறேன், ஒரு நீதிபதி ஒருவரை ஐயப்
படுகிற அளவுக்கு இருந்தால்கூட அவர் அறங்காவலர் குழுத்
தலைவர் பதவியிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது
அங்கேயிருந்து போயிருக்க வேண்டும், இந்த இரண்டையும் செய்
யாத ஒரு சூழ்நிலையிலே அவரைத் தொடர்ந்து வைத்துக்கொண்டி
டிருப்பதிலே நீதிபதி கொடுத்திருக்கிற கருத்தை ஏற்க முடியாது,
அவர் வரம்பெல்லைக்கு அப்பாற்பட்டுப் போகிறார் என்று கூறு
வதிலே எந்த நியாயமும் இல்லை.

இன்னொன்று தெரியுமா? அங்கே புதிதாக—இரத்தம் கசிந்
திருக்கும் அல்லது இரத்தம் பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கிற
இடத்தில்—வெள்ளை அடித்ததாகவும் சிமின்ட் பூசப்பட்டதாக
வும் ஒரு தகவல் வந்ததையொட்டி டாக்டர் கோபாலகிருஷ்ணன்
அந்த இடத்தை மேலே ஏறித் தொட்டுப் பார்க்கிறார், தன்
கையால் புதிதாக சிமென்ட் பூசப்பட்டிருக்கும் என்று தொட்டுப்
பார்க்கிறார். தொட்டுப் பார்த்து புதிய சிமின்ட் என் கையிலே
ஒட்டுவதை உணர்கிறேன் என்று சொல்கிறார். உணர்கிறேன்
என்று அவர் சொல்கிற சொல்தான் முக்கியம். ஆனால், நீதிபதி
பால் எழுதுகிறார், தான் அதைச் சரிபார்ப்பதற்கு நானும் மேலே
ஏறி நின்று தொட்டுப் பார்த்தேன், என் விரலிலே சிமின்ட்
ஒட்டியதை நான் காணவில்லை என்று சொல்கிறார். நீதிபதி
பால் சொல்கிறார், நான் தொட்டுப் பார்த்தேன், என் விரலிலே
சிமின்ட் ஒட்டியதை நான் காணவில்லை என்று, அதை
அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால், டாக்டர் கோபாலகிருஷ்ணன்
ஒட்டியதை உணர்ந்தேன் 'என்று சொல்கிறார், கண்டேன் என்று
சொல்லவில்லை, அந்த அளவுக்கு துளாய், துசாய் சிறியதாய்
பூசப்பட்டதுபோல் ஒரு உணர்வு. ஆனால், நீதிபதி அர்கள் மேலே
ஏறித் தொட்டுப் பார்த்து ஒட்டவில்லை என்று சொல்வதற்கும்,
நான் காணவில்லை என்று சொல்வதற்கும், உணரவில்லை என்று
சொல்வதற்கும் இருக்கிறை வேறுபாட்டை வைத்துக்கொண்டு
நீதிபதி பால் சொல்வதை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுகின்ற
அரசாங்கம், இந்தப் பகுதியிலே நீதிபதி பால் சொல்வதை முழுக்க

முழுக்க உண்மை என்று சொல்லுகின்ற அரசாங்கம், அந்தப் பகுதியிலே டாக்டர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் இருக்கின்ற குழுவைக் கலைப்பது நியாயம் என்று சொல்வதை மட்டும் ஏன் ஏற்க மறுக்கிறது? என்ன காரணம்? என்ன தேவை வந்தது?

நான் நட்பு முறையிலேயே சொல்கிறேன்; பாசத்தின் அடிப்படையிலே சொல்கிறேன்; எல்லாவற்றிற்கும் மேலாக நீதிக் கிடைக்க வேண்டும் என்கின்ற முறையிலே சொல்லுகிறேன். இந்த அறங்காவர் குழு இவ்வளவு ஐயப்பாட்டிற்கும் மேலேயும் அங்கே இருக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்வது எந்த வகையிலேயும் பொருத்தமானதல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொல்லுகின்றேன். இசக்கிமுத்து சாவி கொடுக்கின்ற அளவிற்கு நம்பிக்கைக்குரியவன். அதே இசக்கிமுத்து இன்னொரு இடத்திலே சொல்கிறான். அறங்காவல் குழுத் தலைவர் சொல்கிறார், நான் இரண்டரை மணிக்கெல்லாம் வண்டியேறி சென்னைக்கு வந்தேன் என்று. சென்னைக்கு வருவதிலே தலைபோகிற விஷயம் என்ன தெரியுமா? இங்கிருக்கின்ற ஒரு அமைச்சர் பெருமகனாரிடம் சில நபர்களை அறிமுகப்படுத்துவது; ஒரு மண விழாவிலே வாழ்த்துச் சொல்வது; ஒரு அமைச்சருக்குப் பிறந்தநாள் வாழ்த்துச் சொல்வது. இறந்து கிடக்கிறான் ஒருவன். தன்னுடைய அறங்காவல் குழுத் தலைவருடைய நிர்வாகத்தில் தொடர்புடைய ஒரு அதிகாரி இறந்து கிடக்கின்ற பொழுது பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல சென்னைக்கு வந்தேன்; சென்னைக்கு வந்தது மட்டுமல்ல; டிசம்பர் மூன்றாம் தேதி வரையில் சென்னையிலேயே இருந்தேன் என்று சொன்னால் நீதிபதி அவர்கள் சொல்வதைப்போல இது சந்தேகத்திற்கு இடமானது மட்டுமல்ல; வியப்புக்குரியது மட்டுமல்ல, மனித உணர்வுகளுக்கே அப்பாற்பட்ட ஒன்றாக அவர்களுடைய நடவடிக்கைகள் காணப்படுகின்றன என்று சொன்னால் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அவர் இரண்டரை மணிக்குப் புறப்பட்டேன் என்கிறார். சாவி கொடுக்கின்ற அளவிலே அவருக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்த இசக்கிமுத்து சொல்கிறார். நான்கு மணிக்குத்தான் புறப்பட்டார் என்று. சொல்பவர் இசக்கிமுத்து. இவருடைய நம்பிக்கைக்குரியவர். ஆதலாலே அவர் சொல்வதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் அறங்காவல் குழுத் தலைவர் சொல்வது, மாறுபாடாக வேறுபாடாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலே அரசாங்கம் செய்திருக்க வேண்டியது என்ன என்பதைப் பற்றியும், அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும் இங்கே பேசிக்கொண்டிருக்கின்றோம். என்னுடைய பணிவான வேண்டுகோள், இன்று கசந்தாலும் நாளை



இனிக்கும் என்கின்ற காரணத்திற்காக என்னுடைய வேண்டுகோள் நண்பர்கள் என்பவர்கள் முகத்துக்கு நேரே சிரித்துக்கொண்டு இருப்பது மட்டுமல்லாமல், அகத்திலே அவர்களுடைய நல்வாழ்வைப் பற்றியும், நம்வாழ்வைப் பற்றி மட்டுமல்ல, நல்லாட்சியைப் பற்றியும் சிந்திக்கின்ற காரணத்தினாலே நான் சொல்ல விரும்புகிறேன்.

வேதாகமத்திலே மிகச் சிறப்பாகச் சொல்லியிருப்பதைப் போலே அரசாங்கம் என்று சொல்லுகின்ற பெரிய இயந்திரம் எத்தனையோ சின்னச் சின்ன சக்கரங்களாலே சுழன்று கொண்டிருக்கின்றது. ஒரு சக்கரத்தைக் காப்பாற்றப் போய் இயந்திரத்தையே இழந்துவிடக் கூடாது. அரசாங்கம் என்பது பல அதிகாரிகளுடைய குழுக்களுடைய துணையோடு நின்று ஆளப்படுகின்ற ஒன்று; நடத்தப்படுகின்ற ஒன்று; செயல்படுத்தப்படுகின்ற ஒன்று. அதிலே ஒரு குழு எங்கேயோ தவறு செய்கிறது என்று சொன்னால் அந்தத் தவற்றைத் தட்டிக் கேட்பது மட்டுமல்ல; தேவைப்படுகின்ற நேரத்திலே அதை நீக்கித் தள்ளிவிடுவதும் தேவையான ஒன்றாக இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. ஏனென்றால் நீதிபதி பால் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் என்ன சூழ்நிலையிலே சாவு ஏற்பட்டது என்பது மட்டுமல்ல; இனிமேல் இப்படி ஒன்றும் நடவாவண்ணம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் கேட்டிருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் சொல்கிறார்கள் விசாரணையினுடைய உண்மையை விசாரணை மூலம் நாம் உண்மையைத் தெரிந்துக் கொள்வதற்கு அந்த அறைகளிலே யாருமே தங்கியிருக்கவில்லை. இந்த ஒரு அறையிலே மட்டும்தான் ஆள் இருந்தார். அங்கே பொதுமக்கள் யாருமே வருவதற்கு வாய்ப்பில்லை. அறங்காவல் குழு இயங்கிக் கொண்டிருக்கின்ற நேரம் வரை அந்த அறங்காவல் குழுவினுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற மற்றப் பணியாளர்கள் துணிந்து வந்து சாட்சியம் சொல்ல மாட்டார்கள் என்ற காரணத்தால் அதைக் கலைப்பதற்கோ அல்லது தற்காலிகமாக நீக்கி விடுவதற்கோ வழி வகைகளைத் தேடுங்கள் என்று சொல்வதனை நாம் எப்படி அநியாயம் என்று சொல்ல முடியும்.

மீண்டும் நான் முதலிலே தொடங்கியதையே சொல்லுகின்றேன். அரசாங்கம் என்று சொல்லுகின்ற இந்த இயந்திரத்தில் மறந்து விடாதீர்கள். உன் வலது கண் உனக்கு இடர் உண்டாக்கினால் அதைப் பிடுங்கியெறிந்துவிடு; உன் வலது கை உனக்கு இடர் உண்டாக்கினால் அதனைத் தறித்து விடுவாய்; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயங்களிலே ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாய் இருக்கும் என்று சொல்கிற காரணத்தினாலே அரசாங்கத்தினுடைய செயல்முறையிலே நிரூபிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குழு கலைக்கப்பட வேண்டுமென்று சொல்வதிலே நியாயம் இருக்கிறது என்பதோடு தோட்டி ஆறுமுகம் செத்ததைப்பற்றி ஒரு

விசாரணை வைக்க வேண்டும் என்பதோடு, இதனை மத்திய புலனாய்வுக்கு விடக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புலனாய்வு இங்கிருக்கின்றவர்களுடைய புலனாய்வுக்கு, அறங்காவல் குழுவைக் கலைத்ததற்குப் பின்னால் இங்கே இருக்கின்றவர்களுடைய புலனாய்வுக்கு விடப்பட்டு, புலன் ஆய்வு நடந்து நீதிநிலை நாட்டப்பட வேண்டுமென்பதிலே ஐயமில்லை. அந்த நீதியை நிலை நாட்டுவதற்கு எங்கேனும் தவறு வந்தால் இந்த மாமன்றம் மீண்டும் கொதித்தெழுந்து நீதியை நிலைநாட்டுவதற்குத் துணை நிற்கும் என்கிற அடிப்படையிலே சொல்கிறேன்.

(பிற்பகல் 1—30).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. குமரி அனந்தன்:** தவறு இருக்கிற இடத்திலே, மாண்புமிகு முதலமைச்சருக்கும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சருக்கும், அரசுக்கும் சொல்கின்றேன், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று சொல்கின்ற வகையிலே, இது மறுக்க முடியாத, மறைக்க முடியாத கொலைதான் என்பதிலே சந்தேகம் இல்லை. பால் அவர்களுடைய அந்த ரிப்போர்ட்டைப் படிக்கின்ற பொழுது அதுதான் நடந்திருக்கின்றது என்பது தெரிகின்றது.

அரக்கர்களைச் சுப்பிரமணியம் வென்றார். சிவன் பிள்ளை சுப்பிரமணியரைச் சொல்கிறேன், நான். சிவன் சுப்பிரமணியம் அரக்கர்களை வென்ற இடம் திருச்செந்தூர். சுப்பிரமணியப் பிள்ளையை அரக்கர் மனம் கொண்ட சிலர் கொன்ற இடம் திருச்செந்தூர் என்று சொல்கின்ற பெயர் வருகின்ற பொழுது, யார் தவறு செய்தால், நான் மாண்புமிகு முதலமைச்சர் மீதும் அறநிலையத் துறை அமைச்சர் மீதும் அவர்களோடு இருந்து கொண்டிருக்கின்றவர்கள் மீதும் வைத்திருக்கின்ற அன்பினாலும் நம்பிக்கையினாலும் சொல்கின்றேன் தவறு யார் செய்தாலும் சரி அதைத் தெரிந்து செய்தால் அது தேவன் என்றாலும் நான் விட மாட்டேன் என்று சொல்கின்ற வகையிலே நீங்கள் நிச்சயமாக இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஒன்று இந்தப் பால் கமிஷன் அறிக்கை மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு சில கருத்துக்களைச் சொல்கிறோம் என்றால் உண்மையிலேயே தொடர்ந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கக்கூடாது என்பதாலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பதைத் தடுக்க வேண்டுமென்று சொல்கின்ற ஆர்வம் இருக்கிற காரணத்தாலும் தான் இதனை சொல்லிக் கொண்டிருக்கிறேன் இன்னும் ஒன்று





அரசாங்கம் இதை மறைக்க வேண்டும் இந்த ரிப்போர்ட்டை மறைக்க வேண்டுமென்று நினைத்தது என்று நான் கருதவில்லை அரசாங்கம். இந்த ரிப்போர்ட்டை மறைக்க வேண்டுமென்று கருதி இருந்தால் அது மொழி பெயர்ப்புத் துறைக்கே அனுப்பியிருக்காது நாம் சிறிது நேரம் அவசரப்படாமல் கூட இருந்திருக்கலாமோ என்று நான் கருதுகின்றேன் நாம் அவசரப்பட்டுவிட்ட காரணத்தினாலே, பிட்டிலே ஆவி வருவதற்கு முன்பு பாதியிலேயே எடுக்கின்ற ஒரு சூழ்நிலை வந்து விட்டதோ என்று கூட நான் கருதுகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல காரியத்தைச் செய்தார்கள் என்று சிலர் பாராட்டுகிறார்கள் ஏன் இந்தக் காரியத்தைச் செய்தார் என்று சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள் என்னுடைய பணிவான வேண்டுகோள் எதிர்க்கட்சித் தலைவருடைய வேலை மட்டுமல்ல எதிரிலே இருக்கின்றவர்களுடைய வேலை எல்லாம் இப்படி மறைக்கப்படுகின்ற ஒன்று வெளியே எடுக்கப்பட வேண்டியதுதான் ஆனால் இது மறைக்கப்பட்டதா? மறைக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் இருந்ததா? அப்படி இருந்தால் மொழி பெயர்ப்புத் துறைக்குப் போயிருக்குமா? தானாகக் கனிய வேண்டியதைத் தட்டிக் கனிய வைத்து விட்டாரோ என்று சொல்கின்ற ஆதாரம் எனக்குக் கொஞ்சம் உண்டு. 6 மாத காலத்திற்குள்ளே சட்டமன்றத்திலே வைக்க வேண்டுமென்று சொல்கின்ற வரம்புவரை காத்திருந்து அவர்கள் அதை வைக்காமல் இருந்திருந்தால் இந்தச் சட்டப் பேரவையிலே எதிர்க்கட்சித் தலைவருடைய குரலோடு எங்கள் குரல்கள் எல்லாம் சேர்ந்து ஒலித்திருக்கின்ற ஒரு பெரு வாய்ப்பு கிடைத்திருக்குமே, அது நழுவிப் போய் விட்டதே என்ற கவலை எனக்கு உண்டு ஆதலாலே அதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று நீதி கேட்டு பாத யாத்திரைப் போவதைப் பற்றியும் நான் ஒன்றும் சொல்லவில்லை, நல்லதுதான் காந்திய வழிக்குக் கொஞ்சங் கொஞ்சமாக நீங்கள் எல்லோரும் திரும்புவது எங்களுக்குக் கிடைக்கின்ற மாபெரும் வெற்றி என்று கருதுகின்றேன். நான், 1967 ஆம் ஆண்டிலே நான் பாதயாத்திரை வந்த பொழுது சைவத்தின் அடிப்படையிலே வந்த பொழுது புலால் உண்ணக் கூடாது என்று கன்னியாக் குமரிக் கடலிலே காலை நனைத்து 625 மைல்கள் நானும் நண்பர் நெடுமாறன் போன்ற நண்பர்கள் துணையோடு நான் அந்தப் பாத யாத்திரையை மேற்கொண்ட நேரத்தில் 625 மைல்கள் நடந்து வந்த நேரத்திலே—புலாலைத் தொடுவதில்லை என்று வருகின்ற நேரத்திலே உங்கள் பத்திரிகைகள் பல குமரி அனந்தனும் மற்றவர்களும் நடந்து வந்த பாதையிலே கோழிகளை ஆடுகளைக் காணோம் என்று எழுதியது உண்டு, அதை நான் இப்பொழுது தப்பென்று சொன்னால் நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள் ஆதலாலே நீங்கள் போகின்ற நேரத்திலே இப்படியெல்லாம் நிகழும் என்று

[திரு. குமரி அனந்தன்] [1982 பிப்ரவரி 11

நான் சொல்ல மாட்டேன் ஏனென்றால் நாங்கள் வந்த நேரத்திலும் அப்படியெல்லாம் நிகழவில்லை என்ற காரணத்திற்காகச் சொல்கின்றேன் நல்லதுதான், காந்திய வழியிலே வருவது நல்லதுதான். அந்த காந்தியினுடைய பெயரை பெரும் தலைவருடைய பெயரை வைத்திருக்கின்ற காரணத்தாலே நான் சொல்வேன் அரசாங்கம் ஒரு அதிகாரியையோ ஒரு குழுவையோ காக்கப் போகின்ற காரணத்தினாலே தான் பாதுகாக்க வேண்டிய பெரிய நல்ல பெயரை இழக்க வேண்டியதில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த வகையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, அந்த அறங்காவலர் குழு உங்களுடைய அழகான ஆடையிலே பட்டிருக்கிற அழுக்கு. வெட்டி எறியுங்கள் என்று சொல்லி, இந்த நிலையிலே நீதிபதி பால் அவர்கள் நெஞ்சு நிமிர்ந்து சொன்ன நல்ல காரியங்களுக்கெல்லாம் பாராட்டு தெரிவித்து அமர்கிறேன், வணக்கம், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12 ஆம் நாள் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.**

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

Y211, 81 N82
N83-27
122218

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

*In Madras City.*

1. Account Test Institute, Egmore Madras-600 008.
2. The City Book Company, Madras-600 004.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-600 005.
6. The Universal Book House, Moore Market, Madras-600 003.
7. C. Sitaraman and Company, Madras-600 014.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-600 005.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C Pycrofts Road Madras-600 005.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-600 001.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-600 001.
12. New Century Book House (Private) Limited, Madras-600 002.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-600 008.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Vellore (North Arcot District)-632 001.
2. Bharathamatha Book Depot, Thanjavur.
3. P. V. Nathan and Company, Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldass, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company, No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jaganathan Book House, P.B. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-636 001.
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem-636 001.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21. Kumaran Book Depot, Book Sellers, Erode-1.
22. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidhya Book Shop, No. 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Rama Vilas Book Shop, No. 90, Amman Sannathi, Madurai-1.
27. Sarvothaya Ilakkiya Pannai, No. 32/1, West Velli Street, Madurai-1.
28. Vijaya Book House No. 93, Cherry Road, Salem-636 001.

IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabhu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi and Company, No. 286 B.B. Ganguli Street, Calcutta-12.

[Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.